321

T.N.L.C. Debates

Official Report

1983

Vol: CXCIX No: 1, 2

D
V211,32'N83
N83.199.1-2;1
143183

ISSUED 24—12—1983

ஆணையர்
டு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாறு ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

WEDNESDAY 13th APRIL 1983

Volume CXCIX (No. 1)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price *Rs*. 2.75 *Paise*]

221
ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாறு ஆராய்ச்சி
5 ஏப்.1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 00

## பொருளடக்கம்.

13—4—1983.

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. .. .. | i—v |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | vii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப் படி தயாரிக்கப்பட்ட பட்டியல் .. .. | ix—xi |
| 1. வினாக்கள் விடைகள் .. .. .. | 1—31 |
| 2. தகவல் கோரல்— | |
| சென்னை தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிகளை வண்ணத்தில் ஒளிபரப்ப மத்திய அரசை வற்புறுத்துவது குறித்து. .. .. .. | 33—34 |
| 3. அறிவிப்பு— | |
| உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் குறித்து. .. .. .. .. .. | 35 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (1) எண்ணூர் பழவேற்காடு கடைத்தெருவில் மார்ச் மாதம் முதல் தேதியன்று இரண்டு கோஷ்டிகள் ஒன்றோடொன்று பலமாக மோதிக் கொண்டது குறித்து. .. .. | 36—37 |
| (2) புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு மின்சக்தி உதவித் தொகை வழங்காதிருப்பது குறித்து | 37—38 |

| | பக்கங்கள். |
|---|---|
| 5. மேலவை விதி 60-ன் கீழ் தீர்மானம்— | |
| 20—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென் மாநில முதல்வர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து .. .. | 38—99<br>101—207 |
| 6. 1974–75 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கை அளித்தல் ... .. .. | 100—101 |
| 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 208 |


1-3-83

(382)

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

THIRU SUNDARLAL KHURANA.

**Members of the Council of Ministers.**

1. The Honourable Thiru M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. The Honourable Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Finance, Planning. Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. The Honourable Thiru S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The Honourable Thiru K. A. KRISHNASAMY, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Honourable Thiru S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. The Honourable Thiru R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. The Honourable Thiru C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education and Official Language.

8. The Honourable Thiru K. KALIMUTHU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt, Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister in-charge of Health.

13. The Honourable Thiru K. RAJA MOHAMED, Minister in-charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. The Honourable Thiru S. MUTHUSAMY, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister in-charge of Large Scale Industries, Mines, Textiles, and Minerals.

16. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister in-charge of Public Works, Khadi, Prohibition excluding grant of liquor permits and Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

---

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்மந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு திட்டம், சர்க்கரைப் பாகுக் கழிவு மற்றும் தொல் பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

மின்சாரம் மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்ப வியல்; சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடி நீர் - வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. க. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், மற்றும் வக்ப்.



14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

பெருந்தொழில்கள், சுரங்கமும் - கனி வளமும், மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. சோ. நீ. இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

ஆதி திராவிடர் நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. க. இராமமூர்த்தி
2. திரு. சி. இராமலிங்கம்
3. திரு. பா. ரா. தாமஸ்
4. திரு. ஜே. எம். மியாகான்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.,

சார்புச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.,

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.,

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு வீராசாமி, திரு. நா. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (நீர்ப் பாசனத் துறை அமைச்சர்). .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், திரு. ம. எம். ஏ. .. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சந்தோஷம், திரு. த. எம். ஏ. பி. எல். | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 13 சனார்த்தனம், டாக்டர் இரா. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). .. | நியமனம். |
| 15 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 16 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 51 | வெற்றிடம் | கோயம்புத்தூர் நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 | டிடி | டிடி |
| 53 | டிடி | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 | டிடி | டிடி |
| 55 | டிடி | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 | டிடி | டிடி |
| 57 | டிடி | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 | டிடி | டிடி |
| 59 | டிடி | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 | டிடி | டிடி |
| 61 | டிடி | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 | டிடி | டிடி |
| 63 | டிடி | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

*புதன்கிழமை, 1983, ஏப்ரல் 13.*

*பங்குனி 30 துன்மதி, திருவள்ளுவராண்டு—2013.*

*சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.*

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினா எண் 281 ஒத்தி வைக்கப்படுகின்றது.

### தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்.

*282. வினா—**டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ஜேப்பியார் சார்பில்) :** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசு அங்கீகரித்துள்ள தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளாத தமிழ்ப் பத்திரிகைகட்கு விளம்பரம் தருவதை நிறுத்த அரசு முன்வருமா ?

(இ) தமிழக அரசு தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை தீவிரமாக அமுலாக்க, எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்ட பத்திரிகைகட்கு மட்டும் அரசு விளம்பரங்கள் தர செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) மற்றும் (இ) தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தினை நடைமுறையில் கடைப்பிடிக்காத பத்திரிகைகளுக்கு விளம்பரம் நிறுத்துவது பற்றிய கருத்துரு எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக நாளேடுகளில் எது எது தமிழக அரசு அறிவித்துள்ள எழுத்துச் சீர்திருத்தத்தைப் பயன்படுத்தி வருகின்றன. நடைமுறைப்

சாமி, முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன், வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன், டாக்டர் அவ்வை நடராஜன், டாக்டர் ம. நன்னன், உறுப்பினர் செயலர் ஆகிய 7 பேர்களைக் கொண்ட குழு இப்போது அமைக்கப்பெற்றிருக்கிறது பெரிய கருத்துவேறுபாடுகள் என்றால், மிக நீண்ட காலமாக இருக்கின்ற ஒரு மொழியில் சில மாற்றங்களை, சீர்திருத்தங்களைச் செய்ய அரசு முனைகின்றபோது, அந்தக் கருத்து வேறுபாடுகள் வரலாம். அப்படி வந்த கருத்து வேறுபாடுகளிலே கூட, இந்த 'ஔ' 'ஐ'—என்கின்ற இந்த இரண்டு எழுத்துக்களையும் நீக்கக்கூடாது என்று சொன்னார்கள். அதை அரசு ஏற்றுக்கொண்டது. அதைத் தவிர மற்ற எழுத்துக்களையெல்லாம் நாம் நடைமுறைப்படுத்தலாம் என்று நாம் முடிவு எடுத்திருக்கிறோம், அதைத்தான் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். மேலும் சீர்திருத்துவது பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் இதைத் தீவிரமாக முறைப்படுத்துவதற்கும், இந்தக் குழு அமைக்கப்பட்டு இப்போது அவர்கள் காரியம் ஆற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

**திரு. க. அருணாசலம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த 'ஔ', 'ஐ' என்பதை ஒத்துக்கொள்ளக் கூடாது என்பதற்கு ஏதாவது காரணம் அவர்கள் சொல்கின்றார்களா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, அதற்கு நீண்ட விளக்கமாக உரையாற்ற வேண்டியதாக வரும் 'ஐ' என்று வருகின்றபோது, சில இடங்களிலே 'அ'வன்னாவும், 'ய்'ன்னாவும் போட்டால் அது பொருத்தமாக வந்துவிடுகிறது. சில இடங்களிலே 'ஐ'ன்னாவின் உச்சரிப்பு இயற்கையாக வருகின்ற நேரத்திலே அங்கே இப்படித் திருத்தி எழுதுவதால் பல சங்கடங்கள் வருகின்றன. அப்படிப் பட்ட ஒரு உச்சரிப்பை நாம் சிதைத்துக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. ஆகவே 'விடுதலை' என்று எழுதுகின்றபோது, அந்த 'ஐ' தேவைப்படுகிறது. அந்த 'ஐ' உச்சரிப்பு தேவைப்படுகிறது. அந்த இடத்திலே எழுத்தை வேண்டுமானாலும் 'லை' என்று மாற்றிக் கொள்ளலாமே தவிர, இந்த 'ஐ' என்று ஒரு தனி எழுத்து உச்சரிப்பாக இருப்பதை நாம் மாற்றவேண்டாம் என்று வல்லுநர் குழு தெரிவித்தது. அந்தக் கருத்தை அரசு பரிசீலித்து அதை ஏற்றுக்கொண்டது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, புதிய எழுத்துச் சீர்த்திருத்தத்தினால் இந்த கால் வாங்குவது (ா), 'ை' சேர்ப்பது காரணமாக அச்சிடும்போது அது இடத்தை அதிகமாக ஆக்கிரமிக்கிறது





என்ற குறைபாடு இருக்கிறது. அப்படி அதிகமாக இடம் ஆகின்ற குறைபாட்டை நீக்க அரசு பரிசீலனை செய்யுமா ? அதைப்பற்றி அந்தக் குழு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த எழுத்துச் சீர்திருத்தம் என்பதற்கு, எழுத்தினுடைய வரி வடிவங்களை மாற்றுகிற வேலையிலே எப்போதுமே நாம் ஈடுபடுவதில்லை. எண்ணிக்கையைக் குறைப்பதுதான் எழுத்துச் சீர்திருத்தத்தினுடைய முதல் கட்டப் பணியே. குறைந்த எழுத்துக்களை வைத்துக்கொண்டு உலகம் முழுவதிலும் சில மொழிகள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருக்கின்றன அல்லது தங்களுடைய செல்வாக்கைப் பரப்பிக்கொண்டிருக்கின்றன. தமிழைப் பொறுத்தவரையிலும், அதிகமான எழுத்துக்களை வைத்துக் கொண்டு, இதைத் தாய் மொழியாக வைத்துக்கொண்டிருப்பவர்களும் சரி, அல்லது அந்த மொழியைக் கற்றுக்கொள்பவர்களும் சரி, நிறைய எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது, அது தனித்தனியான ஒலிக்காக தனித்தனி வடிவம் பெற்றிருந்தாலும் கூட, அதிலே சில எழுத்துக்களுக்கு, உதாரணமாக 'கை' என்றால், ஒரு 'சுழி' (ை) போட்டு அந்த 'க' போடுகிறோம். இரண்டு எழுத்துக்களும் இருக்கின்றன. ஆனால் அங்கே 'னை'—வரும்போது அதற்கு என்று ஒரு புதிய எழுத்தாக உண்டாக்கியிருக்கிறார்கள். 'றா' என்றால் அதற்கு ஒரு புதிய எழுத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். அதிலே இடையின 'ர' என்றால், அதற்கு 'கால்' (ா) போட்டு, அதை 'ரா' என்கிறோம். இப்படி சீர்திருத்தங்களை முதலிலே இயன்ற அளவிலே செய்து, அந்த எழுத்துக்களைக் குறைத்தால், அது பயன் உள்ளதாகவும் இருக்கும், படிப்பதற்கும் உதவியாக இருக்கும். அந்த வகையிலேதான் நீண்ட காலமாக தந்தை பெரியார் அவர்கள், அவர்கள் அளவிலே பத்திரிகையிலே அமல் நடத்திக்கொண்டு வந்ததை இந்த அரசு வந்ததற்குப் பிறகு தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவினையொட்டி அவர்களுடைய நினைவாக பல காரியங்களை நாம் செய்து கொண்டிருப்பதாலே மட்டும் பயன் இல்லை. அவர்களுடைய இலட்சியங்களை, கொள்கைகளை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்த முடியுமோ அவைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு அரசின் மூலம் அங்கீகாரம் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கு அரசு இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

[1983 ஏப்ரல் 13

(முற்பகல் 9-40)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஆரம்பப் பள்ளி வகுப்புகளில் எழுத்துச சீர்திருத்தத்தைப் புகுத்தி விட்டார்கள். குழந்தைகள் அவற்றைப் படிக்கிறார்கள். அவர்கள் ஏடுகளைப் பார்க்கும்போது, அவை மாற்றாக இருக்கும்போது, குழந்தை களின் அறிவு வளர்ச்சிக்கு, தமிழ் வளர்ச்சிக்கு அது தடையாக இருக்கிறது. சிலர் தமிழுக்காக முரசொலிப்போம் என்று சொல்லி, வீடுகளிலே கல்விலே பெயர் எழுதும்போது, எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டவர்கள், தங்களுடைய ஏடுகளிலே அந்தச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. உபதேசம் ஊருக்கு, உனக்கல்லடி என்ற கருத்தா ? அவர்களை வற்புறுத்தி அந்த ஏடுகளில் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்க அரசு எப்படி நடவடிக்கை எடுக்கப் போகிறது ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, கேள்வியிலேயே 'தமிழக அரசு தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்ட பத்திரிகைகட்கு மட்டும் அரசு விளம்பரங்கள் தர முன்வருமா' என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். அப்படி அதை நிறைவேற்றுகிற வர்களுக்கு, அதை அமுல்படுத்துகிறவர்களுக்கு மாத்திரம் விளம்பரம் கொடுப்பது என்ற முடிவை நாம் எடுக்க முடியாது. அது சரியானதும் அல்ல. ஆனால் கொள்கை ரீதியாக, இலட்சிய ரீதியாக ஏற்றுக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர்கள், நாளேடுகள் அந்தச் சீர்திருத்தத்தை ஏன் அமுல்படுத்த முன்வரவில்லை என்பதுதான் அரசுக்குத் தெரியவில்லை. அதற்குள் நான் நுழைய விரும்பவில்லை. அது அவர்களுடைய உரிமை. மற்றவர்கள் அதில் ஏதாவது குறை காணலாம் அல்லது நீண்டகாலமாகப் பழகிவிட்டோம் என்று பழக்கத்திற்கு அடிமையாகி விட்டவர்கள் அதை மாற்றிக்கொள்ளாமல் இருக்கலாம், ஆனால் இந்தப் பழக்கத்தை மாற்ற வேண்டுமென்று, புரட்சி செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர்கள் எல்லாம் கூட ஏன் இதை அமுல்படுத்த இன்னும் முன்வராமல் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியவில்லை. சட்டப் பேரவையிலே, நேற்றுதான் என்று கருதுகிறேன், வேண்டுகோளாக வைத்திருக்கிறேன். பத்திரிகையாளர்கள் அருள்கூர்ந்து தமிழ் மொழியினுடைய வளர்ச்சி கருதி, அதனுடைய முன்னேற்றம் கருதி, எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டு நடை முறைப்படுத்த முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் பள்ளிப் பாடப் புத்தகங்களிலே சீர்திருத்தப்பட்ட எழுத்துக்கள் இருக்கின்றன, அவர்கள் பத்திரிகை படிக்கும்போது இப்படி இருந்தால் அது



1983 ஏப்ரல் 13]

முரண்படாதா, அவர்களுக்குக் குழப்பம் வாராதா என்று கேட்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் இப்படி குழப்பத்திற்குள்ளேயே, முரண்பாட்டிற்குள்ளேயே வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். நீண்ட காலமாக ஒரே மொழியிலே 'னா'வுக்கு 'ளு' என்ற எழுத்தும், பக்கத்திலே 'பா'வுக்கு 'பா' என்ற எழுத்தும் வருகிறபோது, அதைத் தெரிந்துகொண்டு பழக்கப்பட்டவர்கள், அந்தப் பழகத்திலேதான் இந்த முரண்பாட்டை ஏற்றுக்கொண்டு பழகி வருகி றார்கள். காலம் இதைச் சீர்திருத்திவிடுமென்று நம்பலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, அரசு எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தும், பெரும்பாலான ஏடுகள் அதைப் பின் பற்றவில்லை என்ற ஆதங்கத்தின் அடிப்படையில் மற்றவர்களைக் குறை சொல்வதை விட்டுவிட்டு, என்ன காரணத்தால் அவர்கள் பின்பற்றவில்லை, இந்த எழுத்துச் சீர்திருத்தம் முழுமையாகச் செய்யப்பட்ட சீர்திருத்தம் இல்லை என்று கருதுகிறார்களா, மேலும் அதில் ஏதாவது சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கருதுகிறார்களா என்றெல்லாம் அந்த ஏடுகளின் ஆசிரியர் களை அழைத்து வைத்துப் பேசி, அவர்கள் தருவது நல்ல கருத்துக்களாக இருந்தால், அவைகளை ஏற்று, அந்தக் குழுவிற்கு அனுப்பி பரிசீலனை செய்து, முழுமையான சீர்திருத்தம் செய்து, அதற்குப் பின்னால் எல்லோ ரையும் வற்புறுத்தும் அளவுக்கு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவரவர்களே, இப்போது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற எழுத்துச் சீர்திருத்தம் என்பது ஒரு சாதாரண, எல்லோருமே ஏற்றுக்கொள்ளத்தக்க, எந்தவிதமான விவாதத்திற்கும் இடம் அளிக்காத சீர்திருத்தம்தான். இதிலே யாரையும் கூட்டிவைத்துப் பேசி, பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்ற அளவுக்கு நிலைமைகள் இல்லை. கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா என்ற பழமொழி போல, இது சாதாரணமாகத் தெரிகிறது. 'ணை' என்றால் 'ண' என்று ஒரு எழுத்து, அதற்குப் பக்கத்தில் இன்னொரு எழுத்திலே 'ஐ' வரும்போது, 'ை' போடுகிறோம் என்ற நிலைமை வரும்போது, இதை மாற்ற வேண்டுமென்று சொல்லி, நீண்டகாலமாக மாற்ற வேண்டு மென்று சொல்லி, எல்லோரும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய தலைவராக விளங்கிய தந்தை பெரியார் அவர்கள் மாத்திரம் இதைச் சொல்லிக்கொண்டு வந்த காரணத்தாலே, மற்றவர்கள் இதைப் பின்பற்றுகிறார்களா, இல்லையா என்பதைப்பற்றி கவலைப்படாத தன்மையில் இருந்துகொண்டு, நான் நினைத்ததை நான் செய்து கொண்டிருப்பேன் என்று அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். அப்போதிருந்த ஆட்சியாளர்களும் அந்த முயற்சியை எடுத்துக்கொள்ள

[1983 ஏப்ரல் 13

வில்லை. இப்போது ஆட்சியாளர்கள் அந்த முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அரசு அந்த முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அதிலே முழுமையான சீர்திருத்தம் வர வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் அப்படிப்பட்ட முழுமையான சீர்திருத்தத்தைப் பத்திரிகைகளில் செய்து காட்டினால் நல்லது. அவர்கள் குழுவுக்கு வர வேண்டுமென்பது இல்லை. தந்தை பெரியார் குழுவுக்கு வந்து சீர்திருத்தம்பற்றிச் சொல்லவில்லை. எந்தச் சீர்திருத்தம் முழுமையானது என்று கருதுகிறார்களோ அதை அவர்கள் நடைமுறைப்படுத்தட்டும். அரசு அதற்கு மதிப்பளித்து அந்தக் குழுவைப் பரிசீலிக்கச் சொல்லும்.

## ஆகம பயிற்சி பள்ளிக்கூடம்/கல்லூரி.

* 283. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயில்களில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் ஆகம பயிற்சி அளிப்பதற்காக ஆகம பள்ளிக்கூடம்/கல்லூரி ஒன்றை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில் அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) மற்றும் (இ) விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே. தமிழகக் கோவில்களிலே அர்ச்சகர்கள் நியமன முறைபற்றி அறிய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு பரிந்துரை விவரங்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதிலே 'தகுதியுள்ள இந்துக்கள்' என்ற சொற்றொடர் இருக்கிறது. தகுதியுள்ள இந்துக்கள் என்றால் யார்? அதற்கு வரையறை இருக்கிறதா? அதிலே தாழ்த்தப்பட்ட மக்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? அதுமட்டுமல்லாமல், பரிந்துரையைச் செயல்படுத்துவதற்கு 1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் திருத்தப்படவேண்டும். அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது குறித்து மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து இதற்குப் பதில் வந்துள்ளதா? அதுபற்றி தற்போதைய நிலை என்ன?

---

@ 210ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை, சமுதாயத்திலே நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவருகிற பிரச்சினையாகும். இதை மாற்ற முனைகிற போது, இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறவர்களின் உணர்வுகளை நாம் மதித்தாக வேண்டும். அதையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஆகவேதான் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வருகிற நிலையை மாற்ற முன்வருகிற போது, 'அர்ச்சகருக்குத் தகுதியான' என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறார்கள். இந்துக்களிலே தகுதியானவர்கள் யாராக இருந்தாலும் அர்ச்சகர்களாகலாம். இது நாம் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிற, அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கை. அப்படி அரசு ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் பல பிரச்சினைகள் எழுப்பப்பட்டு, அது உச்ச நீதி மன்றம்வரை போய், உச்ச நீதி மன்றம் சில கருத்துக்களை வழங்கி, அந்த அடிப்படையிலே சாதி வித்தியாசத்தின்படிதான் அர்ச்சகர்கள் இருக்க வேண்டுமா, அதற்கு ஆகமத்திலே அல்லது வேறு நடைமுறையிலே, பழக்கத்திலே, நாம் பின்பற்றி வருகிற வேதங்களிலே—மற்ற திருமுறைகளிலே ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்பது பற்றி இவ்வளவு விரிவான ஆராய்ச்சியை யாருமே செய்யவில்லை. சொல்லப் போனால் தமிழகம் மாத்திரமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே ஆன்மீகத் துறையில், சமயத் துறையில் இப்படிப்பட்ட ஆராய்ச்சியை ஒரு குழு ஆராய்ந்ததாக வரலாறு இல்லை. அந்தப் பணியைத்தான் நாம் செய்திருக்கிறோம். எதைச் செய்தாலும் தெளிவாக, முறையோடு செய்ய வேண்டுமென்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, ஒரு மிகச் சிறந்த குழுவை நியமித்தார்கள். அந்தக் குழு மிக அருமையாக ஆராய்ந்து, அவர்கள் தந்திருக்கும் அறிக்கை, டாக்குமென்ட், தஸ்தாவேஜு இந்தியா முழுவதற்கும், ஆன்மீகத் துறையிலே இதுவரை கிடைக்கப்பெறாத, இனிமேல் பின்பற்றுகிற தஸ்தாவேஜு, ஆவணமாகும். அவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்திருக்கிறார்கள். இத்தனை ஆண்டுகளாகப் பழக்கத்திலே வந்து கொண்டிருக்கிற எல்லா விவரங்களையும் ஆராய்ந்து, ஆகமத்திலும் சரி, சாஸ்திரங்களிலும் சரி, எந்த இடத்திலும் சாதிப் பிரிவு கிடையாது, சாதி வித்தியாசம் கிடையாது, அர்ச்சகர்கள் ஆவதற்குத் தகுதியுள்ள இந்துக்கள் எல்லோரும் வரலாம், ஆகமம் அதற்குத் தடை விதிக்கவில்லை என்ற முடிவைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். 'தகுதி' என்பதற்கு வரையறை செய்திருக்கிறார்கள். அதை அடிப்படையிலே தெரிவித்திருக்கிறார்கள். தகுதி என்றால், மருத்துவர் ஆவதற்கு ஒரு தகுதி, வழக்கறிஞர் ஆவதற்கு ஒரு தகுதி, ஆசிரியர் ஆவதற்கு ஒரு தகுதி என்பதுபோல, அர்ச்சகர் ஆவதற்கு ஒரு தகுதி வேண்டும். இப்போது இருக்கிறவர்களில்கூட தகுதி குறைந்த

வர்கள் இருக்கலாம். அதைச் சீர்திருத்தி, அரசு இதை ஒழுங்குபடுத்தி, மிகப் பெரிய சீர்திருத்தத்தை ஆன்மீகத் துறையிலே செய்ய வேண்டுமென்று கருதும்போது, அரசு இந்த நடவடிக்கைகளையெல்லாம் எடுக்க வேண்டு மென்று அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அப்படிச் செய்திருக்கிற நேரத்தில், அதனுடைய தலைவர் தனியாக ஒரு குறிப்பு தருகிறார். நீங்கள் ஆர்வத்தின் காரணமாக முடிவெடுத்து, ஆணையிட்டு, சட்டம் நிறைவேற்றி, காரியங்களைச் செய்ய முன்வராலம்; அது உச்ச நீதி மன்றத்திலே சட்டத் தாலே தடுக்கப்படலாம்; ஆகவே அரசியல் சட்டம் 25 ஆம் பிரிவிலே இருக்கின்ற ஒரு கருத்துக்கு ஒன்றை விளக்கமாகச் சேர்த்துக்கொள்ளுங்கள். அதோடு அந்த விளக்கத்தை ஒரு சட்டத் திருத்தத்தின் மூலமாகச் செய்த பிறகு, நம்முடைய இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் சில இடங்களிலே ஒரு பிரிவு ஏற்கெனவே இருக்கிறது. நடைமுறைகளுக்கு ஏற்ப

(முற்பகல் 9-50)

அந்த அறங்காவலர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று. அதைத்தான் உச்ச நீதிமன்றமும் சொல்லியிருக்கிறது. பரம்பரை அர்ச்சகர் உரிமை கிடையாது. அதை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலம், பரம்பரை அகற்றப்படுவதன் மூலம், வேறு புதிய முறைகள், தகுதியற்ற முறைகள், வழக்கத்திற்கு மாறாக, நடைமுறைக்கு மாறாக புகுத்தப்படுமோ என்று அச்சம் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அச்சம் நியாயமானது "அரசு அப்படிச் செய்யாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அப்படி நடந்தால், நீங்கள் நீதிமன்றத்திற்கு வரலாம்" என்றும் சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, இவைகளையெல்லாம் எச்சரிக்கைகளாக எடுத்துக் கொண்டுதான் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி, நம்முடைய காலஞ்சென்ற திரு. மகாராஜன் அவர்கள் மிகத் தெளிவாக, எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், பயன்படுகிற வகையிலேயும் எடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். "முதலில் நீங்கள் அரசியல் சட்டத்தைத் திருத்திக்கொள்ளுங்கள், அதற்குப் பிறகு இந்த மாநிலத் தினுடைய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தைத் திருத்த வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். நீண்டகாலமாக இதை மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொண்டே இருக்கிறோம். இப்பொழுதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக இந்தியப் பிரதமர் அவர்களுக்கு, "இந்த அரசியல் சட்டத் திருத்த நடவடிக்கைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். காரணம் அரசியல் சட்டத்திலேயே இன்னொரு இடத்தில் எந்தவிதமான பாகுபாடும் இந்திய குடிமக்களிடையே வரக்கூடாது, காட்டக் கூடாது என்று



இருக்கிறது. அதை சமயத்திலே மட்டும் நீங்கள் எப்படி அனுமதிக்க முடியும்" என்று கூட எழுதியிருக்கிறார். இன்னும் மத்திய சர்க்காரிடத் திலேயிருந்து இதற்குப் பதில் வரவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அற நிலையத் துறை ஆகமம் நிறுவுவது, கல்விப் பயிற்சி, செயல் முறைப் பயிற்சி அளிப்பது, பயிற்சிக்கான பாட விதிகள், பயிற்சித் தேர்வுத் திட்டம், பாடப் புத்தகம் முதலியன சம்பந்தமாக வழிமுறைகளை நிர்ணயிப்பதற்காக குழு ஒன்று அமைப்பது அவசியம் என்று அரசு கருதியுள்ளதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டனவா ? குழு எப்போது அமைக்கப்படும் ? அதிலே இடம் பெறக் கூடிய அங்கத்தினர்கள் யார் யார் ? அவர்கள் எந்த வகையில் இருப்பார்கள் ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நாம் இதைக் கொள்கை முடிவாக ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தாலே, சட்டத்தின்படி நிறைவேற்றி சில நடைமுறைகளை ஏற்படுத்துவதற்கு முன்னாலே, அவர்கள் சில கருத்துக் களை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக் களை உரியவர்கள் உருவாக்கிவிட்டதற்குப் பிறகுதான், நாம் அந்தக் கேள்வி யைக் கேட்க முடியும் என்ற காரணத்தாலே, முதலிலே இந்த அறநிலையத் துறைக்கு நாம் இந்த அறிவுரையை வழங்கியிருக்கிறோம். ஆணையாளர் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழு அமைக்கப்படவில்லை. ஆனால் அந்தக் குழுவிலே இந்த மாநிலத்திலேயே மிகச் சிறந்திருக்கக்கூடிய சான்றோர்கள், சமஸ்கிருதத்திலே, தமிழிலே, தேவாரத்திலே, திருப்பாசுரத்திலே, திருவாசகத்திலே மற்ற சாத்திரங்களிலே, சம்பிரதாயங்களிலே - பல வகுப்பினர், பல பிரிவினர் எப்படி அதில் இருந் தார்களோ அதேபோல தேர்வு பெற்ற அறிஞர்கள், இந்தத் துறையிலே நம்பிக்கையுள்ள அறிஞர்கள், அந்த வழக்கங்களிலே ஈடுபாடு கொண்ட அறிஞர்கள் நியமிக்கப்படுவார்கள். மிக விரைவிலே அந்தக் குழு அமைந்து இந்தக் காரியங்களை அரசு, அறநிலையத் துறை செய்ய ஆரம்பித்துவிடும். அதற்கிடையிலேகூட நம்முடைய இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலே ஆகம பாடசாலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. அதிலேகூட நாங்கள் ஒரு முடிவினை அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். ஆகம பாடசாலைகளுக்கு உள்ளே வருகிற மாணவர்கள் எந்த ஜாதியினராக இருந்தாலும், விரும்பினால் வந்து படிக்கலாமென்று நீங்கள் அறிவிப்பு செய்யலாம் என்றுகூட நாம் அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறோம்.

[1983 ஏப்ரல் 19

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : ஆலயங்களில் அர்ச்சகர்கள் இல்லாமல் ஆண்டவனை மக்கள் நேரடியாக வணங்குகின்ற முறையை இந்த அரசு கொண்டு வருமா ? இந்துக்கள் மிகப் புனிதமாகக் கருதுகிற காசி விஸ்வநாதர் கோயிலில் அந்த முறை நடைமுறையில் இருக்கிறது. அதுபற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இதுவும் நாம் இதுவரை விவாதித்துக் கொண்டிருக்கிற நடைமுறைக்குள்ளே வருகிற ஒன்று. இன்றைக்கும் நம்முடைய இரத்தினகிரி பாலமுருகன் ஆலயத்திலே அர்ச்சகர் இல்லாமல் எல்லோரும் பக்கத்திலே போய்விட்டு வரலாம் என்றுதான் இருக்கிறது. அது எல்லாம் நடைமுறையில் வருகிறபோது, எப்படி நடக்கும் என்பதையும் பார்க்க வேண்டும். இலட்சக்கணக்கிலே மக்கள் கூடுகிறார்கள். அவர்கள் எல்லாம் உள்ளே போய்விட்டு வருகிறபோது, என்ன நடைபெறும் என்பது வேறு விஷயம். ஆனால் அப்படி யாராவது விரும்பினால் புதிதாகத் தோற்று விக்கப்படுகிற ஆலயங்களை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் நீண்டகாலமாக இருந்து வருகிற ஆலயங்களில், சில விதிகளுக்கு உட்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிற ஆலயங் களிலே தான் இந்தப் பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே இன்றைக்கே அர்ச்சகர் என்பவர்களிலேயே பல பிரிவினரும் இருக்கிறார்கள். அர்ச்சகர்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோமே யாரோ ஒரு பிரிவினரை, ஒரு ஜாதியாரை, அதற்குள்ளே ஒரு பத்து பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஒவ்வொரு வகையிலே இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய திருவானைக்காவல் என்பது மிகப் பெரிய சிவஸ்தலம். பஞ்ச பூதஸ்தலங்களிலே அதுவும் ஒன்று. அங்கே சிவாச்சாரியார் உள்ளே போக முடியாது. அங்கே இருக்கிற அர்ச்சகர் பண்டிதர். இராமேஸ்வரம் மிகப் புனிதமான ஸ்தலம். அதற்குள்ளே இந்த பண்டிதரும் போக முடியாது, சிவாச்சாரியாரும் போக முடியாது. மகாராஷ்டிரத்திலேயிருந்து வந்தவர் அங்கே இருக்கிறார். இவர்கள் எல்லோருமே திருச்செந்தூர் கோயிலுக்கு உள்ளே நுழைய முடியாது. கேரளாவிலேயிருந்து வந்தவர் ஒருவர் உள்ளே உட்கார்ந்திருக்கிறார். கன்னியாகுமரியிலே வேறு. இப்படி இந்த நடை முறைகளிலேயே பல இருக்கின்றன. நாம் ஏதோ நினைத்துக்கொண்டிருக் கிறோம். உள்ளே இருக்கிற அர்ச்சகர்கள் எல்லாம் ஒரே பிரிவினரைச் சார்ந்தவர்கள், அவர்கள் தான் இருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண் டிருக்கிறோம். அதற்குள்ளேயே வித்தியாசங்கள் இருக்கின்றன. அதற்குள் ளேயே வேறுபாடுகள் இருக்கின்றன. இன்றைக்கு அவர்களே ஒரு இடத்திலே, ஒரு கோயிலுக்குள்ளேயே அனுமதிக்கப்பட மாட்டார்கள்.



1983 ஏப்ரல் 19]

இவையெல்லாம் நடைமுறைகளிலே இருக்கிற சிக்கல்கள் நாம் வெளியிலே இருந்துகொண்டு உள்ளே என்ன நடக்கிறது என்பது தெரியாமலேயே சில முடிவுகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம், அதுவும் தவறு. அதற்குள்ளே ஈடுபட விரும்புகிறவர்கள் உள்ளே நுழைய வேண்டும். உள்ளே என்ன நடைபெறுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நீண்ட காலமாக அதை இலட்சக்கணக்கான மக்கள் ஏற்றுக்கொண்டு செல்கிறார்கள் என்ப தையும் புரிந்துகொள்ள வேண்டும். நாம் இந்த இலட்சக்கணக்கானவர்களுக் காகத்தானே நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே இந்த இலட்சக்கணக் கானவர்களை அல்லவா திருத்த வேண்டும் என்கிற உணர்வுகள் நமக்கு வர வேண்டும். இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன. ஏதோ வெளியிலே நின்று கொண்டு நான் அதை மாற்றிவிடுவேன் அல்லது மாற்றிவிட்டேன் என்று சொன்னால், சொல்வதற்குப் பெருமை தருமே தவிர, நடைமுறையிலே அது நடக்குமா என்பதுதான் இன்றைக்கு உள்ள பிரச்சினை. ஆகவேதான் இவ்வளவு சிக்கல்களையும் வைத்துக்கொண்டு அதைப் பார்த்துக் கொண்டிருக் கிறோம். ஆலயத்திற்குள்ளே அர்ச்சகரே இல்லாமல் யார் வேண்டுமானாலும் போய், உள்ளே சென்று, வணங்கிவிட்டு வரலாம் என்பது ஏற்றுக்கொண் டிருக்கிற ஒரு முறைதான். ஆனால் அதற்கு மக்களைத் தயார்படுத்த வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : எல்லாச் சாதியினரும், அனைத்து சாதி யினரும் அர்ச்சகராக வரலாம் என்கின்ற கொள்கையை அரசு ஏற்று அதற்கு ஒரு குழுவையும் நியமித்து இப்போது இந்த நடவடிக்கைகளை எல்லாம் எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக் கிறார்கள். இந்த நிலையிலே ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஆதி திராவிடர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் அர்ச்சகர் ஆகலாம் என்கிற ஒரு சட்டத்தை இயற்றி, அது உச்ச நீதிமன்றத்திலே தடை படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதே. அந்தத் தடையை நீக்கு வதற்கு இந்த அரசு ஏதேனும் முயற்சி எடுத்திருக்கிறதா ? இன்றைக்கு அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் அறியலாமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இதைத் தான் கொஞ்சம் மறைமுக மாகவே சொல்லிக்கொண்டுவந்தேன். இதைத் தெளிவாகச் சொல்ல வேண்டு மென்ற இக்கட்டான நிலைமைக்கு மாண்புமிகு உறுப்பினர் என்னைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டார். நான் இவ்வளவு நேரம் சொன்னதே, நீண்ட காலமாக நடந்துகொண்டு வருகிற, கோடிக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருக்கிற சில பிரச்சினைகளை, மாற்றும் முடிவுகளை ஒரு அரசு மேற்கொள்கிறபோது, அதனுடைய அடிப்படைகளை எல்லாம் ஆராய்ந்து முடிவுகளை மேற்

கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் ஒரு சட்டத் திருத்தத்தைச் செய்தோம் அல்லது தீர்மானத்தைப் போட்டோம், அதை மத்திய அரசுக்கு அனுப்பினோம் என்பதன் மூலம் காரியங்கள் நிறைவேறிவிட முடியாது. முன்னாலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு சட்டத் திருத்தத்தைச் செய்தது. அதன் விளைவாகத்தான் உச்ச நீதிமன்றம் வரை போனார்கள். அப்போது தான் உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது. "பரம்பரை அர்ச்சகர் உரிமை முறை கொண்டாட முடியாது. ஆனால் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பழக்கவழக்கங்களுக்கு மாறாக எதையும் செய்யக் கூடாது. அந்த உரிமையிலே நீங்கள் கை வைக்கக் கூடாது" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தைப் போட்டு, மத்திய அரசிடம் கேட்டார்கள். இந்தத் தீர்மானம் போட்டு மத்திய அரசைக் கேட்பது என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதற்குப் பயன்படுமே தவிர, மத்திய அரசிடத்திலிருந்து நாம் அனுமதி பெற்று விடுவதற்கு எல்லாத் தீர்மானங்களும் பயன்பட்டு விடாது. ஆகவே, மத்திய அரசிலே இருப்பவர்கள் இந்தியா பூராவும் பார்க்கிறார்கள் என்பதை நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். இந்த சமயத்திற்குள்ளே கை வைப்பது என்பது மிகப் பெரிய ஆபத்தான சூழ்நிலைக்குள்ளே போய் எல்லா அரசுகளையும் மாட்டிவிடும் என்பது இந்திய அரசுக்குத் தெரியும். இப்படி அரசுப் பொறுப்புக்கு வராதவர்கள் வெளியிலே எதையும் செய்யலாம், சொல்லலாம். ஆனால் அரசாங்கத்தை நடத்துகின்ற உணர்விலே இருக்கின்றவர்கள்—எல்லா மக்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கின்றவர்கள் அவ்வளவு சுலபமாக உள்ளே நுழைந்துவிட மாட்டார்கள். அந்தத் தீர்மானத்தை வாங்கி வைத்துக் கொண்டு அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு தான் நாம் அந்த முயற்சியை எடுத்தோம். இதிலே சந்தேகமே வேண்டாம். அந்த ஆய்வாளர்கள் அதிலே இருக்கிற அறிஞர்கள், மிகத் தேர்ந்த நிபுணர்கள் இவர்கள் எல்லாம் இடம் பெற்றிருக்கிற அந்தக் குழுவை நீங்கள் பார்த்தால், ஆச்சரியப்படுவீர்கள். இந்தத் தமிழகத்திலே எந்தெந்தத் துறைகளிலே இருக்கிறார்களோ அவர்களை எல்லாம்—மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே இது ஒரு முக்கியமான கேள்வி என்பதாலே நேரத்தை எடுத்துக் கொள்கிறேன். ஏனென்றால் விடை அளிக்கின்றபோது இவ்வளவு நீண்ட விடை அளிக்கக் கூடாது—ஆனால் மாண்புமிகு உறுப்பினர் என்னை விடை அளிக்கிற அந்த நிர்ப்பந்தத்திற்கு, சிக்கலுக்குக் கொண்டுவந்து வைத்து விட்டார்—அந்தக் குழுவிலே போட்டிருக்கிறோம். அந்தக் குழுவைச் சொல்கிறேன். திரு. எஸ். மகாராஜன், ஓய்வுபெற்ற நீதிபதி, தலைவர், திரு. சி. சுவாமிநாதக் குருக்கள், தென் இந்திய அர்ச்சகர் சங்கத் தலைவர்,





ஏ. விஸ்வநாத சிவாச்சாரியார், முதல்வர், வேதபாடசாலை, அல்லூர், திரு. ரெங்கராஜ பட்டர், திருவரங்கம் கோயில் பூசகர், திரு. மு. அருணாசலம், இலக்கிய வரலாற்றுத் துறையின் பேராசிரியர், சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் மூன்றும் தெரிந்த அறிஞர். திரு. வச்சரவேல் முதலியார், சைவ சித்தாந்தத் துறை தனி அலுவலர், மதுரைப் பல்கலைக் கழகம். திருமுருக கிருபானந்தவாரியார். திரு. யு. சுப்பிரமணியன், ஆணையர். திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஓய்வுபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர், திருவான்மியூர், திரு. சுந்தரராஜ பட்டர், சீனிவாசபெருமாள் கோயில், நாச்சியார் கோயில், தஞ்சை. திரு. டி. எஸ். இராமமூர்த்தி சிவாச்சாரியார், தென் இந்திய அர்ச்சகர் சங்கச் செயலாளர். திரு. அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், தலைவர், இந்து ஆலய பாதுகாப்புக் குழு. இப்படிப்பட்டவர்களைக் கொண்ட இந்தக் குழுதான் இந்த முடிவை நமக்கு அறிவித்திருக்

(முற்பகல் 10-00)

கிறது. இப்போது நாம் உரிமையோடு தெளிவாகக் கேட்கிறோம். இவ்வளவு விபரம் தெரிந்தவர்கள், பல்வேறு துறைகளில் உள்ள நிபுணர்கள் ஆகம விதிகளுக்கு முரண் இல்லையென்று சொல்கிறார்கள். தகுதி பெற்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் இந்துவாக இருந்தால், இந்துக் கோயில்களிலே அர்ச்சகராக வரலாம். அந்தத் தகுதிகளை உருவாக்குவதற்கு முயல வேண்டுமென்று, கன்ஸ்ட்ரக்டிவ் புரோகிராம் போல செய்கிறோம். ஏதோ விளம்பரத்திற்காக, வெளியிலே ஆர்ப்பாட்டத்திற்காக, செய்யப்பட்ட காரியம் அல்ல. ஒரு திட்டமிட்ட நடைமுறையை இந்த அரசு மேற்கொண்டு இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்து இந்த முறையில் மத்திய அரசுக்கு இப்போது தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். இப்போது அரசியல் சட்டத்தை மாற்றுவதில் உங்களுக்கு எந்தவித சிக்கலும் இருக்காது. ஒரு வார்த்தை தான் சேர்க்கவேண்டும் என்று எழுதியிருக்கிறோம். நல்ல முடிவு கிடைக்கும் என்று நம்புகிறேன். அரசியல் சட்டத்தின் இன்னொரு பிரிவையே இது பாதிக்கிறது. ஆகவே அதையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

[1983 ஏப்ரல் 13

## மகாகவி பாரதியார் நினைவு மண்டபம்.

* 284. வினா—திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் மகாகவி பாரதியார் நினைவு மண்டபம் ஒன்றைக் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) ஆம்.

(இ) மெரினா கடற்கரையில் காமராஜர் சாலையும், அவ்வை சண்முகம் சாலையும் கூடும் இடத்தில் நிறுவலாமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பாரதியார் நினைவு மண்டபம் எந்த அடிப்படையில் அமைக்கப்பட இருக்கிறது ? அதாவது வள்ளுவர் கோட்டத்தைப் போல், இன்னும் சொல்லப்போனால் அகில இந்திய அளவில் தேசிய ஒருமைப்பாட்டுக்கு பாடுபட்ட மகாகவி பாரதியாருக்கு எடுக்கப்பட வேண்டிய நினைவு மண்டபம் மிகச் சிறப்பான வகையில், அவருடைய கருத்துக்களை விளக்கும் வகையில் அமைய வேண்டும் என்பது போல் அமைய இருக்கிறதா ? அப்படி என்றால், அது எவ்வளவு ரூபாய் செலவில் கட்டப்படும் ? அப்படி ஒரு தேசிய மகாகவிக்காக கட்டப்படுகிற இந்த நினைவு மண்டபத்திற்கு மத்திய அரசு ஏதாவது உதவி செய்கிறதா ? அப்படி மாநில அரசு உதவித் தொகை கேட்டிருக்கிறதா என்ற விபரங்களை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு பழைய வரலாற்றையே சொல்லவேண்டிய அவசியத்துக்கு என்னை மாண்புமிகு உறுப்பினர் ஆளாக்கியிருக்கிறார்கள். மகாகவி பாரதியாருக்கு ஒரு நினைவு மண்டபம் கட்ட வேண்டுமென்று நீண்ட காலத்திற்கு முன்பே நுங்கம்பாக்கத்திற்கு அருகில் உள்ள ஆடம்ஸ் சாலையிலே 13 கிரவுண்ட் நிலம் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்படி ஒதுக்குகிற நேரத்தில் மகாகவி பாரதியாருக்கு என்று ஒதுக்கவில்லை. அதிலே ஒரு கொக்கியைப் போட்டுவிட்டார்கள். அதற்கு முன்பு ரவீந்திரநாத் தாகூருடைய நூற்றாண்டு விழாவையொட்டி மத்திய



1983 ஏப்ரல் 13]

அரசு ஒவ்வொரு மாநிலத்திலும், தாகூருடைய நினைவாக மண்டபம் எழுப்ப வேண்டுமென்று ஆணையிட்டு, அப்படி எழுப்ப மாநில அரசு முன்வந்தால், அவர்களுக்கு உதவி வழங்குவதாகச் சொல்லி அவர்கள் உதவிகளை வழங்கினார்கள். அதை வைத்து ரவீந்திரநாத் தாகூருக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்க வேண்டுமென்று அந்த இடத்தை ஒதுக்கினார்கள். அதற்குப் பிறகு பாரதி சங்கம் தாங்கள் பாரதிக்கு நினைவு மண்டபம் எழுப்பவேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அன்றைக்கு இருந்த அரசு, அப்படியானால் ரவீந்திரநாத் மண்டபத்தைச் சேர்த்து, "பாரதி-ரவீந்திரநாத் தாகூர் மண்டபம்" என்று எழுப்புங்கள் என்று இணைத்து விட்டார்கள். அப்படி இணைத்ததன் விளைவாக மத்திய அரசு தன்னுடைய கொள்கையில் இருந்து மாற்றிக்கொள்ள முடியாததால் அதற்கு மேல் அக்கறை காட்டவில்லையோ அல்லது இவர்கள் காட்டவில்லையோ தெரியவில்லை. நின்று விட்டது. அஸ்திவாரம் போட்டபடியே அது நின்று விட்டது. அதற்குப் பிறகு நமது ஏழை எளிய மக்கள் கட்டப்பட்ட அஸ்திவாரம் நாம் குடிசை கட்டுவதற்குத்தான் என்று கருதி, அங்கே குடிசைகளைக் கட்டிக் கொண்டார்கள். ஆகவே நீண்டகாலமாக அந்த இடத்தைக் கையகப் படுத்த அரசால் முடியவில்லை. இதிலே பெரிய ஆச்சரியம் என்னவென்றால், இப்போது நீதிமன்றங்களைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோமே, அதனால் சொல்கிறேன், அது அரசாங்க இடம், அங்கே ஒரு திட்டத்திற்காக மண்டபம் கட்ட அரசு முன்வந்தது, அதிலே குடிசைகளைப் போட்டுக் கொண்டார்கள், அந்தக் குடிசைகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் வருகிறபோது, குடிசைவாசிகள் எல்லாம் எங்களை அப்புறப்படுத்தக் கூடாது என்று கோர்ட்டில் 'ஸ்டே' வாங்கிவிட்டார்கள். இதிலே சிக்கல் இருக்கிறது என்று கருதி, அரசாங்கமே இதில் தலையிட வில்லை. ஆனால் பாரதி நூற்றாண்டு விழாவை ஒட்டி இந்த அரசு அந்த நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரைகளில் ஒன்றான சென்னையில் இந்த மண்டபத்தைக் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதற்கு பாரதி சங்கத்தின் தலைவராக இருக்கிற திரு. நா. மகாலிங்கம் அவர்கள் ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். நீங்கள் ஒரு புதிய இடத்தை சென்னையில் ஒதுக்கித் தந்தால், எங்கள் பொறுப்பில் அதிலே கட்டிடம் கட்டுகிறோம் என்று சொன்னார்கள். பல இடங்களைப் பார்த்தோம். சென்னை நகரில் மையமாக இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. கடைசியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே அக்கறை எடுத்து, இந்த அருமையான இடத்தை கடற்கரையில் ஒதுக்கித் தரலாம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது, பாரதி சங்கத்திடம் கேட்டோம். "இப்படி இந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதானால், ரூ. 20

அல்லது 25 இலட்சத்தில் கட்டுவது பலன் அளிக்காது. அது நேஷனல் அளவில் முக்கியத்துவம் பெற்ற மண்டபமாக இருக்க வேண்டும். நேஷனல் கான்பரன்ஸ், மற்ற கலை நிகழ்ச்சிகள் போடுகிற இடங்கள், நூலகங்கள் போன்றவைகள் எல்லாம் அதற்குள்ளே இருக்க வேண்டும். அது இந்தியா விலேயே மிக முக்கியத்துவம் பெற்றதாக, இன்னும் சொல்லப்போனால், இன்டர்நேஷனல் முக்கியத்துவம் வர வேண்டும்" என்று அவர்களைக் கேட்டுக் கொண்டோம். அப்படிக் கேட்கிறபோது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் வருடம் பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, 10 இலட்சம் ரூபாய் அரசு இதற்கு ஒதுக்கும் என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்த உறுதியை நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளின்போது உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். ஆக அந்த இடத்தைத்தந்து, அந்த 10 இலட்சம் ரூபாயைத் தந்தால், 75 இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் ஒரு மிகச் சிறந்த மண்டபம் உண்டாக்க வேண்டும் என்ற நிபந்தனையை அரசு திரு. நா. மகாலிங்கம் அவர்களிடம் வைத்தது. அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு நடந்து முடிந்த பாரதி விழாவில், அவர்களுடைய நிறுவனங்களின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் தருவதற்கு ஒப்புக் கொண்டு, "நான் இந்த 75 இலட்சம் ரூபாயைத் தந்து இந்த மண்டபம் கட்டும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன்" என்று அவர்கள் உறுதி அளித்ததன் பேரில், இந்த நிலத்தை ஒதுக்கியிருக்கிறோம். இதற்கு ஒரு அடிப்படைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தலைவர். மாண்புமிகு மேலவைத் தலைவர், அரசின் சார்பில் கல்வித் துறையின் ஒரு அதிகாரி, செய்தித் துறையின் அதிகாரி ஒருவர், பொதுப் பணித் துறைப் பொறியாளர் ஒருவர் ஆகியோர் இந்த அடிப்படைக் குழுவில் இருப்பவர்கள். அவர்கள் இதிலே வரைபடங்கள் போட்டு, மிகச் சிறந்த மண்டபமாக அமைப்பது என்ற முடிவுகளை எடுத்த தற்குப் பிறகு, டிரஸ்ட் என்ற வகையில் தனியாக அது அமைக்கப்படும். அது நீண்ட கால அடிப்படையில், தமிழுடைய சிறப்பு, தமிழ் நாட்டின் புகழ் ஆகியவைகளை உலகத்திற்குச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய செய்திக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். காணி நிலம் வேண்டும் என்று பாரதி பாடினார். மாண்புமிகு அமைச்சர் குறிப் பிட்ட அந்த இடத்தில் குடிசை போட்டுக் கொண்டிருப்பவர்கள் காணி நிலம் வேண்டுமென்ற பாரதி பாடலை செயல்படுத்தியிருப்பார்களோ என்று நினைக்கிறேன். அதைப்போல் பிற மாநிலங்களில் ஏதாவது நினைவு மண்டபங்கள் அமைக்கிற திட்டங்கள் பற்றி பிற மாநில அரசுகளிடம் நமது அரசு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறதா? நெல்லை மாவட்டத்தைத்



தவிர, வேறு எங்காவது இப்படிப்பட்ட பாரதி நினைவு மண்டபங்கள் அமைக் கிற எண்ணம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், மிக விபரமாகப் பதில் தர இயலும். ஆனால் ஒன்றை மட்டும் தகவலுக்காகத் தருகிறேன். வேறு மாநிலங்களில் அவ்வாறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பம்பாயில் பாரதி மண்டபம் கட்டப்பட்டு, அதை பிரதமர் அவர்கள் திறந்துவைத்தார்கள். அதைப் போல பீகாரில் பாரதி மண்டபம் கட்டுவதற்கு அந்த அரசு நிதி ஒதுக்கித் தரவேண்டும் என்று நம்மைக் கேட்டார்கள். நாங்கள் ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். அப்படி இந்தியாவின் பல்வேறு மாநிலங் களில் பாரதி நினைவு மண்டபங்கள், சங்கங்கள் உருவாக்கி, சாலைகள் நிறுவுகிற முயற்சிகள் இந்த நூற்றாண்டுவிழா தொடர்பாக இந்தியா முழுமைக்கும் இன்றைக்கும் நடைபெற்று வருகின்றன. டெல்லியில் கூட சிலை வைப்பதற்காக சிலையைத் தர இருக்கிறோம். மத்திய அரசு அங்கே ஒரு முக்கியமான இடத்தில் அதை வைக்க இருக்கிறார்கள். மேற்கு வங்கத்திற்குச் சிலை செய்து கொடுத்தோம். முக்கியமான இடத்தில் அந்தச் சிலை வைக்கப்பட்டு, அங்குள்ள ஒரு சாலைக்குக் கூட பாரதி பெயரை வைத்திருக்கிறார்கள். டெல்லியில் ஏற்கெனவே ஒரு சாலைக்கு பாரதியின் பெயரை வைத்திருக்கிறார்கள். இப்படி இந்திய நாடு முழுவதும் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. வேறு இடங்களில் தேவையானால், தனியான கேள்வி போடவும்.

## தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம்.

* 287. **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டம் என அறிவித்து பல்வேறு தொழில்களை அம்மாவட்டத்தில் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போதிலிருந்து அமல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** (அ) மற்றும் (இ) 15 சதவீத மாநில அரசு மூலதனமானியத் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் பேராவூரணி மற்றும் ஒரத்தநாடு ஆகிய இருவட்டங்களும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் மற்ற வட்டங்கள் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் குறியீட்டு எண்ணிற்கு எதுவும் தற்போது எட்டவில்லை.

(முற்பகல் 10.10)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணி வட்டமும் ஒரத்தநாடு வட்டமும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவ்விரண்டு வட்டங்களிலும் புதிய தொழில்களைத் துவங்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளனவா ? இவை இரண்டுமட்டுமின்றி, வேறு எந்த வட்டங்களையேனும் அம்மாவட்டத்தில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள்கள் அரசுக்கு வந்திருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட கேள்வி, " தஞ்சை மாவட்டத்தில் பின்தங்கிய வட்டங் களாக அறிவிக்கப்பட்ட வட்டங்கள் எவை எவை ? " என்பதாகும். எனவே தனியாகக் கேள்வி போட்டால், இந்த அறிவிப்புக்குப் பிறகு, எந்தெந்தத் தொழில்கள் அங்கே துவங்கப்பட்டிருக்கின்றன என்று பதில் சொல்ல இயலும். பல வட்டங்களிலிருந்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், வியாபாரிகள் சங்கங்கள், தொழில் முனைவோர் சங்கங்கள் போன்றவர்களிடமிருந்து தங்கள் வட்டங்களையும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. நாமும் இன்னும் சில வட்டங்களையும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சைத் தரணி பெற்ற புண்ணியம் நீலகிரி மாவட்டத் திற்கும் கிடைக்குமா ? நீலகிரி மாவட்டத்திலும் ஏதேனும் சில வட்டங்கள் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட இருக்கின்றனவா ? மத்திய அரசின் கொள்கையை இவ்வகையில் மாற்றி அங்கே சில வட்டங்களையாவது பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ?





**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலும் ஏதாவது ஒரு வட்டம் தொழில் துறையில் பின் தங்கிய வட்டம் என்று மாநில அரசால் அறிவிக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இங்கே நான் கேட்ட கேள்வி " தஞ்சாவூர் மாவட்டம் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம் என அறிவித்து, பல்வேறு தொழில்களை அம்மாவட்டத்தில் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா ? " என்பதுதான். எனவே எவை எவை பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என்பதல்ல என்னுடைய கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, தஞ்சை மாவட்டத்தில் இரண்டு வட்டங்கள் மட்டுமே பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்தார்கள். எனவே அங்கு என்னென்ன தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்ற கேள்வியும் இருப்பதால், அதற்குரிய விடையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** பின்தங்கிய வட்டங்கள் என்று சில வட்டங்களை அரசு அறிவிக்கிற காரணத்தால், அந்த வட்டங்களில் ஏற்பட வேண்டிய தொழில் வளர்ச்சிக்கான முழுப் பொறுப்பையும் மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற அடிப்படையில் அரசு அறிவிப்பதில்லை. ஏதோ பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்ட வட்டங்களில் மட்டும்தான் அரசாங்கம் தொழில்களைத் தொடங்கும் என்று கருதத் தேவையில்லை.. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை, பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்படாத மயிலாடுதுறையில் ஒரு சர்க்கரை ஆலையை தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் அமைக்க இருக்கிறது. ஒரு வட்டத்தை பின்தங்கிய வட்டமாக அரசு அறிவிப்பதன் மூலமாக அந்தப் பகுதிகளில் மற்ற தொழில் முனைவர்கள் மற்றும் தொழில் தொடங்குவோரை உற்சாகப்படுத்தி அவர் களுக்கு வேண்டிய " கேப்பிட்டல் சப்சிடி, இன்டரஸ்ட் ஃப்ரீ லோன் " போன்ற மற்ற தேவையான வசதிகளையும். இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பெசிலிட்டிஸ் போன்றவற்றையும் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருகிறது. பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் தொழில்கள் துவங்கப்படும் போது, அவைகளுக்கான உதவிகளையும், மானியங்களையும் மாநில மற்றும் மைய அரசுகள் வழங்குகின்றன. நான் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அறிவித்துள்ள இரண்டு பின்தங்கிய வட்டங்களிலும், அரசு மூலமாக எந்தத் தொழிலையும் தற்போது தொடங்குவதற்கான திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை. ஆனால் தனியார் பலர் அங்கே தொழில் தொடங்க மனுச் செய்துள்ளார்கள். இதற்கான விவரத்தை தனிக் கேள்வி கேட்டுப் பெறலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 13

## தங்காடுவில் நூற்பாலை.

*288. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அறந்தாங்கி வட்டம். தங்காடுவில் நூற்பாலை ஒன்றை அமைக்க, அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அத்திட்டத்திற்கு செலவிட அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

(உ) அவ்வாலை, எப்போதிருந்து செயல்படும் ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** (அ) அறந்தாங்கி வட்டத்தில் சிவந்தங்காடு என்ற கிராமத்தில் நூற்பாலை ஒன்றை அமைக்க அரசு அனுமதி வழங்கியது.

(இ) இந்த ஆலை நிறுவிட மொத்த திட்டச் செலவினம் ரூ.706 இலட்ச மாகும். இதில் மாநில அரசு செலுத்த நிர்ணயிக்கப்பட்ட மொத்தப் பங்குத் தொகை 318 இலட்சம் இந்த மலைக்கு அரசின் பங்குத் தொகையாக 1981-82-ம் ஆண்டில் ரூ. 1.35 இலட்சம் செலுத்த ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(உ) இந்த ஆலையை இரண்டு ஆண்டுகளில் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நூற்பாலைகள் வேறு எங்காவது அரசால் தொடங்கப் பட்டிருக்கின்றனவா ? அல்லது தனியார் துறையிலிருந்து நூற்பாலைகளைத் தொடங்குவதற்குரிய அனுமதியைக் கேட்டு அரசிடம் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்வி "அறந்தாங்கி வட்டம் தங்காடுவில் நூற்பாலை ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?" என்பதாகும். இருந்தாலும் நான் நினைவிலிருந்து சில விவரத்தை மட்டும் இங்கே சொல்ல முனைகிறேன். இதைப்போல ஐந்து மாவட்டங்களில் சுமார் ரூ.30 கோடி மதிப்பீட்டில் நூற் பாலைகள் அமைக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதைப் போலவே தனியாரும் பல்வேறு மாவட்டங்களில் உரிமங்களைப் பெற்று தொழில் தொடங்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.



1983 ஏப்ரல் 13]

## விதவைகளுக்கு வேலை வாய்ப்பு

*285 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழக மருத்துவமனைகளில் விதவைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மற்றும் (இ) அரசு மருந்து நிறுவனங்களில் தமிழ்நாடு மருத்துவ சார்நிலைப் பணி மற்றும் கடை நிலைப் பணியின் கீழ்வரும் கீழ்க்கண்ட எட்டு பணியிடங்களில் நியமனங்கள் செய்யும்பொழுது ஆதரவற்ற வறுமை நிலையில் உள்ள விதவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது :—

(1) செவிலியர் உதவியாளர்—தமிழ்நாடு மருத்துவச்சார்பு நிலைப் பணி

(2) ஆயா—தமிழ் நாடு கடைநிலைப்பணி

(3) பெருக்குபவர்—தமிழ் நாடு கடைநிலைப் பணி

(4) துப்புறவுப் பணியாளர்—தமிழ் நாடு கடைநிலைப் பணி

(5) மருத்துவமனைப் பணியாளர்—தமிழ்நாடு கடை நிலைப்பணி

(6) சமையற்காரர்—தமிழ் நாடு கடைநிலைப்பணி

(7) சமயலறை பணியாளர்—தமிழ் நாடு கடைநிலைப்பணி

(8) தண்ணீர் கொணர்பவர்—தமிழ் நாடு கடைநிலைப் பணி.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, அரசு அப்படி ஒரு ஆணை பிறப்பிப்பதற்காக நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்: 1982 ஆம் ஆண்டுக்குப் பின்னால் இன்று வரை இவ்வாறு பிறப்பிக்கப்பட்ட ஆணையின் விளைவாகப் பயன்பெற்றவர்கள் இந்த நிலை வாரியாக எத்தனை பேர் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸ் ஆண்டு பேமிலி வெல்பேரின் கீழ் 68 பேர் டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனின் கீழ் 29 பேர்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில நிலைகளுக்கு இத்தகைய வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்ற பதிலைச் சொன்னார்கள். இதேவகையில் அனைத்து வேலை வாய்ப்புகளிலும் முன்னுரிமை வழங்கப்படுமா ? அதன்மூலம் "கோரிக்கையற்றுக் கிடக்கு தண்ணே இங்கே வேரிற் பழுத்த பலா ; மிகக் கொடியதென்றெண்ணிடப் பட்டதண்ணே குளிர் வடிக்கின்ற வட்ட நிலா" என்ற பாவேந்தரின் எண்ணத்திற்கேற்ப விதவைகளின் மறுவாழ்வுக்குத் துணை செய்யும் வகையில் அரசு எல்லா நிலைகளிலும் இத்தகைய முறையைக் கையாள முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக நாம் விண்ணப்பங்களை வரவழைக்கிறோம். அரசைப் பொறுத்தவரையில், "Widows alone should be considered என்று இருக்கிறது. No upper age limit be prescribed for the widows for appointment to the posts mentioned under paragraph 1. As for appointment to the posts referred to as items 2 and 3, in Tamil Nadu Basic Services, in sub-paragraph (1), it would be enough if the widows satisfy the appointing authorities that they are able to read and write Tamil at the time of interview" எனவே இந்த வகையில் அவர்களுக்குத் தமிழ் மொழி மட்டும் தெரிந்தாலே போதும், மற்ற தகுதிகள் ஏதும் தேவையில்லை என்றே உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் படிப்படியாக நான் ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி ஒரு துறையில் 68 பேரும் இன்னொரு துறையில் 29 பேரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளையும்கூட இன்னும் படிப்படியாக ஆராய்ந்து பார்த்து, இதை விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





செல்வி ஆ. லீலாவதி : துணைத் தலைவர் அவர்களே, விதவைகளை நியமிக்கும்போது, அவர்களுக்கு வயது வரம்பு ஏதாவது நிர்ணயிக்கப் படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : வயது வரம்பு ஏதுமில்லை என்பதைத்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன்.

### மருத்துவக் கல்வி மறுபரிசீலனைக் குழு

*286 வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது குறித்து அகில இந்திய அளவில் தேர்வு நடத்த வேண்டுமென்று டாக்டர் சாந்திலால் மேத்தா தலைமையிலுள்ள மருத்துவக் கல்வி மறுபரிசீலனைக் குழுவின் அறிக்கை மாநில அரசுக்கு அனுப்பப்பட்டு கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில் இது குறித்து தமிழக அரசு தெரிவித்த கருத்துக்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.
(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் 'இல்லை' என்ற பதில் மகிழ்ச்சியைத் தருகிறது. தற்போது எம்.டி., எம்.எஸ். போன்ற தேர்வுகளுக்காக இருந்த முறையை மாற்றியிருக்கிறார்கள். அதைப்போலவே மாணவர்கள் எந்தப் படிப்பிற்கு மனுச் செய்திருந்தாலும், இருக்கிற இடத்திலிருந்தே தேர்வுகளை அணுகுகிற முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது பாராட்டுக்குரியதாகும். அதைப்போலவே எம்.பி.பி.எஸ். தேர்வு முறையிலும் இத்தகைய புதிய முறையைப் புகுத்தி மாணவர்களின் சிரமங்களைப் போக்கும் யோசனை ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அரசுக்கு அப்படிப்பட்ட யோசனை ஏதுமில்லை.

[1983 ஏப்ரல் 13

9—4—1983 ஆம் தேதிய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்ட வினாக்கள்.

24 மணி நேரத்திற்கும் மின்சக்தி வழங்கல்.

* 241. வினா—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடிநீர் வழங்கலுக்காக திண்டிவனம் நகராட்சி தன் பொறுப்பின் கீழ் உள்ள நீரேற்று நிலையங்களுக்கு 24 மணி நேரமும் மின்சக்தி வழங்க வேண்டும் என்று எந்நாளன்று கேட்டது?

(இ) எந்நாளன்று அவ்வாறு மின்சக்தி வழங்கப்பட்டது? அதில் காலதாமதம் ஏற்பட்டிருந்தால் அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 2—4—1983.

(இ) 14—7—1981 அன்று தனி மின் இணைப்பு அமைக்கப்பட்டது.

(முற்பகல் 10—20)

திரு. க. இராமமூர்த்தி : மூன்று மாத காலதாமதம் எதனாலே ஏற்பட்டது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? காலம் கடந்ததால் கேள்வியினுடைய முக்கியத்துவமே போயிற்று. ஆகவே இதுபோன்ற நிலைமைகள் இனிமேல் ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வருவாய் மற்றும் வறட்சி நிவாரணப் பணி ஆணையர் தனது 16—5—1981-ம் தேதியிட்ட கடிதத்தில் திண்டிவனம் மற்றும் சில குடிநீர் திட்டத் தலைமைப் பணியிடங்களுக்கு தனி மின் இணைப்பு கொடுக்குமாறு மின்சார வாரியத்திற்குப் பரிந்துரை செய்தார். அது ஐந்தாவது மாதம். அதன்படி திண்டிவனம் குடிநீர் திட்டத்தின் தலைமைப் பணியிடத்திற்கு தனி வழி மின் தொடர்பு கொடுக்கப் பட்டு 14—7—1981 முதல் 24 மணி நேர மின்சார விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. அதனாலே காலதாமதம் இல்லையென்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று கருதுகிறேன்.



1983 ஏப்ரல் 13]

*Protected Water Supply.*

* 262. *Q.*—DR. T. R. JANARTHANAM : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) the stage at which the scheme to provide for protected water supply to Pallavapuram and Alandur Municipal areas, stands now;

(*b*) the probable date by which the scheme will be completed ; and

(*c*) the total expenditure involved for implementation of this scheme ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (இ) ஆலந்தூர் பல்லவபுரம் கூட்டுக் குடிநீர் திட்ட வேலைகள் யாவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மொத்த நீளமான 52.08 கி.மீ. நீர் ஏற்றும் குழாய்களில் 51.73 கி.மீ. நீளமுசிள குழாய்கள் 5—4—1983 வரை பதிக்கப்பட்டுள்ளன. எஞ்சி யுள்ள வேலைகள் யாவும் 30—4—1983க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மே மாதம் இறுதிக்குள் குடிதண்ணீர் கொடுத்துவிடலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபோது, பல்லாவரம் என்று இருந்தது, இப்போது பல்லவபுரமாக மாறியுள்ள அந்த இடத்தில் இப்படி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதற்குக் காரணம் முன்பு போட்ட குழாய்கள் உடைந்ததுதானா? அதனுடைய விவரங்களைத் தெரிவிப்பார்களா? எவ்வளவு விரைவிலே பணிகள் முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பழைய சீவரத்திலிருந்து ஆலந்தூர் வரையிலான நீரேற்றுக் குழாய்கள் செப்டம்பர் 1975இல் பதித்து முடிக்கப்பட்டு, நீரேற்றும் பணி தொடங்கப்படுகையில், கான்கிரீட் குழாய் களில் பல இடங்களில் கசிவு ஏற்பட்டதால், நீரேற்றும் பணியினை நிறுத்தி, நிவர்த்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்படியிருந்தும் கசிவுகள் நிற்காததால், அக்குழாய்களை விட்டுவிட்டு, இரும்பு மற்றும் கல்நார் குழாய்கள் உபயோகிக்க திட்டமிடப்பட்டு அரசின் ஒப்புதல் அரசாணை எண் 1467, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 19—9—1979ல் ரூபாய் 708.08 இலட்சங்களுக்குப் பெறப்பட்டது. இத்தொகை ஏற்கெனவே உள்ள திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தொகையையும் உள்ளடக்கிய தாகும். புது இரும்பு மற்றும் கல்நார் குழாய்கள் பதிப்பதற்காகும் செலவு

மட்டும் ரூ. 43 இலட்சமாகும். பழைய சீவரத்திலிருந்து ஆலந்தூர் வரை போடக் கூடிய குழாய்களில் கசிவு ஏற்பட்டுவிட்டது. எனவே அவைகளை மாற்றியமைக்கும் வேலைகள்தான் நடந்து வருகின்றன. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல 51.73 கி.மீ. நீளமுள்ள குழாய்கள் போடப்பட்டுள்ளன. இந்த வேலைகள் எல்லாம் அநேகமாக முடிவுற்று மே மாதம் இறுதிக் குள்ளாக நல்ல குடி தண்ணீர் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Thiru A. R. DAMODARAN: Sir, in view of the experience gained regarding possible leakage in cement concrete pipes, may I know whether a policy decision has been taken by the Hon. Minister's Department not to lay such pipes but to concentrate only on laying of steel pipes in new water-supply schemes ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படி ஒரு இறுதியான முடிவு எடுத்ததாக ஞாபகம் இல்லை. ஆங்காங்கே ஆய்வு, இன்வெஸ்டிகேஷன் செய்யும்போது என்ன குழாய்களைப் போடுவது, எவ்வளவு டையாமீட்டர் போட வேண்டும் என்று என்ஜினியர்கள் பரிந்துரை செய்கிறார்கள். அதை ஏற்று அரசு நடைமுறைப்படுத்துகிறது. இதிலே ஏற்பட்டது மிகப் பெரிய பிரச்சினை. இதிலே 708.08 ரூபாய் செலவு என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், இது முடிகிற நேரத்தில் 8 கோடி ரூபாய் அளவிற்குப் போகும் என்று எங்கேயோ படித்ததாக ஞாபகம். முடியும்போது ஆகிய செலவைப் பற்றிக் கூறுகிறேன். ஆரம் பத்திலே சரியாகப் பார்க்காததால், 8 கோடி ரூபாய் வரையில் போய்விட்டது என்று நான் நினைக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know explicitly from the Hon. Minister, without any motivation, whether the defect lies in the execution of the contract or whether the defect lies in the pipe, itself? If it is a defect in the pipe, we should not use it. If it is a defect on the part of the Contractor, then it isa different matter altogether.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நீர் ஏற்றும் பணி தொடங்கப் படுகையில் கான்கிரிட் குழாய்களில் பல இடங்களில் கசிவு ஏற்பட்டது என்பதால், சப்-ஸ்டாண்டர்ட் குழாய்கள் என்று ஆகிறது. குழாய்கள் சரியாகத் தயார் செய்யவில்லை. அதாவது சப்-ஸ்டாண்டர்ட் அல்லது அன்சூட்டபிள் என்று ஆகிறது. இதே பிரச்சினை வேறு ஒரு பெரிய திட்டத்திற்கும் பொருந்தும். அதை இண்டர்லிங்க் செய்ய விரும்பவில்லை. கசிவு ஏற்பட்டதால் நீரூற்றுக் குழாய்களைப் பரிசோதனை செய்தார்கள். கசிவு நிற்காததால் அக்குழாய்களை விட்டுவிட்டு இரும்புக் குழாய்களாக





மாற்றலாம் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். காண்கிரீட் குழாய்களை போடலாம் என்று முடிவு எடுத்தது தவறாக இருக்கலாம் அல்லது தயார் செய்யப்பட்ட குழாய்கள் சப்-ஸ்டாண்டர்டாக இருக்கலாம் water was found oozing out" என்று ஆங்கிலக் குறிப்பில் இருக்கிறது. எனவே வருந்தத்தக்க விஷயங்கள் நடந்துவிட்டன. இருந்தாலும் மே மாத இறுதிக்குள் நல்ல தண்ணீர் வரும் என்பதால், இப்போது நாம் மகிழ்ச்சியோடு இருக்கலாம்.

Thiru A. R. DAMODARAN: Sir, is the Hon. Minister aware that in Kodaikanal where steel pipes have been laid, the same 'Kasivu' problem is there? May I request the Hon. Minister kindly to attend to that also?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதிலிருந்து அந்தக் குழாய் களை சப்-ஸடாண்டர்டாக அமைக்கக் கூடாது என்று பொருளாகிறது.

The inference drawn would be that such pipes are all sub-standard and they are not of the expected standard.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பழைய சீவரத்திலிருந்து ஆலந்தூருக்குக் கொண்டுவரப்படுகிற குழாய்களில் கசிவு ப்ராப்ளம் ஏற்பட்டதாக இங்கே குறிப்பிடப்பட்டது. ஏற்கெனவே நீண்ட காலத்திற்கு முன்பே ஆலந்தூர் நகராட்சியில் நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, குழாய்கள் பதிப்பு செய்யப்பட்டு வீடுகளுக்குக் கூட இணைப்பு கொடுக்கப்பட்ட பிறகும் இன்று வரையில் தண்ணீர் தாமல் இருப்பதற்குரிய காரணம் இதுதானா ? அல்லது ஏற் கெனவே குடிதண்ணீர் விடப்பட்டு நிறுத்தப்பட்டதா ? நீண்ட காலத்திற்கு முன்பே நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டதற்குரிய காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 24—1—1972-ல் தமிழக அரசு ஆலந்தூர் மற்றும் பல்லவபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆட்சி ஒப்புதல் ரூ. 173.32 இலட்சத்திற்கு வழங்கியுள்ளது. இப்போது எங்கே நிற்கிறது என்றால், 8 கோடியில் வந்து நிற்கிறது. ஒன்றே முக்கால் கோடியில் ஆரம்பிக்கப்பட்டது 8 கோடி ரூபாயில் வந்து நிற்கிறது. இது ஒரு பெரிய 'மெஸ்'. ஆரம்பத்திலே எல்லாம் சரியாகச் செயல்படுத்தப்பட வில்லை என்பதுதான் தெளிவு. காரியம் முடியும் இப்போது பழைய குப்பைகளைக் கிளற வேண்டாம் என்பதுதான் என்னுடைய எண்ணமாகும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** 1972-ல் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து பைப்புகளைப் போட்டிருக்கிறார்கள். தண்ணீர் கசிவு ஏற்பட்டதற்குப் பிறகு, இரும்புக் குழாய்களாக மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இதைப்பற்றி அரசு ஆராய்ந்து நஷ்டத்திற்கு யார் காரணம் என்று அறிய ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** வழக்கு இருக்கிறது, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நாளைக்கு தமிழ் புது வருடப் பிறப்பாக இருப்பதால், சென்னை நகரத்திற்குத் தண்ணீர்விடும் தினமாகக் கருதி தண்ணீர் விட ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மனதிலே கசிவு ஏற்பட்டு, விடுவார்கள்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து என்ன தெரிகிறது? 'ஆல்டர்நேடிவ் டேஸ்' என்னும்போது நாளைக்கு மறுநாள் வருகிறது. ஆகவே நாளைக்கு எக்ஸ்ட்ராவாகக் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், மாண்புமிகு சகோதரர் அவர்கள் வலியுறுத்துகின்றார்கள். அதைப் பரிசீலித்துச் செய்யலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அந்தப் பரிசீலனை நாளைக்குள்ளாக முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நேரம் முடிந்தபிறகு, நான் எம்.எம்.டபிள்யூ.எஸ்.எஸ்.பி. மேனேஜிங் டைரக்டர் அவர்களை அழைத்துப் பேசுகிறேன். நானாகவே இங்கே இருந்துகொண்டு சொல்லிவிட்டு செய்யமுடியாமல் போய்விட்டால், அதில் சிக்கல் ஏற்பட்டுவிடும். மிகவும் வலிவுள்ளவர்கள் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். அதைப்பற்றி நிச்சயமாகப் பரிசீலனை செய்கிறேன்.





**திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் பல்லாவரம் குழாயைப் பொறுத்தவரையில் அது சப்-ஸ்டான்டர்ட் ஆகத்தான் இருக்க முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். அப்படி என்றால் அந்த வழக்குகள் எப்போது பதிவு செய்யப்பட்டன? இப்போதுள்ள நிலைமை என்ன? இவ்வளவு காலதாமதம் ஏன்? அதே நேரத்திலே நிபுணர்களுடைய பைனல் அப்ரூவலுக்குப் பிறகுதான் இதெல்லாம் நடைபெற முடியும். அந்தத் துறை அதிகாரிகள் இதற்கு எப்படி ஓ.கே. கொடுத்தார்கள்? இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ததா? அதே போல நடவடிக்கையை கசிவிலே நடந்துகொண்டிருக்கின்ற கோடைக்கானலுக்கும் நீட்டித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது வழக்குப் பதிவு செய்திருக்கின்றார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, கோடைக்கானல் பற்றிய தகவல் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், தருகிறேன். இதிலே கூட யார் யார் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது, அதிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், அந்த வழக்குகள் எத்தன்மையானவை என்று தனிக் கேள்வி போட்டால், நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இப்போது முடிந்த நிலைமைகளை நான் சொல்லியிருக்கிறேன். இரண்டு இடத்திலேயிருந்து தண்ணீர் வர வேண்டும். அது பழையசீவரத்தில் இருந்து வலாஜாபாத்திலேயிருந்து வரவேண்டும். அந்த இரண்டும் தேவேரியாம்பாக்கம் என்ற ஜங்க்ஷனுக்கு வந்து சேர்ந்து அங்கேயிருந்து வர வேண்டும். இப்போது பழையசீவரத்தில் இருந்துதான் கொண்டு வருகிறோம். அது 2 மில்லியன் கேலன்தான் வருகிறது. வாலாஜாபாத்தில் முடிந்தால் 5 மில்லியன் கேலன் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. முதல் கட்டமாக 2 மில்லியன் கேலன் தண்ணீர் கொடுக்க, வினியோகம் செய்ய, ஏற்பாடு இருக்கிறது. அருள் கூர்ந்து இன்சினியர்கள் மற்றவர்கள் யார் யார் என்று தனிக் கேள்வி போட்டால், விவரமாக பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்.

**சென்னை தொலைக் காட்சி நிலைய நிகழ்ச்சிகளை வண்ணத்தில் ஒளிபரப்ப மத்திய அரசை வற்புறுத்துவது குறித்து.**

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 'ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்' கேட்கிறேன். சென்னை தொலைக் காட்சி நிலையம் ஞாயிறுதோறும் கலர்படம் வண்ணப்படம் காட்டி வந்தார்கள். ஒலியும் ஒளியும் காட்டினார்கள். இப்போது இல்லை என்று ஒரு செய்தி வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை இதுவரை ஒழுங்காகக் காட்டினார்கள். படம் நன்றாக கலரில் தெரிந்தது. அது நிறுத்தப்படுவதற்குக் காரணம் என்ன ? அரசுக்கு ஏதாவது அதுபற்றித் தகவல் வந்ததா ? மத்திய அரசை வற்புறுத்தி, கலரில் தொடர்ந்து காட்ட ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவர்கள் தகவல் கேட்கின்றார்கள். மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம், வண்ணப்படம் பற்றி அவர்களுடைய எண்ணத்தைக் கேட்கின்றார்கள். அமைச்சர் அவர்கள் தகவல் சொல்வதாக இருந்தால், சொல்லலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வண்ணப்படம் காட்டி வந்தது நிறுத்தப் பட்டிருப்பதாக ஒரு செய்தி வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? தண்ணீர் தண்ணீர் என்ற வண்ணப்படம் காட்டினார்கள். நன்றாகத் தெரிந்தது. அது நிறுத்தப்பட்டதாகத் தெரிகிறது: அதன் காரணம் என்ன ? அதிலே ஒளியும் ஒலியும் காட்டினார்கள். அது நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் காரணம் என்ன ? பல வண்ணங்களில் தெரிந்தது. அதை நிறுத்திவிட்டதாக அறிவிக்கிறார்கள். அதைப்பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா ? அதைத் தொடர்ந்து காட்ட அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற செய்தி அரசினுடைய கவனத்திற்கும் அது ஒரு பத்திரிகையிலே இன்று வந்ததாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய சென்னையிலே உள்ள தொலைக் காட்சி நிலையத்தினர் அங்கே உள்ள அவர்களுடைய திறமையாளர்களைப் பயன்படுத்தி வேறு புதிய கருவிகளிலே புதிய யுக்திகளைக் கையாண்டு இங்கேயிருக்கின்ற ஒலி ஒளி காட்சியையும் வாரத்திலே ஒரு முறை காட்டப்படுகின்ற தமிழ் படத்தையும், எப்படி அகில இந்தியாவிற்கு இந்திப் படத்தை வண்ணத்திலே காட்டுகிறார்களோ அதே போல, இங்கே வண்ணத்திலே காட்டினார்கள்



என்றும் அது இப்போது திடீரென்று நிறுத்தப்பட்டிருப்பதாகவும், கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்குக் கூறப்பட்ட காரணம் தான், அது உண்மையாக இருந்தால், கொஞ்சம் நம்முடைய தமிழக மக்களின் சார்பில் கண்டிப்பதற்கு உரிய காரணமாக இருக்கிறது. இங்கே சென்னை தொலைக் காட்சி நிலையத்தினர் மத்திய தொலைக் காட்சி நிலையத்தினருடைய அனுமதி பெறாமலேயே, தங்களுடைய சொந்த முயற்சியாலே இந்த 'தண்ணீர் தண்ணீர்' படம் வண்ண ஒளிபரப்பை. நிகழ்த்தியிருக்கின்றார்கள் என்றும், அப்படி நடத்தியது தவறு என்றும், அதனாலே உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருப்பதாகவும் அதையொட்டி இந்த வாரம் காட்டப்படுகின்ற படங்கள் எல்லாம் கருப்பு வெள்ளையாகக் காட்டப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வந்திருக்கின்ற செய்தி உண்மையானதா, ஆதாரபூர்வமானதா என்பதுபற்றி அரசுக்குத் தெரியாது. அப்படி இருக்குமானால், அது கண்டிக்கப்பட வேண்டியதுதான். ஆசிய விளையாட்டுகளை ஒட்டி மத்திய ஒளி பரப்புத்துறையினர் அந்தத் தொலைக் காட்சி நிலையத்திற்காகக் கொண்டுவந்திருக்கின்ற கருவிகள், வாகனங்களில் ஒன்றை நம் சென்னைக்குத் தரவேண்டும் என்று நீண்ட காலமாகவே கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இந்த உலக அணி சாரா மகாநாடு முடிந்த பிறகு அதைப் பற்றிப் பரிசீலிக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி அந்த வாகனம் இல்லாமலேயே, அந்தக் கருவி இல்லாமலேயே சென்னையிலே இருக்கின்ற நிபுணர்கள் இப்படி ஒரு நல்ல வண்ணக் காட்சியைக் காட்டுகின்ற வாய்ப்பை ஏற்படுத்துகின்றபோது, அதை வரவேற்கவேண்டிய அந்த மத்திய தொலைக் காட்சி நிலையத்தினர் ஒருவேளை தடுத்திருந்தால், அது உண்மையானால், அது கண்டிக்கத்தக்கது. உடனடியாக அதற்கு அரசு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்லி அப்படி நடைபெறவிடாமல் பார்க்கும் என்பதையும், அப்படி மீண்டும் வண்ண ஒளி பரப்பைக்கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** 'தண்ணீர், தண்ணீர்' படம் கலரிலே தான் காட்டியிருக்கின்றார்கள். அதற்கப்புறம் 3 நாட்கள்தான் ஆகியிருக்கிறது. அதிகாரபூர்வமாக டி.வி.யிலே என்று சொல்லவில்லை. யாரோ சொல்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். 'அது உண்மையாக இருந்தால்' என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**சென்னை தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிகளை வண்ணத்தில் ஒளிபரப்ப மத்திய அரசை வற்புறுத்துவது குறித்து**

**[1983 ஏப்ரல் 13**

*திரு. க. இராமமூர்த்தி :* நம்முடைய கருத்து, ஒரு தகவலுக்காக, பேச்சுக்காக, ஒரு குறிப்பிட்ட இடத்திலே இருந்து வந்திருக்கின்ற செய்திக்கு அவர்கள் பதில் சொல்கின்றார்கள். யூகத்தின் அடிப்படையிலே நம்முடைய கருத்தைச் சொல்லிக்கொடிருக்கிறோம் என்று நினைக்கிறேன்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :* மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு செய்தி நமக்கு அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்படாமலேயேதான் வண்ணத்திலே வந்தது. அதுவும் பத்திரிகையிலே வந்தது. அதற்கு முன்னாலேயே தொலைக் காட்சி நிலையத்தினர் தெரிவித்தார்களே தவிர, இந்த அரசு நீண்டகாலமாக வண்ண ஒளி பரப்பைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வாகனத்தைப் பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றித் தெளிவான முடிவுகள் நமக்குத் தரவில்லை. இதற்கிடையே நம்முடைய சென்னை தொலைக் காட்சி நிலையத்தினர் தங்களுடைய முயற்சியாலே இருக்கின்ற சாதனங்களை வைத்துக்கொண்டு காட்டப்போகின்றார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே வந்தது. கடந்த வாரம் எல்லோரும் பார்த்ததாகச் சொன்னார்கள். நான் பார்க்கவில்லை. அது நன்றாக இருந்தது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்குக் காலைப் பத்திரிகையிலே நானும் படித்தேன். என்னுடைய கவனத்திற்கும் துறையின் மூலம் கொண்டுவரப்பட்டது. அது திடீரென்று நிறுத்தப்படப் போகிறது என்று செய்தி படித்தேன். அப்படி வந்ததற்குப் பிறகுதான் அந்த ஆபத்தைத் தடுக்க வேண்டுமென்பதில், வருவதற்கு முன்னாலே காக்கின்ற முயற்சியில், நாம் ஈடுபடலாம் என்ற அடிப்படையில், அதனாலேதான் நான் ஜாக்கிரதையாகவே சொன்னேன். வந்திருக்கின்ற செய்தி உண்மையானால், அதற்குக் கூறப்படுகின்ற காரணம் உண்மையானால், அது நாம் தடுக்க வேண்டிய ஒன்று. அதற்குக் கூறப்படுகின்ற காரணம் மத்திய தொலைக் காட்சி நிலையத்தினுடைய உயர் அதிகாரிகளுடைய அனுமதியைப் பெறாமல் இங்கே இருப்பவர்கள் செய்கின்றார்கள் என்பது. ஆகவே அது தடுத்து நிறுத்தப்படுகிறது. மாமியார் உத்தரவு பெறாமல் மருமகள் எப்படி இல்லை என்று பிச்சைக்காரருக்குச் சொல்வது, "நான் அல்லவா சொல்லவேண்டும்" என்று சொல்கின்ற கதையைப் போல, அப்படி நடைபெற்றிருந்தால், அது உண்மையானால், நாம் கடுமையாகக் கண்டிப்பதற்கும் அதைத் தடுப்பதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே அதைப் பற்றி உடனடியாக நம்முடைய அரசு மத்திய அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொள்ளும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்



1983 ஏப்ரல் 13]

## 3. அறிவிப்பு

**உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் குறித்து.**

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* 1983-84 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒன்பது உறுப்பினர் பதவிகளுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் :—

1. திரு. ஏ. ஆர். தாமோதரன்
2. திரு. க. இராமமூர்த்தி
3. திரு. ப. மாணிக்கம்
4. திரு. ஜேப்பியார்
5. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்
6. திரு. காடுவெட்டி கண்ணப்பன்
7. திரு. ம. சங்கரலிங்கம்
8. செல்வி ஆ. லீலாவதி
9. திரு. வலம்புரி ஜான்

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது ஒன்பது, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஒன்பது உறுப்பினர்களும் உரிமைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கின்றேன்.

மேலவை விதி 156(1) மாண்புமிகு மேலவை முன்னவர், மேலவைத் துணைத் தலைவர் ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்ற மேலவை விதிகளின் 156(4) விதியின் கீழ் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராயிருக்கும்படி மாண்புமிகு தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள்.

## 4. கவன ஈர்ப்பு

**(1) எண்ணூர் பழவேற்காடு கடைத்தெருவில் மார்ச் மாதம் முதல் தேதியன்று இரண்டு கோஷ்டிகள் ஒன்றோடொன்று பலமாக மோதிக் கொண்டது குறித்து.**

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"எண்ணூர் பழவேற்காடு கடைத் தெருவில், மார்ச் மாதம் முதல் தேதியன்று இரண்டு கோஷ்டிகள் பலமாக மோதிக்கொண்டு, கம்புகளாலும், கற்களாலும் தாக்கிக் காயப்படுத்தியும், துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டுக் கொண்டதும் குறித்து."

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-40)

**திரு. ஈ.எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 107-வது பிரிவின்கீழ் இருதரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? உண்மையிலேயே போலீசார் சரியான நடவடிக்கை 107-வது செக்ஷன்படி எடுத்திருந்தால், அவர்கள் ஜாமீன் வாங்க நடவடிக்கை எடுத்திருந்தால், இது போன்ற கோர சம்பவங்கள் நடந்திருக்காது. தைரியமாக, இப்படி பட்டப் பகலில் கடைத் தெருவில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. போலீசார் சரியாக நடந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அதுபற்றி விசாரணை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, காவல் துறையினர் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்ததால்தான், கலவரம் தொடராமல் இருந்திருக்கிறது. ஏற்கெனவே அந்தப் பகுதியில் இரண்டு குழுக்கள் இருக்கின்றன. இதில் அரசியல் எதுவும்

@ ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கிடையாது. சென்னையிலே பல்வேறு கடற்கரைப் பகுதிகளிலே இப்படிப்பட்ட குழுக்களின் மோதல்களைப் பார்க்கிறோம். இதிலே செல்வாக்கு உள்ளவர்களெல்லாம் சேர்ந்து இன்னொரு குழுவைத் தாக்கும்போது ஏற்பட்ட சம்பவம்தான் இது. உடனடியாகக் காவல் துறையினர் தலையிட்டதால்தான், பெரிய சம்பவமாக மாறாமல் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தலைமறைவாக இருந்தவர்களைத் தீவிரமாகத் தேடியதால், அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்திலே ஜாமீன் பெற முயற்சி செய்து, கடலூரில் தங்கியிருக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், முன் ஜாமீன் பெற்றிருக்கிறார்கள். தொடர்ந்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** துணைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா ? அந்த வழக்கு எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** துணைத் தலைவரவர்களே, இப்போது அவர்கள் முன் ஜாமீன் பெற்றிருக்கிறார்கள். ஏற்கெனவே சொன்னது போல ஏழு பேர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு விசாரணையில் இருக்கிறது.

**(2) புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவித் தொகை வழங்காதிருப்பது குறித்து.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**1—1—1980-க்குப் பின் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு மின்சக்தி உதவித்தொகை வழங்காதிருப்பது குறித்தும், அதனால் அத்தகைய தொழில் பிரிவுகளுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடு குறித்தும்."**

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 213 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு மின்சக்தி உதவித்தொகை வழங்காதிருப்பது குறித்து

[1983 ஏப்ரல் 13

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சிட்கோ-வால் கொடுக்கும்போது ஏற்படும் சிரமங்கள் பற்றி அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. நேரடியாக மின்சார வாரியத்திலே கொடுக்கலாம், அதன்மூலமாக இதைத் தவிர்க்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய கவன ஈர்ப்பு வேறு மாதிரியானது. 1—1—1980-க்குப் பின் புதிய தொழிற் பிரிவை ஏற்படுத்தியுள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்கள் பற்றியதாகும். 'அடிஷனல் யூனிட்ஸ்' என்ற முறையிலே ஆரம்பித்தவர்களுக்கு அவர்கள் கொடுப்பதாக இல்லை. அதைத் தான் என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் நான் கொடுத்திருக்கிறேன். I only want to know about the existing industries which have started additional units. அவர்களுக்கு மின்சார வாரியத்தின் மூலம் கொடுப்பது கிடையாது. புதிதாக ஆரம்பித்தால் கொடுப்போம். இருக்கும் தொழில்கள் வேறு ஒன்றை ஆரம்பித்தால், அவர்களுக்குக் கொடுக்க வாய்ப்பு கிடையாது என்று சொல்லுகிறார்கள். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சேல்ஸ் டாக்ஸ் உதவி மற்ற உதவிகள் எல்லாம் அந்த அடிப்படையிலேதான் கொடுக்கப்படுகின்றன. அந்த அடிப்படையை இவர்களுக்கும் கொண்டு வர அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா? அதற்கு அறிக்கையில் எந்தவிதமான பதிலும் இல்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை மையமாக வைத்துக்கொண்டு, தக்கவர்களிடத்தில் விவரம் சேகரித்து, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கிறேன்.

### 5. மேலவை விதி 60-ன் கீழ் தீர்மானம்.

### 80—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென் மாநில முதல்வர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, "20—3—1953 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென்மாநில முதல்வர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை இந்த மேலவை வரவேற்கிறது, ஆதரிக்கிறது. இந்த முடிவுகளை அமுல் நடத்துவதற்காக விடா முயற்சி செய்ய வேண்டும் என்று இம் மேலவை தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது" என்று முன்மொழிகிறேன்.

**Thiru A. R. DAMODARAN :** I second it, Sir.

## 20—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென்மாநில முதல்வர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து



1983 ஏப்ரல் 13]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"20—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென்மாநில முதல்வர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை இந்த மேலவை வரவேற்கிறது. ஆதரிக்கிறது. இந்த முடிவுகளை அமுல் நடத்துவதற்காக விடாமுயற்சி செய்ய வேண்டும் என்று இம்மேலவை தமிழ் அரசைக் கேட்டுக் கொள்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் 20ஆம் தேதி பெங்களூரில் நடைபெற்ற நான்கு தென் மாநில முதல்வர்களுடைய மாநாட்டையும், அதன் முடிவுகளையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. நம்முடைய நாட்டின் அரசியல், பொருளாதார வாழ்விலே இன்று மக்கள் முன்னாலே உள்ள பிரச்சினையை, மாநில வளர்ச்சிப் பிரச்சினையை, மாநிலங்களுக்கு இப்போது இருப்பதை விட அதிகமான நிதி அதிகாரங்களும், நிர்வாக அதிகாரங்களும் தரப்பட வேண்டுமென்ற முக்கிய பிரச்சினையின்மீது, தேசம் தழுவிய முறையிலே கருத்துப் பரிமாற்றம் நடைபெற வேண்டுமென்ற தேவையை, ஒரு அத்தியாவசியமான தேவையைப் பூர்த்தி செய்யும் முறையிலே, அந்தப் பிரச்சினையை நாட்டின் முன்னாலே எழுப்பியிருக்கிற முறையிலே இந்த முதல்வர்களின் மாநாடு இந்திய அரசியல் வாழ்விலே ஒரு முக்கியமான வரவேற்கத்தக்க நிகழ்ச்சி என்று கூறி, அதை வரவேற்கிறேன்.

எப்படிப்பட்ட கால கட்டத்தில் நான்கு முதல்வர்களும் இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அதைச் சரியாக மதிப்பிட வேண்டியிருக்கிறது. நாட்டிலே இருக்கக்கூடிய மாநில மந்திரி சபைகள் தங்களுடைய ஆயுட்காலம் எப்போது முடியும், ஐந்து ஆண்டுகள் இருக்குமா, மந்திரி சபை எப்போது யாரால் மாற்றி அமைக்கப்படுமோ, முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தொடர்ந்து இருப்பார்களா, நாளைக்கு வேறு யார் வருவார்களோ என்று நினைக்கும் நிலை இருக்கிறது. தேர்ந்தெடுத்த மாநில மக்களுக்குக்கூட தெரியாத அளவுக்கு, முதல்வர்களின் பதவிக் காலம் எப்போது முடியுமென்று நிச்சயமற்ற முறையிலே இருக்கிறது. மத்திய அரசிடம் அதிக அதிகாரங்கள் குவிவதால், மாநில ஆட்சியில் உள்ளவர்கள் பொம்மைகள் போல் அகற்றப்படும் சூழ்நிலை இந்தியாவில் இருக்கும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த முதல்வர்கள், அதுவும் குறிப்பாக பல்வேறு

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 13

அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முதலமைச்சர்கள், 4 வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முதலமைச்சர்கள், மத்தியிலே ஆளும் கட்சி வேறாக இருக்கும்போது, நேரம் தழுவிய முறையிலே செல்வாக்கு இல்லாத நான்கு கட்சிகள், துணிச்சலோடு தேசியப் பிரச்சினையைக் கிளப்பியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அப்படி ஒரு பிரச்சினையைக் கிளப்பும்போது, 35 வருஷங்களாக மத்திய அரசு அனுபவித்து வந்த உரிமைகளை மாநில அரசுகளுக்கு விட்டுத் தர வேண்டுமென்று சொல்லும்போது ,மத்திய அரசிடமிருந்து எவ்வளவு பலமான எதிர்ப்பு வருமென்பதைத் தெரிந்தவர்கள்தான், தெரிந்துதான், இதைக் கிளப்பியிருக்கிறார்கள். அப்படிக் கிளப்பும்போது, பிரிவினைக் கோஷம் என்றும், தேசத் துரோகமான கோரிக்கை என்றும், ராஜத் துரோகமான கோரிக்கை என்றும் இப்படி பல அடைமொழிகளைக் கொடுத்து, இந்தப் பிரச்சினையை எழுப்பியவர்களுக்கு மக்களிடம் செல்வாக்கைக் குறைக்க முயற்சிகள் செய்வார்கள்' என்று தெரிந்திருந்தும், இந்தப் பிரச்சினை ஒரு காலத்தின் தேவை என்பதால், யார் எப்படி நினைத்தாலும் பரவாயில்லை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்கள் சில கடமைகளைச் செய்ய நினைக்கும்போது, மத்திய அரசின் நிர்பந்தத்திற்கோ அல்லது மத்திய அரசின் டிஸ்ப்ளெஷருக்கோ பயப்படாமல் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அவர்களுடைய அரசியல் உறுதியைப் பாராட்டுகிறேன். குறிப்பாக இந்தக் கூட்டத்தைக் கூட்டிய கர்நாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள், இந்தப் பிரச்சினையில் மத்திய அமைச்சர்கள் கருத்து தெரிவித்த பிறகு, இது மாநில முதலமைச்சரின் உரிமை, இப்படி மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்ட யாருக்கும் விளக்கம் தர வேண்டியதில்லை. விளக்கம் தர வேண்டிய அவசியமும் இல்லை, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்களிடம் கேட்பது மாதிரி என்னிடம் கேட்க உரிமையில்லை என்று தைரியமாகச் சொன்னது, இந்தப் பிரச்சினையில் மாநில மக்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதைப் பிரதிபலிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் நாங்கள் இந்தக் கூட்டத்தையும் முடிவையும் மகிழ்ச்சி

(முற்பகல் 10-50)

யுடன் ஏற்றுக்கொள்கிறோம். 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்கு வங்காளத்திலிருக்கிற இடதுசாரி முன்னணி அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தர அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்கிற ஒரு மெமோரண்டத்தை மந்திரி சபையில் தயாரித்து இந்தியாவில் இருக்கிற எல்லா மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும். பரிசீலனைக்காக அனுப்பிவைத்தது.



1983 ஏப்ரல் 13] [திரு. ஆ. நல்லசிவன்]

அப்போது மத்தியில் ஜனதா ஆட்சி இருந்தது. அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கக் கூட முடியாத அளவுக்கு இதனை அவர்கள் ஏற்க முடியாத நிலையில் அப்போது இது தடைபட்டுப் போயிற்று. நான் இக்கூட்டத்தின் முடிவை வரவேற்க இதுவும் ஒரு காரணம். இப்போது 6 வருடங்களுக்குப் பிறகு, தடைப்பட்ட ஒன்று, சூழ்நிலை காரணமாக, தேசிய நலன் கருதி கொண்டுவரப்பட்டிருக்கிறது. அன்றைக்கு தடைப்பட்ட ஒன்று இப்போது பெங்களூர் மாநாட்டின் மூலம் மறுபடியும் ஆரம்பமாகியிருக்கிறது. அந்த வகையிலும் எனக்கு இது இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது. நாங்களே அதை ஆரம்பித்திருந்தோமானால், கொள்கை ரீதியில் மாறுபட்டிருப்பவர்கள் என்கிற முறையில் இதற்கு வேறு வியாக்யானம் சொல்லியிருப்பார்கள். ஆனால் மத்திய அரசின் கொள்கைகளை ஏற்றிருக்கிற முதலமைச்சர்களே இத்தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதன் மூலம் ஒரு நல்ல நிலையைத் தோற்றுவித்திருக்கிறார்கள். பொது மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசைப் பொறுத்தவரையில், மாநில முதலமைச்சர்களைப் பொறுத்தவரையில், பொதுமக்களுக்கு நன்மை செய்வதற்கு போதுமான அதிகாரம் இல்லையே என்கிற உணர்வு அவர்களை அழுத்திக் கொண்டிருந்த காரணத்தால் தான், இப்போது இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். பொதுமக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசுக்கு பல பொறுப்புகள், பிரச்சினைகள் இருக்கின்றன.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

மக்களுக்கு உண்மையிலேயே இவ்வளவு துன்பங்களும் ஏற்படக் காரணம் மத்திய அரசு தான். ஆனால் உள்ளபடியே இதற்குக் காரணம் மாநில அரசுகள் தான் என்று பொதுமக்கள் நினைக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆதலால்தான் இப்போதாவது ஒரு முடிவுக்கு மாநில அரசுகள் வந்திருக்கின்றன என்று நான் கருதுகிறேன். மக்களுடைய பிரச்சினைகளை மாநில அரசுகள் தீர்க்க வேண்டியிருப்பதால், அதற்குத் தேவைப்படுகிற நிதி ஆதாரங்களுக்காக வேண்டி அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குரிய அதிகாரம் தர வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பொறுப்பு எல்லாம் மாநில அரசுகளிடம் இருக்கும்போது, நிதி ஆதாரம் வருகின்ற வாயில்கள் அனைத்தும் மத்திய அரசிடம் இருக்கின்றன. மாநில அரசுகளிடம் அதிகாரம் இல்லாத நிலையில், மத்திய அரசிடம் அதிகாரக் குவியல் நிறைந்திருக்கும்போது, அனுபவரீதியாக மாநில அரசுகளால் மக்களுக்குத் தேவைப்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 13

படுகிற நல்ல காரியங்களைச் செய்வது சிரமமாக இருக்கிறது. இதுபற்றி தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்னும் இதுபோன்ற பல்வேறு இடங்களில் எல்லாம் கூட மாநில அரசுகள் எடுத்துச் சொல்லிவிட்டன. ஆனாலும் நடைமுறையில் மத்திய அரசு இப்பிரச்சினை குறித்து செவி சாய்க்காத நிலையில் தான், கட்டாயத்தின் பேரில்தான் பெங்களூர் மாநாட்டில் இதுபற்றி தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

வருமான வரி, கார்ப்பரேஷன் வரி போன்றவற்றில் எல்லாம் பங்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இங்கே இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். பெட்ரோல், டீசல் போன்றவற்றுக்கு எக்சைஸ் வரி போடப்படுவதில் மாநிலங்களுக்குப் பங்கு தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு இப்படி எக்சைஸ் வரி என்று போடாமல் நமக்குத் தெரியாமலே இறக்குமதி செய்யும்போது அல்லது வெளிநாடுகளிலிருந்து பொருளை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம் செய்யப்படும்போது, அப்போதே இதற்கான விதிமுறைகளைச் செய்துவிடுகிறார்கள். அந்த வகையில் ஒரு ஆர்டிபிஷியலான, செயற்கையான முறை உருவாக்கப்படுவது, நாட்டிலே விலை உயர்வு ஏற்பட, மாநில அரசுகள் பாதிக்கப்பட, மறைமுகமாக காரணமாக இருக்கிறது. இப்படிச் செய்வது சரியல்ல. மத்திய அரசு நிர்வாகச் செலவுக்காக வேண்டி ஏதோ கொஞ்சம் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யலாமே தவிர, இம்மாதிரி ஒரு செயற்கை நெருக்கடியை உருவாக்கக் கூடாது. மாநில அரசுகளுக்கு எதிராகச் செய்யப்படும் இதற்கு பார்லிமெண்டின் ஒப்புதலைக் கூட முறையாகப் பெறுவதில்லை. ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், எக்சைஸ் டியூட்டி என்கிற முறையிலே தான் போட வேண்டுமென்று கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மத்திய அரசுக்கு வருகிற வருவாயில் 23¼ சதவிகிதம் தான் மாநில அரசுகளுக்குத் தரப்படுகிறது. வெல்பேர் பணிகள் எல்லாம் மாநில அரசுகளின் பொறுப்பில் இருக்கின்றன. அப்படி இருந்தும் மத்திய அரசு தனக்கு மாநிலங்களிலிருந்து வரி வாயிலாக வருகின்ற வருமானத்தில் கால் பங்கு கூட மாநிலங்களுக்குத் தருவதில்லை. அதற்காகத்தான் 1982-83 லிருந்து 40 சதவிகிதம் பங்கு தர வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இதுவும் வரவேற்கத்தக்கது.



1983 ஏப்ரல் 13] [திரு. ஆ. நல்லசிவன்]

அடுத்து, நம்முடைய மாநிலத்திலே ரெயில்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இவை மத்திய அரசின் பொறுப்பில் ஓடுகின்றன. மத்திய அரசு ரெயில்வே கட்டணங்களையும், சரக்குக் கட்டணங்களையும் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் உயர்த்திக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நூறு கோடி ரூபாய்க்கு மேல் ரெயில்வே மூலம் மத்திய அரசுக்கு வருவாய் வருகிறது. ஆனால் ரெயில்வேயைப் பாதுகாக்கின்ற பொறுப்பு அந்தந்த மாநில போலீசிடம் இருக்கிறது. மாநில போலீசுக்கு இதற்காக ஆகின்ற செலவுகளைக்கூட "ரியிம்பர்ஸ்மென்ட்' என்கிற முறையில் மத்திய அரசு கொடுப்பதில்லை. மாநில அரசு செலவிட்ட பணத்தைக் கூட மத்திய அரசு தருவதில்லை. அந்த வகையிலும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, ஐ.எம்.எப். என்று சொல்லப்படுகிற சர்வதேச நிதி நிறுவனத்தைப் பொறுத்தவரையில், மிக மிகக் குறைந்த வட்டிக்கு மத்திய அரசு பல கோடி ரூபாய்களை அவர்களிடமிருந்து பெறுகிறது. ஆனால் அப்படிப் பெறுகின்ற கடன் தொகையை மத்திய அரசு ஒரு வட்டிக்காரனைப்போல இருந்துகொண்டு உயர்ந்த வட்டிக்கு மாநில அரசுகளுக்கு வழங்குகிறது. இதற்காக ஏற்படுகிற சர்வீஸ் சார்ஜை மட்டும் மத்திய அரசு கணக்கிட்டு எடுத்துக்கொண்டு, அதைத் தவிர உயர்ந்த வட்டி எதுவும் விதிக்காமல் இருப்பது நல்லது. அந்த வகையிலும் இக்கோரிக்கையை மாநாட்டிலே கிளப்பியிருக்கிறார்கள். ஆனால் இப்படி கடன் பெறுவதன் மூலம் நம்முடைய சுயஆதிபத்ய உரிமை பாதிக்கப்படுகிறது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இதுகுறித்து நான் மட்டுமல்ல, இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனே அவர்கள்கூட ஏழாவது உச்ச மாநாட்டிலே அவர்களுடைய நிபந்தனைகளைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் கடன் கொடுக்கிறபோது நாடுகளுக்கு விதிக்கிற நிபந்தனைகளைப் பார்க்கும்போது, அந்த நிறுவனத்தின் கதவை கடன் வாங்குகிற நாடுகள் தட்டிப்பார்த்தால் மகிழ்ச்சியோடு வெளியே வர முடியாது. அவர்கள் கடன் வழங்கும்போது கடன்படும் நாட்டிடம் அந்த நாட்டிலுள்ள பொருள்களை அதிக விலைக்கு விற்கும்படி வற்புறுத்துகிறார்கள். இது சரிதானா? ஆகவே, மத்திய அரசு பொல்லாத, ஆதிபத்ய உரிமைகள் பாதிக்கப்படும் அளவுக்கு உள்ள நிபந்தனைகளுடன் கூடிய கடனை அந்த நிறுவனத்திடமிருந்து பெறுவதுபற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 13

அடுத்து, ஓவர் டிராப்டைப் பொறுத்தவரையில், மாநில அரசுகள் முடியாத கட்டத்துக்குப் போகும்போது, 'ஓவர் டிராப்ட்' வாங்கினால், அதற்குப் பெயர் ஒழுங்கீனம் ஆனால் அதையே மத்திய அரசு செய்யலாம். மாநில அரசுகள் அதைச் செய்தால், அது பாவம் என்பதுபோல் கன்னத்தில் போட்டுக்கொள்வது சரியில்லை. மாநில அரசுகளிடம் போதிய நிதி ஆதாரம் இல்லாமலிருப்பதால் தான், இத்தகைய நிலை ஏற்படுகிறது. மாநிலங்களிலிருந்து மத்திய அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை வரி என்கிற பெயரால் வசூலித்துக்கொண் டிருக்கும் நிலையில், அதில் கால் பங்கைக் கூட மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்காமல் இருக்கும்போது, மாநில அரசுகள் மக்களுக்கு வேண்டிய நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் இருக்கும் போது, தவிர்க்க முடியாமல் 'ஓவர் டிராப்ட்' வாங்கும் நிலை ஏற்பட்டால், அது பெரிய பாவம் போல் ஏன் மத்திய அரசு கன்னத்தில் போட்டுக்கொள்ள வேண்டும் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மத்திய அரசு இந்த வருடம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் துண்டு விழுகிற பட்ஜெட்டைப் போட்டிருக்கிறது. இப்படி துண்டு விழுந்தால் கூட, அவர்களுக்கு நாசிக் பிரஸ் இருப்பதால், அதிலே இருக்கிற நோட்டு அடிக்கிற பிரின்டிங் மெஷின் மூலம் நோட்டு அடித்து விடுகிறார்கள். ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்திருக்கி றார்கள். அதுவும் ஒரு ஜனநாயக நாட்டில் இப்படி டெபிசிட் பட்ஜெட் தயாரித்திருக்கிறார்கள். இது அவர்கள் அறிவிக்கிறபோது இருந்த நிலை. இதுவே ஆண்டு முடிவடைகிறபோது, நிச்சயமாக 2 மடங்கு ஆகிறது. அப்போது இந்த ஆயிரம் கோடி ரூபாய் என்பது கிட்டத்தட்ட 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வந்து விடும். இப்படி துண்டு விழுகின்ற தொகையை நோட்டு அடித்து சரிப்படுத்திவிடுகிறார்கள். ஆகவே மத்திய அரசு எதை வேண்டு மானாலும் செய்யலாம் நோட்டு அடிக்கலாம், ஓவர்டிராப்ட் வாங்கலாம். ஆனால் அதையே மாநில அரசுகள் செய்தால், பாவம் என்கிற மாதிரி கன்னத் தில் போட்டுக்கொள்வதும், அப்படி ஓவர்டிராப்ட் வாங்கக் கூடாது என்று சொல்வதும் சரியல்ல. மாநில சுயாட்சி என்கிற முறையில், அதிகமான நிதி ஆதாரங்களை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு, ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு தன்னுடைய மக்களுக்கு நல்வாழ்வுத் திட்டங் களைச் செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கு முதற்படியாக மக்களே இது



1983 ஏப்ரல் 13] [திரு. ஆ. நல்லசிவன்]

அடுத்து, மாநில சுயாட்சி பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல் கிறேன். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றபோது, சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டபோது, காங்கிரஸ் தலைவர்கள் பல பொதுக் கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். நான் முதலில் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து, அதன் மூலமாகத்தான் பொதுவாழ்க்கைக்கு வந்தவன்.

(முற்பகல் 11.00)

நான் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக பொது வாழ்வுக்கு 42 ஆண்டு களுக்கு முன்பு வந்தவன். அந்த முறையில் பல காங்கிரஸ் கூட்டங்களைக் கேட்டிருக்கிறேன். அப்போது அவர்கள், "நாம் சுதந்திரம் கேட்பது டில்லியில் உள்ள வைசிராய்க்கு பதில் இந்தியர்கள் வரவேண்டுமென்று சுதந்திரம் கேட்கவில்லை, இந்த நாட்டில் இருக்கிற தொழிலாளர்கள், விவ சாயிகள். பெண்கள் ஆகியோருக்கு அன்றைய சமுதாயத்தில் அந்நிய ஆட்சியில் இல்லாத உரிமைகளைப் பெறுவதற்காக நடக்கக்கூடிய போராட்டம்தான் என்று சொன்னார்கள். தொழிலாளர்களுக்கு நல்லது செய்வோம், நிலச் சீர்திருத்தம் செய்து விவசாயிகளுக்கு நிலங்கள் தருவோம்," என்று பல வாக்குறுதிகளைக் கொடுத்த பிறகு, வேறு ஒரு வாக்குறுதியையும் தந்தார்கள். இப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சி போதிய நிதி வசதிகளுடன் போதிய அதிகாரங்களுடன் கூடிய மாநில அரசை அமைக்கச் செய்தால் இந்த நன்மைகள் கிடைக்கும் என்று அன்றைக்குப் பேசியது எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது. வெளிநாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, செய்தித் தொடர்பு, நாணயச் செலா வணி இதுபோன்ற அதிகாரங்கள் தவிர மற்ற அதிகாரங்கள் எல்லாம் மாநிலங்களுக்குத்தான் இருக்கும் என்ற வாக்குறுதி கொடுத்ததை நான் நேரிலேயே கேட்டிருக்கிறேன். இன்று மேலவைத் தலைவராக இருக்கும் நமது தலைவர் அவர்கள், அப்போது காங்கிரஸ் கட்சியின் பொறுப்பான தலைவர். பல கூட்டங்களில் அவர்கள் பேசியதையும், எழுதியதையும் நானே நேரில் கேட்டு என்னைப் போன்ற அப்போதைய வாலிபர்கள் சுதந்திரம் என்பதற்கு இதுதான் அர்த்தம் என்று புரிந்துகொள்ள உதவி செய்து இந்த வாக்குறுதிகளைக் கொடுத்துதான் மக்கள் ஈர்க்கப்பட்டார்கள். அந்த அடிப்படையில்தான் மொழி வழி மாநிலங்கள் பிரச்சினையைக் கூட சொன்னார்கள். அதாவது காங்கிரஸ் கட்சி மாநிலங்களில் ஆட்சி ஏற்படுத்திய நேரத்தில் அன்றைக்கு இருந்த பிரிட்டிஷ் மாநில அமைப்பில் எடுத்துக் கொள்ளாமல் மொழிவழி மாநிலமாக, புரவன்சியல் காங்கிரஸ்

இயக்கத்தில் ஐக்கியப்படுத்தத்தான் அப்படிச் செய்தார்கள். அது சரியான முறைதான். அன்றைக்குக் கூட ஒட்டுத் துணி போல இருந்த மெட்ராஸ் ஸ்டேட் கேரளத்தில் கொஞ்சம், கர்நாடகத்தில் கொஞ்சம், ஆந்திராவில் கொஞ்சம் என்று இருந்த அந்தச் சந்தர்ப்பத்தில் கூட காங்கிரஸ் கமிட்டிகளைப் பொறுத்தவரையில், மொழி வழி அடிப்படையில் தமிழ் மாநில காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி, ஆந்திரா, கர்நாடக காங்கிரஸ் கமிட்டி என்றுதான் அன்றைக்கு இருந்தது என்பதை நானும் நன்றாக அறிவேன். அந்த அடிப்படையில்தான் ஜனங்களுக்கு வாக்குறுதி அளித்தார்கள். அன்றைக்கு தமிழ் நாட்டில் கூட தட்சிண பிரதேசமா அல்லது ஐக்கிய தமிழகமா என்று ஒரு பிரச்சினை இருந்தது. திராவிடக் கழகத் தோழர்கள் கூட அது ஒருவகையான திராவிட நாடுதானே என்று கருதினார்கள். தேச பக்தியும், மொழி வழி மாநிலமும் முரண்பாடானது அல்ல என்ற அடிப்படையில் ஐக்கிய தமிழகம் வேண்டுமென்ற கோரிக்கையை நம்முடைய மேலவைத் தலைவர் அவர்களும் எங்கள் இயக்கத் தலைவர் தோழர் ஜீவா அவர்களும் தமிழ் நாட்டில் கோஷமாக ஏற்படுத்தினார்கள். தமிழக மக்கள் தேசிய சுதந்திரப் போராட்டத்தில் நெருக்கமாகப் பங்கெடுத்துக்கொள்ள அது பயன்பட்டது. இன்னொன்றையும் சொல்கிறேன். தேசத்தில் ஒரு முக்கியமான தீர்மானம், 1942 ஆகஸ்ட் தீர்மானம். அந்தத் தீர்மானத்தின் போது இந்திய மக்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானத்தில் 'க்விட் இண்டியா' என்று கூறப்பட்ட அந்த சமயத்தில் இப்படி குறிப்பிட்டிருப்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறோம் என்றார்கள். அந்த அறிக்கையில் "தற்காலிகமாக அரசு எல்லாப் பகுதி மக்களும் ஒப்புக் கொள்ளக் கூடிய இந்திய அரசியலுக்கான அரசியல் சாசனத்தைத் தயாரிக்க ஒரு அரசியல் சட்டமன்றத்திற்கான திட்டத்தை உருவாக்கும் காங்கிரஸ் கண்ணோட்டத்தில் அந்த அரசியல் தருகிற சமஷ்டி அமைப்பு ஆக இருக்கவேண்டும். மிச்சமுள்ள அதிகாரங்கள் சாசனம் சமஷ்டியில் இணையும் மாநிலங்களுக்கு மிக அதிக பட்ச அதிகாரம் மாநிலங்களுக்கே இருக்கவேண்டும்" என்ற 1942 ஆகஸ்ட் தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றி வெளியிட்டபோது மாநில சுயாட்சியை எந்த அளவுக்கு மக்களிடத்தில் பிரச்சாரம் செய்தார்கள் என்று தெரிந்து கொள்ள முடியும்.

அப்படி மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநிலங்களிடம் அதிகாரம் இருக்கும்போது மக்களுக்கு நன்மைகள் செய்யலாம் என்று நம்பிக்கை ஊட்டுகிற நிலைமையில் அது ஏற்பாடு செய்தது. ஆனால் அப்படியெல்லாம் திரண்ட மக்களுக்கு, 1951 லே அரசியல் சாசனம் உருவாக்கப்பட்ட





போது, பெரும் ஏமாற்றத்தை அளித்தது. அரசியல் விவேகம் உள்ளவர்களே அப்படி நினைக்கக்கூடிய அளவுக்கு அது நாணயக் குறைவாக நடந்து கொண்டது, அவர்கள் கொடுத்த உறுதி மொழிக்கு மாறாக நடந்து கொண்டார்கள். 1942-ல் வாக்குறுதி கொடுத்ததற்குப் பின் 1951-ல் அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டபோது, இந்த வாக்குறுதி கொடுத்தவர்களே அரசியல் நிர்ணய சபையில் இப்படி ஒரு யூனிட்டரி ஸ்டேட்டாக அமைத்தார்கள். ஒரு ஃபெடரல் ஸ்டேட்டாக அமைக்கப்படவில்லை. ஆனால் ஜனங்களுக்குக் கொடுத்த வாக்குறுதி கூட திருப்தியைக் கொடுக்கவில்லை. மாநிலத்திற்கு ஒரு முதலமைச்சர், மாநிலத்திற்கு ஒரு சட்டசபை, ஒரு மேலவை என்று அனுமதி கொடுத்து விட்டு, தமிழகத்து மக்களின் தேவைகளுக்கேற்ற வகையில் 25 சதவீதம் வருமானத்தைக் கூட கொடுக்காமல், ஒரு தபால் ஆபீஸ் மாதிரி மாநில அரசை ஆக்கி விட்டு, ஒரு ஃபெடரல் அரசாங்கம் என்று கூறக்கூடிய ஒரு காரியத்தைச் செய்தார்கள். அதன் விளைவாக மத்தியில் அதிகாரக் குவியல் ஏற்பட்டது. அந்த அதிகாரக் குவியல் பற்றி வருகிறபோது, 7 வது ஷெட்யூலில் போடப்பட்டிருக்கிற அதிகாரங்களைப் பார்க்கிறபோது, மத்திய பட்டியலில் 97 அதிகாரங்களும் மாநிலத்திற்கு 66 அதிகாரங்களும் பொதுப் பட்டியலில் 42 அதிகாரங்களும் கொடுத்தார்கள். அந்த 97 மத்திய அதிகாரங்களில் முக்கியமான, கொழுத்த வருமானம் வரக்கூடிய ரயில்வே, வங்கிகள், இன்சூரன்ஸ், துறைமுகங்கள், ரிசர்வ் பேங்க் ஏற்றுமதி இறக்குமதி, வருமான வரி, கம்பெனி வரி போன்ற கொழுத்த வருமான அதிகாரங்களை எல்லாம் மத்திய அரசின் கையில் வைத்துக்கொண்டார்கள். மாநிலப் பட்டியலில் 66 அதிகாரங்கள் கொடுத்தார்களே. அதில் 22 அதிகாரங்கள் மட்டும் மாநிலத்திற்கான வருமானத்திற்காக ஒதுக்கப்பட்டன. மாநிலங்களில் நடைபெறக்கூடிய அபிவிருத்தி சம்பந்தப்பட்டவைகள் பாக்கியுள்ள அதிகாரங்கள். அவைகள் எல்லாம் ஒரு மாநிலத்திற்கு உரிய அதிகாரங்களா என்று வெட்கப்படக்கூடிய, வருத்தப்படக்கூடிய அளவுக்கு இருப்பவைகள். சட்டப்பேரவையில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், மாட்டை பவுண்டிலே அடைத்து வைக்கிற அதிகாரம், வன விலங்குகளைப் பாதுகாக்கிற அதிகாரம், பறவைகள்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 13

பாதுகாப்பு, சத்திரம் சாவடிகளைப் பராமரித்தல், இடுகாடுகள் சுடுகாடுகள் பராமரிப்பு, பிச்சைக்காரர்களை நிர்வகிக்கிற அதிகாரம். இப்படிப்பட்ட அதிகாரங்களையெல்லாம் மாநிலங்களுக்கு ஒதுக்கி, மாநிலங்களையெல்லாம் பிச்சைக்காரர்களாக்கிவிட்டு, அதிகாரப் பட்டியல் என்று கொடுத்தார்கள். அதுமட்டில்லை பொதுப்பட்டியல் கொடுத்தார்களே, அதிலே கூட மாநில அரசு ஒரு சட்டம் போட்டால், மத்திய அரசு அதே பொருள் குறித்து மீண்டும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால், மத்திய அரசின் சட்டம்தான் செல்லுமே தவிர, மாநிலச் சட்டம் செல்லாது என்று, பொதுப் பட்டியலுக்கு அர்த்தம் இல்லாமலே ஆக்கி விட்டார்கள். அதாவது பொதுப் பட்டியலில், மத்திய அரசு சட்டம் எப்போது கொண்டுவர விரும்புகிறதோ அது வரையிலும் மாநில அரசு பொதுப் பட்டியலில் சட்டம் இயற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அன்றைக்கு பொதுப் பட்டியலில் மாநில அரசுச் சட்டத்தை மிஞ்சக்கூடிய அளவில் அவர்களுக்கு ஓரவஞ்சனையாகக் கொண்டு உந்திருக்கிறார்கள். இவ்வளவு குறைந்த அதிகாரங்களில் கூட கை வைக்க ஆரம்பித்தார்கள். இதுவே குறைவானது, இது காணாது என்று கேட்கிறபோது இருக்கிற அதிகாரத்தில் கூட கை வைக்க ஆரம்பித்தார்கள்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை அந்தந்த மாநிலப் பிரச்னையாக இருந்தது. ஆனால் நம்முடைய மத்திய அரசு சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ், பார்டர் செக்யூரிட்டி ஃபோர்சையும் ஏற்படுத்திய பிறகு, மாநிலங்களில் மத்திய அரசு, யாரையும் கேட்காமலேயே மத்திய போலீசை அனுப்பலாம் என்ற அதிகாரத்தைப் பிரயோகிக்கிறார்கள். நமக்கெல்லாம் தெரியும், 1976 ஜனவரி மாதம் 31 ஆம் தேதி இரவுதான் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது. ஆனால் 31 ஆம் தேதி பகல் 10 மணிக்கே, தமிழ் நாட்டில் பல நகரங்களில் மத்திய போலீஸ் நடமாட்டம் இருந்தது. என்ன நடக்கப் போகிறதோ என்று மக்கள் பதற்றத்தோடு எதிர்பார்த்த நிலையில், 1976 ஜனவரி 11 ஆம் தேதி பகலிலேயே சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் தமிழகத்தின் மாவட்டங்களிலே கொண்டுவரப்பட்டது. இதுபற்றி கலெக்டர்களுக்கே தெரியாது. இந்த மாநிலத்திற்குள்ளேயே மாநில சட்டம் ஒழுங்கு சப்ஜெக்ட் எப்படி பறிபோயிற்று என்று எல்லாம் நாம் அனுபவத்திலேயே பார்த்தோம். அது மட்டுமல்லாமல். கல்வி பொதுப் பட்டியலில் இருக்கிறது. சமீபத்தில் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். சேல்ஸ் டாக்ஸ் விதிக்கக்கூடிய 5 பொருட்களையும், சேல்ஸ் டாக்ஸ் விதித்தால் அது மாநிலத்திற்குப் போகிறது என்ற காரணத்திற்காக, எக்சைஸ் டூட்டி என்று கொண்டு போய் விட்டார்கள்.



1983 ஏப்ரல் 13] [திரு. ஆ. நல்லசிவன்]

(முற்பகல் 11-10)

அப்படிப்பட்ட சட்டம் வந்தபோது, பாராளுமன்றத்தில் நம் மாநிலத்தில் இருக்கிற இரு பெரும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் ஆதரித்ததும், அதை எதிர்க்காமல் போனதும் ஒரு வருந்தத்தக்க விஷயமாகும். இருந்தாலும் இன்றைக்கு மீண்டும் அத்தகைய அவசியம் வரும்போது, இந்த அதிகாரங்களை மாநிலங்களுக்கே கட்டாயமாக மாற்றித் தர வேண்டும் என்று அவர்கள் கோருவார்கள் என்று நம்புகிறேன்.

இதைப்போலத்தான் மொழிப் பிரச்சினையும் இருக்கிறது. அன்றையதினம் நாடு விடுதலை அடைய வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்ட போது, தேசிய போராட்டத்தில் மக்களை ஈடுபடுத்த அவர்களைத் திரட்டுவதற்கு இந்திய மொழிகளும், அந்தந்தப் பகுதி மக்களின் தாய் மொழிகளும்தான் தேவைப்பட்டன. ஆனால் இந்தியாவின் தேசிய போராட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட இந்திய மொழிகள், இந்தியா விடுதலை பெற்று சொந்த ஆட்சியை அமைத்துக் கொண்டபோது, அந்த மொழிகளே இந்தியாவின் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும் என்றால், அதற்கு உடன்படவில்லை. காங்கிரஸ் கட்சியில்கூட மொழி வழியாக மாநில அமைப்புகள் இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னாலே தேசம் முழுவதற்கும் ஒரே ஒரு மொழி போதும், தேசிய மொழிகள் அனைத்தையும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஆக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். இந்தி மொழியைப்பற்றி இங்கே இன்றுகூட பேசிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசோ தன் கையில் இருக்கிற ரேடியோவையும் டெலிவிஷனையும் பயன்படுத்தி அவைகளின் மூலம் இந்தியைத் திணிக்க முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்றைக்கும் சர்ச்சைகளை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது, மத்திய அரசுக்கு இந்த வேண்டாத வேலைகள் எதற்கு என்றுகூட சிலர் கேட்கிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் இதுஒரு வேண்டாத வேலையில்லை. அதனுடைய கொள்கையிலிருந்து கிளம்பி வருகிற ஒரு பகுதிதான் இது. எனவே மொழிப் பிரச்சினையில் மட்டும் அவர்கள் வேறு மாதிரியாகச் செயல்பட முடியாது என்று திர்க்கமாக நம்புகிறோம்.

அடுத்து, இந்தி மொழிப் பிரச்சினை என்பது வெறும் சாதாரண மொழிப் பிரச்சினை மட்டுமல்ல. இந்திய நாட்டிலுள்ள 70 கோடி மக்களைக் கொண்ட ஒரு பெரிய மார்க்கெட் இருக்கிறதே, அது தங்கள் கையிலேயே எப்போதும்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 13

இருக்க வேண்டும் என்று இந்த நாட்டில் உள்ள ஏகபோகக் குடும்பங்கள்—மானாபொலி ஹவுஸ்—விரும்புகின்றன. தமிழ் மாநிலம், ஆந்திர மாநிலம் போன்ற மாநிலங்களில் உருவாகக்கூடிய சிறு முதலாளிகளும் நம்மைப் போல் பிழைத்துப் போகட்டுமே, 70 கோடி மக்களுடைய மார்க்கெட்டில் அவர்களும் தொழில் செய்து வாழட்டுமே என்று அவர்கள் அனுமதிக்கத் தயாராக இல்லை. கடந்த 35 ஆண்டுகளாக உருவாகியிருக்கின்ற சுமார் 150 ஏகபோகக் குடும்பங்கள், சுமார் 5000 கோடி ரூபாய் அளவுக்கு தங்களிடத்தில் ஆஸ்திகளை வைத்துக் கொண்டிருக்கிற அந்தக் குடும்பங்கள், இன்றையதினம் மத்திய அரசாங்கத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன என்றுதான் நாங்கள் நம்புகிறோம். அதன் காரணமாகத்தான் மாநிலங்களில் உருவாகக் கூடிய சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் முதலாளிகளையும் வியாபாரம் செய்ய அனுமதிக்க அவர்கள் தயாராக இல்லாமல் இருப்பதோடு இந்திய மார்க்கெட் முழுவதையும் தாங்களே சுரண்ட வேண்டும் என்று செயல்படுகின்றன.

ஏகபோக முதலாளித்துவ ஆதிக்கத்தின் காரணமாகத்தான் இந்தியா முழுவதிலும் ஒரே ஒரு மொழியை மட்டும் ஆட்சிமொழியாக அங்கீகரிக்கும் அரசியல் நிர்ணயச் சட்டத்தை வைத்துக்கொண்டு ஆட்சி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது. எனவே இந்தப் பொருளாதாரக் கொள்கையிலிருந்துதான் மொழிக் கொள்கையும் வருகிறது என்று நாங்கள் சொல்கிறோம். பொருளாதாரக் கொள்கையிலிருந்து மொழிக் கொள்கையைத் தனியாகப் பிரிக்க முடியாது என்று நாங்கள் நினைக்கிறோம். நம்முடைய இந்திய நாடு முதலாளித்துவப் பாதையில் போவதால்தான் இங்கே தொழில் வளர்ச்சி போதிய அளவுக்கு ஏற்படவில்லை. ஏற்பட முடியாது. ஏனென்றால் இங்கே நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில், இன்னும் "ஜென்யூயின் ரிபார்ம்ஸ்" ஏற்படவில்லை. உண்மையான முறையில் நிலச் சீர்திருத்தம் ஏற்பட்டு, கோடிக்கணக்கான ஏழை மக்களுக்கு நிலம் விநியோகிக்கப்பட்டால் தான், நாட்டில் விவசாயம் செழித்து, உணவுப் பொருள் உற்பத்தி பெருகும். அதன் காரணமாகத்தான் உணவுப் பொருள்களும், தொழில் வளர்ச்சிக்கான மூலப் பொருள்களும் பெரும் அளவில் அதிகரிக்கும். ஆனால் துரதிருஷ்டவசமாக நம் நாட்டில் இன்னும் உண்மையான நிலச் சீர்திருத்தம் ஏற்படவில்லை. இன்னும் நாம் மிச்ச நிலத்தைத் தேடிக்கொண்டிருக்கிறோம். பினாமி நிலங்களை எப்படிக் கண்டுபிடிப்பது என்று இன்னும் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். நாடு விடுதலை அடைந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த நிலை என்றால், நாட்டில் எப்படி தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும்?



1983 ஏப்ரல் 13] [திரு. ஆ. நல்லசிவன்]

இதன் காரணமாகத்தான் உண்மையான நிலச் சீர்திருத்தங்கள் உண்டான நாடுகளில் ஏற்பட்ட அளவுக்குத் தொழில் வளர்ச்சி இந்திய நாட்டில் இதுவரை ஏற்படவில்லை. மிகக் குறைவான அளவுக்குத்தான் இங்கே தொழில் வளர்ச்சி உண்டாகி இருக்கிறது. அப்படி ஏற்பட்டிருக்கிற குறைவான தொழில் வளர்ச்சி கூட நான் ஏற்கெனவே சொன்ன ஏகபோகக் குடும்பங்களின் கையிலே போய்ச் சிக்கிக் கொண்டிருக்கிறது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், எந்த ஒரு நாட்டிலும் நிலச் சீர்திருத்தம் என்பது புரட்சியாக நடைபெற்றால்தான், அங்கே மக்கள் முன்னேற்றம் காண முடியும், தொழில் வளமும் பெருகும் என்பதற்கு ஒரு ஆதாரத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரணமாக இநத ஆதாரத்தை வேறு எங்கேயும் பார்த்திருக்க முடியாது. நான் இங்கே அவையில் படிக்க விரும்புவது, "ஞானபூமி" என்ற ஒரு இந்து மாத இதழ். இந்த மாத இதழில் சுவாமி சின்மயானந்தர் எழுதியிருப்பதை மட்டும் நான் படிக்க விரும்புகிறேன்.

"சமீபத்தில் நான் சீனாவுக்குப் போயிருந்தேன். அது மக்கள் தொகை பெருகிய நாடு. இருந்தாலும் அது முன்னேற முடியவில்லை. அதற்குக் காரணம் அவ்வளவு பேரும் மயக்க மருந்து சாப்பிட்டு தூங்கிக் கொண்டிருந்தது தான். புரட்சி மூலமாகக், கடைசியாக அது விழித்துக் கொண்டு விட்டது. சமூகப் புரட்சியின் மூலம் தொழில் வளத்தையும் பொருளாதார முன்னேற்றத்தையும் இன்றைக்கு அது எட்டிப் பிடித்திருக்கிறது"

என்று நாமெல்லாம் எதிர்பார்க்காத ஒரு பகுதியிலிருந்து—சுவாமி சின்மயானந்தாவிடமிருந்து இந்தக் கருத்து வந்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே படிப்பதற்கு முன் தலைவரிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். படித்ததில் தவறு இல்லை என்றாலும், முறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியைக் கேட்க மறந்துவிட்டேன். ஆக, உண்மையான நிலச் சீர்திருத்தம் ஏற்படாத ஒரு நாட்டில் எப்படியும் உண்மையான ஒரு தொழில் வளர்ச்சி ஏற்பட முடியாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குக் காரணம் நம் நாட்டில் ஒரு முதலாளித்துவ அமைப்பு முறை உருவானதுதான்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 13

முதலாளித்துவ முறையில் அமைந்துள்ள நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியாது. ஏற்பட்டாலும் அது அசமத்துவமான முறையில்தான் அமைந்திருக்கும்.

One of the principles of capitalist development is the uneven development of regions. இதைத்தான் மார்க்ஸ் கூறினார். கார்ல் மார்ஸ்-ன் கொள்கையை இன்றைக்கு அவருக்குப் பின்னாலே வந்துள்ள பொருளாதார நிபுணர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவ அமைப்புள்ள நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் ஒரு சமத்துவமான தொழில் வளர்ச்சி ஏற்படுவதில்லை. அப்படியே ஏற்பட்டாலும், அது சமத்துவமாக இருக்காது. முதலாளித்துவ அமைப்பு ஒரு தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த விரும்பினாலும், அது அசமத்துவமான வளர்ச்சியாகத்தான் இருக்கும் என்பதற்குக் காரணம், அவர்கள் எங்கே குறைந்த விலையில் மூலப் பொருள்கள் கிடைக்கின்றனவோ, எங்கே மனித உழைப்பு குறைந்த ஊதியத்தில் கிடைக்கின்றதோ, எங்கே அதிகமான போக்குவரத்து வசதிகள் இருக்கின்றனவோ, எங்கே துறைமுகங்கள் மிக அருகாமையில் இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட இடங்களாகத் தேர்ந்தெடுத்துதான் தங்களின் தொழில்களைத் தொடங்குவார்கள். இப்படிப்பட்ட இடங்களில்தான் இந்த ஏகபோக முதலாளித்துவ குடும்பங்கள் தங்களின் தொழில்களைத் தொடங்க விரும்புகிறார்கள். இதன் காரணமாகத்தான் ராஜஸ்தானில் உள்ள பிலானியில் பிறந்த பிர்லா தொழில் தொடங்குவதற்கு கல்கத்தாவுக்கும் பம்பாய்க்கும் போகிறார். போக்குவரத்து வசதிகள் அதிகமுள்ள, நவீன தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள அப்படிப்பட்ட இடங்களைப் பார்த்து இந்த ஏகபோக முதலாளித்துவக் குடும்பங்கள் தொழில்களைத் தொடங்குகிறார்கள். எனவே தொழில் வளர்ச்சி ஏற்படுத்தினாலும், அது மாநிலங்களுக்கிடையே ஒரு சமநிலையில் தொழில் வளர்ச்சியை உருவாக்க உதவுவதில்லை. அப்படிப்பட்ட எண்ணத்தோடு அவர்கள் தொழில்களைத் தொடங்க முனைய மாட்டார்கள். ஏற்கெனவே அரசுச் செலவில் போடப்பட்ட ரெயில்வேக்கள், அரசுச் செலவில் ஏற்கெனவே உருவாகியிருக்கிற துறைமுகங்கள் ஆகியவைகளோடு, அரசுச் செலவில் உருவாகியிருக்கிற பொதுத்துறை உருக்காலைகளைப் பயன் படுத்திக்கொண்டு வெகு சீக்கிரமாக வெகு அதிகமான லாபத்தைப் பெறும் வகையில் குறைந்த மூலதனத்தைக் கொண்டு குறைந்த ஊதியத்தில் கிடைக்கும் மிகுந்த மனித உழைப்பைக் கொண்டு தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தும்போது, அது அசமத்துவமான தொழில் வளர்ச்சியாகத்தான் இருக்க முடியும். மார்க்ஸ் தத்துவத்தின்படி, முதலாளித்துவ அமைப்பில் லாபத்திற்காகத் தொழில் வளர்ச்சியை அனுமதிப்பதால், சமத்துவமான வளர்ச்சி அடையச் சந்தர்ப்பமிருக்காது. குறைந்த செலவில் அதிகமான



1983 ஏப்ரல் 13] [திரு. ஆ. நல்லசிவன்]

லாபம் சம்பாதிக்க ஏதுவாக உள்ள இடங்களுக்கே அவர்கள் தொழில்களைக் கொண்டு செல்லப்பார்ப்பார்கள் என்று 100 ஆண்டுகளுக்கு முன்னாலேயே மார்க்ஸ் எழுதி வைத்திருக்கிறார். இன்றையதினம் கார்ல் மார்க்ஸ் தத்துவம் காலத்திற்கு ஒவ்வாத தத்துவமாகிவிட்டது என்று பேசுகிறவர்கள் அவர் அன்றைக்கு எழுதி வைத்த இந்தக் கருத்துக்கள் இன்றைக்கு இந்தியாவுக்கு எப்படிப் பொருத்தமாக இருக்கின்றன என்பதை அறிய உதவுகிறது என்பதோடு, மாநில சுயாட்சிப் பிரச்சினையில் கூட மார்க்ஸ்-ன் கருத்துக்கள் எப்படி ஒரு தீர்க்க தரிசனமான முறையில் ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அசமத்துவமான தொழில் வளர்ச்சி காரணமாக பம்பாயில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டால், கேரளத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் நம் மக்கள் பிழைப்பை நாடி அங்கே செல்கிறார்கள். ஆனால் அங்கே உள்ள சிவ சேனை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நம்மவர்களைப் பார்த்து, இங்கே வராதே என்று சொல்லி அடித்து விரட்டுகிறார்கள். அதைப் போலவேதான் பங்களூரில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டாலும், அங்கேயுள்ள, தேசிய ஐக்கியத்தைப்பற்றிப் பேசுகிற கட்சியின் முதலமைச்சர் 'மண்ணின் மைந்தர்கள்" கொள்கையைப் பேசுவதைப் பார்க்கிறோம். அசாமில் தேயிலைத் தோட்டங்களில் இருப்பவர்கள் அங்கே சரியான முறையில் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்ற காரணத்தால், அங்கே இருக்கிற இந்தியர்களை "இந்திய நாய்களே வெளியேறுங்கள்" என்று சுவரொட்டிகளை எழுதி வைத்துவிட்டு, இந்தியாவில் ஒரு கௌரவமிக்க பகுதியாக இருக்கக்கூட அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் மத்திய அரசு என்பது முதலாளித்துவ அமைப்பின் பிரதிநிதியாக இருந்து செயல்படுவதாகும். முதலாளிகள் தங்கள் இஷ்டம்போல் தொழில்களைத் தொடங்க மத்திய அரசு அனுமதிப்பதால், நாட்டில் ஏற்படுகிற தொழில் வளர்ச்சி அசமத்துவமாக இருப்பதால், மாநிலங்களிடையே தொழில் வளம் அசமத்துவமான முறையில் ஏற்படுவதால்தான், இன்றையதினம் நாடெங்கும் இத்தகைய கிளர்ச்சிகளும், தேசிய சீர்குலைவுகளும் ஏற்படுகின்றன.

இதை நான் குறிப்பிடுகிறபோது இன்றைக்கு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதன் மூலம் இந்திய அரசியலில் ஜனநாயகம் என்பது முறைப்படுத்தப்பட வேண்டும், இந்தியா ஓரே நாடு என்று இருக்க வேண்டும் என்று பகத் சிங் காலத்திலிருந்து காணப்பட்ட கனவு நனவாக வேண்டும் என்று விரும்புகிறோம். அதுமட்டுமல்ல. பொதுவாழ்வை ஜனநாயகப் படுத்த

மட்டுமல்ல, இந்தியப் பொதுவாழ்வையே ஒற்றுமைப்படுத்தவும் இந்த கோஷம் முக்கியமானது என்பதால் இந்தக் கோரிக்கையை நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

இப்படி அனுபவத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தர வேண்டும் என்று சொல்லும்போது அதன் அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்களைக் கோருகிற அரசுகளை மக்கள் தேர்ந்தெடுக்கும் போது, மத்திய அரசிடமிருந்து அதிக அதிகாரங்களைக் கோருகிற ஆட்சிகளை அவர்கள் தேர்ந்தெடுக்கும் போது, மத்திய அரசு தங்களிடம் குவித்து வைத்திருக்கிற அதிகாரங்களைக் கொண்டு மாநில அரசுகளைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபடுகின்றது. சட்ட சபைகளில் போதிய மெஜாரிட்டி இருந்த போதும்கூட, மாநில மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிற நிலைமையிலும் கூட, அரசியல் சாசனப்படி சட்டசபையில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தும் கூட, மத்திய அரசு மாநில அரசுகளைக் கலைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது. 1959 ஆம் ஆண்டு கேரளத்தில் ஈ.எம்.எஸ். நம்பூத்திரிபாத் மந்திரி சபையைக் கலைத்ததிலிருந்து 1976 ஆம் ஆண்டு தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இருந்த மந்திரி சபை மட்டுமல்லாமல் 1980 ஆம் ஆண்டு அண்ணா தி.மு.க. சார்பிலிருந்த மந்திரி சபையைக் கலைப்பது வரை கடந்த 21 ஆண்டு காலமாக இந்தியாவில், அரசியல் சாசனத்தின் 356, 357 பிரிவுகளைக் கையில் வைத்துக் கொண்டு மத்திய அரசு மாநில அரசுகளைக் கலைத்துக்கொண்டு வந்திருக்கிறது.

(முற்பகல் 11-20)

ஆனால் 1980-ல் அவர்களுக்குக் கிடைத்த அடி நல்ல அடி. அதற்குப் பிறகு அவர்கள் அப்பட்டமாகப் போகவில்லை. மேகாலயா. ஹரியானா மாதிரி போக வில்லை. 1980-ல் மூன்று மாதத்திற்குள் மீண்டும் அதே ஆட்சியை தமிழகத்திலே கொண்டு வந்தார்கள். ஆகவே தமிழ் நாட்டு மக்கள் கொடுத்த அடி இன்னும் அவர்களுக்கு உரைத்துக் கொண்டிருப்பது தமிழ் நாட்டு மக்களுக்குரிய பெருமை.

மத்திய அரசின் நோக்கத்தை நிறைவேற்ற கவர்னர் அமைப்பு இருக்கிறது. கவர்னரைப் பற்றித் தனிப்பட்ட முறையில் பேசவில்லை. அவர் மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரல்ல. மத்திய அரசு தான் விரும்புபவரை ஐந்து ஆண்டுகளுக்கு அந்தப் பதவியில் உட்கார வைக்கிறது. ஆளுநர் ரப்பர்



ஸ்டாம்ப் மாதிரி மோசமாக இருக்கிறார்கள். தனிப்பட்ட கவர்னரைப்பற்றி நான் விமர்சனம் செய்யவில்லை. கவர்னரை வைத்துக்கொண்டு மாநிலத்தில் மத்திய அரசு அதிகாரம் செய்வதை அகற்ற வேண்டும்.

மேற்கு வங்க அரசைப் பொறுத்த வரையில், 1977 ஆம் ஆண்டில் கொடுத்த மெமோரண்டத்தில் சில முக்கியமான திருத்தங்களைக் கொடுத்தார்கள். இப்போது அதைப்பற்றி விவரித்தால், நேரமாகும். ஆகவே அதன் விவரத்திற்குள்ளே போக விரும்பவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேசுவதற்கு 13 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஒரே ஒரு விஷயத்தை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மத்திய அரசுக்கு வருகிற மொத்த வருமானத்தில் 75 சதவீதத்தை மாநில அரசுகளுக்குத் தர வேண்டும். அப்படித் தந்துவிட்டு, நான் ஏற்கெனவே சொன்னதைப் போன்று அத்தியாவசியமான, வெளிநாட்டுக் கொள்கைத்துறை, பாதுகாப்புத்துறை, செய்தி மற்றும் போக்குவரத்துத் துறை அந்நியச் செலாவணித்துறை ஆகிய துறைகளை கோஆர்டினேஷன் செய்வதற்காக வைத்துக்கொண்டு, பாக்கி அதிகாரங்களை மாநில அரசுகளுக்குத் தர வேண்டும் என்ற முறையில் மேற்கு வங்க அரசு கொடுத்திருக்கக்கூடிய யோசனைகள் இருக்கின்றன. தமிழ் நாட்டிலே தி.மு.க. அரசு ஏற்படுத்திய இராஜமன்னார் குழுவின் பரிந்துரை இருக்கிறது. இவைகளையெல்லாம் பரிசிலனை செய்து, அந்த அடிப்படையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்ய முன்வருவார்கள் என்று நினைக்கிறேன்.

சர்க்காரியா கமிஷனை அமைத்துவிட்டால் மட்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்ததாகக் கருத முடியாது. மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையிலே பிரச்சினைகளே இல்லையென்று கூறி வந்த மத்திய அரசு, இதற்காக கமிஷனைப் போட வேண்டிய அவசியம் இல்லையென்று கூறி வந்த மத்திய அரசு இப்போது சர்க்காரியா கமிஷனை நியமித்திருப்பது, அதற்கு அவசியம் இருக்கிறது என்று அவர்களே ஒத்துக்கொண்ட அளவிற்குத்தான் இருக்கிறது. அதிலே கூட அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு யோசனை சொல்ல வேண்டும் என்று சொல்லும்போது, அதற்குள்ளே இருந்து ஒன்றும் செய்யமுடியாது. அரசியல் சாசனத்திற்குள் இருக்க வேண்டும் என்றால், இந்த மாநிலங்கள் தபால் பெட்டிகளாகத்தான் இருக்க முடியும். அரசியல் சாசனத்தைத் திருத்தாமல் மாநிலங்களுக்கு நிதி அதிகாரங்களையும், நிர்வாக

அதிகாரங்களையும் அதிகமாகத் தர முடியாது என்று உண்மையில் தெரிந்திருந்தும் கூட "அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு" என்று போட்டிருப்பதால், மத்திய அரசின் நோக்கத்தைச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. மாநில அரசுகள் கூப்பாடு போடுகிறார்கள், ஆகவே ஒரு கமிஷனைப் போட்டால் அது இழுத்துக் கொண்டிருக்கும் என்பதற்காக ஒரு கமிஷனைப் போட்டு அந்த கமிஷன் எல்லையைத் தாண்டிவிடாமல் வளைத்துப் போட்டிருக்கிறார்கள். அரசியல் சாசனத்தைத் திருத்த வேண்டும் என்று நாடு பூராவும் கோரிக்கை இருக்கும்போது, ஒரு கமிஷனைப் போட்டு அது அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு தன்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருப்பது மிகவும் அபாயகரமான விஷயம். மாநில அரசுகள் மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்கும்போது, இது மத்திய அரசின் சாகசத்தைக் காட்டுகிறது. மத்திய அரசுக்குள்ள திறமையைக் காட்டுகிறது. ஆகவே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN: While I support the Resolution of my hon. Friend Thiru Nallasivan, may I also point out that there is a safeguard in saying that it should be within the Constitutional frame-work, because supposing Justice Sarkaria recommends a Presidential type of Government outside the constitutional frame-work, will it be acceptable to the hon. Member? That point of view may also be considered.

திரு. ஆ. நல்லசிவன்: அரசியல் சாசனத்தைத் திருத்துவதற்கான யோசனையைச் சொல்ல வேண்டும் என்று அந்தக் கமிஷனிடம் கூறியிருக்க வேண்டாமா என்பதுதான் நான் கேட்பது. அரசியல் சாசனத்திற்குட்பட்டுச் சொல்ல வேண்டும் என்று சொல்லும்போது, நிதி ஆதாரங்களை எப்படிப் பங்கிடுவது? அரசியல் சாசனத்திற்கு உட்பட்டுச் சொல்ல வேண்டும் என்றால் சாசனத்தைத் தூக்கி எறிய வேண்டும் என்று நான் கூறவில்லை. சர்க்காரியா கமிஷன் அரசியல் சாசனத்திற்குள்ளே இருந்து பரிந்துரைகளைச் செய்ய வேண்டும் என்றால், மாநில அரசுகளுக்கு எப்படி அதிக அதிகாரங்களைக் கொடுப்பார்கள்? இஷ்டம் போல அரசியல் சாசனத்தை மாற்ற வேண்டும் என்றோ, அரசியல் சாசனத்தை மீற வேண்டும் என்றோ சொல்லவில்லை. ஜனாதிபதி ஆட்சி முறை வேண்டும் என்று சொல்லட்டுமே. அதைப்பற்றித் தீர்மானிக்க வேண்டியது நாட்டு மக்கள். ரெஃபரெண்டம் மூலமாக, பார்லிமெண்ட் மூலமாக அதைத் தீர்மானிக்க வேண்டும். அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு அப்படி அதிக அதிகாரங்களை மாநில அரசுகளுக்குக் கொடுக்க





முடியும். ஏற்கெனவே இருக்கின்ற அதிகாரங்களையே அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். ஆகவே அரசியல் சாசனத்திற்குத் திருத்தங்கள் உட்பட, மாநிலங்களுக்கு அதிகமாக அதிகாரங்களைத் தருவதற்கு என்ன வழி என்று யோசனை சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்க வேண்டும். தென் மாநில முதல்வர்கள் கூட்டத்தைப் பொறுத்த வரையில், இது ஒரு ஆரம்ப நாள் என்ற முறையில் நான்கு முதல்வர்களும் கூடியிருக்கிறார்கள். அடுத்த முறை தமிழ் நாட்டிலே கூட்டப் போவதாக முதலமைச்சர் அவர்கள் கூறியிருப்பதைப் பார்த்தேன். அதிலே மற்ற மூன்று நான்கு முதலமைச்சர்களும் வருவார்கள் என்று நினைக்கிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதல்வர்கள் பகிரங்கமாக வரமாட்டார்கள் என்பதை டில்லியிலே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைத் தனியாகக் கூப்பிட்டுக் கேட்டால், வேறு விதமாகச் சொல்லுவார்கள். கட்சிக் கட்டுப்பாடு காரணமாக பகிரங்கமாகச் சொல்ல மாட்டார்கள். ஆகவே காங்கிரஸ் மாநில முதல்வர்கள் கூட நமக்குப் பின்னாலே இருக்கிறார்கள். சந்தர்ப்பம் வரும்போது பேசுவார்கள். இப்போது தொடரலாம் என்ற முறையில் நல்ல யோசனைகளை உருவாக்க தமிழ் நாட்டு மக்கள் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு உரிமை அளிப்பார்கள். நாடு தழுவிய முறையில் ஆதரவு கொடுப்பதன் மூலமாக மாநில சுயாட்சியைப பெறுவோம் என்ற எண்ணம் மேலும் வளர வாய்ப்பு ஏற்படும் என்பதைக் கூறி, இந்தத் தீர்மானத்தை சபை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தந்திருக்கிற தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று தென் மாநில முதல்வர்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் ஆதரித்துத்தானே பேசுகின்றார்? அதை முதலிலே தெரிவித்துவிட வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இதை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். குறிப்பாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், மாநிலம் வலு உள்ளதாக இருக்க வேண்டும், சமஷ்டி அரசாங்கத்தில் மாநிலத்தினுடைய நிலை எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி தங்களுடைய தலைமையில் உரையாற்றுவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியுண்டு. தாங்கள் இதுபற்றி தமிழகத்திலே முதல் முழக்கமிட்டவர். அது குறித்து

தாங்கள் எழுதிய கருத்துக்களை இந்த நேரத்தில் நினைவுபடுத்துவது பொருத்தம் என்று கருதுகிறேன். சிறையில் பூத்த சிந்தனை—1942 ஆகஸ்ட் கிளர்ச்சியின்போது தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். "வடக்கே உள்ள அமராவதி சிறையில் ஓராண்டுக் காலம் அடைபட்டிருந்தேன். அப்போது என் மனம் எதிர்கால தமிழகத்தைப்பற்றிச் சிந்தித்தது. வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கத்தில் ஈடுபட்டு சிறை புகுந்த நான் வெள்ளையன் வெளியேறிய பிறகு, தமிழகத்தின் நிலை இப்போது என்ன என்பது பற்றி சிறையில் சிந்தித்தேன். சிறையில் படித்த சங்ககால தமிழ் இலக்கியங்கள் சிந்திக்கத் துணை புரிந்தன. அதன் விளைவாக என் மனதிலே உருவானது தான் மாநில சுயாட்சி கோரிக்கை" என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆகவே காங்கிரஸ் இயக்கத்லே நாடு விடுதலை பெற வேண்டும் என்ற போராட்டத்தில் ஈடுபட்ட உங்களைப் போன்றவர்களுடைய உள்ளத்திலேயே இந்த உணர்வு இருந்தது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி மலைக் கோட்டையில் தெரிவித்த கருத்துக்கள் இவை. அப்போது உங்களுக்கு 40 வயது. நாற்பது ஆண்டுகள் கடந்த பிறகும் அதே பிரச்சினை வலுவான நிலைக்கு வந்திருப்பது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கிழவன் என்று சொல்லவில்லையே.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தாங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் என்று கருதுகிறேன். நாற்பது ஆண்டுக் காலத்திற்கு முன்பு மலைக்கோட்டையில் தனி மனிதனாக இருந்து முழங்கியது தென் மாநில முதல்வர்கள் மத்தியில் தெரிவிக்கப்பட்டு, இன்று விவாதமாக நடந்து கொண்டிருக்கிறது. மத்திய சர்க்காரும் கமிஷனை நியமித்து அரசியல் சட்டத்தின் வரம்பிற்கு உட்பட்டு இதுபற்றிய எண்ணங்களை சுதந்திரமாக மாநிலங்கள் தெரிவிக்கலாம் என்று வளர்ந்திருப்பதை இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறபோது குறுகிய நோக்கமாக, பிரிவினை நோக்கமாக பிரிவினை என்ற கொள்கை வேறு சொல்லால் சொல்லுவதாக கருத்து தெரிவிக்கப்பட்டது. காந்தியார் அவர்களே கூட இதை வரவேற்றிருக்கிறார்கள்.





(முற்பகல் 11-30)

அவரை ஒரு நிருபர், கேட்டபோது, மாநிலங்கள் தனித்தனியாகப் பிரிந்து சுயேச்சையுடன் வாழ விரும்பினால், அது எந்தவிதமான அரசியலை வகுத்துக் கொள்ள வேண்டும் என்ற கேள்வியைக் கேட்டபோது "இந்தியா முழுவதற்கும் எந்தவிதமான பரிபூரணமான சுயேச்சை அரசியல் வகுக்கப்பட்டாலும், அது போன்ற அரசிலேதான் பரிபூரண சுயேச்சைக்கு நாம் கூறும் இலக்கணப்படி பார்த்தால், அதில் தவறு ஒன்றும் இல்லை" என்று ஒருபடி அதிகமாகவே சென்று காந்தியார் அவர்கள் தெரிவித்தார்கள். நேருவின் வாக்குறுதி இந்தியிலே நமக்கு எப்படி கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைப் போல மாநில அதிகாரங்களைக் குறித்துக்கூட பண்டித நேரு அவர்கள் ஒரு நல்ல கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவைக்கு ஒரு தகவல் சொல்கிறேன். இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் பிற்பகல் 1-00 மணி வரையிலும், மீண்டும் தொடர்ந்து மாலை 4-00 மணி முதற்கொண்டும் நடைபெறும். மேலவை 1-00 மணிக்கு ஒத்திவைக்கப்படுவதற்கு முன்பு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையினை அவைக்கு அளிப்பார்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பண்டித நேரு அவர்களும் இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். "மாநில சுயாட்சி கேட்கின்ற அடிப்படை லட்சியங்களை இந்தியாவிலே யாரும் மறுக்க முடியாது. அதை யாரும் மறுக்கவும் கூடாது. நாங்கள் அந்த லட்சியங்களை ஏற்றுக்கொள்கிறோம். அந்த லட்சியங்களில் ஊன்றியிருக்கிறோம். அந்த லட்சியத் தீர்மானம் வெறும் தீர்மானம் மட்டுமல்ல, அது ஒரு லட்சிய முழக்கம். நமது உறுதியான முடிவு. நாம் எடுத்துக் கொண்ட சபதம். நிறைவேற்ற வேண்டிய பிரதிக்கினை. நம்முடைய வாழ்வின் சமர்ப்பணம்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படி காந்தியார் அவர்கள் சொன்ன கருத்துக்கள் பலவற்றை காலத்திலே கைவிடுகின்றவர்கள், நேரு சொன்ன எண்ணங்களை முழு மனதோடு ஏற்றுக்கொள்ளாத பலர் அதை நழுவ விட்ட காரணத்தினாலேயே பேரறிஞர் போன்றவர்கள், ஆட்சிப் பொறுப்பிலே வந்தபோது இந்த வேற்றுமைகளை எடுத்து வைத்தார்கள். நாட்டு மேடையிலே விளக்கினார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் குற்றவாளியாக்கப்படுகிறார்கள். "இவர்கள் பிரிவினை வாதிகள், ஏதோ பிரிந்து போவதற்கு வேறு காரணங்களைத் தேடிச்செல்கின்றார்கள்" என்று, அந்த காந்தியார் அவர்கள் என்ன சொன்னாரோ, பண்டித நேரு அவர்கள் என்ன

ஏற்றுக்கொண்டாரோ, அதை மறுத்தார்கள். நாட்டு விடுதலைக்காக போராடிய பெருமகன்கள் எதை ஒப்புக்கொண்டார்களோ அதற்கும் மாறாக காங்கிரஸ் காரர்கள் செயல்படுவது என்பது நாட்டிலே ஒரு வேடிக்கையான காரியமாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். "அகில இந்தியா பூராவும் ஒன்று என்று பார்த்து காரியங்கள் நடத்துவோம். நீங்கள் பிளவு மனப் பான்மை உடையவர்கள், நீங்கள் பேதபுத்தியில் பிரச்சினையைப் பார்க்கிறீர் கள் என்ற வாதங்களைச் சொல்லி பிரச்சினைகளை மழுப்புகிறார்கள். ஆனால் தெற்குப் பகுதியைத் தாழ்த்திவிட்டு, எத்தனை பெரிய தன்மையான தலைவர் சொன்னாலும், அதை ஒத்துக்கொள்வதில்லை. தென்னாட்டில் இருக்கின்ற பெரிய குறைகளை நீக்கினாலொழிய தென்னாடு முன்னேற்றம் அடையாது. இதை மறுத்து வரும் எந்தவிதமான அரசியல் வாதங்களையும் காரணங் களையும் ஒத்துக்கொள்வதற்கில்லை. சென்னையில் பொருளாதார நிபுணராக இருந்த திரு. பி. ஜி. தாமஸ் அவர்கள் சென்ற கிழமையிலே குறிப்பிட்டதை நான் ஞாபகமூட்டுகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்படியும் சரி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படியும் சரி, பொதுவாக தென்னாட்டை விட வடநாட்டிலே வளம் பெருகியிருக்கிறது" என்று எடுத்துச்சொல்லி தென்னாடு முன்னேறவில்லை என்ற கருத்தினை அவர்கள் எடுத்துச் சொன் னார்கள். இப்படி ஒரு மாநிலமோ அல்லது தென் மாநிலங்களிலோ புறக் கணிப்பு இருப்பதற்குக் காரணமாக இருந்தது, நம் அரசியல் சட்டத்திலே மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் வழங்காததுதான் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதனாலே புரட்சித் தலைவர் அவர்கள் கூட "இதை ஏதோ பிரிவினை எண்ணமாக நீங்கள் கருதிவிடாதீர்கள்" என்ற ஒரு அரிய கருத்தைச் சொன்னார்கள். 'தன்னாட்சி' என்பது வேறு, 'தனி ஆட்சி' என்பது வேறு. தன்னாட்சி என்பதில், அதிக அதிகாரம் பெற்ற மாநிலமாக இருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. இடையிலே உள்ள வேறுபாடுகள் முக்கியமானவை ஆகும். வலு வான நாட்டிற்குப் பிராந்தியங்கள் மிகவும் தேவையானவை. ஆனால் பிராந்தி யத் தேவைகள் வலியுறுத்தப்படும்போது, அது குறுகிய பிராந்தியத்திற்கு என்றும், பிரிவினை என்றும் கருதுவது அனாவசியமானது. அப்படி தவறாகக் கருதப்படுகிறது என்று அவர்கள் தெரிவித்தார்கள். இன்று தென் மாநில முதலமைச்சர்கள் கூடிய கூட்டத்திற்குப் பிறகு, ஒரு சீரிய கருத்து அகில இந்திய அளவிலே உருவாகியிருக்கிறது. அவர்கள் 4 பேர்கள் கூடியிருந்த போதிலும், அந்தக் கருத்தின் அடிப்படையிலே பல அகில இந்தியத் தலைவர் கள் தங்களுடைய எண்ணங்களைச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். திரு. கருணாகரன் அவர்கள் வரவில்லை என்றாலும்கூட, வருகின்ற எண்ணம்





இருந்து, வராத நிலையிலே இருந்து, இது ஏதோ தேவையற்றது என்று சொன்னாலும்கூட, அவர்கள் கூட என்ன சொன்னார்கள் என்றால் மாநிலங்கள் தங்களுடைய தேவைகளை, தங்களுக்குப் பெறவேண்டியதை பெறுவதிலே உறுதியாக இருக்க வேண்டும் என்ற கருத்தை அவர்கள் வழங்கினார்கள். திரு. பரூக் அப்துல்லா அவர்கள் என்ன குறிப்பிட்டார்கள் என்றால்.

"It does not motter if we belong to the Congress (I) or other party", the Chief Minister said. This is the basic cause of difficulties between the Centre and the States. The Centre does not appreciate or even understand that"
மத்திய அரசு புரிந்துகொள்கின்ற நிலைமையில் இல்லாமல் இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். மேற்கு வங்கத்தைச் சேர்ந்த திரு. ஜோதிபாசு அவர்கள் கூட.

"We have pointed out investment by financial institutions in States like West Bengal is negligible. If this is allowed to continue, it will only lead to greate regional disparties"
என்று சொன்னார்கள்.

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த திரு. அர்ஜுன் சிங் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

"The nationalised banks after mobilising private savings in the State choose to invest them outside M.P."
என்று அவர்கள் சொன்னார்கள்.

பஞ்சாபைச் சேர்ந்த திரு தர்பாரா சிங் அவர்கள்,

"I want the State to enjoy a more proportionate share of funds from the financial institutions."
என்ற கருத்தைச் சொன்னார்கள்.

இவ்வளவு கருத்துக்களும் அகில இந்திய அளவிலே தென் மாநில முதலமைச் சர்கள் சந்தித்த பிறகு உருவாகியிருப்பது ஒரு பெருமைக்குரிய காரியம் என் பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே இந்த மாநில உரிமைகள் என்று வருகின்றபோது, அதன் அவசியத்தை எடுத்துக்கொள்கின்ற போது, இங்கே ஒரு விவசாய அமைச்சர் மத்தியில் ஒரு விவசாய அமைச்சர் என்று இருக்கிறார்கள். இங்கே வேண்டிய பணிகளை ஆற்றுவதற்கு மத்திய அரசு தருகின்ற நிதியை வைத்துக்கொண்டு நாம் செயல்படவேண்டியதாக இருக்கிறது. ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1983 ஏப்ரல் 13

" சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், மத்தியிலே ஒரு சுகாதார அமைச்சர். மாநிலத்திலே ஒரு சுகாதார அமைச்சர், என்ன மக்களுக்கு இரண்டுவிதமான சுகாதாரம் இருக்கின்றதா?'' என்று கேட்டார்கள். போக்குவரத்தை நேஷனலைஸ்ட் ஹைவேஸ், எடுத்துக்கொள்வோம். நாம் தான செயல்படுத்துகிறோம். அவர்கள் பணம் தருகின்றார்கள். ஆனால் அதனுடைய முடிவுகள் எல்லாம் எங்கே என்றால் டெல்லியிலே. அவர்கள் செய்யாத காரணத்தினாலேயே காலதாமதம் ஏற்படுகிறது. ரெயில்வேயிலே ஒரு குறுக்குப்பாதை, சாலை ஒரு பகுதியிலே தேவை என்பது ஒரு மாநிலத்திற்குத் தெரியும். மாநிலம் அதைச் செயல்படுத்த வேண்டுமானால் அதற்கு அவர்கள் அனுமதிக்கக் கூட டெல்லிக்குச் சென்று ஆண்டாண்டுக்காலம் காத்துக்கொண்டிருக்கின்ற அவல நிலைமைகளைப் பார்க்கிறோம். பாம்பனிலே ஒரு பாலம் கட்டுவதற்கு டெண்டர் போடுகிறார்கள். புயல் அடித்த காரணத்தினால் சேதமாகிவிட்டபோது, அதைக் கட்ட வேண்டுமென்று கேட்கின்ற நிலை வந்தது. ஆனால் அதற்கு மத்திய அரசு எடுத்துக்கொண்ட காலதாமதத்தின் காரணமாக அங்கே பணிகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டதை நாம் அறிய முடிகிறது. அதே நேரத்திலே மாநில அரசு மக்களுடைய நலன் கருதி ஒரு திட்டம் வகுக்கின்றபோது, மத்திய அரசு என்ன செய்கிறது? மத்திய அரசு கல்வி நிறுவனங்கள் விஷயத்தில் மாநில அரசுகளின் எண்ணத்திற்கு மாற்றுக் கருத்துடன், விரோதமாகச் செயல்படுகிறது. இந்த நாட்டில் கல்வி வளர்ச்சி எப்படி ஏற்படும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கொள்கைகளை வகுப்பதற்கு இப்படி ஒரு மத்திய முறை தேவைப்படுகின்றது என்று நியாயம் கற்பிக்கின்றவர்களுக்குச் சொல்வேன். ''நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் இருக்கிறது, பிளானிங் கமிஷன் இருக்கிறது. இவைகள் எல்லாம் கொள்கைகளை வரையறுக்கின்றனவா இல்லையா? அப்படித்தான் இருக்கும். இந்த அமைப்பைக் காட்டிலும் என்ன வலிமை உங்களுக்குத் தேவை? எப்போதும் பிளான்ஸ் கமிஷன் இருக்கின்றது. நிதியைப் பங்கிட்டுத் தருகின்ற பணியினை ஆற்றுகின்றது''. அப்படி இருக்கின்றபோது மாநிலங்களுக்கு அதிகாரங்களை அதிகமாகத் தருகின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டும், அந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பணம் என்று சொல்கின்றபோது, மத்திய அரசு ஒரு முறையான கொள்கைகளை வைத்துக்கொள்ள வேண்டும். வறட்சிக்கு எப்படி உதவ வேண்டுமென்பதற்குக்கூட மத்தியிலே ஒரு முறையான நிலை வேண்டும். இப்போது இருக்கின்ற சட்ட திட்டங்களில் நெறிமுறைகள் இருக்க வேண்டும். அப்படியெல்லாம் ஒருநல்ல ஏற்பாடு காண வேண்டும். திட்டங்கள் என்று சொல்லும்போது, நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில், பிளானிங் கமிஷன் எல்லாம் இருக்கிறது. அவைகள் மூலமாக முறைகளை வகுத்துக்கொண்டால்



1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆனால் சட்ட பூர்வமாக இந்திய அரசியல் சட்டத்தின் மூலமாக இன்கம்டாக்ஸ் என்று விதிக்கப்பட்டு, அதிலேயும் மாநில அரசினுடைய பங்கு என்பதற்கெல்லாம் ஒரு வழிமுறை இருந்தாலும்கூட, அதிலேயிருந்து நழுவிக்கொள்வதற்காக ' சர்சார்ஜ்' என்று போட்டு மாநிலத்தை ஏமாற்றுகின்ற காரியத்தையும் செய்ய இப்போது. இருக்கின்ற சட்டமன்றங்கள் துணையாக இருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு முறையிலே இந்த 4 மாநில முதலமைச்சர்கள் குறிப்பிட்ட, ஒரு கமிஷன் அமைத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். அது முதல் கட்ட வெற்றி என்றும், அந்தக் கமிஷன் முன்பு மாநிலங்கள் மனம் திறந்து சொல்லலாம் என்று அவர்கள் அறிவித்திருப்பது ஒரு துணையான நிகழ்ச்சி என்றும் நான் கருதுகிறேன். இது ஏதோ தேச ஒற்றுமைக்கு

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

எதிரானது என்றோ, தேச ஒற்றுமைக்காகத்தான் இப்போது இருக்கின்ற முறையில் மத்தியிலே அதிகாரம் குவிந்திருக்கிறது என்றோ, அதுதான் நியாயம் என்றோ கருதுவார்களானால், அவர்கள் கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும். இங்கே தண்ணீர் பிரச்சினை என்று வருகின்றபோது, காவேரியைப் பார்க்கிறோம், கிருஷ்ணாவைப் பார்த்து கண்கலங்குகிறோம். கிருஷ்ணா தண்ணீர் வருகிறது என்று சென்னைக்கு வந்த பிரதமர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அது வருகின்றது என்று அன்று சொல்ல முடிந்தவர்கள் இன்றைக்கு "உங்களுக்குள் உள்ள பிரச்சினை, நீங்களே தீர்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்கின்றார்கள். அது உள்ளபடியே நல்ல கருத்து என்றாலும்கூட "நாங்கள் தீர்த்துக் கொள்ளத் தயார்" என்று சொல்லும்போது, அதற்குத் தேவையான 200 கோடி ரூபாய்களை இந்த இரண்டு மாநிலங்களும் பெறுவதற்கு எங்கே போகும்? மத்திய அரசு ஒற்றுமை உணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றால் இதைக் கொடுக்கவேண்டும். கேரள முதலமைச்சர் திரு. கருணாகரன் அவர்கள் ஏதோ கிளர்ச்சி நோக்கத்திலே அமைந்தது என்று சொன்னார்கள். ஆனால் என்ன நடந்தது? ஜனதா ஆட்சிக்காலத்திலே இந்தி திணிப்பிற்கு எதிராக வரும்போது, இங்கே தமிழகத்திலே முதலமைச்சர் அவர்கள் மாநாடு கூட்டியபோது, இந்திரா காங்கிரசைச் சேர்ந்த டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள், அப்போது இருந்த திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள், பிரம்மானந்த ரெட்டி. காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சந்தித்தார்களே, அப்போது எதையும் பிளவு நோக்கத்தோடு கருதவில்லையா? சுகாதார அமைச்சர் அவர்கள் டெல்லியிலே இருக்கிறார்கள். அவர்கள் கொள்கை வகுக்கவில்லையா? அப்படி இருக்கும்போது, இரண்டு வேறு கோணத்திலே செயல்

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1983 ஏப்ரல் 13

படுவது நியாயமற்றது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். சுய மரியாதைத் திருமணம் என்று சொல்லியபோது, அதற்கு அங்கீகாரத்திற்கு டெல்லிக்குப் போக வேண்டியதாயிருந்தது. சுய மரியாதைத் திருமணம் என்பது இந்த மாநிலத்திலேதான் உருவாகிறது. இது மத்தியிலே இருப்பவர்களுக்கு சம்பந்தம் இல்லாத ஒன்று. அதுவும் தமிழ் நாட்டிலே உள்ளவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப சுய மரியாதைத் திருமணம் செய்துகொண்டு, அதற்குப் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால், அது இந்து லாவிலே வருகிறது என்றும். அதற்கு மத்திய அரசை எதிர்நோக்கியிருக்கின்ற நிலைமைகளும் உருவாகியிருக்கின்றன. இந்த நிலைமைகள் இந்த அடிப்படைச் சிந்தனைகளுக்கு எதிராகப் அமைந்தன என்று சொல்லிக்கொள்கிறேன். மத்திய அரசைப் பொறுத்தமட்டில் இரண்டு மான்யங்கள் அளிக்கிறார்கள். ஒன்று, பண உதவி, இரண்டு திட்டங்கள். அதனாலே திரு. கருணாகரன் அவர்கள்

(முற்பகல் 11-40)

அப்படிச் சொன்னாலும்கூட அவருடைய அமைச்சரவையிலே இருக்கும் அமைச்சர்கள் அங்கே பேசுகிறபோது மாநில உரிமைகளுக்காக அண்மையிலே வாதாடியிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, அரிசியைப் பொறுத்து, இப்போதுள்ள சூழ்நிலையை எண்ணிப் பார்க்கும்போது, மத்திய அரசு எப்படி அவ்வாறு நடந்துகொள்ள முடிகிறது? இப்போதிருக்கும் அதிகாரங்கள்தானே அந்த ஆணவத்தை வழங்கியிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களிடம் 61 லட்சம் டன் கையிருப்பு இருக்கிறது. சென்ற ஆண்டு 72 லட்சம் டன் இருந்தது. நம்மைப் பொறுத்த மட்டில், 5 லட்சம் டன் அளவுக்குத்தான் மாநில அரசு எடுக்க முடிந்தது. அதே நேரத்தில் ஒன்றை மறந்து விடுகிறார்கள். மத்திய அரசைச் சேர்ந்த ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் அரிசியைக் கொள்முதல் செய்கிறார்கள். அப்படி 1.1 லட்சம் டன்னை எடுத்திருக்கிறார்கள். மத்தியத் தொகுப்புக்கு நாம் தரவில்லை என்றால். மத்திய அரசின் கீழ் உள்ள ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா இந்த மாநிலத்திலிருந்து அரிசியைத் திரட்டவில்லையா? 11 லட்சம் டன் திரட்டியிருக்கிறார்கள். அதிலே கேட்க உரிமையில்லையா என்பதையும், இதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, மத்தியிலே குவிந்துள்ள அதிகாரங்கள் இந்தச் சிந்தனைகளை வளர்த்துக் கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இப்போது நாமே அதிகமாக அரிசியைச் சேர்க்க முடியும். ஆனால் அதற்குப் பணம் அதிகம் தேவை. மாநில ரிசர்வ் வங்கியைக் கேட்க வேண்டும். அவர்கள்



1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

கொடுப்பதை வைத்துத்தான் வாங்க முடியும். அதிகமாக நாம் அரிசியைச் சேர்த்து வைக்க விரும்பினாலும், ரிசர்வ் வங்கியின் அனுமதியும், பணமும் இல்லாமல் செய்ய முடியவில்லை. அதே நேரத்தில், தனியார் சேர்த்து வைத்து, அவர்களிடம் வாங்கிக் கொள்ளுங்கள் என்றால், அவர்கள் கேட்கும் அதிக விலையைத் தர வேண்டும். அதே நேரத்தில் மத்திய அரசின் தொகுப்பில் அரிசி இருக்கிறது. அதைத் தருவார்களானால், குறைந்த விலைக்குத் தர முடியும். இங்கேயுள்ள அரிசியைக் கொண்டு போகக் கூடாது என்று தடைப்படுத்தும் அதிகாரம் மாநிலத்திற்கு இல்லை. வேண்டுமானால் லெவி விதிக்கலாம். அதிகாரம் இல்லாத நிலையில் இங்கேயிருந்து அரிசி வெளியே போகிறது. நாம் ஒன்றும் அனுப்பவில்லை. அரிசியே மத்தியத் தொகுப்புக்குத் தராத கேரளாவுக்கு ஒரு லட்சம் டன் ஒதுக்குகிறார்கள். அரிசியைத் தந்து கொண்டு, இப்போது தர முடியாத கட்டத்தில் இருக்கும் நமக்கு அவர்களிடம் இருக்கும் 61 லட்சம் டன்னில் கடனாகத் தந்து, திருப்பிக்கூட வாங்கிக்கொள்ளலாம். அந்த மனம்கூட இல்லாத நிலை வந்ததற்குக் காரணம் அவர்களிடம் குவிந்து கிடக்கிற அதிகாரங்கள் தவிர, வேறு ஒன்றுமில்லை. இன்னொன்று, கோதுமையைப் பயிரிட்டு ஒருவன் 10 மூட்டை எடுக்கிறான் என்றால், அதற்கு 151 ரூபாய் என்று வைத்து 1,510 ரூபாய் அவனுக்குக் கிடைக்கிறது. அதே நேரத்தில் நம்முடைய விவசாயி 10 மூட்டை நெல் அறுவடை செய்தால், அரிசியாகக் கிடைப்பது 5 மூட்டை. அவர்களுக்குக் கிடைப்பது மூட்டைக்கு 120 ரூபாய். தமிழ் நாட்டு விவசாயி, தென்னக விவசாயி என்று பாகுபடுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம், இதைச் செய்கிற அதிகாரங்கள் மத்தியில் இருப்பது தான். லெவி விலை என்று சொல்லும்போது, 8 கோடி ரூபாய் அளவுக்கு குறைந்த விலைக்கு வாங்கி, குறைந்த விலைக்குத் தந்து, அந்த சிரமத்தினை மேற்கொள்கிறோம். 800 கோடி ரூபாய் அளவுக்கு இந்தச் சிரமத்தை ஏற்றுக் கொள்ளும் மத்திய அரசு இந்தியாவின் ஒரு பகுதியில் வறட்சி ஏற்படும்போது, சரியான முறையில் பகிர்ந்து தரவில்லை. அதற்கு எது அடிப்படை என்றால், குவிந்துள்ள அதிக அதிகாரங்கள் தவிர வேறு ஒன்றுமில்லை.

சிமெண்ட் விலை ரூ. 30 ஆக இருந்தது. சென்ற ஆண்டு 65 ரூபாய் என்று 100 சதவிகிதம் உயர்த்தினார்கள். கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கேயுள்ள சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து பக்கத்து ஊருக்குப் போக வேண்டுமென்றால், மத்திய அரசின் ஆணைப்படி எடுத்துச் செல்ல வேண்டும். ஓராண்டில் 100 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். அப்படியென்றால் 100 சதவிகிதம் நஷ்டத்திலே சிமெண்ட் தொழிற்சாலைகள் நடந்தனவா? எத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தன? அப்படி அகில இந்திய ரீதியில்

100 சதவிகிதம் உயர்த்தி இருப்பதால் லாபம் அடைந்திருப்பவர்கள் யார்? நஷ்டப்பட்டவர்கள் யார்? காரணம், எங்கேயோ இருந்துகொண்டு மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்களின் காரணமாக செயல்படுகிற காரணத்தாலே தான், இவை நடக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய ஆசையெல்லாம் பிரிந்து போக வேண்டுமென்பதோ, எங்களை விட்டு விடுங்கள் என்பதோ, தனியாக இருக்க வேண்டுமென்பதோ அல்ல. இந்திய அமைப்பிலே இருக்க வேண்டுமென்பதற்காக, இந்திய அமைப்பிலே இணைந்து இருக்க வேண்டுமென்பதற்காக, முறையாக இருப்பதற்காக தேசியத்தின்மீது உண்மையான நம்பிக்கையின் காரணமாக அதிகாரக் குவிப்பு அங்கே இருப்பது ஆபத்து என்று தெரிவிக்கிறோம். இவ்வளவு பெரிய அதிகாரங்களை அங்கே வைத்திருந்தார்களே. சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, இவ்வளவு பெரிய அதிகாரங்களை வைத்துக்கொண்டு சாதித்தது என்ன? இந்த நாட்டில் ஏழ்மையைப் போக்கினார்களா? இவ்வளவு பெரிய அதிகாரத்தை வைத்திருந்த மத்திய அரசு, மாநிலங்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலைத் தவிர்க்க முடிந்ததா? இவ்வளவு பெரிய அதிகாரத்தை வைத்திருந்த மத்திய அரசால் காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க முடிந்ததா? இவ்வளவு பெரிய அதிகாரத்தை வைத்திருந்த மத்திய அரசால் கிருஷ்ணா நீர் பிரச்சினையில் "நீங்களே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்று கை காட்ட முடிந்ததே தவிர, அதிகாரம் அங்கே இருப்பதால் லாபமில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தேசிய ஒருமைப்பாடு, தேசிய ஒருமைப்பாடு என்று குரல் கொடுக்கிறார்கள். இந்த அதிகாரங்களை வைத்து ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடிந்ததா? இந்தியைத் திணித்துக் காட்ட, இந்தி பிரச்சார சபை என்று கோடிக் கணக்கில் செலவு செய்கிறார்கள். அந்த மொழியை இவ்வளவு அதிகாரத்தை வைத்துக்கொண்டு அவர்களால் திணிக்க முடியாததற்குக் காரணம். அதிகாரம் அவர்களிடம் இருந்தாலும், மக்களை மறந்து செயல்பட முடியாது என்பதுதான். இன்னும் சொல்லப்போனால், அவ்வளவு அதிகாரங்கள் இருந்த காரணத்தாலேதான், காங்கிரஸ் அரசாங்கங்கள் பல மாநிலங்களில் வீழ்ச்சியடைந்தன. அதிகாரம் அவர்களுக்கு ஆணவத்தைத் தந்தது. அதிகாரத்தால் ஏற்பட்ட ஆணவத்தில் செயல்படுகிற போது, மக்களை மதிக்காத மனப்போக்கு இருக்கிறது. இங்கே தண்ணீர் தட்டுப்பாடு. அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். முடிந்த அளவுக்கு குழாய்க் கிணறுகளைப் போடுகிறோம். ஓடிஓடிப் பணியாற்றுகிறோம். அப்போது ஒரு வார்த்தை இல்லை. திடீரென்று வேகன்களில் தண்ணீர் அனுப்பி, அது அவர்களுடைய தேவையையே பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு இருக்கும்போது, ஏதோ நாட்டுக்கெல்லாம் நீர் தந்தது மாதிரி விளம்பரம்





தேடி விழா நடத்தினார்கள். அது அவர்கள் அதிகாரத்தில் ஆணவம். மத்திய அரசிலே அங்கம் வகிக்கிறவர்கள் அதிகாரத்தைக் காட்டி அடக்குகிறோம் என்று சொல்லும்போதும், நாளுக்கு நாள் மாநில முதலமைச்சர்களை மாற்ற ஆணை பிறப்பிப்போம் என்னும் போதும், மத்திய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், "தண்ணீரை நீங்கள் வாங்கிக் கொள்ளவில்லை என்றால் இந்த அரசையே மாற்றுவோம்" என்று சொல்லும்போதும், 4½ கோடி மக்கள் திரும்பிப் பார்க்கிறார்கள். யார் இந்த அரசாங்கத்தை உருவாக்கினார்கள், யார் இந்த மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கினார்கள், யார் இந்த முதலமைச்சரை உருவாக்கினார்கள்? அந்த 4½ கோடி மக்கள் ஒரு பக்கம் இருக்கும்போது, மத்திய அரசுக்கு வால் பிடிப்பவர்கள் இங்கேயிருந்து இப்படி முழக்கமிடுவார்களானால், அது எதன் காரணம்? அவ்வளவு பெரிய அதிகாரம் அங்கே இருப்பதன் காரணமாக ஆலவட்டம் வருகிறார்கள், வெண் சாமரம் வீசுகிறார்கள், அந்தக் கொலு மண்டபத்திற்கு பக்கத்திலே குடியிருப்பதாலே லாபம் பெறும் நோக்கத்தோடு இருக்கிறார்கள் என்று தெரிவித்து, அதிகாரக் குவிப்பை நான் எதிர்க்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லும்போது, இன்று ஆண்டு கொண்டிருக்கிற நாம் நிலையாக இருப்போம் என்பதால் அல்ல; நாளை அதிகாரத்திற்கு யாரும் வரலாம். மாநிலங்கள் உறுதியோடு இருக்க இந்த அதிகாரங்கள் தேவை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தென் மாநில முதல்வர்களுடைய மாநாட்டைக் கூட்டியுள்ள நேரத்திலே, இன்று நான்கு பேர்கள் ஆனாலும் 20 பேராகப் பெருகுமென்று அவர்கள் சொல்லிய வாக்குப்படி, இன்று பல மாநில முதல்வர்கள், காங்கிரஸ் கட்சி ஆளும் மாநில முதல்வர்கள், சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் சொல்ல வந்த காரணத்தாலேதான் பிரதமர் அவர்களே, 'நீங்கள் உங்கள் எண்ணங்களைச் சொல்லுங்கள், நியாயத்தின் அடிப்படையிலே நல்லதைச் சொல்லக் கூடியிருந்தால் அதில் தவறில்லை' என்று சொல்லக்கூடிய அளவுக்கு மனப் பக்குவத்தை தேடித் தந்திருக்கிறது என்ற முறையிலே இதை வரவேற்று அமைகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் முன்மொழிந்திருக்கக்கூடிய தீர்மானத்தை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும், டாக்டர் சனார்த்தனம் அவர்களும் பல நல்ல கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். நான் அண்மையிலே, சில நாட்களுக்கு முன்பு, 7, 10 நாட்

(திரு. ஜி. சுவாமிநாதன்) [1983 ஏப்ரல் 13

களுக்கு முன்பு காஷ்மீரத்திற்கும், அஸ்ஸாமுக்குப் பக்கத்திலுள்ள ஊருக்கும், பஞ்சாபுக்கும், டெல்லிக்கும் சொந்த வேலைகள் நிமித்தம் சென்று வந்தேன். காஷ்மீருக்குச் சென்று திரும்பி சண்டிகர் வழியாக விமானத்தில் வரும்போது, சண்டிகர் விமான நிலையத்தில் ஒரு விமானம் இறங்கும்போது, இரண்டு பக்கங்களிலும் 10, 10 இராணுவ விமானங்களை நிறுத்தி வைத்திருந்தார்கள். நான் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவன். ஜம்மு விமான நிலையத்திற்கு நான் வரும்போது, என்னென்ன என்னிடத்தில் இருக்கிறது என்று சோதனை யிட்டார்கள். 10 நிமிட சோதனையை 30 நிமிடங்கள் செய்தார்கள். துருவித் துருவிப் பார்த்து, கடைசியில் சிகரெட் லைட்டரை எடுத்துக்கொண்டார்கள். இதனால் ஏதாவது ஆபத்து ஏற்படுமா என்று நான் கேட்டபோது, அதைக் கூட கொடுக்கக்கூடாது என்று உத்தரவு இருக்கிறதென்று சொன்னார்கள். அவர்கள் சிகரெட்டை வாங்கிக்கொள்ளவில்லை. அதுதான் அசந்தர்ப்பம். சிகரெட் இருந்தது, லைட்டர் இல்லை. சிகரெட் பிடிக்காமல் 2½ மணி நேரம் இருக்க வேண்டிய துர்பாக்கியம் ஏற்பட்டது. அவர்களிடத்தில் வெளி நாடுகளில் இப்படி ஏற்படவில்லை என்றும், இங்கே ஏற்பட்டிருக்கிறது என்றும் சொன்னேன்.

அங்கேயெல்லாம் சென்று பார்க்கும்போது, இன்று இந்திய நாட்டின் நிலைமை எப்படி இருக்கிறதென்றால், ஒற்றுமையைக் குலைக்கக்கூடிய நிகழ்ச்சி என்று சொல்ல மாட்டேன், இந்திய நாடு சிதறுண்டு போகும் அள வுக்கு சந்தர்ப்பங்கள் வட மாநிலங்களில் பெருகியிருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அஸ்ஸாமில் இருக்கிற

(முற்பகல் 11-50)

நிலைமைகளைச் சொன்னார்கள். காஷ்மீரில் அதேமாதிரி நிலைமை இருக் கிறது. பஞ்சாபில் அதேமாதிரி நிலைமை இருக்கிறது. நாகாலாந்தில் அதே மாதிரி நிலைமை இருக்கிறது. இதே நிலைமையில் இந்திய நாடு போய்க் கொண்டிருந்தால், இந்திய நாடு ஒன்றாக வருங்காலத்தில் இருக்குமா என்கிற சந்தேகம் என்னைப் போன்றவர்களுக்கு ஏற்படுகிறது. இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இந்தியா ஒரே நாடாக இருக்கும் என்று பல வட்டாரங்களிலே பேசப்படுகிறது. அந்த அளவிலே இந்தியா இன்றைக்குச் சென்றுகொண்டிருக் கிறது. இன்னும் 5, 10 வருடங்களிலே, இதே நிலைமையில் இந்தியா போய்க் கொண்டிருந்தால், இந்திய நாடு இப்போது இருப்பது போல் ஒரே நாடாக இருக்குமா என்கிற சந்தேகம் எல்லோருக்குமே ஏற்படுகிறது. ஒரு முறை காஷ்மீரத்திற்கு நான் போயிருந்தபோது, காஷ்மீர் முதலமைச்சருடன் பேசிக்



1983 ஏப்ரல் 13] (திரு. ஜி. சுவாமிநாதன்)

கொண்டிருந்தேன். அப்போது பத்திரிகையாளரைக் கூப்பிட்டு ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். "பிளானிங் கமிஷனிடம் போய் காஷ்மீரத் திற்கு அதிகப் பணம் தர வேண்டுமென்று கேட்டேன். ஆனால் கேட்டதை விட 10 கோடி ரூபாய் குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நாகா லாந்திற்கு அவர்கள் கேட்டதை விட கூடுதலாக 10 கோடி ரூபாய் கொடுத்திருக் கிறார்கள். ஆகவே பிளானிங் கமிஷனிடம் எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தேன்" என்று அப்போது அவர்கள் சொன்னார்கள். இதே நிலைமை நீடிக்குமானால், இதே எல்லைக்கு அப்பால் நோக்கி நாங்கள் எதிர்நோக்குவது தவிர வேறு வழியில்லை, அப்போது இதனை மத்திய அரசு எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் சொன்னார்கள்.

He said that it might be necessary for the relevant people to look across the border.

இதே மாதிரி மத்திய அரசு செய்துகொண்டே போனால் நாங்கள் பாகிஸ்தானை எதிர்நோக்குவது தவிர வேறு வழியில்லை என்கிற அர்த்தத்தில் அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள்.

பொதுவாகவே 1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து, பல ஆண்டுகளாக, பல மாநிலங்களிலும், மத்தியிலும் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் அகில இந்திய ரீதியில் தலைவர்களாக பல தலைவர்கள் இருந்தார்கள். எப்படி காந்தியார் தேசியத் தலைவராக, சுதந்திரத்திற்காக பாடுபட்ட உலகம் அறிந்த தலைவராக இருந் திருக்கிறாரோ அதே போல நாட்டு மக்கள் அறிந்த பல தேசியத் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். நாடு தழுவிய முறையில் நடைபெற்ற போராட்டங் களில், காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை நடைபெற்ற போராட்டங் களில் பங்கு பெற்ற, நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல தலைவர்கள் இருந்தார்கள். அந்த வகையில்தான் மத்தியிலும் 1947 ஆம் ஆண்டிலிருந்து ஒரே கட்சி ஆட்சி நடத்தி வந்தது. மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி தான் ஆட்சி நடத்திக்கொண்டு வந்தது. 1967 ஆம் ஆண்டிலே தான் இதிலே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. இந்த மாறுதலின் விளைவாக காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்திக்கொண்டிருந்த பல மாநிலங்களில் மற்ற கட்சி ஆட்சிகள் ஏற்பட்டன. இன்றைக்கு நாட்டிலே அதிகமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இன்னும் 5 அல்லது 10 வருடங்களில் அநேகமாக எல்லா மாநிலங்களிலும் மட்டுமல்லாமல், மத்தியில் கூட காங்கிரஸ் ஆட்சி இருக்குமா என்கிற கேள்வி எழுந்துள்ளது. இது இந்திய நாட்டுக்கு மட்டும்

ஏற்பட்டுள்ள ஒரு விபத்தல்ல. எல்லா நாடுகளிலும் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த கட்சி—சுதந்திரம் வாங்கிக் கொடுத்த தலைவர்கள் இருக்கிற வரையில்—5 அல்லது 10 வருடங்கள் அந்தத் தலைவர்கள் இருக்கிற காரணத்தால், ஆட்சியில் இருக்க முடியும். அவர்களே சுதந்திரம் வாங்கிக் கொடுத்த ஒரே காரணத்திற்காக நிரந்தரமாக ஆட்சியில் இருக்க முடியும் என்கிற நிலைமை எந்த நாட்டிலும் இல்லை. ஆகவே இந்தியாவிலும் கூட அம்மாதிரி ஒரு சம்பவம் நடைபெற்றால், அது எதிர்பாராமல் ஏற்படுகின்ற ஒரு விபத்தாக நாம் கருத முடியாது.

காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இன்றைக்கு மத்தியில் ஆட்சி பீடத்தில் இருப்பதுடன் அகில இந்திய அளவிலே ஒரே கட்சியாகவும் காங்கிரஸ் கட்சி நாடு பூராவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. கான்ஸ்ட்டிட்யூஷன்படி பரவலான அளவில் அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்டிருக்கின்றன. ஆட்சியைப் பொறுத்தவரையில், அது தான் நிலைமை. கட்சியைப் பொறுத்தவரையிலும் கூட, அந்தக் கட்சி மாநிலங்களில் இயங்குகிற நிலையைப் பொறுத்தவரையில், சட்டரீதியாகப் பார்த்தால், அந்தந்த மாநிலங்களில் இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து தான் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் இவர்களுடைய கட்சி ஆளுகின்ற மாநிலங்களில் நிலைமை என்ன என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நேரு அவர்களுடைய காலத்தில் அது சட்டரீதியாகத்தான் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால் இந்திரா அம்மையார் அவர்கள் பிரதமராக வந்ததற்குப் பிறகு, மாநிலங்களிலுள்ள முதலமைச்சர்களை அந்தந்த மாநிலங்களிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்க விடுவதில்லை. அவர்கள் அதிலே ஒரு பெரிய மாறுதலைச் செய்திருக்கிறார்கள். மத்திய அரசிலிருந்து ஒரு அமைச்சர் அல்லது கட்சியினுடைய ஒரு தலைவர் மாநிலங்களுக்குச் சென்று முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கின்ற ஒரு முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இருக்கிறது. அவர்கள் பிரதமராக பதவி ஏற்றபோது திருவாளர்கள் காமராஜர், சஞ்சீவி ரெட்டி, பிரம்மானந்த ரெட்டி போன்ற தலைவர்கள், நாடறிந்த தலைவர்கள், ஒரு சிண்டிகேட் என்கிற முறையில் வலுவான தலைவர்களாக மாநிலங்களில் இருந்துகொண்டிருந்தார்கள். இப்படி மாநிலங்களில் வலுவான தலைவர்கள் இருந்த காரணத்தால், அவர்கள் பிரதமராக வருவதை இவர்கள் எதிர்க்க முடிந்தது. ஆகவே மாநிலங்களில் இருக்கிற தலைவர்கள் எல்லாம் வலுவற்றவர்களாக இருந்தால், ஒருவரும் எதிர்க்க முடியாது, நாட்டிலே ஒருமித்த காரியங்களை தன்னால் ஆற்ற முடியும், அதைத் தொடர்ந்து தானே தொடர்ந்து பிரதமராகவும் இருக்க





முடியும் என்கிற முறையில், தான் வலுவாக இருக்க வேண்டும் என்கிற ஒரே காரணத்திற்காக மாநிலத் தலைவர்களையெல்லாம் வலுவற்றவர்களாக ஆக்குகிற ஒரு காரியத்தை அன்றைக்கு பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் செய்தார்கள்.

அப்படி அவர்கள் அன்றைக்குச் செய்த காரணத்தால், இன்றைக்கு இரண்டு விதமான காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒன்று சட்டரீதியாக மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவதாகக் கட்சி ரீதியாகப் பார்த்தாலும், மாநிலங்களைப் பொறுத்த மட்டிலும் அதுதான் நிலைமை. ஆந்திராவில் இருந்து வந்த காங்கிரஸ் ஆட்சியை அகற்றினார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. ஆந்திராவில் இருந்து வந்த காங்கிரஸ் முதலமைச்சரை டெல்லியிலிருந்து வருகிற தலைவர்களாக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந்தாலும் சரி, பிரதமராக இருந்தாலும் சரி அல்லது பிரதமரின் மகனாக இருந்தாலும் சரி அவர்கள் எல்லாம் மதிக்காமல் பேசிய ஒரு நிலைமை இருந்ததால், ஆந்திராவில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் ஒரு காலத்தில் ஆந்திரா பிரிய வேண்டுமென்பதற்காக போராடினார்கள், உண்ணாவிரதம் இருந்தார்கள். அத்தகைய உணர்வுடைய மக்கள் மத்திய அரசின் செய்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றைக்கு உள்ள நிலையில் மத்தியில் ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டுமென்று உண்மையிலேயே கருதினால், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதற்கான சூழ்நிலையை மத்திய அரசு உருவாக்க வேண்டும். அப்போதுதான் வருங்காலத்தில் இந்தியா ஒரே நாடாக இப்போது இருக்கிற மாதிரி இருக்கும். அதிக அதிகாரம் கேட்பவர்கள் எல்லாம் அமைதியைக் குலைப்பவர்கள். நாட்டைத் துண்டாடுபவர்கள் என்றெல்லாம் சொல்கின்ற போக்கை அல்லது கொள்கையைக் கைவிட வேண்டும். இன்றைக்கு நாடு உள்ள நிலையில் அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று யார் கேட்கிறார்களோ அவர்கள் தான் உண்மையிலேயே இந்திய நாட்டைப் பழுதடையாமல், சிதற விடாமல் இருக்கும் வகையில் காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம்.

அடுத்து, இந்தத் தீர்மானத்தை தென் மாநில முதல்வர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டுவந்தபோது, எல்லா முதலமைச்சர்களும் பேசியிருக்கிறார்கள். அங்கு மாநாடு நடைபெற்ற காரண காரியங்களைப்பற்றி ஆராய்ந்து பார்ப்போமானால், இது ஏதோ இப்போது வைக்கப்பட்ட கோரிக்கை அல்ல என்பது இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள்

(திரு. ஏ. சுவாமிநாதன்) [1983 ஏப்ரல் 13

எல்லோரும் அறிந்த ஒன்று. சுதந்திரம் அடைந்து ஏறத்தாழ 35 ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கோரிக்கை கடந்த 20, 25 ஆண்டுகளாக எழுப்பப்படும் ஒன்று என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். அந்தக் கொள்கையின் அடிப்படை என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போமேயானால்—மாண்புமிகு தலைவர்கள் இப்போது அவையில் இல்லை—மேலவைத் தலைவர் மாண்புமிகு திரு. ம. பொ. சி. அவர்கள் இதிலே அதிகமாக ஈடுபாடு கொண்டவர்கள், நான் அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவன் என்கிற காரணத்தால் சொல்கிறேன். 1946 ஆம் ஆண்டிலே அவர்கள் வெளியிட்டு வந்த "தமிழ் முரசு" என்ற பத்திரிகையிலே அவர்கள் தொடர்ந்து மாநில சுயாட்சிபற்றியும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவது பற்றியும் கட்டுரைகள் எழுதி வந்திருக்கிறார்கள். அதனைத் தொகுத்து 1948 ஆம் ஆண்டில் "தமிழன் குரல்" என்கிற ஒரு புத்தகத்தை வெளியிட்டார்கள். ஆக, 35 வருடங்களுக்கு முன்னாலேயே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுள்ளது. அதேபோல அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1968 ஆம் ஆண்டு மாநில முதலமைச்சர்கள் என்கிற அளவில் திரு. நம்பூதிரிபாட் அவர்களுடன் சேர்ந்து மாநில சுயாட்சி மாநாடு ஒன்றைச் சிறப்பாக நடத்தி, அதிலே கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. அதற்குப் பிறகு ஆண்டவர்களும் அதே கோரிக்கையை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜனார்த்தனம் ஒரு கருத்தைச் சொன்னார். சிமெண்ட் மூட்டைகளை கரூரிலிருந்து வேறு ஓரிடத்திற்கு அனுப்ப வேண்டுமானால் கூட, மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது என்று சொன்னார். இதே கருத்தைத் தான் அறிஞர் 1968 ஆம் ஆண்டில் சொல்லியிருக்கிறார். "கள்ளக்குறிச்சியிலிருக்கிற சர்க்கரை ஆலையில் சர்க்கரை தேங்காமலிருக்க வழிவகை செய்ய வேண்டுமென்றால்", அதற்குக்கூட மத்தியிலிருக்கிற அமைச்சரிடத்தில் பேச வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மத்திய அமைச்சரோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு - ஆனால் அதே நேரத்தில் என்னால் வேகமாகப் பேச முடியாது என்பதால், அண்மையில் இருந்த தோழரிடம் பேசச் சொன்னேன்—கள்ளக்குறிச்சியைப்பற்றி விளக்கமாக அமைச்சருக்குச் சொல்லவே 15 நிமிடம் ஆயிற்று, அதற்குப் பிறகு சர்க்கரை விஷயம் பற்றிப் பேசினார், அப்படியும் தொலைபேசியின் மூலம் பேசியதை அவரால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதால் "அவர் கடிதம் எழுதுங்கள், உரிய ஏற்பாடுகளைச்



1983 ஏப்ரல் 13] (திரு. ஏ. சுவாமிநாதன்)

செய்கிறோம்" என்று அந்த அமைச்சர் சொன்னார் என்று அண்ணா அவர்கள் 1968 ஆம் ஆண்டிலேயே இதனைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 1968ஆம் ஆண்டிலேயே தொலைபேசியின் நிலைமை இது என்றால், இப்போது என்ன நிலைமை என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. அதற்கு முன்பு 1951—52ஆம் ஆண்டுகளில் கூட இக்கோரிக்கை எழுந்துள்ளது. அப்போது நான் மாணவனாக இருந்தேன். அப்போது மரியாதைக்குரிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் நிதியமைச்சராக இருந்தார்கள். 1952ஆம் ஆண்டு அவர்கள் நிதி நிலை அறிக்கையை வைத்து உரையாற்றுகிறபோது, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். மாநில அரசிடம் நிதிநிலை பற்றாக்குறையாக இருக்கிறது என்று அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே எனக்குத் தெரிந்தவரை, இந்தப் பிரச்சினை இன்றைக்கு, நேற்றைக்கு வந்ததல்ல. நான் அறிந்தவரை, எனக்குத் தெரிந்த வரை இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்னாலிருந்தே இதுபற்றிப் பேசிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

திரு. பிரமானந்த ரெட்டி பேசுகிறார், திரு. அபுல் கலாம் ஆசாத் பேசியிருக்கிறார். பண்டித நேரு பேசியிருக்கிறார். புதிதாக இப்போதுதான் யாரும் பேசவில்லை. அதன் தொடர்பாக இப்போது வந்திருக்கிறது. 1971 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நீதிபதி ராஜமன்னார், நீதிபதி சந்திரா ரெட்டி, டாக்டர் ஏ. எல். முதலியார் ஆகியோர் அடங்கிய குழுவை மத்திய-மாநில உறவுகள் குறித்து அறிக்கை தயாரித்துத் தரும்படி அமைத்தார். 1971-ல் அமைக்கப்பட்ட அந்தக் குழுவின் அறிக்கையை 1974-ல் சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் விவாதத்திற்காக வைத்து, ஒரு தீர்மானம் போட்டு அனுப்பிவைத்தோம். அப்போது திரு. வீராசாமி அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே இருந்தார். டாக்டர் ஹண்டே அவர்கள் சட்டமன்றப் பேரவையில் இருந்தார். நானும், திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்றவர்களும் இங்கே இருந்து அதைப்பற்றி விவாதித்து, தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு இங்கிருந்து அனுப்பப்பட்டது, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றையதினம் அந்தப் பிரச்சினை குறித்து எல்லா மாநிலங்களிலும் பற்றி எரியக்கூடிய நிலைமை ஏற்பட்டு, இனி இதே நிலைமையில் போய்க் கொண்டிருந்தால், இந்திய

நாட்டுக்கே ஆபத்து வந்துவிடும் என்று இன்றைக்கு சர்க்காரியா கமிஷன் போட்டிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்தால், வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருப்போம். அமெரிக்காவில், கனடா
வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருப்போம். அமெரிக்காவில், கனடா
நாட்டில், ஆஸ்திரேலியாவில், மலேசியாவில், அந்த நாடுகளுக்கு நான் சென்ற போது, ஒவ்வொரு மாநிலத்திலும் அவரவர்களுக்கு தனிப்பட்ட அதிகாரங்கள், சில இடங்களில் தனியாகக் கொடி, சில இடங்களில் தனி தேசப்பாடல் என்று வைத்துக்கொள்ளக் கூட அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இன்றையதினம் ஆஸ்திரேலியாவுக்கும் கனடாவுக்கும் நாம் சென்று பார்த்தால், கனடாவின் கொடி தனியாகப் பறக்கிறது. அந்த கொரான்டோ இருக்கக் கூடிய ஆன்டாரியோவின் கொடியும் தனியாகப் பறக்கிறது. இப்படி அந்த நாடுகளில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, வலுவான மாநிலங்களும், வலுவான மத்திய அரசும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. ரஷ்யாவில் கூட இந்த சிஸ்டம் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. எந்தெந்த நாடுகள் பரவலான அதிகாரத்தைப் பின்பற்றி இருக்கிறதோ அது அமெரிக்காவாக இருந்தாலும், கனடாவாக இருந்தாலும், வேறு எந்த நாடாக இருந்தாலும் சரி, அங்கே சிறப்பாக நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அப்படி மாநிலங்களுக்குத் தனியாக அந்தஸ்து கொடுக்கப்பட்டு, அதிலே இரண்டு விதமான மொழி வழி மாநிலங்களுக்கும் யுனைடெட் நேஷன்சில் கூட பிரிந்து போகும் உரிமை அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எந்தெந்த நாடுகள் முன் யோசனையோடு அதிகாரத்தைப் பரவலாகச் செய்தார்களோ, அந்தந்த நாடுகள் வலுவுள்ளதாகவும் எந்தெந்த நாடுகள் மத்தியில் அதிகாரத்தைக் குவித்து வைத்துக்கொண்டு அதே நேரத்தில் பலகீனர்களாக இருந்தார்களோ அந்த நாடுகள் சிதறுண்டு போனதையும் பார்த்தோம். ஔரங்கசீப் காலத்தில் இந்தியாவில் மத்திய அரசாங்கம் ரொம்ப வலுவாக இருந்தது. இந்திய சாம்ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால், குப்தர் காலத்தில் மத்திய அரசு வலுவாக இருந்தது. ஔரங்கசீப் காலத்திய மத்திய அரசு வலுவாக இருந்தது, அப்படிப்பட்ட பேரரசுகள் நிலை குலையக் காரணமாக இருந்ததே அப்போது இருந்த மாநிலங்கள் எல்லாம் வலுவிழந்த நிலையில் இருந்ததுதான். மாநிலங்கள் வலுப் பெற்று, அதிக அதிகாரங்கள் பெற்று, அதேநேரத்தில் மத்தியிலும் வலுவாக இருக்க வேண்டும். இந்திய நாடு ஒன்றாக இருக்க வேண்டுமென்ற கருத்திலே நாம் இங்கே பேசுகிறோம் என்ற ஒன்றை மட்டும் நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகிறபோது, ஒன்றைச் சொன்னார்கள். பொதுவாக எல்லாவற்றிலும் முதலாளி, தொழிலாளி பற்றிப் பேசாவிட்டால், அவருடைய சித்தாந்தப்படி சரியாக இராது என்று பேசுகிறார் என்று கருதுகிறேன். அவர் பேசுகிறபோது, மத்திய ஆட்சி வலுவாக இருக்க வேண்டுமென்று யார் பேசுகிறார்கள் என்று சொன்னால், இந்த நாட்டின் முதலாளிகள் தான் அப்படி நினைக்கிறார்கள், பெரிய முதலாளிகள் தான் அதை எதிர்பார்க்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்திய நாடு வலுவாக இருக்க வேண்டும், சிதறாமல் இருக்க வேண்டுமென்று யார் சொல்கிறார்கள் என்று கேட்டால், இன்றைய தினம் பெரிய தொழில் அதிபர்களுடைய மத்தியில் தான் அதிகமாக இந்தக் கருத்து இருக்கிறது என்று சொல்வேன். ஏனென்றால், தொழில் அதிபர்களுடன் அதிகமாகப் பழகுகிற வாய்ப்பு எனக்கிருக்கிற காரணத்தால், அவர்களை அடிக்கடி பார்த்துப் பேசுகிற வாய்ப்பு எனக்கு இருக்கிறது. நான் சமீபத்தில் ஸ்ரீலங்கா சென்றிருந்த போது, அங்கே இருக்கிற தொழில் அதிபர்களிடத்தில் பேசுகிற வாய்ப்பு கிடைத்தபோது, அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தியாவிலிருந்து வரக்கூடியவர்கள் அதிருஷ்ட சாலிகள் என்று சொன்னார்கள். ஏன் அப்படி என்று கேட்டேன். எங்கள் நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை எங்களது சிறிய நாடான ஸ்ரீலங்காவிலேயே விற்கவேண்டிய கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். பெரிய தொழிற்சாலைகளை வைத்துக்கொண்டு நிறைய சாமான்களைச் செய்தால், அந்த அளவுக்கு எங்களுடைய நாட்டில் விற்பனை செய்யக் கூடிய அளவுக்கு நாடு இல்லை, மக்கள் இல்லை, அந்த அளவுக்கு வருமானம் இல்லை என்று சொன்னார்கள். "ஆகவே எங்கள் நாட்டுப் பொருட்களை யெல்லாம் வெளிநாட்டுச் சந்தையில்தான் கொண்டுபோய் விற்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. வெளிநாடுகளுக்கு நாங்கள் போகும்போது மிகவும் முன்னேறிய நாடுகளான ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளோடு நாங்கள் போட்டியிடவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். ஆகவே முன்னேறாத நாங்கள், முன்னேறிய நாடுகளுடன் சந்தையில் விற்க வேண்டிய அவசியத்திற்கும், கட்டாயத்திற்கும் ஆளாகிறோம். ஆனால் இந்தியாவில் நீங்கள் செய்யக்கூடிய தரமான பொருட்களை இந்திய நாடு முழுவதற்கும் விற்கக்கூடிய பெரிய மார்க்கெட்டை வைத்திருக்கிறீர்கள். 70 கோடி மக்கள் இருக்கக்கூடிய மார்க்கெட் உங்களிடம் இருக்கிறது. அதில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் என்று 50 அல்லது 60 சதவீதத்தைக்

கழித்துவிட்டாலும், வாங்கக்கூடிய சக்தி உள்ளவர்கள் 10 சதவீதம் பேர் இருந்தாலும் கூட, கிட்டத்தட்ட 8, 10 கோடி மக்கள் இருக்கிற ஒரு பெரிய சந்தை உங்களிடத்தில் இருக்கிறது. ஆகவே இந்தியர்கள் மிகவும் அதிர்ஷ்ட சாலிகள்" என்று சொன்னார்கள். நான் தென் மாநிலத்திலிருந்து போனாலும் வட மாநிலத்திலிருந்து போனாலும் இன்றையதினம் பெரிய தொழில்கள் வைக்க வேண்டுமென்று நினைக்கிறவர்களிடத்தில் இந்திய நாடு ஒன்றாக இருந்தால்தான், ஒரு பெரிய தொழில் செய்ய முடியும் என்ற கருத்து எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே தொழில் அதிபர்களிடத்தில், இந்திய நாடு சிதறுண்டு போகாமல் இருக்க வேண்டுமென்ற கருத்து, பயம் இருக்கிறது என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது நாட்டின் மொத்த நன்மைக்காக என்று எடுத்துக் கொண்டாலும் அல்லது எனது சொந்த நன்மைக்காக என்று எடுத்துக்கொண்டாலும் சரி, அந்த அளவில் தான் அவர்களுடைய மனம் போய்க்கொண்டிருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

இன்றையதினம் தென் மாநில முதலமைச்சர்களுடைய மாநாடு நடைபெற்றிருக்கிறது. அதன் தொடர்பாக 'இம்மிடியட் ரீ-ஆக்ஷன்', அதை வரவேற்பதாக பிரதமர் கூறவில்லை. முதலில் அவர்கள் பேசியதைப் பார்க்கிறபோது, அதை வரவேற்றுச் சொல்லவில்லை. பின்னாலே பேசுகிற போது, சில நாட்கள் கழித்து, பத்திரிகைகளில் வந்த செய்தியைப் பார்த்தால், அதற்குத் தனியாக ஏதாவது கமிஷன் போடுவார்கள் என்று யாரும் எதிர் பார்க்கவும் இல்லை. ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு கமிஷன் போட்டார்கள். அந்தக் கமிஷன் போட்டதற்குக் காரணம், நம்முடைய தென் மாநில முதலமைச்சர்கள் கூடிய காரணத்தால் என்று ஒரு வாதத்தை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் சொன்னார். அவர் பேசியது நல்ல கிளைமேட்டை உருவாக்கி இருக்கலாமே தவிர, இன்றைய தினம் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சர்க்காரியா கமிஷனை நியமித்ததற்குக் காரணம், அவருடைய மனதில் பஞ்சாப் தான் இருக்கிறதே தவிர, தமிழ் நாடு இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதே நிலைமை பஞ்சாப்பில் தொடர்ந்து இருக்குமானால், பஞ்சாப்பில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு பஞ்சாபே இந்தியாவை விட்டுப் போய்விடுமோ என்ற பயம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அங்கே இருப்பவர்களைத் திருப்திப் படுத்தவே பஞ்சாபைச் சேர்ந்த சர்க்காரியா அவர்களை அதிலே போட்டிருக் கிறார்கள் என்று சொன்னால், தென் மாநிலங்களுடைய முதலமைச்சர்கள்



கலந்து பேசியதாலோ அதற்குரிய கிளைமேட் உருவாகியிருப்பதாலோ அல்ல. அந்த அம்மையாரின் மனதிலே இதற்கு ஊக்கம் ஏற்படுத்தக் காரணம் பஞ்சாப் மாநிலத்திலே இருக்கிற நிலைமை தான் என்று கருதுகிறேன். இதைப்பற்றி நாடாளுமன்றத்திலே பேசுகிறபோது உறுப்பினர்கள் இரண்டு காரணங்களைக் கேட்டனர். 24 மாநிலங்களிலும் ஏராளமாகப் பிரச் சினைகள் உருவாகியிருக்கிறதே, இவர் ஒரு கமிஷன் எல்லாவற்றையும் செய்ய முடியுமா என்ற கேள்வியைக் கேட்டார்கள். இரண்டாவது, இப்போது இருக்கக்கூடிய சட்டங்களை மாற்றக் கூடாது, அப்படி மாற்றாமலேயே இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தை மாற்றா மலேயே அதிகாரத்தைப் பரவலாக்க முடியுமா என்றும் கேட்டார்கள். அப்போது அவர்கள் கமிஷனுக்கு மறுபடியும் உறுப்பினர்கள் போட வேண்டிய அவசியம் இல்லையென்று சொன்னார்கள். இன்னொன்றும் சொல்கிறேன். நம்முடைய சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியமே இல்லையென்றும் சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் பத்திரிகையில் இந்திய உள்துறை அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்தது வந்திருக்கிறது. அதில் நாங்கள் ஒரு கமிஷனைப் போட்டிருக்கிறோம். இனியும் நாங்கள் அந்தக் கமிஷனுக்கு உறுப்பினர்கள் போடுவதாக இருக் கிறோம் என்று 'கமிட்' செய்திருக்கிறார்கள். அதோடு அரசியல் சட்டத் தையேகூட திருத்துவதற்கான பரிந்துரையையும் சர்க்காரியா கமிஷன் செய்ய லாம் என்றும் இன்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி மத்திய

(பிற்பகல் 12-10)

அமைச்சர் இரண்டு முக்கிய கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறார். இது நம்மைப் பொறுத்த வரையில், ஒரு பெரிய வெற்றி என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த இரண்டு நிலைமைகளும் இல்லாமல் இந்தப் பிரச் சினையில் நாம் ஒரு நல்ல முடிவுக்கு நிச்சயமாக வர முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது, அவர் ஒரு நல்ல கருத்தைத் தெரிவித்தார். இங்கே பேசும்போது அவரே அந்தக் கருத்தைத் தெரிவிப்பார் என்று நம்புகிறேன். அதாவது அரசியல் சட்டத்திற்குத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லும்போது, இதற்கு அந்தக் கமிஷனில் சட்ட வல்லுநர்களை மட்டும் போட்டுவிட்டால், அது சரியாக இருக்காது. காரணம் சட்டத் துறையில் வல்லுநர்களாக இருப்பவர்கள் சட்டத்தைத்தான் பார்ப்பார்கள்;

(திரு. ஜி. சுவாமிநாதன்) [1983 ஏப்ரல் 13

எனவே அந்த சர்க்காரியா கமிஷன் உண்மையில் நாம் எதிர்பார்க்கும் முறையில் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமென்றால், அதில் அரசியல் துறையில் பணியாற்றியவர்கள், அரசியல் சட்டம் இந்திய நாட்டில் எவ்வாறு இயங்குகிறது என்று நடைமுறையில் நன்கு அறிந்தவர்கள் ஆகியோர் அந்தக் கமிஷனின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக, மாநிலங்களிலும் மத்தியிலும் அமைச்சர்களாக இருந்தவர்கள் அல்லது மாநிலங்களில் முதலமைச்சர்களாக இருந்தவர்கள் ஆகியோர் அந்தக் கமிஷனில் இடம் பெற வேண்டும். அப்போதுதான் அந்தக் கமிஷனின் பணி உண்மையாகவே நல்ல முறையில் அமையும். எனவே மத்திய அரசு சர்க்காரியா கமிஷனுக்கு மேலும் உறுப்பினர்களைப் போடும்போது, அவர்கள் வெறும் சட்ட வல்லுநர்களாக மட்டும் இராமல், நான் ஏற்கெனவே குறிப்பிட்ட படி, மத்திய மாநில அரசுகளில் அமைச்சர்களாகவும் மாநிலங்களின் முதலமைச்சர்களாகவும் பணியாற்றியவர்களைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கமிஷன் அல்லது கமிட்டி போடுவதைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு சுவையான கருத்தைச் சொல்வார்கள். அதாவது . ஏதாவது ஒரு பிரச்சினையைத் தள்ளிப் போட வேண்டுமென்றால், அது குறித்து ஒரு கமிட்டி போடுவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. எனவே அந்த அடிப்படையில் நாம் மத்திய மாநில அரசுகளிடையில் இருக்க வேண்டிய உறவுகளைப்பற்றிப் பேசினால், "நாங்கள் அதற்காகத்தான் சர்க்காரியா கமிஷனைப் போட்டிருக்கிறோம்; அது இதுபற்றி தற்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. எனவே இப்போது இதுபற்றி நாம் பேச வேண்டிய அவசியமில்லை" என்று நாம் இந்தப் பொருள் குறித்துப் பேசுவதையே நிறுத்துவதற்கு இத்தகைய கமிஷன் நியமனங்கள் பயன்படலாம். எனவேதான் இதில் இன்னொரு கருத்தையும் நான் கூற விரும்புகிறேன். நியமிக்கப்பட்ட. இந்தக் கமிஷ்னேகூட "ஒரு டைம் பவுண்டு கமிஷனாக இல்லை". நமது மாநிலத்தில் நாம் நியமித்த டாக்டர் இராஜமன்னார் கமிட்டியே கூட 1971 ஆம் ஆண்டிலேயே மாநில அரசுக்குத் தன்னுடைய அறிக்கையைக் கொடுத்திருந்தாலும், அந்தக் கமிட்டியின் பரிந்துரைகளை அரசில் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, அதற்காக நாம் 3 ஆண்டுகள் எடுத்துக் கொண்டோம். இந்தப் பணிக்காக 2, 3 பேரை அரசு நியமித்து அவர்கள் அந்தப் பரிந்துரைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்தார்கள். இறுதியாக 1974 ஆம் ஆண்டுதான் நாம் அந்த அறிக்கையைக் குறித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறை



1983 ஏப்ரல் 13] (திரு. ஜி. சுவாமிநாதன்)

வேற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. எனவே சர்க்காரியா கமிஷன் தன்னுடைய பரிந்துரைகளை ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட வேண்டும். சில கமிஷன்களில் இருப்பவர்கள் இப்படிக் காலதாமதம் செய்தால், தங்களின் பதவிக் காலமும் நீடிக்கும் என்பதால், நீட்டிக்கொண்டே இருப்பார்கள். அப்படிப்பட்ட நிலை இதில் ஏற்படக்கூடாது. எனவே அந்தக் கமிஷன் 4, 5 ஆண்டுக் காலத்தை எடுத்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைகள் மத்திய மாநில அரசுகள் பற்றியதாக இருப்பதால், இதை மத்தியில் உட்கார்ந்துகொண்டு மட்டுமே பரிசீலித்து கருத்தைச் சொல்ல முடியாது, நாங்கள் மாநிலங்களுக்குச் சென்று பார்த்து, அங்கே சாட்சியங்களையும் விசாரிக்க விரும்புகிறோம் என்று சொல்லி ஆண்டுக் கணக்கில் இதை நீடித்துக் கொண்டிருக்க விடக்கூடாது. எனவே இந்த வகையில் சர்க்காரியா கமிஷன் என்பது தன்னுடைய அறிக்கையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் அது ஒரு 4, 5 வருஷம் ஆராய்ந்து பார்த்து, அறிக்கை கொடுத்து, பின்னர் அது மத்திய அரசால் 5, 6 ஆண்டுக்காலம் ஆராயப்பட்டு, பிறகு ஒரு முடிவெடுக்கும் நிலை ஏற்பட்டால், இடையில் 15 ஆண்டுக் காலம் போய் விடும். 15 ஆண்டுக் காலம் கழித்துத்தான் இந்தப் பிரச்சினைக்குப் பதில் சொல்லும் அவசியம் ஏற்படும். அப்போது யாரும் அதைக் கேட்பதற்கு நாதியில்லை என்று சொல்லுகிற நிலை ஏற்பட்டுவிடும். எனவே நமது அரசைப் பொறுத்த வரையில், "சர்க்காரியா கமிஷன் ஒரு டைம் பவுண்டு கமிஷனாக இருக்க வேண்டும். அது ஒரு குறிப்பிட்ட 3 ஆண்டு காலத்திற்குள் தன்னுடைய முடிவை மத்திய அரசுக்குத் தர வேண்டும், அதன் மீது மத்திய அரசு தன்னுடைய முடிந்த முடிவை ஓராண்டு காலத்திற்குள் எடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் கமிஷன் போட்டதன் பயன் இருக்காது" என்று மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அதோடு மாநிலங்களைப் பொறுத்த வரையில், எல்லாப் பிரச்சினைகளும் புதிதாக சர்க்காரியா கமிஷனால் ஆராயப்பட வேண்டும் என்ற நிலைமைகூட இல்லை. காரணம் பல்வேறு கமிஷன்கள் அல்லது கமிட்டிகள் மாநிலங்களின் பிரச்சினையை பல நேரங்களில் ஆராய்ந்து கருத்து தெரிவித்திருக்கின்றன. பலமுறை பைனான்ஸ் கமிஷன்கள் பல கருத்துக்களை ஆராய்ந்து கருத்து தெரிவித்திருக்கின்றன. ஹனுமந்தையா கமிஷன்—தன்னுடைய அட்மினிஸ்ட்டிரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் பல மாறுதல்களைச் செய்ய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறது. அதைப் போலவே

இதற்காக அரசியல் சட்டத் திருத்தம் மட்டும் தேவையில்லை என்றும் அவர் சொன்னார். அடுத்து வந்த அசோக் சந்தா கமிஷன் பல காரியங்களைச் செய்ய வேண்டியதன் அவசியத்தைச் சொல்லியிருக்கிறது. அதைப்போலவே பின்னாலே வந்த சந்தானம் பைனான்ஸ் கமிஷன் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. இப்படி ஒவ்வொரு பைனான்ஸ் கமிஷனின்போதும் பல கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளில் முடிவான கருத்துக்களாக இருப்பவைகளையாவது உடனடியாக நிறைவேற்ற மத்திய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாவற்றையும் "ஆம்னி பஸ்" ஆக வைத்துக்கொண்டு, எல்லாம் முடிந்த பிறகுதான் இதையும் செய்வோம் என்று சொல்லாமல், எந்தெந்தக் கருத்துக்கள் முடிந்த கருத்துக்களாக மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவோ அவைகளை யாவது காலம் தாழ்த்தாமல் உடனே நிறைவேற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்ட்டர்-ஸ்டேட் கவுன்சிலைப் பொறுத்த வரையில், நாம் இதற்காக அரசியல் நிர்ணயச் சட்டத்தைத் திருத்தக் கூடத் தேவையில்லை. மத்திய அரசு உடனே நிர்ணயித்து நியமிக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதால், இன்ட்டர்-ஸ்டேட் கவுன்சில் போட வேண்டிய அவசியமில்லை என்றுகூட சொல்லப்படலாம். அல்லது மத்திய மாநிலப் பிரச்சினைகளை விவாதிப்பதற்கு இடம் தேவையென்றால், பைனான்ஸ் கமிஷன் இருக்கிறது, பிளானிங் கமிஷன் இருக்கிறது என்று கூட சொல்லலாம். ஆனால் அங்கெல்லாம் பேச முடியாது. எனவே மத்திய அரசு பெரிய மனது பண்ணி இன்ட்ட-ஸ்டேட் கவுன்சிலை நியமிக்க வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்தால்தான், இன்றைக்கு இந்தியா இருக்கிற நிலைமையில் மத்திய அரசு மாநிலங்களைப் பொறுத்த வரையில், எதையோ செய்ய வேண்டும் என்று விரும்புகிறது என்ற வகையில் நம்புவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். அப்போதுதான் மாநிலங்களும், சர்க்காரியா கமிஷனின் அறிக்கை வருவதற்கு 3, 4 ஆண்டுகள் ஆனாலும் பொறுமையாக இருக்கும். இதைச் செய்யாமல், சர்க்காரியா கமிஷன் அறிக்கை வரும் வரை எல்லாவற்றையும் காலம் தாழ்த்துவோம் என்று மத்திய அரசு சொன்னால், இனி இந்திய நாட்டை—இப்போது அது பெரிய அபாயத்தில் இருக்கும் நிலையில்—கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.





திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தென்மாநில முதல்வர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஆதரிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிந்து பேச விழைகிறேன்.

நான் முன்னாலே என்னைப் பேசவிடுங்கள் என்று கேட்டிருந்தும், இரண்டாவது இடத்தில் என்னுடைய பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட, இப்போதும் மற்றொரு உறுப்பினரை அழைத்துப் பேசச் சொல்லும் நிலை தான் இங்கே இருக்கிறது என்று சொன்னால்—இங்கேயே சுயாட்சி, மற்ற மற்ற பிரச்சினைகள் எல்லாம் இருந்து கொண்டு என்னுடைய பெயர் தள்ளிக் கொண்டே போகிற நிலை இருக்குமானால்—முதலிடத்தில் அல்லது 2வது இடத்தில் தரப்பட்ட என்னுடைய பெயர் எப்போதும் 7வது இடத்திற்குத் தான் வரும் என்கிற நிலை இருக்குமானால் . . .

THIRU G. SWAMINATHAN: ..........So that the hon. Member may have his last say in the matter..........

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அப்படிப்பட்ட நிலையில்லை என்பது எனக்குத் தெரியும். ஏற்கெனவே ஏற்பட்ட அனுபவத்தைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். ஆக, நான் இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து சில கருத்துக்களை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்னால் பல்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும் மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்; அதற்கான ஆதாரங்களோடு பேசியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தேன், கேட்டேன். எனவே நான் அவைகளையே மீண்டும் இங்கே பேச விரும்ப வில்லை. ஆசிரியப் பிரதிநிதிகள் இதிலும் வந்து ஆக்கிரமித்துக் கொள்ளு கிறார்கள் என்று எண்ணுவதற்கான சூழ்நிலையை நான் உருவாக்க வேண்டா மென்று கருதுகிறேன்.

பொதுவாக, இன்றைக்கு தென் மாநில முதல்வர்கள் கூடியிருக்கிற நேரம் எப்படிப்பட்ட நேரம் என்பதைக் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் "மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி ஏற்பட வேண்டும்" என்ற கருத்தைச் சொல்லி, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அந்தக் கருத்தைப் பொறுத்த வரையில், அது மெல்ல மெல்லக் கனிந்து

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1983 ஏப்ரல் 13

இன்றைக்கு நல்ல சூழ்நிலைக்கு வந்து வெற்றி பெறும் நிலையே உருவாகியிருக்கிறது. இது, நாமெல்லாம் எண்ணி மகிழத் தக்க ஒன்றாகும். இன்றையதினம் பல்வேறு மாநிலங்களில் இருக்கிற நிலைமைகளை நாம் பார்க்கிறோம். மாநிலங்களுக்குப் போதிய அதிகாரங்கள் இல்லை, நிதி வசதிகள் இல்லை. எல்லா அதிகாரங்களையும் நிதியாதாரங்களையும் மத்திய அரசே வைத்துக்கொண்டு மாநிலங்களையெல்லாம் அடிமைகளாக, சாதாரண முனிசிபாலிடிகளைப் போல், அதுகூட அல்ல, ஊராட்சிகளைப் போல் நடத்துகிற நிலைதான் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டதால் தான், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து இன்றைக்கு இதற்கு ஒரு பரிகாரம் கண்டாக வேண்டும் என்ற அடிப்படையில் இந்த முடிவெடுத்திருக்கிறோம்.

இன்றைக்கு நாட்டில் இருக்கிற சூழ்நிலை என்னவென்றால்—ஆந்திரத்தில் ஒரு பிராந்தியக் கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது. அசாம் அச்சப்படுத்திக் கொண்டிருக்கிறது. பஞ்சாப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது, நாகாலந்து நடுநடுங்க வைத்துக் கொண்டிருக்கிறது. திரிபுரா 'முடிவுக்கே வந்து விட்டோம்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. இவைகளைப்பற்றியெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் நாட்டில் உருவான பிறகுதான், நாம் தென்மாநில முதல்வர்களின் மாநாட்டைக் கூட்டுவோம் என்று கூட்டியிருக்கிறோம்.

பஞ்சாப் இன்றைக்குப் பறந்துவிடுமோ என்ற அச்சம் இருப்பதால், சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். பஞ்சாப் மட்டுமல்ல, நாட்டிலுள்ள பல்வேறு பிரதேசங்கள், பல்வேறு மாநிலங்கள் இப்படிப்பட்ட நிலையில்தான் இருக்கின்றன என்பதை மத்திய அரசு அறிந்திருக்கிற காரணத்தால்தான், இந்தப் பிரச்சினைகளை திசை திருப்புவதற்காக சர்க்காரியா கமிஷன் போடப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். சர்க்காரியா கமிஷன் எதற்குப் போடுவார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

முதலில் இந்த நாட்டுக் குடிமகன் ஒருவன் தன்னை யார் என்று சொல்லிக் கொள்ள முனைந்து முழுமையாக அறிமுகப்படுத்திக்கொள்ள விரும்பினால், அவனைப் பிரிவினைவாதி என்று சொல்லுகிற நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. நான் முதலில் தமிழன், இரண்டாவது நான் திராவிடன், மூன்றாவதாகத்தான் நான் என்னை இந்தியன் என்று சொல்லிக்கொள்வேன்.



1983 ஏப்ரல் 13] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

(பிற்பகல் 12-20)

என்னுடைய சொந்த ஊர் எது என்று கேட்டால் திருவாரூருக்குப் பக்கத்திலே உள்ள ஊர் என்பேன். என்னுடைய மாவட்டம் எது என்றால் தஞ்சை என்பேன். வெளியே சென்றால் சென்னை மாநிலம் அல்லது தமிழ்நாடு என்பேன். வெளி நாட்டிற்குச் சென்றால், இந்தியா என்று சொல்லுவேன். இந்த உணர்வு இருப்பது தவறு என்று சொல்ல முடியாது. இப்படிப்பட்ட உணர்வு இருப்பது தவறு என்று சொல்லி அமுக்கி வைத்திருப்பதாலே, இதே உணர்வு மற்ற மற்ற மாநிலங்களிலும் தோன்றி, அமுக்கி வைக்கப்படுகிறோம், உயர்ந்து எழ வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு மாநிலங்கள் மாறி வருகின்றன. இதை மத்திய அரசு உணர்ந்து கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாய்ப்பைக் கொடுக்கின்ற வகையில் தென் மாநில முதல்வர்கள் மாநாடு வந்திருக்கிறது.

தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும் சரி, அதற்குப் பின் வந்த டாக்டர் கலைஞர் காலத்திலும் சரி, மாநில சுயாட்சிபற்றி இரு அவைகளிலும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிய பிறகும்கூட, இவர்கள் சொல்லுவதைக் கேட்பதா என்ற வகையிலே மாறுபட்ட கருத்துக்களைச் சொன்ன பிறகும் கூட, இன்றைக்கு மாநில சுயாட்சிபற்றிச் சொல்லியே ஆக வேண்டும் என்ற கட்டாயத்திற்கு வந்திருக்கிறோம்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் மத்திய அரசின் அதிகார வரம்புப் பட்டியலில் 97 இருப்பதாகவும், மாநில அரசின் அதிகார வரம்புப் பட்டியலில் 66 இருப்பதாகவும், பொதுப் பட்டியலில் 47 இருப்பதாகவும் சொன்னார்கள். பொதுப் பட்டியலில் உள்ள 47-ல் கல்வியும் ஒன்று. கல்வியைப்பற்றி மாநில அரசு ஏதேனும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னால், நிறைவேற்றினாலும் கூட குடியரசுத் தலைவருடைய இசைவைப் பெற வேண்டும். அல்லது மத்திய அரசு கல்வியைப்பற்றி ஒரு சட்டத்தை நிறைவேற்றினால், மாநில அரசின் சட்டம் அடிபட்டுப் போகும் என்ற வகையில் இருக்கக் கூடிய சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கல்வியைப் பொறுத்த வரையில், அது பொதுப் பட்டியலில் இருக்கக் கூடாது. ஏற்கெனவே இருக்கக்கூடிய அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து வாங்குவதற்கு நம்முடைய மாநில முதல்வர் முயற்சிக்க வேண்டும். கல்வியைப் பொறுத்த வரையில், அது அந்தந்த மாநிலத்தினுடைய பட்டியலிலேயே இருக்க வேண்டுமே தவிர, பொதுப் பட்டியலிலே

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 ஏப்ரல் 13

இருக்கக் கூடாது. பொதுப் பட்டியலிலே இருந்தால், அவர்கள் இந்திய தேசம் ஒன்று என்று கருதி, மொழி கூட ஒன்றுதான் என்று சொல்லி, இந்தி மொழி இருக்க வேண்டும் என்று சொல்லி, இந்தி மொழி பேசும் மாநிலத்தின் கலாச்சாரம் புகுத்த வேண்டும் என்று சொல்லி, நாட்டிலே இருக்கக் கூடிய மற்ற மொழிகளுடைய வளத்தை அழிக்க வாய்ப்பாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்கள் சங்க கூட்டமைப்புச் சங்கத்தின் தலைவராக நான் இருக்கிறேன். தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டாண்டுகள் ஆகின்றன. நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு, பஞ்சாப் ஆசிரியர்களையும், கேரள ஆசிரியர்களையும், குஜராத் ஆசிரியர்களையும், திரிபுரா ஆசிரியர்களையும், மேற்கு வங்க ஆசிரியர்களையும், டில்லியில் உள்ள பொதுச் செயலாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு தலைவர் என்ற முறையில் மத்திய கல்வி அமைச்சர் அவர்களைப் பேட்டி கண்டோம். அப்போது "பொதுப் பட்டியலில் கல்வி இருக்கிற காரணத்தாலே உங்களிடம் வந்திருக்கிறோம். ஆசிரியர்களுக்கென்று தேசிய ஊதியக் குழுவை நியமியுங்கள். நாடு பூராவும் ஒரே சீரான ஊதியக் கொள்கை ஆசிரியர்களுக்கு வர வேண்டும்" என்று வாதாடினேன். அதற்கு அவர்கள், "நீங்கள் தமிழ் நாட்டுக்காரர்கள். தமிழ் நாட்டிலே இருப்பவர்கள் மத்திய அரசுக்கு அடங்குவதே இல்லை. நாங்கள் மும்மொழிக் கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழ் நாட்டில் இரண்டு மொழிக் கொள்கையைத் தானே வைத்திருக்கிறீர்கள். எப்போதும் மத்திய அரசுக்கு அடங்காத வகையில், மத்திய அரசு விரும்பாத வகையில் செயல்படுகிறீர்கள். ஆகவே என்னிடத்திலே ஏன் வருகிறீர்கள்?" என்று கேட்டார். அப்போது, "பொதுப் பட்டியலில் கல்வியை வைத்திருக்கிறீர்கள். உங்களுக்குப் அது குறித்து அதிகாரம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நாங்கள் சட்டத்தை நிறைவேற்றினாலும், மத்திய அரசு நிறைவேற்றக் கூடிய சட்டத்தாலே அது அடிபட்டுப் போகும். ஆகவே இங்கே வர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல் நாங்கள் ஒரு கொள்கையை வைத்திருக்கிறோம். State for Pay Centre for D.A. என்ற ஒரு கொள்கையை வைத்திருக்கிறோம். விலைவாசி உயர்வு என்றால், மாநில அரசு மட்டும் அல்லாமல், மத்திய அரசும் காரணமாக இருக்கிறது. ஆகவே மத்திய அரசு டி.ஏ.வை உயர்த்தும்போது, மாநில அரசு தருகிறதா என்று எதிர்பார்க்காமல், மத்திய அரசு ஊழியர்களுக்குத் தருவதைப் போலவே, மாநில அரசு ஊழியர்களுக்கும் நீங்களே தாருங்கள். எல்லோருக்கும் தாராளிட்டாலும் கல்வியை பொதுப் பட்டியலிலே வைத்திருப்பதால், எங்களுக்



1983 ஏப்ரல் 13] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

காவது தாருங்கள்" என்று வற்புறுத்திச் சொன்னேன். அதற்கு அவர் "இந்தியை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? மற்றதை பிறகு பேசுவோம்" என்று பேச ஆரம்பித்தார்கள். அதற்கு நான், "நீங்கள் அரசியல் வாதிகளிடம் பேச வேண்டியதை ஆசிரியர் சங்கத் தலைவரிடம் பேசுகிறீர்கள். நீங்கள் மொழி, மொழி என்பதாலேதான் உங்களுடைய கட்சி வளர வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது" என்று எடுத்துச் சொன்னேன். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், கல்வியைப் பொதுப் பட்டியலிலே வைத்திருப்பதற்குக் காரணம் மொழியை வளர்க்க, மொழியைத் திணிக்க, இந்தி மொழியைத் திணிக்க, இந்தி கலாச்சாரத்தை, வட மாநிலத்தினுடைய கலாச்சாரத்தைப் புகுத்தத்தான் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான். ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால், அதன் மொழியை அழிக்க வேண்டும் என்பது அடிப்படைத் தத்துவம். மொழியை அழிக்க பொதுப் பட்டியலில் கல்வியை வைத்திருக்கிறார்கள். ஆகவே கல்வியை பொதுப் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும். தென் மாநில மாநாடு அதற்குப் பயன்படுகிறது என்ற வகையிலே தான் ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலே இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கூட மாநில சுயாட்சியை ஆதரித்துப் பேசினேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் மத்திய கல்வி அமைச்சரைச் சந்தித்து சில பிரச்சினைகளை எழுப்பியபோது, பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால், இந்தியை நீங்கள் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா என்று கேட்டதாக இங்கே சொல்லுகிறார். அப்படி அவர் கேட்டபோது, இவர் அதற்கு என்ன பதில் சொன்னார்? ஏற்றுக்கொள்ளுகிறோம் என்றாரா அல்லது ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். "இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிற காரணத்தாலேதான், உங்கள் கட்சி வளர வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது" என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அழுத்தந்திருத்தமாகச்

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1983 ஏப்ரல் 13

சொல்லியிருக்கிறேன். இதே அவையிலே பல முறை பேசியிருக்கிறேன். இந்தியைத் துணைப் பாடமாக அல்லது விருப்பப் பாடமாக வைக்கலாமா என்று கேட்டபோதுகூட, ஆசிரியர் சமுதாயச் சார்பிலே, அதுவும் தமிழ் மொழிக்காக உயிர் இழந்த வீரப்பன் மாபிலே வந்த நாங்கள் 'எதிர்க்கிறோம்' என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். இப்போதும் சொல்லு கிறேன், இந்தியைத் திணிக்கத்தான் கல்வியை பொதுப் பட்டியலில் வைத்திருக் கிறார்கள். ஆகவே பொதுப் பட்டியலிலிருந்து மாற்றியமைக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாநில சுயாட்சி பற்றி தீர்மானம் வந்தபோது நான் அரசு ஊழியனாக, ஆசிரியராக இருந்ததோடு மட்டுமல்லாமல், ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்தேன். அரசு ஊழியர்கள் அரசியல் பேசக்கூடாது என்றாலும் கூட, மாநில சுயாட்சியை ஆதரிக்கிறேன் என்று பேசினேன். மாநில சுயாட்சியை ஆதரிக்கிறேன் என்று அன்றைக்குப் பேசியபோது கொடுத்த காரண விளக்கங்கள் இப்போது மாநில சுயாட்சியை ஆதரிப்பதற்கு உரிய காரணங்களாக அமைகின்றன. மேலவை உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சார்பாக வந்திருக்கிறேன். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஓட்டு போடுகிற உரிமை கிடையாது. உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கு உள்ள வாக்குரிமை எங்களுக்கு இல்லையா என்று கேட்ட போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே அதை ஏற்றுக்கொண்டு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தார்கள். அப்போது மக்கள் அவையில் மாண்புமிகு திரு. செழியன் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் மூலமாக தனி நபர் தீர்மானம் கொண்டுவந்தார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்திலேகூட எங்கள் நாட்டிலே உள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு நாங்கள் வாக்குரிமையைத் தருகிறோம் என்று பல முறை மத்திய அரசிடம் கேட்டபோது, அவர்கள் மறுத்துவிட்டார்கள். இன்றைக்கு இருக்கக் கூடிய அரசு கூட "பல முறை எழுதியிருக்கிறோம்" என்று சில நாட்களுக்கு முன்பு நடந்த விவாதத்தின்போது பதில் சொன்னார்கள். இந்த அதிகாரம் மாநில அரசுக்கு இல்லாத காரணத்தாலே நாம் வற்புறுத்தியும் அவர்கள் மறுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. மாநில அரசுக்கு இந்த அதிகாரம் இருந்தி ருந்தால், நிச்சயமாக தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை கொடுத்திருப்பார்கள் அல்லவா?" அந்த வகையிலே மாநில சுயாட்சியை நான் வரவேற்கிறேன் என்று பேசினேன். அன்றைக்கு எதிர்த்துப் பேசிய சங்கங்களும் இருந்தன. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டால்



1983 ஏப்ரல் 13] (திரு. க. மீனாட்சிசுந்தரம்)

மட்டும் போதாது. அனைத்துத் தரப்பினருடைய கருத்தையும் பெற வேண்டும். பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும். தமிழகத்திலே இருக்கக் கூடிய அனைத்துச் சங்கங்கள் மட்டுமல்லாமல், அனைத்துக் கட்சிகள் மட்டுமல்லாமல், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தந்தாக வேண்டும் என்ற கொள்கையை எதிர் தரப்பில் உள்ளவர்கள் கூட ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை வலியுறுத்திப் பேசிக் கொண்டிருக்கிறோம். நாளைய தினம் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது என்றால்,—ஆட்சி மாற்றம் ஏற்படாது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் திராவிட பாரம்பரியம்தான் இருக்கும்— ஒருவேளை பூகம்பம் ஏற்பட்டு மாற்றம் ஏற்படுகிறது என்றால், ஏற்கெனவே சுயாட்சியைப் பற்றிப் பேசியவர்கள் யார், தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் வலியுறுத்திப் பேசியவர்கள் யார் என்று உள்ளே பிடித்துப் போடக்கூடிய சூழ்நிலை வரும். நான் என்னைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஏற்கெனவே மாநில சுயாட்சிபற்றிப் பேசியதற்காக, ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எமெர்ஜென்சி காலத்திலே என்னுடைய படத்தைப் போட்டு அடையாளம் கண்டு கொள்ளுங்கள் என்று . . .

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** அவையின் அனுமதியுடன் உறுப்பினர் பேசி முடிக்கும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12.30)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "அடையாளம் கண்டுகொள்ளுங்கள். மாநில சுயாட்சிக்கு ஆதரவாக மீனாட்சிசுந்தரம் சங்கம் பேசியது" என்று சொல்லி, என்னுடைய பேச்சை எடுத்துப் போட்டு இவனைக் கைது செய்யுங்கள் என்று எழுதிக் காட்டி னார்கள். அப்படி எழுதிக்காட்டியவர்கள் யாரோ?

**திரு. க. இராமமூர்த்தி:** அப்படிப் போட்டவர்கள் யார்? அப்படிப்பட்ட சங்கம் திராவிடர் பாரம்பரிய சங்கமா அல்லது தேசிய சங்கமா என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அது திராவிடர் பாரம்பரிய இயக்கம் அல்ல என்பது தெளிவாகத் தெரியும்.

* திரு. க. இராமமூர்த்தி : எனவே அந்தச் சங்கம் தேசிய இயக்க சங்கமா இல்லையா என்று தெரியும். அவர்களுக்கு யார் போட்டார்கள் என்று ஞாபகம் இருக்கிறது. சொல்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். திராவிடர் பாரம்பரிய நிழலில் நடத்தப்படுகிற சங்கம் என்பது மட்டும் தெரிகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அந்த சங்கம் யார் யார் ஆட்சியிலே இருக்கின்றார்களோ அவர்கள் சங்கமாகக் காட்சி அளிக்கின்ற சங்கம். அதை ஆட்சியாளர்களே நம்பி ஏமாற்றப்படுகின்ற அளவுக்கு இருந்த சங்கம்.

திரு. க. இராமமூர்த்தி : அது இந்த திராவிடர் பாரம்பரிய சங்கமாக இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அதைத்தானே நம்புவார்கள். ஆகவேதான் நான் அரசுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட சூழ் நிலையிலே அந்த சங்கத்திலே என்னை அப்படிக் காட்டிக்கொடுத்தார்கள். அதன் விளைவாக என்னவாயிற்று ? திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் கைது செய்யப்படவில்லை, மாநில சுயாட்சியை ஆதரித்த காரணத் தினாலே ஆசிரியர் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் கூட கைதானார்கள். திருச் சியிலே அந்த மாவட்டத்தினுடைய செயலாளர் திரு. வெங்கடாசலம் என்பவரும், தஞ்சை மாவட்டத்தினுடைய செயலாளர் திரு. தட்சிணா மூர்த்தியும், புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய செயலாளர் திரு. சரவண முதலு என்பவரும் ஆசிரியர்கள் மன்றத்தின் சார்பிலே மாநில சுயாட்சியை ஆதரித்து ஆதரவு தெரிவித்த காரணத்தினாலேயே கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையிலே வைக்கப்பட்டிருந்தார்கள். இப்படி அனைத்துத் தரப்பிலே இருந்தும் ஆதரவு பெற்று அதை வெற்றி பெறுவதற்குரிய சூழ் நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். இப்போதும் இந்தக் கொள்கைக்கு எதிர்த் தரப்பினராக இருக்கக் கூடியவர்களே சில விஷயங்களில் ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். உண்மையிலேயே வெளிப்படையாக ஆதரவு தெரிவிப்பதாக இருந்தால், அதை அவர்கள் செய்ய வேண்டும். அந்தக் கொள்கை அடிப் படையிலே யார் இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், மற்றவர்களும் பேச வேண்டும். ஆகவே நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. உண்மையிலேயே ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலே சொல்கிறேன், குவிந்திருக்கின்ற அதிகாரத்தைப்



பரவலாக ஆக்க வேண்டும். நம்முடைய பகுதிக்கு அதைக் கொண்டுவர வேண்டும். ஒவ்வொரு நாடும் தன்னுடைய இச்சைப்படி, தன்னுடைய எண்ணப்படி, மக்களுக்கு வேண்டிய நலன்களை விளைவிக்கின்ற முயற்சியிலே ஈடுபடுகின்றபோது, மத்திய அரசு குறுக்கே நிற்பதைத் தடுத்திட, நிச்சயமாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்பதை இங்கே மட்டும் பேசி பிரயோசனமில்லை. மக்கள் மத்தியிலே, மாணவர்கள் மத்தியிலே அதைத் தூவ வேண்டும். பாடத் திட்டத்திலே இந்த அறிவை அவர்களுக்குப் புகட்ட வேண்டும். அந்த எண்ணத்தை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். உடன்பாடுள்ள மாநில முதல்வர்களை அழைத்து வைத்துப் பேசி ஆதரவு பெற வேண்டும். 1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராகவும், மாநில முதலமைச்சராகவும் இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த இரண்டு அவைகளிலேயும் தீர்மானம் போட்டு நிறைவேற்றியதுபோல, மீண்டும் இந்தத் தீர்மானத்தை இந்த இரண்டு அவை களிலேயும் கொண்டுவர வேண்டும். அதிலே வாகை சூடிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதை ஆதரித்து, அமைகிறேன்.

THIRU J. M. MIAKHAN: Hon. Vice-Chairman, Sir, I thank you very much for giving me an opportunity to speak on this very important subject.

After Independence, we have been debating how our Indian politics should be run—whether on a unitary basis or on a federal basis. Many people have approached this subject from different angles. There have been very many viewpoints and many arguments have been advanced for and against those viewpoints.

Sir, there are certain advantages in a Government being unitary. Let me first say that. Then, I will come to the federal structure. For example, being a united country, our population is 70 crores. It is quite a huge population and, practically, it is one-third of the population of the world. If one-third of the population of the world is under one banner and under one control, it will give great strength. We are fighting amongst ourselves and we are dissipating our energy in in-fighting. We are not able to project our image to the foreign countries. As a matter of fact, in foreign forums, India

is being ridiculed because we are not able to assert ourselves. So, this fact should not be lost sight of. If we speak too much of federalism, it may break away India into small States. It is likely to go that way. Then, our one big heritage will be lost. The heritage which the British have left for us is to bring all

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

the heterogenous elements together. As a matter of fact, India is a sub-continent. To a certain extent, it has been brought under one rule. That has been an advantage.

THIRU G. SWAMINATHAN : I wish to get a clarification from the hon. Member. Pakistan had a unitary form of government. Then, Bangladesh separated itself from Pakistan. Even though the Pakistan Government was unitary, they wanted a federal set-up. May I know why this happened and how it may not happen to India ?

THIRU J. M. MIAKHAN : I will come to that. We should not forget the advantage of being unitary. That does not mean that the States should remain as glorified Municipalities and that they should not have any powers in their hands. It is definitely not so, Sir. What is being done today is very haphazard. More wealth and power lie concentrated with the Centre. It should not be so. There should be a proper sharing of powers between the States and the Centre. That should be done. On this issue, several Commissions had been set up in the past. Several wise men, politicians and others. have expressed their views on this matter. I do not know what new views are going to be expressed or what new discovery is going to be made by the Sarkaria Commission. In fact, tons of evidences have been recorded in this matter and various arguments have been advanced. The Government at the Centre can go through all those things. I do not know how a single person can tackle all these things. As another hon. Member suggested, the entire work cannot be done by such a Commission as this. They have brought this only as an eye-wash to fulfil the desires of one of the States. That has been the main purpose and it is a limited purpose. If they really want to do business, they must have a bigger, well-expanded Commission, consisting of very



important persons including politicians. As another hon. Member suggested, the Commission should also consist of people who have had the taste of power like present and past Chief Ministers of States, present and past Ministers of the Central Government, etc. Such people should be associated with this Commission so much so that they can really come to grips with the matter. But, what we find here is this. Those who want the government to be unitary speak for it; those who want federalism speak against the unitary form of government. But, what is really needed is not this. For example, what I say is that subjects like Currency, Defence, Foreign Policy, etc., should be with the Centre. Even the subject of River Waters should be with the Centre. Now, we are not able to come to an understanding about the sharing of Cauvery waters. There is more federalism and I do not know how we are going to manage these things. All the assets and wealth in various States should be considered as national wealth. Otherwise, tomorrow the people of Assam and Bombay may say that petroleum available there is the product of their States, that they are entitled to do what they like with it and that the rest of the country cannot have any claim over it. Mica available in Andhra, agricultural produce of Haryana and Punjab and paddy of Tamil Nadu will not then be available to others. What I say is that they are all national wealth, that they must be available for the country as a whole, and that they should be shared in an equitable manner. Every State has some things and it wants many other things from other States. All the products of the nation are national wealth and they must be available to all in the country and the sharing should be in a

(பிற்பகல் 12.40)

proper manner. Only if our country remains as a single entity, we would be able to project ourselves as a strong Nation. I do not want our country to take the attitude of a 'Big Brother' as is the case with the United States or Russia. There are about 150 independent countries in the world but India alone has one-tenth of the world's population. This strength should not be lost sight of.

[Thiru J. M. Miakhan] [1983 ஏப்ரல் 13

At the same time, there are certain things to be taken note of. At present, the States are being treated as Municipalities, even worse than Municipalities. The sharing of powers between the States and the Centre must be gone into. In the recent meeting of the Chief Ministers of the Southern States they have come to a broad agreement that the sharing of the taxes between the Centre and the States should be gone into, and I think a larger share, namely, 70 or 60 percent must be given to the States. We are not foreign countries and we are not going away. Only if the money is spent by the people concerned, we will be able to do much better and there will be much more benefit and much more efficiency. Therefore, it must not be at the whims and fancies of some people there. We are the representatives elected by the people and ultimately we have to run the whole show here. Therefore, it should not be so. Now Assam people are disgruntled, the people of Punjab are disgruntled. The people of Jammu and Kashmir are disgruntled. The people of the Southern States are disgruntled. Therefore, their real needs should be looked into. If there is no sufficient money, we should all work to increase the national wealth of the country. To get money we have to go with begging bowls to the Planning Commission. If we then have good relations with the Centre, we may get more or else, they may even victimise us. This should not be so. On this matter I agree that there should be federalism. There should be a fixed policy and as a matter of right, the taxes should be apportioned in a particular manner, and in the case of certain taxes, a large share must be given to the States, so that the States may do their work in a more efficient manner for the benefit of the people. The States also should not keep all the powers with them but should apportion some powers to the Municipalities, so that the people at the grass-root level may not be dismayed and disillusioned. The people should understand what is being done and they should know how the money is being spent and they must be allowed to have a say in them. We must devise a machinery to look into these affairs. Only then, the national wealth can be utilised fully. The working of the Planning Commission, the apportionment of income-tax and other taxes, etc., are all very irksome processes. As a matter of fact, as it



1983 ஏப்ரல் 13] [Thiru J. M. Miakhan]

is today, the Centre has got power over a large amount of wealth. The money-power is there so much so that it is likely—I do not say that they are misusing it—to be misused. If some dictatorial people come to power in the future, this power is likely to be misused. Of course, the Central Government have done a good thing in having the ASIAD, 82. But, there has been a lot of debate on how much was spent, where the money has come from, etc. The Centre has got ways and means of getting the money. Moreover, the Centre also receives foreign aid and foreign loans. As a matter of fact, the States are not aware of the actual amount that our country is getting as foreign loans and as foreign aid. Possibly, those who are giving aid may give a little more if they know that the amount that they give is utilised properly. So, the States also must have a say in the negotiations with foreign countries. I do not say that each State should independently negotiate with a foreign country. Then, everything will go helter-skelter and there will be no proper order. I only say that the States also must be associated in the matter of taking foreign aid and foreign loans. As a matter of fact, there seems to be a feeling on the part of the Central Government that they alone have got all the wisdom of the world and that those running the States are only second-rate people with mediocre brains. It is not so, Sir. In fact, people who run the States are of equal calibre in the matter of wisdom and intelligence. Their intelligence and expertise must definitely be utilised in all these negotiations for foreign loans, foreign aid, etc. These are very big sources of income for our country and, therefore, the procedure has to be properly regulated. Our Hon. Chief Minister has expressed his views on all these things very clearly. What does he feel about federalism? He says that he wants more powers for the States so that the affairs of the States may be conducted properly. I am one with him in this regard. There is no doubt about it. As a matter of fact, unless this is done, our country will be heading towards a disaster. If this fact is completely forgotten, then, what is now 20 States may even become 200 independent States. That will not be of advantage to the people. Therefore, we should be a little more careful in tackling all these

things. When we speak about these things, we should not try to antagonise people by mentioning things like North and South. It may sometimes create ill-feelings between the North and the South. Even if there are differences, we should try to bring them round. We are one nation and, therefore, we should try to mobilise the strength in such a way that the individual strength and the individual resources of each State are used for the welfare of the country as a whole. For that, a proper machinery should be set up. Several Commissions have given their views on this matter and several persons have given their thought to this aspect. All those views should be studied carefully. I think that the Sarkaria Commission which the Central Government have now appointed is not fully geared up to tackle this immense problem. It will remain on paper only, unless more people are associated with it and more powers are given to it. Moreover, there should be a time-bound programme for the Commission to do its work. What is the use if the Commission gives its recommendations after 10 or 15 years? Before that, several things may have happened. I do not know whether, by that time, the country will remain as one unit as it is today. Therefore, there should be a time-bound programme for the Commission. First, the Commission should study the papers relating to the work done in the studies undertaken in the past. Then, it should contact different people, including the Chief Ministers, Legislators, etc., of various States. Then, it should circulate the draft recommendations to different persons and elicit their views. All these things must be done in a short time. It can be done within two years. I think that each State can give its views within a time of six months. If we have a will to do it, we can do it. Then it should be implemented at a very early date. Then alone it would be beneficial. This Sarkaria Commission, as it is constituted, is of no use at all. It has to be enlarged; it has to be given more powers and it should be strengthened; and many more things have to be included in the scope of its enquiry. More people must be associated with this enquiry. We should take more interest in the affairs of the Commission and try to guide it properly. What I say is that we should not wrangle or quarrel amongst



ourselves. This would result in the breaking of the country. That should not be done. Although we cannot allow others to exploit us, the Centre has certain powers and they must have certain powers. Now we have currency notes and though it is only a paper, with that I can buy some things. What is the inherent value of the currency note? It is a bit of paper. It

(பிற்பகல் 12-50)

has got some value attached to it. By agreement, we all agree that if this paper currency is given, certain things of value will be given. The power to issue the currency may be with the Centre. When they want money, the Centre can print more notes. When they do it, they should keep a certain quantity of gold as reserve with the Reserve Bank. I do not know whether they are adhering to it. This also should be looked into. Power of issue of currency may be with the Centre but there must be some supervision. I do not know whether our Finance Minister or even the Chief Minister fully knows what is happening in Delhi, how much currency they are printing and how much currency is in circulation. The States should have a right to supervise and should have a control over the issue of currency.

Defence is in the hands of the Centre but without the States' help they cannot achieve it. If there is a threat to Kashmir, we consider it as a threat to Kanyakumari. If there is a threat near Bangladesh border, it is equally a threat to us. If we see the map of India, we see the portion near Bangladesh resembles the head of a cat. If we do not treat the people in those areas properly..........

*திரு. ப. மாணிக்கம் :* எந்த அரசியல் கட்சியும், யாரும், எந்தக் குழுவும் நாட்டினுடைய பாதுகாப்பை மாநில அரசுகளுக்கு வேண்டுமென்று கேட்கவில்லை. மத்திய அரசிடம் தான் நாட்டின் பாதுகாப்புத் துறை இருக்க வேண்டுமென்று எல்லோரும் இதுவரை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மாநில அரசுகள் நாட்டின் பாதுகாப்புத் துறையை, அதற்கான அதிகாரத்தைக் கேட்பதாக நினைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் இங்கே வாதாடுவது சரியல்ல.

THIRU J. M. MIAKHAN: Sir, I am not saying that we must have the 'Defence' of the country with us. If we visualise the situation as a whole, the defence of the country cannot be achieved without the help of the States. Integration is the strength of the country.

THIRU G. SWAMINATHAN: We wish to know whether the hon. Member is supporting the Resolution or opposing the Resolution. That is what we want to know.

THIRU J. M. MIAKHAN: There are certain things to be gone into. We should not blindly support or oppose anything. We have to go into them in detail.

THIRU G. SWAMINATHAN: I want to know what the hon. Member is doing—supporting or opposing the Resolution.

THIRU J. M. MIAKHAN: What I say is this. Many hon. Members say so many things but merely say in one word that they are supporting. They say that they are opposing, but in the course of their speech they say many things in favour of the Resolution. There is no clear-cut division among the Members as those in favour of federalism and as those in favour of unitary form. Several people like the late Thiru Annadurai have gone through this matter and have given their views. If we read all their views we will definitely find . . . .

*திரு. க. இராமமூர்த்தி : காங்கிரசைப் பற்றி, கம்யூனிஸ்டுகளைப் பற்றி எல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அவரவர்களுக்கு வாய்ப்பு வரும்போது, அவரவர்கள் தங்களுடைய் கருத்துக்களைச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மைனாரிட்டி கம்யூனிட்டியின் பிரதிநிதியாக இருக்கிறார். மைனாரிட்டி கம்யூனிட்டியினரின் பாதுகாப்பு (Protection) பற்றி அவர் என்ன நினைக்கிறார் என்பதுபற்றி கருத்து சொல்லவில்லை. அது மத்திய அரசிடத்தில் இருக்க வேண்டுமென்று சொல்கிறாரா? இப்போது இருக்கிற Protection போதும் என்று சொல்கிறாரா?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரே ஒரு விளக்கம். யூனிட்டரி சிஸ்டம் என்ற ஒன்று உண்டு. அடுத்து பெடரல் சிஸ்டம் என்ற இன்னொன்று உண்டு. இந்த இரண்டு சிஸ்டத்தில் எந்த சிஸ்டத்தை மாண்புமிகு உறுப்பினர் வற்புறுத்துகிறார் என்பது ஒன்று. இரண்டையும் கலந்து அதிலே கொஞ்சம், இதிலே கொஞ்சம் என்று கலப்பதை வற்புறுத்த வேண்டுமென்று கருதுகிறாரா? இல்லை, இப்போது இருக்கிற இந்திய அரசினுடைய அரசியல் சட்டம் அப்படியே இருக்க வேண்டுமென்று கருதுகிறாரா?

THIRU J. M. MIAKHAN: After talking about the unitary form of government and about the federal form of government, I am now going to say what, I think, should be done. Now, in our Constitution, we have the Union List, State List and the Concurrent List. The Concurrent List needs to be trimmed and very many subjects should go to the State List. Of course, there are one or two items like River Waters which, I feel, should remain with the Centre so much so that the wealth of the country may remain intact. For instance, the surplus waters of the river Brahmaputra can be brought to Tamil Nadu through various rivers and canals. Now, it is allowed to go waste into the sea. As a matter of fact, in regard to Education also, such an arrangement can exist. Of course, people should learn things in their own mother-tongue. But, when our people go aborad with Degrees in Engineering or Medicine given in India, the foreigners must know what subjects they had studied in India for acquiring those Degrees. The foreigners must also be able to judge the quantum of knowledge that our people had acquired in each subject, whatever be the language in which they had learnt those subjects. Therefore, in a unitary form of government, the Central Government must decide what is to be taught in different courses like the B.A. Degree Course, Engineering Drgree course, S.S.L.C. classes, etc. Of course, the imparting of education may be in the local languages and people can learn the subjects in their own mother-tongue. Now, if we take the example of Engineering education, there is one standard of education in Tamil Nadu and there is some other standard in some other State. If such independence is given in the matter of award of Degrees, it will be of no use, because those Degrees would not be valued abroad. If an Indian

[THIRU J.M. Miakhan] [1983 ஏப்ரல் 13

candidate with an Engineering Degree goes and appears before a prospective employer in a foreign country, that employer should only say, 'Oh, this is a Degree from India'. That employer may not know the language in which this candidate learnt Engineering. But, the employer will know the subjects that the candidate had learnt and he will have confidence in the candidate. In the same way, people will have confidence in an Indian doctor when he goes abroad, irrespective of the fact whether he learnt his subjects in Assamese, Tamil, Malayalam or Gujarathi.

THIRU A.R. DAMODARAN : Sir, I think that hon. Member owes a duty to the Members of this House. Speaking as the representative of the Muslim League, he should clearly define what he says. What he is now saying is that we should have an all-India University and that only Degrees given by one University should be recognised all over the world. In other words, he wants to remove all the State Universities and to have one Central University. We want clearly to understand what he says. These can be no vagueness about this. I can understand the hon. Member's position, because he represents the minority community. But, does he want Education to be in the Concurrent List or does he want it to be in the State List or in the Central List? We have to understand because a debate has been requested by the Hon. the Finance Minister and the hon. Member has, after twenty minutes, succeeded only in confusing us more.

THIRU J.M. MIAKHAN: Because the subject-matter is such.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ள வேண்டும்.

THIRU J. M. MIAKHAN : I do not think it will be poossible

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒரு மணிக்குள்ளே முடித்துக் கொள்ள வேண்டும்.

THIRU J.M. MIAKHAN : The hon. Members say that I have confused them and I have to clear the misunderstanding.



1983 ஏப்ரல் 13]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதற்கு அதிகமான நேரம் ஆகும். உறுப்பினர் இன்னும் ஒரு நிமிடத்திற்குள், அதாவது 1 மணிக்குள் முடிக்கவேண்டும்.

THIRU J. M. MIAKHAN: I require some more time. If I do not explain, people may say that I have said something which I have not said. Certain trends I am opposing and I support certain points in the Resolution. I request the hon. the Deputy Chairman to give me some more time.

THIRU G. SWAMINATHAN: Our difficulty is that if he speaks more, we may become more confused.

THIRU J. M. MIAKHAN : Thank you, Sir. So far as Education is concerned, we have got the University Grants Commission. There is the Planning Commission. The quantum of knowledge to be imparted in each faculty should be decided for the whole country. If there is such uniformity in the whole country, we may also easily know that the Engineering Graduate of Bombay or Assam will also be having the same amount of education and knowledge and we can entrust our job to him without difficulty. So far as fiscal matters are concerned, this should not be entirely in the hands of the Centre. In this I fully support federalism. It should be re-organised and, as a matter of fact, 70 per cent should come to the States.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளிப்பார்.

THIRU J. M. MIAKHAN : I may be given one minute more to conclude or I may be allowed to continue my speech in the evening.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் தன் உரையை முடித்தாகி விட்டது.

THIRU J. M. MIAKHAN : Would it mean that I have concluded my speech?

(பிற்பகல் 1-00)

### 6. 1974-75 ம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

1974-75 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. 1980-81 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1974-75 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளைச் சட்டப் பேரவை முன்வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக்குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே, 1974-75 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 6.28 கோடி ரூபாயாக இருக்கிறது. முக்கியமாக "மருத்துவம்", "பாசனம்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. மருந்துகள், மருந்துப் பொருள்கள், பார்னார்டு கதிரியக்கவியல் நிறுவனத்திலுள்ள கதிர் வீச்சு இயந்திரத்திற்கான சாதனங்களை, துணைப் பாகங்கள் ஆகியவற்றை வாங்குவதற்குத் தவிர்க்க முடியாத செலவு ஏற்பட்டது. வெளியூர்ப் பகுதிகளிலும் கல்லூரி இணைந்த மருத்துவமனைகளுக்கு அதிகச் செலவு மேற்கொள்ள வேண்டியதாயிற்று. எல்லா வகைக் கோரிக்கைகளின் கீழும் ஏற்பட்டுள்ள செலவுக்கு பெட்ரோல், டீசல் எண்ணெய், உயவெண்ணெய், டயர், டியூபுகள் விலையில் ஏற்பட்ட பெருத்த உயர்வு, அகவிலைப்படி, ஏனைய படிகள் கொடுத்தது ஆகியவை முக்கியமான காரணங்களாகும். பாசனத்தின் கீழ் பராமரிப்புச் செலவுகளில் ஏற்பட்ட அதிகச் செலவு, அணைக்



கட்டுச் சீரமைப்புப் பணிகள், வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், வேலை நிதி ஊதியம் பெறும் பணியாளருக்கும், இராமநாதபுரத்தைச் சேர்ந்த பாசனப் பணியாளருக்கும் தொகை கொடுத்தல், முந்தைய ஆண்டுகளில் செய்த தவறான வகைப்பாட்டுக்களைத் திருத்தியமைத்ததில் இறுதியாகச் செய்த சரிக்கட்டுதல்கள் காரணமாகவும் மிகைச் செலவு ஏற்பட்டது. ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப் பட்டுள்ளன.

3. 1974-75 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு தலைவர் :** மேலவையின் முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 1-03)

அவை மாலை 4.00 மணிக்கு மீண்டும் கூடியது. (மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை).

143183

### 5. தீர்மானம்.

**20—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென் மாநில முதல்வர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விவாதம் — தொடர்ச்சி**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, காலையில் பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பிறகும், இன்னும் 11 பேர் பேச இருக்கிறார்கள். உரிய நேரத்தில் முடிக்க வேண்டுமானால், ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களிலும், கட்சித் தலைவர்கள் 15 நிமிடங்களிலும் முடித்தால் தான் சரியாக இருக்கும். எனவே தயவுசெய்து நேரத்தைக் கட்டுப்பாட்டோடு கடைப்பிடிக்க வேண்டுகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் 15 நிமிடங்களுக்குள் என்னுடைய பேச்சை முடிக்க முயலுகிறேன். இருப்பினும் கூடுதலாக 5 நிமிடங்கள் ஆகிவிட்டாலும், மாண்புமிகு தலைவர் அவர்கள் பொருத்தருள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவையின் முன்னுள்ள தீர்மானம், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிறது. அதாவது "தென் மாநில முதல்வர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை இந்த மேலவை வரவேற்கிறது; ஆதரிக்கிறது. இந்த முடிவுகளை அமுல் நடத்துவதற்காக விடா முயற்சி செய்ய வேண்டும் என்று இம்மேலவை தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது" என்று தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதாவது தென் மாநில முதல்வர்கள் அமைப்பு—அப்படி ஓர் அமைப்பு ஏற்பட்டிருக்கிறது—எடுத்திருக்கக் கூடிய முடிவுகளைத் தமிழக அரசு விடா முயற்சியோடு அமுல் நடத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி ஆதரிக்கின்ற முறையிலும், இந்தப் பிரச்சினைகள் மீது என்னென்ன முயற்சிகளை இடைவிடாமல் மேற்கொள்ள வேண்டும் என்ற முறையிலும் நான் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்திய நாட்டில் 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் முதற்கொண்டு குடியரசுச் சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. எனவே, கடந்த 33 ஆண்டு அனுபவத்தில் இந்தச் சட்டம், மத்திய மாநில அரசுகளுக்குள்ள அதிகாரப் பிரச்சினைகளில் எப்படி செயல்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது என்பதை அனுபவத்தின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, நாட்டில் பல நெருக்கடிகள் ஏற்படுவதற்கு இது காரணமாக இருந்திருக்கிறது என்பதைத்தான் பார்க்கிறோம். இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பல நெருக்கடிகள்—நான் எல்லா நெருக்கடிகளையும் இங்கே குறிப்பிடவில்லை—அதாவது இந்தியாவில் பல மாநிலங்களில் உள்ள அரசுகள் செயல்படும்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகள், பல மாநிலங்களில் உள்ள மக்களிடையே ஏற்பட்டிருக்கிற கொந்தளிப்புகள், எழுச்சிகள் ஆகியவற்றின் ஊற்றுக் கனல் அல்லது ஆதார நிலை என்னவென்று பார்த்தால், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய பல்வேறு அதிகாரங்கள் அல்லது நிதியாதாரங்கள் அல்லது வசதிகள் மாநில அரசுகளிடம் இல்லாமல் இருப்பதும், அல்லது அவைகளுக்கு இருக்கிற இத்தகைய அதிகாரங்களும் நிதியாதாரங்களும் மிகக் குறைவாக இருப்பதும், மத்திய அரசிடம் அதிகமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதும்தான் என்பதை நாம் உணர முடியும். அதிகாரமற்ற நிலை காரணமாக பல நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் இங்கே பேசிய பல உறுப்பினர்கள் மாநிலங்கள் அதிகமான அதிகாரங்களைக் கேட்பதால், பல நெருக்கடிகள் தோன்றுகின்றன என்று குறிப்பிட்டார்கள். இதற்கு மையமாகச் சொல்லப்படுகிற கருத்து, இதன் காரணமாக தேசத்தின்



ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது, நேஷனல் இன்டகிரேஷனுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்ற அச்சத்தை அவர்கள் தெரிவித்தார்கள். அதோடு மைனாரிட்டிகளுக்கும் பாதுகாப்பு இனி இருக்குமோ என்ற அச்சத்தின் காரணமாகவும் பல்வேறு கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டன. இருப்பினும் இந்த அவையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினை தென்மாநில முதல்வர்களின் மாநாட்டு முடிவில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சினைகளைக் குறித்து இருப்பதால், அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கும், நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கும் இடையே இருக்கும் நெருக்கம் என்ன, அவற்றில் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமைகள் என்ன என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும்.

தென் மாநில முதல்வர்கள் கிளப்பிய பிரச்சினைகளில் முக்கியமானது அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 256 மற்றும் 257 ஆகும். பிரிவு 256 மாநில மத்திய அரசுகளின் கடமைகளைப் பற்றித் தெரிவிக்கிறது. 257-வது பிரிவு மத்திய அரசுக்கு மாநில அரசுகளின் மீதுள்ள பிடிப்பு அல்லது கண்ட்ரோல். அவர்கள் கிளப்பியுள்ள மூன்றாவது பிரச்சினை அரசியல் சட்டத்தில் உள்ள அனுபந்தம் 7-ல் உள்ள மூன்று அதிகாரப் பட்டியல்கள் குறித்ததாகும். அதாவது மாநில அரசுக்குள்ள அதிகாரங்கள், மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் இவை இரண்டும் இல்லாமல் இருக்கிற பொதுவான பட்டியல்—கன்கரண்ட் லிஸ்ட். தற்போது இந்த மூன்று பட்டியல்களையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதாகும்.

இவ்வாறு அவர்கள் கிளப்பியிருக்கிற பிரச்சினைகள் மிகவும் ஸ்தூலமானவைகளாகும். மக்களைத் திருப்தி செய்யும் வகையில் மாநில அரசுகளை நடத்த முடியவில்லை. மாநில அரசுகளுக்கு இருக்கிற நிதி வசதிகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவைகளை வைத்துக் கொண்டு மக்களுக்கு அதிகமான அளவுக்கு நன்மைகளைச் செய்ய முடியவில்லை. இந்த வகையில் கவனம் செலுத்தியிருப்பது வரவேற்கக் கூடியது மட்டுமல்ல, மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதில் குறிப்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தமிழக அரசியலைப் பொறுத்த வரையில், சமூக பொருளாதார இயக்கங்களில் பல்வேறு வாதங்கள் இருக்கக்கூடும். அதாவது தனியாட்சி என்கிற பிரிவினை. மாநில சுயாட்சி—அதாவது பிரிந்து போகக்கூடிய உரிமையோடு சுயாட்சி—அடுத்தது பிரிந்து போகிற தன்மையில்லாமல் இருக்கிற சுயாட்சி அல்லது தன்னாட்சி என்று இதற்கு விளக்கங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன;

[திரு. ப. மாணிக்கம்] [1983 ஏப்ரல் 13

ஆனால் கடந்த 33 ஆண்டு காலமாக நமது குடியரசுச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் அடிப்படையில் பார்த்தால் நமக்கு ஒரு அனுபவம் புலனாகிறது.

(பிற்பகல் 4-10)

அசாம் மாநிலத்தில் கிளர்ச்சி. பஞ்சாபில் அகாலிகளின் கிளர்ச்சி. இப்படிப் பல கிளர்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மக்களின் உரிமைக்காக மட்டுமல்லாமல், வேலை வாய்ப்புப் பிரச்சினைகள், மாநிலங்களில் உள்ள நிதி வசதிகள் மற்றும் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது போன்ற பிரச்சினைகள் கிளர்ச்சிகளுக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. 1955 ஆம் ஆண்டில் ரவி—பியாஸ் நதிகளின் நீரைப் பகிர்ந்து கொள்வது குறித்து பஞ்சாபில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. நதி சம்பந்தமாக உள்ள அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்பது அகாலி தள கோரிக்கைகளுள் முக்கியமான ஒன்று. அடுத்தது, பிரதேசம் என்று வரும்போது, பஞ்சாப் மொழி பேசக் கூடிய தொடர்ச்சியான பிரதேசம் வேண்டும் என்று கேட்கிறார்கள். வடக்கே உள்ள அரியானா, உத்திர பிரதேசம், பீகார், ராஜஸ்தான் ஆகிய எல்லா மாநிலங்களிலும் ஒரே இந்தியைப் பேசுகிறார்கள் **என்று** எல்லோரும் நினைக்கிறார்கள். அரியானாவில் பேசப்படுவது **வேறு** ஒரு இந்தி. ராஜஸ்தானிலும் அப்படித்தான். பீகாரில் மைதிலி என்ற மொழியையும் வேறு ஒரு மொழியையும் பேசுகிறார்கள். ரேடியோவில் சொல்லுவது சமஸ்கிருதம் கலந்த இந்தி மொழி. மக்கள் பேசும் மொழிக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ஆகவே பஞ்சாப் மொழி பேசும் மக்கள் இருக்கும் பகுதி அரியானாவில் இருக்கிறது. பசில்கா மற்றும் அமோகா ஆகிய பகுதிகளைத் தங்களுக்குத் தர வேண்டும் என்று கோருகிறார்கள். ராஜஸ்தானில் கொடுக்கபட்ட தண்ணீர் வசதி நிறுத்தப்பட்டிருக்கிறது என்று ராஜஸ்தான் கேட்கிறது. இந்த முறையில் தகராறுகள் உள்ள ஊனங்களைப் பார்த்தால், தண்ணீர் வசதி, பொருளாதார வளர்ச்சி உள்ள பிரதேசங்கள் தங்களோடு இணைந்திருக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். மாநில மக்களுடைய வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதற்கு, அந்த மாநிலங்கள் சரிவர நடைபெறுவதற்குரிய நிதி வசதிகளைத் தர வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தக் காரியங்களைச் செய்வதற்குத் தேவைப்படுவது அதிக அதிகாரங்கள். இவைகள்; கடந்த 33 ஆண்டு அனுபவத்திலே பார்க்கும் போது, பற்றாக்குறையாக இருக்கின்றன. அல்லது ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. அல்லது நடைமுறையில் அவைகள் திரித்து விடப்பட்டுள்ளன. குடியரசுச் சட்டத்திலே



1983 ஏப்ரல் 13] (திரு. ப. மாணிக்கம்)

கூட்டு அமைப்பு என்ற கொள்கை, கோட்பாடு, வகுக்கப்பட்ட போதிலும், நடைமுறையிலே கூடுதல் அதிகாரங்கள் மேலும் மேலும் மத்திய அரசுக்குச் சென்று விட்டன. ஒரு காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ரெசிடியுரி பவர்ஸ் பூராவும் மாநிலங்களுக்கு வேண்டும் என்று வாதாடியது. இந்தப் பிரச்சினையிலே கூட படிப்படியாக அரசின் சிந்தனைகள் அனுபவரீதியாக மாறி அபிவிருத்தி அடைந்து வருகின்றன. இந்த நிலைமையில் மாநில அரசுகளுக்கு உரிய அதிகாரம் தேவைப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். குடியரசுச் சட்டத்தின் பிரிவுகள் 256, 257, ஏழாவது ஷெட்யூலில் உள்ள அதிகாரப் பட்டியல் ஆகியவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும். பிரிவு 356-ல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநில ஆட்சியை நீக்குவதற்குள்ள அதிகாரம் ஜனாதிபதிக்குத் தரப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பிரச்சினைகள் மீது அதிக கவனம் செலுத்தி ஏற்ற முறையில் குடியரசுச் சட்டத்திலே மாறுதல்கள் செய்யப்பட வேண்டும். அதற்காக போராடும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். போராட்டம் என்பது பொதுவான வார்த்தை. ஆங்கிலத்திலே 'ஸ்டரகிள்' என்பார்கள். கல் எடுத்து அடித்தால்தான் போராட்டம் என்பதல்ல. கொள்கை ரீதியாக நின்று உறுதியாகச் செய்வது தான் போராட்டம். கல் எடுத்து அடிப்பது என்பது 'கான்சகுவன்ஷியல் ஆக்ஷன்'. துரதிருஷ்ட வசமாக அப்படியொரு வழக்கத்தின் காரணமாக தமிழ் வார்த்தைக்கு அப்படியொரு தகாத பொருள் தரப்பட்டிருக்கிறது. போராட வேண்டும் என்று நான் சொல்லும்போது, சந்தடியில் நடக்கக் கூடிய செயலைச் சொல்லவில்லை. குறிப்பிட்ட கொள்கைக்காக உறுதியாக நின்று, இலட்சிய முன்னேற்றத்தை அடைவதற்கு போராட்டம் என்ற அடிப்படையில் குறிப்பிடுகிறேன். அந்த முறையிலே மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவை என்று போராட வேண்டும். கூட்டமைப்பு என்று ஏற்றுக்கொண்ட கொள்கை இந்தியாவின் விடுதலைக்குப் பிறகு வகுக்கப்பட்ட கொள்கை. மத்திய அரசு 1947-க்குப் பிறகு தான் இந்தக் கோட்பாட்டை வகுத்தது. இன்றைக்கு இந்தியாவில் நெருக்கடிகள், பிரச்சினைகள் இருக்கலாம். வரலாறு பூர்வமாகப் பார்த்தால், பிரச்சினைக்குரிய பொருள்கள் நம்முடைய முன்னேற்றத்திற்காக, வளர்ச்சிக்காக வைக்கப்பட்டவைகள்தான். அவற்றை நிறைவேற்றும்போது வந்திருக்கக்கூடிய கோளாறுகளைத்தான் திருத்த வேண்டும். கூட்டமைப்பு என்றாலும் மத்திய அரசு தன்னிடம் அதிகாரத்தை வைத்துக்கொண்டு, மாநில அரசுகளுக்குள்ள வருவாயில், நான்கு பொருள்கள் மீது சேல்ஸ் டாக்ஸ் போட்டு, தங்கள் அதிகாரத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே மாநில அரசுகளுக்கு

இருந்த அதிகாரத்தில் மத்திய அரசு ஊடுருவல் செய்திருக்கிறது. தமிழில் கரம்புதல் என்று சொல்லுவார்கள். எலி கரம்புதல் என்று சொல்லுவார்கள். அதற்கு 'கெடுப்பது' என்று அர்த்தம். அந்த அளவிற்கு மத்திய அரசு கரம்புதல் செய்திருக்கிறது. இது கூட்டமைப்புக்கே ஆபத்து. ஆகவே மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே இருந்த இணைப்பு போய்விட்டது. அப்படிப்பட்ட தவறுகளை மத்திய அரசு செய்திருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவன் சொல்லவில்லை. வரலாற்றுப் புகழ்பெற்ற அறிஞர்கள், திரு. கே. ஏ. முன்ஷி, புரபசர் முஜீப் போன்றவர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். பள்ளியிலும், வீட்டிலும் நாடு சுதந்திரம் பெற்றது என்று சொல்லுகிறோம். வெளியே அரிசி கிடைக்க வில்லை, மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை, தண்ணீர் கிடைக்கவில்லை. இவை களிலே அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருக்கும் போது, அவற்றைச் செய்யாமலிருப்பதால், மக்கள் பல்வேறு நடவடிக்கை களில் ஈடுபடுகிறார்கள். அப்படி மக்கள் ஒன்றாகக் கூடுவதால், கூட்டமாக இருப்பதால், அவர்கள்தான் தவறு செய்வார்கள் என்பதல்ல. கூட்டமான மக்கள்தான் வரலாற்றை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள்தான் நாட்டைக் காப்பாற்றியிருக்கிறார்கள். மக்கள் நாட்டைக் காட்டிக் கொடுத்ததாக எங்கேயும் கிடையாது. அசாமில் கிளர்ச்சி நடக்கிறது என்றால், அதற்குக் காரணம் இருக்கிறது. அசாமில் எண்ணெய் வளப்பகுதி இந்தியா, சீனா, பர்மா ஆகிய நாடுகள் சந்திக்கின்ற இடத்திலே இருக்கிறது. அங்கே ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்கிறார்கள். அதை ஏற்படுத்தவில்லை. ஆகவேதான் போராட்டம் நடத்துகிறார்கள். இதிலே என்ன தப்பு? போராட்டம் நடத்தியதற்குப் பிறகு பெற முடிந்தது. அதுவும் சிறியது. பௌரணியில் பெரிய ஆலை இருக்கிறது. கங்கை நதிக் கரையில் இருக்கிறது. எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வேண்டும் என்ற நியாயமான காரணத்திற்காக அங்கே மக்கள் கிளர்ச்சி செய்கிறார்கள் என்றால், அதனால் இந்தியாவிற்கு என்ன ஆபத்து? அதனால் தவறுகள், சீர்குலைவுகள் இருக் கலாம். அங்கே கிளர்ச்சி வந்ததற்குரிய காரணம் என்ன? அசாமில் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் பலர் வந்ததன் காரணமாக தங்களுடைய எண்ணிக்கை குறைந்து பிற மாநில மக்களுடைய எண்ணிக்கை அதிகமாகும் போக்கு (டிரண்ட்) ஏற்பட்டது. அதிலே மொழி வேறாக இருக்கிறது. பிற மாநில வெறுப்பு இருக்கிறது. அந்த மக்கள் இயக்கத்திலே தவறான போக்கு கிடையாது. ஊடுருவலை அகற்ற வேண்டும் என்று கோருகிறார்கள். விடுதலை இயக்கத்திலே கூட இடையிலே ஒன்றிரண்டு தவறுகள் நடந்திருக்



கலாம். இதைச் சுட்டிக்காட்டுவதில் பிரயோஜனம் இல்லை. பெரும்பாலான மக்கள் அப்படி ஈடுபட்டார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அசாமில் கிளர்ச்சிகள் இருக்கலாம். இன்றைக்கு பல மாநிலங்களில் வளர்ச்சிக் கான காரியங்கள் நடக்காததால்தான், கிளர்ச்சிகள் நடக்கின்றன. இதனால் தேசத்தின் ஒற்றுமைக்குக் குந்தகம் வந்துவிடும் என்ற அச்சத்தால் தூரத்தப் தப்பட்டவர்கள் இந்த நாட்டின் குடியரசுச் சட்டம் திருத்தப்பட வேண்டும், அதிகாரப் பங்கீடு இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். பிரச்சினைக் குரிய வேர் எங்கே என்று சரிவர நிதானமாகப் பார்க்காமல், கிளர்ச்சிகளைக் கண்டு அஞ்சி நாட்டைத் துண்டாடுவதாகச் சொல்லுகிறார்கள். மாநில மக்களுடைய உணர்ச்சியைப் பயன்படுத்தி நாட்டைத் துண்டாடிட வேண்டும் என்ற போக்கு சில அரசியல்வாதிகளிடத்திலே இருக்கிறது. குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகளின் 'பால்கனைசேஷன்' என்ற இரகசியத் திட்டம் வந்திருக்கிறது. இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. நியாயமான பிரச்சினைகளுக்காக எழுகிற கிளர்ச்சிகளைத் தீர்ப்பதற்கான அணுகுமுறை சரியில்லை என்றால் நிச்சயமாக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சீர்குலைவாதிகள் முன்னேற முடியும். ஆனால் அந்த சீர்குலை வாதிகள் இதைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்ற காரணத்தைக்காட்டி ஒரு ஜனநாயக உரிமையைக் கொடுக்க மறுப்பதும் அந்த சீர்குலைவாதிகளுக் குப் பயன்படும் என்று சொன்னேன். எனவே சீர்குலைவாதிகளைத் தனிமைப் படுத்துவதற்கும், அந்நியச் சக்திகளின் ஊடுருவல்களைத் தனிமைப்படுத்து வதற்கும் இந்த நியாயமான முறைகள் வேண்டும். அந்த முறையில் மாநிலங் களுக்கு அதிகமான அதிகாரங்கள் என்பதும் நிதி வசதி என்பதும் இன்றைய வரலாற்றுப் பூர்வமாக இருக்கின்றவைகள். 33 ஆண்டுகளாக நம் நாட்டில் குடியரசுச் சட்டம் செயல்படுவதைப் பார்த்தால், இது தேவையானதாக இருக்கிறது. இதிலே தென்னக மாநில முதலமைச்சர்கள் இக்கோரிக் கையைத் திட்டவட்டமாகக் கிளப்பியிருக்கிறார்கள். அந்த முறையிலே இன்றைக்கு மத்திய அரசு போட்ட சர்க்காரியா கமிஷன் இருக்கின்றது. அதற்கு என்ன ரெபரன்ஸ் இருக்கின்றது என்பதில் ஒரு ஆபத்து இருக் கின்றது. எதை எதை விசாரிக்க வேண்டுமென்றும் என்ன 'டெர்ம்ஸ் அப் ரெபரன்ஸ்' என்றும் தெளிவாக இல்லை. இந்தக் கூட்டாட்சி அமைப்பு முறையைப் பார்க்கும்போது. ஜனாதிபதி ஆட்சி வந்தாலும் பரவாயில்லை என்றுகூட தோன்றுகிறது. இந்த மாதிரி கமிஷன், விசாரணைக் கமிஷன் மூலமாக it can be be taken reverse அந்தப் பக்கமும் கொண்டு போகலாம். அது மட்டுமல்ல. ஏனென்றால் அது மாநிலங்களுக்

குள்ள அதிகாரம். மத்திய அரசுக்கு உள்ள அதிகாரம் அல்ல. அதிகாரம் இன்னும் மத்திய அரசிடத்திலே இருப்பதற்குப் பதிலாக தனி நபர் அதிகாரத்தை அதிகப்படுத்துகின்ற போக்கு இருக்கின்றது. அது இந்திய ஒற்றுமைக்கு இனிமேல் ஆபத்தாக இருக்கும். இன்றைக்கு வரலாற்று பூர்வமாக அது தேவை இல்லை. அது சாத்தியம் இல்லை. சர்க்காரியா கமிஷனுக்கு 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் நிர்ணயிப்பதிலே மாநில அரசுகளும் அதுவும் குறிப்பாகச் சொன்னால் மாநில முதலமைச்சர்களும் கலந்துகொண்டு சர்க்காரியா கமிஷன் எதை எதை விசாரணையிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தி இருக்க வேண்டும். டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்ல் இரண்டு மாநில அரசுகள் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். சாட்சியம் கொடுப்பதற்கு அல்ல. டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்ல், இன்வால்வ்மென்ட், பார்ட்டிசிபேஷன் இருக்க வேண்டும். டெர்ம்ஸ் ஆப் ரெபரன்சில் அது ஒரு நபர் குழுவாக இருப்பதை மாற்றி அதை ஒரு முழுமையான குழுவாக அமைக்க வேண்டும். மாநில அரசின் கருத்துக்கள், மத்திய அரசின் கருத்துக்கள் வேறு பல கருத்துக்கள் தெரிவிக்கின்ற முறையிலே கூட பல்வேறு கருத்துக்கள் இடம் பெறக்கூடிய அளவிலே அந்தக் குழுவை விரிவுபடுத்த வேண்டும். எனவே நம்முடைய மாநில அரசு, அந்தக் கமிஷன் விரிவுபடுத்தப்படுவதற்கு ஆவன செய்ய வேண்டும். அந்த அளவுக்கு 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' விஷயத்தில் அரசு முனைந்து ஈடுபட வேண்டும். தொடர்ச்சியாக முயற்சி எடுக்கும்போது ஒரு இடத்திலே, ஒரு குறிப்பிட்ட தேதியிலே தென்னக முதல்வர்கள் கூடினார்கள். அடுத்த இடத்திலே முதல்வர்கள் திரும்பக் கூடினாலும், இந்தப் பிரச்சினை மீது விவாதிக்கலாம். நான் இந்த நேரத்தில் சொல்கிறேன். இன்னும் ஒரு ஐந்து நிமிடத்தில் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே முறையீடுகள் வரும்போது இந்த முறை யீட்டில் மாநில அரசு முறையான மகஜர்களை சர்க்காரியா கமிஷனுக்குக் கொடுக்கிறார்கள், விசாரணைக்குப் போகிறார்கள். இதற்கான முயற்சிகளை செய்யும்போது, அந்தத் தயாரிப்பிலே மக்களை ஈடுபடுத்துவது அவசியம். மக்களை ஈடுபடுத்துவதற்கு அரசியல் கட்சி என்ற முறையிலே 'என் இதைக்
மக்களை ஈடுபடுத்துவதற்கு அரசியல் கட்சி என்ற முறையிலே 'என் இதைக்
கொடுக்கிறோம்' என்ற அளவில் சில நேரங்களில் கருத்துக்களை வலியுறுத்துவதற்காக ஆவேச நிலைகளை மேற்கொள்ளலாம், பல வாதங்களை மேற்கொள்ளலாம். ஆனால் ஒன்றைப் பார்க்க வேண்டும். இந்தியாவினுடைய இணைப்பு, ஒற்றுமை இவைகளைப் பாதுகாப்பதற்கு கூட்டமைப்பு முறை தேவை. அதற்காக இன்றைக்குள்ள தேவை போதுமானது, சில சில்லரை



திருத்தங்கள் அங்கே இங்கே போட்டால், போதும். அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்காது போனால் மீண்டும் கிளர்ச்சிகள் வரும். அஸ்ஸாம், பஞ்சாப் அல்ல, இன்னும் பல இடங்களிலே வரும். பல ரூபங்களிலே வரும். அதனால்தான் இன்றைக்குள்ள நிலைமையிலே சின்ன சின்ன பதில்கள் சரியல்ல. அது வேறு ஒரு முறைக்குப் போய்விடும். இந்தியாவிற்கு மிகப் பெரிய ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது. சுற்றியுள்ள அந்நிய சக்திகள் கழுகுப் பார்வை பார்த்துக் கொண்டிருக்கின்றன. அது உண்மை. இந்தியாவைச் சுற்றி, இந்துமகா கடலில், இன்று அமைதியற்ற சூழ்நிலை இருக்கிறது. உலகத்திலேயே அமைதியான கடல் இந்து மகாக் கடல். 'தி மோஸ்ட் பீஸ்புல் ஓஷன்' இன்றைக்கு ஆபத்தான கடலாக மாறியிருக்கிறது. இந்தியாவிற்கு எல்லாப் பக்கங்களிலும் ஆபத்து வளர்வதற்கு ஏதுவாக நிலைமைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. அந்த நிலைமையிலே இதையும் நாம் கவனத்தில் கொண்டு இந்திய ஒற்றுமையைப் பாதுகாப்பதிலே அந்நிய சக்திகள் ஊடுருவல்கள் பற்றியும் பார்க்க வேண்டும். ஊடுருவக்கூடிய ஆபத்து நிறைய இருக்கிறது. இந்த ஆபத்துகளைத் தவிர்க்கின்ற அளவிலே நாம் அதிகாரத்தை ஓரிடத்திலே மேலும் குவித்து வைத்துக் கொள்வதால் இந்திய ஒற்றுமையைப் பாதுகாக்கலாம் என்று நினைத்தால், அது சிதறுவதாகத்தான் இருக்கும். அதுவே அதற்குக் காரணமாகிவிடும். எனவே அந்த நிலையில் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும். மத்திய அரசு குறைந்த பட்ச அதிகாரத்தில் இருந்தால் போதும். ஒரு 4, 5 அதிகாரங்கள், வெளிநாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, நாணயச் செலவாணி, போக்குவரத்து இவை இருந்தால் போதும். அதற்கு மேல் பல மாநில நதிகள் சம்பந்தமாக உள்ள நதி நீர் பிரச்சினை, திட்டமிடும் பொருளாதாரம் ஆகிய பிரச்சினைகள். இயற்கை வளங்கள் இப்படி இந்தப் பட்டியலிலே உள்ளதை எல்லாம் மறுபரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. குறைந்த அதிகாரம் என்று சொல்வது ஒரு சம்பிரதாயத்திற்கு நாமினல் சென்ட்ரல் கவர்ன்மென்ட் என்று சொல்வது போதும். இந்தியா சேர்வதற்கு அது போதும். இரண்டு மாநிலங்களில் வேண்டுமென்றாலும், மூன்று வேண்டுமென்றாலும் இந்தியா சிதறும். கூட்டமைப்பு என்ற முறையிலே மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்களைக் கொடுத்து, நிதி வசதிகள் கொடுப்பது, நாட்டின் பாதுகாப்பு, நாணயம், விளையாட்டுக் கொள்கை மற்றும் இயற்கை வளங்கள் நவீன வசதிகள் இவைகளையெல்லாம் காப்பாற்றுவதற்கு உரிய அதிகாரங்களை, அவசியமான தேவையான அதிகாரங்களை மத்திய அரசின் கையிலே வைத்திருக்கும் அளவிலே

[திரு. ப. மாணிக்கம்] [1983 ஏப்ரல் 13

நம்முடைய குடியரசுச் சட்டத்திலே மாறுதல் செய்ய வேண்டும். கூட்டாட்சிக் கட்டுக்கோப்புக்குள்ளே அதிகாரம் தேவை. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆட்சியில், இஷ்டம்போல செய்யக்கூடாது. குறைகள் வருவதற்கான முறையிலே போகக்கூடாது. சட்டம்-ஒழுங்கு நிதிப் பிரச்சினை இவைகளில் எல்லாம் சீர்குலைவு ஏற்படக்கூடாது. அப்படி ஏற்பட்டால் பார்த்துக் கொள்ள வேண்டியது மாநிலங்களிலே உள்ள சட்டமன்றங்கள். மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்றால், அது ரொம்ப எல்லையற்ற பிரச்சினையாகிவிடும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : ஏற்கெனவே 10 நிமிடங்களுக்கு மேலாகி விட்டது.

**திரு. ப. மாணிக்கம்** : நான் சீக்கிரமாகவே முடித்துக்கொள்கிறேன். அதிகாரம் என்ற பிரச்சினையில் கூட்டமைப்புக்குள் இருக்கின்ற மாநிலங்கள் இன்னும் கூடுதல் அதிகாரம் பெறுவதற்கும், அதிகாரப் பட்டியலை மறு பரிசீலனை செய்து அதிக நிதிவசதி மாநில அரசுக்குக் கிடைப்பதற்கும் நம்முடைய குடியரசுச் சட்டத்திலே தகுந்த திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியது அவசியம். அதற்கு இந்த மத்திய அரசு நியமித்திருக்கக்கூடிய சர்க்காரியா கமிஷன் விரிவுபடுத்துவதற்கும், அதிலே டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் என்ன என்பதைத் தெளிவுபடுத்துவதற்கும் மாநில அரசுகள் முயற்சியில் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபட்டு அதை ஒழுங்குபடுத்தி உதவிகரமாக இருக்க மாநில அரசு முன்வர வேண்டும் என்று இந்த அவையின் மூலமாக வலியுறுத்திக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : ஆசிரியர்கள் தொகுதி பிரதிநிதியாக இருப்பதால், சுருக்கமாகவே பேசி முடித்துக்கொள்ள வேண்டும். அரசியல் கட்சிக்காரர்களுக்கு அதிக நேரம் கொடுத்திருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திரு. நல்லசிவன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சில மாதங்களுக்கு முன்பாக தமிழ் நாட்டிலேயிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு இந்தியா வின் வட மாநிலங்களுக்குச் சென்றபோது, நானும் கலந்துகொண்டு சில மாநிலங்களுக்குச் சென்றேன். குறிப்பாக பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்றபோது, அங்கே இருந்த தமிழர்கள் எல்லாம் ஒன்று திரண்டு வந்து, அவர்கள் ஒரு சங்கம் அமைத்து, அந்தச் சங்கத்தின் சார்பாக சில பிரச்



1983 ஏப்ரல் 13] (திரு சி. ரா. லெட்சுமிகாந்தன்)

சினைகள் வந்து, இங்கேயிருந்து சென்ற சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அதிலே பல்வேறு தரப்பினர்கள், அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், பல குடும்பத் தவர்கள் இருந்தார்கள். அப்போது அவர்கள் சொல்லிய சில கருத்துக்கள் வியப்பை மட்டும் அல்ல, அச்சத்தை மட்டுமல்ல, அதிர்ச்சியையும் ஏற்படுத் தின. இந்திய நாட்டைப் பொறுத்தவரையில், 'வேற்றுமையில் ஒற்றுமை', (Unity in Diversity) என்ற தத்துவத்தின் அடிப் படையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற ஒருமைப்பாட்டு உணர்வு எந்த அளவுக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. பிற மாநிலங்களுக்குச் செல்லும்போது தான் அந்த வாய்ப்பு கிடைக்கும் என்பதை நான் கண்டறிந்தேன். அப்போது அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "காவிரிப் பிரச்சினை உங்களுக்கு மட்டும் தான் என்று நினைக்காதீர்கள். ஏதோ ஒரு மாநிலம் தன்னுடைய உபரி தண்ணீரை அண்டை மாநிலத்திற்குக் கொடுக்க மறுக் கிறது என்று நினைத்துவிடாதீர்கள். இங்கே இருக்கின்ற பக்ரா நங்கல் பிரச்சினை என்ன? உபரியாக இருக்கின்ற தண்ணீரை, ஏராளமாக இருக்கின்ற தண்ணீரை ஹரியானாவிற்கும், வறண்டுபோன மாநிலமாகக் கருதப்படுகின்ற ராஜஸ்தான் மாநிலத்திற்கும், பஞ்சாப் தர மறுக்கிறது. அது மட்டுமல்ல, நாம் பாகிஸ்தானுக்குக் கொடுத்தாலும் கொடுப்போம், அது கடலில் போய் விழுந்தாலும் விழட்டும், ஆனால் அண்டை மாநிலங்களுக்குத் தரமாட்டோம் என்று சொல்கிறார்கள்." இப்படி பஞ்சாப் மாநிலம் சொல்கிறது என்ற கருத்தைச் சொன்னபோது, நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம். நாம் இந்தியாவில்தான் வாழ்கிறோமா அல்லது தனித்

(பிற்பகல் 4-30)

தனித் தீவுகளில் வாழ்கிறோமா என்ற ஐயப்பாடு ஏற்பட்டது. அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த மாநிலங்களில் ஒரே கட்சி ஆட்சி செய்கிறது. அந்த மாநிலங்களில்கூட, ஒரு பிரச்சினையை, மிகவும் இன்றியமையாத பிரச் சினையைத் தீர்ப்பதற்கு வழி கண்டறியாத சூழ்நிலை நிலவுவதைத் தெரிந்து கொண்டபோது உள்ளபடியே அதிர்ச்சி அடைந்தோம். தேசிய ஒருமைப் பாட்டு நிலைமை எப்படி இருக்கிறது என்பது என்னுடைய சிந்தனையைக் கிளர்ந்து எழச் செய்தது. பஞ்சாபில் அமிர்தசரசில் புனிதம் வாய்ந்த சீக்கியர்களின் பொற் கோவிலைக் காண வேண்டுமென்று ஆசைப்பட்டோம். அந்தக் கோவிலைப் பார்க்கப் புறப்பட்டபோது, வருவாய்த் துறை அதிகாரி எங்களைத் தடுத்தார். "நீங்கள் அங்கே செல்லக்கூடாது, டென்ஷன்

நிலவுகிறது, பதட்ட நிலைமை இருக்கிறது, நேற்று பைரிங், அதற்கு முன்தினம் பைரிங், மிகவும் பதட்ட நிலை இருப்பதால் நீங்கள் பக்கத்திலே சென்றுகூட பார்க்க முடியாது" என்று சொன்னார். தொலைவிலிருந்து பார்க்கிறோம் என்று கேட்டபோது, "இல்லை, இல்லை, தொலைவிலிருந்துகூட பார்க்க முடியாது, சுற்றுப்புறத்தில் எல்லா இடங்களிலும் பதட்ட நிலைமை இருக்கிறது, நீங்கள் பார்க்க முடியாது, அங்கே நடமாட்டத்தைத் தடை செய்துவிட்டோம்" என்று அதிகாரிகள் சொன்னார்கள். அந்த நிகழ்ச்சி எங்கள் உள்ளத்தை வெகுவாகப் பாதித்தது. புனிதம் வாய்ந்த கோவிலைக் கூட பார்க்க முடியாத அளவுக்கு பதட்ட நிலைமை அங்கே நிலவுகிறது. சுற்றுலா செல்கிறவர்கள்கூட அந்தக் கோவிலைப் பார்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்ததாகக் கேள்விப்பட்டதில்லை. இப்படிப்பட்ட சில சம்பவங்களை, வட மாநிலங்களுக்குச் சென்றபோது, கேட்டபோது, இந்தியாவில் உண்மையாக தேசிய ஒருமைப்பாடு நிலவுமானால், இங்கே வாழும் மக்களிடையே உண்மையான ஒற்றுமை உணர்ச்சி நிலவுமானால், இப்படி பதட்ட நிலைமை நிலவ வழியே இல்லை. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுடன் நம்முடைய தமிழகத்தினுடைய சூழ்நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தேசிய ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும் நாம் ஆற்றும் பங்கு என்ன, நம் பண்பாடு என்ன, அந்த உணர்ச்சியின் காரணமாக தேசிய ஒருமைப்பாட்டை எந்த அளவுக்குப் போற்றி, பேணி வருகிறோம் என்பதை நினைக்கும்போது, உள்ளபடியே நாம் பெருமைப்பட வேண்டும். நம்முடைய மாண்புமிகு மேலவைத் தலைவரவர்கள், 'வள்ளலார் கண்ட தேசிய ஒருமைப்பாடு' என்ற புத்தகம் எழுதியிருக்கிறார்கள். பரிசு பெற்ற நூல் அது. 'வள்ளலார் கண்ட தேசிய ஒருமைப்பாடு' என்று எழுதி, அந்த வள்ளலார் கண்ட தேசிய ஒருமைப்பாட்டை நாட்டு மக்களுடைய பயனுக்கு அந்தக் கருத்துக்களைப் பரப்பியவர் மேலவைத் தலைவர். அத்தோடு இந்த மாநில மக்களின் உரிமைகளுக்காகப் பல தியாகங்களைச் செய்தவர் அவர். மாநில மக்களின் உரிமைகளுக்காகப் போராடியதால், தேசிய ஒருமைப்பாட்டில் உணர்ச்சி .00 அளவுக்குக் குறைந்தது என்று சொல்லிவிட முடியுமா? முடியாது.

பண்டைய தமிழர் கலாச்சாரத்தை எடுத்துப் பார்க்கும் போது, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கணியன் பூங்குன்றனார் பாடிச் சென்றது, தேசிய ஒருமைப்பாட்டுக்காக அல்ல, சர்வ தேச ஒருமைப்பாட்டுக்காகப் பாடிச் சென்றார். அந்தப் பரம்பரையில் வந்தவர்கள் என்ற முறையில் 'யாதும்



ஊரே யாவரும் கேளிர்' என்ற தத்துவத்தை நாம் பேசுவது மட்டுமல்ல, அந்தத் தத்துவத்தை உள்ளத்தில் வளர்த்துக் கொண்டிருப்பதால், இன்று குறுகிய உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமல் இருக்கிறோமென்பதை உணர வேண்டும். அந்த வகையில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அது தெரிகிறது. ஒரு பத்திரிக்கைச் செய்தியைப் படிக்கும்போது, ஒரு விவரம் அறிந்தேன். நான் தேசியத்தில் நம்பிக்கை கொண்டவன். பெருந்தலைவர் காமராஜ் அவர்களிடம் சிலபல ஆண்டுகள் பழகும் வாய்ப்பு கிட்டியது என்பதால், தேசிய ஒருமைப்பாட்டை என்னுடைய உள்ளத்திலே பதித்துக் கொண்டவன் என்ற முறையில் சொல்கிறேன். பத்திரிகையில் ஒரு செய்தி வருகிறது. மதிப்பிற்குரிய பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வருகிறார்கள். நிருபர்கள் கேட்கிறார்கள். "சில ஆண்டுகளுக்கு முன்னதாக கிருஷ்ணா நதி நீர் பற்றி உறுதிமொழி அளித்தீர்களே, அது என்னவாயிற்று?" என்று கேட்டார்கள். அதற்கு மரியாதைக்குரிய பிரதமர் அவர்கள், 'அந்த மாநிலத்தைப் போய்க் கேட்க வேண்டும், இது இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சினை' என்று சொல்லியதாகப் படித்தேன். மரியாதைக்குரிய பிரதமர் அவர்கள் அப்படித்தான் சொன்னார்களா? பத்திரிகையில் திரித்துப் போட்டார்களா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைக் கேட்க வேண்டும். உறுதிப்படலாம். அவர் மறுத்தால் விட்டுவிடலாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, பிரதமர் சொன்னது இரண்டுமே உண்மை. வாக்குறுதி அளித்த காலத்தில் அங்கே, ஆந்திராவில் காங்கிரஸ் கட்சி ஆட்சி இருந்தது. அந்த மாநில ஆட்சியிடம் சொல்லி, இதை ஒப்புக்கொள்ளச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு வாக்குறுதி அளித்தார்கள். அந்த நம்பிக்கை நிறைவேறும் வகையிலே ஆந்திராவும், மகாராஷ்டிராமும் அவர்கள் கேட்ட அளவுக்குத் தண்ணீர் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். அதற்குப் பிறகு மத்திய ஆட்சியில் இருக்கும் அதிகாரத்தின் அடிப்படையில் அல்ல, மாநிலங்களுக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையிலே செய்ய வேண்டிய ஒன்று என்ற சூழ்நிலைகள் வந்த பிறகு, அவர்கள். தலையிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதிகாரங்கள் எப்படி இருக்க வேண்டுமென்ற சிந்தனையைத் தூண்ட இதுவும் காரணமாக அமைந்திருக்கிறது.

[1983 ஏப்ரல் 13

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய கருத்துக்களுக்கு நன்றி. இந்தியப் பிரதமர் என்றால், இந்த நாட்டிலுள்ள அத்தனை மாநிலங்களுக்கும், இந்தியாவில் உள்ள 70 கோடி மக்களுக்கும் பிரதமர் அன்னை இந்திரா காந்திதான் என்ற உறுதியான எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆந்திராவில் வேறொரு கட்சி ஆட்சி செய்கிறது என்றாலும், அந்த மாநிலத்திற்கும் பிரதமர் அன்னை இந்திரா காந்திதான் என்ற அடிப்படையில் அந்த மாநில முதல்வரிடம் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டாம், அன்பான வகையில் வேண்டுகோள் விடுத்து, பக்கத்திலுள்ள தமிழ் நாட்டுக்கு உதவி செய்யச் சொல்லலாம். "நான் வாக்குறுதி அளித்திருக்கிறேன் பிரதமர் என்ற முறையில், தனிப்பட்ட முறையில் அல்ல, வாக்குறுதியைச் செயல்படுத்த நல்ல சூழ்நிலை இப்போது இருக்கிறது, அதை விரைவாகச் செயல்படுத்துங்கள் என்று கேட்பேன்" என்று பிரதமர் அவர்கள் சொல்லியிருந்தால், என்னைப் போன்றவர்களுக்கு நீங்காத மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். ஆனால் அதற்கு மாறான செய்திகளைப் படிக்கும்போது, வேதனை ஏற்படுகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 1962-ல் இந்திய-சீனப் போர் நடந்த போது, அறிஞர் அண்ணா என்ன சொன்னார்கள், என்ன செய்தார்கள் என்பது தெரியும். அரசியல் பிரச்சினையைத் தள்ளி வைத்து, மற்ற கருத்துக்களைத் தள்ளி வைத்து, தேசத்தைக் காப்பாற்றுவதுதான் நம்முடைய முதல் கடமை என்று பிரச்சாரம் செய்ததோடு கோடிக் கணக்கான ரூபாயை தேசிய பாதுகாப்பு நிதிக்கு வாங்கிக் கொடுத்த காட்சியை தமிழகம் பார்த்திருக்கிறது. நம்மைப் பொறுத்த அளவில், தெளிவாக இருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. நமக்கு தேசியம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள மற்றவர்கள் மறுக்கிறார்கள். அதுதான் ஏற்பட்டுள்ள பிரச்சினை. இந்தி ஆதிக்கம் வேண்டாம் என்பதால், நாம் தேசியத்தை மறுக்கிறோம் என்று பொருளல்ல. மத்திய அரசு சில உரிமைகளைத் தர மறுக்கிறது என்றால், தேசியத்தை ஏற்க மறுக்கிறோம் என்பதல்ல. உரிமைகளுக்காகப் போராடுவது என்பது வேறு, அதே சமயத்தில் தேசியத்தைக் காப்பாற்றுவது என்பது வேறு. இதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தால், பெங்களூர் மாநாட்டைப் பற்றி ஒரு கருத்து வேறுபாடு வந்திருக்கிறது. 4 மாநில முதல்வர்கள் ஒன்று சேர்ந்து, சாதாரணமாகக் கூடி சில அடிப்படை விஷயங்களை மட்டும்தான் பேசியிருக்கிறார்கள். எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழக முதல்வராக இருந்தார்கள். அப்போது திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் ஆந்திர மாநில முதல்வராக இருந்தார்கள்.





இவர்கள் இருவரும் அடிக்கடி திருப்பதியில் சந்தித்துப் பேசுவது வழக்கம். ரகசியமாக அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தவில்லை. பகிரங்கமாகச் சந்தித்துப் பேசுவது வழக்கம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். திருப்பதியில் அவர்கள் பேசியிருக்கலாம். சந்தித்திருக்கலாம். அடிக்கடி இல்லை. அது சரித்திரத்தை மாற்றிவிடும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதில் என்ன தவறு? தலைவராக இருக்கிறவர்கள் அடிக்கடி சந்தித்துப் பேசுகிறார்கள் என்றால், நாட்டிலே அக்கறை உள்ளவர்கள் என்றுதான் ஆகும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, அடிக்கடி திருப்பதியில் சந்தித்துப் பேசுகிறார்கள் என்றால் வேறு ஏதோ காரணம் என்று படுகிறது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கவுரவமாகத்தான் சொல்லியிருக்கிறார்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அப்படி அவர்கள் பேசியபோதுகூட, மாநில உரிமைகள் பற்றியோ, தேசிய நலன்கள் பற்றியோதான் பேசியிருக்

(பிற்பகல் 4-40)

கிறார்கள். அதை அப்போதிருந்த நம்முடைய மரியாதைக்குரிய பிரதமர் அவர்கள் தவறாக எடுத்துக்கொண்டது கிடையாது. காரணம் இரண்டு மாநிலங்களும் பக்கத்து மாநிலங்கள். இரண்டு மாநில முதல்வர்களும் சேர்ந்து நல்ல காரியங்களைப்பற்றி, இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவான காரியங்களைப்பற்றிக் கலந்து பேசியிருக்கலாம். அப்படிப் பேசுவதில் தவறொன்றுமில்லை. அந்த அடிப்படையில் தான் இப்போது நடைபெற்றிருக்கக்கூடிய தென் மாநில முதல்வர்கள் மாநாட்டையும் கருதலாம். அப்படிக் கருதினால், பிரச்சினைகளே எழாது. இந்த மாநாட்டோடு மாநாடுகள் கூடுவது நின்றுபோய்விடக் கூடாது. இப்படி மாநாடு கூடுவது, முதல்வர்கள் கூடிப் பேசுவது எல்லாம் தேசத் துரோகச் செயல், சதிச் செயல், இந்திய ஒற்றுமைக்கு பங்கமானது, தேசிய ஒற்றுமையைக் குலைக்க ஒன்று கூடுகிறார்கள் என்றெல்லாம் யாரோ சொன்னார்கள் என்பதற்காக இனிமேல் இவ்வாறு கூடக் கூடாது என்கிற ஒரு முடிவுக்கு இந்த மாநில முதல்வர்கள் தயவு செய்து வந்துவிடக் கூடாது. இப்படி மாநில முதல்வர்கள் அடிக்கடி கூடிப் பேசவேண்டும் என்பதுதான் நம்முடைய மாநில மக்களுடைய விருப்பமும். நம்முடைய உரிமையைப் பெறுவதிலே நாம் பின்தங்கக் கூடாது என்பதுதான்

(திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) [1983 ஏப்ரல் 13

தம்முடைய மாநில மக்களுடைய உணர்வும். கூடுவதோடு மட்டுமல்லாமல், மாநிலங்களுக்கிடையேயான பல்வேறு பொதுப் பிரச்சினைகள் குறித்துப் பேச வேண்டும். அடிக்கடி கூட வேண்டும். மாநிலங்களுக்கிடையேயான பொதுப் பிரச்சினைகளை மாநில அரசுகளே தங்களுக்குள் பேசி நல்ல முறையில் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதன் வாயிலாக மத்திய அரசுக்கு இருக்கிற வேலைப் பளுவை பல வகைகளிலே குறைக்க வேண்டும். இந்தியாவினுடைய தேசிய ஒருமைப்பாடு உள்ளபடியே வளர மாநிலங்களினுடைய கடமை என்ன, பங்கு என்ன என்பதுபற்றியும் அடிக்கடி கூடி விவாதிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு கன்வென்ஷன் என்று சொல்லப்படுகிற கூட்டங்கள் அடிக்கடி நடைபெற வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையைப் பற்றி நாம் எல்லாம் படித்திருக்கிறோம். அதன் முக்கியமான பணி உலக அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகளைப் பேணுவதாகும். ஐ.நா.சபைக் கூட்டம் நடைபெறுவது ஒருபுறமிருக்க, அதில் அங்கத்தினர்களாக இருக்கிற நாட்டுத் தலைவர்கள் கூட அடிக்கடி தனித் தனியாகச் சந்தித்து ஏதாவது நாடுகளிலே பிரச்சினை வந்தால், அதை உடனடியாகத் தீர்க்க, ஐ.நா.வைக் கலக்காமலேயே நல்ல முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். அப்படி அவர்கள் செய்வது ஐ.நா. தத்துவத்திற்கு எதிரான செயல் என்று சொல்லிவிட முடியாது. அப்படி ஐ. நா. சபையும் சொன்னது கிடையாது. அதேபோல நடுநிலை நாடுகளைப் பொறுத்தவரையில், கூட்டு சேரா இயக்கத்தைப் பொறுத்தவரையில், அவர்களும் உலக அமைதிக்காகத்தான் பாடுபடுகிறார்கள். ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் இப்படி நடுநிலை நாடுகள் என்கிற ஒரு அமைப்பை வைத்து கூடுவதாலேயே, ஐ.நா. இயக்கத்திற்கு விரோதமானவர்கள் இவர்கள் என்று யாரும் சொல்வதில்லையே. அப்படி அதற்கு விரோதமானவர்கள் என்று ஆகிவிடவும் முடியாது. ஆக, எல்லோரும் உலக சமாதானம் குறித்துத்தான் பேசுகிறார்கள். எல்லோரும் பல நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற போட்டிகளை, மோதல்களைப் பற்றியும், அவற்றை எப்படித் தவிர்ப்பது என்பது பற்றியும் தான் சிந்திக்கிறார்கள். உலக வல்லரசுகள் ஆயுதங்களைக் குவிப்பதால், உலக சமாதானத்திற்கு பாதகம் என்று தான் எல்லோரும் கருத்து தெரிவிக்கிறார்கள். அப்படி அவர்கள் செயல்படுவதாலேயே அவர்கள் ஐ.நா. தத்துவத்திற்கு எதிராகச் செயல்படுகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஒரே நோக்கத்தை அடைய எல்லோரும் இணைந்து செயல்படுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதேபோலத் தான் மாநில முதல்வர்கள் அடிக்கடி சந்தித்து, கூடுவது, முடிவு எடுப்பது போன்றவை **எல்லாம் எந்தவிதத்திலும்** தேசியத்திற்கு விரோதமானவையல்ல.



1983 ஏப்ரல் 13] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூறியதுபோல், செப்புமொழி 18 உடையாள் என்று இருந்தாலும் சிந்தை ஒன்று உடையாள் என்பதற்கிணங்க—அதே அடிப்படை தான் இதிலும் இருக்கிறது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகக் கூறுவேன். அப்படிப்பட்ட தேசிய ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டுக்காகவும் தான் திராவிட நாடு கொள்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குக் கைவிட்டார்கள்.

தேசிய உணர்வு என்பது உள்ளபடியே தமிழர்களுடைய உள்ளத்தோடு, உணர்வோடு ஊறிவிட்ட ஒன்று. அதைப் பார்த்து எந்தவிதத்திலும் சந்தேகப்படக் கூடாது. இன்னும் சொல்லப்போனால் தமிழனுடைய உணர்விலே ஊறியிருக்கும் தேசிய உணர்வை இந்தியாவினுடைய பிற மாநிலங்களிலே இருக்கிறவர்கள்—வட மாநிலங்களிலே இருக்கிறவர்கள், இன்னும் அவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சி ஆட்சியிலே இருக்கிற மாநிலங்களாக இருந்தாலும் சரி—பெற்று அதன் மூலம் இன்னும் தேசிய உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். சந்தேகத்தோடு பார்த்தால், அது தான் தேசியத்திற்கு ஊறு விளைவிக்கும். பொது லட்சியத்தோடு மாநில முதல்வர்கள் கூடுவதை சந்தேகக் கண்ணோடு பார்க்கக் கூடாது. அபபடி சந்தேகத்தோடு பார்த்தால், அது பல விளைவுகளை உருவாக்கும். நல்லது செய்வதற்குப் பதிலாக கெடுதலை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை அது உருவாக்கும். இப்படிப்பட்ட பல மாநாடுகள் அடிக்கடி கூட்டப்பட வேண்டும். இப்படி தென் மாநில முதல்வர்கள் பெங்களூரில் கூடியதையொட்டி, அதைத் தொடர்ந்து உடனடியாக சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது. இன்றைக்குக் கூட ஒரு நல்ல அறிவிப்பு பத்திரிகையிலே வந்திருக்கிறது. மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் சர்க்காரியா கமிஷன்பற்றி பாராளுமன்றத்தில் 15 நிமிடங்கள் நடைபெற்ற விவாதத்தின்போது, நல்ல கருத்துக்களை மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். மாநில மத்திய உறவு குறித்து பரிசீலிக்கப்படுவதற்கு மாநில அரசுகள் அரசியல் சாசனத் திருத்தம் உட்பட எந்தக் கருத்தையும் தெரிவிக்கலாமென்று சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசுகள் எந்தத் தகவலையும் தர தடை ஒன்றுமில்லை. இதைத் தெரிவித்திருப்பவர் மத்திய உள்துறை அமைச்சர். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். இது மாநாடு நடத்தப்பட்டதனுடைய விளைவு. மாநில முதல்வர்கள் மாநாடு நடைபெற்றதன் வாயிலாக, அவர்களுடைய உள்ளத்திலே இருக்கக்கூடிய உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதிகாரம் அதிகம் வேண்டும் என்று கேட்டதற்கேற்ப பலன் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல், மத்திய மாநில அரசுகளுக்கு

இடையேயுள்ள செயல்முறைகளைப்பற்றியும் சர்க்காரியா கமிஷன் பரிசீலிக்கும் எனறும், அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற அதிகார மாற்றங்கள் குறித்து சிபாரிசு செய்யும் எனறும் கூறியிருக்கிறார்கள். இரண்டு மாதத்திற்கு முன்பு இருந்த நிலை என்ன என்பதையும், இந்தக் கூட்டம் 20—3—1983 அனறு கூட்டப்பட்டதறகுப் பின்னாலே இருந்த நிலைமை என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இந்த மாநாடு நடைபெற்றதால், நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய உடனடி காரியம் இது., immediate effect இது. இந்தியாவிலுள்ள நீர் வளம், உணவு உற்பத்தி. மின் சக்தி இவை போன்ற அனைத்தும் எல்லா மாநிலங்களுக்கும் பரவலாகப் பகிர்ந்து அளிப்பதற்கேற்ற வகையில், அடிப்படைத் தேவைகள் என்கின்ற வகையில், நாட்டிலுள்ள திட்டங்களுக்கு மிக மிகத் தேவையாக இருக்கின்றவைகள் என்கின்ற வகையில், இதற்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் இம்மாதிரி மாநாடு அடிக்கடி நடைபெறுவது மத்திய அரசினுடைய, பிற மாநிலங்களினுடைய சிந்தனையைத் தூண்டி விட ஏதுவாக இருக்கும். இப்படி நடைபெறுகின்ற மாநாட்டின் முடிவுகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக, அல்லது அமுல்படுத்துவது சம்பந்தமாக அடிக்கடி கூடிப் பேச வேண்டும். காங்கிரஸ் அல்லாத மாநிலங்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களிலும் இத்தகைய உணர்வுள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களையும் அழைத்து இம்மாதிரி கூட்டங்களை அடிக்கடி கூட்ட வேண்டும். அதன் மூலம் இந்தியா வலுவடைவதுடன் மாநிலங்களும் வலுவடைய வேண்டுமென்கிற என் விருப்பத்தைத் தெரிவித்து, அமர்கிறேன்.

(பிற்பகல் 4-50)

* THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I rise to give my wholehearted support to Thiru Nallasivan's Resolution requesting that the Chief Ministers of the Southern States continue the good work they have started in Bangalore recently in trying to achive a consensus on various issues concerning Centre-State relationship.

Sir, this innocent conference would normally not have attracted much attention had it not been for the totally unjustifiable criticism that was levelled against the three Chief Ministers of the Southern States—of Andhra Pradesh, Karnataka and Tamil Nadu—that they were trying to enter into a sort of conspiracy to confront the Central Government on various issues. Memory, and public memory, Sir, is proverbially short. But as the hon. Member Dr. Janarthanam mentioned, a similar conference was conducted in July 1978 when the Chief Ministers of Karnataka, Andhra Pradesh, Tamil Nadu, Kerala and Pondicherry met—I do not know where they met and possibly it was in Madras—to consider certain issues of common importance, namely, the indirect imposition of Hindi, raising to 75 per cent the share of States in the divisible pool of taxes, etc. Subjects such as price parity for wheat and paddy and the fixation of sugarcane price at Rs. 125 per ton were considered by the then Chief Ministers. I shall read out the names because they are of interest. They were: Thiru Devaraj Urs (Congress-I) of Karnataka; Dr. Chenna Reddy (Congress-I) of Andhra Pradesh; Thiru M. G. Ramachandran of Tamil Nadu; Thiru A. K. Antony of Kerala and Thiru S. Ramasami of Pondicherry. At that time, the Janata Government was in power at the Centre. Sir, I can see no criticism being levelled against a southern Chief Ministers' Conference. In fact, it goes against the self-respect of any Chief Minister to be told that, before meeting another Chief Minister, he is to get permission from any Central authority. It has not been laid down in our Constitution and I hope these unfortunate persons who have raised this controversy will realise that they are doing justice to neither the Chief Ministers of other States nor to the Chief Ministers of their own States. It must be remembered that prior to 1967, Chief Ministers of almost 11 to 14 States could meet at one place in Delhi or in Bombay or in some other place and in fact, most of the Chief Ministers met in the Working Committee of the Congress which was continuously in power from 1950 to 1967 excepting in one or two places. There was opportunity for Chief Ministers to meet and discuss problems and, belonging as they did to the same political party, solutions could be found to many problems that faced the States In fact, one of the reasons for the remarkable progress in the establishment of Industrial Estates and Industrial development in Tamil Nadu could be attributed to the close liaison that the Congress Chief Ministers had with the Central Government in

those days. Sir, conditions have changed after 1967 and there has been considerable strain in the Centre—State relationship not only in regard to the sharing of financial resources which is the major item and which has to be solved and reasonably soon but also in regard to various other matters, which have disturbed the Centre—State relationship. In fact, I was President's a very interesting article about the imposition of President's rule in India since 1950 and it may be of interest to know that since 1950 President's rule has been imposed on 46 occasions in our country. The total length of President's rule, taking into account the number of days that President's rule was imposed is, according to this gentleman, over 20 years. Therefore, one of the principal reasons for Centre—State friction has been the imposition of President's rule. I am not going into the reasons why President's rule was imposed because I do not wish to provoke controversy unnecessarily. But, between 1950 and 1966, when Pandit Jawaharlal Nehru and Shri Lal Bahadur Shastri were Prime Ministers, President's rule was imposed only on nine occasions. Between 1967 and 1971, on eleven occasions President's rule was imposed in various States. Between 1971 and 1977, President's rule was imposed on sixteen occasions. Therefore, between 1967 and 1977—I deliberately mark this period because this marks one phase of a Congress leadership—the number of occasions was 27. It is not merely the Congress Government which brought in President's rule. In 1977, when we had the Janata regime, President's rule was imposed on ten occasions, bringing the total to 46. Then again, in 1980, when the Janata went out of power, President's rule was imposed on seven or eight occasions. Sir, Tamil Nadu has had the unfortunate privilege of having President's rule on two occasions, in 1976 and in 1980. There declarations of President's rule have been the subject-matter of controversy and I must elucidate, on this occasion, one feeling which I have always felt, but which I had no occasion to represent in public. Those of us who demand greater powers for States, those of us who plead that President's rule is being imposed in an arbitrary and authoritarian manner in various States, those of us who have descended from the same political



culture to which the D.M.K. originally belonged, feel a sense of sadness that, in 1976, we should have had to petition the Government of India to dismiss a legally constituted government, and again repeat the story in 1980 when this Government, which was then in power, was dispossessed of its office and President's rule was imposed. I would make a plea, specially to the Members of the D.M.K. as well as the A.I.A.D.M.K., that, if they really belong to the culture which feels that State autonomy is an important principle and in important political principle for which they have stood, this habit of petitioning the Central Government to dismiss legally constituted Governments is, in my opinion, creating great injustice to the very cause of State autonomy.

The question arises as to what we should do when we feel that there is tremendous corruption in the State. This is what is now being stated not only by me but also by friends on the opposite side. When the D.M.K. was in power, it was stated so by the Opposition and now when the A.I.A D.M.K., is in power, the same charge is repeated. I feel, now that the Sarkaria Commission has been appointed the composition of which I shall refer to briefly—that this problem of intra-State, problems within the State, can only be solved if we accept the principle of appointing an Ombudsman. I do not know its Tamil equivalent but its Hindi equivalent is Lok Ayukth or Lok Pal, as it has been designated. In my opinion such an Ombudsman should be created and the appointing authority should be a panel of three—the Hon. the Chief Minister of the State, the hon. the Leader of the Opposition in the Legislative Assembly and the Chief Justice of the High Court of Madras. Any one of these three persons should be able to veto the appointment of any person who is not acceptable to any one of them. Any complaint that we have against the Government in matters pertaining to various charges that are levelled, if they are serious enough, should be referred to the Ombudsman that should be appointed and we should get out of the habit of appealing to the Central Government which has a different political complexion to intercede on behalf of a State and see that President's rule is imposed. I wanted to mention this because I want the record to be cleared that while I was against the imposition of President's rule in 1976, I was also against it in 1980 and I

may also mention that on 16 occasions President's rule has been imposed in the unfavourable months of January and February. We have crossed February, luckily. 1984 is the next year we have to meet. It is my earnest hope that elected governments will run their full term of life, unless they are thrown out by a Vote of No-confidence in the Legislative Assembly. I hope that, taking advantage of certain critical situations, the need to impose President's rule for a third time in Tamil Nadu will not be stressed by my good friends in Tamil Nadu.

(பிற்பகல் 5-00)

Sir, regarding powers for States, this is an old, historical tradition in Tamil Nadu. I remember how, when the Government of India Act was introduced in 1935, my father and others interested in Provincial autonomy pleaded for greater powers to the States. In fact, at that time, the strongest support to them came from the Congress Party because they were only two years from stepping into power in 1937—and they stayed in office till 1939. Unfortunately, as the hon. Member Thiru Manickam pointed out, in 1947, when we sat down to draft the Constitution, we did not draft the Constitution under normal political circumstances. Between 1947 and 1950, India was in a terrible condition and Pandit Jawaharlal Nehru suffered the agony no Prime Minister could have suffered. Torn by communal riots, even on August 15, 1947, at the strike of midnight, when Mahatma Gandhi should have unfurled the National Flag on the House of Parliament, we found him trudging the lonely roads in Naokhali district, trying to stem communal strife. Such were the conditions that prevailed in 1947 and 1950. The hon. Member Thiru Ramamoorthy would also realise that great Chief Ministers and great personalities—Thiru Gopinath Bardolai of Assam, Thiru Govind Ballabh Pant of Uttar Pradesh, Shibbanlal Saxena, Hirudayanath Kunzru and my friend Thiru Santhanam, who is no more, from Tamil Nadu—pleaded for greater powers to States. But they could not do so under the circumstances that existed in those days.



We have come a long way from 1950 and we are now in 1983. We must realise that India tomorrow may have State Governments of different political complexion in different States. We must realise that while in the Central Government, we may have one particular party in power today, a situation may arise when the Central Government may also be a coalition. It is, therefore, from this angle that we welcome the appointment of the Sarkaria Commission and I would like to echo the words that have been uttered by eleven other political leaders in Parliament that the composition of the Sarkaria Commission should be widened, that it is not enough to have one jurist to head the panel, however eminent he may be, and that we must have men who have been in politics, who have been in State politics as well as in Central politics, who will know the conflicts that arise and I hope that our Government will be able to consider this and give their considered opinion to the Government of India regarding the composition of the Sarkaria Commission. We would very much like one who has been associated with State administration in official capacity being a member of the Commission and another who has been possibly in both State and Central Services to be the other member so that we may have a broad-based panel to go into the this question I shall not go into the details of the various views that have been expressed. As the hon. Member Thiru P. Manickam said, it is easy for us to say from public platforms or on the floor of the House that we shoud have an entire restructuring of the Constitution and that many items in the Concurrent list as well as in the Central List could be given to the States. These are extravagant claims and they may not be conceded by even our own countrymen. Therefore it is that we require a careful study. Various reports have been published in the past and we have referred to various views in the past in relation to Centre--State relationship. The Rajamannar Committee had also made many recommendations. All these could be studied in depth and proper representations made to the Sarkaria Commission which will be considering all these matters.

Sir, one thing I would like to mention on this occasion is this. We have unnecessarily given room for a Centre--State conflict on the provision of water to Madras City. The reason why I am mentioning this is that no Constitutional change can prevent such frictions in the future also. It is a matter of etiquette and courtesy. When there is a State Government and when water arrives in Central Government railway wagons, for which we are thankful—from whatever source water may come we must be thankful—we very much wish that the State Minister should have been invited and I am sure the State Minister might have put all his work aside and gone to the railway station to receive personally the water from the wagons, because he is so much in need of water. He is so short of food now. It is my feeling that we should not make political capital out of these matters. I would even request my hon. Friends in the AIADMK not to make a big issue of this and, then, to create a Centre--State conflict, because these things have a habit of degenerating and being reported wrongly. It is needless for us to indulge in this controversy. I consider it wrong that two Central Ministers should come and discharge railway wagons without the presence of our Minister for Metro-Water. He would also have joined in discharging these tanker—wagons with the utmost pleasure if he had been invited. In fact, it is an insult to Government not to inform them that this arrangement is being made. The Hon. the Chief Minister of Andhra Pradesh has mentioned in very clear terms that in nine months he was able to build up a Party and achieve a majority of 200 in an Assembly of 296 only because the people of Andhra Pradesh felt insulted that their Chief Ministers had not been given the respect they deserved. I only wish . . . .

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இரயில்வே வேகன்களில் தண்ணீர் வந்தது பற்றிக் குறிப்பிட்ட உணர்வுகளைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நான்கூட அந்த உணர்வோடுதான் இங்கே கருத்துக்களைத் தெரிவித்தேன். வேகன்களில் பெறப்பட்ட அந்தத் தண்ணீர் நல்ல தண்ணீர்தானா என்று சோதித்து அதற்குப் பிறகுதான் அதைப் பயன்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நாம் முனைந்தபோது, இதை எடுத்துக்கொள்ளவில்லை என்றால், இந்த ஆட்சியையே கவிழ்த்துவிடுவோம் என்று சொல்லுகிற வகையில் அறிக்கைகள் வந்ததால்தான், எங்களுக்கும் கோபம் வந்தது.





THIRU A. R. DAMODARAN : Sir, one should not take notice of all these people who shout in some political gatherings. Government must have a more responsible state of mind. It need not be bothered about such things. These street-gathering will go on. There are irresponsible people who will keep on shouting. But the Government in power will have to exercise its mature wisdom. I only wish to mention that, in spite of Constitutional changes, if people still behave in this manner, we will still not be able to avoid friction. I remember the Hon. Chief Minister, Dr. Karunanidhi, mentioning once that even in the utilisation of the flower-beds in the gardens that were laid out in the Fort St. George, he could not do anything without the consent of the Central Government. I think the hon. Members will also note that in the utilisation of the Island Grounds, we could not do anything without the consent of the Central Government. These are all issues which are non-financial in nature and one can only hope that maturity and wisdom will dawn on our administrators. All these things will cause provocation. Needless Centre-State controversies would only result in greater bitterness and greater frustration and set at nought the objective which all of us have stressed, that none of us are separatist in attitude, either in mind or even in thought, and that it is our whole-hearted intention that the unity of our country, the integrity of our country, should be preserved by mutual co-operation and understanding, more particularly, in the field of language which is becoming a dangerous cause for division of the country today. I wish to stress that in 1965 when we had an agitation in Tamil Nadu and when, unfortunately, lives were lost, Thirumathi Indira Gandhi was one of the first persons to visit Tamil Nadu and to see for herself what was happening and it was on her recommendation that even the solemn assurance was given. Realising as she does that language in the South is a very sensitive issue, I hope we will be able to solve this problem of All-India Link language which should be one of the terms of reference of the Sarkaria

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 13

Commission also because with that issue dead, I am sure 40 to 50 per cent of the friction that is likely to arise particularly between Governments in the South and the Central Government could have been laid at rest.

I think I have taken up more of the time that has been allotted and I shall not go into the details. It is unnecessary also because some of us will be giving evidence before the Sarkaria Commission. It requires a lot of preparation and I would only end by pleading that a better understanding and co-operation is not only necessary between the Central Government and the States but also within the State. Thank you.

DR. M. A. MUTHIAH CHETTIAR: Mr. Chairman, this meet of the Chief Ministers of the Southern States was most welcome, in my opinion, and it need not have raised any controlversy. If anybody has raised any controversy, we must ignore the controversy and go to the contents of the meeting. As rightly pointed out by the hon. Member Thiru Damodaran, this is not the first occasion that the Chief Ministers are meeting. Long before and even during the pre-Independence days the Raja of Panagal had convened a meeting of the Chief Ministers. I would like to refer to the conditions that prevailed then. Then, the Madras Government was asked to contribute 3 and a half crores of rupees a year for the running of the Central Government. The Central Government was having a budget of of Rs. 116 crores, and the Madras Government had a budget of Rs. 16 crores. We were asked to contribute Rs. 3 and a half crores to Delhi and the Central Government spent about Rs. 60 crores for the Army and a large amount for Punjab. Therefore, objection was raised to the Otto Nemiere

(பிற்பகல் 5-10)

Award. A unanimous Resolution was passed in the Legislative Council, opposing that Award. I was then a student in the B.A. Class in the Presidency College. On behalf of the Ministry a powerful speech was made and a Resolution was passed. Then, the Otto Nemiere Award was given up.



1983 ஏப்ரல் 13] [DR M. A. Muthiah Chettiar]

Sir, mention was made about having a fiscal Commission. This Sarkaria Commission, as I understand it, is not a fiscal Commission. I wish that the terms of reference of the Sarkaria Commission should be spelt out more liberally. I also agree with the view of the hon. Member Thiru Damodaran that it cannot be a one-man Commission. It should be broad-based and at least five persons should be there on that Commission. There is nothing wrong if we have five persons from different walks of life-officials, non-officials, administrators, financial administrators, etc. All of them may be associated with this Commission in its working. Then, we can have a comprehensive view of all the States in the country and it may be possible for the States to give proper evidence from the view points of both officials and non-officials. Probably, during the next meeting of the Chief Ministers of Southern States, they may be discussing the question of composition of the Sarkaria Commission. I presume they have not discussed it now. Nowhere it is mentioned whether the Chief Ministers of the Southern States are going to discuss about this. Nothing is mentioned about the composition of the Sarkaria Commission. Probably, the Hon. the Finance Minister who is present here, may mention about this in his speech.

Sir, regarding water-supply, I am surprised to know that the Hon. Minister, Thiru Raghavanandam, who is also President of the Madras Metropolitan Development Authority has not invited for the function in which water was let out from railway wagons. He takes keen interest in improving the water-supply position. At every meeting of the Metropolitan Development Authority, he speaks about water and nothing but water. He should have been invited for that function. He would very gladly have been present there. He would have participated in the function and thanked the Central Government for the help. Nothing wrong would have happened if he had been invited. I hope that at least in the future, the Government of India would show greater courtesy to Ministers from all States—not only this State but from all States. If it happens, that would be a good thing. I am sure that what happened now will not be repeated.

With regard to Central assistance for drought relief, I find that only 75 per cent is given as grant and that the remaining 25 per cent is given as loan. Sir, droughts and distresses are common things. Even under the Income-tax Act, you get 100 per cent relief if you give some money to some handicapped persons or to provide relief at times of flood or fire. When such a concession is allowed to private persons, I do not know why 75 per cent of the assistance given by the Central Government should be treated as loan. There should be 100 per cent grants for States where there is a large population of people below the poverty line. I hope that the Chief Ministers of Southern States will discuss this question of drought relief at their next meeting. I also hope that the Government of India will give 100 per cent grant for drought relief, at least in future.

Then, the question of President's rule was referred to by the hon. Member Thiru Damodaran. With all respect to him, I feel that it has not much relevance to the Chief Ministers' meeting. Whether the Chief Ministers discussed about it or not, I must say that the Central Government should have the power to impose President's rule on certain occasions. We cannot guarantee when such occasions will arise but we can hope and trust that such extreme steps will not be taken on frivolous grounds. It is only our hope. As regards the provision in the Constitution for President's rule, it is very essential. There may be cases where the Chief Minister for various reasons may not be able to solve the problem in spite of this having a majority or the Opposition Party may not be in a position to take over the responsibility of running the Government. In such cases, it may be that for 10 days or one month or even six months, President's rule is necessary. My hon. Friend mentioned the number of times President's rule was imposed. I have not kept count of the number. Probably my hon. Friend has taken pains to count it. I was a Member of the Constituent Assembly and I was asked by Pandit Jawaharlal Nehru to propose the clause on President's rule and Mrs. Durgabai Deshmuk—she was not then married—seconded the proposal and it was carried, 450 votes for 25 votes against and 25 remaining neutral.





THIRU. A. R. DAMODARAN: We are not happy to know that the hon. Member Dr. Muthiah Chettiar was the author of this provision.

DR. M. A. MUTHIAH CHETTIAR: Sir, I am not the author and I cannot be the author. I was the mouthpiece of the ruling party in the Constituent Assembly which was in a majority. Jawaharlal Nehru told me, "You belong to Madras and you are the fittest person to move the proposal". I took it as a compliment to Tamil Nadu and as admiration for Madras. Even when Advisers were appointed, the original intention of the Viceroy was to appoint three Europeans and three Indians. The three Indians were myself, Sir Mohammed Usman and M. C. Raja. But at the last moment, Thiru Rajagopalachari went and objected saying that we were not progressive people, that disputes would arise and that the Congress would not give co-operation. Then the Viceroy nominated only 3 European Advisers. But the Viceroy included our names in his Advisory Council. So, three names were again announced. This time the names announced were, Thiru Jehangir, Thiru Jamnadas who was a labour leader and Dr. Ambedkar. Every month they met for three days in Delhi.

Sir, an hon. Member rightly mentioned about the sensitive subject of language. On the question of language, there is unanimity in Tamil Nadu and it will always be there. Even the Congress-I in this State cannot say that they want the imposition of Hindi. Learning Hindi on a voluntary basis is a different thing. I was the first person who opposed the compulsory imposition of Hindi. The great Rajaji brought it in 1938 when he came to power and headed a temporary, interim Ministry for six months. At that time, I opposed that measure. After all, only 25 per cent of the area of India is a Hindi-speaking area. That area also is not contiguous. There are different kinds of Hindi, different dialects of Hindi and different scripts of Hindi. There is no uniformity about that language. Sir, I have made several speeches about Hindi and I know that this is not the time to repeat my views. I only wish to mention that the learning of Hindi should not be made compulsory. It is said that a South Indian wrote a book in Hindi and got

[DR. M. A. Muthiah Chettiar] [1983 ஏப்ரல் 13

a prize of Rs. 5,000. If it is suggested as an example, it is a wrong suggestion. Just because a man did it, we cannot compel the entire population to learn Hindi. The people in our villages cannot take to Hindi even after 2,000 years. The Hon. Chairman is a person who led the anti-Hindi agitation. Of course, I should not drag the name of the Hon. Chairman here. I only want to pay a tribute to the Hon. Chairman for the valiant fight that he put up against Hindi. Of course, in the beginning, I opposed Hindi. But later on, the Hon. Dr. Sivagnanam came into the picture and my contribution to the opposition of Hindi will not be as much as his contribution. Then, the DMK, the AIADMK the non-Brahmins and everybody including even the Brahmins came in and played their part in the opposition to Hindi. In Tamil Nadu, not even one in 10,000 will be willing to learn Hindi. That one person can learn Hindi, if he wants to seek employment in Delhi. There is another trouble also with this Hindi. Now, they want even I.A.S. officers in Delhi to write their notes in Hindi. Those officers know only English and they do not know Hindi. When such an officer is asked to write notes in Hindi, what will he do? He will tell the matter in English to his Personal Assistant. The Personal Assistant will translate it into Hindi, type the note in Hindi and put it up to the officer. The officer will simply sign the note and send it up. There is another danger also in this. Many of those officers are thinking of resigning their offices because of this imposition of Hindi. I find no mention in the Note circulated to the Members regarding Hindi. There has been no talk about Hindi. In the next meeting they may discuss about it and consider the views expressed in this House as well as the other House that Hindi should not be imposed. Through the Radio and through Television they should not be allowed to impose Hindi. I hope one of the important things to be achieved in the near future is the prevention of the imposition of Hindi. Only if the States are given more powers and are made to feel their responsibilities, the Centre will become strong. If the States are not strong, the Centre cannot be strong. The Chief Ministers and other public men have always assured the Centre that they would



1983 ஏப்ரல் 13]

(பிற்பகல் 5-20)

strengthen the hands of the Centre. At the same time, freedom should be given to the States in many matters and there should be no unnecessary interference. Of course, Income-tax, the Railways, the Post and Telegraphs, etc., can remain with the Centre. We want Electricity to be with the States. So far as Education is concerned, it should be in the hands of the States and it should not be in the Concurrent List. Only because Education is in the Concurrent List they are in a position to impose Hindi. With these words, I would like to support the view that the meeting of the Chief Ministers was very good and end with the hope that many more such meetings will be held in future for the benefit of the country.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்தத் தீர்மானம் ஒரு தேவையான விவாதத்தை உருவாக்கியிருக்கிறது என்கின்ற அளவிலே நான் இதை வரவேற்கிறேன். ஆனால் அதனுடைய அடிப்படையான நோக்கங்கள், எந்த அடிப்படையிலே தீர்மானம் வந்தது, எந்த அடிப்படையிலே முதல்வர்களுடைய கூட்டம் நடைபெற்றது என்பதற்குள் நான் போகவில்லை. ஆனாலும்கூட, இந்தத் தீர்மானம் மத்திய அரசு நியமனம் செய்திருக்கின்ற, அமைந்திருக்கின்ற சர்க்காரியா கமிஷனுக்கு முன்னோடியாக அமைந்திருக்கிறது அல்லது ஒரு துணையாக அமைந்திருக்கிறது என்ற அளவிலே வரவேற்கிறேன். மத்திய அரசு, மாநிலங்களில் இருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிகளின், நாட்டிலே இருக்கின்ற அத்தனை பேரையும் ஈர்க்கின்ற ஒரு தேவையான, ஒரு நாட்டினுடைய எதிர்காலத்திற்கு மிகமிகத் தேவையான சிந்தனைக்கு அழைக்கின்ற வகையிலே சர்க்காரியா கமிஷனை அமைத்திருக்கின்ற இந்த நேரத்தில் இந்த மாநிலத்தினுடைய பல்வேறு அரசியல் கட்சிகள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற அளவிலே, இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது என்ற வகையிலே அதற்கு வாய்ப்பளிக்க வந்திருக்கிறது என்ற வகையிலே நான் இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறேன். பல்வேறு நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நேரம் இல்லை. நான் அதிகமாகச் சொல்ல முடியாது. சில சரித்திர நிகழ்ச்சிகளையெல்லாம் சொன்னார்கள், இந்த நேரத்திலே

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. பல நேரங்களிலே எனக்கு வருத்தம் உண்டு. அவர்கள் அங்கே உட்கார்ந்திருக்கின்றார்களே, அவர் இங்கே எங்களோடு உட்காரக்கூடாதா என்று.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் அந்த சைடிலே உட்காரக்கூடாதா என்று கேட்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** அப்படியல்ல. இந்த அவையிலே கீழே உட்கார்ந்திருந்தால், இந்த சரித்திரச் சான்றுகளை அவர்கள் அந்த அளவுக்கு எடுத்து வைத்திருக்கலாம். தேசிய இயக்கம் உருவாக இந்த நாட்டிலே எந்த அளவுக்குத் துணையாக இருந்திருக்கிறார் என்பது நமக்குத் தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நான் இருக்கும் இந்த இடத்திலேயிருந்து சொல்லலாமே என்கின்றார். அப்படிச் சொல்லிவிட்ட பிறகு, 'ஏன் சொன்னார்கள்' என்றும் கேட்பார்,

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தச் சான்றுகளை நாங்கள் சொல்லியிருக்க முடியும். காரணம் தமிழகத்திலே முதன்முறையாக மாநில சுயாட்சி என்ற வார்த்தையைக் கொடுத்ததே தாங்கள் தான். இந்த மாநில உணர்வின் அடிப்படையிலே செயல்பட வேண்டுமென்ற உணர்வு, திராவிட இயக்கங்களுக்கு, அல்ல, அன்றைக்கு இயக்கங்கள் என்று கிடையாது—அன்றைக்கு இல்லாத சூழ்நிலையிலே, திராவிட இயக்கத்திற்கு அன்றைக்கு திராவிட நாடு கேட்டுக்கொண்டிருந்த அந்த நேரத்திலே தமிழர்கள், தமிழகம் என்ற உணர்வோடு, அதற்காகக் குரல் கொடுத்து, உறுதியான குரலாகக் கொடுத்து, அதற்கு மக்களைத் திருப்பிய குரல், தேசியக் குரல், தங்களுடைய குரலாகத்தான் ஒலித்தது என்பதை என்னாலே நினைவுபடுத்திக்கொள்ள முடிகிறது. அது மட்டுமல்ல. அதோடு இன்னொரு வாக்கியம்கூட, இன்றைக்கு பல இடங்களிலே, பல பேர்களிடத்திலே பயன்படுத்தப்படுகிறது. 'உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம்' என்ற வார்த்தைகள். அது கூட தாங்கள்தான் தமிழகத்திற்குத் தந்தது என்பதை என்னாலே எண்ணிப் பார்க்க முடிகிறது. 'தங்களை' என்று சொல்கின்றபோது, தங்களை உள்ளடக்கிய தேசிய இயக்கம், நிச்சயமாக அதற்கு உரிமை கொண்டாட முடியும். தாங்கள் பல நேரங்களிலே தேசிய இயக்கத்திலே பல சங்கடங்களை அனுபவித்திருந்தாலும்கூட, அந்த தேசிய உணர்வுகளையும் சிந்தனைகளையும் உருவாக்கிய தலைவர்களிலே தமிழகத்திலே தாங்களும் ஒருவர் என்ற முறையிலே, காங்கிரசுடைய பங்கை, அரசுக்குரிய பங்கை எந்த அளவுக்குச் சிறப்



பாகச் செய்திருக்கிறோம் என்பதைப்பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். அது மட்டுமல்ல, இந்தியாவிலேயே மொழிவழி மாநிலங்கள் என்ற நிலையினை, சிந்தனையை உருவாக்கியதே காந்தி அடிகள்தான். அது தேவை என்ற உணர்வை ஏற்படுத்தியது காந்தி அடிகள் தான். அன்றைக்கு காந்தி அடிகளுக்கு எதிராக பல இடங்களில் யாரெல்லாம் குரல் கொடுத்தார்கள் என்பது நினைவு இருக்கிறது. அதை நான் நினைவுபடுத்த விரும்பவில்லை. காந்தி அடிகள் இந்தச் சிந்தனையை உருவாக்கினார் என்பது மட்டுமல்ல, மொழிவழி மாநிலங்கள் அமைவதற்கு முன்னாலேயே—மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதுபோல—தமிழ் நாட்டினுடைய காங்கிரஸ் கமிட்டி இங்கே தனியாக அமைந்தது. எதற்காக இதை நான் சொல்கிறேன் என்றால், மத்திய அரசு காங்கிரஸ் அரசாக இருக்கின்ற காரணத்தினாலேயே மாநிலங்கள் உரிமைகளை அதே காங்கிரஸ் விட்டுக்கொடுத்துவிட்டது அல்லது பாராமுகமாக இருந்தது என்று இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அந்தச் சரித்திர உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். 1967 வரையில் காங்கிரஸ் அல்லாத ஆட்சிகள் மாநிலங்களிலே ஏற்படவில்லை. ஆகவே ஆங்காங்கு உரிமைகள் பற்றிய நிலைமைகள் வந்தபோது, கட்சிக்குள்ளேயே பேசித் தீர்த்துக்கொள்ள முடிந்தது. நான் இன்றைக்குச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் பி. சி. ராய் அவர்கள் அன்று எந்த அளவுக்கு மாநிலத்தினுடைய உரிமைக்காகக் குரல் கொடுத்தார் என்பதை சரித்திரம் சொல்லும். எந்த அளவுக்கு மத்திய அரசோடு காங்கிரசுடைய முதலமைச்சராக இருந்து போராடினார்கள் என்பது தெரியும். இது காங்கிரசிலே ஒதுக்கி வைத்திருக்கின்ற சிந்தனை, அண்டாத சிந்தனை, தேவையில்லாத சிந்தனை, அல்லது எதிரான சிந்தனை என்பதல்ல. அன்றைய சூழ்நிலையிலேயே ஒரு தெளிவு இருந்தது.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1957-லே கேரளாவிலே ஒரு கம்யூனிஸ்ட் கட்சி அரசு, காங்கிரஸ் அல்லாத அரசு வந்ததன் மூலமாக மாநிலத்திலே காங்கிரஸ் அல்லாத அரசு இருந்தால், அதற்கும் மத்திய அரசுக்கும் எப்படி உறவு என்பது அன்றைக்கே வந்துவிட்டது என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஒரு அரசு வந்தது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அது சரித்திரம். அதை மறுக்க என்ன இருக்கிறது? ஆனால் வலுப்பெறவில்லை. ஒரு இடத்திலே வந்தது என்பது உண்மை. வலுப்பெறவில்லை. அப்போதுதான் லேசாக வந்தது. அதற்கு முன்னாலேயே இந்தச்

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 13

சிந்தனை வந்துவிட்டது என்பதற்கு நான் சான்றுகள் சொல்கின்றேன். 1967-க்கு முன்னாலே அதன் அவசியம் உணரப்படவில்லை. அதற்குப் பிறகு, 1967-க்குப் பிறகு ஏற்பட்ட மாற்றங்கள்தான் காரணம். 1967-க்கு முன்னர் இதே மாநில உணர்வுகளை காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர்கள் உருவாக்கிய போது, எப்படியெல்லாம் அவர்கள் அவமானப்படுத்தப்பட்டார்கள், இதைவிட அவர்களுடைய கருத்துக்குக் கற்பிக்கப்பட்ட உள்நோக்கங்கள் என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், இராஜாஜி அவர்கள் 1956-லே சென்னையில் மாநிலக் கல்லூரியிலே தமிழ் மன்றத்திலே மன்றத்தின் நிறைவு விழாவிற்கு வந்து பேசினார்கள். நான் அந்த விழாவிலே கலந்துகொண்டேன். அவரை அழைத்ததில் எனக்குப் பங்குண்டு. தமிழ் மன்றத்தின் செயலர் என்ற அளவில் இருந்தேன். பெரியார் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் தலைவராகவும் இருந்து அவர்கீழ் பணியாற்றினேன். இன்றைக்கு மாநில முதல்வர்கள் 'சதர்ன் ஸ்டேட்ஸ் சிப் மினிஸ்ட்டர்ஸ் கான்பரன்ஸ்' என்று சொல்லிக்கொள்கின்றார்கள். இதற்குக் களங்கம் கற்பிக்கலாமா என்ற வார்த்தைகள் வேகமாக வருகின்றன என்பதை உணர முடிகிறது. அன்றைக்கு திரு. இராஜாஜி அவர்கள் தட்சிணப்பிரதேசம் என்று குரல் கொடுத்தபோது அவர்கள் எவ்வளவு விமரிசனத்திற்குத் தமிழகத்திலே உள்ளாக்கப்பட்டார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒன்றிலே நாம் தெளிவாக இருக்க வேண்டும். ஒரே சிந்தனையை ஒரு கட்சி சொன்னால் அதை மறுப்பது, வேறு ஒரு கட்சி சொன்னால் ஏற்பதா என்று சொல்லலாம், இருபத்தைந்து ஆண்டு களுக்குப் பிறகு, 40 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் எனக்குத் தெளிவு வந்தது, ஆகவே ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்வது சரித்திரத்திற்கு, நாட்டிற்கு மற்றவற்றிற்கும்கூட துணையாக இருக்காது. அங்கேதான் நாம் மாறுபடுகிறோம். இவ்வளவு காலத்திற்குப் பிறகு இன்றைக்கு, சமஸ்கிருதம் என்று சொல்வதற்குக்கூடத் தயங்கி, வடமொழி என்று சொல்கின்ற நிலையில் இருந்தவர்கள் அந்த சமஸ்கிருதத்தின் பெருமையை இத்தனை காலத்திற்குப் பிறகு உணர முடிகிறது. நான் என்ன செய்ய முடியும்? எனக்கு அன்றே

(பிற்பகல் 5-30)

பல ஆண்டுகளுக்கு முன்பே புரிந்துவிட்டது. அதைச் சொன்னதற்காக எந்த அளவுக்குச் சிரமப்படுத்தப்பட்டேன் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, 40 வருடங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அது அறிவுமல்ல, பகுத்தறிவுமல்ல. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 1967-க்குப் பிறகு என்ன நடந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ராஜமன்னார்



[திரு. க. இராமமூர்த்தி]

குழு அமைக்கப்பட்டது நம்முடைய மாநிலத்திலே. அப்போது பெரிய அளவிலே தமிழகத்திலே சிந்தனை ஓட்டம் ஏற்பட்டபோது, பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் குழுவைக் கூட்டி, தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார். பத்திரிகையில் வந்திருக்கிறது. யார் வேண்டுமானாலும் எடுத்துப் பார்க்கலாம். அதிலே தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மத்திய மாநில உறவுகள்பற்றி மத்திய அரசு, மாநில முதல்வர்களை அழைத்துப் பேச வேண்டிய அவசியம் இருக்கிறது, அவர்களை அழைத்துப் பேச வேண்டும், தேவையானால் அதுபற்றிச் சிந்திப்பதற்கு, அதுபற்றி முடிவெடுக்க ஒரு குழு அமைத்து முடிவு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். தமிழகத்திலே இருந்த ஆட்சி முடிவெடுப்பது என்பது ஒன்று, ஆனால் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, காங்கிரஸ் நிர்வாகக் குழு அதை நிறைவேற்றியது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், இத்தனைக்கும் பிறகு, இத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கிறது, ராஜமன்னார் குழு அறிக்கை வந்து. இந்த அறிக்கை சில சிபாரிசுகளை தன்னாட்சிக்குச் செய்கிறது. சுயாட்சி என்ற வார்த்தை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. தன்னாட்சி என்று சொன்னார்கள். தன்னாட்சி என்று ஏற்றுக்கொண்ட பிறகு, அந்த அடிப்படையிலே ராஜமன்னார் குழு அறிக்கையைத் தந்த பிறகு, இத்தனை ஆண்டுக்காலம் வரையில் அந்த அறிக்கையின் அடிப்படையில், சிபாரிசுகளின் அடிப்படையில் இதுஇது தேவை என்று இந்த மாநிலம் கருதுகிறது, தமிழ் மாநிலம் கருதுகிறது என்று சொல்லவில்லை. what are the specific changes you want? குறிப்பிட்ட சிபாரிசுகள் இதுஇது என்று நீங்களே பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிற, மாற்றி மாற்றி வருகின்ற திராவிட பாரம்பரியத்திற்குச் சொந்தமான அரசுகள் திட்டவட்டமாக முடிவெடுத்து அறிவிக்கவில்லையே.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டு இராஜமன்னார் குழு அறிக்கைமீது விவாதம் நடைபெற்ற நேரத்தில், இங்கே முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் திட்டவட்டமாக எந்தெந்த அதிகாரங்கள் மாநிலத்திற்கும், எந்தெந்த அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் இருக்க வேண்டுமென்று சுட்டிக் காட்டியதோடு மட்டுமல்லாமல், அந்தக் குழு அறிக்கையை பிரதமர் அவர்களுக்கு அனுப்பி, பிரதமர் அவர்களோடு கூட கலைஞர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள், 'அறிக்கை வந்தது, அது பரிசீலனையில் இருக்கிறது' என்று. எது எது வேண்டுமென்று திட்டவட்டமாக சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 13

திரு. க. இராமமூர்த்தி: நானும் சட்டமன்றத்திலே இருந்தேன். படித்துக் காட்டினால் ஒத்துக்கொள்கிறோம். பிரதமர் அவர்களுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

what are the amendments that you suggested to the constitution? இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். திராவிடர் பாரம்பரியம் உடையாமல் ஒரே கட்சியாக இருந்தபோது, ராஜமன்னார் குழு அறிக்கை தரப்பட்டது. மாநில உரிமை வலியுறுத்தப்பட்டபோது, திராவிட பாரம்பரியத்துக்குச் சொந்தமான இரண்டு கட்சிகளும் மத்திய அரசை நிர்ப்பந்தம் செய்து, மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்று சொன்னார்களா இல்லையா?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவரவர்களே, எனக்குத் தெரிந்து அப்படி நடக்காத ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லுகிறார்கள். யாரும் மையத்திலே போய் தமிழகத்திலே இருந்த மாநில அரசைக் கலையுங்கள் என்று சொல்லவில்லை.

திரு. க. இராமமூர்த்தி: 'இன்னா நாற்பது' இந்த அவையில் வைக்கப்பட்டு . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவரவர்களே, குற்றச்சாட்டுகள் வைக்கப்படுவது வேறு. கலையுங்கள் என்று சொல்லியிருந்தால், அதைப் படித்துக் காட்டலாம். புகார் கொடுப்பதாலேயே, உடனே அரசாங்கத்தைக் கலையுங்கள் என்று அர்த்தம் இருப்பதாக அவராகக் கற்பனை செய்து கொள்வது நல்லதல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லியது போன்று மாநில அரசைக் கலையுங்கள் என்று சிபாரிசு செய்து, அதனை அடிப்படையாக வைத்து, மத்திய அரசு மாநில அரசுகளைக் கலைப்பதாக வரலாறு இல்லை. கலைத்த அடிப்படையிலே அப்போதும் சரி, இப்போதும் சரி, கலைத்த நிகழ்ச்சியை வைத்து கட்சி மாச்சரியத்தின் அடிப்படையிலே சில பலர் மகிழ்ச்சியுற்று இருக்கலாம். சிபாரிசு செய்தார்கள், அதனால் கலைத்தார்கள் என்பதற்கு வரலாறு இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: எப்படி ஏற்றுக்கொண்டாலும், எனக்கு அதில் சங்கடம் இல்லை. அந்த உணர்வுகள் எப்படி வந்தன என்பதுதான். இங்கே நாம் சங்கடப்படுகிறோமா அல்லது அரசியல் கட்சிகள் சங்கடப்படுகின்றனவா என்பதல்ல. தமிழகத்தில் ஒரு கிளர்ச்சி நடைபெற்றது. பல்வேறு கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், அனைத்துக் கட்சிகள் சார்பிலே பொதுக் கூட்டங்கள்—எதற்கு? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை அகற்றுவதற்காக. ஆகவே இன்றைக்கு மத்திய அரசு இதையெல்லாம் செய்கிறது என்று சொல்லும்போது, அவர்கள் சொல்கிறபோது, நான் அவர்களுடைய நோக்கத்தை இப்போதும் சந்தேகிக்கவில்லை. தவறு செய்திருக்கலாம். இனிமேல் அப்படிச் செய்ய மாட்டார்கள் என்று நம்பலாம். என்ன நிலைமை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உரிமைகளைப் பொறுத்தவரையில், சில சூழ்நிலைகளைப் பார்க்கிறோம். மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்கள்கூட இருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்னாலேதான் இந்த அவையிலும், பேரவையிலும் சொன்னார்கள், காவிரி நதி நீர் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். இரண்டு மாநிலங்களுக்கு இடையே இதுவரையில் நடைபெற்றுள்ள பேச்சு வார்த்தைகள், அதற்கு ஆகியுள்ள செலவுகளைக் கொண்டு புதிதாக ஒரு அணையைக் கட்டியிருக்கலாம், அந்த அளவுக்குச் செலவாகியிருக்கிறது, இனிமேல் இந்த ஆட்சிக்கு, அரசுக்கு 'பைலேட்டரல் டாக்ஸ்'ல் (Bilateral talks) நம்பிக்கை இல்லை, இனிமேல் மத்திய அரசு தலையிட வேண்டுமென்று திட்டவட்டமாக அறிவித்தார்கள். எனக்கு நினைவு சரியாக இருக்குமானால், பேரவையில் இந்த வார்த்தைகளை அவர் சொன்னபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் அன்றைக்கு, "இப்படிச் சொல்வதன் மூலமாக, மத்திய அரசைத் தலையிட வேண்டுமென்று கேட்பதன் மூலமாக மாநில உரிமைகளை விட்டுக் கொடுப்பதாக ஆகாதா?" என்று கேட்டபோது, எனக்கு அதைப்பற்றிக்கூட கவலையில்லை, இந்தப் பிரச்சினை தீர வேண்டுமென்று சொன்னார்கள். அத்தியாவசியமான சூழ்நிலை வரும்போது, இந்த எண்ணம் வருகிறது. அதோடு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் உரிமைகளைக் கடுமையாகக் கேட்கிறவர்கள் என்பது தெரியும். திராவிடப் பாரம்பரிய நிலைமையை எப்படி எடுத்துத் தெரிவிப்பார்கள் என்பது தெரியும். கண்ணகி கோவில், கண்ணகி சிலை உள்ள இடம் எங்களுக்குச் சொந்தமானது என்று சொல்லி, அதற்குப் பிறகு என்ன சொன்னார்கள்? அது தமிழகத்திற்குச் சொந்தமான இடம், கேரளம் எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லும் போது, இவர்கள் விட்டார்களா, அவர்களாக எடுத்துக் கொண்டார்களா என்பதற்குள் நான் போகவில்லை. அதற்குப் பிறகு பிரதமர் அவர்கள் தலையிட்டாக வேண்டும் என்றார்கள். அது மாநில உரிமையில்லையா? மாநில உரிமைகளுக்குள்ளே தலையிடுவதாகாதா? யார் அழைப்பது? நானா அழைக்கிறேன்.



1983 ஏப்ரல் 13] [திரு. க. இராமமூர்த்தி]

[1983 ஏப்ரல் 13

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, உரிமைகள் கொடுத்தால், மாநிலங்கள் தீர்த்துக்கொள்ளாத அளவுக்குப் போய், இந்திரா காந்தியிடம் வாருங்கள் என்று கேட்காமல், தீர்த்துக்கொள்வோம். இருக்கிற சங்கடம் நமக்கு உரிமை இல்லாமல், அவர்களிடம் சொல்லி, அவர்கள் செய்யும் அளவுக்கு அவர்களிடம் அதிகாரங்கள் முடங்கியிருக்கின்றன என்பதுதான். நதிப் பிரச்சினையானாலும் சரி, ஒரு மாடு அங்கே போனாலும் சரி, ஒரு யானை இங்கே வந்தாலும் சரி, ஒரு சிறுத்தை பாய்ந்தாலும் சரி, அவர்கள் தயவில் நடக்க வேண்டியிருக்கிறது. உரிமைகள் அவர்களிடம் இருக்கின்றன. ஆகவே அவர்கள் தலையிட வேண்டுமென்று சொல்லுகிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, நாவலர் அவர்கள் கருத்துக்கு என் கருத்து மாறாக இருக்க முடியாது. எல்லை எது என்று வகுத்து, மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். இது தமிழகத்தின் எல்லை, தமிழக அரசின் ஆட்சிக்கு உட்பட்ட இடமாகத் தான் இருந்தது என்று அவர் சொன்னார். பிறகு எப்படிப் போயிற்று? போகும்போது அதைக் கைப்பற்றவேண்டியது யார்?

(பிற்பகல் 5-40)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஏதோ நான் தலையிடுவதாகக் கருத வேண்டாம். கான்ஸ்டிட்யூஷனில் என்ன இருக்கிறது என்பதைப்பற்றிப் பிரச்சினை வந்ததால் சொல்கிறேன். இரண்டு மாநிலங்களுக்கு இடையே தகராறு வந்தால், அதைத் தீர்ப்பது மத்திய அரசுதான், மத்தியஸ்தமாக.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு தலைவர் அவர்களுடைய தலையீடு உள்ளபடியே எனக்குத் துணையாக இருந்திருக்கிறது. பொதுவாகவே தமிழகம் உட்பட இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் இதில் அதிகமாகப் பங்கு இருக்கிறது. இன்றைக்கு பக்தியினுடைய பெயராலே எவ்வளவோ பணத்தை திருப்பதி உண்டியலிலே, பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள். அந்தப் பணம் முழுவதும் இந்த தேசத்தினுடைய பொதுச் சொத்து. திருப்பதி உண்டியலுக்கு இந்த நாட்டு மக்கள் நாடு தழுவிய அளவில் காணிக்கை செலுத்துகிறார்கள். அந்தப் பணம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்ததன் மூலம் இந்தியா முழுக்க இருக்கின்ற மக்களுக்குப் பயன்படுத்தப்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது. ஆனால் அதை எடுத்து, அந்த மாநிலத்தினுடைய ஒரே ஒரு கருவூலத்தில், டிரஷரியில் வைக்க வேண்டுமென்று



1983 ஏப்ரல் 13] [திரு. க. இராமமூர்த்தி]

ஆந்திரா முதல்வர் திரு. என். டி. ராமாராவ் அறிவித்தபோது, இந்த மாநிலத்திலிருந்து ஒரே ஒரு குரலையாவது ஏன் எழுப்பவில்லை? அதைப்பற்றி நீங்கள் ஏன் கேட்க விரும்பவில்லை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆந்திராவினுடைய முதல்வர் திரு. என். டி. ஆர். என்ன செய்தார் என்று சொல்கிறேன். திருப்பதி திருமலை தேவஸ்தானத்தினுடைய சார்பாக கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய்க்கு மேல் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் பிக்சட் டெப்பாசிட்டாக வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து அரசாங்கத்தினுடைய கஜானாவில் போட்டால், அதன்மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் எவ்வளவு வட்டி தந்து கொண்டிருந்தனவோ அதே வட்டியை அரசாங்கம் தரும். அந்தப் பணத்தை அரசாங்கத்தினுடைய முக்கியமான செலவுகளுக்குப் பயன்படுத்தலாம் என்கின்ற அளவிலேதான் சொன்னார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் போடப்படும் பிக்சட் டெப்பாசிட்டை அரசாங்கக் கஜானாவில் போட வேண்டுமென்று சொன்னார். வங்கி தருகின்ற அதே வட்டியை தானும் தர ஆயத்தமாக இருப்பதாகச் சொன்னார். அவர்களே உண்டியலை எடுத்து திறந்து அந்தப் பணத்தை எடுத்துக் கொள்வதாக இருந்தால், திருத்தணிக்கு மேலே நம்முடைய பக்தர்கள் பணத்தைக் கொண்டு போக வேண்டாம் என்கின்ற அளவிலே—எப்படி அரிசி, நெல் போன்ற மூட்டைகளைத் தடுத்து நிறுத்துகிறோமோ அதுபோல்—அதற்கு மேல் போக வேண்டாம் என்று நாம் தடுத்து நிறுத்துகிற முயற்சிகளைச் செய்யலாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** திருப்பதி வெங்கடாசலபதி வட்டி வியாபாரம் ஒன்றும் நடத்தவில்லை. அந்தப் பணம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே போடப்படுவதன் மூலம் நாடு பூராவும் சுற்றிச் சென்று பரவலாக நாட்டு மக்களைச் சென்றடைய வாய்ப்பு இருந்தது. ஆனால் ஆந்திர மாநிலத்தினுடைய கருவூலத்திற்கு மட்டும் அதைக் கொண்டு செல்வதன்மூலம் அதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. வட்டி கொடுத்துவிடலாம். அந்தப் பணத்தைக் கொண்டு செய்யப்படுகின்ற நன்மைகள், உதவிகள் அனைத்தும் ஆந்திராவுக்குத்தான் போகும். மற்ற மாநிலங்களில் உள்ளவர்களுக்குப் போகாது. அதுதான் இதிலே இருக்கிற பிரச்சினை.

**திரு. ஆ. நல்லசிவன்:** தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே இந்தப் பணம் போடப்படுவதன் மூலம் தேசம் பூராவும் பணம் சுற்றுகிற வாய்ப்பிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அப்படி என்றால் நான் கேட்கிறேன் இன்றைக்கு ஒரு மூட்டை நெல்லுக்கு 122 ரூபாய்தான் கொடுக்க

வேண்டுமென்று நிர்ணயித்திருக்க, மாநில அரசு 15 ரூபாய் கூடுதலாக்க் கொடுத்து, குவிண்டால் ஒன்றுக்கு 137 ரூபாய் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்கிறது. இப்படி இந்த மாநில அரசு 15 ரூபாய் விவசாயிகளின் நலன் கருதிக் கொடுத்து நெல் வாங்குவதை எதிர்த்து ரிசர்வ் வங்கி பணம் கொடுக்க, கிரடிட் கொடுக்க மறுக்கிறதே, அது எந்த அடிப்படையில்? தேசம் பூராவும் வங்கிகளின் மூலம் பணம் சுற்றுகிறது என்று உறுப்பினர் சொன்னது உண்மை என்றால், ஒரு மாநில அரசு கஷ்டப்படும் நேரத்தில் நிதிப் பற்றாக்குறையால் அவதிப்படும் நேரத்தில் மத்திய அரசு கிரடிட் கொடுத்து உதவ வேண்டியது தானே? நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தமாதிரி ஒரு பெரிய மாநில அரசின் வருவாய் வங்கியில் இருப்பதைவிட கஜானாவில் இருப்பதன்மூலம், அவர்களிடம் நெல் கொள்முதல் செய்ய கடன் கேட்பதைவிட, இந்தப் பணத்தை எடுத்து எளிதாக நெல் கொள்முதல் செய்துவிடலாமே. வங்கியில் இருந்தால் உடனடித் தேவையை, மாநில அரசின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதே. மாநில அரசின் டிரஷரியில் இருந்தால், அதை மாநில அரசின் முக்கியமான தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். ஆனால் தேசியமயமாக்கப் பட்ட வங்கியில் இந்தப் பணம் இருப்பதன்வாயிலாக இப்படிப் பயன் படுத்துகின்ற நிலைமை இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சியினுடைய அதிகாரபூர்வமான கருத்து அதுதான் என்றால், நான் அதுபற்றி இப்போது ஒன்றும் சொல்லவில்லை, மறுக்கவில்லை. அது நல்லது.

**திரு. ஆ. நல்லசிவன்:** தகவலுக்காக நான் ஒன்றைச் சொல்கிறேன். மேற்கு வங்கத்தில் இருக்கக்கூடிய இடதுசாரி அரசு பப்ளிக் செக்டாருக்கு என்று இருக்கக்கூடிய ரிசர்வ் பண்டைக் கொண்டு, 50 கோடி ரூபாய் மூலதனத்தைக் கொண்டு ஒரு வங்கியை மாநில அரசு ஆரம்பிப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டதற்கு, மத்திய அரசு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டது. தேசிய வங்கியில் அந்தப் பணம் போடப்படுவதால், அதிலே மாநில அரசுக்கு அதிகாரம் இல்லாமல் போய்விடுகிறது. ஆனால் மாநில அரசு அப்படி ஒன்றை ஆரம்பித்தால், மாநில அரசு செலவிட முடியும் என்கிற காரணத்திற்காக, மத்திய அரசு அனுமதி கொடுக்க மறுத்தது. அதை அடிப்படையாகக் கொண்டு தான் திரு. என்.டி.ஆர். அவர்கள் இப்போது இப்படி ஆரம்பித்திருக்கிறார்கள்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உண்டியலை தேசியச் சொத்தாக வைத்தால், அதிலிருந்து வருகிற பணத்தை வங்கியில் போடுவதன் மூலமாக அந்தப் பணம் தேசம் பூராவும் கிடைக்கிற வாய்ப்பு ஏற்படும், ஆனால் இப்போது அதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி சொல்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி:** தேசம் பூராவும் இருக்கிற மக்களுக்காக உள்ள ஆலயம் அது. தேசம் முழுவதற்கும் அந்தப் பணம் பயன்படுத்தப்பட வேண்டும். ஆந்திரா கருவூலத்திற்கு மட்டுமே அந்தப் பணம் போய்ச் சேரும், அதன்மூலம் ஆந்திராவுக்கு மட்டுமே அது பயன்படும் என்கிற நிலை வரக்கூடாது. அது நல்லதல்ல. இதுபற்றி நம்முடைய அரசு கடுமையாகக்கூட சொல்லியிருக்க வேண்டியதில்லை. கேட்பதற்கு உரிமை இல்லையா? ஏன் அப்படிச் செய்தீர்கள் என்று திரு. ராமாராவைக் கேட்டிருக்கலாம்? என்ன காரணமோ தெரிய வில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நம்முடைய அபிப்பிராயம் இதிலே சொல்வதற்கு ஒன்றுமில்லை. இன்றைக்கு அகில இந்திய அளவில் லாட்டரி சீட்டுகள் நடத்தப்படுகின்றன. சாதாரணமாக கோடிக்கணக்கான ரூபாய் அதற்காக வேண்டி நம்முடைய மாநிலத்திலிருந்துதான் போகிறது. அகில இந்தியா என்று நாடு தழுவிய அளவில் வரும்போது, அந்த அடிப் படையில் தான் வைக்கப்படுகிறது. திருப்பதி கோயிலைப் பொறுத்தவரையில், அது வைப்பு நிதியாக தேசிய வங்கியில் வைத்திருக்கிற தொகையை அரசாங்கக் கஜானாவுக்குக் கொண்டு வருவதன்மூலம் அரசாங்கத்தின் முன்னேற்றத் திட்டங்களுக்கு அதனைச் செலவிடுவதற்கு வழிவகை ஏற்படும் என்கிற வகையில் அந்த அரசு அப்படி அறிவித்தது. அவர்களுக்கும் இன்றைக்கு ஓவர்டிராப்ட் அல்லது மேல் பற்று பெறுகின்ற நிலைமை இருக்கிறது. மேலும் மேற்கு வங்காளம், கேரளா போன்ற மாநிலங்களிலும் நிதி வாயில்களுக்கு வசதியில்லாத நிலையில், ஓவர்டிராப்ட் வாங்குகிற நிலைமை இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலும்கூட அதே அடிப்படையில்தான், வைப்பு நிதியைப் பொறுத்தவரையில், அதனைத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் போட்டுக் கொண்டு வந்தாலும்கூட, நம்முடைய டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்கள் போன்றவை 14 சதவிகிதம் வட்டி தருகிறார்கள் என்பதால், அதிலே வைப்பு நிதியைப் போடுங்கள் என்று நான் நிதியமைச்சர் என்கிற முறையில் சொல்லி யிருக்கிறேன். இதில் இரண்டுவிதமான நன்மைகள் இருக்கின்றன. ஒன்று இதன்மூலம் வட்டி அதிகமாக நமக்கு வருகிறது. வங்கிகளில் போடுவதன்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 13

மூலம் 9 சதவிகிதம், 10 சதவிகிதம் அல்லது 11 சதவிகிதம் தான் வட்டி வரும். இரண்டாவது காரணம் அல்லது நன்மை என்னவென்றால், அடிக்கடி கடன் கொடுங்கள் என்று இப்படிப்பட்ட டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்கள் மாநில அரசைத் தொந்தரவு செய்துகொண்டிருக்கின்ற நிலைமைகளை நாம் தவிர்க்க வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில் நாம் இந்த முறையைப் பின்பற்றச் சொல்கிறோம். திரு. என்.டி.ஆர். அவர்களைப் பொறுத்தவரை, அந்த மாநில வளர்ச்சித் திட்டங்கள் குன்றாமல் இருக்க, பாதுகாக்க அவருக்கு நிதி தேவைப் படுகிறது. அந்த அடிப்படையில் இந்த 50 கோடி ரூபாயும் மாநில அரசின் கஜானாவில் இருந்தால், மாநில அரசு அதை எடுத்து எளிதில் திட்டங்களை நிறைவேற்ற முடியும், தொழில் தொடங்குவது, வேளாண்மை அபிவிருத்திக்குச் செலவிடுவது போன்ற ஆந்திர மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய திட்டங்களை நிறைவேற்ற முடியும். இந்தப் பணத்தில் உத்தரப் பிரதேசத்திற்கு அல்லது தமிழகத்திற்கு எவ்வளவு பங்கு என்கிற பிரச்சினையே இல்லை. வங்கியில் போடப்படக் கூடிய பணத்தை கஜானாவில் போடுகிற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்களே தவிர, இதில் வேறு பிரச்சினை ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நேரமாகிக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் திருப்பதி மலையை விட்டு பெங்களூருக்கு இறங்கி வர வேண்டும்.

*திரு. க. இராமமூர்த்தி :* பெங்களூருக்கு இறங்கி வருகிறேன். தென் மாநில முதல்வர்கள் மாநாடு பெங்களூரில் 20—3—1983 அன்று நடைபெற்றது. இந்த மாநாட்டை பெங்களூரில் கூட்டிய அதே முதலமைச்சர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் இதே 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் தேதி ஒரு கருத்தைச் சொல்கிறார். On January 13, Mr. Hegde met Mr. Chandrasekar during the Padayatra at Trivandrum. he had declared that he would not like to insist on a recasting of Centre--State relations now because the Constitution had ample provisions for State Autonomy.

Even when he was asked whether he was in favour of non-Congress (I) C.Ms. convening a joint forum, he had replied in the negative.

ஜனவரி 13 ஆம் தேதி அவர்களுடைய கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் அவர்களைச் சந்தித்தபோது, திருவனந்தபுரத்தில் நிருபர்களிடம் இப்படிச் சொல்லியிருக்கிறார். சென்ட்ரல் ஸ்டேட் ரிலேஷன்ஷிப் பற்றியோ, மத்திய



1983 ஏப்ரல் 13] [திரு. க. இராமமூர்த்தி]

மாநில உறவுகள் பற்றியோ இப்போது பரிசீலனை செய்வதற்கு எந்தவித அவசியமும் இல்லை என்று சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகு இப்படி தான் சொல்வதன்மூலம் ஒருவேளை காங்கிரஸ் மாநில முதலமைச்சர்கள் எல்லாம் கூடி இதுபற்றிப் பேசுவதற்கு முன்வந்தால் அதை நீங்கள் ஆதரிப்பீர்களா என்று கேட்டால்—நிச்சயமாக அப்படி இருந்தாலும், அதுபற்றி எனக்குக் கவலையில்லை என்று சொல்கிற அளவிலே அவருடைய பதில் அமைந்திருக்கிறது. "தமிழக முதல்வர் அப்படிச் சொல்லியிருந்தால்கூட, பரவாயில்லை" என்று சொவேன். ஆனால் மத்திய மாநில உறவு பற்றி சந்தேகிக்க வேண்டிய அவசியமே இல்லை" என்று எந்த முதல்வர் ஜனவரி 13 ஆம் தேதி சொன்னாரோ அந்த கர்நாடக முதலமைச்சர்தான் திடீரென்று பெங்களூரில் தென் மாநில முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டியிருக்கிறார். எதற்காக அப்படிக் கூட்டினார் என்பது குறித்து ஒன்றும் முதலிலே தெரியாது. எது எது பற்றிப் பேச வேண்டும் என்பது பற்றியும் முதல்வர்களுக்குத் தெரிவிக்கப் படவில்லை. தன்னாட்சி என்றால் இந்த நாட்டுக்குத் தேவை என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். அது ஒன்றும் தேச விரோதமான காரியம்

(பிற்பகல் 5-30)

அல்ல. அப்படி ஒரு அஜெண்டா அந்த மாநாட்டுக்கு இல்லை. இதில் என்ன பயமா? எல்லா அரசியல் கட்சிகளும் இந்த மத்திய மாநில உறவுகள்பற்றிப் பேசியிருக்கின்றன. ராஜமன்னார் கமிட்டி அறிக்கைபற்றி நாம் விவாதம் செய்திருக்கிறோம். ஆனால் இந்த முதலமைச்சர்கள் மாநாட்டுக்கு அஜெண்டாவே இல்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அடிக்கடி குறுக்கிடுவதற்கு பொறுத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். அஜெண்டா இல்லாமல் எந்தக் கூட்டமும் மாநாடும் கூட முடியாது. அதுவும் நான்கு மாநில முதலமைச்சர்கள் கூடிப் பேசி, ஆறு பாயிண்டுகள் பேசப்பட்டிருக்கின்றன. அஜெண்டா போட்டு, அவர்களும் தங்களைத் தயார் படுத்திக்கொண்டு தான் போயிருக்கிறார்கள். அந்த அஜெண்டாவை பப்ளிக்காகக் கொண்டுவரவில்லை. முன்கூட்டியே தெரிவிக்கப்படவில்லை. மாநாட்டிற்குப் பிறகு தெரிவிக்கப்பட்டது. நிகழ்ச்சி நிரல் இருந்தது.

*திரு. க. இராமமூர்த்தி :* ஏனென்றால் இந்த நான்கு முதலமைச்சர்கள் கூடிய பிறகு அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்கள், மத்திய உறவுகள் பற்றிய கருத்துக்கள் வேறாக இருந்தாலும் கூட, இந்தக் கவுன்சிலைப் பற்றி

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 13

கருத்துக்கள் மாறுபாடானவை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். இன்னும் 20 பேர் வந்து இதிலே சேர வேண்டுமென்று திரும்பத் திரும்பச் சொல்கிறார். நமது முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்:

M.G.R. was a little more explicit when he said. "To day our strength may be four. It may be so tomorrow and that may increase to include the Chief Ministers of the entire country."

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்தக் கவுன்சிலில் சேருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்று முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் கருத்து தெளிவாக இருக்கிறது. அதே நேரத்தில் அங்கே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இது தென்னக முதல்வர்கள் கவுன்சில் என்று வந்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல. இந்த உறவுகளைப் பொறுத்தவரையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

"Only when all the Chief Ministers participate in the Council will our aim be fulfilled."

Hegde demanded changes in the Constitution so that it can give full meaning to the new definition of Centre-State relationship and the relationship between the States.

இந்தக் குறிக்கோளைப்பற்றிச் சொல்கிறார். எல்லா மாநிலங்களின் முதலமைச்சர்களும் இதிலே கலந்து கொண்டார்கள். நம்முடைய நோக்கம் இதன்மூலம் நிறைவேறும் என்று சொல்கிறார். அதற்குப் பிறகு சொல்கிறார். கர்நாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே என்ன சொல்கிறார்?

The other three Chief Minister praised Hegde. M.G.R. in an ebullient mood even declared "I feel jeolous of the people of Karnataka".

இது தனியாக இருந்தாலும், மாநாடு கூடிய பிறகு ஏற்பட்டிருக்கிற ஒரு சிந்தனை, இது தென்னக முதலமைச்சர்களுக்காகவா, அல்லது இந்தியாவின் எல்லா முதலமைச்சர்களின் கவுன்சிலா? இதுவே எனக்குத் தெளிவாகவில்லை. நம்முடைய முதலமைச்சர் தெளிவாக இருக்கிறார். இந்தியா முழுவதும் உள்ள முதலமைச்சர்களுக்கு என்று. ஆனால் மற்ற முதலமைச்சர்கள், இந்தக் கருத்தோடு ஒன்றிப் போயிருக்கிறார்களா என்று தெரியவில்லை. இந்தக் கவுன்சில் எப்படி இருக்க வேண்டும் என்பதில் மாறுபாடான கருத்து இருக்கும் போது, அஜெண்டாவுக்கு என்ன பொருள் என்றே தெரியவில்லை.



1983 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. கா. இராசாமுகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது நான் ஒரு கருத்தைச் சொல்லி, அதன் காரணமாக நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இங்கே திரு. நல்லசிவன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய தீர்மானத்தில் மிகத் தெளிவாக இருக்கிறது. "20—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென் மாநில முதல்வர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை இந்த மேலவை வரவேற்கிறது, ஆதரிக்கிறது. இந்த முடிவுகளை அமுல் நடத்துவதற்காக விடா முயற்சி எடுக்க வேண்டும் என்று இம்மேலவை தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது" என்று இருக்கிறது. குறிப்பிட்ட காரணத்திற்காக என்று சொல்லியிருக்கிறார். இது நான்கு முதல்வர்களுடனும் இருக்கலாம், 20 அல்லது 22 மாநில முதல்வர்களுடனும் இருக்கலாம். ஏனென்றால் அஜெண்டா வந்த பிறகு, காங்கிரஸ் மாநிலங்களின் முதலமைச்சர்கள் வரலாம் என்று இருக்கிறது. அரசியல் மாற்றங்கள் இயற்கையானது. உறுப்பினர் பேசுவது நமக்கு விவாதத்திற்குச் சுவையாக மட்டுமல்லாமல், பயன் உள்ளதாகவும் இருக்க வேண்டும். இந்த முதல்வர்கள் கூட்டம் கூடியதன் நோக்கம் ஒருபுறம் இருக்க, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை எந்தெந்த இனங்களில் கேட்டிருக்கிறோம், அதிலே எந்தெந்த இனங்களைக் கொடுத்தால் ஆபத்து வரும், எப்படி மாநில வளர்ச்சி பாதிக்கப்படலாம், அல்லது வளர்ச்சி பெறலாம் என்று சொல்லலாம். காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேரவையில் பேசுகிறபோது (Zonal Council) என்று சொல்லுங்கள் என்று 'ஜோனல் கவுன்சில்' சில யோசனைகளை தெளிவாக, அரசியல் ரீதியாக எடுத்துக் கூறினார்கள். உறுப்பினர் அவர்கள் மிக அழகாக, கிரிமினல் வழக்கறிஞரைப் போல் பேசுகிறார்கள். தன்னுடைய கட்சிக்காரன் கொலை செய்திருந்தால் கூட, அவனைக் காப்பாற்றும் வகையில், மோடிவ் இல்லை, இன்டென்ஷன் ப்ரூவ் ஆகவில்லை, ஆகவே கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கம் இல்லை என்று சொல்வதைப்போல, உறுப்பினர் அவர்கள் வாதிடுவது நன்றாக இருக்கிறது. அது அங்கேதான் தேவையானது. கேட்டிருக்கிற அதிகாரங்களில் எது எது அதிகமாக ஆபத்து தரும், எனவே அதை விட்டுவிட வேண்டுமென்று உறுப்பினர் சொன்னால், அது முக்கியமான கருத்தாகும். அதை நாம் பரிசீலித்துத்தான் ஆக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொல்லும்போது, "நாம் இவ்வளவு அதிகாரங்கள் கேட்கிறோம், மத்திய அரசைப் பலவீனப் படுத்திவிடக் கூடாது என்பதில் நமக்கு அக்கறை இருக்கிறது. காரணம் நம்மைச் சுற்றி ஆபத்து இருக்கிறது என்று நாம் உணருகிறோம்" என்று சொன்னதைப் போல், அப்படி பயன் உள்ளதாக விவாதம் செய்தால், நன்றாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி: It is a good compliment The Hon. Minister ven a very good compliment நல்ல வழக்கறிஞர் என்று அமைச்சர் ஒத்துக்கொள்கிறார். அதற்காக நன்றி. ஆனால் இதிலே என்ன வந்திருக்கிறது என்றால், இதிலே என்ன சிபாரிசுகள் இருக்கின்றன என்பதுதான். முதலமைச்சர்கள் மாநாடு கூட்டி பேசியிருக்கிறார்கள். அது தென்னக முதல்வர்கள் மாநாடா, அல்லது அகில இந்திய முதல்வர்கள் மாநாடா? நாளைக்கு எல்லா முதலமைச்சர்களும் கூடும் வாய்ப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாம். அல்லது ஒருவர் கூட கூடமுடியாத நிலைமை வந்தாலும் வரலாம். அது அரசியல் போக்கைப் பொறுத்தது. அரசியல் சூழ்நிலை மாறுவதற்கேற்ப சிந்தனை ஏற்படுகிறது என்று ஆரம்பத்தில் சொன்னேன்.

It is for the Chief Ministers. Rightly the Hon. Minister has stated that it all depends upon the political development. The Hon. Minister will not once again accuse me that I am a good lawyer. Even such a compliment becomes an accusation

திரு. ஏ. ஆர். தாமோதரன்: இனிமேல், கூட முடியாமல் போய்விடலாம் என்று உறுப்பினர் சொன்னார். எல்லா மாநிலங்களிலும் பிரசிடெண்ட் ரூலைச் சிபாரிசு செய்யப்போகிறாரா என்று தெரியவில்லை.

திரு. க. இராமமூர்த்தி: சுற்றியிருக்கிற கட்சிகள் கேட்டாலும், பரவாயில்லை. அதிகாரத்தை நிலை நிறுத்துவது என்பது மட்டுமல்ல. எல்லோரையும் அணைத்துப் போக வேண்டும். ஒரேயடியாக உங்களை விரோதப்படுத்தவும் கூடாது. நீங்கள் கலையுங்கள் என்று சொல்லி, அதில் நியாயமும் இருக்கும்போது, நான் கலைக்காமல் இருந்தால், நன்றாக இருக்காது இல்லையா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கேட்டதால் சொல்கிறேன். அரசியல் சூழ்நிலை எப்படி வருகிறது என்று யூகிக்க முடியாது. எப்படியும் வரலாம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக ஆனபோது, கிட்டத்தட்ட 6-7 மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் இருந்தார்கள். அப்போது டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் அண்ணா கலந்து கொண்ட பிறகு, அங்குள்ளவர்கள் காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும், அதற்கு அண்ணாவே தலைமை தாங்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அண்ணா



அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் வேறு ஒரு காரணத்தைச் சொன்னார்கள். அண்ணா சொன்னது, கொள்கை அடிப்படையில், குறிப்பிட்ட, திட்டவட்டமான நிலையில் நின்று, நாமே அந்தக் கூட்டத்தைக் கூட்டி, நாம் தலைமை தாங்க வேண்டுமே தவிர, இன்றைக்கு காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள், காங்கிரஸ் முதலமைச்சர்கள் என்ற பாகுபாட்டை நாம் ஏற்படுத்திவிடக் கூடாது என்று சொன்னார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். மொழிப் பிரச்சினையில் வேண்டும். அதற்கு எந்தெந்த அதிகாரம் அளிக்க வேண்டும் என்று பார்க்கவேண்டும். ஏனென்றால் சில நேரங்களில் முதலமைச்சர்களை அந்தக் கட்சி நியமிக்கிறது. சில நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். சில மாநிலங்களில் முதலமைச்சர்களுக்கும் மக்களுக்கும் சம்பந்தமே இருக்காது. தமிழகத்தில் மக்களுடைய முழுச் செல்வாக்குப் பெற்ற கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி தங்கள் முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படி இங்கு இருக்கிறது. ஆந்திராவில் அப்படி இருக்கிறது. மாறுபாடுகள் வரும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்ற முன்மாதிரியான படிப்பினை நமக்கு இருக்கிறது. எனவே இதை மத்திய அரசுக்கு எதிராகவோ, காங்கிரஸ் கட்சிக்கு எதிரானதாகவோ வந்திருக்கிறது என்ற நினைவு யாருக்கும் வந்துவிடக்கூடாது. ஆகவே உண்மையிலேயே தேவைகளின் நிர்ப்பந்தத்தால், இந்தக் கட்டம் வந்திருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(பிற்பகல் 6.00)

திரு. க. இராமமூர்த்தி: நான் கூட இதை காங்கிரஸ் கட்சிக்கு அல்லது ஆட்சிக்கு எதிரானது என்றோ, மத்திய அரசுக்கு எதிரானது என்றோ சொல்லவில்லை. எனவே அத்தகைய உணர்வு யாருக்கும் தேவையில்லை, அவசியமும் இல்லை. I have not stated any such thing. You should not have any such reservation. காங்கிரசுக்கு எதிராகவோ அல்லது மத்திய அரசுக்கு எதிராகவோ கூடுகிறோம் என்ற எண்ணம் உங்களுக்குக்கூட தேவையில்லை.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அதைச் சொன்னதற்குக் காரணம் இந்த மாநாடு கூட்டப்பட்டதைப்பற்றி கேரள மாநில முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவிக்கும்போது, இது ஏதோ மத்திய ஆட்சிக்கு எதிராகக் கூட்டப்பட்டதைப்போல் கூறியிருக்கிறார். ஆனால் இது நிச்சயமாக மத்திய அரசுக்கு எதிரானதல்ல.

மத்திய ஆட்சிக்கும் எதிரானதல்ல. அரசு என்று சொல்லும்போது, அங்குள்ள காங்கிரஸ் கட்சிக்கும் எதிரானதல்ல. நமக்கென்று சில பிறப்புரிமைகள் இருக்கின்றன. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்தில் சமத்துவமுள்ள கூட்டாட்சி வேண்டுமென்ற கொள்கையை வைக்கிறோம். அவ்வளவுதான். இதைச் சொன்னதற்குக் காரணம் கோண மாநில முதலமைச்சர் இது ஏதோ மத்திய ஆட்சிக்கு விரோதமானது, எதிரானது என்று கூறியதாகும் என்பதை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான்கு தென் மாநில முதலமைச்சர்கள் பெங்களூரில் கூடியபோது. அந்த மாநாடு அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்றோ, தவறு என்றோ கூட மத்திய அரசால் கூறப்படவில்லை. அப்படிக் கூடுவதற்கான உரிமை இந்திய ஜனநாயகத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இத்தகைய உரிமை இல்லை என்றுகூட இதுவரை அறிவிக்கவோ மறுக்கவோ இல்லை. ஆனால் அதற்கு மாறாக சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டபடி, அப்போது அண்ணா அவர்களேகூட ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் கூடுவது நல்லது என்று சொல்லியிருக்கிறார். எனவே மாநில முதல்வர்கள் கூடுவதே நாட்டுக்கு ஆபத்தானது என்று வந்துவிடக்கூடாது. மத்திய அரசே கூட அப்படிக் கருதவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: நான் இந்தக் கருத்தை மறுக்கவில்லை. காரணம் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கருநாடக மாநில முதலமைச்சர் இப்படிப்பட்ட கூட்டம் தேவையில்லை, அவசியமில்லை என்று திருவனந்தபுரத்தில் நிருபர்களைக் கூட்டி இரண்டு மாதங்களுக்கு முன்தான் சொல்லிவிட்டு, அதற்குப் பின்னாலே இப்படி தென்மாநில முதலமைச்சர்கள் மாநாடு என்று கூட்டுகிறார் என்றால், அதன் காரணமாகத்தான், Their bona fides are doubted எப்படி இவர்களை எல்லாம் நம்புவது? எந்த அளவுக்கு இவர்களை நம்புவது? இதற்கு மேல் நான் போக விரும்பவில்லை. ஏனென்றால் நாம் அந்தக் கட்டங்களைத் தாண்டி வந்திருக்கிறோம். தற்போது, நம் முன்னாலே இருக்கிற பிரச்சினை இதற்கான அவசியம் இருக்கிறதா இல்லையா? அவசியத்தின் அடிப்படையில் எது எது தேவை என்பதுதான்



முக்கியம். சென்ற மாதம் 20ஆம் தேதி பெங்களூரில் தென்மாநில முதலமைச்சர்களின் கூட்டம் நடந்து முடிந்திருக்கிறது. இன்று நாம் ஏப்ரல் மாதம் 13ஆம் தேதியில் இருக்கிறோம். இதுவரை அங்கே நடைபெற்ற நடவடிக்கைகளின் சாராம்சத்தைக் கொடுத்திருக்கலாம். அந்த முடிவுகளின் மீது இந்த அரசு என்னென்ன முடிவுகளை எடுத்திருக்கிறது என்பதையாவது எங்களுக்குத் தெரிவித்திருக்கலாம். அந்தக் கூட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள்பற்றி மட்டும்தான் பேசப்பட்டிருக்கிறது. ஒருவேளை பத்திரிகைகள் அதைப்பற்றி மட்டும்தான் 'ஹைலைட்' செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

A bulk of the financial resources be transferred to the States on statutory basis rather than on a discretionary basis. The criteria for distribution of discretionary resources too should be decided upon by the Council of Chief Ministers.

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மத்திய அரசு எப்படி நிதிப் பங்கீடு செய்ய வேண்டும் என்பதுபற்றி அங்கே ஆலோசனை நடத்தி முடிவெடுத்திருக்கிறார்கள், அல்லது ஒரு அண்டர்ஸ்டேண்டிங்குக்கு வந்திருக்கிறார்கள்.

What we want is much more. What we think is much more. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, "இந்த அதிகாரம் அங்கே இருக்கலாமா, அந்த அதிகாரம் அங்கே இருக்கலாமா? இந்த அதிகாரம் மாநிலத்தில் அல்லவா இருக்க வேண்டும், ஜனதா ஆட்சிக் காலத்தில் மாநிலங்களில் உள்ள ஆட்சிகளை எல்லாம் கலைக்கவில்லையா? அப்போது என்ன செய்தீர்கள்?" என்றெல்லாம் கேட்டாலிட்டாலும், அதற்காக நான் உள்நோக்கம் கற்பிக்க விரும்பவில்லை. நான் கேட்பது அதைத் தாண்டி, நம்முடைய அரசினுடைய பரிந்துரைகள் யாவை? அதுவும் அதிகாரபூர்வமான பரிந்துரைகள் யாவை? சொல்ல வேண்டாமா? நீங்கள் என்னென்ன தேவை என்று விரும்புகிறீர்கள், எதை மத்திய அரசு செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? மத்திய மாநில உறவு முறைகள் சீர்பட, அல்லது, இந்திய ஒருமைப்பாட்டுக்கு நன்மை செய்யும் வகையில் மத்திய மாநில அரசுகளிடையே எப்படிப்பட்ட முறையில் அதிகாரப் பங்கீடுகள் இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள்? இதையெல்லாம் அரசு சார்பில் விளக்கமாகக் கொடுத்திருந்தால், பரவாயில்லை. அப்படி இல்லை என்றாலும், நடைபெற்ற அந்த மாநில முதல்வர்கள் மாநாட்டில் அல்லது கூட்டத்தில்—அது எதுவாக இருந்தாலும் அதற்கு ஒரு மரியாதை கண்டிப்பாக உண்டு என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்—என்ன முடிவெடுத்திருக்கிறார்கள்? அதையாவது

எங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டாமா? ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்கு அந்த முடிவுகள் தெரிந்திருக்கலாம், அவை அவருக்குக் கிடைத்திருக்கலாம். ஆனால் எனக்கு அந்த வாய்ப்பு இல்லையே? அவைகளையெல்லாம் அவையில் அதிகார பூர்வமாக வைத்தால் தானே, நாங்கள் படிக்க முடியும்?

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே அவையில் மாண்புமிகு உறுப்பினர்களின் தகவலுக்காக வைக்கப்படும் அறிக்கைகள் என்ற தலைப்பின்கீழ் இந்த முடிவுள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் தென்மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் என்னென்ன முடிவுகள் செய்திருக்கிறார்கள் என்பதுபற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்கம் டாக்ஸ் எப்படி இருக்க வேண்டும், சர்சார்ஜ் எப்படி 40 சதவிகிதம், 60 சதவிகிதம் என்று இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதையாவது ஒப்புக் கொள்கிறாரா இல்லையா என்பதைத்தான் நாங்களும் கேட்கிறோம், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கேட்கிறார்கள். உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதையே அவர் பார்க்கவில்லை என்றால், நாங்கள் என்ன செய்யமுடியும்?

திரு. க. இராமமூர்த்தி: நான் அதைத்தான் கேட்கிறேன். உங்கள் தீர்மானங்கள் மூலமாகச் சொல்லப்பட்டிருப்பவைகளே போதும் என்று சொல்கிறீர்களா? நீங்கள் ஸ்பெசிப்பிக்காக என்ன சொல்கிறீர்கள்? அரசியலமைப்புச் சட்டத்தில் என்னென்ன மாற்றங்கள் தேவை என்று சொல்லுகிறீர்கள்? . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்பதைப் பார்த்தால், நாம் முறையாகக் கேட்டால் அவரே கொடுக்கத் தயாராக இருப்பதைப்போல் பேசுகிறாரே. இப்போது கேட்டிருப்பதை முதலில் கொடுக்கட்டும். பிறகு மற்றவைகளைப் பார்ப்போம் . . .

திரு. க. இராமமூர்த்தி: இதைத்தான் நான் "அவாய்டிங் தி இஷ்யூ" (Avoiding the issue) என்று சொல்லுகிறேன். இராஜமன்னார் கமிட்டி ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அந்த வகையில் அரசியல் சட்டத்திற்கு இன்னின்ன திருத்தங்கள்



தேவை என்று நீங்கள் முறையாக மத்திய அரசுக்கு எழுதி, அவற்றை வற்புறுத்தவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதுமட்டுமல்ல, மாநில-மத்திய அரசு உறவுகள் குறித்து இவ்வளவு வேகமாகப் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள்தான் "இராமமூர்த்தி கமிஷன்" வேண்டாம் என்று சொல்லுகிறார், இப்போது இராமபிரசாத் கமிஷனா? அந்தக் கமிஷன் வேண்டாம், அதைக் கலைக்க வேண்டும் என்று இவர்தான் கேட்கிறார் . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எங்களின் அடிப்படைக் கோரிக்கையைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார். இராமமூர்த்தி கமிஷன் வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. அதை ஏற்றுக்கொண்டதால்தான். அதில் எங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்கிறோம் . . .

திரு. க. இராமமூர்த்தி: Sir, I stand corrected. மன்னிக்கவும். சதாசிவம் கமிஷன் அமைத்ததைக் கலைக்க வேண்டும் என்று கேட்டீர்கள் . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே போனால், நானும் பதில் சொல்லிக்கொண்டே இருக்க முடியும். சதாசிவம் கமிஷன் வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணங்களை நாங்கள் சொல்லியிருக்கிறோம். அவர் ஏன் விசாரிக்கக் கூடாது என்பதற்கான காரணங்களை நாங்கள் விளக்கியிருக்கிறோம். இப்போது இராமமூர்த்தி கமிஷன் போட்டதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதிலிருந்தே தெரியவில்லையா? . . .

திரு. எஸ். ஆர். இராதா: இது சதாசிவம் கமிஷன் பற்றிய விவாதமா அல்லது மாநில முதல்வர்கள் மாநாட்டு விவாதமா? மாநில முதல்வர்கள் மாநாட்டுத் தீர்மான விவாதத்தில் இதெல்லாம் வருகிறதா? . . .

திரு. க. இராமமூர்த்தி: எப்படியானாலும் மத்திய விசாரணை தேவை என்று குரல் கொடுத்ததில் மாற்றம் இல்லை என்றுதான் நினைக்கிறேன். நான் அதற்குள் அதிகமாகப் போக விரும்பவில்லை. இங்கே அரசியல் சட்டத்திற்கு நாம் என்னென்ன மாற்றங்களைச் செய்ய விரும்புகிறோம் என்று அதிகாரபூர்வமாக எதையாவது மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோமா? அத்தகைய சிந்தனையையாவது நாம் உருவாக்கியிருக்கிறோமா? அதைத் தானே இன்றைக்கு அன்னை இந்திரா காந்தி அவர்கள் கேட்டிருக்கிறார்கள்,

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 13

மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் நேற்றைக்குச் சொல்லியிருக்கிறாரே!
சர்க்காரியா கமிஷனுக்கு எதையெதைச் செய்ய வேண்டுமென்றாலும் கூறுங்கள் என்று கேட்டிருக்கிறாரே? அந்த அடிப்படையில் "We should evolve" என்று சொல்லியிருக்கிறாரே. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் திரு. நல்லசிவன் அவர்களும் குறிப்பிட்டதைப்போல், இந்தக் கமிஷன் ஒரு டைம் பவுண்டு time-bound கமிஷனாக இருக்க வேண்டும் என்று நாம் கேட்கலாமே? அதுமட்டுமல்ல. சர்க்காரியா கமிஷனுக்கு மேலும் இரண்டு ஜட்ஜுகள் அல்லது வேறு இரண்டு உறுப்பினர்களைப் போட வேண்டும் என்று நாம் கேட்கலாமே? எனவேதான் உங்களுடைய அதிகார பூர்வமான தெளிவான கோரிக்கைகள் என்ன என்று கேட்கிறேன். "ராஜமன்னார் கமிட்டி ரிப்போர்ட் ஏற்கெனவே உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதைப் படித்துப் பார்த்து எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்வது எந்த வகையிலும் சரியல்ல. அரசியல் சட்டத்திற்கு இன்னின்ன திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று நம்மாலே தெரிவிக்கப்பட வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருப்பவர் திரு. இராமமூர்த்தி அவர்கள். அவருடைய தகவலுக்காகச் சொல்கிறேன். 1977 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதி மேற்கு வங்கத்தில் உள்ள இடதுசாரி முன்னணி மந்திரி சபை கூடி விவாதித்து, ஒரு மெமோராண்டம் தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. அதில் அரசியல் சட்டத்தின் இன்னின்ன ஷரத்துக்கள் திருத்தப்பட வேண்டும் என்று திட்டவட்டமான விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது பப்ளிக் டாக்குமெண்ட்டாக இருப்பதால், அதைப்பற்றி அவையில் பேசி, அதிக நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அப்படிப்பட்ட விவரம் மத்திய அரசின் முன் இல்லாததன் காரணமாகத்தான், மத்திய அரசு இதைச் செய்யாமல் இருக்கிறது என்பதைப்போல் மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். மத்திய அரசின் முன் அத்தகைய புரொபோசல்ஸ் 1977 ஆம் ஆண்டிலிருந்தே இருக்கிறது. ஆகவே மாநில அரசிடமிருந்து திட்டவட்டமான புரபோசல்ஸ் எதுவும் வரவில்லை என்ற காரணத்திற்காக, மத்திய அரசு செய்யாமல் இல்லை. மத்திய அரசில் இருப்பவர்களுக்கு இதைச் செய்ய மனம் இல்லை. தங்களுடைய அதிகாரத்தை விட்டுக்கொடுப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 13] [திரு. க. இராமமூர்த்தி]

**திரு. க. இராமமூர்த்தி:** அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் மட்டும்தான் படித்திருக்க முடியும். நான் படிக்கவில்லை. என்னுடைய மாநில அரசு இதில் என்ன கருத்தைச் சொல்கிறது என்பதுதான் முக்கியமே தவிர, மேற்கு வங்க அரசு என்ன சொல்கிறது என்பதல்ல பிரச்சினை. என்னுடைய மாநில அரசு இன்னின்ன திருத்தங்களைச் சொல்கிறது என்றால், நான் அதில் என் கருத்தைச் சொல்ல முடியும். ஒரு 'பில்' வரும்போது நாங்கள் எங்களுடைய கருத்தைச் சொல்லவில்லையா? அதைப்போல சொல்ல மாட்டோமா? ஒருவேளை சில நேரத்தில் பில் (Bill) மாதிரி

(பிற்பகல் 6-10)

இல்லாமல், ஏற்றுக்கொள்ளலாம். ஒருமித்த கருத்தாகப் போகும். இதற்குள் ஏன் பிரிவினை? இப்போது முதலமைச்சர் அவர்கள் போய்விட்டு வந்திருக்கிறார்கள் என்பதற்காக, அவரைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக ஆதரிக்கிறேன் என்றால், அது தேவைதானா? ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அதிகாரக் குவியல் இருக்கிறது, அங்கே பிரிவினை, இங்கே பிரிவினை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணி சரித்திரத்தை மறந்துவிட வேண்டாம். இப்படிப்பட்ட பேச்சுக்கள் பல காலமாக இருக்கின்றன. சுதந்திரத்திற்கு முன்பும் இருந்தது. அப்போதைக்கப்போது அது தலைதூக்கி அடங்கிவிடும். பிரச்சினைகள் வரும்போது தலைதூக்கும். பின்னர் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். பஞ்சாப் பற்றி இப்போது பேசுகிறோம். அசாம் பற்றிப் பேசுகிறோம். மத்திய அரசிடம் அதிக அதிகாரம் இருப்பதால்தான், அசாம் பிரச்சினை வந்ததா? ஆகவே இதையெல்லாம் உள்ளடக்கி சிந்தனை செல்லுகிற வகையிலே மத்திய, மாநிலங்களுக்கிடையிலே எப்படி இருக்க வேண்டும் என்று சிபாரிசுகள் செய்ய வேண்டும். அதற்கேற்ற வகையில் சிந்தனைகளை உருவாக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுடைய தீர்மானம் உதவி இருக்கலாமே தவிர, தமிழகத்தினுடைய உணர்வுகளைத் திரட்டுகிற வகையிலே, எல்லோரையும் அணைத்துக் கொண்டு போகக் கூடிய வகையிலே எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிற வகையிலே

"These are the suggestions, these are the proposed amendments to the Constitution which will help the Centre-State relationship" என்ற வகையிலே அமையவில்லை. அந்த அளவிலே அமைய வேண்டும். அதற்கேற்ற வகையிலே அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்ளுகிறார்கள் என்ற வெற்றிகரமான செய்தியைச் சொன்னால்,

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 13

கண்டிப்பாக உங்களோடு இல்லாமல் வேறு எங்கே இருக்கப் போகிறோம்? We will be with you இதைப்போன்ற சிந்தனைகள் உருவாக்கப் படுகிறதா என்றால், இல்லை.

The bona fides are doubted. It is not good either for the State or for the Centre or for national integrity.

ஆகவே அந்த அளவிலே அமைய வேண்டும் என்று சொல்லி இந்த உரையை முடிக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "20—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென்மாநில முதல்வர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை இந்த மேலவை வரவேற்கிறது, ஆதரிக்கிறது. இந்த முடிவுகளை அமுல் நடத்துவதற்காக விடா முயற்சி செய்ய வேண்டும் என்று இம்மேலவை தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது" என்ற இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நல்லசிவன் அவர்களுடைய தீர்மானத்தை முழு மனதோடு வரவேற்று சில கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கத்தோடு துவக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், பிறகு பிரிவினைத் தடைச் சட்டத்தின் காரணமாக தன் கொள்கைகளை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்ட சூழ்நிலையில், இந்த அவையின் தலைவராக இருக்கக் கூடிய மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் சொல்லி வந்த மாநில சுயாட்சிக் கொள்கையை இந்த நாட்டிலே எப்படி நாம் வளர்க்க வேண்டும் என்பதைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தை முதலிலே சொல்லி இந்த விவாதத்தைத் தொடங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1969 ஆம் ஆண்டு, "ஹோம் ரூல்" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதுகிற நேரத்தில்,

"அன்புள்ள தம்பி,

நான் பதவியைத் தேடி பைத்தியம் பிடித்து அலைபவனுமல்ல; காகிதத்தில் கூட்டாட்சியாகவும், நடைமுறையில் மத்தியில் அதிகாரக் குவிப்பு கொண்டதாகவும் இருக்கிற ஒரு அரசியல் சட்டத்தின்கீழ் முதலமைச்சராக இருப்பதற்கு மகிழ்ச்சி கொண்டிருப்பவனுமல்ல. இதற்காக மத்திய அரசிற்கு



1983 ஏப்ரல் 13] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

எரிச்சல் ஏற்படுத்துவதும், டில்லியோடு சண்டை போடுவதும்தான் எனது நோக்கம் என்று எனது நண்பர் ஈ.எம்.எஸ்.-ஐப் போல் நான் பிரகடனம் செய்ய விரும்பவில்லை. அதனால் யாருக்கும் நன்மையில்லை. உண்மைதான். சரியான பருவத்தில் ஒரு உறுதி ஏற்பட வேண்டுமென்பதுதான் முக்கியம். ஆனால் கூட்டாட்சித் துறையைப்பற்றி மக்களுக்கு விளக்கம் கொடுப்பதை அதற்கு முன்னால் செய்ய வேண்டும். அந்தப் பணியில், அன்புத் தம்பி, உன்னுடைய உற்சாகமான ஒத்துழைப்பும், மனப்பூர்வமான பங்கேற்பும் எனக்குக் கிடைக்குமென்பதில் எனக்கு நிச்சயம் நம்பிக்கை உண்டு."

"பதவியில் இருப்பதன்மூலம், இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் கொல்லைப்புறமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக் கூடிய பொதுமக்களின் கவனத்திற்கு தி.மு.க. கொண்டுவர முடியுமானால், அது உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும்."

என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அப்படி அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியதைத்தான், திராவிட முன்னேற்றக் கழகம் 1969 ஆம் ஆண்டு இந்த மாநில சுயாட்சிக் கொள்கையை நாட்டிலே விவாதத்திற்கு வைத்து, அந்தக் கருத்தைப் பரப்புவதற்காக டாக்டர் ராஜமன்னார் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழுவின் அறிக்கையை 1974 ஆம் ஆண்டு இந்த இரு அவைகளிலும் விவாதித்திருக்கிறோம். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு நாவலர் அவர்களும், மற்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் அன்று அப்படி கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தீர்மானத்தை சட்டப் பேரவையிலே வைத்து அப்போது முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தத் தீர்மானத்தின் முடிவிலே,

"மாநிலங்களின் மொழிகள் வளரவும், பண்பாட்டுத் தன்மைகள் காக்கப்படவும், மாநிலத்திற்கு மாநிலம் நல்லுறவுகள் வளரவும், மத்திய மாநில உறவுகள் நிலைத்துச் செழிக்கவும் நாட்டின் பொருளாதாரம் வளம் பெற்றுத் திகழவும், அரசியல் சட்டத்தில் இந்த மகத்தான மாறுதல்களைச் செய்வது எதிர்காலத்தில் இந்தியாவின் வலிமையையும், வளப்பத்தையும் பெருக்குவதற்கு அடித்தளமாக அமையும் என்பதை உணர்ந்து மத்திய அரசினர் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உறுதுணையாக உங்கள்

ஒத்துழைப்பு அமைய வேண்டுமென்று விழைகிறேன். மக்களின் நல்வாழ்வை மையமாகக் கொண்டும், பெற்ற சுதந்திரத்தின் பயனை நாடு அனுபவிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை நெஞ்சில் பதித்துக்கொண்டும். இந்திய அரசியல் அரங்கில் தமிழ் நாடு அரசின் சார்பில் நாம் ஏற்றிவைக்கும் இந்தச் சுடர் விளக்கு ஒளிவிட அரசியல் மேதைகள் தூண்டுகோலாக இருக்க வேண்டு மென்றும் பணிவன்புடன் கோருகிறேன்."

என்று கூறித் துவக்கி வைத்தார்கள். அன்று தூண்டிவிட்ட அந்த விளக்கு தான் இன்று எரிந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகக்காரர் கள் சொல்லியிருக்கிறார்கள், ஆகவே இதை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணங்கள் எல்லாம் அப்போது இருந்தன. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதைப் போல, இது குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் கூட முதலிலே சொல்லவில்லை. "மாநிலத்திற்கு சுயாட்சி. மத்தியிலே கூட்டாட்சி" என்ற சொற்றொடரை வேண்டுமானால் சொல்லி யிருக்கலாம். ஆனால் இதே கருத்தை 1945 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி யினுடைய செயற் குழுவில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. அப்துல்கலாம் ஆசாத் பேசுகின்றபோது தெரிவித்திருக்கிறார். அவருடைய கருத்தைக் கேட்டால், திரு. இராமமூர்த்தி அவர்களுக்குத் திருப்தியாக இருக்கும். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் இப்போது இந்த அளவிற்கு வந்திருப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையிலிருந்து இன்று ஓரளவிற்கு, வேறு வழியில்லாத காரணத்தால், இறங்கி வந்திருக்கிறார்.

திரு. க. இராமமூர்த்தி: எந்த அளவிற்கு இறங்கி வந்திருக்கிறார்கள் என்பதற்கு அவரே சொன்னார்—திராவிட நாடு கேட்டதிலிருந்து இப்போது எங்கே வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: திராவிட நாடு திராவிடர்களுக்கே என்ற கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்தோம். இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கத்திற்குத் தடை போடக் கூடிய அதிகாரம் இருந்தும் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் இருந்திருக்கு மானால், இன்னும் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கக் கூடும். தடைச் சட்டம் வந்த காரணத்தாலே கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கொள்கையை விட்டுக்கொடுக்கக்கூடிய . . .



திரு. க. இராமமூர்த்தி: தடை செய்ததற்காக கொள்கையை விட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அண்ணா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். 1962 ஆம் ஆண்டு . . .

திரு. க. இராமமூர்த்தி: அண்ணா அவர்கள் சொன்னதைப்பற்றி நான் சொல்லவில்லை. அவர் இப்போது இருந்திருந்தால், இந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். இப்போது இவர்கள் சொல்லுவது, தடைச் சட்டம் வந்ததால் விட்டுவிட்டோம் என்று சொல்லுவதுபோல இருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: திராவிடர் இயக்கம் இந்த நாட்டிலே இருக்கின்ற வரையில் கேட்கிற உரிமை இருப்பதிலே தவறு இல்லை. 1962 ஆம் ஆண்டு விலைவாசிப் போராட்டத்திலே வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு வெளியே வந்தபோது, சீனா யுத்தம் நாட்டைக் கவ்விக் கொண்டிருந்தபோது, நாட்டைப்பற்றியும், சமுதாயத்தில் இருக்கக் கூடிய கடமையைப்பற்றியும் எடுத்துச் சொன்னதாலே, மறுபரிசீலனை செய்தோம் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். விட்டுக் கொடுத்தால் ஏன் விட்டீர்கள் என்கிறார்கள். புதிய இலட்சியத்தைச் சொன்னால், அப்படிச் சொல்லலாமா என்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற கஷ்டமே இதுதான்.

திரு. அப்துல்கலாம் ஆசாத் அவர்கள்,

"All over the world, the tendency was for the decentralisation of power. In a country so vast as India and with people, so diverse in language, customs and geographical conditions a unitary Government was obviously most unsuitable. Ultimately, I came to the conclusion that the Constitution of India must from the nature of the case. be federal. 'Further, it must be so framed as to ensure, autonomy to the provinces in as many subjects as possible. We have to reconcile the claims of the provincial autonomy with national unity."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றுள்ள சூழ்நிலையில் இந்தியா எவ்வளவு பரவலாக அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதற்கு அப்படிப்பட்ட கருத்துக்களை காங்கிரஸ்காரர்கள் எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1983 ஏப்ரல் 13

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள். இந்த அதிகாரத்தைக் கொடுக்கக் கூடிய இடத்திலே மாண்புமிகு உறுப்பினர் இருப்பாரேயானால். ஒரே நாளில், காலை போய் மாலை வாங்கி வந்துவிடலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. என்னென்ன செய்ய வேண்டும் என்று அவர் கேட்கிறார். 1974 ஆம் ஆண்டிலேயே தீர்மானம் போட்டார்கள். தீர்மானம் போட்டுவிட்டு,

(பிற்பகல் 6-20)

அதற்குப் பிறகு என்ன செய்தார்கள் ? என்ன வேண்டுமென்று ஸ்பெசிப்பிக்காகச் சொல்லுங்கள் என்று சொல்கின்றார்கள். 1974 ஏப்ரல் 14 தேதி முதல் 20 தேதி வரையில் நடைபெற்ற விவாதம். அந்த விவாதத்திலேதான் அரசாங்கம் ஒரு முடிவு எடுத்து இணைப்புக்களைச் சேர்த்திருக்கிறது. அந்த இணைப்புக்களிலேதான் நமக்கு என்னென்ன அதிகாரம் வேண்டும், என்ன மாற்றங்கள் வேண்டும், இந்திய அரசியல் சட்டத்தை எப்படி மாற்ற வேண்டும் என்றெல்லாம் மிகத் தெளிவாக ஒன்றிரண்டு பக்கங்களில் அல்ல, 117-வது பக்கத்திலிருந்து 178-வது பக்கம் வரையில், ஏறத்தாழ 71 பக்கங்களில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். அப்போது அரசாங்கத்தினுடைய கொள்கையில் எந்தெந்த மாற்றம் தேவை என்பதையெல்லாம் அதிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். 1935 ஆம் ஆண்டு வெள்ளைக்காரர்கள் உருவாக்கிய அந்தச் சட்டத்தைத்தான் அப்படியே வைத்துக்கொண்டு சில மாற்றங்களோடு பின்பற்றி வருகிறோம் என்று சொன்னால், அது சரியாகாது. ஆகவே அந்தச் சட்டத்திலே இன்றைய சமுதாயத்திற்கு வேண்டிய திருத்தங்கள் வேண்டும் என்பதைத்தான் பெங்களூரிலே கூடிய தென் மாநில முதலமைச்சர்கள் மிகத் தெளிவாக விவாதித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன விவாதித்தார்கள் ? அரசு இங்கே நமக்குக் கொடுத்திருக்கிறது. அதைப் பார்க்கின்ற நோக்கிலே பெங்களூர் மகாநாட்டில் இன்னும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 'அடிப்படை வருமான வரியோடு மேல்வரியையும் இணைத்து அப்படி இணைக்கப்பட்ட நிலையில் மாநிலங்களின் பங்கினைத் தரவேண்டும்" என்பது அறிக்கையில் வருகின்ற ஒரு வாசகம். இதனைக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட ராஜமன்னார் குழு, எந்த வடிவத்திலே விளக்கியிருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ராஜமன்னார் குழுவினுடைய பரிந்துரை "மேல்வரி வருவாயில் மாநிலங்கள் பங்கு பெற முடியாமல் போனால் அதில் நியாயமில்லை ; எனவே மேல்வரி



1983 ஏப்ரல் 13] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மாநிலங்களிடையே பகிர்ந்து கொள்ளப்படும் வகையில் அடிப்படை வருமான வரி விகிதத்தோடு மேல்வரி இணைக்கப்படவேண்டும் எனப் பரிந்துரைக்கிறோம்" என்று ராஜமன்னார் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆக 1974-லே சுட்டிக்காட்டினோமே, அதைக் கொடுத்து விட்டார்களா ? பெங்களூரிலே கூடி மிகத் தெளிவாக மறுபடியும் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். 1974-லிலே நாம் கேட்டதைக் கொடுத்திருந்தால், இன்று இந்த விவாதமே எழத் தேவையில்லை. அது மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கேட்டாலும் சரி, யார் அதைக் கேட்டாலும் அதிலே நியாயம் இருக்கின்ற காரணத்தினாலே, அதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், சுருக்கமாகச் சொல்கின்றேன். 1974 ஆம் ஆண்டு மாநில அரசு நிறைவேற்றிய தீர்மானத்திலே "மைய அரசினுடைய பட்டியலிலே இருந்து 'வருமான வரி'-யை மாநிலப் பட்டியலுக்கு அப்படியே மாற்றிவிட வேண்டும்" என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதை இன்றையதினம் மத்தியிலே இருப்பவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்களா ? ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில் வருமானம் முழுவதும் அவர்களுக்குத் தேவை. வறட்சியா ? அவர்கள் பார்த்து ஏதாவது தருவார்கள். இதைப்பற்றியெல்லாம் பின்னாலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எது எது தேவை என்று சொல்லியிருக்கின்றார்கள். மாநில முதலமைச்சர்கள் எல்லாம் 257-வது பிரிவு அகற்றப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அது என்ன 257-வது பிரிவு ? 'மத்திய அரசு, மாநில அரசுக்குக் கட்டளை பிறப்பிக்கின்ற அதிகாரம்.' அது நீக்கப்பட வேண்டும் ஏதோ அவர்கள் மாமியாரைப் போலவும் நாம் மருமகளைப் போலவும் கட்டளை பிறப்பிக்கின்ற அதிகாரங்கள், அங்கே டெல்லியிலே இருக்கக்கூடாது. இது ராஜமன்னார் குழு பரிந்துரை. இதைத்தான் முதலமைச்சர் அவர்கள் பெங்களூரிலே சொல்லியிருக்கின்றார்கள். பிரிவு 257 தேவையில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். 'மாநில அரசினுடைய சட்டங்களுக்கு மத்திய அரசு எந்த நேரத்திலும் தடங்கல் செய்யலாம் என்கின்ற அதிகாரம்'. இங்கே நாம் இருக்கிறோம். இங்கே நிலம் இருக்கிறது. இந்த நிலத்தை எப்படி நிலச்சீர்திருத்தத்தின்படி கொண்டுவருவது என்ற அதிகாரம் இருக்கிறது. இந்த அவையில் நாம் அதை நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பினோம். டெல்லி ஒப்புதல் கொடுத்ததா ? இந்த மாநிலச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள், சட்டங்கள் எதுவாக இருந்தாலும், அதுதான் முடிவானதாக இருக்க வேண்டுமே தவிர, மத்தியிலே போய் பிறகு குடியரசுத் தலைவருக்குப் போய் அங்கே நான்கு ஆண்டுகள் கழித்து மறுபடியும் திருப்பி அனுப்புகின்ற அதிகாரம் இருக்கக்கூடாது

என்பதற்காகத்தான் மிகத் தெளிவாக அந்தப் பிரிவு 257 தேவையில்லை, நீக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 359 (2) என்பது தேவையில்லை என்று சொல்கிறார்கள். அதை நம்முடைய முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கின்றார்கள். அது என்ன? 'தாழ்த்தப்பட்டோர், மலைஜாதி மக்கள் குறித்து மத்திய அரசுதான் கட்டளைகள் பிறப்பிக்கும்' என்பது. தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களைப்பற்றி மாநில அரசுகளுக்குக் கவலை கிடையாதா? மாநில அரசுகள் ஏதோ இவர்களைக் கவனிக்காதது போலவும் அவர்கள்தான் கவனித்துக்கொண்டு இருப்பதைப்போலவும் இருக்கிறது. நான் திரு. இராமமூர்த்தி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மண்டல் கமிஷன் ரிப்போர்ட் கொடுத்தது. அதில் என்ன முடிவு எடுத்தார்கள்? தாழ்த்தப்பட்டோர், மலைஜாதி மக்கள் குறித்த அந்த அறிக்கையின்மீது இன்னும் ஒரு முடிவும் எடுக்காது இருக்கின்றார்கள். அந்த நிலையில்தான் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினரின் கட்சியைச் சார்ந்தவர்தான் திரு. கிருஷ்ணமூர்த்தி. பேரவையிலேதான் நான்கு நாளைக்கு முன் பேசினார்கள். எப்படி அரசியல் பின்னணியில் நாம் அதை அதிகரித்துக் கொண்டே போனோம் என்பதைச் சொன்னார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நாம் ஒன்றை ஒத்துக்கொள்கிறோம். தாழ்த்தப்பட்டவர்கள் விகிதாச்சாரப்படி இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக அந்த விகிதாச்சாரம் அளிக்கப்பட வேண்டும். இன்று மண்டல் கமிட்டி அறிக்கை தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : கொஞ்சம் அதிகாரத்திலேயே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அதிகமாக்கி யிருக்கிறார்கள். Just diluted தான். அதையே நாம் பண்ணியிருக்கிறோம். அதையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அரசு உள்ள மாநிலத்திலே எந்தெந்த மக்கள் எந்தெந்தப் பிரிவினரை, பின் தங்கியோர் பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து அதை அரசாங்கமும் சரி என்று ஒத்துக்கொள்கிறது. அதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. அதை மத்திய அரசாங்கம் திருத்துவதுதானே.

திரு. க. இராமமூர்த்தி : அரசியல் பின்னணியிலே நடந்தது என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் கட்சியைச் சேர்ந்தவரே சொல்லியிருக்கிறார்கள்.



**திரு. எஸ். ஆர். இராதா :** அப்படி என்றால், இதைத் தான் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற அளவுக்கு மாநிலத்திற்கு உரிமை தருகிறார்களா? ஆதித் திராவிடர்கள் என்றால் இவ்வளவுதான் என்று அதையாவது சொல்லி உரிமை தரலாமே.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் குறித்த மான்யம் பற்றி விவாதிக்கும்போது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் 18.9 சதவிகிதம் இருப்பதாக புள்ளிவிவரம் சொல்கிறார்கள். பதவிகள் கொடுக்கும்போது, அவர்களுக்கு 16 சதவிகிதம் ஒதுக்கலாம் என்று சொல்வதில் என்ன தவறு? விகிதாச்சாரத்தை 16 என்பதை 18 சதவிகிதம் என்று உயர்த்துகிறோம். 25 என்பதை 31 ஆக உயர்த்துகிறோம். ஆக தேவை பெருகுகின்ற நேரத்திலே மாநில அரசு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, உயர்த்துவதில் எந்தவிதத் தவறும் இல்லை. இந்த அதிகாரம் ஏன் மத்திய அரசாங்கத்திற்கு? மலைஜாதியினர் பற்றியும், பின் தங்கியோர் பற்றியும், ஆதி திராவிடர்களைப் பற்றியும் ஏன்? இந்தச் சூழ்நிலையிலேதான், இந்தப் பிரிவு நமக்குத் தேவையில்லை என்று மிகத் தெளிவாகச் சொல்கிறோம்.

344(6) பிரிவு தேவையில்லை. இங்கே மாநில சுயாட்சி பற்றி விவாதித்த குழு, ராஜமன்னார் குழு மிகத் தெளிவாகச் சொல்லுகிறது. அதிலே என்ன இருக்கிறது? "344 (6) : மொழி குறித்த கட்டளைகளை குடியரசுத் தலைவர் பிறப்பிப்பார்" அது மிகமிக அபாயகரமானது. 'இந்திதான் தேசிய மொழி; ஆங்கிலம் அகற்றப்பட்டுவிட்டது', என்கின்ற கட்டளையைக்கூட திடீரென்று ஒரு நாள் குடியரசுத் தலைவர் 344(6)-ன்படி மிகத் தெளிவாகப் பிறப்பிக்கலாம். ஆக மொழியைப் பொறுத்தவரையில், நாம் மொழிவாரி மாநிலம் பெற்றுவிட்டோம் என்று பெருமையாகப் பேசிக்கொண்டிருக்கும் போது, இன்னமும் மொழியைப்பற்றியே, 344(6) என்ற பிரிவு தேவைதானா? என்பதைத் தான் நாம் இன்றையதினம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதைப் போலவே 7-வது அட்டவணை. அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? 'அரசியல் அமைப்பில், 7-வது விவர அட்டவணையை மாற்றி அமைப்பது உட்பட சட்டமியற்றுவதற்கான அதிகாரம் மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டும்' என்று பெங்களூர் தீர்மானம் சொல்கிறது. அது என்ன 7-வது அட்டவணை? மாநிலங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் மத்திய ஆட்சிக்கு என்னென்ன அதிகாரங்கள், பொதுப்பட்டியலில் என்னென்ன அதிகாரங்கள், இவைகள்தான் 7-வது அட்டவணையில் இருக்கின்றன. இந்த அட்டவணையைப் பொறுத்து, என்னைப் பொறுத்தவரையில்,

ஒரு தாழ்மையான கருத்து, மத்திய அரசாங்கத்திற்கு சில குறிப்பிட்ட அதிகாரங்கள் இருந்தால் போதும். ராணுவம் அங்கே இருக்கட்டும், நோட்டு அடிக்கிற அதிகாரம் இருக்கட்டும், போக்குவரத்து இருக்கட்டும். இப்படி விரல் விட்டு எண்ணக்கூடிய 5, 6 அதிகாரங்களை வைத்துக் கொண்டு மீதியுள்ள அதிகாரங்களையெல்லாம் மாநிலத்திற்குத் தந்திருக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** எல்லாவற்றையும் விரிவாகச் சொல்லலாம். உறுப்பினர் அவர்கள் 5,6 என்று சொல்லிவிட்டு மற்றதைச் சொல்லாமல் விட்டு விட்டார்களே.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** குறிப்பாக ஐந்தாறு சொன்னேன். எல்லாவற்றையும் சொல்வதாக இருந்தால், நேரம் இருக்காது. மொத்தத்தையும் சொல்வதற்கு நேரம் இல்லை. ' 5, 6 வைத்துக்கொள்ளுங்கள் ' என்று சில பெயர்களை மட்டும் சொல்லி மற்றதை விட்டதற்குக் காரணம் மொத்தத்தையும் சொல்லிக்கொண்டிருக்கவேண்டாம் என்பதுதான். ஆனால் இப்போது மத்தியிலே இருக்கக்கூடிய பட்டியல் 97. என்னென்ன இருக்கிறது பட்டியலில் ? அது மிகக் கொழுத்த அதிகாரங்களைக் கொண்ட பட்டியல். "பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், ரெயில்வே, தேசிய நெடுஞ்சாலை, துறைமுகம், ஆகாயவழி, தபால், தந்தி, கரன்சி, நாணயச் செலாவணி, ரிசர்வ் வங்கி, பரிசுச் சீட்டு, வங்கிகள், இன்சூரன்ஸ், இறக்குமதி, ஏற்றுமதி, சுரங்கம், எண்ணெய், சென்சார், வருமானவரி, கம்பெனி வரி" இப்படிப்பட்ட அதிகாரங்கள். நான் கேட்கிறேன்—இங்கே இருக்கக்கூடிய நிதி அமைச்சர் அவர்களுக்கு பரிசுச் சீட்டு அடிக்கக்கூடிய அதிகாரம் கிடையாதா ? போஸ்ட் ஆபீஸ், தபால் தந்தி அதையெல்லாம் சொல்லிவிட்டேன். காவேரி வட்டத்திலே எண்ணெய் இருக்கிறது என்று சொன்னால், அதை எடுக்கக்கூடிய அதிகாரம் நாவலருக்கு வந்தால், அவர் எடுக்கக்கூடாது என்று சொல்லி விடுவாரா ? அல்லது அங்கே இருக்கக்கூடிய டாட்டா கம்பெனிக்காரன் தான் எடுக்கவேண்டும், இராமமூர்த்தி அவர்கள் எடுக்கக்கூடாது என்று ஆணை பிறப்பிப்பாரா ? ஆக அதிகாரங்களைப் பொறுத்த வரையிலே, மத்தியிலே குவிந்திருக்கும் அந்த 97 அதிகாரங்களும் மாற்றியமைக்கப்பட வேண்டும். மாநிலப் பட்டியலிலே 66 அதிகாரங்கள். அவை என்னென்ன அதிகாரங்கள் ? 66 அதிகாரங்களில் 30 அதிகாரங்கள் முக்கியமே இல்லாதவை. இருபத்திரண்டு அதிகாரங்கள் வரிவிதிப்பைப் பற்றிய அதிகாரங்கள். 14 அதிகாரங்கள் வளர்ச்சிப்பணி பற்றிய அதிகாரங்கள் உதாரணத்திற்குச் சொல்கிறேன். பெரிய அதிகாரம் மாநிலத்திற்கு என்ன என்று கேட்டால், அது கால்நடை குறித்த அதிகாரம். கால்நடை 'டிரஸ்பாஸ்' செய்வதைத் தடுக்கும் அதிகாரம்.



[திரு. ஆற்காடு நா. வீராசாமி]

(பிற்பகல் 6-30)

மாடு இந்த இடத்திலிருந்து அந்த இடத்திற்குப் போகக்கூடாது. அதைத் தடுக்க பெரிய அதிகாரம் நம்முடைய மாநிலத்திற்கு. அதைப்போல எடைகள், அளவைகள். இது எவ்வளவு பெரிய அதிகாரம்? எடை என்பதால் அதிகமாக 'வெயிட்' இருக்க வேண்டுமென்று வைத்தார்களா ?

**திரு. க. இராமமூர்த்தி :** இப்போதுதான் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் சொன்னார்கள். மாடு அங்கே போகிறது, யானை இங்கே வருகிறதென்று . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாநிலத்தின் எல்லையைத் தாண்டிப் போனால் என்ன ? தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம் என்று இருக்கிறது. அங்கே மாடு போனால் என்ன ? அதைக் கட்டுப்படுத்த அதிகாரம் இல்லாத காரணத்தாலேதான், ' மத்திய அரசு ' என்று சொல்லுகிறோம். இந்த அதிகாரக் குவியல்கள் அங்கே இருக்கக்கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகம் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறது. தேசீய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து, கலந்துகொண்டபோது மிகத் தெளிவாகச் சொன்னார்கள். " கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் எதிர்பார்த்த அளவிற்குப் பலன் கிடைக்கவில்லை என்று அரசியல் தலைவர்களும், பொருளாதார வல்லுநர்களும் வெளிப்படையாகவே கூறிவிட்டார்கள். அதற்குக் காரணம் திட்டம் வகுப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் வேண்டிய எல்லா அதிகாரங்களையும் ஒரே இடத்தில் குவித்து வைத்திருப்பதுதான். குறிப்பாக கல்வி, விவசாயம், மருத்துவம், தொழில்கள் போன்றவற்றில் மத்திய அரசு அதிகப் பிடிப்பு வைத்திருக்க வேண்டியது தேவையற்றது. அது நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. நாங்கள் அடிக்கடி கூறிவருவதுபோல் இந்திய நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், கரன்சி, தபால் தந்தி, ரயில்வே போன்ற முக்கியமான ஒருசில துறைகளைத் தவிர்த்து பிற துறைகளின் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்தல் வேண்டும்" என்று மிகத் தெளிவாக, இங்கே அல்ல, தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சொல்லியிருக்கிறார்கள். நான்கூட நினைத்தேன், இப்படிக் கேட்கிறாரே திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்துகொண்டு என்று. நாம் மட்டும்தான் கேட்கிறோமா என்று பார்த்தேன். 1960 ஆம் ஆண்டு இந்த மேலவையை அலங்கரித்த மாண்புமிகு உறுப்பினர்களில் பெரியவர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். நாமாவது கொஞ்சம் பயந்துகொண்டு பேசுகிறோம்.

மாநிலங்கள் அடிமையாகி இருக்கின்றன. அங்கே இருக்கிறவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்று எண்ணி செயல்பட வேண்டியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

நிவாரண நிதியைப் பொறுத்தவரையில், இராஜமன்னார் குழு ஒரு அருமையான கருத்தைச் சொல்லியிருக்கிறது. "வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடரின்போது, மைய அரசின் உதவி வேண்டி அந்தந்த மாநிலங்கள் கோரிக்கொள்வது தற்போதுள்ள நடைமுறையாகும். மைய அரசு மாநில அரசுகளிடம் பாரபட்சம் காட்டுகிறது என்னும் குறைபாட்டுக்கு இந்த நடைமுறை இடமளித்துவிட்டது" என்று சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் மாநிலமா? அங்கே வறட்சியின் தன்மை என்ன, வெள்ளத்தினுடைய தன்மை என்ன? அந்தக் கணக்கை யார் பார்க்கிறார்கள்? ஆனால் தமிழ் நாட்டிலே வறட்சி என்றால் அந்தக் கணக்கை யார் பார்க்கிறார்கள்? இதிலும் குறைபாடு இருக்கிறது, சந்தேகம் ஏற்படுகிறது. நான் சொல்லவில்லை, 3 மேதைகள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைபாடு மத்திய அரசிலே இருக்கிறது, மத்திய அரசு அதற்கு இடமளித்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக வறட்சி, வெள்ளம் ஆகியவற்றுக்கு பஞ்சாப் என்றால் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது, உத்தரப் பிரதேசம் என்றால் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது என்ற புள்ளி விவரங்களையெல்லாம் பார்த்த பிறகுதான், சொல்லியிருக்கிறார்கள். தெற்கு ஒரு பக்கம் தேய்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னோமோ, அந்தத் தெற்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, எதிர்க் கட்சியாக இப்போது இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற வாய்ப்பைப் பெற்றுள்ள இந்த நேரத்திலும் வஞ்சிக்கப்படுகிறது என்பதைத்தான் அந்தக் குழு மிகத் தெளிவாக அன்றே சுட்டிக் காட்டியிருக்கிறது.

இன்னொரு கருத்தும் அந்தக் குழு சொல்லுகிறது. இங்கே ஒரு நிதி வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதையெல்லாம் நம்முடைய அரசாங்கம் கவனிக்கும். அடுத்து சொல்லுகிறார்கள், மத்திய அரசினுடைய அதிகாரங்கள் வரையறைப்படுத்தப்பட வேண்டுமென்று.

திரு. க. இராமமூர்த்தி : மாற்றுத் தலைவரவர்களே, வறட்சி நிதி பற்றி ஒரு சந்தேகம். வறட்சிக்காகக் கொடுக்கிற உதவியைக்கூட கண்காணிக்க வேண்டுமென்றும், சரியாகச் செலவு செய்யவில்லை என்றும் நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி என்ன சொல்லுகிறார்?





திரு. ஆற்காடு நா. வீராசாமி : அப்படிச் சொல்லியிருந்தால் தவறு. யார் சொல்லியிருந்தாலும் தவறு. இதையெல்லாம் அரசியலாக்க நினைக்கக்கூடாது. இப்படிச் சொல்வதாலே, நாங்கள் இரண்டு பேரும் மோதிக் கொண்டிருப்போம், நீங்கள் விளையாடிக் கொண்டிருக்கலாம் என்ற எண்ணம் வரக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்களுக்குத் தெரியும். யார் சொல்லச் சொல்கிறார்கள், யார் சொல்கிறார்கள் என்பது வேறு விவகாரம். அதுவல்ல பிரச்சினை. மாற்றுத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள், அதற்காகச் சொல்கிறேன்.

மைய அரசின் அதிகாரங்களை வரையறைப்படுத்துங்கள் என்று யார் சொல்கிறார்? 1957-ல் டாக்டர் ஜான் அவர்கள் சொல்லுகிறார்கள். "இன்று நிலவும் சூழ்நிலையை நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள், எதிர்பார்க்கவில்லை என்று என் அனுபவத்தால் அறிந்துள்ளேன். மைய அரசின் அதிகார வரம்பு, வெளி நாட்டு உறவு, பாதுகாப்பு, போக்குவரத்து, செய்தித் தொடர்புகள் இவற்றுடன் நிற்குமாறு வரையறைப்படுத்துங்கள். சுங்க வரி வருவாய் மட்டும் அதன் பொறுப்பில் இருக்கட்டும்" என்று அவர் சொல்லுகிறார். மேலும், "இந்த அரசு தம் நடவடிக்கைகளின் ஒவ்வொரு துறையிலும் மைய அரசு குறுக்கிடாதிருக்குமாறு அதனைக் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்று நான் இந்த அரசை எச்சரிக்கை செய்திட விரும்புகின்றேன். மைய அரசு மாநில நிர்வாகங்களில் குறுக்கிடுகின்றது. நம்மை நாமே ஆண்டுகொள்ள நாம் தகுதியற்றவர்களா என்ன? மைய அரசு நமது மாநிலத்தில் ஏன் வரி வசூலிக்க வேண்டும்?"—டாக்டர் ஜான் கேட்கிறார். "நாம் ஏன் அவர்களிடத்தில் சென்று பணத்தை பிச்சை கேட்க வேண்டும். நாம் ஏன் அவர்களிடம் சென்று கடன் கேட்க வேண்டும்? அந்தக் கடன்களுக்கு வட்டி ஏன் செலுத்த வேண்டும்" என்று மிகத் தெளிவாக எந்த அரசியல் கட்சியிலும் இல்லாமல், கற்றறிந்த மேதைகள் இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-40)

அதைப்போலவே தான் அரசியல் நிர்ணய சபையில் ஹனுமந்தையா அவர்கள் ஒன்றை சொல்கிறார்கள்:

"The strength of the Centre, if I understand correctly, consists in having a strong Army, a strong Navy and a strong Air Force and in possession of sufficient money for these purposes."

என்று அவர் சொல்லியிருக்கிறார். மத்திய சர்க்காரிலே குவிந்து கிடக்கின்ற பைல்கள்தான் அதனுடைய பலத்திற்கு ஆதாரம் அல்ல. நல்ல படை

வேண்டும், நல்ல கப்பற் படை வேண்டும், நல்ல விமானப் படை வேண்டும், நல்ல ராணுவம் வேண்டும் என்கிற கருத்தை அவர் சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில் பார்த்தாலும், அறிஞர் பலரும் இப்படிப்பட்ட அதிகாரங்கள் வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா 1967 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதி சொல்கிறார். "இந்தியாவைப் பாகிஸ்தான் அபாயத்திலிருந்தோ, சீனா, பலுசிஸ்தான் அபாயத்திலிருந்தோ பாதுகாப்பதற்கு மைய அரசு இங்கே ஒரு சுகாதாரத் துறையை வைத்திருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. அது, எந்தவகையில் இந்தியாவின் இறைமையையும், சுதந்திரத்தையும் வலுவுடையதாக்கும்? அவர்கள் இங்கே ஒரு கல்வித் துறையை வைத்திருக்க வேண்டுமா? அங்கே இராணுவத்தினருடன் போரிடும் திறனை இது எந்த வகையில் அதிகப்படுத்தும்?" என்று அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்டார்கள்.

அதேபோல, அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் என்று சொல்லப்படுகிற நிர்வாக சீரமைப்பு ஆணைக் குழு மைய மாநில உறவுபற்றி அருமையான கருத்தினைச் சொல்லியிருக்கிறது. "மைய அரசையே பெருமளவுக்கு நம்பியிருப்பதால், மாநிலங்களில் பொறுப்பின்மை வளரவும், திறமையற்ற நிர்வாகம் ஏற்படவும் வழி உண்டாகிறது. மாநிலங்களைக் காட்டிலும் மையத்தில் மேலோங்கிய நிதி அதிகாரம் இருப்பதால், மையத்தில் உள்ள அதிகாரிகளுக்கு தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. மேலும் அவர்கள் மாநிலங்களின் கருத்துக்களுக்கு செவி சாய்ப்பதில்லை. எனவே, நிதி குறித்து மாநிலங்கள் மையத்தையே நம்பியிருக்கும் நிலை குறைந்த அளவுக்கு குறைக்கப்பட வேண்டும்" என்று ரிப்போர்ட்டினுடைய 30 வது பக்கத்திலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, 1972 ஆம் ஆண்டு மைசூர் (கர்நாடக) மாநில ஸ்தாபன காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலே ஒரு கருத்தை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

"Congress will fight in a determined manner for greater autonomy for the State and against all discrimination and step-motherly treatment by the Centre".

என்று அவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருந்தார்கள். ஆகவே, இந்தக் கொள்கை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் மட்டுமே சொந்தம் என்பதல்ல. நம்முடைய மதிப்பிற்குரிய திரு. காமராஜர் அவர்கள் இருந்த ஸ்தாபன காங்கிரஸ்கூட தேர்தல் அறிக்கையிலே இதைகுறிந்து வலியுறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்திறது.





அடுத்து, "நிதிகளைப் பகிர்ந்தளிப்பது, மானியங்களை ஒதுக்குவது யாவும் நிதி ஆணைக் குழு அல்லது அரசு சார்பற்றவர்களைக் கொண்ட வேறு ஒரு குழு போன்ற பாரபட்சமற்ற அமைப்பு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், இத்தகையவற்றில் இது எடுத்த முடிவையே மைய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று நிதிகளை ஒதுக்க தனிக் குழு தேவை என்று ராஜமன்னார் குழு அறிக்கையிலே, பக்கம் 135-லே மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்து, திட்டமிடுதலைப் பொறுத்தவரையில், "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத்திந்திய நிலையில் உள்ள 100 கோடி ரூபாய்கள் மூலதனம் கொண்ட தொழில்களுக்கு மட்டும் பொருந்துமாறு பதிவு 52 திருத்தி அமைக்கப்பெறுதல் வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளோம். இதனால் இப்போதுள்ள இச்சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்பது தெளிவு" என்று ராஜமன்னார் குழு திட்டமிடுதலும் வளர்ச்சியும் குறித்து ஏற்கெனவே இருக்கின்ற சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் புதிய சட்டம் மத்திய அரசால் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது. இந்தப் பதிவு 52-ல் என்ன நிலைமை என்பதைப் பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் பொதுவாக சட்டமன்றத்திலும் சரி, எல்லாப் பொதுக் கூட்டங்களிலும் சரி, பல தொழில்களைத் தொடங்குவதற்கு அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு அனுப்புவதாகவும், ஆனால் மத்திய அரசு சரியாக உரிமங்கள் வழங்குவதில்லை என்றும் குறைபடுவதுண்டு. இந்த அதிகாரம் மத்திய சர்க்காருக்குத் தேவையா என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் சிந்திக்க வேண்டும். புதுக்கோட்டையில் அல்லது ஆற்காட்டில் 10 இலட்சம் ரூபாய் முதலீட்டில் ஒரு கியாஸ் சிலிண்டர் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்றால் கூட, அதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. அதற்கான உரிமம் அளிக்கிற அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது. 100 கோடி ரூபாய் முதலீட்டுக்கு மேல் தொடங்கப்படும் தொழில்களுக்கு உரிமம் வழங்குவதற்கான அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கலாம். அதற்குக் கீழே முதலீடு செய்யப்படும் தொழில்களைப் பொறுத்த வரையில் எந்தத் தொழில்களாக இருந்தாலும் சரி, தனியார் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும், மாநிலத்திற்குள் புதுத் தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்குரிய உரிமங்களை வழங்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்குத் தரப்பட வேண்டும். நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தரப்பட வேண்டும். கேவலம் ஒரு கியாஸ் சிலிண்டர் தொழிற்சாலைக்கு, 10 இலட்சம் ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்படும் ஒரு தொழிற்சாலைக்கு உரிமை

அளிக்க வேண்டுமென்று சொல்லி மத்திய அரசிடம் செல்லக்கூடிய நிலை இருக்கக் கூடாது. அந்த வகையில் 100 கோடி ரூபாய்க்குக் கீழே ஆரம்பிக்கிற தொழில்களுக்கு உரிமம் வழங்குவதற்கான அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாநில சுயாட்சிபற்றி யார் யார் என்னென்ன பேசியிருக்கிறார்கள், குறிப்பாக ஆளும் கட்சியிலே இருந்துகொண்டு என்னென்ன பேசியிருக்கிறார்கள் என்பதை என்னால் சுட்டிக்காட்டாமலிருக்க முடியவில்லை. ஏனென்றால் சில காலக் கட்டத்திலே சில கருத்துக்களை சிலர் வைத்துக்கொண்டிருப்பது என்பது காலத்தின் கட்டாயம், அது அவசியம் தேவை. 356 வது பிரிவு இந்திய அரசியல் சட்டத்திலிருந்து கிழித்து எறியப்படவேண்டும் என்று என்னைக் கேட்டால் சொல்வேன். காரணம் அவ்வளவு அபாயம் அதிலே இருக்கிறது.

"If the President on receipt of a report from the Governor of a State or otherwise"

என்று அதிலே இருக்கிறது. ஒரு கவர்னருடைய அறிக்கையைப் பெற்றோ அல்லது அறிக்கையை பெறாமலோ கூட ஒரு மாநில அரசை டிஸ்மிஸ் செய்ய லாம் என்று இருக்கிறது. இந்தப் பிரிவு கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மதிப்பிற்குரிய திரு. மாறன் அவர்கள் இந்தப் பிரிவை நீக்க வேண்டுமென்று சொல்லி பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதற்கு உள்ளே நான் செல்ல விரும்பவில்லை. யார் யார் என் பதுபற்றியும் நான் சொல்ல ஆசைப்படவில்லை. ஆனால் உள்ளபடியே ஒன்று நடைபெற்றது என்பது மட்டும் உண்மை. நான் கூட ஒரு சமயத்திலே தவறு செய்திருக்கலாம்.

1980 ஆம் ஆண்டு நான் எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடன் டெல்லிக்குச் சென்றிருந்தேன். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து அப்போது தான் முடிவு வருகிறது. அப்போது தான் 9 மாநில அரசுகள் கலைக்கப்பட்ட தாகச் செய்தி வருகிறது. அ.தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டது என்ற செய்தியை நான் கேட்டவுடனே மகிழ்ந்தேன். காரணம் தி.மு.க. ஆட்சி கலைக் கப்பட்டு சிறைக்கொடுமைகளை அனுபவித்தவன் நான். ஆனால் அதேநேரத் தில் நான் அடுத்து சொல்லக்கூடிய ஒரு செய்தியை பொறுத்தவரையில் யாருடைய நம்பிக்கைக்கும் ஊட்டம் பெற வேண்டுமென்பதற்காகச் சொல்ல வில்லை. டாக்டர் கலைஞர் அவர்களிடம் தமிழ் நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட விவரத்தைச் சொன்னேன். அதைக் கேட்ட உடனே உள்ள படியே ½ மணி நேரம் எதுவும் பேசாமல் அதிர்ச்சியடைந்தார்கள். "ஒரு மாநில அரசை மத்திய அரசு எவ்வளவு சுலபமாகக் கலைத்துவிட முடிகிறது.



இது எதிர்கால நாட்டுக்கு நல்லதல்ல" என்று அப்போது மிகவும் வருத்தத் துடன் சொன்னார்கள். அதே நேரத்தில் நான் மகிழ்ச்சியடைந்தேன். காரணம் எனக்கு அவ்வளவு பெருந்தன்மை அப்போது இல்லை. நான் வளரவில்லை அப்போது. திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டபோது என்னை சிறைக்குள் அனுப்பி கொடுமைகளைச் செய்ததையெல்லாம் சிலர் மறந்து போயிருக்கலாம். அந்த வகையிலே இந்த 356 வது பிரிவு அரசியல் சட்டத்திலே இருக்கக் கூடாது என்கிற கருத்தை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மாண்புமிகு நாவலர் அவர்களும் மற்றவர் களும் சொன்னதுபோல், மாநில சுயாட்சிபற்றி வெள்ளை அறிக்கையை இங்கே வைக்கலாம், தீர்மானங்களைப் போடலாம், அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று சொல்லலாம். இவையெல்லாம் உண்மையிலேயே நடைமுறைக்கு வந்தால், அதன்மூலம் மாநிலங்களில் நல்லாட்சி அமைய முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கருத்திற்கு எதிர்ப்பு இருந்தாலும், பத்துப் பதினைந்து ஆண்டு களுக்கு முன்னாலே இருந்ததைவிட இப்போது இந்தக் கருத்துக்கு வலிவு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. அரசியல் தலைவர்களும், மாநில அரசுகளும், முதலமைச்சர்களும் பல்வேறு அரசியல் கட்சிகளும் ஆக்கம் தருகிறார்கள். ஆகவே மேலும் மேலும் வளரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்றைக்கு நாம் செடியை நட்டிருக்கிறோம். அந்தச் செடி மரமாகி, பூத்துக் காய்த்து, கனிந்து, பழத்தைத் தரும் என்ற நம்பிக்கை உண்டு என்று டாக்டர் நாவலர் அவர்கள் அன்றைக்குத் தெரிவித்தார்கள். செடியை நட்டு, செடி மரமாகி, அது பூத்து, காயாகி, கனியாகிறபோது, அந்தக் கனியை உண்பதற்கு நாட்டிலே எல்லோரும் தயார். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி போன்றவர்களும் தயார் ஆகுங்கள் என்பதை நான் இங்கு நினைவு படுத்த விரும்புகிறேன். (சிரிப்பு) என்னுடைய இந்தக் கருத்து எந்த அள வுக்குப் பொருந்தும் என்பதற்காக ஒன்றைச் சொல்கிறேன்.

அன்றைக்கு திரு. பிரணாப் முகர்ஜி, மேற்கு வங்கத்திலிருந்து ஒரு பாராளு மன்ற உறுப்பினர். அப்போது அவர் மாநில சுயாட்சி மாநாட்டில் கலந்து கொண்டு மாநில சுயாட்சி கொடுக்க வேண்டும் என்றார். அவர் இன்றைக்கு மத்தியில் நிதியமைச்சர். அதேபோல திரு. எஸ். எம். கிருஷ்ணா அன்றைக்கு பாராளுமன்ற உறுப்பினர். அவர் மாநில சுயாட்சிபற்றி வீர உரையாற்றினார். அவர் இன்றைக்கு மத்தியில் அமைச்சர். அன்றைக்கு அவர் அமைச்சராக இருக்கிற நாங்களோ, அண்ணா தி.மு.க. வில் இருப்பவர்களோ சொல்லியிருக்கி

இன்றைக்கு நம்முடைய மாநில சுயாட்சி என்கிற குரல் போய் ஒலிக்கிற இடத்தில் அமைச்சர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** ஒரு காலத்திலே மாநில சுயாட்சி வேண்டுமென்ற கருத்தைச் சொன்னவர்கள் எல்லாம் இன்றைக்கு அமைச்சர்களாக ஆகியிருக்கிறார்கள் என்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் இப்போது மாநில சுயாட்சிக்கு ஆதரவு தெரிவித்தால், எதிர்காலத்திலே மத்திய அமைச்சர் ஆகலாம் அல்லவா ? (சிரிப்பு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அவர் அப்படி துணிந்து கருத்துக்களைப் பேசவும் மாட்டார், அமைச்சராக வாவும் மாட்டார். (சிரிப்பு)

அதுபோல் இன்றைக்கு மத்திய அமைச்சராக இருக்கிற திரு. வீரேந்திர பட்டீல் அன்றைக்கு என்ன சொன்னார் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். "மாநில சுயாட்சியை மாநிலங்களுக்கு வழங்காவிட்டால், டெல்லியிலுள்ள மாநிலங்களின் அலுவலகங்கள் (ஸ்டேட் பவன்ஸ்) தூதுவராலயங்களாக மாறக் கூடிய சூழ்நிலை உருவாகும்" என்று சொல்லியிருக்கிறார்.

(மாலை 6-50)

இதை விட கடுமையான வார்த்தைகளை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற நாங்களோ, அண்ணா தி.மு.க. வில் இருப்பவர்களோ சொல்லியிருக்கிறோமா என்றால் இல்லை. இப்படிப்பட்டவர்கள் டெல்லியில் அமைச்சர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கிற நேரத்தில், இந்தத் தீர்மானம் வருவது மிகவும் பொருத்தமானது. திரு. இராமமூர்த்தி கேட்கக்கூடும். "நீ எப்படிப்பட்ட சூழ்நிலையில் கேட்கிறாய் ? இந்த ஆட்சியில் உனக்கு எவ்வளவு கொடுமை நடந்தது ? உன்னுடைய விவகாரம் என்ன ? 292 (ஏ) சட்டத்தின்படி 3 முறை சிறை சென்றாயே ? நான் தானே வந்து பார்த்தேன், இன்னுமா அவர்களுக்கு அதிகாரம் கேட்கிறாய் ?" என்று கேட்டால், அது சட்டப் பிரச்சினை. ஒரு அரசாங்கம் தவிப்பட்டவர்கள் மீது வழக்குப்போடுவது என்பது அவர்களுக்குள்ள அதிகாரம். அதை நீதி மன்றத்திலே சென்று தீர்த்துக் கொள்கிற உரிமை நமக்கு இருக்கிறது. ஆகவே என்னை இப்படிப்பட்ட நெருக்கடிக்கு ஆளாக்கி விட்டதே என்று எண்ணாத காரணத்தால்தான், இன்னமும் இந்தக் கொள்கையைச் சொல்கிறேன். இந்த லட்சியத்தை முழங்குகிற நேரத்தில் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள், வட மாநிலங்களில் இருப்பவர்கள் சிலர், இது ஒரு பிரிவினை வாதம் என்று சொல்கிறார்கள். கர்நாடகம், ஆந்திர மாநிலங்கள், பெங்களூர் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மாநிலங்கள் தனியாகப் பிரிந்து போக வேண்டுமென்ற எண்ணத்தோடு அல்லது நான்கு மாநிலங்கள் தனியாகப் பிரிந்து போக வேண்டுமென்ற எண்ணத்தோடு எந்த முடிவும் எடுக்கவில்லை. அங்கே சொன்னதெல்லாம் இங்கே சொல்லப்பட்ட கருத்துக்கள். இதற்குப் பிறகும் அது பிரிவினை என்று சொன்னால், சொல்பவர்களைத்தான் சந்தேகப்படுவேனே தவிர, அதில் உண்மை இருப்பதாக நான் கருதவில்லை. ஆகவே தான் சொல்கிறேன். மாநில சுயாட்சி கேட்பது தேசத் துரோகம் என்று வேறு சில மாநில முதலமைச்சர்களாலும் மத்திய ஆளும் கட்சியின் பிரதான தலைவர்களாலும் எடுத்துக் கூறப்படுமானால், அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.



**திரு. க. இராமமூர்த்தி :** புதுவை மாநில முதலமைச்சர் கலந்து கொண்டதோடு மட்டுமல்ல, அதற்குப் பிறகு இன்னும் முதலமைச்சராகத்தான் இருக்கிறார். காங்கிரசுடன் உறவு இருக்கிறது. காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பது என்பது அல்ல. இரண்டு மாதத்திற்கு முன்பு தேவையே இல்லை என்று சொல்லிவிட்டு, கர்நாடக முதலமைச்சர் மார்ச் 20 ஆம் தேதிக்குள் கூட்டம் கூட்ட வேண்டிய அவசியம் என்ன வந்தது என்றுதான் தெரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, 2 மாதத்திற்கு முன்பு சர்க்காரியா கமிஷனே தேவையில்லை என்று இருந்த இந்திய அரசு, இன்று சர்க்காரியா கமிஷனைப் போட வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறபோது, கருத்துக்கள் மாறுகிறபோது, சூழ்நிலை மாறுகிறபோது, தேவைப்படுகிற நிலைமை வந்திருக்கிறது என்றுதான் சொல்றார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** இரண்டு மாதத்திற்கு முன்பு அந்தப் பிரச்சினை வரவில்லை. இப்போது வந்து, அந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்படிப்பட்ட மாநில மத்திய அரசுடைய உறவுகள் சரியாகவே இருக்கின்றன, அதிலே திருத்தங்கள், தேவையே இல்லையென்று 2 மாதத்திற்கு முன்பு சொல்லப்பட்டது. இப்போது பரிசீலிக்கவேண்டிய அவசியம் வந்து, எந்தக் கருத்தை வேண்டுமானாலும் தாருங்கள், யார் வேண்டுமானாலும் தாருங்கள், எப்படி வேண்டுமானாலும் தாருங்கள் என்று கேட்க வேண்டிய அவசியம் இரண்டு மாதத்திற்கு முன்பு இல்லாதது இப்போது எப்படி வந்தது ? ஒரு கருத்தையொட்டித்தான் இன்னொரு கருத்து வரும். ஒரு சூழ்நிலையை ஒட்டித்தான் இன்னொரு சூழ்நிலை வரும் என்பதை நாம் நிகழ்ச்சிகளிலிருந்து காண்கிறோம்.

[1983 ஏப்ரல் 13

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாநில சுயாட்சி கேட்பது தேசத் துரோகம் என்று சொல்கிறவர்களுக்குச் சொல்கிறேன். இது தேசத் துரோகம் அல்ல. ஒரு தேசத்திலிருந்து பிரிந்து போக வேண்டுமென்று சொல்கிற ஒரு உணர்வே கண்டா போன்ற நாடுகளில் மதிக்கப்படுகிற நேரத்தில், நாம் 'பிரிந்து போகவே விரும்பவில்லை, மாநிலத்திற்குள்ளே சுய ஆட்சித் தன்மை, உண்மையான அதிகாரங்களை ஒரு கூட்டாட்சி அமைப்பிற்குள்ளே இருந்து வழங்குங்கள்' என்று கேட்பதற்கு 'அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் தேவை' என்று கூறுவது நாட்டுத் துரோகம் ஆகாது. மொழியால் தமிழனாகவும், இனத்தால் திராவிடனாகவும், நாட்டால் இந்தியனாகவும், உலகத்தால் மனிதனாகவும் இருக்கவேண்டுமென்ற கொள்கை கொண்ட இந்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக்கழகம் என்று எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்கள். அந்தக் கொள்கையை வலியுறுத்தி இந்த மேலவையில் வைத்த இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரிக்கிறேன் என்று சொல்லி, அமைகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 20—3—1983 அன்று பெங்களூரில் நடந்த தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை இம்மேலவை ஆதரிக்கிறது, வரவேற்கிறது, இந்த முடிவுகளை அமுல் நடத்துவதற்காக விடா முயற்சிகளை செய்ய வேண்டுமென்று இம்மேலவை தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது என்ற தீர்மானத்தை மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. நல்லசிவன் அவர்கள் கொண்டு வந்திருப்பதை அரசின் சார்பாக ஆதரிப்பதில் நான் பூரிப்படைகிறேன், பெருமைப்படுகிறேன். இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிற வகையில், இந்த அவையைச் சார்ந்த உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய சீரிய கருத்துக்களை வழங்கியது மட்டுமல்லாமல், இதைப்பற்றி எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய பல்வேறு திட்டங்களையும் பல்வேறு கருத்துக்களையும் மிகச் சிறப்பாகக் கூறி இதற்கு நல்ல ஆதரவையும் ஒத்துழைப்பையும் உதவியையும் தருகிற முறையில் பேசியதற்காக அத்தனை பேருக்கும் நான் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் மிகத் தெளிவாகவும் திட்டமாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் இந்தப் பிரச்சினையை ஆரம்பத்திலிருந்து எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு.



ஏ. ஆர். தாமோதரன அவர்கள் இந்தப் பிரச்சினையின் உட்கிடக்கைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி அதுபற்றி எடுக்கப்படவேண்டிய முயற்சிகளையும் திட்டங்களையும் பற்றி தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் ஒரு பேராசிரியரைப்போல் இருந்து, ஒற்றை ஆட்சி முறை என்றால் என்ன, கூட்டாட்சி முறை என்றால் என்ன என்பதற்கு விளக்கங்கள் தந்து, சிறுபான்மையினர் என்றால் என்ன, அவர்களுக்கு எப்படி பாதுகாப்பு அளிப்பது என்ற பாடத்தை மட்டும் கற்பித்து விட்டு அவர்கள் போய் விட்டார்கள். (சிரிப்பு) இந்திரா காங்கிரசைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்—அவர் இருக்கிற சூழ்நிலை அந்த அளவுக்கு அவரைப் பேச வைத்திருக்கிறது என்ற அடிப்படையில் எடுத்துக்கொள்கிறேன்—இங்கே பேசினார். இந்தியாவுக்கே அவர் தான் சொந்தமாக இருப்பதைப் போலவும், இந்திய அரசாங்கத்திற்கே அவர் பிரதிநிதியாக வந்திருப்பது போலவும் இங்கே கருத்துக்களை எடுத்துச சொன்னார். ஒரு கருத்தை மட்டும் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்த மாநில அரசு அத்தனை பேருக்கும் சொந்தம், இந்திய அரசும் அத்தனை பேருக்கும் சொந்தம். 70 கோடி மக்களுக்குச் சொந்தமானது இந்திய அரசு. மாநிலத்திலே இருக்கிற 5 கோடி மக்களுக்கும் சொந்தமானது மாநில அரசு. மாநில அரசுகள் இல்லாமல் மத்திய அரசு இல்லை. மாநில அரசுக்கு என்று தனி மக்கள், மத்திய அரசுக்கு என்று வேறு தனியாக மக்கள் என்று இல்லை. மாநில அரசின் மக்கள் எல்லாம் ஒன்று கூடினாதான் மத்திய அரசு.

இப்போது கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக்களின் அடிப்படையில், நாம் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம் என்று யாரும் சொல்லவில்லை; நாம் அடியோடு உரிமை மறுக்கப்பட்டு கொத்தடிமைகளாக இருக்கிறோம் என்றும் யாரும் சொல்லவில்லை, அல்லது வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் இந்தியா முழுக்க அடிமைப்பட்டிருந்தபோது, உரிமை வேண்டும், அதிகாரம் வேண்டுமென்று மாநில முதலமைச்சர்கள் கோரிக்கை வைப்பது போன்ற நிலையும் இப்போது இல்லை. ஆனால் இப்போது கூட்டாட்சி என்ற பெயரால், மாநில சுயாட்சி என்ற பெயரால் அதிகாரங்கள் இருக்கிற தன்மைகளில் கூட்டாட்சி என்ற பெயர்தான் இருக்கிறதே தவிர நடைமுறையில் ஒற்றையாட்சி முறைதான் இருக்கிறது என்ற தன்மையைச் சுட்டிக் காட்டி, உரிமைகள் இருக்கின்றன, இவை போதாது, கூடுதல் அதிகாரங்கள், கூடுதல் உரிமை வேண்டுமென்றுதான் அத்தனை பேரும் பேசினார்களே தவிர, எந்த ஒரு சாதாரண உரிமையும் தரப்படவில்லை என்று யாரும் எடுத்துச் சொல்லவில்லை. "**கொடுக்கப்பட்**

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 13

டிருக்கிற உரிமைகள் போதுமானதாக இல்லை. அதிகாரங்கள் போதுமானவையாக இல்லை. **மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய** முழுப் பொறுப்பும் மாநில அரசுகளின் கையில் இருக்கிறது. ஆகவே இவற்றை நிறைவேற்றத் தக்க அளவுக்கு மக்களைத் திருப்திப் படுத்துகிற வகையில் வேண்டிய அதிகாரத் தன்மைகளும் உரிமைகளும், நிதி ஆதாரங்களும் மற்றவைகளும் போதுமான அளவுக்கு இல்லை. இதை வழங்க வேண்டும்" என்ற முறையில் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு இதுவரையில் 48 முறைகள் திருத்தப்பட்ட. சட்டத்தைத் திருத்துவதற்கு வழி வகைகளைக் காண வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் நாம் நமது சிந்தனைகளை எடுத்து வைத்திருக்கிறோம். அதற்கான சிந்தனையோட்டம் தான் செயலோட்டத்திற்கு அடிப்படைக் காரணமாக இருக்கிறது. சிந்தனை இல்லாமல் எந்தச் செயலும் ஆக்கமும் ஊக்கமும் பெறாது. அந்த வகையில் நாளுக்கு நாள் மலர்ந்து வருகிற வரலாற்று உண்மைகளைத் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையில் ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன். மாநிலங்களின் நலன் கருதியும் அதன் மூலம் இந்தியாவின் ஒட்டுமொத்தமான நலன் கருதியும் கர்நாடக மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு. ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் கூட்டிய தென்னக மாநில முதலமைச்சர்கள் மாநாட்டுக்கு வந்த அழைப்பை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர், மாண்புமிகு புதுவை மாநில முதலமைச்சர் ஆகியோர் அதில் கலந்து கொண்டார்கள். அந்தந்த மாநில நிதியமைச்சர்களும் கலந்து கொண்டார்கள். கேரள முதலமைச்சர் இயலாமையால் கலந்து கொள்ளவில்லை என்று முதலில் சொன்னார்கள். அதற்குப் பிறகு வேறு காரணங்கள் சொல்லப்பட்டன. நேரமின்மையின் காரணமாக அந்தக் காரணங்களுக்குள் போக விரும்பவில்லை.

**(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)**

(பிற்பகல் 7-00)

இரண்டு நோக்கங்களுக்காகத்தான் பெங்களூரில் தென் மாநில முதல்வர்களின் மாநாடு கூட்டப்பட்டது என்பது தெளிவுபடுத்தப்பட்டது. அதற்குப் பிறகுதான் அதன் நிகழ்ச்சி நிரலில் வேறு பல திட்டங்களும் சேர்க்கப்பட்டன. அந்த இரண்டு முக்கியமான நோக்கங்களில் ஒன்றுதான் எட்டாவது நிதிக் குழுவுக்கு மாநிலங்களின் சார்பாக எந்தெந்தக் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் எந்தெந்த அடிப்படையில் எடுத்து வைத்தால், மாநிலங்களுக்குக் கூடுதலான நிதியாதாரங்கள் கிடைக்கும் என்பதைப்பற்றி ஆராய்ந்து ஒருமித்த முடிவெடுப்பது. மற்றது, மாநிலங்கள் கூடுதலான அதிகாரங்களைப் பெறும் வகை



1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

யில் தன்னாட்சி அமையத் தக்க வகையில் மத்திய மாநில அரசு உறவுகளில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று ஆராய்ந்து அதற்கேற்ப அரசியல் அமைப்புச்சட்டம் எந்தெந்த வகைகளில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று ஆராய்ந்து முடிவெடுப்பதாகும். ஆக இந்த இரண்டு காரணங்களுக்காக, இந்த இரண்டு நோக்கங்களுக்காகத் தான் அந்த மாநாடே கூட்டப்பட்டது.

ஒவ்வொரு மாநிலத்தினுடைய கருத்துக்களையும் கேட்டு அறிந்து முடிவு செய்ய வேண்டும் என்றுதான் எட்டாவது நிதிக் குழுவே அமைக்கப்பட்டிருக்கிறது. எல்லா மாநிலங்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து சொல்லப்பட்ட ஏழாவது நிதிக் குழுவின் சிபாரிசுகளில் தற்போது என்னென்ன மாற்றங்கள் வேண்டும் என்று ஒவ்வொரு மாநிலமும் தம் தம் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் தான், தற்போது எட்டாவது நிதிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் எட்டாவது நிதிக் குழுவே எல்லா மாநிலங்களின் கருத்துக்களையும் கேட்டிருக்கிறது. பல மாநிலங்கள் ஏற்கெனவே இருக்கிற முறைகளில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்ற தங்களின் கருத்துக்களை எட்டாவது நிதிக் குழுவுக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். எஞ்சிய பல மாநிலங்கள் இப்போது அனுப்பிக் கொண்டிருக்கின்றன. அப்படி அனுப்பி வைத்திருக்கும் மாநிலங்கள் ஒவ்வொன்றிற்கும் எட்டாவது நிதிக் குழுவின் தலைவரான திரு. ஒய். பி. சவான் அவர்கள் சென்று நேரடியாக அவர்களின் கருத்துக்களைக் கேட்டு விளக்கங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். அண்மையில் அந்த வகையில்தான் அவர் மேற்கு வங்கத்திற்குச் சென்று முழு விவரங்களையும் கேட்டறிந்திருக்கிறார். நாமும் நமது கருத்துக்களை விரைவில் அனுப்பி வைக்கும் தன்மையில் இருக்கிறோம். அதன் அடிப்படையில் அவர் விரைவில் தமிழகத்திற்கும் வர இருக்கிறார். "நீங்கள் என்னென்ன மாற்றங்கள் வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?" என்று அவரே கேட்கிறார். அதனால் ஒவ்வொரு மாநிலமும் என்னென்ன மாற்றங்கள் தேவை என்ற கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன. இந்த அடிப்படையில்தான் 4 தென்மாநில முதலமைச்சர்களும் ஒன்றாகக் கூடி நாம் எதையெதைக் கேட்டால் நன்றாக இருக்கும் என்று கூடிக் கலந்து முடிவெடுப்போம் என்று விரும்பினார்கள். இவ்வாறு கூடிக் கலந்து முடிவெடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? தனித்தனியாக உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று கேட்கிறபோது, நால்வரும் தங்களுக்குள் ஒரு ஒருமித்த கருத்தை உருவாக்கிச் சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும் என்று எண்ணிப் பார்க்க

வேண்டும். இங்கே அவையில் ஒரு பிரச்சினை எழுகிறது என்றால், நீங்கள் அனைவரும் லாபியில் போய் தனியாகக் கூடி முடிவெடுப்பதில்லையா? "இதை எதிர்க்கலாமா வேண்டாமா? இதில் வெளிநடப்பு செய்யலாமா, வேண்டாமா?" என்று முடிவெடுத்துவிட்டுத் தானே இங்கே வருகிறீர்கள். பல தொழிற்சங்கம் இருந்தாலும், அவைகள் ஆளுக்கொரு கோரிக்கை வைத்து, தொழிலாளர்கள் நலன்கள் பாதிக்கப்படாமல் இருக்க அனைவரும் ஒன்றுகூடி ஒரு நியாயத்தின் அடிப்படையில் சில கோரிக்கைகளை வைத்து வற்புறுத்துவது என்பது இயற்கையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு முறைதான். அந்த வகையில் தான் நிதிக் குழுவின் முன் எந்தெந்தக் கருத்துக்களை வலியுறுத்துவது என்று ஒரு முடிவுக்கு வரலாம் என்று நான்கு மாநில முதலமைச்சர்களும் கூடிப் பேசி விவாதித்து முடிவெடுத்திருக்கிறார்கள். இதிலே என்ன தவறு?

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துத் தெரிவித்ததைப் போல் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குட்பட்டு, எந்தெந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லி, எந்தெந்த மாற்றங்களை அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்தால், நம்முடைய நோக்கங்கள் நிறைவேறும் என்று ஆராய்ந்து ஒரு முடிவெடுக்கவும் அவர்கள் விரும்பினார்கள். இது ஏதோ மத்திய அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக அல்ல. அல்லது மத்திய அரசையே எதிர்த்துப் போராடுவதற்காக அல்ல. அல்லது மத்திய அரசுக்கு எதிராகப் படை திரட்ட அல்ல அல்லது நால்வகைச் சேனைகளையும் ஒன்றாகத் திரட்டி, இன்ன தேதியிலிருந்து தண்டி எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகவும் அல்ல. சிலபல விஷயங்களில் ஒருமித்த கருத்துக்களை உருவாக்குவதற்காகத்தான் இந்த மாநாடே கூட்டப்பட்டது.

இந்த மாநாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு நிதியமைச்சர் என்ற முறையில் நானும் சென்றிருந்தேன். அந்த மாநாட்டின் தன்மையின் அடிப்படையில் சில பல ஒற்றுமைகளை இங்கே விளக்குவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். டாக்டர் பி. வி. இராஜமன்னார், டாக்டர் ஏ. எல். முதலியார், தமிழகத்தின் முன்னாள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி டாக்டர் சந்திரா ரெட்டி ஆகிய மூவரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவினர் அளித்த பரிந்துரைகளையெல்லாம் 1973 ஆம் ஆண்டு தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் கண்டுள்ள கருத்துக்களையும், பேரறிஞர் அண்ணா அவர்கள் அவ்வப்போது மத்திய மாநில அரசுகளின் உறவுகள்பற்றி கூறிய கருத்துக்களையும், 1981-82,





1982-83, மற்றும் 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்கள் மற்றும் மாநில தன்னாட்சி உரிமை பற்றிய கருத்துக்களையும் அடிப்படையாக வைத்துத்தான் பெங்களூர் மாநாட்டுத் தீர்மான வரைவுகளே உருவாக்கப்பட்டன. மாநாட்டுத் தீர்மான வரைவுகளை நாம் தமிழக அரசின் சார்பாகத்தான் உருவாக்கிக் கொண்டு போனோம். 19-8-1983 அன்று மாலை 4 மணி அளவில் 4 மாநிலங்களையும் சார்ந்த தலைமைச் செயலாளர்கள், நிதிச் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் எல்லாம் உட்கார்ந்து இந்த வரைவுத் தீர்மானங்களையெல்லாம் ஆராய்ந்து, 20 ஆம் தேதி நடக்கிற தென்மாநில முதல்வர்கள் மாநாட்டில் விவாதத்திற்கு ஏற்ற வகையில் உருவாக்கித் தந்தார்கள். அந்த வரைவுத் தீர்மானங்கள் ஒரு வடிவத்தைப் பெற்ற பிறகு, 20 ஆம் தேதி நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில் 4 மாநிலங்களைச் சார்ந்த முதல்வர்களும், நிதியமைச்சர்களும் மற்றும் உயர் அதிகாரிகளும், தலைமைச் செயலாளர்களும் கலந்து கொண்டார்கள்.

காலையில் அனைத்து மாநிலங்களின் முதல்வர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி விவாதித்ததன் அடிப்படையில், நிர்மானங்கள் முடிவு செய்யப்பட்டன. மாலை 6 மணிக்கு அவை அறிவிக்கப்பட்டன. இவ்வளவும் ஒரே நாளில் நடைபெற்று முடிந்தன. காலையில் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டு மாலையில் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அந்தத் தீர்மானங்களையே கூட பார்ப்பீர்களானால், தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு ஒரு கட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டனவே ஒழிய மத்திய மாநில உறவுகள் பற்றி எல்லாப் பிரச்சினைகளும் ஆராயப்பட்டு முடிந்த முடிவுகளெல்லாம் எடுக்கப்பட்டு விட்டதாக யாரும் கருதக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போதும், "எல்லாவற்றையும் முடித்துவிட்டீர்களா?" என்று கேட்டார். எல்லாவற்றையும் முடிக்கப் போதுமான நேரமும் இல்லை, அப்படிப்பட்ட நோக்கத்தில் அந்த மாநாடு கூடவும் இல்லை. எனவே முடிந்த முடிவுகள் அங்கே எடுக்கப்பட்டுவிட்டன என்பதல்ல இதன் பொருள்.

பெங்களூர் மாநாடு ஒரு முதல் கட்டம். இதுவே இறுதியான ஒன்றல்ல. இறுதியான முடிவெடுக்க இன்னும் பல கட்டங்கள் நாம் நகர வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகுதான் நம்முடைய இலட்சியங்கள் நிறைவேறக்கூடும் என்பதை நாம் அறிவோம். ஜனநாயக அடிப்படையில் அந்த மாநாட்டில் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. வேறு முயற்சிகள் அங்கே மேற்கொள்ளப்படவில்லை: அதுவும் இந்த மாநாடு பெங்களூரில் முதலில் கூட்டப்

பட்ட காரணத்தால், இது தென்னக முதல்வர் மாநாடு என்று சொல்லப்பட்டது. இப்படிச் சொன்னதற்குக் காரணம், இதறகு முதலில் தென்னக முதல்வர்களின் கவுன்சில் என்று வைத்துக்கொள்வோம்' என்ற கருத்து அங்கே தெரிவிக்கப பட்டது. மாலையில் மாநாடு முடிந்த பிறகு நான்கு மாநில முதலமைச்சர்களும் நிருபாகளை அழைத்துச் சொல்லும்போது, இந்தக் கருத்தைத் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். இப்போது எடுத்த எடுப்பில் நான்கு மாநிலத்தின் முதல்வர்கள்தான் கூடியிருக்கிறோம். இதுதான் என்றென்றைக்கும் இருக்கும் அமைப்பு என்பதல்ல உண்மை. எங்கிருந்தாவது நாம் துவக்கியாக வேண்டியிருக்கிறது. யாராவது இதைத் துவக்கியாக வேண்டும் என்ற அடிப்படையில் இன்றைக்கு நாங்கள் துவக்கியிருக்கிறோம். இங்கே கூட ஒரு குழு போடும்போது, முதலில் ஒரு 8 பேரைப் போடுகிறோம். பின்னால் 20 பேரைச் சேர்த்துக்கொள்கிறோம். இன்னும் அதிகமானவர்கள் தேவை என்றால்கூட அவர்களையும் சேர்த்துக்கொள்கிறோம். அதைப்போலத்தான் இந்த மாநாடும். 1855 ஆம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்தை உருவாக்கிய திரு. ஹேராம்ஸ்-ம் மற்றொருவரும் 2 வெள்ளைக்காரர்கள்தாம். வெள்ளைக்காரர்கள்தான் அதற்குத் தலைவராகவும் செயலாளராகவும் இருந்து தொடங்கினார்கள். அன்றைக்கு அது அமைக்கப்பட்டபோது இருந்த நோக்கம்தான் என்றைக்கும் இருக்க வேண்டும் என்பது நியதியல்ல. அந்த வகையில்தான் பெங்களூரில் முதற்கட்டமாக இந்த மாநாடு தொடங்கப்பட்டது. ஆனால் அதில் கலந்துகொண்டவர்கள் 4 மாநில முதல்வர்களாக மட்டும் இருந்துவிட்டார்கள். கேரள மாநில முதலமைச்சரும் இதில் கலந்துகொண்டு 5 மாநில முதல்வர்களைக் கொண்ட கூட்டமாக அது இருந்திருந்தால், பல்வேறு பிரச்சினைகளுக்கு இன்றைக்கு இடமே இருந்திருக்காது. கருணாகரனுக்குப் பெயர் ராமச்சந்திரன்தான். இலங்கையை எரித்த கருணாகரன் என்று கம்பன் பாடுகிறான. எனவே இராமனுக்கு மற்றொரு பெயர்தான் கருணாகரன். எனவே 4 இராமர்களாக மட்டுமல்லாமல் 5 இராமர்களாக அன்றைக்குக் கூடியிருந்தால், பல்வேறு பிரச்சினைகள் இன்றைக்கு வந்திருக்காது. இன்றைக்கு நான்கு பேர்கள் மட்டும் கூடினாலும்கூட நாளடைவில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில முதலமைச்சர்களின் ஒருமித்த கருத்தையும் ஒத்துழைப்பையும் பெற வேண்டும் என்ற நோக்கம்தான் இருந்தது. இந்த மாநாட்டைத் தென்னகத்தோடு நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லை.





அதோடு மட்டுமல்ல, காங்கிரஸ் அல்லாத மாநில முதலமைச்சர்களைக் கொண்டிருக்கிற ஒரு குழுவாகக் கூட இதை அமைக்க வேண்டும் என்று விரும்பவில்லை. மத்திய அரசு மட்டும் இந்த விஷயத்தில் ஒரு "விப்" கொடுக்காமல் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில முதலமைச்சர்களும் தங்கள் விருப்பம் போல் கலந்து கொள்ளலாம் என்ற ஒரு உரிமையை மட்டும் வழங்கியிருக்குமானால், உண்மையிலேயே அத்தனை மாநில முதல்வர்களும் இதில் கண்டிப்பாகக் கலந்து கொண்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதில் ஒன்றும் தப்பில்லை. காரணம், மாநிலங்களை ஆளுகிறவர்களின் உள்ள உணர்வு எப்படி இருக்கிறது என்பதை நான் உணர்ந்திருப்பதால், இதைச் சொல்கிறேன் ஆக இந்த 'விப்' தான் அவர்களையெல்லாம் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள விடாமல் தடுத்தது. தனிப்பட்ட முறையில் பேசுகிறபோது, எந்த அளவுக்கு அவர்களும் உரிமைகள் இல்லாமல் தவிக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். முதலமைச்சர்கள் மாநாட்டில் ஒரு அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் பார்வையாளர்களாக வந்து கலந்து கொண்டு பார்ப்பீர்களானால், அல்லது மத்திய அரசின் சார்பில் நடக்கிற மாநில முதலமைச்சர்களின் மாநாடு அல்லது அமைச்சர்களின் மாநாடு ஒன்றைக் கவனிப்பீர்களானால் எந்த அளவுக்கு அவர்கள் எங்களை விட வேகமாகப் பேசுகிறார்கள் என்பதை உணர முடியும். ஒருமுறை டெவலப்மெண்ட் கவுன்சில் மீட்டிங் போது மாண்புமிகு நிதியமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள், "நாங்கள் எங்களுடைய மேனிபெஸ்டோவை வைத்துத்தான் திட்டங்களைப் போடுகிறோம். எனவே நாங்கள் சொல்வது மேற்கு வங்க முதலமைச்சருக்கோ தமிழக முதலமைச்சருக்கோ அல்லது திரிபுராவின் முதலமைச்சருக்கோ பிடிக்காமல் இருக்கலாம். அதில் நியாயம் கூட இருக்கலாம். நாங்கள் அவர்கள் மேனிபெஸ்டோவைப் பார்த்து எப்படி திட்டம் வகுக்க முடியும்? எங்கள் மேனிபெஸ்டோவை வைத்துத் தான் திட்டங்களை வகுக்கிறோம். நாங்கள் கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோவையோ, அண்ணா தி.மு.க. மேனிபெஸ்டோவையோ வைத்து திட்டம் தீட்டவில்லை." என்று குறிப்பிட்டார்கள். எனவே அந்த வகையில் அந்த மாநாட்டிற்குப் பிறகு நிருபர்களை அழைத்துப் பேசும் போது, தமிழக முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்தும் அப்போது பத்திரிகையில் வெளி

(பிற்பகல் 7-10)

வந்தது. மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையிலுள்ள உறவு நல்ல சூழ்நிலையில் அமைய வேண்டும். அப்போதுதான் மத்திய அரசு பலம் வாய்ந்ததாக அமையும். நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் நிருபர்கள் கூட்டத்திலே பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது. அதைத்

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 13

துண்டாகக் கத்தரித்து வைத்திருக்கிறேன். "இந்த அமைப்பு தென் மாநில முதல்வர்களுக்கு மட்டும் உரியதல்ல. ஏனைய மாநில முதல்வர்களும் இதில் பங்கு கொண்டால்தான் மேலே குறிப்பிட்ட இலட்சியம் பலம் வாய்ந்ததாக அமையும். நான்கு பேரோடு முடிந்துவிடுகிற சூழ்நிலை அல்ல. ஐந்து பேர் சேர்ந்தாலும் இலட்சியம் நிறைவேறிவிடும் என்று சொல்லுவதற்கில்லை. எல்லா மாநில முதலமைச்சர்களும் ஒருமித்த கருத்து கொண்டிருந்தால்தான் பலம் பெறும். இன்று நாங்கள் நான்கு பேர்களாக இருக்கலாம். நாளை 22 பேர்களாக ஆகலாம். இந்த நிலையை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன்" என்று முதலமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்திலே சிறப்பாக எடுத்துத் தெரிவித்தார்கள். இந்த நிலைமைகள் உருவாக்கப்பட்டதற்குப் பிறகு, இந்தக் கருத்தை ஆதரித்து 4 முதலமைச்சர்கள் எடுத்த முடிவின் அடிப்படையில், வங்காள முதலமைச்சர் திரு. ஜோதி பாசு அவர்களும் மற்ற முதல்வர்களும் ஆதரித்து, வரவேற்று இதற்குப் பின்னணியாக இருக்கின்ற கருத்தை வைத்தார்கள். காஷ்மீர் முதலமைச்சர் அவர்கள்கூட இதை ஆதரித்திருக்கிறார்கள். திரிபுரா முதலமைச்சர் அவர்கள்கூட ஆதரித்திருக்கிறார்கள். வேறு பல முதலமைச்சர்களும் இதை ஆதரிக்க வேண்டும் என்ற அளவிற்கு இருக்கிறார்கள்.

அடுத்த கூட்டத்தை தமிழ்நாட்டில் கூட்ட வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நான்கு முதலமைச்சர்களும் அடுத்த கூட்டத்தை இங்கே கூட்டலாம் என்று இருக்கிறார்கள். இது விரிவடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. டில்லிக்குப் போய்விட்டு வந்த ஆந்திர முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் அவர்கள், வேறுபல முதலமைச்சர்களும் கலந்துகொள்ளும் சூழ்நிலை ஏற்படும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி வேறு பல முதலமைச்சர்களும் கலந்து கொள்ளும் சூழ்நிலை ஏற்படும்போது, அது வலிவு பெறக்கூடிய அளவிற்கு இருக்கும். ஆகவே இது நல்ல நோக்கத்தின் அடிப்படையிலே நிறுவப் பட்டுள்ளது என்பதை முதலிலே தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது கேட்டுக்கொண்டிருப்பவர்கள் எட்டு பேராக இருந்தாலும்கூட, அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் ஏடுகளில், செய்தித் தாள்களில் வருகிற போது, என்றைக்காவது ஒரு நாளைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும் மற்றவர்களும் சொன்ன "கொட்டேஷனை" எடுத்துச் சொல்வதற்குப் பயன்படும். பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்



1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

கள் வலிவு பெற்று நிற்கும் என்பது உறுதி. இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட காரணங்கள் எல்லாம் பயன்படும் என்ற முறையில் இந்த அவையில் எடுத்துச் சொல்லப்படுகிற கருத்துக்கள் அவைக் குறிப்பில் ஏறுவதன் மூலமாக, வரலாற்றுச் சிறப்பு பெற்றதாக, என்றென்றும் நினைத்துப் பார்க்கக் கூடிய அளவிற்குப் பயன்படும். முதற்கண் வெற்றி என்ற சிந்தனையோட்டத்தை உருவாக்கியிருக்கிறது. உடனடியாக சர்க்காரியா கமிஷன் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது வரவேற்கக் கூடிய ஒன்று, மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அப்படி இல்லாவிட்டால், என்ன நிலைமை ஏற்படும் என்பதை மத்திய அரசு நன்கு உணர்ந்து இருப்பதால்தான், இதை நியமித்திருக்கிறது. மற்ற மாநில முதல்வர்களும் ஒன்றபின் ஒன்றாகச் சேர்ந்து கூட்டாக பிரச்சினைகளை வைக்கிற நிலைமைகள் வந்துவிடுவதற்குப் பதிலாக இப்போதே சர்க்காரியா கமிஷனை வைத்தால், இந்தப் பிரச்சினை முற்றிவிடாமல் காப்பாற்ற பயன் படும் என்று கருதி, கமிஷன் வைக்கும் அளவிற்கு உள்ளபடியே வந்ததற்காக மகிழ்ச்சியடைகிறோம். எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். இதுபற்றி பல மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அகில இந்தியாவில் இருக்கின்ற அரசியல், அறிவியல் அறிஞர்கள், தத்துவ அறிஞர்கள், அரசியல்வாதிகள், அரசியல் வல்லுநர்கள் ஆகியவர்கள் எல்லாம் மிகச் சிறப்பாகக் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். சர்க்காரியா கமிஷன் என்று ஒரு நபர் குழுவாகப் போட்டது சரியாக இருக்காது. வழக்கு மன்றத் திலே கூட தீர்ப்பு அளிக்க சில நேரங்களில் ஒரு நீதிபதி போதாது என்று ஃபுல் பென்ச் என்று சொல்லி ஐந்து பேர் இருந்தால்தான் நல்லது என்று வருகிறது. 'கான்ஸ்டிடியூஷனல் ப்ராப்ளம்' என்று வருகிறபோது, ஒருவர் இருந்தால் போதாது என்று கருதி சில சமயங்களில் உச்ச நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் இருந்து முடிவு செய்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு 9 மாநிலச் சட்டசபைகளைக் கலைக்க வேண்டும் என்று கருதியபோது, அப்போதிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. சரண் சிங் அவர்கள், "ஏன் கலைக்கக் கூடாது?" என்று கேட்டு மாநிலங்களுக்கு நோட்டீஸ் அனுப்பியபோது, அப்படி கேட்டது தவறு என்று நான்கு மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்தன. அப்போது ஒரு நீதிபதியால் தீர்ப்பு அளிக்க முடியாது என்று சொல்லி, தலைமை நீதிபதி தலைமையில் ஏழு நீதிபதிகள் உட்கார்ந்து தீர்ப்பு அளித்ததை வாங்கிக் கொண்டதற்குப் பிறகு, கலைத்தார்கள். 24 ஆம் தேதி தீர்ப்பு வந்தது. 30 ஆம் தேதி கலைக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. ஒரு வழக்கிற்கே 7 நீதிபதிகள் சேர வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. ஆகவே ஏற்கெனவே அமைக்கப்பட்ட ராஜமன்னார் குழுவில் வல்லுநர்கள், அரசியல்

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 13

கட்சியைச் சேராமல் அரசியல் மாச்சரியங்கள் இல்லாமல் உள்ள 3 வல்லுநர்கள், நீதித் துறையை நன்றாக அறிந்தவர்கள், அதிகாரப் பங்கீட்டையும், நிதி ஆதாரப் பங்கீட்டு முறையையும் தெளிவாகத் தெரிந்தவர்கள், இந்த மன்றத்திலே தொடர்ந்து எதிர்க் கட்சித்தலைவராக இருந்து Versatile Knowledge ஒருங்கே அனைத்து அறிவையும் பெற்ற டாக்டர் ஏ. எல். முதலியார், டாக்டர் இராஜ மன்னார், டாக்டர் சந்திரா ரெட்டி ஆகிய மூன்று வல்லுநர்கள் இடம பெற்று அறிக்கையை உருவாக்கினார்கள்.

அதுமட்டுமல்லாமல், கான்ஸ்டிடியூஷனை உருவாக்கும்போது, டாக்டர் அம்பேத்கார் ஒருவர் கையில் கொடுத்தா அதை உருவாக்கினார்கள்? அவர் தலைமையில் பத்து, பன்னிரெண்டு பேர்களுக்கு மேல் நாடு முழுவதையும் சேர்ந்த வழக்கறிஞர்கள் இடம் பெற்றார்கள். தமிழகத்திலே இருந்த திரு. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் போன்றவர்கள் எல்லாம் இடம் பெற்று உருவாக்கப்பட்டதே கூட நடைமுறைக்கு வந்த பிறகு, மூன்றாண்டுக் காலத்திற்குப் பிறகு, இந்த அரசியலமைப்புச் சட்டத்தை நாமா உருவாக்கினோம் என்று டாக்டர் அம்பேத்கார் அவர்களே சந்தேகப்படுகிற அளவிற்கு, இதைக் கொளுத்த வேண்டும் என்று அவரே சொல்லத்தக்க அளவிற்கு இருந்தது ஆகவே சர்க்காரியா கமிஷனை நியமித்தது வரவேற்கத்தக்க ஒன்று. எதிர் காலத்திலே பிரச்சினைகளைக் கிளப்பாமல் இருக்க வேண்டுமானால், இப்படிப் பட்ட வாதங்களை மாநிலத்திற்கு மாநிலம் கிளப்பாமல் இருக்க வேண்டுமானால், இதைத் தடுக்க வேண்டும் என்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், நாட்டிலுள்ள அரசியல் வல்லுநர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததைப் போல, பல பேர் இக்குழுவிலே இடம் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. ஆர். தாமோதரன், திரு. ஜி. சுவாமி நாதன், திரு. நல்லசிவன் சொல்லியதைப் போல, இதிலே நீதிபதிகள் இடம் பெற வேண்டும், அரசியல் அமைப்புச் சட்ட வல்லுநர்கள் இதிலே இடம் பெற வேண்டும், ஆளும் நிர்வாக அனுபவம் பெற்றவர்கள், மத்திய அரசிலும், மாநில அரசிலும் ஆள்கின்ற தன்மையைப் பெற்றவர்கள் இடம் பெற வேண்டும். மாநிலத்தை ஆண்ட முதலமைச்சராக இருந்த அனுபவங்களைப் பெற்றவர் இதிலே இடம் பெற்றால், அவர் ஆட்சி செய்த காலத்தில் ஏற்பட்ட விளைவுகள் என்னென்ன, எப்படிப்பட்ட இடையூறுகள் ஏற்பட்டன என்பதையெல்லாம் தெளிவாக உணர்ந்து சொல்வதற்கான வாய்ப்பு ஏற்படக் கூடும். மக்களுடைய பிரதிநிதிகளும் இடம் பெறச் செய்யக் கூடிய அளவிற்கு நிலைமைகளை



1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

உருவாக்கி, அரசியல் அமைப்புச் சட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து உருவாக்க வேண்டும். எதிர்காலத்தில் தகராறு, மாச்சரியம் ஏற்படாதவாறு இருக்க வேண்டுமானால், இவர்களையெல்லாம் சேர்த்துக்கொள்வது நல்லது.

இரண்டு நாட்களுக்கு முன்பு பாராளுமன்றத்திலே பேசுகின்றபோது, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. சேத்தி அவர்கள், சர்க்காரியா கமிஷனில் சில பேரைச் சேர்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த எண்ணத்தை வரவேற்கிறோம். இதற்கு உதவி பெறுகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களும் வலிவு பெறுமானால், இந்த நோக்கம் ஓரளவிற்கு நிறைவேறும். அது மட்டுமல்லாமல், அரசியல் அமைப்புச் சட்டத்திற்குட்பட்டு மாநில, மத்திய உறவு பற்றி ஆராய்வார் என்று எடுத்துச் சொன்னபோது, அதற்கு எதிரான நிலைமையும் ஏற்பட்டது. அதற்கும் திரு. சேத்தி அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். எந்த மாநில அரசாக இருந்தாலும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்ய வேண்டிய திருத்தங்கள் பற்றி சிபாரிசு செய்யலாம் என்று சொல்லி மற்றொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு விதி இருப்பதால், திருத்தப்பட வேண்டும் என்ற காரண விளக்கங்களைச் சொல்லி, திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதை அறவே திருத்தமாட்டோம் என்று சொல்லவில்லை, திருத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கு வலுவூட்டக்கூடிய வகையிலே இங்கே எடுத்துச் சொல்லப்படுகிற கருத்துக்கள் இருக்குமானால், நல்லதொரு சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கூறிக் கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்லாமல், இரண்டு மூன்று காரணங்கள் மற்றவர்களால் எடுத்துச் சொல்லப்பட்டன. இப்படிப்பட்ட ஒரு குழு ஆராய்ந்து சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறதா? ஏற்கெனவே ஸோனல் கவுன்சில் என்று ஒன்று இருக்

(பிற்பகல் 7-20)

கின்றதே, அதிலேயே கூட இந்த மாநில முதலமைச்சர்கள் எடுத்துச் சொல்லலாம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 'ஸோனல் கவுன்சில்' என்ற மண்டலக் குழு அந்தந்த மண்டலத்திலுடைய மாநில முதலமைச்சர்கள் எல்லாம் உள்துறை அமைச்சரின் தலைமையின்கீழ் இயங்குகின்ற ஒரு குழு. அது இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆராய்வதற்காக அமைந்த குழு அல்ல. ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இடையிலே இருக்கின்ற பிரச்சினை

கள், சிறு சிறு பிரச்சினைகள்பற்றி விவாதிப்பதற்கு அது இருக்கிறது. விற்பனை வரி போடுவது, இங்கேயிருந்து நகர்த்துவது, தடுப்பது—நான் முதலிலேயே சொன்னேனே, யானை அங்கேயிருந்து இங்கே வருவது, இங்கேயிருந்து யானை அங்கே போவது, அதை அவர்கள் பிடித்து வைத்துக் கொண்டு, இந்த யானையை அனுப்பச் சொல்வது, பிறகு அந்த யானையை அனுப்புவது—இந்த மாதிரி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக அது இருக்கின்றது. கேரளத்திற்கும் நமக்கும் இப்படி உள்ள பிரச்சினை, நமக்கும் கர்நாடகாவிற்கும் சந்தன மரக் காடுகள் பற்றிய பிரச்சினை, சந்தன மரங்களை வாங்குவது, விற்பது, இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்றுதான் அந்த மண்டலக் குழு அமைந்திருக்கிறதே தவிர, இதைவிட பெரிய பிரச்சினையாக இருக்கின்ற காவிரி நீர் பிரச்சினை, பெரிய பிரச்சினையாக இருக்கின்ற குடிநீர் பிரச்சினை இவைகளையெல்லாம் தீர்க்கின்ற அளவுக்குக்கூட இந்த மண்டலக் குழுவிற்கு அதிகாரம் இல்லை. சிறுசிறு பிரச்சினைகளைத் தீர்க்கக்கூட இதனால் முடிவதில்லை. அதுகூட அட்வைசரி கமிட்டியே தவிர ஸ்டேசுடுரி அதிகாரம் உள்ள ஒரு கமிட்டி கூட அல்ல. பல மாநில முதலமைச்சர்கள்கூட அந்த மண்டலக் கூட்டத்திலே, "நாம் அடிக்கடி கூடி கலைகிறோமே தவிர, இதிலே எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் முழுவதும் உருப்பெறுவதும் இல்லை, உருப்படியான பலனையும் தருவதில்லை." என்று வருத்தத்தோடு, வற்புறுத்திக்கூட எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இதற்கு என்று ஒரு தனி அதிகாரம் கொடுங்கள். இந்த மண்டலக் குழுவிற்கு என்று சிலபல அதிகாரங்கள் இருந்தால், அதைச் செய்வதற்கு உள்துறை அமைச்சருக்கு அந்த அதிகாரத்தையாவது கொடுத்தால், அதை நிறைவேற்றி விட்டாவது அவர்கள் செல்ல முடியும். அதுவும் பரிந்துரை செய்வதாக இருப்பதால், உரிய துறைக்குப் பரிந்துரை செய்துவிட்டு, அது நிறைவேற்றப்படவில்லை என்ற குறைபாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். தேசிய வளர்ச்சிக் குழு, டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திலே பிரதமர் அவர்கள் தலைமையின் கீழே எல்லா மாநில அமைச்சர்களும் கூடுகின்ற கூட்டத்திலே இந்தப் பிரச்சினைகளை விவாதிக்கலாமே என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே அவ்வப்போது மத்திய அரசு எதைப்பற்றி விவாதிக்கலாம் என்று நிகழ்ச்சி நிரலிலே போடுகின்றதே தவிர, இந்தப் பிரச்சினையைப்பற்றியெல்லாம் என்று அங்கேயிருந்து வர முடியாது. அண்மையிலே மாநில முதல்வர்களின் மகாநாடு டெல்லியில் நடைபெற்றது. இரண்டு பிரச்சினைகளைப் பற்றித்தான் சொன்னார்கள். ஒன்று 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதுபற்றி விவாதிக்கப்பட, மற்றொன்று 'லா அண்டு ஆர்டர்', 'சட்டம்



ஒழுங்கு' பற்றி விவாதிக்கப்பட. இந்த இரண்டும்தான் நிகழ்ச்சி நிரலிலே போடப்பட்டது. மாநில சுயாட்சி பற்றி, தனி அதிகாரம் பெறுவது என்று இருக்கின்ற மற்ற பிரச்சினைகளைப் பற்றி நாம் அதிகமாகப் பேச முடியாது. அங்கே அனுப்பினால், அதை அஜெண்டாவிலே சேர்ப்பார்களா என்பது வேறு. ஆக அதை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதும் சரியல்ல. அது மட்டுமல்ல, இன்டர் ஸ்டேட் கவுன்சில் என்று அமைக்கலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே விதி இருக்கின்றது. இதுவரையிலும் இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்க அதிகாரம் கொடுக்கப்பட்டும் அது அமைக்கப்படவே இல்லை. அதுவும் எப்படி அமைக்கலாம் என்று சொன்னால், மாநிலத்திற்கு மாநிலம் தகராறு இருந்து, குடியரசுத் தலைவர் விரும்புவார்களேயானால், இப்படி ஒரு இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைந்தால், அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று கருதுவார் என்றால், குறிப்பிட்ட பிரச்சினைக்கு மட்டும்தான் இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்கலாம் என்று இருக்கின்றதே தவிர, மத்திய மாநில அரசு உறவுகள்பற்றியெல்லாம் சிந்தித்து முடிவு எடுப்பதற்கு அந்தக் கவுன்சில் இல்லை. அதுவும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த மூன்று வழிகளிலும் இந்தத் தீர்மானம் கொண்டிருக்கின்ற தன்மைகளைப் பெறமுடியுமா என்றால், அப்படியும் பெறுவதற்கில்லை. அதுவும்கூட இன்டர் ஸ்டேட் கவுன்சில் என்று சொல்லப்பட்டிருக்கின்ற 263-வது விதியிலே அரசியல் அமைப்புச் சட்டத்திலே 'பொதுமக்கள் நலன் கருதி குடியரசுத் தலைவர் எந்த ஒரு நேரத்திலே அவசியம் என்று கருதினால், ஒரு கவுன்சிலை கீழ்க்கண்ட பணிகளுக்காக அமைக்கலாம்:

மாநிலங்களுக்குள் எற்படும் தகராறுகளை விசாரிப்பதற்கும் ஆலோசனை கூறுவதற்கும்,

சில மாநிலங்கள் அல்லது எல்லா மாநிலங்களுக்கிடையே அல்லது மத்திய அரசுக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநில அரசுகளுக்கும் இடையே உள்ள பொது நோக்குடைய பொருள்பற்றி ஆராய அல்லது ஆராய்ந்து விவாதிக்க,

எந்த ஒரு பொருள் பற்றியும் பரிந்துரை கூறவும், குறிப்பாக ஒருமுகப் படுத்துவதற்கும், கொள்கை மற்றும் செயல்பாடு பற்றி பரிந்துரை செய்வதற்கு ஒரு கவுன்சிலை அமைப்பதும், அக்கவுன்சில் பணிகளை வரைமுறை அமைப்பு மற்றும் வழி முறைகளைக் குறிப்பிடுவதும் குடியரசுத் தலைவரின் சட்டப்பூர்வமான பணியாகும்" என்பதுதான் அந்த விதிக்கு இருக்கின்ற கருத்து. அதற்கு அப்பால் செல்லவே முடியாது

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 13

1979 ஆம் ஆண்டில் தமிழக அரசு ஒரு பரிந்துரை செய்து அதிலே மாநிலப் பிரதிநிதிகளும் இடம் பெற வேண்டுமென்று எடுத்துச்சொல்லி, இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்கவேண்டியது பற்றி தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுதியது. 'போதுமான ஏற்பாடுகள் ஏற்கெனவே இருப்பதால், இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்க செயற்குறிப்பு இல்லை' என்று மைய அரசு நமக்குப் பதில் எழுதியிருக்கிறது. இப்படி ஒரு கவுன்சில் அமைந்தால், சில பல பிரச்சினைகள் தீரும் என்று சொன்னபோதுகூட, ஏற்கெனவே பொதுவாகவே ஏற்பாடுகள் இருப்பதால், இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை' என்று மத்திய அரசு பதில் அளித்தது. இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைப்பதுபற்றி மீண்டும் பரிசீலிக்குமாறு தமிழக அரசு மைய அரசுக்கு எழுதியது. ஏற்கெனவே இருக்கின்ற ஏற்பாடுகள் திருப்திகரமாகச் செயல்படுவதால், இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று மறுபடியும் மத்திய அரசு பதில் எழுதியது. அந்த பதிலோடு நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அந்த முறையில்தான் இப்படிப்பட்ட சூழ்நிலை வந்தது. மாண்புமிகு உறுப்பினர் பலரும் எடுத்துச் சொல்லியிருப்பதற்கு இணங்க, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி எடுத்துச் சொன்ன மாதிரி, இது திடீரென்று ஏதோ ஒரு நிகழ்ச்சியின் விளைவு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பல காலமாக இந்த எண்ணங்கள் வலியுறுத்தப்பட்டு வருகின்ற தன்மைகளை எடுத்துச்சொன்னார்கள். டாக்டர் பி. சி. ராய் அவர்கள் சொன்னதையும் சொன்னார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள்கூட பி. சி. ராய் அவர்கள் மாதிரி இருந்திருப்பாரோ என்னவோ என்றுகூட நானும் கருதுகிறேன். டாக்டர் பி. சி. ராய் அவர்கள் எப்படிப்பட்ட உணர்வோடு கருத்துக்களை எடுத்து வழங்கினார்களோ அப்படிப்பட்ட உணர்வுகளை திரு. இராமமூர்த்தி அவர்களும் ஒரு பிரதிநிதியாக இருந்து எடுத்து வைத்தார்கள் என்றுதான் கருதுகிறேன். திரு. சஞ்சீவ ரெட்டி அவர்களும் பல தடவைகள் சொல்லியிருக்கிறார்கள். திரு. ஹனுமந்தையா அவர்களும் பல தடவைகள் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இந்த விவாதம் நடைபெற்று, இப்படிப்பட்ட சிந்தனைக்குரிய கருத்துக்களை வழங்குவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றது இந்த அவை. இந்த பேரவையினுடைய தலைவராக மாண்புமிகு டாக்டர் ம. பொ. சி. அவர்கள் இருப்பது நமக்கும் பெருமகிழ்ச்சியைத் தருகிறது. இந்தக் கருத்தை பல ஆண்டுக்காலமாக [illegible] அவர்கள் வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள் என்பதைக்கூட உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டினார்கள். அதுவும் ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதற்காகத்தான் அதைக்



1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பல ஆண்டுக்காலமாக பல பேர்களுடைய கருத்துக்களின் அடிப்படையிலே இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறோமே தவிர, வேறு ஒரு நிலையும் இல்லை. 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையிலே கூட நாம் இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இன்றைய நிலையில் இந்தியக் குடியரசில் மத்திய மாநில உறவிலே மட்டுமல்லாமல், பிரச்சினைகளுக்கு இடம்கொடுப்பதாக இந்த உறவு உள்ளது. தமிழ்நாட்டில் அரசியல், கலாச்சார, பொருளாதார, மொழிப் பிரச்சினைகளும், கோரிக்கைகளும் பற்றி திடமாக வாதாட அனைத்து சந்தர்ப்பங்களையும் மாநில அரசு பயன்படுத்தி, அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் நியாயமான உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க மத்திய அரசு செவிசாய்த்து செயல்பட ஆவன செய்வதற்கு மாநிலங்களையெல்லாம் வலிவுபடுத்தினால்தான் மத்திய அரசு வலிவுள்ளதாக இருக்கும் என்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யத் தக்க திருத்தங்களைச் செய்வதன் மூலமாக விரைவில் சீராக்கப்படும் என்று நம்புகிறேன். 1977-ல் ஆளுநர் உரையின் மூலமாக மாநில அரசின் கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதே போன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தின் உறுப்பினராக இருந்து சொல்கின்றபோது—மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள்கூட அவர் சொன்னதை எடுத்துச்சொன்னார்கள்—கடந்த பல ஆண்டுகளாக இந்திய கூட்டாட்சி அமைப்பின் நடைமுறைப்போக்கானது, மாநிலங்களின் மனப்பான்மையில் ஒருவிதமான விரக்தி நிலையை உருவாக்கியிருக்கிறது. மாநிலங்கள் வெறும் சுங்கம் பெறும் மாநகராட்சி மன்றங்களைப் போல். . .' என்று படித்துக் காண்பித்தார்கள் என்று கருதுகிறேன். ஆக 'மிக விரைவாக மாறி வருகின்றனவோ' என்ற கருத்தைச் சொன்னார்கள். மாநிலங்கள் நாளுக்குநாள் மேலும் மேலும் விரக்தி அடைந்துகொண்டே போகின்றன. மத்திய அரசானது அரசியல் அமைப்புச் சட்டத்தை மறுபார்வையிடவும் மறு ஆய்வு செய்யவும் வேண்டுமென்பதை மாநிலங்கள் கோரிக்கையாகக் கொண்டிருக்கின்றன. இந்தக் கோரிக்கையைத்தான் இப்போதும் வைத்திருக்கிறோம். செவி சாய்க்கவேண்டியது மத்திய அரசு, இதைச் சொல்லவேண்டியது நாம். செவி சாய்க்கத்தான் சொல்கிறோம். அப்படி செவி சாய்த்து சிந்தனையில் வைத்து செயலாற்றும்படியாகத்தான் கேட்டிருக்கிறோமே தவிர, போர்க் கொடியை உயர்த்தவோ எதிர்ப்பதோ இல்லை. மேலும் அண்ணா அவர்கள் இங்கே அவையிலே பேசுகின்றபோது,

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 13

சொன்னது. “நமக்கு இருக்கின்ற கவலையெல்லாம் தூக்க முடியாத பாரத்தை மத்திய அரசினர் விரும்புகின்றார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவுகளெல்லாம் கூடியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்று சொல்வது விவாதத்திற்கு ஏற்றது. அரசியலுக்கு நல்லது, காரியத்திற்கு உகந்தது” என்று மிகத் தெளிவுபட இந்த அவைகளிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். 1967 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சட்டமன்ற அவைகளிலே பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். “மானியங்கள் என்ற போர்வையில் மத்திய அரசு அதனிடம் சாட்டையை வைத்துள்ளது. ஏனெனில் மத்திய அரசு தன் உள்ளத்தேர்வின்படி மானியங்கள் வழங்குகிறது. இத்திட்டத் தொகையைப் பொறுத்தவரையிலும், நிதி தொடர்புகொள்ள மறு ஆய்வு செய்யப்பட வேண்டும், மிக விரைந்து செய்யப்பட வேண்டும். நமக்குச் சேர வேண்டியவை நம்மிடத்திலேயிருந்து கொள்ளை போகக்கூடாது. மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமுள்ள தொடர்பு மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்” என்ற கருத்தைத்தான் அவர்கள் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஒன்றை மட்டும் நாம் மிகவும் ஆராய வேண்டும். உலகத்திலே இருக்கின்ற ஜனநாயக நாடுகளிலே மிகப் பெரிய நாடு இந்தியா தான். 70 கோடி மக்களை வைத்து ஜனநாயகத்தை 34, 35 ஆண்டுகாலமாகக் காப்பாற்றி வருகின்ற பெருமையை, புகழை இந்தியா பெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச்சொன்ன மாதிரி, ஒரு பகுதி பிரிந்து போகலாம், பிரிந்த பின்னாலேதான் உரிமைகளைப் பெற முடியும், அதிகாரங்களைப் பெற முடியும் என்ற கட்டம் இருந்தது. இல்லாவிட்டால் எந்த ஒரு வகையிலும் பெற முடியாது என்ற உணர்வும் மற்றவைகளும் இருந்த காலத்திலே திராவிட நாடு பிரிவினை கேட்கவேண்டிய அவசியம் வந்தது. ஆனால் சீனப் பெரும்போர் ஏற்பட்டதற்குப் பிறகு, “சுவர் இருந்தால் தானே சித்திரமே வரைய முடியும்? நாட்டினுடைய சுதந்திரம் இருந்தால் தானே நாமே வாழ்வை அமைத்துக்கொள்ள முடியும். நாடே பறிபோகின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடுமானால் நம்முடைய வாழ்வைச் சீரமைக்க முடியாது” என்ற கருத்து வந்த பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்களே இந்த திராவிட

(பிற்பகல் 7-30)

நாடுப் பிரிவினையை விட்டுவிட்டோம் என்று சொன்னார்கள். அதோடு இந்திய நாட்டின் ஒருமைத் தன்மையும், அதனுடைய தன்னாட்சித் தன்மையும் காப்பாற்றப்பட வேண்டுமென்பது மட்டுமல்லாமல், அதே நோக்கில் திராவிட நாடு



1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

பிரிய வேண்டுமென்பதற்காக எந்தெந்தக் காரணங்கள், உணர்வுகளை வைத்துக் கேட்டோமா, அதன் அடிப்படையிலே மாநிலங்கள் தன்னாட்சி உரிமை பெறுகின்ற அளவுக்கு வந்தால், இந்தப் பிரச்சினைகள் சுலபமாகத் தீரும் என்ற அடிப்படையிலேதான் இந்தக் கருத்துக்களை எடுத்து வைத்தோம். ஆக இந்தியா துண்டாடப்பட வேண்டுமென்றோ, அதைச் சிறிதாக்க வேண்டுமென்றோ இந்த அவையிலோ, இந்த நாட்டிலோ யாரும் சொல்லவில்லை என்று தெளிவுபட எடுத்து வைக்க விரும்புகிறேன். முஸ்லீம் லீக் கட்சியினர் பாகிஸ்தான் கேட்டு, பாகிஸ்தான் பிரிந்த பிறகு, இந்தியாவில் உள்ள முஸ்லீம் லீக் கட்சியினர் அத்தனை பேரும், மறைந்த கண்ணியம் மிகுந்த காயிதே மில்லத் மகமது இஸ்மாயில் அவர்களுடைய தலைமையில் கூடி, “இந்திய முஸ்லீம்களைப் பொறுத்தவரையில், எப்போது நாங்கள் இந்தியாவில் இருக்கிறோமோ, நாங்கள் இந்தியர்கள் என்ற உணர்வோடுதான் பாடுபடுவோம்” என்றும், “பாகிஸ்தான் வேறு நாடு ஆகிவிட்ட பிறகு, அது எங்களுக்கு அந்நிய நாடுதான்” என்றும், “இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போர், கிளர்ச்சி அல்லது மாச்சரியங்கள் ஏற்பட்டால் இந்திய முஸ்லிம் லீக் கட்சி இந்தியா பக்கம்தான் இருக்கும்” என்றும் “பாகிஸ்தான் கேட்டோம் என்பதால் அவர்கள் பக்கம் போக மாட்டோம்” என்றும் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மிகப் பெரிய ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும். ஒரே ஒரு காரணத்தைத்தான் திரும்பத் திரும்ப எடுத்து வைக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், உரிமைகள், நிதி ஆதாரங்கள் கொடுத்தால், இந்தியாவின் வலிவுத் தன்மை குறைந்துவிடும், ஸ்ட்ராங் இந்தியா இராது, வலிவான இந்தியா இராது என்று வாதிடுகிறார்கள். அந்த வாதத்திற்குக் காரணமே இல்லை என்று மாண்புமிகு மேலவைத் தலைவரவர்கள் பல்வேறு நூல்களிலே எழுதியிருக்கிறார்கள். ஒரு நூல், இரண்டு நூல்கள் அல்ல. 10 நூல்கள் எழுதியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த அளவுக்குப் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். மாநிலங்கள் தன்னாட்சி உரிமை பெறுவதால் இந்தியா வலிமை பெறுமே தவிர, வலிமை இழக்காது; இப்போதுள்ள மாச்சரியங்கள், பலகீனங்கள், மற்றவைகள் ஏற்படாமலிருக்க வழி செய்யுமே தவிர வேறல்ல, மாநிலங்கள் அதிக உரிமைகள் பெறுவதன் காரணமாக இந்தியாவின் வலிமை குறையாது என்று தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

## 20—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென் மாநில முதல்வர்களின் கூட்டத்தில எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 13

இந்திய அரசின் பங்கு என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்தியாவில் உள்ள 70 கோடி மக்களைக் கட்டிக் காக்கும் பொறுப்பு ஏற்றுள்ள இந்திய அரசின் பொறுப்பு என்ன, கடமை என்ன? Responsibilities and Duties அவர்களுடைய டியூட்டி என்ன, கடமை என்ன, பொறுப்பு என்ன, மாநில அரசுகளின் கடமை, பொறுப்பு என்ன என்று பார்க்கும்போது இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. எக்காரணம் கொண்டும் இந்தியா யாருக்கும் அடிமையாகாமல், யாருக்கும் பறிபோகாமல் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்தியாவைப் பொறுத்தவரையில், இருக்கின்ற தன்மைகள் அத்தனையும் காப்பாற்ற, சுதந்திரத்தைக் காப்பாற்ற என்னென்ன அதிகாரங்கள் வேண்டுமோ, இந்தியாவைக் காப்பாற்ற என்னென்ன உரிமைகள் வேண்டுமோ அந்த உரிமைகள், அதிகாரங்கள் மத்திய அரசிடம்தான் இருக்க வேண்டும். இன்னமும் சொல்லப் போனால், Foreign Affairs என்று சொல்லப்படும் வெளி நாட்டு விவகாரங்கள் அவர்களிடம் இருக்க வேண்டும். மாநிலங்களுக்கு அந்த உரிமை இருந்து, ஒவ்வொரு மாநிலமும் தனித் தனியாக உட்கார்ந்து பேசினாலும் பேசும். அது இந்தியாவின் ஒற்றுமையைக் கெடுத்தாலும் கெடுக்கும். அதனால் வெளி நாட்டு விவகாரம் மத்திய அரசிடத்திலே தான் இருக்க வேண்டும். வெளி நாட்டு உறவு மத்திய அரசிடத்திலேதான் இருக்க வேண்டும். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரிவரை இருக்கும் போக்குவரத்து மத்திய அரசிடத்தில்தான் இருக்க வேண்டும். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரிவரை ரூபாயின் மதிப்பு, கரன்சி போன்றவைகள் மத்திய அரசிடத்தில்தான் இருக்க வேண்டும். இந்தியாவைக் காப்பாற்ற, இந்தியாவை வாழ வைக்கும் தன்மைகள் அத்தனையும் மத்திய அரசிடத்தில் இருக்கட்டும். மாநில சுயாட்சி, தன்னாட்சி கேட்பவர்கள், மாநிலத்திற்கு ராணுவம் வேண்டுமென்றும், கோட்டைக்கு எதிரே பீரங்கி வைக்க வேண்டுமென்றும், அமைச்சர்கள் வீட்டுக்கு முன்னாலே இரண்டு பீரங்கிகளை வைக்க வேண்டுமென்றும் யாரும் கேட்கவில்லை. ராணுவத்தை நாம் கேட்கவே இல்லை. ராணுவம் மத்திய அரசிடம் இருக்க வேண்டும். ராணுவம் யாரிடம் இருக்கிறதோ, அவர்கள் கையிலேதான் வலிவு இருக்கும். ராணுவத்தை எந்த மாநிலமும் கேட்கவில்லை.



## 20—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென் மாநில முதல்வர்களின் கூட்டத்தில எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து

1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

மாநிலங்களுக்கு மக்களை வாழ வைக்கும் முழுப் பொறுப்பு இருக்கிறது. இந்தியாவைக் காப்பாற்றும் பொறுப்பு மத்திய அரசின் கையில் இருக்கிறது. மாநில மக்களை வாழ வைக்க வேண்டிய முழுப் பொறுப்பு மாநில அரசுகளிடம் இருக்கிறது. மக்களை வாழ வைக்க என்னென்ன அதிகாரங்கள், உரிமைகள் தேவையோ அவை மத்திய அரசிடம் குவிக்கப்படாமல் மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும். இதனால் வலிவு குறையுமா என்றால் குறையாது. மாநிலங்கள் நச்சரித்துக் கொண்டிருக்கக் கூடாது, மாநிலங்கள் முணுமுணுத்துக் கொண்டிருக்கக் கூடாது, மாநிலங்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது, மாநிலங்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது, மாநிலங்கள் பொறாமைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. மாநில அமைச்சராக இருக்கும்போது, ஒரு எண்ணத்தை வைத்துக்கொண்டு, திடீரென்று மத்திய அமைச்சர் ஆகிவிட்டால் வேறு மாதிரியாகக் கூடாது. முணுமுணுப்பு, அறுவறுப்பு, வேதனை, வாட்டம் இவை சேர்ந்தால்தான் இந்தியாவுக்கு பலகீனம். முணுமுணுப்பு இல்லாமல், வாட்டம் இல்லாமல், வருத்தம் இல்லாமல் நிம்மதியாக, மன நிறைவோடு கூடிய நிலைமையில் எல்லா மாநிலங்களும் இருந்தால், அது ஒட்டுமொத்தமாகச் சேரும்போது, இந்திய வலிவு என்று ஆகும். ஆக உடல் உறுப்புக்கள் எல்லாம் வலிவாக இருந்தால் தான் உடம்பிலே வலிவு பெற்றிருக்கிறான் என்று சொல்ல முடியும். உறுப்புக்கள் வலிவு இழந்து, உடம்பு வலிமையோடு இருக்கிறான் என்று சொன்னாலும், அல்லது ஒரு குறிப்பிட்ட உறுப்பு வலிவாக இருந்து, மற்ற உறுப்புகள் வலிவு இல்லாமல் இருந்தாலும், அது சரியாக இராது. குறிப்பிட்ட உறுப்புக்கு—பீகாருக்கு வலிவு ஏற்றி, ஏற்றி; உத்திரப்பிரதேசத்திற்கு வலிவு ஏற்றி, ஏற்றி; காலுக்கு வலிவு ஏற்றாமல் விட்டாலும் தவறு. ஒவ்வொரு உறுப்பும் வலிமை பெற்றால்தான் உடம்பு முழுவதும் வலிவு பெற்றதாக ஆகும். இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களும் வலிவு பெற்று, மன நிறைவோடு, மனக் களிப்போடு தங்களுடைய எண்ணங்கள் நிறைவேறுகின்றன என்ற தன்மை இருந்தால்தான், இந்தியாவைக் காப்பாற்றும் நிலைமை ஏற்படும். ஆகவே மாநில அரசுகளுக்கு ஏற்படும் வலிவு மத்திய அரசுக்கு ஏற்படும் வலிவு என்பதை உணர வேண்டும். இது முடியுமா, ஆகுமா என்றால் முடியும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை, உரிமைகளைத் தந்துவிடுவோமானால், மாநிலங்கள் கெட்டுவிடுமென்று சொல்வதற்கில்லை. "தேரான்கண் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும், தீரா இடும்பைத் தரும்" என்றார் வள்ளுவப் பெருந்தகை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னார். சந்தேகப்படக் கூடாதவனைச் சந்தேகிப்பதும், சந்தேகப்பட வேண்டியவனை

நம்பிக் கொண்டும் இருக்கக்கூடாது. அந்த அளவிலே எடுத்துச் சொல்லும் போது, மாநிலங்களை நம்பித்தான் வாழ வேண்டுமா என்னும்போது, எந்த அளவுக்கு அதனால் வலிவு பெற முடியும் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் கையைக் காட்டிச் சொல்கிற மாதிரி இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உதாரணத்திற்குச் சொல்கிறேன். இன்றைய நிலையில் உலகத்திலே வலிவு பெற்று, ஆதிக்கம் செலுத்தி மற்றைய நாடுகளை எல்லாம் ஈர்க்கும் வலிமை பெற்றுள்ள நாடுகள் இரண்டு நாடுகள்தான். அது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஒன்று அமெரிக்கா, மற்றொன்று ரஷ்யா. உலக நாடுகளில் வளர்ந்து, ஓங்கியுள்ள நாடுகள அமெரிக்கா, ரஷ்யாவாகும். இந்த இரண்டு நாடுகளையும் பார்க்கும் போது, United States of America எல்லா மாநிலங்களையும் ஒன்று சேர்ந்து அமைக்கப்பட்ட கூட்டாட்சி கொண்டதுதான் அமெரிக்கா பல குடியரசுகளை ஒன்றாகக் கொண்டதுதான் Union of Soviet Socialist Republic—U.S.S.R. என்று நாம் சொல்லுகிறோம் இந்தியா என்று ஒரு Republic. ஆனால் ரஷ்யாவில் ஒவ்வொன்றும் தனித்தனி Republic. 15 Republics இருக்கின்றன. எல்லோரும் சேர்ந்த கூட்டமைப்புதான் Union of Soviet Socialist Republic. பல குடியரசுகளை ஒன்றாக வைத்திருக்கிறார்கள். அமெரிக்காவில் முதலில் 13 நாடுகள் இணைந்து; 13 புள்ளிகளை கொடியில் வைத்திருந்தார்கள். இப்போது 54 புள்ளிகள் அந்தக் கொடியில் இருக்கும். ஒவ்வொரு ஸ்டேட்டும் சேரச் சேர, ஒரு நட்சத்திரத்தைப் போட்டு, இப்போது 54 நட்சத்திரங்கள் கொண்டுள்ள அளவுக்கு அமெரிக்காவின் கொடியைப் பார்க்கலாம். ஆக அமெரிக்காவும், ரஷ்யாவும் வலிமை பெற்ற நாடுகளாக இருக்கின்றன. அவைகள் மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் கொடுத்துள்ள நாடுகளாகும். ரஷ்யாவை எடுத்துக் கொண்டால், எந்தக் குடியரசாவது தனியாகப் பிரிந்து போக வேண்டுமென்று விரும்பினால், அதனுடைய கான்ஸ்டிடியூஷன்படி பிரிந்து போக உரிமையுண்டு என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் 2, 3 குடியரசு நாடுகள் ஐக்கிய நாட்டு சபையிலே ரஷ்யாவோடு உட்கார்ந்திருக்கின்றன. ஒவ்வொரு குடியரசுக்கும் தனித் தனி அரசியல் அமைப்புச் சட்டம் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் 2 மொழி, 3 மொழி, 4 மொழி, 5 மொழி என்று ஆட்சி மொழியாக அதனுடைய கான்ஸ்டி





டியூஷனில் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் உள்நாட்டு மக்களின் மொழிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று குடியரசு விரும்பினால், அந்த மொழிகளைப் பயன்படுத்தலாம் என்று இருக்கிறது. அங்கே Official language ரஷ்ய மொழிதான் என்று சட்டப்படி அறிவிக்கப்படவில்லை. Common language and link language ஆக ரஷ்ய மொழி இருக்கிறதே தவிர, Official language ஆக இல்லை. ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித் தனி ஆட்சிமொழி இருக்கிறது. ஆனால் அவர்கள் தொடர்புகொள்ள ரஷ்ய மொழி என்று வைத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 7-40)

இயற்கையாக அதற்கு ஒரு வலிமையான, சாதகமான சூழ்நிலை அமைந்து விட்டது. ரஷ்யாவில் இருக்கிற பல்வேறு மொழிகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால், ரஷ்யாவில் அதிகமாகப் பேசக் கூடிய மொழி ரஷ்ய மொழி. அது மாத்திரமல்லாமல் ரஷ்யாவில் இருக்கிற மொழிகள் அனைத்தையும் கணக்கெடுத்துப்பார்த்தால், வளர்ந்த மொழி ரஷ்ய மொழி. ரஷ்யாவில் இருக்கிற அனைத்து மொழிகளையும் ஆய்ந்து பார்த்தால், ஏராளமான சிறந்த இலக்கியங்களை வளர்த்த மொழி ரஷ்ய மொழி. ரஷ்ய மொழிகளை எல்லாம் தனித் தனியாக ஆராய்ந்துப் பார்த்தால் - அறிவியல் அறிவைப் பெருக்கி, அறிவியல் அறிவை ஊட்டி, அதற்குரிய முழுத் தகுதியையும் பெற்றிருக்கக்கூடிய மொழி ரஷ்ய மொழி. அப்படிப்பட்ட ரஷ்ய மொழியை அங்குள்ள அனைத்து மொழிகளுக்கும் தலைமை மொழியாக ஏற்று, லிங்க் மொழியாக ஆக்குவதால், தகராறு ஒன்றும் வரப்போவதில்லை. வேறு எந்த ரஷ்ய மொழிக்கும் அதற்கு இருக்கிற அளவுக்கு, என்னைத் தலைவனாக ஏற்றுக்கொள் என்றோ, சமமாக பாவிக்க வேண்டுமென்றோ சொல்லும் அளவுக்கு தைரியமும் கிடையாது. ஆகவே ரஷ்ய மொழி லிங்க் மொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது. மற்ற மொழிகள் எல்லாம் தனித் தனியாக இருக்கின்றன. இங்கே அப்படி நிலைமை இல்லை. இந்தி மொழி தான் உனக்குப் பொது மொழி, இந்திதான் தேசிய மொழி, இந்திதான் ஆட்சி மொழி,

'Hindi is the official language, Hindi is the common language. Hindi is the national language'.

என்று வற்புறுத்துகிற போது என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் "இந்தி மொழியை ஏராளமான மக்கள் பேசுகிறார்கள், ஆகவே இந்தி தான் தேசிய மொழி" என்று சொல்கிறார்கள்.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 13

டாக்டர் சுனில் குமார் முகர்ஜி அவர்கள் அந்தக் குழுவில் இருந்திருக்கிறார்கள். இந்தி மொழியை நன்றாக அறிந்தவர் அவர். இந்தி மொழியைச் சிறந்த முறையில் ஆராய்ந்திருக்கிறார். எல்லா மொழிகளும் அவருக்குத் தெரியும். தமிழ் மொழியும் அவருக்குத் தெரியும். அதுமட்டுமல்லாமல், தமிழிலே தான் அவர் ‘நன்னெறி முருகன்’ என்று கையெழுத்து கூட போடுகிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவர் மேற்கு வங்க மேலவைத் தலைவர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர் மேற்கு வங்கத்தினுடைய பேரவைத் தலைவராகவும் இருந்திருக்கிறார். அவர் எழுதியிருக்கிற தன்மையைப் பார்த்தால், இன்றைக்கு இந்தி பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகிறது என்று சொல்கிறார்களே, அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நாம் அறியலாம். டில்லி மற்றும் டில்லியைச் சுற்றியிருக்கிற 2¼ அல்லது 2½ கோடி மக்களாலே இந்தி மொழி பேசப்படுகிறது. இந்தி மொழியிலேயே கன்னவுஜ் மொழி, ராஜ்மகர் மொழி, அகதிமொழி, அகந்தி மொழி என்று 79 பிரிவுகள் இருக்கின்றன. ஆக இந்தி மொழிக்குள்ளேயே 79 மொழிகள் இருக்கின்றன. எல்லா இந்தியையும் அவர்கள் கணக்கெடுத்துப் பார்த்துத்தான் இதைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிக்கூட இந்தியாவினுடைய மொத்த மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால், இந்த மொழியைப் பேசுபவர்கள் குறைவு தான். அப்படியும் இந்தி மொழி இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான மக்களாலே பேசப்படுகிறது, ஆகவே அது தான் தேசிய மொழி என்று சொல்வார்களேயானால், அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன ஒன்றை நினைவுபடுத்துகிறேன். பெரும்பான்மைதான் அதற்குக் காரணம் என்றால், இந்தியாவினுடைய தேசியப் பறவையாக மயில் அல்ல, காகம்தான் இருந்திருக்க வேண்டும். இந்தியாவில் பெரும்பான்மையாக இருப்பது மயில் அல்ல, காக்கை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். இங்கே அத்தகைய பிரச்சினை இருப்பதால்தான், அதைச் சுட்டிக்காட்டுகிறேனேயொழிய வேறு ஒன்றுமில்லை.



1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

ரஷியாவைப் பொறுத்தவரை, மாநிலங்களுக்கு ஏராளமான உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அங்கே எந்த ஒரு குடியரசையும் கலைக்கவோ, தனனுடைய இஷ்டப்படி மாற்றியமைக்கவோ அங்குள்ள மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை, உரிமை இல்லை. அதேபோல அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், அங்கே இருக்கக்கூடிய 54 ஸ்டேட்டுகளுக்கும் தனித் தனி கொடி, தனித் தனி கான்ஸ்டிட்யூஷன், தனித் தனி அதிகாரங்கள் இருப்பதோடு மாத்திரமல்லாமல், இந்த 54 மாநிலங்களும் தங்களுடைய மாநிலங்களுக்கு கவர்னர்களை நியமிக்கின்ற அதிகாரத்தையும் பெற்றிருக்கின்றன. அவர்களே கவர்னர்களைத் தேர்ந்தெடுக்கலாம். அவர்களுடைய மாநில அரசுகளை கலைக்கவோ, மாற்றவோ அமெரிக்க அரசுக்கு, அதாவது மத்திய அரசுக்கு, உரிமை இல்லை. இன்னமும் சொல்லப்போனால், அமெரிக்க கான்ஸ்டிட்யூஷனை எடுத்துக்கொண்டால், அதன் அரசு அமைப்புச் சட்டம் என்று பார்த்தால், மொத்தமே 13, 14 பக்கங்கள் தான் இருக்கின்றன. ஏனென்றால் பெரும்பாலான கான்ஸ்டிட்யூஷன் விதிகளை வகுத்து வைத்திருப்பவர்கள் அந்தந்த மாநில அரசுகளே தவிர மத்திய அரசு அல்ல. மத்தியில் குறிப்பிட்ட அதிகாரங்கள் மட்டும் இருக்கின்றன.

டிபன்ஸ் Defence பொறுத்து, வெளிநாட்டு விவகாரத்தைப் பொறுத்து, வெளிநாட்டு உதவியைப் பொறுத்து, ஐக்கிய நாட்டு அவைகளைப் பொறுத்து, இருக்கின்ற அதிகாரங்கள் தவிர, மற்ற அனைத்து அதிகாரங்களும் மாநிலங்களுக்கு இருக்கின்றன. அந்த வகையில் மத்திய அரசு வல்லமை பெற்ற அளவுக்கு, அமெரிக்க நாடு பூராவையும் காப்பாற்றுகிற அளவுக்கு மையம் அதிகாரத்தை வைத்துள்ளது. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் இங்கேயும் ஒரு வாதம் சொல்லப்படுகிறது. மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் கொடுக்கப்படுவதன் மூலம் எந்த வகையிலும் மத்திய அரசு வலிவிழந்து விடாது. அப்படிச் சொல்வது தவறு. எடுத்துக்காட்டாக அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் மாநிலங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அந்த நாடுகளில் எல்லாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும்போது, ஜனநாயக நாடான இந்தியாவில் இது மிகவும் தேவையான ஒன்று. இங்கேயும் இராணுவம், வெளிநாட்டு விவகாரம் ஆகியவை மத்திய அரசிடம் இருக்கும்போது, எதையும் அடக்கி ஆளுகிற தன்மைகள் மத்திய அரசிடம் இருக்கும். அந்த வகையில் மக்களைக் காப்பாற்றுகின்ற அதிகாரங்களை, உரிமைகளை அந்தந்த மாநில அரசுகளிடம் கொடுப்பதில் மத்திய அரசுக்கு எந்தவித சங்கடமும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் மற்ற உறுப்பினர்களும் இங்கே

சுட்டிக்காட்டினார்கள். அதுபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் ஏற்கெனவே இருக்கிற நிலைமைகளை இங்கே எடுத்துக் காட்டினார்கள். பல நேரங்களிலே மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி தோன்றிய காலத்திலிருந்து, அண்ணல் காந்தியடிகள் காங்கிரசில் நுழைந்ததற்குப் பிறகு எப்படிப்பட்ட மாநில உணர்வுகள், மொழிவாரி மாநில உணர்வுகள் வளர்ந்தன என்பதையும், அந்த அடிப்படையில்தான் பல்வேறு மொழிவாரி மாநிலங்கள் அமைந்தன என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அந்த வகையில் தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகம் போன்ற மொழிவாரி மாநிலங்கள் அமைந்தன என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அந்த உணர்வில் வந்த காங்கிரஸ் ஏன் இப்படி கெட்டது என்பதுதான் இப்போது நமக்கு வருத்தத்தைத் தருகிறது. எந்த அளவிற்கு இதற்காக காங்கிரஸ் பாடு பட்டது என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன்.

1947 ஆம் ஆண்டு நமக்குச் சுதந்திரம் வரப்போகிறது என்பதை முன் கூட்டியே தீர்மானித்து, சுதந்திரம் வருவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னாலேயே அதை அறிவித்தார்கள். ஆகஸ்ட் 15, 1947 ஆம் ஆண்டு பாகிஸ்தானும் இந்தியாவும் பிரிக்கப்பட்டு, சுதந்திரம் வந்துவிடும் என்று தெரிந்த உடனேயே இந்தியாவுக்கு ஏற்ற ஒரு கான்ஸ்ட்டிட்யூஷன் உருவாக்கப்பட வேண்டும், அரசு அமைப்புச் சட்டம் வேண்டும் என்பதற்காக ஒரு குழுக் கூட்டம், முதல் அரசு அமைப்புக் கூட்டம் கூட்டப்பட்டது. அதிலே ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். அதைக்கொண்டு வந்தவர் பெரு மதிப்பிற்குரிய மத்திய அரசினுடைய மாண்புமிகு பிரதமராக இருந்த திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள். அந்த அரசு அமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, அதனுடைய நோக்கம் என்ன என்பதை மிகத் தெளிவுபட நேரு அவர்கள் எடுத்துச்சொல்கிறார்.

“நாம் உருவாக்கும் இந்த அரசியல் அமைப்பு உறுப்புகள் அதாவது மாநில அரசுகள், சுயாட்சி பெற்ற பகுதிகளாக, உறுப்புகளாக திகழலாம். அத்தகைய உறுப்புகளிடம் முழு அதிகாரமும் பொறுப்பும் நிறைந்து விளங்கும். உறுப்புகள் தானே விரும்பி கொடுக்கும் அதிகாரங்கள் மட்டுமே இனி எங்களிடம் தொக்கி நிற்கும். ஏனைய உறுப்புகளை சாரும் அனைத்தும் ரெசிடுவரி பவ்வர்ஸ் ஆக—பட்டியலிலேயே வாராத அதிகாரங்கள்—எஞ்சிய அதிகாரங்கள் என்கின்ற முறையில் அந்த எஞ்சிய அதிகாரங்கள் கூட மாநிலங்களிடமே இருக்கும். மாநிலங்கள் பார்த்து கொடுக்கிற அதிகாரங்களைத் தான் 'மத்திய



அரசு ஏற்கும். மாநிலங்கள் முழுப் பொறுப்பையும், முழு அதிகாரத்தையும் பெறும். இந்த அடிப்படை இலட்சியத்தை யாரும் மறுக்கவில்லை. மறுக்கவும் கூடாது” என்கிற அளவில் அன்றைக்குச் சொன்னார்கள். இந்த அடிப்படை இலட்சியத்தை யாரும் மறுக்கவில்லை, மறுக்கவும் கூடாது, இந்த இலட்சியத்தை ஏற்றுக்கொள்கிறோம், ஊன்றி நிற்கிறோம், நான் முன்மொழிந்த இந்தத் தீர்மானம் சாதாரணமானதல்ல” என்று சொல்லிவிட்டு ஜவஹர்லால் நேரு அவர்கள் தொடர்ந்து சொல்கிறார். “இலட்சிய முழக்கம் இது, உறுதியான முடிவு, நாம் எடுத்துக் கொண்ட சபதம், நிறைவேற்ற வேண்டிய பிரதிக்கினை, நமது வாழ்வின் சமர்ப்பணம்' என்று அவருக்கே உரிய அழகான ஆங்கில நடையில், அவருக்கே உரிய கம்பீரத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து, உரையாற்றினார்கள். ஆகவே அப்படிப்பட்ட உணர்வு தான் இந்தியா சுதந்திரம் அடைகிற வரை, அரசு அமைப்புச் சட்டம் வருகிற வரை, சுதந்திரம் கிடைத்ததற்குப் பிறகும் 1947—50 ஆம் ஆண்டு வரை இருந்தது. சுதந்திரம் கிடைத்த ஆரம்ப நிலை, வெள்ளைக்காரர்களிடமிருந்து நம்மிடம் அதிகாரம் மாற்றப்பட்ட நிலை, நமக்கு நாமே எப்படி ஆண்டு கொள்வது என்கிற அளவுக்கு ஒரு நிலை, அவர்களைப் போல ஆள முடியுமா என்கிற நிலை, வெள்ளைக்காரர்கள் உருவாக்கிய சட்டத்தினுடைய அடிப்படையிலே அரசை நடத்த வேண்டிய நிலை—இப்படிப்பட்ட நிலையில் லார்ட் மவுண்ட்பேட்டன் ஓராண்டு காலம் சுதந்திர இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்துகொண்டு ஆளுகின்ற நேரம். அதுமட்டுமல்லாமல், இப்படிப்பட்ட குழப்ப நிலையுடன் கூட, பிரிவினை ஏற்பட்ட உடனேயே வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்ட நிலை, இந்தியாவினுடைய வடக்கு, மேற்கு, கிழக்குப் பகுதிகளில் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்ட நிலை, அதுமட்டுமல்லாமல் பல இலட்சக் கணக்கான மக்கள் கலவரத்தால் உயிரை விட வேண்டிய நிலை அல்லது கட்டாயம்—அந்தப் பக்கத்திலும் இருந்தது, இந்தப் பக்கத்திலும் இருந்தது. பாகிஸ்தானிலிருந்து அகதிகள் இந்தியாவை நோக்கி ஓடி வந்தார்கள். இந்தியாவிலிருந்து ஏராளமான அகதிகள் பாகிஸ்தானை நோக்கி ஓடினார்கள். உயிருக்கே ஆபத்து ஏற்பட்டது. உடைமைகள் பாழாயின. வாழ உரிமைகள் இல்லாத அளவுக்கு, உள்ளபடியே சுதந்திரம் இந்த அளவுக்குக் கொண்டு போய் விட்டுவிட்டதே என்று அண்ணல் காந்தியடிகளே கோபித்துக்கொள்கிற அளவுக்கு பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆனால் இவ்வளவையும் பொருட்படுத்தாமல் நவகாளியில் ஏற்பட்ட பெரும் கொந்தளிப்பைத் தவிர்க்க, வங்கத்தை நோக்கி, “அங்கே அமைதியை ஏற்படுத்துவதற்காக நானே மாண்டால் கூட பரவாயில்லை. அங்கே போய்தான் தீருவேன்” என்று

சொல்லி யாத்திரையை மேற்கொண்டார்கள் அண்ணல் காந்தியடிகள். ஏகப்பட்ட குழப்பங்கள் நடைபெற்றன. இதையெல்லாம் நான் காரணத்தோடுதான் சொல்கிறேன்.

அன்றைக்கு பண்டித நேரு அவர்களும் மற்றவர்களும் எந்த உணர்வினுடைய அடிப்படையில் அரசு அமைப்புச் சட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்களோ அந்த உணர்வுக்கு நேர் எதிராக 1947 ஆம் ஆண்டிலிருந்து 1950 ஆம் ஆண்டு வரை 3 ஆண்டுகள் தொடர்ந்து நாட்டிலே குழப்ப நிலை இருந்தது, அவர்களிடையே அது அச்சத்தை ஏற்படுத்தியது, அதிர்ச்சியை உண்டாக்கியது. ஆகவே தான் அதிகாரங்களையெல்லாம் மாநிலங்களுக்குக் கொடுத்தால் என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்கின்ற அச்ச சூழ்நிலையில் பண்டித நேரு அவர்களே கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக, விரோதமாகச் செல்ல வேண்டி வந்தது. "என்னுடைய இலட்சிய முழக்கம், உறுதியான முடிவு, இங்கே எடுத்துக்கொண்ட சபதம், நிறைவேற்ற வேண்டிய பிரதிக்கினை, நமது வாழ்வின் சமர்ப்பணம்'' என்று முழக்கமிட்டார் அவர். ஆனால் சுதந்திரம் கிடைத்த 3 ஆண்டுகளுக்குள் நடைபெற்ற அனைத்து சூழ்நிலைகளும், சம்பவங்களும், நிகழ்ச்சிகளும் அவர் பிரதமராக இருந்த நேரத்திலேயே ஒரு அச்ச நிலையை ஏற்படுத்தின. அவரால் கொடுக்கப்பட்ட உறுதிமொழியை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அந்த நிலை எல்லாம் மாறி, புயல் எல்லாம் அடங்கி, எல்லாம் சரியாகி, அமைதியாக ஆகி, நிலைமைகளை எல்லாம் பரிசீலிக்கலாமென்கிற கட்டத்திற்கு—நமக்கு நாமே சட்டங்களை எல்லாம் உருவாக்கி, கிட்டத்தட்ட 33 ஆண்டுகளாக அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தி, நமக்கு நாமே செவ்வனே ஆள முடியும் என்கிற நிலைமைக்கு வந்து விட்டோம். அதோடு மட்டுமல்லாமல் பல்வேறு வகைகளிலே அகில உலகமே மெச்சத்தக்க அளவுக்கு நாம் போக முடியும் என்கிற அளவுக்கு வந்து விட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமாத்திரமல்லாமல், உலக அரங்கிலே பல கட்டங்களிலே இந்திய நாடு முன்னணியிலே நிற்கிற நிலையையும், பொறியியல், அறிவியல் போன்ற துறைகளிலே உலக நாடுகளிலே நாம் மூன்றாவது இடத்திலே இருந்துகொண்டிருக்கும் அளவுக்கு நம்மை நாமே உருவாக்கிக்கொண்டிருக்கும் நிலையையும் நாம் அடைந்து பெருமைப்பட்டுக் கொள்ளும் அதேவேளையில் மாநிலங்களுக்கு பல்வேறு பிரச்சினைகளும், பொறுப்புகளும், கடமைகளும் கூடியிருக்கும் நிலையில் மாநிலங்களுக்கு அதிக



அதிகாரம் கொடுப்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதுபோல், இந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்வதிலே என்ன தவறு? அந்த மறுபரிசீலனையைப் பண்டித ஜவஹர்லால் நேருவின்

(பிற்பகல் 7-50)

உணர்வின் அடிப்படையில் செய்வதில் என்ன தவறு? அவர் எந்த லட்சியத்தை உருவாக்க நினைத்தாரோ அதை இந்த அமைதியான நேரத்தில் உருவாக்க பாடுபடுவது மிகமிக நல்லது என்ற அடிப்படையில்தான் இங்கே பல்வேறு கருத்துக்களை பலரும் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த ஒரு நிலைமையையும் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி தெளிவாகச் சொன்னார். இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டம் தெளிவாக இருக்கிறது என்று சொன்னாலும் கூட, மத்திய அரசுப் பட்டியலில் 97 அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாநில அரசுப் பட்டியலில் 66 அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன பொதுப் பட்டியலில் உள்ள 47-ம் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொது. இதில் தகராறு என்று வந்தால், முடிவு மத்திய அரசுக்குத்தான். இரண்டுபேரிடையே கருத்து வேறுபாடு வந்தால், முடிவு மத்திய அரசுடையது தான். அதே மாதிரி மாநில அரசிலே அதிகாரங்களைச் சரியாகச் செயல்படுத்த முடியாத நிலை வந்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதைப்போல, மாநில அரசைக் கலைக்கலாம். அப்படி கலைத்து மத்திய அரசே முழு அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டு, பட்ஜெட்டையும் பார்லிமெண்டில் ஒரே நாளில் நிறைவேற்றி முடிக்கலாம். இங்கே இவ்வளவு நாள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோமே, அங்கே ஒரே நாளில் கொண்டு வந்து சாயங்காலத்திற்குள் நிறைவேற்றலாம் என்ற அடிப்படையில் எடுத்துக்கொண்டு விடுவார்கள். அந்த அதிகாரத்தை 6 மாதம் வரையிலும் நீடிக்கலாம். போதவில்லை என்றால் இன்னொரு 6 மாதம் நீட்டிக் கொள்ளலாம். அதுவும் போதவில்லை என்றால் இப்படியே ஆறு ஆறு மாதம் நீடித்துக் கொண்டே போகலாம். ஆகவே இந்த 3 அதிகாரம் பிரிக்கப்பட்டிருக்கிறதே தவிர, இப்போது நாம் இயற்றுகிற சட்டங்கள் எல்லாவற்றையும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி கையெழுத்து வாங்கினால்தான் இங்கே நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். இங்கே அவை நிறைவேற்றுகிற எந்தச் சட்டத்தையும் நேரடியாக நிறைவேற்ற முடியாது. சில சட்டங்களைப் பொறுத்தவரையில், பொதுப் பட்டியலிலே இருக்கிற சட்டங்களுக்கு, முதலிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வரலாமா என்று அவர்களிடம் கேட்டு அனுமதி பெற்றாக வேண்டும். கல்வியை இப்போது மத்திய அரசாங்கத்தில் எடுத்துக் கொண்டிருப்பதால், இங்கே நாம் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டுமானால், அங்கே போய் கேட்க வேண்டும்.

வைக்கலாம் என்று சொன்னால் சரிதான். வேண்டாம் என்று சொன்னால் 'சரிதாங்க' என்று வந்துவிடவேண்டும். ஆக அதற்கும் சரிதான், இதற்கும் சரிதான். ஆகவே சட்டம் கொண்டு வந்த பிறகு, நிறைவேற்ற அவர்களை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சட்டங்கள் இருப்பதால் தான், மாநிலங்கள் விருப்பப்படி தானே வளருகிற அளவுக்கு இல்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். மாநில அரசுடைய எழுச்சி, அவர்களுடைய உணர்ச்சி, அவர்களுடைய ஆக்க பூர்வமான தனமைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். பொதுப்பட்டியல் என்று பிரித்திருக்கலாமே தவிர, ஒரே ஒரு பட்டியலில்தான் எல்லாம் வந்து நிற்கிறது.

மத்திய அரசு கூட்டாட்சி என்று சொல்லிவிட்டு, நடைமுறையில் ஒற்றை ஆட்சிதான் நடக்கிறது என்று, அரசியல் சட்ட நிபுணர் ஐவர் ஜின்னிங்ஸ் ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார். கே. சி. வியர் என்பவர் தெளிவுபட ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார். மாநில அரசு, மத்திய அரசு என்று சொல்கிற போது, இரண்டுக்கும் தொடர்பு உண்டு. ஆனால் தனித்தனியாக இயங்குகிற அளவுக்கு மத்திய அரசின் உரிமையில் மாநில அரசு தலையிட முடியாது, அதேபோல் மாநில உரிமையில் மத்திய அரசு தலையிட முடியாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இப்படி இருப்பதுதான் உண்மையான கூட்டாட்சியின் இலக்கணம் என்று சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே படித்துக் காண்பித்ததைப்போல் பெரிய பெரிய கொள்ளை வருமானம் வருவது போன்றவைகள் மத்திய அரசின் பட்டியலில் போய் விட்டன. அவர்கள் சொன்னது மாதிரி, பவுண்டு நமக்குத்தான், கால்நடையும் நமக்குத்தான். சுடுகாட்டையும் இடு காட்டையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். (சிரிப்பு) நூல் நிலையம், அரும்பொருள் காட்சியகம், இவையெல்லாம் நமக்குத் தான். விவசாயத்தை நாம் பார்த்தாலும் அங்கேயும் ஒருவர் இருக்கிறார். சுகாதாரம் இங்கே கொடுத்தார்களே தவிர அங்கே ஒரு சுகாதார அமைச்சர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். கல்வியை ஓரளவுக்கு நமக்குக் கொடுத்துவிட்டு, நம்மைக் கண்காணிக்க கல்வி அமைச்சர் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். கொடுத்திருக்கிற முக்கியமான ஒன்று இரண்டிலேயும், அங்கேயும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். காவல் துறை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, அதை கவனிக்க அங்கே உள்துறை அமைச்சர் இருக்கிறார். நல்ல வேளையாக பவுண்டுக்கு அங்கே ஆள் இல்லை. (பலத்த சிரிப்பு) சிறைச் சாலை நம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு சின்னச்சின்ன அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதால், ஒவ்வொரு சங்கதிக்கும் போகவேண்டி



யிருக்கிறது. எனக்கு வருகிற ஃபைல்களைப் பார்த்தால், ஒரே கரஸ்பாண்டன்ஸ். ரொம்ப மொத்தமாக பைல்கள் வருகின்றன. 4-5 கடிதங்களோடு தான் ஆரம்பிக்கிறது. கடிதப்போக்குவரத்து போய் வந்து போய்வந்து தூக்க முடியாத அளவுக்கு பெரிய பைல்களாகி விடுகின்றன. காரியம் மட்டும் நடக்கவில்லை. மூன்று பட்டியல்கள் போட்டார்களே தவிர கடைசியில் அவர்களுக்குத்தான் அவ்வளவும் போய்ச் சேருகிறது. ஒரு பழைய தமிழ்ப் பாட்டு ஒன்று நினைவுக்கு வருகிறது. மூன்று முனையில் 3 குளம் வெட்டினேன், அதில் 2 குளம் பாழ், ஒன்றிலே தண்ணீரே இல்லை. (சிரிப்பு) இந்த தண்ணியில்லா காட்டுக்கு இட்ட எருமை மூன்று, அதிலே 2 எருமை மலடு, ஒன்று ஈனவேயில்லை. (சிரிப்பு) அப்படி ஈனாத எருமைக்கு இட்ட காடு 3, அதிலே 2 காடு பாழ், ஒன்று விளையவே இல்லை. விளையாத காட்டுக்கு இட்ட கணக்கன் 3 பேர், அதிலே இரண்டு கணக்கன் நொண்டி, ஒருத்தனுக்கு கையே இல்லை (பலத்த சிரிப்பு) என்று பாடுவார்கள். ஏன் மூன்று குளமும் பாழ் என்றால் என்ன, 3 எருமையுமே மலடு என்றால் என்ன, இரண்டு மலடாம், ஒன்று ஈனவேயில்லையாம். (சிரிப்பு) ஆக இப்படி கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் மூன்றுமே ஒரேமாதிரி என்று தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் அல்ல. ஆகவே தான் இந்த தன்னாட்சி உரிமைகளையும், மற்றவைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னமாதிரி—நேரம் ஆகிவிட்டதால் விட்டு விடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நினைவு வந்துவிட்டதா உங்களுக்கு?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த பெங்களூர் மாநாடு முடிவு பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். மத்திய வரியில் பங்குத் தொகை, நிதி அதிகாரங்கள் கோட்பாடு, நிவாரணச் செலவு மிகைப் பற்று, திட்ட உதவி வழங்கும் முறை, வருமான வரிச்சட்டம், நிதி ஆணைக் குழு நியமிக்க வேண்டிய அவசியம், விவசாயப் பொருட்களுக்கு இடைத்தரகர் இருக்கக் கூடாது, உலகக் கடன் வங்கியை மத்திய அரசே வைத்துக் கொள்ளக் கூடாது, மாநில அரசுக்கும் அதே வட்டியில் கடன் தரவேண்டும் என்பது, மத்திய அரசின் சார்பான பணிகளின் செலவுகளை மத்திய அரசே ஏற்க வேண்டும் என்பது, அதோடு மட்டுமல்ல, அரசியல் சட்டத்தில் இன்னின்ன மாற்றங்கள் செய்யவேண்டுமென்ற வகையில் குறுகிய முறை, கனிப் பொருட்கள் இருக்கும் இடம் நம் மாநிலமாக இருந்தாலும், அந்த வரியெல்லாம் மத்திய அரசிடம் தான் போகும் நிலைமை இருக்கிறது, அதைப் பெறுவது, இது மாதிரி பல்வேறு பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து முடிந்த முடிவுகளை இந்த மாநாடு தந்து விடவில்லை. இது முதல் கட்டம் தான். போகப்

போக பல்வேறு கட்டங்களைச் சந்திக்க வேண்டி வரும். ஆகவே அவைகள் உருப்பெற நல்ல சூழ்நிலை ஏற்படவேண்டுமென்றுதான் இந்த விவாதங்கள் நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறுவதற்கும் சிந்தனைகளைத் தூண்டுவதற்கும் நல்ல ஆக்கமும் ஊக்கமும் ஏற்படுகிற வழிவகைகள் ஏற்படுகிற அளவுக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை எல்லாம் உள்ளபடியே நாட்டு மக்களும் சிந்தித்து நல்ல சுமுகமான உறவுகளின் அடிப்படையில் தீர்க்கப்படுகிற நிலை ஏற்பட்டால், இந்தியாவே மகிழும், மாநிலங்கள் எல்லாம் மகிழும் என்று சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக இந்தத் தீர்மானத்திற்கு எல்லோரும் வரவேற்பு அளித்தார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் கூட கருத்து பரிமாறுவதற்குப் பயன்படுகிற முறையில் இதை வரவேற்பதாகச் சொன்னார்கள். இந்த முறையிலே இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுத்ததற்கு நான் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தவன் என்ற முறையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு விஷயம். எதிர்காலத்தில் செய்யவேண்டிய வேலைகள்பற்றி இந்தத் தீர்மானத்திலே அரசு விடா முயற்சி எடுக்க வேண்டுமென்று கூறுகிற நேரத்தில், அதை மட்டும் சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், எட்டாவது நிதிக் குழுவுக்கு முன்பாக நிதிப் பங்கீடுபற்றி ஒரு கூட்டு முயற்சி செய்ய வேண்டும் என்று சொன்னேன். இப்போது நான்கு முதலமைச்சர்கள் ஆராய்ந்திருக்கிற இந்த முயற்சியில் எத்தனை முதலமைச்சர்கள் மேலும் சேருவார்களோ அவர்களையும் சேர்த்து எட்டாவது நிதிக் கமிஷன் முன்பாக மாநிலங்களுக்கு அதிக நிதி கிடைக்க வேண்டிய அளவுக்கு எப்படிப்பட்ட யோசனைகளை முன் வைக்க வேண்டுமோ அப்படிப்பட்ட யோசனைகளை உருவாக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விடாமல் முயற்சியை மேற்கொள்வார்கள் என்று மாண்புமிகு நிதியமைச்சர் கூறியிருப்பதை நானும் வற்புறுத்துகிறேன். இரண்டாவதாக, அதையொட்டி சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது. சர்க்காரியா கமிஷன்பற்றி இன்று வந்திருக்கக்கூடிய மத்திய உள்துறை அமைச்சர் அறிவிப்பு நமக்கு நம்பிக்கை அளிக்கிறது. இன்றைக்கு இருக்கிற அரசியல் சாசனத்தைப்பற்றி மத்திய அரசுக்குள்ள கருத்து என்ன என்பது சொல்லப்பட்டிருக்கிறது. "while providing autonomy to the State, the Constitution had given adequate powers to the States to ensure



the contry's unity and intergrity". இன்றைக்கு இருக்கிற அரசியல் சாசனத்தைப்பற்றிக் கூறுகிறபோது, மாநிலங்களுக்குத் தனி சுயாட்சி அளித்து இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கு மட்டும் தேவைப்பட்ட அதிகாரம்தான் மத்திய அரசுக்கு உண்டு என்று கூறியிருக்கிறது. ஆகவே, நாம் விரும்புகிற

(பிற்பகல் 8-00)

சுயாட்சிக்கும், அதாவது மாநில சுயாட்சிக்கும், மத்திய அரசு கருத்தில் வைத்திருக்கிற சுயாட்சிக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பது மத்திய அரசின் உள்துறை அமைச்சரின் அறிக்கையில் விளக்கமாகத் தெரிகிறது. சர்க்காரியா கமிஷன் சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் முன்ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், எப்படியெப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அதில் எனக்குப் பூரணமான உடன்பாடுதான். சர்க்காரியா கமிஷனில் அங்கம் வகிப்பவர்களின் பேனலைத் தயாரிப்பதற்கு முன்பாக, எல்லா மாநிலங்களிலிருந்தும் இப்படிப்பட்ட எக்ஸ்பர்ட்டுகளைப் போடுவது குறித்து நீங்கள் ஒரு சஜஷன் கொடுங்கள் என்று மத்திய அரசே கேட்பது அவசியம். அப்படி மத்திய அரசு மாநில அரசுகளையெல்லாம் கேட்டால், இப்படிப்பட்ட விஷயங்களை ஆராய்ச்சி செய்த நிபுணர்களின் லிஸ்ட்-ஐ மாநிலங்கள் கொடுக்க முடியும். அப்படி மாநிலங்கள் கொடுக்கும் லிஸ்டிலிருந்து ஒரு பேனல் தயாரிக்கப்பட்டால்தான், அது நல்ல வகையில் இருக்கும்.

இப்போது எப்படி வைஸ்-சேன்சலர்களை நியமிப்பதில்கூட எல்லோருடைய நம்பிக்கையையும் பெற்றவராகவும், எல்லோரையும் திருப்திப்படுத்தக் கூடியவராகவும் இருக்க வேண்டும் என்று இந்த இரண்டு தரப்பிலும் கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இருப்பதைப் போல், சர்க்காரியா கமிஷனில் நீங்கள் யார் யார் இடம் பெற வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று ஒவ்வொரு மாநிலத்தையும் மத்திய அரசு கேட்டு, அப்படி மாநிலங்கள் தருகிற லிஸ்டிலிருந்து எல்லோரையும் திருப்திப்படுத்தக் கூடிய முறையில் ஒரு பேனல் தயாரிக்கப்பட்டால்தான், சர்க்காரியா கமிஷன் நல்ல முறையில் செயல்பட உதவியாக இருக்கும் என்பதால், இந்தக் கருத்தை நமது மாநில முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இங்கே குறிப்பிட்டபடி, சர்க்காரியா கமிஷன் என்பது ஒரு டைம் பவுண்டு கமிஷனாக இருக்க வேண்டும். இதற்கான கால அவகாசத்தை மத்திய அரசு நிர்மானிக்க வேண்டும். அப்படி ஒரு கால அவகாசத்தை மத்திய அரசு நிர்ணயித்து, அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்ற பிறகு, முடிவெடுப்பதற்கும் நாம் ஒரு காலத்தை நிர்ணயிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது, நான்கு ஆண்டுகளுக்குள் கமிஷன் தன் அறிக்கையைக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். நான்கு ஆண்டுக் காலத்தில் என்னென்ன மாற்றங்கள் இந்தியாவில் வரும் என்று சொல்ல முடியாது. எனவே ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டு கால அவகாசத்தில் அறிக்கை கொடுக்கப்பட வேண்டும் என்று நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, டெர்ம்ஸ் ஆப் ரெபரன்சைப் பொறுத்தவரையில், மாநிலங்களுக்கு அதிகமான நிதியாதாரங்கள் மற்றும் அதிகமான நிர்வாக அதிகாரங்கள் தேவை என்ற அடிப்படையில் அப்படிப்பட்ட அதிகாரங்களை வழங்க அரசியல் சட்டத்தில் எப்படிப்பட்ட திருத்தங்கள் தேவை என்று பரிந்துரைக்க டெர்ம்ஸ் ஆப் ரெபரன்சில் தெளிவாகச் சேர்க்கப்பட வேண்டும். இதைக் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம் இந்தப் பிரச்சினை கடந்த 35 ஆண்டுக்காலமாக பல்வேறு திசைகளிலிருந்து அணுகப்பட்டிருக்கிறது. எனவே ஒரே நாளில் எல்லோரும் ஒன்றுபட்ட ஒரு கருத்துக்கு வர முடியாது. ஒன்றுபட்ட ஒரு கருத்துக்கு வந்துவிட்டது போன்று ஒரு தோற்றம் இருக்கிறது. அதில் நாம் ஏமாந்து விடக் கூடாது. எனவே சர்க்காரியா கமிஷனில் இருக்க வேண்டியவர்களின் பேனல் தயாரிப்பது குறித்தும், கமிஷன் ஆராய வேண்டிய பிரச்சினைகள் பற்றியும் நாம் தீர்மானித்தாக வேண்டும். இந்த இரண்டு அம்சங்களும் மிகவும் முக்கியமான அம்சங்களாகும்.

அடுத்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, எட்டாவது நிதிக் கமிஷன் முன் வைக்க வேண்டிய கோரிக்கைகளைக் குறித்து, இந்தியாவில் உள்ள அனைத்து மாநில முதலமைச்சர்களின் ஒற்றுமையையும் கேட்டு வைக்க வேண்டும். திரு. ஒய். பி. சவான் குழு மறுக்க முடியாத அளவுக்கு, மெஜாரிட்டியான மாநிலங்கள் வற்புறுத்தும்போது நாம் எப்படி



புறக்கணிப்பது என்று சொல்லுகிற முறையில், ஒரு ஒட்டுமொத்தமான கருத்தை உருவாக்க வேண்டும். இதற்காக காங்கிரஸ் (ஐ) மாநிலங்களின் முதலமைச்சர்களின் மறைமுகமான ஆதரவையும் பெற்று வற்புறுத்த வேண்டியது நம்முடைய கடமை. எனவே இந்தக் கடமைகளையெல்லாம் நிறைவேற்ற நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் அனைத்து முன்முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"20—3—1983 அன்று பெங்களூரில் கூடிய நான்கு தென்மாநில முதல்வர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை இந்த மேலவை வரவேற்கிறது; ஆதரிக்கிறது. இந்த முடிவுகளை அமுல் நடத்துவதற்காக விடாமுயற்சி செய்ய வேண்டும் என்று இம்மேலவை தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, முடிப்பதற்கு முன்னால் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். என்னுடைய தலைமையில் இந்தத் தீர்மானம் நல்ல முறையில்—ஒருமனதாக—நிறைவேறி யிருக்கிறது என்று எண்ணும்போது, மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன், இது வெற்றி பெறுவதற்கு தெய்வம் அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இந்த நல்ல காரியத்தைச் செய்து, விடிந்து எழுகிறபோது தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடப் போகிறோம் என்பதை நினைக்கிறபோது, நெஞ்சமெல்லாம் எனக்குப் பூரிக்கிறது. அனைத்து உறுப்பினர்களுக்கும் என் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் 15—4—1983 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 8-04)

7. அவைமுன்வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

258. Notification issued with G.O. Ms. No. 661, Housing and Urban Development, dated the 20th July 1982 regarding variation to land use—S. Nos. 190-2B, 190-3 (Part), 190-1 (Part) 191-1 (Part) and 192 to 194 of Chitlapakkam Village, (Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

259. Notification issued with G.O. Ms. No. 1106, Revenue, dated the 25th June 1982 regarding amendments to the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Rules, 1978. (Laid on the table of the House under section 47 (3) of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978 (Tamil Nadu Act 24 of 1978).

*B. Reports, Notifications and Other Paper.*

147. Sixteenth Report of the Committee on Estimates (Seventh Assembly) on Animal Husbandry Department (Tamil).

148. Nineteenth Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the Recommendations contained in the Fifth Report of the Committee on Public Accounts (1977-78) on the Report of the Comptroller and Auditor-General of India for the year 1973-74 (Revenue Receipts) (Tamil and English).

149. Twentieth Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the Recommendations contained in the Fourth Report of the Committee on Public Accounts (1977-78) on the Accounts of the Government of Tamil Nadu for the year 1972-73 and the Report (Civil) of the Comptroller and Auditor-General of India for the year 1972 73 (Tamil).

150. Twenty-first Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to Commercial Taxes and Religious Endowments Department in the Report of the Comptroller and Auditor-General of India for the years 1977-78 and 1978-79 (Revenue Receipts) (Part-I) (Tamil and English).



151. Twenty-Second Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to certain Departments in the Report of the Comptroller and Auditor-General of India for the years 1977-78 and 1978-79 (Revenue Receipts) (Part-II) (Tamil and English).

152. Industrial Policy and Programmes, 1983-84 (Major Industries) (Tamil and English).

153. Performance Budget on Industries, 1983-84 (Tamil and English).

154. Performance Budget on Sugar Industry, 1983-84 (Tamil and English).

## இணைப்பு I

*(8 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 283-க்கான விடையைக் காண்க.)*

தமிழகக் கோவில்களில் அர்ச்சகர்கள் நியமன முறைப்பற்றி அறிய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, தகுதி உள்ள இந்துக்களை சாதி, உட்பிரிவு பாராமல் அர்ச்சகராக நியமிக்க ஆகம விதிகள் முரணாக இல்லை என்று கருத்து தெரிவித்துள்ளது. தகுதி வாய்ந்தவர்களுக்கு முறையான பயிற்சி அளித்து பயிற்சிக்குப்பின் அர்ச்சகராக நியமிக்கலாம் எனவும், அவ்வாறு நியமனம் செய்யப்படும் அர்ச்சகர்களுக்கு நியாய ஊதியம் மற்ற சலுகைகள் கிடைக்க உறுதி செய்ய வேண்டுமென்றும் பரிந்துரை செய்துள்ளது. பின்வரும் பரிந்துரைகளை குழு செய்துள்ளது.

மேலும் பயிற்சி சம்பந்தமாக சேர்க்கை விதிகள், பயிற்சிப் பாடத் திட்டம். தேர்வுத்திட்டம் பாடப் புத்தகங்கள் முதலான அனைத்துக் காரியங் களையும் நிர்வகிப்பதற்கு, அறநிலையத்துறை ஆகம சபை ஒன்றை நிறுவ வேண்டும்.

இப்போது நடந்து வருகின்ற ஆகமப் பாடசாலைகள் அனைத்தையும் ஒரே தரமான நிலைக்குக் கொண்டு வரும்பொருட்டு அங்குள்ள சேர்க்கைமுறை கல்விமுறை தேர்வு முதலிய அனைத்து அம்சங்களையும் முன்கூறிய ஆகம சபை நிர்வகித்து வரவேண்டும்.

வெற்றிகரமாகத் தேர்வு முடித்துவருகின்ற அர்ச்சக மாணாக்கர்களுக்கு உடனே வேலைக்கும் தகுந்த ஊதியத்திற்கும் உறுதியளித்து, பிற எல்லா வசதிகளையும் செய்துதரவேண்டும்.

அறநிலையத்துறை ஆகம நூல்களை உரையோடு வெளியிட்டு, மாணாக்கருக்குத் தேவையான புத்தகங்களையும் அச்சிட்டுத் தர வேண்டும்.

தமிழ் அர்ச்சனைப் பயிற்சியைக் கல்லூரிகளில் பாடத் திட்டத்தின் பகுதியாகச் செயல்படுத்துவதோடுகூட, அறநிலையத்துறை அஷ்டோத்திரம், சகஸ்ரநாமம், முதலியவற்றைத் தயாரித்து வெளியிட்டுக் கோயில்களில் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும்; மற்றும்

உள்துறை ஊழியர்களைப் பொறுத்தவரையில் முக்கியமான பூசகர், பரிச்சாரகர் என்ற நிலையில் பணி புரிபவர்களை, அவர்களுடைய பண்பாடு, பக்தி, ஆசாரம், இவற்றை அனுசரித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்.



ஆகமத்தில் சொல்லியபடி இவர்களுக்கும் தீட்சை அளிப்பது அவசியம் என்றும் இக்குழு பரிந்துரை செய்திருக்கிறது.

எனவே, அறநிலையத்துறை ஆகம சபை நிறுவுவது, கல்விப் பயிற்சி செயல்முறை பயிற்சி அளிப்பது, பயிற்சிக்கான சேர்க்கை விதிகள், பயிற்சிப் பாடத்திட்டம், தேர்வுத்திட்டம், பாடப்புத்தகங்கள் முதலியவை சம்பந்தமாக தகுந்த வழிமுறைகளை வகுப்பதற்கு குழு ஒன்று அமைப்பது அவசியமென்று அரசு கருதியுள்ளது. குழுவில் எத்தனை பேர்கள் இருக்க வேண்டு மென்பதற்கும், இத்துறைகளில் சிறப்பு அம்சம் பெற்றவர்களின் பெயர்களையும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. இதுவன்றி, வல்லுநர் குழுவின் மற்றைய பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்து, அரசின் அங்கீகாரம் வேண்டியிருப்பின், அவைகளுக்கு அங்கீகாரம் பெறலாம் என ஆணையர் கோரப்பட்டுள்ளார். பரிந்துரைகளை கொள்கை அளவில் அரசு ஏற்றுக்கொண்டு இவ்வாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பரிந்துரைகளைச் செயல்படுத்த தமிழ் நாடு இந்து சமய அறநிலையை சட்டம், 1959, மற்றும் அரசியல் அமைப்புச் சட்டத்தையும் திருத்த வேண்டியுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார். முதலமைச்சரின் கடிதம்மீது மத்திய அரசு நடடிக்கை எடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைப்பு II

[36 ஆம் பக்கத்தில் இனம் 4(1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திருப்பாலைவனம் காவல் நிலையத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நடுவூர்குப்பம் என்ற கிராமத்தில் சுமார் 250 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்களில் பெரும்பாலானவர்கள் கிறித்துவர்கள்; மீன்பிடி தொழிலை மேற்கொண்டவர்கள். பொது விஷயங்களைக் கவனிக்க, இக்கிராமத்தில் ஒரு பஞ்சாயத்து உள்ளது. 1979 ஆம் ஆண்டுவரை பஞ்சாயத்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். ஆனால் 1979 ஆம் ஆண்டுக்குப்பின், திரு. கே. ஜே. தேவதாஸ் என்பவரின் கோரிக்கையின்படி தேர்தல் நடத்தப்பட்டு, 10 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. செல்வராஜ் என்பவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. ஏ. அந்தோணி என்பவர் இரண்டு ஓட்டு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இத்தேர்தலுக்குப் பின்னரும், செல்வந்தரான திரு. தேவதாஸே கிராம மக்கள்மீது அதிகாரம் செலுத்தி வந்தார். கிராம விசாரணைகளில் தலையிட்டு ஒருதலைப் பட்சமாகச் செயல்பட்டு வந்தார். எனவே, தேவதாஸை விரும்பாத ஒரு தரப்பினர், அந்தோணியுடன் சேர்ந்து, கிராமப் பஞ்சாயத்து முடிவுகளை எதிர்த்து வந்தனர். இதனால் தேவதாஸ் தரப்பினர், பஞ்சாயத்துத் தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட அந்தோணி தரப்பினர் என்று இரு பிரிவுகள் தோன்றி, கிராமத்தில் அவ்வப்போது இரு தரப்பினருக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட்டு வந்தன. குற்ற விசாரணை முறைச் சட்டத்தின 107 வது பிரிவின்கீழ் இரு தரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் 7—11—1982 அன்றும் 28—11—1982 அன்றும் சைதாப்பேட்டை உதவி மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைதிக் கூட்டம் கூட்டப்பட்டு, திங்களுக்கொருமுறை என்று மாறிமாறி தேவதாஸ் தரப்பினரும், அந்தோணி தரப்பினரும் கிராமக் கணக்கு வழக்குகளை நிர்வகித்து வருவது என்ற ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேவதாஸ் தரப்பினரும் 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அந்தோணி தரப்பினரும், பிப்ரவரி மாதம் மீண்டும் தேவதாஸ் தரப்பினரும் கிராமக் கணக்கு வழக்குகளை நிர்வகித்தனர். ஒப்பந்தப்படி, 3—3—1983 அன்று தேவதாஸ் தரப்பினர் அந்தோணி தரப்பினரிடம் நிர்வாகத்தை ஒப்படைத்திருக்க வேண்டும். அந்தோணிக்கு கிராம மக்களின் ஆதரவு பெருகுவதைக் கண்டு ஆத்திரமடைந்த தேவதாஸும் அவரது ஆதரவாளர்களும், 3—3—1983 அன்று நிர்வாகத்தை ஒப்படைக்க விரும்பவில்லை. 1—3—1983 அன்று மாலை 6-30 மணியளவில் பழவேற்காட்டில்,



அந்தோணி தனது சகாக்களுடன் மாதா கோயிலுக்குச் சென்றுவிட்டு வெளியே வரும்போது, தேவதாஸ் தனது ஆதரவாளர்களுடன்கூடி அந்தோணியைத் துப்பாக்கியால் சுட்டார். மேலும் அந்தோணியை ஒழித்துவிடுமாறு கூச்சல் போட்டார். தேவதாஸின் ஆதரவாளர்கள் கைகளில் இரும்புக் குழாய்கள், கத்திகளுடன் அந்தோணியைத் தாக்க வரும்போது அந்தோணி ஓடினார். அப்போது, சின்னப்பன் என்ற முன்னாள் இராணுவ வீரர் ஒருவரிடமிருந்த துப்பாக்கியை பாலையா என்பவர் வாங்கி, அந்தோணியை நோக்கிச் சுட்டார். சாமராஜு குழந்தை ராஜு மற்றுமுள்ளவர்கள் அந்தோணியை இரும்புக் குழாய் முதலிய ஆயுதங்களால் தாக்கினர். இதனால் அந்தோணிக்கு தலை, இடது புஜம், வாய் போன்ற இடங்களில் காயம் ஏற்பட்டது. அந்தோணியைக் காப்பாற்ற வந்த சூசைமேரி சகாயம், காலிஸ்ராஜ் என்பவர்களும் தாக்கப்பட்டுக் காயமடைந்தனர். சம்பவம் நடைபெறும் இடத்தில் மக்கள் கூடுவதைப் பார்த்து, குற்றவாளிகள் ஆயுதங்களுடன் ஓடிவிட்டனர்.

2. இரவு 7-30 மணிக்கு திருப்பாலைவனம் காவல் நிலையத்திற்கு வந்து அந்தோணியே தகவல் கொடுத்தார். வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அவர் ஸ்டான்லி மருத்துவ மனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார். காயம் அடைந்த மற்ற மூவரும் மருத்துவ மனையில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். தாக்குதலுக்குள்ளான காயமடைந்த நால்வரும் சிகிச்சை பெற்றுத் திரும்பினர். குற்றம் சாட்டப்பட்டவருள் ஒருவர், அரசு பொது மருத்துவ மனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

3. சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும், பொன்னேரி-எண்ணூர் காவல் துறை ஆய்வாளர்களும், திருவொற்றியூர் காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளரும் மற்ற அதிகாரிகளும் கிராமத்திற்கு உடனடியாகச் சென்று, மேலும் அசம்பாவிதம் ஏதும் நடக்காமல் தடுக்க தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, விசாரணை நடத்தினர். சம்பவம் நடந்த இடத்திலிருந்து, இரத்தம் தோய்ந்த மண், சில குண்டுகள், காலித் தோட்டா ஒன்று ஆகியன கைப்பற்றப்பட்டன. குற்றவாளிகள் அனைவரும் அவர்களது குடும்பத்தினருடன் தலைமறைவாகிவிட்டனர்.

4. தேவதாஸ் தரப்பினரே அந்தோணி தரப்பினரைத் தாக்கியுள்ளனர். தேவதாஸும் அவரது உறவினர் சின்னப்பனும் உரிமம் பெற்ற தங்களது துப்பாக்கிகளை ஏற்கனவே சென்னை சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள சம்பந்தம் அண்டு கம்பெனியில் 1981 ஆம் ஆண்டிலேயே பாதுகாப்பாக வைத்து விட்டனர்,

எனவே இச்சம்பவத்தில பயன்படுத்தப்பட்டவைகள் நாட்டு துப்பாக்கிகளே எனத் தெரிய வருகிறது. செல்வம், ஆரோக்கியசாமி, மைக்கேல், கோதண்டராமன், ஆரோக்கியம், ஊர்து, ஜோசப் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். தேவதாஸ் மற்றும் ஆறு பேர்கள் தலைமறைவாகி விட்டனர். அவர்களைப் பிடிக்க தனியாக ஒரு காவற் படை ஏற்படுத்தப் பட்டது. இதற்கிடையில் மேற்கண்ட எழு நபர்களும் 23—3—1983 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில், அவர்கள் கடலூரில் தங்கியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், முன் ஜாமீன் உத்தரவு பெற்றுள்ளனர்.

5. ஆயுதக் காவற் படைப் பிரிவு ஒன்றும், கண்ணீர்ப் புகைப் பிரிவு ஒன்றும், ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், ஆறு காவலர்கள் அடங்கிய படை ஒன்றும் பந்தோபஸ்துக்காக அக்கிராமத்திலேயே உள்ளனர். நிலைமை தற்போது அமைதியாக உள்ளது. தனிப்பட்ட விரோதத்தால் எழுந்த இச்சம்பவம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. இவ்விரு தரப்பினரைத் தவிர இவ்விஷயத்தில் கிராமத்தில் உள்ள மற்றவர்களுக்கு அக்கறை இல்லை. எனவே இப்பகுதி பொதுவாக அமைதியாக உள்ளது.



## இணைப்பு III

[37 ஆம் பக்கத்தில் இனம் 4(2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

19—12—1979 நாளிட்ட தொழில் துறை அரசு ஆணை எண் 1819-ன்படி 1—1—1980-லிருந்து உற்பத்தியை தொடங்கும் தகுதியுடைய சிறுதொழில்களுக்கு குறைந்த அழுத்த மின்சக்தி உபயோகிப்பவருக்கு உதவித்தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், சென்னைப் பெருநகர் மற்றும் நகர்ப்புற நில உச்சவரம்பு, நகர்ப்புற நிலவரிக்கு உட்பட்ட இடங்கள் மற்றும் சென்னை நகரம் அதன் சுற்றுப்புறம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் சேலம் நகரம் நீங்கலாக மற்ற இடங்களில் மாநிலம் முழுமைக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. இம்மின் கட்டணச் சலுகை, உற்பத்தியை தொடங்கியதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. உதவித்தொகை முதல் ஆண்டு, நிறுவனம் செலுத்திய மின் கட்டணத்தில் 30 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டு 20 சதவிகிதமும், மூன்றாம் ஆண்டு 10 சதவிகிதமும் முறையே அளிக்கப் படுகிறது. 'சிட்கோ' நிறுவனம் இதுவரை 608 ஒப்பளிப்பு ஆணைகளின்கீழ் ரூ. 4.50 இலட்சத்தை உதவிப் பணமாக அளித்துள்ளது. இதற்கான உதவித் தொகையை 'சிட்கோ' நிறுவனம் தன்னுடைய நிதியிலிருந்தே ஏற்று வருகிறது.

3. அண்மையில் தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் 15—10—1982 அன்று நடைபெற்ற நிகழ்வுக் குழு கூட்டத்தில் (Programme Committee Meeting) பெரிய தொழிற்சாலைகளுக்கும் நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியம் அளித்து வரும் சலுகையைப் போலவே குறைந்த அழுத்த மின்சாரம் பயன்படுத்தும் சிறுதொழில் நிறுவனங்களுக்கும் நேரடியாக மின் கட்டண சலுகை நீட்டிக்கப்பட வேண்டும் என்றும், தற்போதுள்ள மின்கட்டண உதவித்தொகை அளிக்கும் திட்டம் சிக்கலாக உள்ளதால் அதனை மாற்றியமைக்க வேண்டுமென்றும் தமிழ்நாடு சிறுதொழில்கள் சங்கத்தின் தலைவர் கருத்து தெரிவித்தார். அதன்பேரில், மேற்குறிப்பிட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மின்சார வாரியத்தின் தலைவர் 'சிட்கோ' நிறுவனத்துடன் கலந்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இதனைச் செயல்படுத்தும்பொழுது சிறு தொழில்களுக்கு உள்ள இன்னல்கள் தீர்க்கப்படும்.

[Issued 19—12—1983]

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

FRIDAY 15th APRIL 1983

Volume CXCIX (No. 2)

GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

Price *Rs.* 2.75 *Paise*]

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

பொருளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள் | 217—266 |
| 2. அறிவிப்புகள்— | |
| (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு பற்றி | 233 |
| (2) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்கள் நியமனம் | 19 |
| 3. தகவல் கோரல்— | |
| கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றி. | 235—236 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (1) தூத்துக்குடியில் மீனவர்களுக்கும் போலீசாருக்கும் ஏற்பட்டுள்ள மோதலில் துப்பாக்கி சூடு குறித்து. | 236—268 |
| (2) தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து. | 238—240 |
| 5. அரசின் தீர்மானம்— | |
| தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. | 240—300 |
| 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 300 |

143183

D 2 C 25—1

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வெள்ளிக்கிழமை, 1983 ஏப்ரல் 15.

சித்திரை 2, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு-2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சிறு தொழில்கள்.

*289 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1982–83 ஆம் ஆண்டு சிறுதொழில் அபிவிருத்திக்காக எவ்வளவு தொகை அரசு ஒதுக்கியுள்ளது?

(இ) தமிழகத்தில் இந்த ஆண்டு (1982) எத்தனை தொழில் நிறுவனங்கள் தொடங்கப்படும்?

(உ) இதனால் இதுவரை எத்தனை பேர் பயனடைந்துள்ளனர்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ரூபாய் 198.46 இலட்சம்.

(இ) 1982-83 ஆம் ஆண்டில் 4,138 புதிய சிறுதொழில்களும், 8,547 கைவினைத் தொழில்களும் தொடங்கப்பட வேண்டும் எனக் குறியளவாகக் கொள்ளப்பட்டுள்ளது.

(உ) மாவட்டத் தொழில் மையங்கள் செயல்படத் தொடங்கிய பின்னர் 1978-79 முதல் 1982-83 மார்ச் திங்கள் வரை 2.57 இலட்சம் நபர்களுக்கு சிறுதொழில்கள் மற்றும் கைவினைஞர் தொழில்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இப்படி ஒதுக்கப்பட்ட தொகை மாவட்ட வாரியான அளவில் பிரித்துக் கொடுக்கப்படுகிறதா? சிறு தொழில்கள் முன்னேறத் தகுந்த அளவில் மாவட்டந்தோறும் அது தொடர்பான பெருந் தொழில்களை ஏற்படுத்துகிற முயற்சி அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** இது மாநில அளவில் ஒட்டு மொத்தமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் வளர்ச்சிப் பணிகளுக்காக, அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப் பட்ட நிதியிலிருந்து செலவழிக்கப்படுகிறது. அடுத்து பெரிய தொழில்கள் அமைந்தால்தான் சிறு தொழில்கள் அமையும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** இவ்வாறு ஒதுக்கப்பட்ட தொகையானது விண்ணப்பதாரர்களால் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு அந்தத் தொழில்கள் நல்ல முன்னேற்றம் அடைந்து லாபகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** ஒரு அடிப்படை விவரத்தைச் சொல்லுவது என்து கடமை. இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிற 2 கோடி ரூபாய் என்பது வளர்ச்சிப் பணிகளுக்காக, அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப் பட்டிருக்கிறதே தவிர, வேறு எதற்கும் அல்ல. தொழில் செய்பவர்களுக்கு வேறு நிறுவனங்கள் பண உதவி செய்கின்றன. குறிப்பாக சிட்கோ நிறுவனத்தின் மூலமாக வேறு வசதிகளைச் செய்து கொடுக்கிறோம். தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக வேண்டிய நிதி உதவிகள் கொடுக்கப்படுகின்றன. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் பண உதவி செய்யப்படுகிறது. சிறு தொழில்கள் பெரும்பாலும் தனியாரால் நடத்தப் படுவதால், அரசின் மூலதனப் பிரச்சினை இல்லை. பங்குத் தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது. அடிப்படை மூலதனம் போன்ற காரியங்களுக்காக அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. க. அருணாசலம்:** இந்த நிதி பரவலாக தேவையான இடத்திலே கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பின்தங்கிய பகுதியில் இருக்கின்ற பின்தங்கிய வகுப்பினர் தொழிலை ஆரம் பித்தால், அதை நடத்துவதற்கு வேண்டிய ஆற்றல் இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய விசேஷ தொழில் பயிற்சியை (entreuerial training) கொடுக்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** ஐ.ஆர்.டி.பி. போன்ற மத்திய அரசின் திட்டங்கள் வாயிலாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன, நிதி ஒதுக்கப்படுகின்றது. மாநிலத்தில் ஊக்குவிக்கும் முகாம் (Motivation Camp) என்று நடத்தி, தொழில் முனைவர்களுக்குள்ள ஆற்றலைக் கண்டுபிடித்து, மாவட்ட மையங்களில் ஊக்குவிப்பு தந்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் நலிந்த மக்களுக்கு, ஆதி திராவிடத் தோழர் களுக்கு உரிய வகையில் நல்ல காரியங்களை இந்த அரசு செய்து வருகிறது. விவரங்கள் தேவைப்பட்டால், தனிக் கேள்வி கேட்டால், விவரங்களைச் சேகரித்து இந்த மன்றத்திலே நான் வைக்கிறேன்.

## மயூரம் மொபெட்கள்

*290 **வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்):** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுக்குச் சொந்தமான 'மயூரம் மொபெட்' நிறுவனம் ஆண்டுக்கு எவ்வளவு 'மொபெட்'டுகளைத் தயாரிக்கிறது?

(இ) அதனை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) தமிழ்நாடு மொபெட் நிறு வனம் தற்போதைக்கு மொபெட் வாகனங்கள் தயாரிக்கவில்லை.

(இ) இல்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** இதற்காக ஏதாவது முதலீடு செய்யப்பட்டதா? கட்டிடங்கள் கட்டப்பட்டதா? முதலீடு செய்யப்பட்டது என்றால் எத்தனை கோடி? அதற்கான கட்டிடங்கள், இயந்திரங்கள் பிறகு வேறு எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** இதற்காக முதலீடு செய்யப் பட்டது 117 இலட்சம் ரூபாய். 1977 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சியின் காலத்திலே தொடங்கப்பட்டது. 117 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்

பட்டது. 1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1973 ஆம் ஆண்டு புராஜெக்ட் ரிப்போர்ட் தயார் செய்து, 1974 ஆம் ஆண்டு தொடங்குவதற்கு ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, இந்த ஐந்தாண்டுக் காலத்திலே எடுத்த நடவடிக்கையின் காரணமாக—ஜாக்கிரதையாகச் சொல்லுகிறேன். அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக—வையபிள் யூனிட்டாக (Viable unit) 1977 ஆம் ஆண்டு எங்கள் ஆட்சி வந்த நேரத்தில் கொடுக்கப்பட்டதன் காரணத்தால், எப்படியும் வையபிள்ளாக (viable) நடத்த வேண்டும் என்று முயற்சி செய்தும், கடந்த மார்ச் வரையில் 215 இலட்சம் ரூபாய் நஷ்டமாகியிருக்கிறது. இதை எப்படியும் ரீ-ஹாபிலிடேட் (Rehabilitate) செய்து எப்படியும் நடத்த வேண்டும் என்று முயன்றாலும் கூட, தனியாருடைய போட்டி, ஐந்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள சுணக்கம், வேறுபல நிர்ப்பந்தங்கள் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, அந்த இயந்திரங்கள், கட்டிடங்கள் மூன்று காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக அசெம்பளி, ஷீட் மெட்டல் பிரிவு, மெஷின் ஷாப், டூல் ரூம் ஆகியவைகளை தனித்தனிப் பிரிவுகளாக ஆக்கி வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. மொப்பெட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட வேலை நடக்கவில்லை. மறைமலை நகரில் அந்தக் காலத்திலே வாங்கப்பட்ட இடத்திலே ஆரம்பிக்காமல், 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், ஜனாதிபதி ஆட்சியின்போது கிண்டியிலே ஆரம்பித்துவிட்டதால், அங்கே மாற்ற முடியவில்லை. அவைகளைச் சரி செய்வதற்காக தமிழக அரசு ஆய்ந்து வருகிறது. அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திலே என்ன செய்வது என்று முடிவு எடுக்க அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற 215 இலட்சம் ரூபாய் நஷ்டம் உற்பத்திக்குப் பிறகு ஏற்பட்டதா அல்லது தொழில் தொடங்கியதிலிருந்தே ஏற்பட்டதா ? எந்த அடிப்படையிலே அந்த நஷ்டம் கணக்கிடப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அந்த மொப்பெட் நிறுவனம் வையபிலாக இருக்க வேண்டுமானால், 20 ஆயிரம் மொப்பெட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற குறியீடு 1972-ஆம் ஆண்டில் வைக்கப்பட்டது. ஆனால் 1977-ஆம் ஆண்டில் ஆறு ஆயிரம் அளவு குறியீட்டை வைத்து ஆரம்பித்தார்கள். 15 ஆயிரம் உற்பத்தி செய்தால், நஷ்டம் நிவர்த்தி செய்யப்படும். 6 ஆயிரம், 6 ஆயிரம் என்பதாலேயே ஐந்தாண்டுகளில் அக்யுமெலேட்டெட் லாஸ் (Accumulated loss) வந்திருக்கிறது. ஓராண்டில் ஏற்பட்டதல்ல முதலாண்டு 18 இலட்சம் ரூபாய், இரண்டாவது ஆண்டில் 38 இலட்சம் ரூபாய்



அடுத்த ஆண்டில் 40 இலட்சம் ரூபாய், அடுத்து 50 இலட்சம் ரூபாய், அல்லது 36 இலட்சம் ரூபாய் என்று ஆண்டுதோறும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. தொடங்குகிற நேரத்தில் 20 ஆயிரம் என்ற குறியீட்டை 6 ஆயிரம் என்று குறைத்ததாலும், மறைமலை நகருக்கு அப்போதே மாற்றப்படாத காரணத்தாலும், ஐந்தாண்டுகளில் முறையாகத் திட்டம் போடாததாலும். வேறுபல காரணங்களாலும்—கியுமிலேட்டிவ் எஃபெக்டில்—நைந்த தொழிலாக மாறிவிட்டது. இந்தத் தொழிலை நடத்தக்கூடாது என்பதல்ல அரசின் நோக்கம்.

Thiru A. R. DAMODARAN: Sir, while appreciating the reasons for the closure of this factory, there seem to be some fixed assets of the company which should be worth over Rs. 70 crores or Rs. 80 crores. It is not as if it is a total loss. May I know whether the Government would consider whether the Transport Department would be able to utilise some of the machinery, especially the sheet-metal portion of the works, because sheet-metal works are also used in fabricating of buses and lorries?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் ஒரு நியாயமான கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். அங்கேயிருக்கின்ற இயந்திரங்களை, கட்டிடங்களை தக்க வகையிலே பயன்படுத்தலாம் என்று அவர்கள் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் டெண்டர் மூலமாக தனியார்களுக்கு, ஏற்கெனவே இந்தத் தொழிலில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலில் உள்ள நிறுவனங்களுக்குக் கொடுத்து அவர்களுடன் நியாயமாகப் பேசி, அவர்களுக்கும் நம்முடைய அரசாங்கத்தினுடைய பணமும் சேதாரம் ஆகாமல், அங்கே இருக்கின்ற வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் டிஸ்பிளேஸ்மெண்ட் ஆகாமல் பார்த்துக்கொண்டு, அதே நேரத்தில் அரசாங்கத்திற்கு இதன் காரணமாக வரியும் வருகின்ற வகையிலே செய்யலாம். இப்படி அந்த டைரக்ட் டெண்டர் மூலமாகச் செய்ய 'இன்சிபிட்' நிறுவனத்தினரும் முன் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்ய அரசாங்கம் அதற்கென தனியாக ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு முடிவை அனுப்பியிருக்கிறது. அமைச்சரவைக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்பியிருக்கிறது. அதை அமைச்சரவை ஆய்ந்து பார்த்து அரசாங்கத்திற்கும், தொழிலாளர்களுக்கும் குந்தகம் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளும். இதற்கு ஒரு இன்ப்ரா ஸ்டரக்சர் இருக்கின்றது. அதைப் பாதுகாக்க அமைச்சரவை நல்ல முறையில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : துணைத் தலைவர் அவர்களே, அந்த மோபட் வண்டி தயாரிக்கப்பட்டு விற்கப்படாமல் இருந்தால், அவைகளை உறுப்பினர்களுக்குத் தந்தால், அவர்கள் நேரத்தில் வருவதற்கு உதவியாக இருக்கும். நிருபர்களுக்கும் தந்தால் அதிக உதவியாக இருக்கும்.

(அமைச்சர் பதில் இல்லை.)

Thiru J. M. MIAKHAN: Sir, the Hon. Minister mentioned several reasons for the non-viability of the concern. Is it due to the inherent defect in the structure of the moped? A variety of mopeds with different qualities are available in the country and there is a great deal of competition. I hear that this 'Mayuram' moped does not move in the market. Is it due to any inherent defect in the machine?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. மியாகான் அவர்கள் சொன்னது போல 1973-ஆம் ஆண்டு தொடங்குகின்றபோது, 'டெக்னிக்கல் பீசிபிலிட்டீஸ்' பார்த்துத்தான் வாங்கியிருக்கிறார்கள். இதற்கு அலகாபாத் நிறுவனத்தில் இதைச் செய்யுலாமா, அதற்குத் தரம் இருக்கிறதா, இது ஓடுமா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்திருக்கின்றார்கள். 1973 ல் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அந்த பீசிபிலிட்டி ரிப்போர்ட்டை வாங்கித்தான் இதனை ஆராய்ந்திருக்கிறார்கள். பின்னாலே பல நிலைமைகள் ஏற்பட்ட காரணத்தினாலே, இன்றைக்கு அந்தத் தொழிலிலே ஒரு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறிய போது, 20 ஆயிரம் என்று எதிர்பார்த்து 6 ஆயிரம் தான் செய்ய முடிந்தது என்று தெரிகிறது. அந்த டெக்னிக்கல் பீசிபிலிட்டியைப் பற்றி, தனியார் நிறுவனம் செய்து கொடுத்ததைப்பற்றி, அரசு என்ன செய்தது? அவர்களுடைய ரிப்போர்ட் சரியானதாக இல்லாதது அதிலே இருந்த கோளாறா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சிக்கலான கேள்வியைக் கேட்கிறார்கள். அரசாங்கத்தினுடைய பல திட்டங்களை தொடர்ந்து வரும் அரசுகள் நிறைவேற்றுவதுதான் ஜனநாயகக் கடமையாகும். தொழில் நசிவு ஏற்படாமல் இருப்பதற்கும், தொழிலாளர்களுக்குப் பாதகம் இல்லாமல் இருக்கவும், பொதுமக்களின் பணங்கள் சேதாரம் இல்லாமல் இருக்கவும் இந்தக் கால கட்டத்தில் என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதனை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.



Commutation of Pension without Medical Examination

*291 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether as per G.O. Ms. No. 137, Finance, (Pension), dated 24th February 1978, Government Servants, who apply for commutation of pension within one year from the date of retirement on superannuation, will not be subjected to Medical examination; and

(b) if so, whether there is any proposal to extend this privilege to persons, serving in aided institutions?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இச்சலுகை உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரிபவர்களுக்கும் ஏற்கனவே நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை 1978-ஆம் ஆண்டே கொடுத்திருந்தேன். இப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து, அவர்கள் ஏற்கெனவே அந்தச் சலுகையை அறிவித்து ஆசிரியர் பெருமக்கள் அந்த நன்மையைப் பெற்று வருவதாகத் தெரிகிறது. அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே மற்றொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். ஓய்வு ஊதியத் தொகையை மொத்தமாக வாங்குவதில் உள்ள, கம்யூட்டேஷன் வாங்கும் பிரச்சினையைபற்றிக் கேட்கிறேன். இந்த மாநிலத்திலே அரசு பரவலாக ஒரு கொள்கையை வைத்திருக்கிறது. ஓய்வு பெறுவதற்கு ஆறு மாதத்திற்குள்ளாக மாவட்டக் கல்வி அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து, ஓய்வு பெறும் நாளிலேயே ஓய்வு ஊதியத் தொகைக்கான ஆணையை அந்த ஆசிரியர் கையிலே கொடுக்க வேண்டும். ஓய்வு ஊதியம் இவ்வளவு என்று கொடுக்க வேண்டும். ஆனால் இந்த மாநிலத்திலே இது சரிவரச் செயல்படவில்லை. இதுகுறித்து திட்டவட்டமாக பரவலான ஒரு ஆணையைக் கொடுத்து, ஓய்வு பெறும் நாளிலேயே அந்த ஓய்வு ஊதியத் தொகைக்கான ஆணை கிடைக்கும் வகையில், வேகப்படுத்த கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுகின்ற நாளிலேயிருந்து ஓய்வூதியம் பெறுவதற்கான வகையிலே செய்வதுதான் அரசினுடைய விருப்பமாக இருக்கிறது. அப்படி கொடுப்ப

தற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்கும் அவர்கள் சில முறைகளைப் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். இன்னும் தீவிரமாகப் பரிசீலித்து அந்த ஓய்வு ஊதியம் அவர்கள் ஓய்வு பெற்ற உடனே அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் நியாயம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இந்தக் கேள்வி 1980-லே தான் கேட்கப்பட்டிருக்கிறது. இந்தச் சலுகை தனியார் பள்ளிகளுக்கு மட்டுமல்லாது உதவி பெறும் கல்லூரிகளிலே ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாதவர்களுக்கும் உதவி பெறும் தொழில் பிரிவு நிறுவனங்களிலுள்ள ஓய்வு பெறும் ஆசிரியர்கள், மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கும், உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர் அல்லாதவர்களுக்கும் பொருந்தும்.

### *Refund of Special Pay*

* 292 Q—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that, on the basis of Audit Objection, Craft Teachers who had passed T.S.L.C. Examination, were asked to refund the amount received as Special Pay at the rate of Rs. 5 per mensom from 1st April 1964 to 30th September 1970, in Ramanathapuram and Madurai Districts; and

(*b*) if so, the number of Teachers affected ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** துணைத் தலைவர் அவர்களே, இப்போது பரவலாக மாநிலத்திலே எல்லா ஆசிரியர்களும் ஒன்றுகூடி ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்தி, எவ்வாறு இடைநிலை ஆசிரியர்களுடைய பயிற்சிக்கு ஒரு ஊதிய உயர்வு அளித்து அதன் மூலமாக அந்த ஆசிரியப் பெருமக்கள் நன்மை பெற்றிக்கின்றார்களோ, அந்த முறையிலே அந்தந்த ஆசிரியர் பயிற்சிக்கு ஒரு ஊதிய உயர்வு வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறோம். அந்த முறையிலே டி.எஸ்.எல்.சி. படித்த தொழில் பிரிவு ஆசிரியர்களுக்கும் பிற ஆசிரியர்களுக்கும் ஒரு ஊதிய உயர்வு அளிக்கக்கூடிய கருத்துரு விரைவில் உருவாகுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, முதல் ஊதியக் குழு பரிந்துரைப்படி, இடைநிலை ஆசிரியர்கள், பயிற்சி பெற்றுள்ள தொழில் ஆசிரியர்களுக்கு ரூ. 5 சிறப்பூதியமாக அனுமதிக்கப்பட்டு, அந்தத் தகுதி பெற்றுள்ள ஆசிரியர்களுக்குச் சிறப்பூதியம் ரூ. 5 வழங்கப்பட்டு வந்துள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விக்கு விலகிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் ஏதோ காரணத்திற்காக அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. ஒரு வேளை அவர்களுக்குக் காரணம் இருக்கலாம். இருந்தாலும் நான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இடைநிலை ஆசிரியர்கள் அனுபவித்து வருகின்ற சலுகையான ஒரு ஊதிய உயர்வை மற்ற ஆசிரியர்களுக்கும் கொடுப்பது குறித்து ஏதாவது சொல்ல இருக்கின்றார்களா என்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற ஆசிரியர்களும் அந்தப் பயிற்சிக்கு சலுகை கேட்டு வருகின்றார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயம் :** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மூலக்கேள்வியை ஒட்டி கேட்டிருக்கின்றார்கள் என்று தான் நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இது ஏதோ வேறு கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆசிரியர்கள் கேள்வியைத் தப்பாகக் கேட்கின்றார்களா ?

### *Engineering Diploma Holders*

* 293 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether any representation has been received from the Engineering Diploma Holders Association, Tamil Nadu Electricity Board, in July, 1980, requesting admission of Engineering Diploma Holders into Third Year B.E. Degree Course; and

(*b*) if so, the action taken by the Government in the matter?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : துணைத் தலைவர் அவர்களே, பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் மேற்படிப்பிற்காக பார்ட் டைம் வகுப்பில் சேர்வதற்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அதனாலே மேட்டூரிலே பணியாற்றுகின்றவர்கள் சேலத்திலே படிக்கமுடியாத சிரமம் இருந்துகொண்டிருக்கிறது. அதனாலே பொதுவாக இந்த எல்லைக் குள்ளாக என்று இருப்பதை நீக்கி, எங்கும் பார்ட் டைம் படிப்பு படிக்கலாம் என்று செய்வதற்கு வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, பணியாற்றுகின்றவர்கள் பகுதி நேரத்தில் படிப்பதற்கு என்றால், இந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள்ளே வந்திருந்து அந்த வகுப்புக்களுக்கு வந்து கவனித்து அவர்கள் அந்தப் பாடங்களைப் படித்து தெரிந்துகொள்ள முடியும். எங்கேயிருந்து வேண்டுமானாலும் வரலாம் என்று சொல்லும்போது, ரொம்ப தூரத்திலே இருப்பவர்கள் இதிலே சேர்ந்து பிறகு அவர்களுக்கும் புண்ணியமே இல்லாமல் இந்த வகுப்புகளும் நன்றாகச் செயல்படாமல் போய் விடும். இப்போது இருக்கின்ற எல்லைக்குள் என்பது நாங்கள் தீர்க்கமாக யோசித்துதான் கொண்டுவரப்பட்டது. அந்த நிபந்தனையின் அடிப் படையிலேதான் கல்வி தரப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டு கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்போது இந்த மாதிரி கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு, அந்தக் கோரிக்கையினுடைய நகலும் எனக்கு அனுப்பப்பட்டது. அதன் சார்பாகத்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். அதுமாதிரி கோரிக்கை வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். கோரிக்கை வராவிட்டாலும் கூட, குறிப்பிட்டிருக்கின்ற நிகழ்ச்சியைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள், அதுமாதிரி வந்துள்ள இந்த முறையீடு குறித்து ஏதாவது பரிகாரம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டயப் படிப்பு படித்தவர்கள் பட்டப்படிப்பு படிக்க வேண்டும் என்று விரும்புவதை நான் வரவேற்கிறேன். தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் தரப்பட வேண்டுமென்பதை நான் வரவேற்கிறேன். இப்போது முதல் ஆண்டு சேர்ந்து படிக்கிறார்கள். 3 ஆம் ஆண்டில் படிக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டிருப்பதாக இந்தக் கேள்வியிலே கொடுக்கப்பட்டிருக்



கிறது. இந்தப் பிரச்சினை நம் அரசாலே முடிவு செய்யக்கூடிய பிரச்சினை அல்ல. அது பல்கலைக் கழகம் கவனிக்கவேண்டிய பிரச்சினை. அப்படி ஏதாவது கோரிக்கை வந்தால், அவர்களுக்கு நாம் அனுப்பலாம்.

*Renovation of Temples*

* 294 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Director-General of UNESCO visited Tamil Nadu in August, 1980; and

(*b*) whether there is any proposal for getting grants from UNESCO, for the renovation of Temples of historical and archaeological importance, including Arulmigu Bragadeeswarar Temple, Thanjavur ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) செயற்குறிப்பு ஏதுமில்லை.

(முற்பகல் 9-50)

திரு ஜி. சுவாமிநாதன்:- துணைத் தலைவரவர்களே, அவர் தமிழ் நாட்டுக்கு வந்தபோது எந்தெந்தக் கோவில்களுக்குச் சென்றிருந்தார்கள்? அப்போது அவர்கள் ஏதாவது பரிந்துரை செய்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:- துணைத் தலைவரவர்களே, அப்படிப் பட்ட தகவல்கள் ஏதுவும் இங்கு இல்லை.

*Ragging in Professional Colleges*

* 295 *Q*.—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham) and Thiru A. R. DAMODARAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether the Government are aware that ragging of new entrants into Professional Colleges had caused severe hardship to the victims at the beginning of the academic year 1980-81;

(*b*) whether there had been any suicides in consequence; and

(*c*) if so, the action taken by the Government in this regard ?

[1983 ஏப்ரல் 15

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1980—81 ஆம் ஆண்டு துவக்கத்தில் பொறியியற் கல்லூரிகளில் புதிதாகச் சேர்ந்த மாணவர்கள், மூத்த மாணவர்களால் "ராகிங்" Ragging என்ற பெயரில் பெரிதும் தொல்லைக்கு ஆட்படுத்தப்பட்டார்கள் என்ற செய்தியடங்கிய அறிக்கை எதுவும் கல்லூரி முதல்வர்களாலோ, மாணவர்களாலோ அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) "ராகிங்" Ragging காரணமாக மாணவர் யாரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை. காரைக்குடி அழகப்பா பொறியியற் கல்லூரியில் திரு. ஜெயராமன் என்ற மாணவர் "ராகிங்" தொல்லை தாளாமல் தற்கொலை செய்து கொண்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. இது முற்றிலும் தவறானதாகும்.

(உ) சொந்தக் காரணங்களுக்காக மேற்படி மாணவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது விசாரணைக்குப்பின் தெரிய வந்ததால் இதன்மேல் வேறு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

Thiru A. R. DAMODARAN: Sir, while thanking the Hon. Minister for replying to this question which was asked in 1981 and while appreciating the various corrective measures, may I know whether, as a result of the action taken by the Government, complaints of ragging have come down in 1982-83 and whether the Principals have been given authority to suspend persons on the spot it such ragging takes place?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:- துணைத் தலைவரவர்களே, 'ராகிங்' என்று மாணவர்களைத் தொல்லைக்குள் ஆட்படுத்தும் பழக்கத்தைப்பற்றி ஆலோசனைக் குழுவிலே பேசப்பட்டிருக்கிறது. அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் பேசப்பட்டு, இதை கடுமையாக நடவடிக்கை எடுத்து ஒழிக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் அனைவரும் சொன்னார்கள். அதற்கு முன்னாலேயே நடவடிக்கை எடுத்து வந்தாலும், அதற்குப் பிறகு தேவையான அறிவுரைகளைக் கல்லூரி முதல்வர்களுக்குத் தந்திருக்கிறோம். போன ஆண்டு அதிகமான புகார்கள் வந்ததாகத் தெரியவில்லை. 'ராகிங்' மட்டுமல்ல, வேறு மாதிரி, கட்டுப்பாட்டுக்கு விரோதமாக யார் நடந்து கொண்டாலும், 'சஸ்பென்ட்' செய்யும் முறையை அவர்கள் வற்புறுத்துகிறார்கள். 'சஸ்பென்ட்' செய்யப்பட்ட மாணவர்கள் எவ்வளவு பெரிய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வந்தாலும், மறுபடியும் அவர்களை அந்தக் கல்லூரியில் அனுமதிப்பதில்லை. அந்த முறையில், இது வெகுவாகக் குறைந்திருக்கிறது. கல்லூரிகளில் இப்போது அமைதி இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 15]

டாக்டர் இரா. சனார்த்தனம்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய நல்ல முயற்சியின் காரணமாக 'ராகிங்' முறை நீக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக 'ராகிங்' என்பது, கல்லூரிக்கு வருகிற புது மாணவர்களை அறிமுகப்படுத்தும் நிலையாக இருக்கிறது. எனவே கல்லூரிகளில் அறிமுக விழா என்று ஒரு விழாவை நடத்தினால், இந்தத் தவறுக்கு இடமில்லாமல் போகுமென்று அரசு நினைக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, கல்லூரிக்கு வந்திருக்கிறவர்கள் தாங்கள் எதற்காக வந்திருக்கிறோமென்று எண்ணி, அந்தப் பணியை ஒழுங்காகச் செய்தால் போதும். இதெல்லாம் தேவையில்லாத ஒன்றாகும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: துணைத் தலைவரவர்களே, 'ராகிங்' செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பது உண்மைதான். இத்தகைய முறையற்ற வழிகளில் ஈடுபடக்கூடியவர்கள் விரல் விட்டு எண்ணும் அளவுக்கு இல்லாமல், கூட்டமாக இருப்பதால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தயக்கம் ஏற்படுகிறது. அச்ச உணர்வு ஏற்படுகிறது, லா அண்டு ஆர்டர் சிச்சுவேஷனுக்கு பாதகம் ஏற்படும் என்பதால். எனவே அப்படி நடந்தாலும், நடந்துவிட்டுப் போகிறது என்று அரசுக்குத் தெரிவிக்காமல், துறைக்குத் தெரிவிக்காமல், விட்டுவிடுவதும் உண்டு. ஆகவே இப்படிப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண சில சிறப்பு நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் குறிப்பிட்ட கருத்து நல்ல கருத்து. நான் படித்த கல்லூரியில் அப்படிப்பட்ட நடைமுறை இருந்தது. புதிய மாணவர்கள் வரும்போது பழைய மாணவர்கள் அவர்களை வரவேற்று கல்லூரியில் உள்ள பல இடங்களைச் சுற்றிக் காண்பித்து, எது எது எங்கே இருக்கிறது, எப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அறிமுகப்படுத்தும் ஓரியன்டேஷன் கோர்ஸ் Orientaton Course) நடத்துவார்கள். பழைய மாணவர்களுக்கும், புதிய மாணவர்களுக்கும் நட்புறவு ஏற்படுத்த அது வாய்ப்பாக இருந்தது. அப்படி வேறு சில கல்லூரிகளில் நடக்கிறது. அது நல்ல பலனைக் கொடுக்குமென்று அரசு உணர்ந்தால், அதைச் செய்யலாமல்லவா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, 'ராகிங்' என்பதே நல்ல பழக்கமாக ஆரம்பித்த ஒன்றுதான். ஆனால் இப்போது ரொம்பவும் காட்டுமிராண்டித்தனமான அளவுக்குப் போன பிறகு தான், அதனால் சில மாணவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் நிலைமை

ஏற்பட்ட பிறகுதான், இன்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற கல்லூரிகளில் படிக்கிறவர்கள்கூட படிப்பு வேண்டாமென்று சொன்னதால் தான், எல்லோரும் சேர்ந்து அதை ஒழிக்க வேண்டுமென்று சொல்லி, கடுமையான நடவடிக்கை எடுக்கிறோம். இன்றைக்கு நான் இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்வது, 'ராகிங்' என்பதை தமிழகத்தில் இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் யாரும் விரும்பவில்லை என்பதுதான். அந்த அடிப்படையிலே, 10 பேராக இருந்தாலும் சரி, 50 பேராக இருந்தாலும் சரி, கல்லூரி முதல்வர்கள் தைரியமாக உரிய நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கல்லூரியிலிருந்து விலக்க வேண்டும். அவர்கள் படிப்பதைவிட படிக்காமல் இருப்பது இந்தச் சமுதாயத்திற்கும், நாட்டுக்கும் நல்லது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அறிமுக விழா என்று பேசுகிறபோது, நன்றாக இருக்குமே தவிர, இளைஞர்கள் மத்தியில் அதைப் புகுத்தும்போது, இருக்கின்ற சூழ்நிலையை அனுசரித்துச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். புதிய பரிசோதனைகள் வேண்டாம். இருக்கிற நிலைமையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட, அமைதியாக, ஒழுங்காக, கட்டுப்பாடாகப் படிப்பு படித்தால், கொஞ்ச காலத்திற்கு நல்லது.

**திரு. சோ. ஆறுமுகம்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், 'ராகிங்' நல்ல முறையாகத்தான் முதலிலே ஆரம்பிக்கப் பட்டது, பின்னாலேதான் அது தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்று சொன்னார்கள். இதிலே அமைச்சர் அவர்களுக்கு அனுபவம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே, நான் படிக்கின்றபோது, இந்தப் பழக்கமில்லை. நான் கல்லூரியில் சேரும்போது, இந்தப் பழக்கமில்லை. நாங்கள் போய்ச் சேர்ந்தோம். கொஞ்ச நாள் ஆக ஆக, ஒவ்வொரு மாணவரோடும் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டோமே தவிர, இந்த நிலைமைகள் அப்போது இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவரவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் எந்தக் கல்லூரியில், எந்த ஆண்டு படித்தார்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே. 1948-52-ல் கோவை அரசினர் கலைக் கல்லூரியில் படித்தேன். அப்போது அந்தப் பழக்கம் அங்கே இல்லை. நாங்களும் அதனால் பாதிக்கப்படவில்லை. நாங்களும் யாருக்கும் தொல்லை கொடுக்கவில்லை.





**திரு. சி. இராமலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, மாணவர்கள் 'ராகிங்' செய்வதுபற்றி பல அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டன. மாணவர் களிடம் நிலவும் கருத்து என்ன என்று சொல்ல விரும்புகிறேன். திருமணம் செய்துகொண்டு மாமியார் வீட்டுக்கு வரும் மணப் பெண்ணை "மருமகளே மருமகளே வா, வா, வலது காலை எடுத்து வைத்து வா, வா" என்று சொல்லுவார்களே, அதுபோல "மாணவர்களே, மாணவர்களே, வாருங்கள், வலது காலை எடுத்து வைத்து வாருங்கள்" என்று அவர்கள் சொல்லு கிறார்கள். அதை ஏன் அனுமதிக்கக்கூடாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே, நாம் இப்போது ஏதாவது உதாரணங்களைச் சொல்லி, மறுபடியும் 'ராகிங்' வேண்டுமென்ற கருத்துக்கு யாரும் இடம் தரக்கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பமாகும். 'ராகிங்' எந்த அளவில் இருந்தாலும், அது பிற்போக்கான உணர்வு, பிற்போக்கான எண்ணம், பிற்போக்கான பழக்க வழக்கம் என்ற அடிப்படையில், அத்தனை பேராலும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சமுதாயத்தில் இப்படிப்பட்ட பழக்கங்களை ஒழித்தால் தான், சமுதாயத்தில் நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்த முடியும்.

Thiru J. M. MIAKHAN: Sir, the Hon. Minister said that the practice of ragging was not there when he entered College. I would like to know from the Hon. Minister whether, when he came to the Final Year in College, there was ragging and whether he also indulged in such ragging.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே, நான் அப்போதே சொல்லிவிட்டேன். நானும் அதிலே ஈடுபடவில்லை என்று.

## *Libraries for Law Colleges.*

*296 Q.—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether funds have been sanctioned for the Law Colleges in Tiruchirappalli and Coimbatore, for starting Libraries in conformity with the norms and standards fixed by the All-India Bar Council; and

(b) if not, whether action will be taken to sanction the same immediately?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) புதிதாகத் துவங்கப்பட்டுள்ள திருச்சி, கோயம்புத்தூர் சட்டக் கல்லூரிகள் ஒவ்வொன்றுக்கும் அரசு தொடரா செலவினமாக ரூபாய் 25,000 அளித்துள்ளது. இந்த நிதி அனைத்திந்திய வழக்கறிஞர் மன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி இல்லை.

(இ) எனினும் திருச்சி, கோயம்புத்தூர் சட்டக் கல்லூரிகள் ஒவ்வொன்றுக்கும் நூலகப் புத்தகங்கள் வாங்க 1979 ஆம் ஆண்டு ரூ. 25,000-மும் 1980-81 ஆம் ஆண்டு ரூ. 25,000-மும் இந்த ஆண்டு 1982-83 ரூபாய் ஒரு லட்சமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-00)

**திரு. பா. ரா. தாமஸ்:** வருகின்ற ஆண்டிலிருந்து நம்முடைய மாநிலத்தில் ஐந்து ஆண்டு சட்டப் படிப்பு முறை நடைமுறைக்கு வர இருக்கிறது. மாணவர்களின் எண்ணிக்கை, விடுதிகளின் எண்ணிக்கை, கட்டிட வசதிகளின் எண்ணிக்கை போன்றவற்றை அடிப்படையாக வைத்து, மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகிற நிலையில், மேலும் பல்வேறு வசதிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த முறையிலே மதுரையிலே இருக்கிற சட்டக் கல்லூரி மாணவர்கள் பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். அவர்களுக்கு போதிய கட்டிட வசதி, விடுதி வசதி போன்றவை இல்லை. இனிமேல் புதிய சூழ்நிலை வருகிறதை அடிப்படையாக வைத்து, சட்டக் கல்லூரிகளுக்கு இட வசதியை விஸ்தரிக்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும், தக்க வசதிகள் செய்யும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மூலக் கேள்வியுடன் தொடர்புள்ள ஒன்றையும் சொல்கிறேன். வழக்குரைஞர் மன்றம் சொன்ன அளவுகோல்படி, நாம் கொடுக்காமல் குறைவாகக் கொடுத்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக்கொள்ள வேண்டாம். காரணம் துவக்கத்தில் நாம் 50 ஆயிரமும், முதல் ஆண்டு 15 ஆயிரமும், இரண்டாம் ஆண்டு 15 ஆயிரமும், மூன்றாம் ஆண்டு 15 ஆயிரமும், மற்றபடி ஆண்டுக்கு 10 ஆயிரமும் தருவதாகச் சொல்லியிருக்கிறோம். ஆக, அவர்கள் சொன்ன அளவுகோல்படி வரவில்லையே தவிர, மற்றபடி அவர்கள் கேட்ட அளவுகோலைவிட அதிகமாகத்தான் தந்திருக்கிறோம்.



**திரு. செ. முத்துசாமி:** அரசுத் தரப்பில் ஆரம்பிக்கப்பட்ட சட்டக் கல்லூரிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வாங்க அரசு நிதி உதவி செய்வதுபற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. சேலத்தில் தனியாரால் ஒரு சட்டக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், அதிலே பிரச்சினைகள் இருப்பதாகவும் சொல்கிறார்கள். அதில் பலர் சேர்ந்திருக்கிறார்கள். அதிலுள்ள நிலைமைகள் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதற்கும் அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அவர்கள் நம்மிடம் அங்கீகாரம் பெறவும் இல்லை. அதை யாரோ பலர் நம்பி சேர்ந்து ஏமாந்திருக்கலாம். அதற்கும் நமக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** சட்டக் கல்லூரி நூலகம் என்றால், அதில் அதிக நூல்கள் இருக்க வேண்டும். இந்தத் தொகையைப் பார்த்தால், எல்லா நூல்களும் இருக்கின்ற நூலகமாக இருக்குமா என்பது தெரியவில்லை. மேலும் அதிக நிதி உதவி செய்யப்படுமா? மேலும் மைக்ரோ பிலிம், போட்டோ காப்பியிங் போன்ற எல்லா வசதிகளுடன், குறிப்புகளுடன் கூடிய நூலகமாக அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதற்கான பதிலை நான் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். வழக்குரைஞர் மன்றம் விதித்துள்ள விதியை விட கூடுதலாக நிதியைத் தந்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல், தொடர்ந்து ஆண்டுதோறும் தர இருக்கிறோம். அவர்கள் தேவையான நூல்களை இந்தப் பணத்தைக் கொண்டு வாங்கிக்கொள்ளலாம். மற்ற வசதிகளைப் பொறுத்தவரையில், கல்லூரியினுடைய கட்டிடங்களைப் பொறுத்தும், மற்ற நிலைமைகளைப் பொறுத்தும் நாம் செய்ய இருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுபற்றி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது :—

ஏப்ரல்

16 — கூட்டம் இல்லை

17 — ஞாயிறு—விடுமுறை

18 மற்றும் 19 — கூட்டம் இல்லை

20 — தொழில்கள்—விவாதம் தொடர்ச்சி

21 — 1. பிற்பட்டோர் நலன்

2. கூடுதல் செலவு குறித்த விவர அறிக்கையின்மீது விவாதம்

3. நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவுகள்.

அன்று கேள்வி நேரம் இல்லை

22 மற்றும் 23 — அரசின் தீர்மானமும், சட்ட முன்வடிவுகளும்.

மேலவை வழக்கம்போல் காலை 9-30 மணிக்குக் கூடும்.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் அறிந்து கொள்ள விரும்புகிறேன். மேலவை சட்டவிதிகளின் அடிப்படையில் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தால் . . .

### (2) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** 1983-84 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஆறு உறுப்பினர் பதவிகளுக்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் :—

1. திரு. ஒ. எஸ். துரைசாமி
2. திரு. வி. வி. வி. ஆனந்தம்
3. திரு. நீலநாராயணன்
4. திருமதி தாரா செரியன்
5. திரு. ஜி. சுவாமிநாதன்
6. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி



நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது ஆறு, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஆறு உறுப்பினர்களும், அவைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர், என்று அறிவிக்கிறேன். அத்துடன், மேலவை விதி 173 (1)-ன்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாண்புமிகு தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள்.

1. திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து
2. திரு. செ. முத்துசாமி

மேலவைத் துணைத் தலைவர், அலுவல் முறையில், குழுவின் தலைவராவார்.

## 3. தகவல் கோரல்.

### கவன ஈர்ப்புத் தீர்மானம்பற்றி.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் அறிந்து கொள்ள விரும்புகிறேன். அவை விதிகளின் அடிப்படையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒரு உறுப்பினரால் கொடுக்கப்படுமானால், அதை ஏழு நாட்களுக்குள் சட்டமன்ற மேலவையில் வைத்து, அதற்குப் பதில் அளிக்க வேண்டுமென்று தெளிவாக இருக்கிறது. ஏற்கெனவே நான் அதுபற்றிக் கேட்டிருக்கிறேன். அப்போது இதுகுறித்து தலைவர் அவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால் சென்ற ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது கொடுக்கப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கூட இதுவரை எடுத்து பதில் அளிக்கவில்லை. கல்வித் துறையிலிருந்து இதுவரை பதில் வரவில்லை. நான் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானங்களின்மீது கவனமே இல்லாதிருக்கிற நிலை இருக்கிறதா? உறுப்பினர்களின் உரிமை பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையிலேயே இது குறித்து மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதுபற்றி உறுப்பினர் தலைவரை அறையில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**திரு. செ. முத்துசாமி:** விதிகளின் அடிப்படையில் ஏற்கெனவே தலைவருடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இதுபற்றி தலைவரை அறையிலே வந்து கேட்கலாம்.

**திரு. செ. முத்துசாமி:** ஏற்கெனவே தலைவரால் உறுதியளிக்கப்பட்டும், உத்தரவாதம் அளிக்கப்பட்டும் இதுவரை வராமல் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அறையில் வந்து சொல்லலாம்.

*திரு. செ. முத்துசாமி:* இவ்வளவு காலமாகியும் இது வராததால் எங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* பாதிக்கப்படுகிறது என்பதல்ல. அறையிலே வந்து சொல்லலாம.

### 4. கவன ஈர்ப்பு.

### (1) தூத்துக்குடியில் மீனவர்களுக்கும் போலீசாருக்கும் ஏற்பட்டுள்ள மோதலில் துப்பாக்கிச் சூடு குறித்து.

*திரு. பா. ரா. தாமஸ் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்):* துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தூத்துக்குடியில் மீனவர்களுக்கும் போலிசாருக்கும் ஏற்பட்டுள்ள மோதலில் துப்பாக்கிச் சூடு நிகழ்ந்துள்ள நிலையில் அப்பகுதிவாழ் பொது மக்களிடையே தோன்றியுள்ள பதட்டநிலை குறித்து".

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்):* துணைத் தலைவரவர்களே, அவைமுன் ஒரு விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

*திரு. பா. ரா. தாமஸ்:* துணைத் தலைவரவர்களே, பொதுவாக நம்முடைய மாநிலத்திலே கடற்கரைகளிலே வாழக்கூடிய மீனவப் பெருங்குடி மக்களுக்கும் காவல் துறையினருக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்படுகின்றன, அவர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது என்கிற ஒரு கருத்து உருவாகியிருக்கிறது. சில சமயங்களில் பலவீனமான சூழ்நிலை உருவாகி, அவர்களிடையே பகை உணர்வுகூட வெளிப்படுகிறது. இத்தகைய போக்கு தடுக்கப்பட்டாக வேண்டும். பொதுவாக மீனவர்களும் காவல் துறையினரும் நண்பர்கள்தான் என்கிற உணர்வை வளர்க்க வேண்டும், உருவாக்க வேண்டும். குடித்தார்கள் என்பதற்காக அவர்களை தூக்கிச் சென்று ஏன் காவல் நிலையத்தில் அடைக்க வேண்டும்? காவல் துறையினர் அவர்களை எச்சரித்து அனுப்பியிருக்கலாம் அல்லவா? அப்படி எச்சரித்து அனுப்பியிருந்தால், இம்மாதிரி சம்பவம் நடைபெற்று, துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்காது அல்லவா? இதுகுறித்து அரசின் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:* தூத்துக்குடியில் 30—1—1983 அன்று நடைபெற்ற சம்பவம் குறித்து இந்த கவன ஈர்ப்பு தீர்மானம் வந்துள்ளது. இதை அடிப்படையாக வைத்து பொதுவாக தமிழகம் முழுவதும்

@ 86-87 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மீனவர்களுக்கும் காவலர்களுக்கும் அப்படித்தான் நிலைமை என்பதுபோல் மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்ட அந்தக் கருத்து அவைக் குறிப்பிலே இருந்தால் அது நல்லதா? சில இடங்களிலே இம்மாதிரி மோதல்கள் தவிர்க்கப்படாமல் ஏற்படுவதைக்கூட தவிர்க்க வேண்டுமென்பதில்தான் அரசு அக்கறை காட்டுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்த வகையிலே வருங்காலத்தில் மீனவர்களுக்கும் காவல் துறையினருக்கும் மோதல்கள் ஏற்படாமல் தவிர்க்கப்படுவதற்கான யோசனைகளை அரசுக்குச் சொல்லலாம். அந்த வகையில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பு "மீனவ நண்பன்" என்கிற திரைப்படத்தில் நடித்து, அது வெளிவந்தது நமக்கெல்லாம் தெரியும். மேலும் வருங்காலத்தில் மீனவர்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே நல்ல சுமுகமான சூழ்நிலையை எப்படி உருவாக்குவது என்பதுபற்றி இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் காவல் துறையினரை 100 பேர் சூழ்ந்துகொண்டு தாக்குவது என்பது எவ்வளவு பெரிய விபரீதமான செயல். அப்படி இருந்தும்கூட, காவல் துறையினர் மிக எச்சரிக்கையாகத்தான் நடந்துள்ளார்கள். கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி அமைதியை நிலைநாட்டியிருக்கிறார்கள். ஆனாலும் கூட, இனிமேல் இப்படிக்கூட நடைபெறாமல் இருக்கும் வகையில் இந்த அரசு தக்க முயற்சிகளைச் செய்யலாம்.

*திரு. பா. ரா. தாமஸ்:* நம்முடைய பெரியோர்கள், தலைவர்கள் எல்லாம் அவ்வாறு விரோதப் போக்கை வளர்க்கக் காரணமாக இருப்பதாக நான் சொல்லவில்லை. ஆனால் காவல் துறையினருடைய அணுகுமுறையில் சற்று மாற்றம் இருந்தால், மீனவர்களும் காவல் துறையினரின் நண்பர்கள்தான் என்கிற நிலை உருவாகும். அத்தகைய ஒரு போக்கை உருவாக்க வேண்டும். குடிப்பதை எடுத்துக்கொண்டால், பொதுவாக கடற்கரையில் வாழ்கிற எல்லா மீனவர்களும் குடிக்கிறார்கள். அதற்காக அதை காவல் துறையினர் எவ்வளவு பெரிய குற்றமாகக் கருதி அவர்களைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அடைத்து வைத்து, அவர்களை மீட்க பெரிய கூட்டம் வரும் அளவுக்கு நிலைமைகள் இருக்கலாமா? அவர்கள்மீது வழக்கு போடுவதெல்லாம் தேவையா?

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :* காவல் நிலையத்துக்கு அவர்களை அழைத்துச் சென்றது, வழக்குப் பதிவு செய்தது எல்லாம் தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், நூற்றுக்கணக்கானவர்கள் காவல் துறையினரைத் தாக்கியிருக்கும் நிலையில், அவர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டு

யென்று உறுப்பினர் கேட்டால், அதே சலுகையை மற்றவர்களும் கேட்கின்ற நிலை வந்துவிடும். வன்முறையில் ஈடுபட்டவர்கள்மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தார்கள்.

(முற்பகல் 10-10)

அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தால் பரவாயில்லை. வேறு விதமான நடவடிக்கைகளில் இறங்கியதால்தான், இந்த நடவடிக்கையை போலீசார் எடுத்திருக்கிறார்கள். எனவே, காவல் துறையினர் ரொம்பவும் பொறுமையாக இருந்து அங்கே அமைதியை நிலை நாட்டியிருக்கிறார்கள்.

## (2) தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினால் மக்கள் படும் அவதிகள் குறித்து" மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் கண்ட விபரப்படி, 51 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 14 குழாய்கள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். திண்டிவனத்தைப் பொறுத்தவரையில், பிரச்சினை என்னவென்றால், அது மக்கள் தொகை அதிகமாக உள்ள நகரமாக இருக்கிறது. சென்னையிலிருந்து நாம் அந்த வழியாகப் போகும்போது, அங்கேயுள்ள பெண்கள் எல்லாம் தலையில் குடங்களை வைத்துக்கொண்டு தண்ணீருக்காகச் செல்லும் காட்சியைப் பார்க்கலாம். சென்னை போன்ற நகரங்களில் அலுவலகங்களில் வேலை

@ 302—303 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



பார்ப்பவர்கள், தொழிலாளிகள் அடிக்கடி திண்டிவனத்துக்கு வந்து போகிறார்கள். அது அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. தண்ணீருக்காக 2, 3 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அவ்வளவு மோசமான குடிநீர் தட்டுப்பாடு. குழாய்க் கிணறுகளை அமைத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மக்கள் நெருக்கடி அதிகமாக உள்ள இடங்களில் போதுமான அளவுக்குக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவில்லை. குறிப்பாக கிடங்கல் காலனி, காவேரிப்பாக்கம், நாகலாபுரம் பகுதிகளில் ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த இடங்களில் அதிகமான ஆழ் குழாய்க் கிணறுகளை அமைக்க அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தைப் பொறுத்தவரையில், மிகக் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் உள்ள ஊர்களில்கூட குடிநீர் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆனால் ஜனத்தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. அதைக் குறைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை சொன்னால், நன்றாக இருக்கும். கி.பி. 2011ல் அங்குள்ள மக்கள் தொகை ஒரு லட்சமாக உயரக்கூடும் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அதுதான் பயமாக இருக்கிறது. ஆனாலும் எந்தெந்தப் பகுதிகளில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறதோ அங்கே ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அந்தப் பகுதியில் குழாய்கள் அமைக்க இன்றே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உறுதி மொழிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல மக்கள் தொகை கி.பி. 2001-ல் ஒரு லட்சத்தைத் தாண்டும் என்று தெரிகிறது. நீண்ட காலத் திட்டம் அமைப்பது குறித்து அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். மிகவும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு காரணத்தால், இந்தத் திட்டம் ஸ்பெஷல் ஸ்கீம் என்ற அடிப்படையில் போர்க்கால நடவடிக்கை போல் எடுத்துக் கொள்ளப்படுமா? மேலும் நெய்வேலியில் அதிகமான தண்ணீர் இருப்பதாகவும், அதை சென்னைக்குக் கூட கொடுக்கத் தயாராக இருப்பதாகவும்

அதன் தலைவர் திரு. தாண்டன் அவர்கள் பகிரங்கமாகவே சொல்லியிருக்கிறார். நெய்வேலியிலிருந்து அப்படி தண்ணீர் வந்தால், வழியில் இருக்கும் திண்டிவனத்திற்கு அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தையும் பரிசிலனைக்கு ஏற்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நெய்வேலிக்குப் பக்கமாக இருக்கிறது. அப்படி இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான யோசனைகளையும் கருத்தில் எடுத்துக்கொண்டு, அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் பேசி, அவர்கள் முடியும் என்று சொன்னால், அந்தத் தண்ணீரை எவ்வளவு சீக்கிரம் கொண்டுவர முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆனாலும் பக்கத்தில் இருக்கக்கூடிய தண்ணீர் போதுமானதாக இருந்தால், அதையும் உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு தீவிரமாகப் பரிசிலித்து, நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அரசின் தீர்மானம்.

தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

* Thiru A. R. DAMODARAN: Hon. Deputy Chairman, Sir, I am grateful to you for allowing me to initiate the discussion on the Policy Note on Industry, particularly, Heavy Industry.

Sir, the Hon. Minister has given us in this year's Policy Note an important chapter about the location of Central Sector Projects. I deal with this deliberately in the first instance because, as already

@ 304–379ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



pointed out by the Hon. Minister, Central section projects at an investment of Rs. 200 crores or Rs. 300 crores would stimulate various ancillary and subsidiary industries and promote industrial development in the small-scale sector also. That is why, in almost all States of India, there is a clamour for more and more industries to be started in their respective States.

In this Note that has been given, however, I wish the Hon. Minister had also given us some information about the total investment in Central sector projects in the Southern region and more particularly in Tamil Nadu, because what has been outlined is only a brief note about the help and assistance given to some of these Central Sector projects in Tamil Nadu. Sir, we have been pleading for a long time for the establishment of a petro-chemical industry in Tamil Nadu. I think it was in 1967 when the D.M.K. Government came into existence that a plea was made that a petro-chemical complex should be established in Tamil Nadu because we have a refinery at Manali. Fifteen years have passed and we seem to have missed the bus as far as the petro-chemical concern is concerned. A naphtha cracker would cost us somewhere near Rs. 300 crores and the by-products that would come from cracking of naphtha could have been utilised as it has been done in Koyali. I do not know whether the Hon. Minister has had an opportunity to bisit the Koyali Petro-chemical complex but I would request him to visit this area to find out for himself the tremendous development that has taken place. Almost 2500 crores of rupees worth industries have been established in Gujarat.

Sir, since the data given in the Policy Note was insufficient, I referred to the Explanatory Note to the Budget Memorandum of the Government of India to find out how much of capital and how much of loan had been received by the Central Sector projects in Tamil Nadu during the year 1982-83. I do not know whether these figures will reflect fully the funds that have been invested, because it represents only the Central Government investment by way of capital and loan and does not reflect the finance given by the financial institutions and nationalised banks for such industries. In 1982-83), Rs. 2,160 csores have been given as capital and Rs. 1,647 crores as loan to public sector undertakings, excepting the financial institutions, in one year. That means that more than Rs. 3,700 crores have been given as capital and loan to Central Government undertakings. As far as financial institutions—all-

financial institutions are concerned, the total amount given as capital and loan is Rs. 656 crores. In Tamil Nadu we have about 9to 10 Central Sector industries and the advances given by the Government of India for expansion and new projects, etc. are as under:

(முற்பகல் 10-20.)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

Integral Coach Factory—Nil.

Hindustan Teleprinters—Rs. 80 lakhs as capital and Rs. 1.27 crores as loan.

Hindustan Photo Films—Rs. 2 crores as loan. I do not know whether this is for the expansion of the project at Uthagamandalam or whether it is for the expansion of project elsewhere.

B.H.E.L., Tiruchirappalli—The figures are not there. All India figures are Rs. 61 crores and I do not know whether any amount has been received by the B.H.E.L., Tiruchirappalli.

Madras Refineries—Rs. 8 crores as loan.

Madras Fertilisers—Nil.

Ordnance Factory, Tiruchirappalli—Nil.

Salem Steel—No information.

Boiler Auxiliaries—No information.

Out of this total figure of Rs. 3,663 crores that I mentioned Neyveli gets Rs. 129 crores and the total investment by way of capital in Tamil Nadu Central Sector industries is only Rs. 129.80 crores. Loan capital is Rs. 11.27 crores. This represents 6 per cent of the capital investment all-India-wise and 0.7 per cent of loan assistance all-India-wise. The reason why I mention these figures is that, if the Hon. Minister wants public support and public opinion to be built up, not only in Tamil Nadu but among all the States of India, we must have relevant figures to judge whether his claim of discrimination against Tamil Nadu is correct or not. In fact, it is unfortunate that today there is a communication-gap, not only between the State Government and the Central Government, but also between the State Government and the Members of Parliament who represent Tamil Nadu. I am not speaking with the





intention of finding fault with the Hon. Minister or with his Government. But, I only wish to state that industrial development in India is a subject that is considered by Parliament when the Demands for the Ministry of Industrial Development are taken up at Delhi. I wish that this Government, irrespective of political affiliation, will be able to establish lines of communication not only with the Government of India, who may not be very responsive in view of their commitments elsewhere, but also with the Members of Parliament. I would request the Hon. Minister to prepare detailed breifings every quarter on various aspects of industrial development—Central sector investments, the pleas made by the State Government, the responsibilities of the State Government, etc.—not with the intention of promoting Centre-State conflict, but with the real intention of acquainting our Members of Parliament with the difficulties that Tamil Nadu experiences with the Centre.

Sir, I hope I may not be misunderstood when I say that today in India we are suffering it is not only in Tamil Nadu but is all over India—from a lack of appreciation of the needs and aspirations of the State Governments, due to a very important factor which is the gap in language-communication. I should not be misunderstood when I say this. Fifteen years ago, our Members of Parliament were able to make a greater impression on the needs of the State because they were understood by the other Members of Parliament who assembled there. Today, when you go to Parliament, nobody understands anybody else because of the lack of a unifying link-language. People may express surprise at my speaking on such a matter in the discussion on the Policy note on Industries. But, unfortunately, all the debates that take place in these two Houses, perhaps even the answers given by the Hon. Minister are not translated and sent to places where they should be sent. At least important pronouncements should be sent to give the feeling to the Government of India that we are being sadly neglected. After all, the Hon. Minister Thiru Tiwari is going to read two daily papers of New Delhi which do not report anything about Tamil Nadu, except possibly a rape case that has been raised in the Assembly or some such law and order situation. They are not interested in referring to more concrete problems like the lack of industrial development and the Hindu papers would certainly not mention any such things. This is a difficulty that has to be overcome. I would only say, with due deference, that while we may give due importance and place to our own language in our own

State, we may realise that establishment of communication channels can only be done through the language of English. And that is only by the way, Sir.

I was referring to the fact that the Central Government had a great deal of responsibility in promoting the infra-structure for industrial development. One of our biggest handicaps is the lack of railway line development either in the broad gauge or in the metre gauge as far as the industrial development of Tamil Nadu is concerned. Somehow there is a weakness in our representation also regarding the development of railway line facilities. Tamil Nadu has been singularly unfortunate in having received as a bequest the metre gauge line which has hamperud industrial development to the maximum extent possible. I would plead that the Tamil Nadu Government, through their own State Planning Commission, should prepare a comprehensive plan for broad gauge line development, for doubling of the railway line between Madras and Madurai, even if it is metre gauge, and for having a proper railway network in this State which would be an important item for industrial development. So far as our telephone and telex services are concerned, I do not find any pronouncement by any State Minister expressing agony at the sadly deteriorating condition of the communication network. The telephone and telex system in Tamil Nadu is not only very poorly developed but is in an extraordinary disarray because today in Madras as well as in other places, we are not able to get anybody on the phone, unless we ring him up six or seven times. Perhaps, the Hon. Minister may realise that, even in Delhi, when the Seventh Non-Aligned Conference came, we had to establish a special communication network because we could not trust the Delhi network. I only make this plea to the Hon. Minister because, as Minister for Industrial Development, he will have to take care of this angle also. Nobody else will bother about this. These things are used by industrial consumers, members in business and members in trade. They are not of much concern to the weaker sections. Therefore, I would request him to take interest in the development of automatic telephone exchanges in every District headquarters and in the development of a more efficient communication network.

Sir, I would like to mention about our Madras Port also. Haldia has been developed. Bombay is being developed. A Naval Academy is going to be established in Cochin. But, Madras Port



has not been developed. It is for the Government of Tamil Nadu to find out what expansion proposals are necessary. It is for the Government of Tamil Nadu to insist upon the Cenral Government the development of the Madras Port because Madras Port is one of the historic ports and one of the three major Ports in India which can handle over 10 million tons. It requires a rapid modernisation and rejuvenation of the many out-dated facilities that exist in this Port.

Therefore, Sir, I entirely agree with the Hon. Minister that more Central sector projects are to be established in Tamil Nadu. Unfortunately, we have to build up a better case, as I said, through establishing a permanent Secretariat at Delhi, if necessary with high-level officers, and also by maintaining our contacts with the other non-officials, the Members of Parliament, etc., who may be able to exercise some degree of pressure on the powers that be.

Sir, as far as the State's responsibility is concerned, I recognise the difficulties of the Hon. the Minister for Industries. Industrial development in Tamil Nadu, with the best of intentions, with the crores of subsides, with the crores of sales tax loans, interest-free loans, etc., that the Government may give, will never reach the take-off stage unless we are able to cure the ills of our Power sector. You ask any industrialist, even any private industrialist, Sir. In reviewing the performances of the Hon. Minister's own industrial concerns, it will be found that heavy losses have been incurred by SPIC, by TANCEM and by the cement factories established in the public sector and also by the various joint sector industries which are well looked after by TIDCO. In

(முற்பகல் 10-30.)

all these concerns, 25 to 30 per cent of the production has been lost in 1982—83 because of our failures on the Power front. This is a long chapter in the history of Centre-State conflicts and we must express our deep concern at the lack of planning which has resulted in such a sorry state of affairs. I would plead—I do not know how far it will go—with the Hon. Minister that he should have a consultative council of Members of Parliament and request them—whether they belong to his own party, Congress (I) or the D.M.K.—to give their support for the industrial development of the State. I would appeal to my non-present friends of the D.M.K. that they should also offer their fullest co-operation because in the industrial development of Tamil Nadu they are also interested. Now I am glad that the very vocal spokesman of the D.M.K. is present. We

must request our Members of Parliament to take more interest in pressing for various infrastructural developmental needs of Tamil Nadu.

We compare Tamil Nadu with Gujarat. There, Sir, with due apologies to our own bureaucracy, the distinct feeling among the industrialists who have sought to establish industries in Gujarat—perhaps it is the tradition of Gujarat—is that the bureaucrats are businessmen and the businessmen are bureaucrats In other words, the bureaucrats in Gujarat are more interested in promoting industrial development and everybody has a word of praise for the flexible approach of Gujarat Industrial Development Corporation. I would only request that the attitute should also change amongst our own bureaucrats.

Thirumathi TARA CHERIAN: Apart from the attitude of the bureawcrats towards the businessmen and industries, would it have been possible because the women Governor gave much fillip to the industrialists in Gujarat?

Thiru A. R. DAMODARAN: It is a news to me. A lady was also Governor of Gujarat. Anyhow I was only mentioning that the approach of bureaucracy would require a change. It has undergone some basic change. But we in Tamil Nadu are extremely fond of rules and regulations and Government orders. This has been the tradition of Tamil Nadu from the 19th century. Even the Britishers said that we were very good clerks, then we were found to be very good Superintendents. and after Independence we were found to be very good Secretaries. Even in the Central Secretariat, many of the Secretaries are from the South. But a change is required. We require a developmental approach. I know that the Hon. Minister himself will not confess here. But, in his own Chambers, he would have torn his hair at the red-tapism that is involved in clearing projects in Tamil Nadu itself. While he has made legitimate complaints about the delays experienced in Delhi regarding clearances to Letters of Intent and Industrial Licences, here, in our own Secretariat, so many files are piling without being dealt with. I cannot give him the exact number of files because no Secretary will give me that information. I would request him to count the files on his own table and on somebodyele's table, where somebody ele's decision is required and to find out the number because delay in sanction of projects and delay in decisions is disastrous for industry in view of the inflationary potential that is building up in the



economy. A project that costs you Rs. 100 crores today will cost you Rs. 120 crores exactly one year later. It is important that decisions should be taken within the quickest possible time and I hope that the various procedures that have been outlined for sanction of sales tax loans, for sanction of various subsidies, etc. will be speeded up so that industries may be able to get various facilities in the quickest possible time.

Sir, I do not have time to deal with the various industries that have been promoted by the Tamil Nadu Industrial Development Corporation. But, I would certainly give a word of praise for the good work that they have been doing over the past year. I am sure that there has been some significant progress in the establishment of joint sector projects and in promotional efforts. I would particularly like to mention the results of SPIC where capacity utilisation has touched over 80 per cent. Perhaps, we should also pay a tribute because, nowadays, we do not pay tributes. But, a tribute has also to be paid to a former Finance Secretary who is now the Managing Director of SPIC. He has been largely responsible for the outstanding performance of this unit. I would only hope that he will continue to be there and that he will not be transferred to the Dairy Development Corporation or some such Department. This is happening too often in our industrial development cadre. You have to pick people who are interested in industrial development. We have been pleading for a long time that an industrial cadre should be built up. Probably, that may take years. But, at least within the existing cadre of the Indian Administrative Service, we have got very good officers who are interested in industrial development. I would request the Hon Minister to prepare a panel of such officers. Even if they have to roate them, let them be rotated within the industrial concerns themselves and let them not be posted to Departments like Agriculture, Co-operation and Rural Development because they would be destroying the cadre that they have built up. There are various other things to be looked after by the Government, like collection of loans and working as Revenue Collectors in Districts. They are also of a different class and they may be posted for such work. I would only wish that he should have different panels for different types of work. I hope the Hon. Minister will not mistake me and this is my genuine advice to him. I am an outsider to administration. After all, I have never been a Minister. I do not know how postings are made. I am only voicing the opinion of some of us who have watched the various postings and who feel that some degree of discretion could be used in posting officers to the posts for which they would be found suitable.

Then, what should we do so far as the industrial development in Tamil Nadu is concerned? The other day the Hon. Thiru K. A. Krishnaswami mentioned that I had referred in my budget speech to the absence of industrial culture on the part of the Government of Tamil Nadu. This was a very innocent statement and it was not intended to provoke the feeling that the Government of Tamil Nadu did not know anything about industrial development or anything like that. My only feeling is that we feel satisfied with stating our case in public meetings and in the Legislatures. We do not have lines of communication with the Central Government. As I said, the hon. Members of Parliament belonging to the Congress (I) and the D.M.K. outnumber the members of the A.I.A.D.M.K. and in regard to industrial development, the co-operation, assistance and help of both these parties is required because industrial development is not a matter which can be subject to political controversy. In Kerala they raise a united voice, whether they belong to the C.P.M. or a hundred other parties which exist in Kerala. In the same manner we should also raise a united voice in the matter of industrial development. This is what I meant when I said that there was loss of communication. I would request the Hon. Minister to have a proper secretariat in Delhi to take follow-up action on letters including industrial licence both in respect of private industrialists and in respect of our State Government. Incidentally may I also refer to the advice given by a very distinguished member—ex-Minister of the Tamil Nadu Cabinet and now a Member of the Union Cabinet? I do not know the context in which Thiru Venkataraman referred to it. But, he seems to have remarked, "It is no use your merely sending letters. You must also come up to Delhi and see us often." Of course, this advice is followed by private industrialists. They meet them, they discuss with them, they do whatever is necessary and they come back with Industrial Licences. But, in so far as State Governments are concerned, a different approach is required by the Government of India. I would request especially a gentleman of the calibre and stature of Thiru Venkataraman, who has himself been a Minister for Industries, to understand the Ministers of State Governments, with different political complexions, are not able to meet Ministers of the Central Government or even the Prime Minister. From the time they step into the airport at Delhi, they have to wait for four days. No Minister can waste his time. That is why I have said that while we may have a non-official for such things, we must have a permanent Secretariat in Delhi to pull through one proposals.



(முற்பகல் 10.40)

Sir, I would also request the Hon. Minister to carry out the promise which the Hon. the Chief Minister made three years ago. That promise was to have better liaison with the industrialists in our own State. There is no point in the Hon. Minister or the Hon. the Chief Minister addressing Chambers of Commerce once in six months and having a grand plenary session where all of us assemble for two hours and then disperse. I would like panels to be constituted by the Government of Tamil Nadu consisting of industrialists from that particular field of industry which the Government of Tamil Nadu feel can be started in Tamil Nadu. For example, in the case of drugs and pharmaceuticals, 85 to 90 per cent of the industry is located outside Tamil Nadu. There is a heavy concentration in the Thana part of Maharashtra. The other day the Rural Industries Minister mentioned that the production was somewhere near Rs. 36 crores as compared to Rs. 3600 crores all over India. The drugs and pharmaceuticals are synthetic and we do not require any extravagant raw materials. We have only one per cent of the total production and then we must have a panel for the drugs and pharmaceuticals industry consisting of those who are already in the field, including multi-nations. The hon. Member Thiru Nallasivan may say, "Drive out multinationals". We cannot do so because we are interested in industrial development. My request to the Hon. Minister is that he should not follow his advice in this matter. If we follow the hon. Member Thiru Nallasivan, who believes in the Marxist philosophy, we must first drive out multi-nations, then we must drive out the industrialists, then it will be the turn of the businessmen, then the big and the small farmers must go and ultimately everything will be State—owned. It is his philosophy and he is entitled to have it. I would request the Hon. Minister not to follow his advice.

Again, in the Chemicals industry, we have not developed our organic and inorganic chemical industry or our alcohol-based industry. The route for the petro-chemical industry can be either through petroleum-based naptha crackers or it can be through alcohol-based industries. In Tamil Nadu we have plenty of alcohol. There is plenty of alcohol to drink and not for industry. In view of the fact that we have the largest number of sugar factories and the capability of producing industrial alcohol to the maximum extent possible, if we are really interested in alcohol-based industries, it is necessary that a panel should be set up for alcohol-

based industries and that 20 or 25 per cent of the alcohol that is produced should be statutorily earmarked for alcohol-based industries. In the same way there should be a panel for automobile ancillaries. There is already a panel for electronics industry. We must have a panel for vegetable oil industry. When we are the largest producers of ground-nut oil, 90 per cent of our oil has to go to other States for manufacture of vanaspathi or hydrogenated vegetable oil. The only factory that we have is the one near Villupuram which is limping. It is not even well-established. I would like to state that the value added in hydrogenation of vegetable oils is so much that it would be worth while for TIDCO or for joint sector industries to consider setting up two or three hydrogenation plants so that we could manufacture our own brand of hydrogenated vegetable oils. The sophisticated machine-tool industry is not developed at all in Tamil Nadu. Because we are poor in mineral resources, we have to select those industries where raw material is not an inhibiting factor. I would plead with the Hon. Minister to set up panels which would meet once in three months. The Hon. Minister could preside over those panels. In those panels, he could have officials of the Industries Department including such persons as the Chairman of the TIDCO so that a real fillip could be given for the establishment of industries in Tamil Nadu.

Sir, I would only end by requesting that, in the formulation of power rates, one factor will have to be borne in mind because industrial development is closely linked up with power rates and the existing tariffs. I realise that the Tamil Nadu Electricity Board is in serious trouble because there are reports that we have not even paid Rs. 56 crores of dues to the Neyveli Lignite Corporation. While I realise the situation about the availability of funds, I would request that, in fixing power rates, you should be guided by the power rates that exist in Kerala, Karnataka and Andhra Pradesh. One word of warning, Sir. Andhra Pradesh is going to be power-surplus for the next seven or eight years. With the implementation of the Ramagundam Project which would generate 2,200 MW, Andhra Pradesh will be literally overflowing with power Determined attempts are being made to attract power-intensive as well as other industries to Andhra Pradesh and power is the most attractive factor in the establishment of industries. I would only like to sound a note of caution that, if you propose revising your power-rates, you have to remember one thing. If you want certain industries to be established in Tamil Nadu and if you want the expansion of industries in Tamil Nadu, you will have to bear in mind the existing power rates surrounding you and, if necessary, an element of subsidy in the tariff is unavoidable. How you load it on to other people is a matter which only a Tariff Board can work out. But, a blind, across-board revision of the power tariff will not only inhibit the growth of industry and the expansion of industry in Tamil Nadu, but is likely to prevent the establishment of new industries



Sir, in the utilisation of urban land, 2½ years ago a Bill containing certain provisions for relaxing certain rules in the utilisation of urban land by industries was referred to the Select Committee. I do not know why for 2½ years this Bill has been hybernating in the shelves of the Secretariat or in the shelves of the Legislature Secretariat. Industrialists are struggling to get permission to start either subsidiaries or ancillaries in their own land situated in the cities of Madras, Madurai and other areas which have been classified as urban areas. I would request the Hon. the Minister for Industries, because this is a matter which concerns him directly, to see that this Select Committee produces its report at the earliest possible moment. I have also a hope that he will be able to impress upon the Hon. the Minister for Revenue that relaxation is necessary in the utilisation of surplus urban land for the starting of new, ancillary or subsidiary industry without any restrictions. This should be done as quickly as possible.

I have already spoken about the responsiveness of the bureaucrats. There is no point in blaming only the Hon. Minister or his Cabinet or the Central Government for every Government Order or rule. I agree that there is certainly need for rules and regulations. In this connection, I must say that the officials in the Local Administration Department are positively obstructive. They have no idea of giving sanction in time. When we go to them with a plan for a particular building for an industry, they are interested in raising only objections. That is the difference in approach between Tamil Nadu officials at the lower levels in Panchayat and Municipal administration and the officials in more progressive States like Gujarat. There they want us to start the industry. If a factory building should be 11' 2" in height, in Tamil Nadu, the authorities will return the plans if there is a deficiency of 1|2 an inch and ask us to submit fresh plans. In Gujarat, in a similar case, they approve the plans, asking us to correct the plans providing for the correct height. I am only pointing out this instance to support my plea

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 15

that a total radical re-orientation of outlook is required at the lower levels. At the Secretariat level, at the higher levels, at your Company level, they realise it. But everybody is helpless. I only hope that the Hon. Minister would take some interest in that direction and impress upon every subordinate official interested or concerned, whether it is at the District Industries Centre or at the level of the Panchayats and the Municipalities, that, if we want industrial development in Tamil Nadu, if we want to promote employment opportunities, if we want to improve our revenues by way of sales tax, excise duties, etc., it is imperative that the lower subordinates in the bureaucracy should have a completely different approach to the problems of entrepreneurs, when they approach them either for financial help, or for subsidy help, or for power, or for land, or for any other facility which the State Government is entitled to give.

Thank you, Sir.

(முற்பகல் 10-50)

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிற் கொள்கைக் குறிப்பின்மீது, இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்துப் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ச்சி கொள்கிறேன். பொதுவாக தமிழ் நாடு அரசு தற்போது தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதற்காக எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் ஓரளவுக்குப் பாராட்டக்கூடிய அளவுக்கு இருக்கின்றன. ஆனால் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு பெரிய பெரிய தொழில்கள் பல மாநிலங்களிலே வளர்ந்து வரக்கூடிய நிலையிலே, தமிழ் நாட்டின் நிலையைப் பார்க்கும்போது, மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. தென் மாநிலங்களைப் பொறுத்தவரையில், கர்நாடக மாநிலம், தமிழ் நாட்டைவிட தொழில் வளத்தில் பின் தங்கியிருந்தது. இப்போது மிக முன்னேறிவிட்டது. கேரள மாநிலத்தைப் பொறுத்தவரையில், சொல்லவே தேவையில்லை. அரபு நாடுகளிலிருந்து அங்கே பணத்தைக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரேபியாவின் பல பாகங்களிலிருந்தும் செல்லும் மணி ஆர்டர்கள் அந்த மாநிலத்தில் செல்வ வளத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆந்திராவில் இயற்கை வளம் தமிழ் நாட்டைவிட மிகுந்திருக்கிறது. மினரல் டிபாசிட் அதிகமாக இருப்பதால், அந்த மாநிலம் மிக உயர்ந்து விளங்குகிறது. பாண்டிச்சேரியைப் பொறுத்த



1983 ஏப்ரல் 15] [திரு. செ. முத்துசாமி]

சொல்லத் தேவையில்லை. மத்திய அரசு தயவிலே இருக்கும் சின்ன மாநிலம் அது. தமிழ் நாட்டிலேதான் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இயற்கையாக நீர் வளம் குறைந்துள்ள சூழ்நிலையில், அதே நேரத்தில் உயர்ந்த உழைப்பு செய்யக்கூடிய மக்களைக் கொண்டிருக்கும் நிலைமையிலே, தொழில் வளர்ச்சியை மிகச் சரியாகத் திட்டமிட்டு இன்னும் பல தொழில்களை வளர்க்கும் வாய்ப்பு இருந்தும், அதைச் செய்யாமல் இருக்கிறோம். தமிழ் நாடு தென் மாநிலங்களில் பல விஷயங்களில் பின்னால் இருக்கிறதென்பதை அறிய முடிகிறது. • நான் ஒரு புள்ளிவிவரத்தை இந்த அறிக்கையில் பார்த்தேன். 1967க்கு முன்னால் மத்திய அரசாங்கம் எத்தனையோ பெரிய தொழில்களை இங்கே அமைத்திருக்கிறது என்பதையும், 1967-க்குப் பின்னால் மத்திய அரசு தொழில்கள் வராமல், இரண்டு தொழில்களே, கண்போல, வந்திருப்பதோடு, அவை குறைந்த முதலீட்டில் இருப்பதைப் பார்த்து, அதிர்ச்சியுற்றேன். தெற்கு தேய்கிறது, வடக்கு வாழ்கிறது என்று எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருந்தபோது, இங்கே தொழிற்சாலைகள் வந்தன. ஆனால் அதே கோரிக்கையை வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மத்திய அரசிடத்திலே இருந்து வர வேண்டிய தொழிற்சாலைகள் நம் மாநிலத்திற்கு வரவில்லை என்றால், அந்தக் கோரிக்கையை நாம் விட்டு விட்டோமா? தெற்கு தேய்கிறது என்ற பிரச்சினையை எழுப்பாமல் விட்டு விட்டோமா? அதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். எதிர்க் கட்சியாக இருந்து பிரச்சினையை எழுப்பியபோது வந்த தொழில்கள், ஆட்சிப் பொறுப்புக்கு வந்து உட்கார்ந்த பிறகு வரவில்லை என்று சொன்னால், அதை நாம் மறந்து விட்டோமா? இதைத்தான் நான் எழுப்ப விரும்புகிறேன். அதைத் தயவு செய்து சிந்திக்க வேண்டும். 2,300 கோடி ரூபாயில் இராமகுண்டத்தில் அனல் மின் நிலையம்; 2,500 கோடி ரூபாயில் குஜராத்தில் அனல் மின் நிலையம்; 2,700 கோடி ரூபாயில் வங்கத்தில் அனல் மின் நிலையம்; மத்தியப் பிரதேசத்தில் 4,500 கோடி ரூபாயில் அனல் மின் நிலையம். இவைகளுக்குத் தேவையான பாய்லர்கள் திருச்சி பாய்லர் தொழிற்சாலையில் செய்து அனுப்பப்படுகின்றன. இந்த நிலையில் தமிழ் நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறதென்றால், தமிழ் மக்களுக்காக ஒரு இயக்கத்தை நடத்தி, மத்திய அரசின் கவனத்தை ஈர்த்திருக்கிறோமா என்பதைத் தமிழ் மகன் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆட்சிப் பொறுப்பிலே வந்து உட்கார்ந்துள்ள நாம் ஏமாற்றம் பெறுவது எந்தவிதத்தில் நியாயமாக இருக்க முடியும்? எதிர்க் கட்சியாக இருந்தபோது கிடைத்தது. இன்றைக்கு இல்லாமல் இருக்கும் நிலையில், ஏமாற்றப்பட்டுள்ள சூழ்நிலையில் அல்லது அதை ஏற்றுக்கொண்டிருக்கிற சூழ்நிலையில், மத்திய அரசு தர மறுக்கிறது என்றால், அதை மாநில அரசு எப்படி ஒப்புக்

கொண்டு ஆட்சி செய்கிறது என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். எல்லோரும் கட்சி வேறுபாடு இன்றி, நியாயத்தைப் பெற முயல வேண்டும். மத்திய அரசுக்கு ஒரு யோசனை சொல்ல வேண்டும்.

இன்றைக்கு கேரள மாநிலத்தில் மேற்கு மலைச்சாரலிலே ஓடும் நதி நீரிலிருந்து நீர் மின்சாரம் தயாரிக்க வசதிகள் இருந்தும், அதைச் செய்யாமல் வீணே போய்க் கொண்டிருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். நீர் மின்சாரம் தான் குறைந்த செலவில் தயாரிப்பதாகும். கேரளாவில் மேற்கு மலைப் பகுதியில் உள்ள ஆறுகளில் ஓடும் நீரிலிருந்து நீர் மின்சாரத்தைத் தயாரித்தால், தென் மாநிலங்களில் உள்ள ரயில்வேயை அந்த மின்சாரத்தில் முழுமையாக ஓட்ட முடியும். அதாவது மின்சார ரயில் ஓட்டலாம். அந்த அளவுக்குத் தயாரிக்க வாய்ப்பு இருக்கிறது. மாநிலப் பிரச்சினைகள், மத்தியப் பிரச்சினைகள் என்று எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, மத்திய அரசு இதை எடுத்துக்கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறையுள்ள கடுமையான சூழ்நிலையில், இதைப்பற்றி மத்திய அரசும் மாநில அரசுகளும் சிந்திக்க வேண்டுமென்று என்னுடைய ஆலோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் டெல்லிக்குச் சென்றிருந்தேன். வங்க மாநிலத்தில் 'இன்பர்மேஷன் சென்டர்'க்குச் சென்று பார்த்தேன். மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் திரு. ஜோதி பாசு அவர்கள், 'மத்திய அரசிடமிருந்து எவ்வளவு கொடுக்கப்பட்டது, என்னென்ன நியாயமான வசதிகள் இருக்கின்றன, அவர்களிடமிருந்து என்னென்ன பதில்கள் வந்தன, எதற்கு மத்திய அரசு கொடுக்க மறுக்கிறது?' என்று தைரியமாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். இங்கே கடிதம் எழுதினோம், எழுதினோம் என்று சொல்லுகிறார்கள். கடிதம் எழுதி, அவர்கள் தரவில்லை என்றால், மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். என்ன கடிதம் எழுதினோம், என்ன வசதிகள் செய்திருக்கிறார்கள், எத்தனை ப்ரபோசல் போட்டிருக்கிறோம், எத்தனை பிராஜக்டுகள் இருக்கின்றன, அவர்கள் எதனை நிராகரித்தார்கள், அப்படி நிராகரிக்க அவர்களுக்கு என்ன உரிமை—இதெல்லாம் ஆராய்ச்சிக்குரிய பிரச்சினை அல்லவா? மாநில அரசு மிகத் தெளிவாக தன்னுடைய ஆயுதத்தை, வலிமையைப் பயன்படுத்தி இருக்க வேண்டாமா?

இன்றைக்கு அரிசிப் பிரச்சினையை எழுப்புகிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். கட்சியை மொபிலைஸ் செய்கிறார்கள். பாராட்டுகிறேன். தொழில் வளத்தைப் பொறுத்தவரையில், 1967-க்குப் பின்னால் இரண்டு தொழிற்சாலை



கள்தான். அதே நேரத்தில் மற்ற மாநிலங்கள் உயர்ந்து விளங்குகின்றன. அப்படியானால் தமிழகத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? தெளிவாக மக்களைத் திரட்டி, கட்சி வேறுபாடு இல்லாமல், எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து, தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டாமா? மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். வி. அவர்களிடம் ஒரு நாள் மனக் குறை பட்டுக்கொண்டேன். இவ்வளவு பெரிய பொறுப்பிலே இருக்கிறீர்களே, தமிழகத்தில் தொழிலமைச்சராக இருந்து எத்தனையோ தொழில்களை தீர்மானித்தீர்களே, இப்போது ஒன்றும் தரவில்லையே? என்று கேட்டேன். 'முத்துசாமி, நானே ப்ரபோசல் போட்டு, நானே சேங்ஷன் செய்ய முடியுமா? மாநில அரசு சரியாகத் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டு வந்து, இன்னின்ன பீசிபிலிட்டிஸ் இருக்கின்றன என்று சொல்லிக் கேட்ட பிறகு, இங்கே உட்கார்ந்து நான் பணியாற்றும்போது, செய்ய முடியும். தொழில் அமைச்சரவர்கள் நல்ல இளைஞர்தான், என்னிடம் வந்தார்கள், மிக நல்லவர்' என்று சொன்னார்கள். ஆனால், ப்ரபோசல்ஸ் சரியாக வரட்டும் என்று சொல்லுகிறார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இங்கே அனுப்பியதாகச் சொல்லுகிறார்கள். அங்கே பெரிய தொழிற்சாலைகளுக்குப் ப்ரபோசல்ஸ் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். இதில் இடைவெளி இருக்கிறது. அந்த இடைவெளி எப்படி ஏற்படுகிறது என்பது தெரியவில்லை. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், மத்திய கேபினேட்டில் செல்வாக்கு பெற்றிருக்கிறார்கள். இருந்தும் தமிழ் நாட்டுக்குத் தொழில்கள் வரவில்லை. எங்கோ இடைவெளி இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அமைச்சரவர்களிடத்தில் பேசும்போது இந்தப் பிரச்சினையை மட்டும்தான் பேசினாரா? எந்தத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்றாலும், அதற்கான அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறதே, அந்த அதிகாரத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்ற அந்த யோசனையையும் தெரிவித்தாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** இருக்கக்கூடிய அதிகாரத்தில் ஏன் செய்யவில்லை என்பது நான் கேட்ட கேள்வி. அதிகாரங்களைத் திரும்பப் பெறுவது அல்லது மாற்ற முனைவது என்பது மக்கள் இயக்கத்தை நடத்திச் செய்ய வேண்டிய ஒன்று. மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதில் யாருக்கும் வேறுபாடு இருக்க முடியாது. இன்றைக்கு மாநில அரசுக்குள்ள நடைமுறையில், முனிசிபாலிட்டிகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்துச் செய்வது என்பது வேறு, முனிசிபாலிட்டி கேட்பதை மாநில அரசு கொடுக்கவில்லை என்றால்

சண்டை போட்டுத்தான் ஆக வேண்டும். அதிகாரத்தை மாற்றுவது என்பது வேறு. அதிகாரம் இருக்கும்போது, ஏன் கொடுக்க மறுக்கிறார்கள் என்பது வேறு. அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இன்றைக்குக் கேட்க வேண்டியது ஆட்சி. அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கோரிக்கை வைக்க வேண்டிய பிரச்சினை இது. தமிழகத்திற்குத் தர வேண்டியதை ஏன் தராமல் இருக்கிறார்கள் என்ற பிரச்சினையைத் தான் நான் எழுப்பினேன்.

சிமென்ட் உற்பத்தியைப் பொறுத்தவரையில், ஒரு புள்ளி விவரத்தை ஒரு அறிக்கையில் பார்த்தேன். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், 273 மில்லியன் டன்கள் டிபாசிட்ஸ்—லைம் ஸ்டோன்—இருக்கின்றன. ஆந்திராவைப் பொறுத்தவரையில், 3,256 மில்லியன் டன்கள் டிபாசிட்டுகள் இருக்கின்றன. கர்நாடகாவைப் பொறுத்தவரையில், 3,500 மில்லியன் டன்கள் டிபாசிட்டுகள் இருக்கின்றன. தமிழகத்தில் குறைந்த அளவுக்கு இருந்தும், தொழிற்சாலைகளை அமைத்து, சிமென்டை உற்பத்தி செய்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

மத்திய அரசு மிகச் சரியான கொள்கைகளை மாநிலங்களுக்கு வகுத்துத் தந்திருக்குமானால், ஆந்திர மாநிலத்திலேயும், கர்நாடக மாநிலத்திலேயும் இந்தியாவினுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு பல நூறு ஆண்டுகளுக்குத் தேவையான சிமென்டை உற்பத்தி செய்திருக்க முடியும். இன்றைக்கு கொரியாவிலிருந்து சிமென்டை வாங்குகின்ற இழிநிலை நமக்கு ஏற்பட்டிருக்காது.

நான் ஒரு முறை பெங்களூருக்கு, மினரல்ஸ் சைட்டுக்குச் சென்றிருந்தபோது கொடுத்த புள்ளிவிவரப்படி. தமிழ் நாட்டிலே, திருநெல்வேலியிலே, கூடங்குளத்திலே கிடைக்கிற சிமென்ட் தான் ஹை கிரேட் வொரைட்டி, சிமென்ட் லைமஸ்டோன் என்று சொன்னார்கள். ஆனால் தமிழ் நாட்டிலே கூடங்குளத்திலே இருக்கிற இந்த சிமென்ட் தொழிற்சாலையிலே இருக்கக்கூடிய இருப்புப் பற்றிய விபரம் அறிக்கையிலே கொடுக்கப்படவில்லை. இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.





குழிவியம்பாறை பகுதியிலே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த இருப்பது குறித்து உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். அது ஒரு வறண்ட பிரதேசம். இதனால் அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதனை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இனியும் தண்ணீருக்காக சண்டை போட்டுக் கொண்டிருப்பதில் பலனில்லை. தென் மாநில முதல்வர்களின் கவுன்சில் அமைத்தாகி விட்டது. ஆனால் தென் மாநில முதல்வர்கள் கவுன்சில் அமைய காரணமாக இருந்தவர் அடுத்த பயிர் பயிரிட வேண்டாம் என்று அட்வைஸ் பண்ணுகிறார். நாம் தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறோம். ஆனால் அவர் 'இரண்டாம் போகம் பயிரிடாதே' என்று சொல்கிறார். இந்நிலையில் ஒற்றுமையைப் பற்றி நாம் நிச்சயமாகப் பேச முடியாது. காவிரியில் தண்ணீரைத் தடுத்துக் கொண்டிருக்கிற நிலையை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் நாம் காவிரித் தண்ணீரை நம்பிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. தண்ணீர் கிடைக்காத பிரதேசத்தில் நாம் என்னென்ன தொழில்களை வளர்க்க முடியும், என்னென்ன தொழில்கள் வளர்வதற்கான வாய்ப்பும் வசதியும் இருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்கான முயற்சிகளில் நம்முடைய அரசு இன்னும் அதிகமாகத் தீவிரம் காட்ட வேண்டும். நம்முடைய மாநிலத்தினுடைய தொழில் துறையைப் பொறுத்தவரையில், ஒரு ஸ்டடி என்கிற முறையில் எங்கெங்கு என்னென்ன வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கின்றன என்பதைப்பற்றி மிக நல்ல முறையிலே, தெளிவான முறையிலே சர்வே செய்யப்பட வேண்டும்.

அடுத்து, கெமிக்கல்சைப் பொறுத்த அளவிலே, பார்மசூட்டிக்கல்சைப் பொறுத்த அளவிலே, மருந்துகள், அமிலங்கள் போன்றவை எல்லாம் பம்பாயைச் சுற்றியே தயாரிக்கப்படுகின்றன. அங்கேதான் அதிகமாக இத்தகைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்திலேயும் அதற்கான வாய்ப்புகளும், வசதிகளும் இருந்தும், அத்தகைய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு அனுமதி வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்க பயப்படுகிறோம். இத்தகைய போக்கு சரியல்ல. இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே மிகச் சிறந்த மருந்துத் தொழிற்சாலைகள் அமைவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் இருக்கின்றபடியால், பல மருந்துத் தொழிற்சாலைகளை அமைக்க இந்த அரசு தீவிரமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். அதற்கான முயற்சிகள் வெற்றியும் அடைய வேண்டுமென்று விரும்புகிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1983 ஏப்ரல் 15

அடுத்து, எரி சாராயத்தைப் பொறுத்தவரையில், எரி சாராயத் தொழிற்சாலை சம்பந்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பாலக்கோடு சுகர் பேக்டரிக்கு எஸ்டிமேட் கமிட்டியுடன் சென்றிருந்தேன். அப்போது ஓர் அறிக்கையைத் தந்தார்கள். பாலக்கோடு சர்க்கரை ஆலையில் எரிசாராய வடி சாராய ஆலையைக் கட்டுவதற்கு, உண்டாக்குவதற்கு மற்ற இடத்தில் தொழிலை அமைப்பதைவிட, அங்கேயே தொழிலை அமைக்க 30 சத விகிதம் கட்டுமானத்தினுடைய, தொழிலினுடைய 'காஸ்ட்' குறையும் என்று சொல்லி அரசாங்கத்திற்கு ஒரு ரிப்போர்ட்டையும் அனுப்பினார்கள். ஆனால் அரசாங்கம் அதற்கு அனுமதிக்கவில்லை. அதற்குப் பின்னால் தனியாருக்கு லைசன்ஸ் வழங்கியிருக்கிறார்கள். அது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அதற்கான அனுமதி கொடுத்திருந்தால், தர்மபுரி மாவட்டத்திலுள்ள பலருக்கு அதிகமான வேலைவாய்ப்பு கிடைத்திருக்கும். கோவாப்பரேட்டிவ் துறைக்கு லைசன்ஸ் கொடுக்காததற்கான காரணம் என்ன? ஏன் என்று எனக்குப் புரியவில்லை. வடிகால் சாராய ஆலையைப் பொறுத்தவரையில், ஏன் அதைத் தயாரிக்க தனியாருக்கு லைசன்ஸ் கொடுக்கிறார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. நம்முடைய சர்க்கரை ஆலைகளிலிருந்துதான் மொலாசிஸ் அங்கே செல்கிறது. மீண்டும், இனிமேல் இம்மாதிரி தனிப்பட்டவர்களுக்கு வடிசாராய ஆலைக்கான லைசன்ஸ் தரக்கூடாது. அதைக் கொள்கையாக அரசு அறிவிக்க வேண்டும். அதில் ஏன் அரசுக்கு அவ்வளவு அக்கறை? நம்முடைய கோவாப்பரேட்டிவ் மூவ்மென்டை உற்சாகப்படுத்தி, அதன் மூலம் வடிசாராயத்தை உற்பத்தி செய்து இந்த மூவ்மென்டை இன்னும் முன்னேற்ற வேண்டும். அது இல்லாமல் ஏன் தனிப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும்? பாலக்கோட்டில் அதற்கான பெசிலிட்டீஸ், வசதிகள் அத்தனையும் இருக்கிற காரணத்தால், அங்கே வடிசாராயத்தை வடிக்க உடனடியாக அனுமதியை வழங்கி அந்தத் தொழிலைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காகிதத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், நல்ல ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். அதற்காக அரசின் முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். அதுபோல் இன்னும் பல தொழில்களை தமிழ் நாட்டின் நலன் கருதி இந்த அரசு அமைக்க முன்வர வேண்டும். அதற்கு வெளி நாட்டு உதவிகளையோ, மற்ற உதவிகளையோ பெற்றாவது செயல்படுத்த வேண்டும். இன்னும் அதிகமான முயற்சிகளை அதற்காக எடுக்க வேண்டும்.

அதே சமயத்தில் மத்திய அரசிடம் சென்று பிரச்சினைகளை எடுத்துக்கூறி, தொழில் உரிமம் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்த வேண்டும். மத்திய அரசு கொடுக்கத் தவறுமேயானால், எங்களுக்கு இப்படி இப்படி மத்திய



1983 ஏப்ரல் 15] [திரு. செ. முத்துசாமி]

அரசு கொடுக்கத் தவறியிருக்கிறது என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த அரசு உண்மையிலேயே அதற்கான முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறதா இல்லையா என்பது எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரிவதில்லையே. அதுபற்றி இந்த அரசு ஏன் அறிக்கை வைப்பதில்லை என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். "எங்களை இந்த அடிப்படையில் மத்திய அரசு ஏமாற்றிக்கொண்டிருக்கிறது, அல்லது உரிமம் கொடுக்க மறுக்கிறது, அல்லது நாங்கள் இந்த இந்த விஷயங்களில் ஏமாந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த அரசு அறிக்கையை வைக்காமல் நாங்கள் எப்படித் தெரிந்துகொள்வது? இன்னின்ன தொழில்களுக்கு இங்கு இன்னின்ன வசதிகள் இருக்கின்றன என்று நாங்கள் இன்னின்ன தேதிகளில் மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருந்தோம், அவர்கள் இன்னின்ன காரணத்தைச் சொல்லி இன்னின்ன தேதிகளில் மறுத்திருக்கிறார்கள் அல்லது அவர்கள் கிடங்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் போன்ற விவரங்களை அவசியம் அரசு தர வேண்டும். அப்படியானால் தான் நம்முடைய தமிழ் நாட்டிலுள்ள அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களும் அதைப்பற்றி அறிவதற்கான வாய்ப்பு ஏற்படும். எங்களுக்கும் அதாவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதைப் பற்றித் தெரிவதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதோடு மாத்திரமல்லாமல் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம், அங்கு செல்லும்போது எல்லாம் இந்தப் பிரச்சினைகள் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்துவோம். இது என்ன இரகசியமா? பட்ஜெட் இரகசியமா? தொழில் அடிப்படை தானே? இதை எங்களுக்கு அரசு தெரியப்படுத்தக்கூடாதா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை தைரியத்தோடு செய்ய வேண்டும். திரு. ஜோதிபாசு அவர்களைப் பொறுத்தவரையில், பெட்ரோ கெமிக்கல்ஸ் அமைக்க மத்திய அரசு அனுமதி மறுப்பதை உடனே மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார். அதே போல நம்முடைய அரசும் துணிந்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் இந்த அரசு எங்களைச் சரியான முறையில் வழி நடத்துகிறது என்று பொருள். எங்களை நல்லபடி இந்த அரசு எண்ணி வைக்கிறது என்று பொருள். எங்களுக்கு விவரத்தைச் சொல்வதன் மூலம், உண்மை நிலைமையைச் சொல்வதன் மூலம், நாங்களும் இந்த அரசாங்கத்தினுடைய மெஷினரியில் ஓர் அங்கம் என்பதை அரசு ஏற்றிருக்கிறது என்று பொருள். இப்போது எங்களுக்கு எதுவுமே தெரிவதில்லை. அப்படி அரசு தெரிவித்தால், வாய்ப்பு வரும்போதெல்லாம், தேவைப்படும்போதெல்லாம் நாங்களும் இதுபற்றிக் கேட்போம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி "இவர்கள் கேட்கிறார்களா இல்லையா? கேட்கிறார்கள் என்றால் எதை எதைக் கேட்கிறார்கள்?" என்று கேட்டார். அவர் சொன்னதுபோல், அந்த விவரங்கள் எல்லாம் எங்களுக்குத் தரப்பட்டால்தானே, இத்தன்

ஆண்டுகளாக அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், இன்னின்னவற்றிற்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில், உரிமம் தரவில்லை என்று நாங்கள் கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

இன்றைக்கு தமிழகத்தில் மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக உற்பத்தியை அதிகரிக்க முயற்சி செய்து பார்க்கிறார்கள். மத்திய அரசோடு இதுபற்றித் தொடர்புகொண்டு முயற்சி செய்து பார்க்கிறார்கள், ஆனாலும் முடியவில்லை. என்னைப் பொறுத்தவரையில், மத்திய அரசோடு சண்டை போட்டாவது, ஒரு மாபெரும் இயக்கத்தை நடத்திக் காட்டியாவது ஆந்திராவில் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் எப்படி உற்பத்தி செய்கிறார்களோ அதேபோல குறைந்த அளவு தமிழகத்திலும் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பையும், வசதியையும், அனுமதியையும் மத்திய அரசு அளிக்கும்வரை மத்திய அரசோடு நம்முடைய அரசு இந்த விஷயத்திலே முனைப்போடு இருக்க வேண்டும், உரிமைப் போர் செய்ய வேண்டும், அதற்கு எல்லா மக்களும் ஒன்று திரண்டு ஆதரவு தர வேண்டும். அந்த வகையில் தமிழகத்தை வாழ வைக்க வேண்டும், வளப்படுத்த வேண்டும். அதற்கு அத்தனை பேரும் ஒன்றுபட வேண்டும். இதற்காக முன் நின்று இந்த இயக்கத்தை நடத்துகின்ற பொறுப்பை என்னிடம் தந்தால் கூட, நிச்சயமாக இந்த அரசுக்கு உறுதுணையாக இருப்பேன். பொதுவாக மக்கள் இயக்கத்துக்கு முன் இந்தப் பிரச்சினையை வைக்க வேண்டும். வடக்கு வளர்கிறது, தெற்கு தேய்கிறது என்று இருந்தது போய் சுத்தமாக இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்து விட்டதால், தேய்ந்துவிட்டது என்பதைப் பார்க்கும்போது, துடிக்கிறேன், துடிக்கிறேன். அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, வெற்றிபெற்ற வாசகம், எழுதிய வாசகம், இன்றைக்கு அதே கட்சி ஆளும் கட்சியாக வந்ததற்குப் பின்னாலே தோற்றுப் போய்விட்டது, தோல்வியடைந்திருக்கிறார்கள். இதை உணருங்கள், உணருங்கள், இதற்காக இந்த இயக்கத்தை ஏற்படுத்துங்கள், ஆட்சிப் பொறுப்புக்கு வந்து விட்டாலே இயக்கத்திற்குத் தோல்விதான் ஏற்படும் என்று எந்த நிலையிலும் நினைப்பதற்கு வாய்ப்பில்லாமல், இங்கே ஏராளமாகத் தொழில்களைக் கொண்டுவர வேண்டும், பல திட்டங்களைக் கொண்டு வர வேண்டும் என்கிற என்னுடைய விருப்பத்தினைக் கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கையும் திட்டங்களும் பற்றிய கொள்கை விளக்கக்குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். குறிப்பாக இங்கே



சொல்லப்பட்டு வருகின்ற குற்றச்சாட்டுகள் ஏதோ தொழில் துறையிலே போதிய அரசு அக்கறை காட்டவில்லை என்பதைப் போலவும், நாங்கள் முயற்சி எடுக்காததன் காரணமாக மத்தியிலே எத்தகைய உதவியும் பெற முடியாமல் போய்விட்டதைப் போலவும், முன் இருந்தவர்கள் எல்லாம் கருத்துடன் இருந்து செயல்பட்டார்கள் என்பதாகவும், அப்போதெல்லாம் தொழில் வளர்ச்சி பெருகி உலகத்திலேயே தமிழ்நாடுதான் முதன்மையாக இருந்ததாகவும், இப்போது தான் பின்வாங்கி விட்டதுபோலவும் பறை சாற்றுவதுபோல இருக்கின்றது. அதைத் தான் இங்கே நினைத்துப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம், தமிழக அரசு பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் பணம் செலவு செய்து ஒரு பத்தாயிரம் தொழில் மையங்களும் தொழில்களும் பெருகியும், நாட்டிலே சில தொழிற்சாலைகள் மூலமாக மாநிலத்திலும் வேலைகள் பெருகியிருக்கின்ற நிலையில், நாம் எல்லாம் பெருமைப்படத் தகுந்த அளவிலே 120 கோடி ரூபாயிலே ஒரு காகித ஆலையும் அமைய இருக்கிறது என்ற ஒரு மகிழ்ச்சிகரமான நேரத்திலே, இங்கே மின்சாரத் தட்டுப்பாடு, நிலக்கரி பெறமுடியாத நிலை, இப்படி பல்வேறு இன்னல்களுக்கு இடையிலே தொழில்களுக்கு ஊக்கம் தருகின்ற அரசினைப் பார்த்து, இப்படி குறை சொல்கிறார்கள். மத்திய அரசிடம் கேளுங்கள் என்றும், முறையாக இருந்தால் அவர்கள் உதவுவார்கள் என்றும் மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் போன்றவர்கள் சொன்னார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்ட வாசகங்கள் என்னுடைய கையிலேயே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"The State should convince about the suitability for locating new industries"

மிகச் சுலபமான காரியம். அவர்கள் சொல்வதுபோல இங்கே அவர்கள் தொழில்கள் தொடங்குவதற்கு ஏற்ற இடம் என்று சொல்லி திருப்தி செய்தால் போதும், நடந்துவிடும் என்று சொல்கின்றார்கள். இன்னொன்றையும் சொல்கின்றார்.

"How would the industrialists come forward to start industries when the basic infrastructural facilities like water, power and road were lacking?"

இது எல்லாம் இல்லாதபோது எப்படி வரும் என்று இன்னொன்றையும் சொல்கின்றார். இடத்தைச் சொன்னால் கிடைக்கும் என்று சொல்வதாகவும், இங்கே நீரும் இல்லை, இடமும் இல்லை, எப்படிக் கிடைக்கும் என்பது இன்னொரு வாசகம். இன்னொன்றையும் சொல்கின்றார்கள். உங்களுடைய

காலத்திலே தமிழ் நாடு முன்னோக்கி இருந்தது என்றும் இப்போது பின்னோக்கி இருப்பதாகவும் அவர்கள் வருத்தப்பட்டுச் சொன்னார்கள். எல்லா மாநிலங்களிலும் மத்தியிலும் ஒரே கட்சி ஆட்சியிருந்தால், அந்த ஆட்சியிலே இந்த மாதிரி குறைபாடுகள் வாராது என்று அங்கே இடைத் தேர்தல் நேரத்திலே அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எல்லாம் நமக்குப் புரிகிறது. அவர்கள் மூன்றாவது சொன்ன காரணம் ஒருவேளை முக்கியமான காரணமாக இருக்கலாம். 15 ஆண்டுக் காலமாக மத்திய அரசு 'இந்த மாநிலத்திலே எந்த முதலீடும் செய்யவில்லை என்கின்ற வேதனைக்கு ஒரு பதில் அளிக்குமானால், ஒருவேளை திரு. வெங்கடராமன் அவர்கள் கருதியது போல், அவர்களுடைய காலத்திலே இருந்ததுபோல, இப்போது வளரவில்லை என்ற காரணத்திற்கு இதைச் சொல்லலாம். ஒரு வேளை மாநிலத்திலேயும் மத்தியிலேயும் ஒரே கட்சியில்லை என்கின்ற வருத்தத்திலே வந்த விளைவே என்று கருதினால், அதுவும் வேதனைக்குரிய காரியம். ஆனால் 'இப்போது ஏற்காத அளவுக்கு பல மாநிலங்களில் எதிர்க் கட்சிகள் வந்துவிட்டனவே, வந்துகொண்டிருக்கின்றனவே, இந்த நிலையிலே அதே சித்தாந்தங்களைச் சொல்வார்களானால், காலம் மாநிலத்திற்கும் மத்தியத்திற்கும் மோதலை உண்டாக்குமே தவிர, உறவை வலுப்படுத்தாது என்பதையும் நாம் நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில்.

He said: Tamil Nadu Ministers felt that by simply writing letters to the Centre, they would get anything. அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டு அமைச்சர்களின் கடிதங்கள் மாநில அரசிலிருந்து போனால், அது நான்கு கோடி மக்களின் எண்ணத்தின் பிரதிபலிப்பாகத்தான் இருக்கும் என்று நாம் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் ஒரு கடிதம் எழுதினால் மட்டும் போதாது என்று இப்போது சொல்கிறார்கள். நீங்கள் என்ன தான் செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டால், நாம் அதைச் செய்வதற்கான வழிவகைகளையாவது செய்ய முடியும். திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இன்னொன்றையும் சொல்கிறார்.

(முற்பகல் 11-10)

I have made numerous trips to Delhi for getting clearance for so many projects relating to the ministry I was in charge during the Congress rule. அவர் காங்கிரஸ் அமைச்சராக இருந்தபோது, அடிக்கடி டெல்லிக்குச் சென்று வந்த பழைய நினைவுகளை எல்லாம் அவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்கு இயற்கையாகச் செல்ல வேண்டிய பயணமாக இருந்திருக்கக்கூடும். அவருடைய நிலைமையைக் காப்பாற்றிக்கொள்ளக் கூட சென்றிருக்கலாம். பல மாநிலங்களில் நடந்திருக்கிற விளைவுகளைப் பார்க்கிறபோது, பல மாநிலங்களின் முதலமைச்சர்களும்



அமைச்சர்களும் டெல்லியில் வட்டமடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், மாநிலங்களில் ஏதாவது குழப்பம் என்றால் காப்பாற்றுகிற ஆபத்பாந்தவர்கள் அங்கே இருப்பதால், அவர்களுக்கு அப்படி ஒரு நெருக்கடி. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய கடிதங்களே காரணங்களாக இருந்து அந்தக் கடிதத்தைக் குறித்து மத்திய அரசு செயல்பட வேண்டும் என்பதைத்தான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய பிரதமர் அவர்கள் தேர்தல் காலத்தில் ஒன்றைச் சொன்னார்கள். தேர்தல் காலத்துப் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு என்று சொன்ன போதிலும், பிரதமர் அதைச் சொன்னதால் நாம் அதிக கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்கள் சொல்கிறார்கள்.

"A small group of opposition parties with divergent ideologies, policies and programmes can hardly deliver the goods. People have to think of the future of the nation at this critical situation. So I appeal to the electorate to return the Congress-I

There may be difficulties today. But there will be a better tomorrow. Therefore, help us not only to implement economic programme but also in the interest of your future." இந்தியாவின் பொருளாதார நிலைமைக்கு அவர்கள் நினைக்கிற கருத்துப்படி பார்த்தால், மாநிலத்திலும் மத்தியிலும் ஒரே கட்சி ஆட்சியாக இருப்பதுதான் உகந்தது என்பது அவருடைய ஆசையாக இருந்தாலும், அது முடியாது என்று நிலை வருகிற போது, நிச்சயமாக மத்தியில் இருப்பவர்கள் இந்த வேதனையைப் போக்குவதற்கு வழி வகை காண வேண்டும். மாநில அரசைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாகவும், சிமெண்ட் நிறுவனத்தின் மூலமாகவும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மூலமாகவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மூலமாகவும், சர்க்கரை நிறுவனத்தின் மூலமாகவும், செய்தித் தாள் நிறுவனத்தின் மூலமாகவும், கனிவள நிறுவனத்தின் மூலமாகவும், உப்புத் தொழிற்சாலை நிறுவனம், பீங்கான் தொழிற்சாலை நிறுவனத்தின் மூலமாகவும், தொழில் வணிக இயக்ககம் மூலமாகவும் இன்று இதுபோன்ற பல அமைப்புகளின் மூலமாகவும் சீரிய பணிகள் ஆற்றியிருந்தும் கூட, ஏன் இந்தக் குற்றச்சாட்டுக்கு தமிழகம் ஆளாகியிருக்கிறது என்று நினைத்துப் பார்க்கிறேன். திரு. வெங்கட்ராமன் அவர்களின் காலத்தில் இருந்தது இப்போது இல்லையென்று சொல்கிறார்களே, ஒருவேளை கிண்டியிலும் அம்பத்தூரிலும் ஒன்றை நிறுவியதைச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். ஒன்றுமே இல்லாத நேரத்தில் கிண்டியில் தொழில் வந்தது, கண்ணுக்குத் தெரிந்தது. அதைப்போல் இப்போது ஐம்பதை தமிழ் நாட்டில் இந்த அரசு உருவாக்கி பெருக்கியிருக்கிற இந்த

நேரத்தில் இதைச் சொல்வது தான் வேடிக்கையாக இருக்கிறது. அவர் காலத்தில் ஒரு ஓசூர் என்றால் இப்போது 9 ஓசூர்கள். அதைப்போல தொழில் பேட்டைகள் பரவியிருக்கிற நேரத்தில், இந்தக் குற்றச்சாட்டு வருகிற தென்றால், ஒருவேளை இவர்கள் செய்த காரியத்தை, மாண்புமிகு தொழில் அமைச்சர் செய்கிற காரியத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்தின் காரணமாக செய்கிற காரியங்களின் அடிப்படையில் இந்த அரசின் செயல்பாடுகளை முறையாக விளம்பரப்படுத்தவில்லை என்ற வருத்தம்தான் எனக்கு வருகிறது. கரூரில் காகித ஆலை 190 கோடி ரூபாயில் ஆரம்பிக்கிறோம் என்று சொல்லி, அதற்காக கட்டிடங்கள் எழுப்பப் பட்டு பாதி வேலை நடந்தும், அதற்காக ஏதும் விழா எடுக்காத காரணத் தால், பலருடைய கண்ணில் அது படவில்லை என்று கருதுகிறேன். தமிழ் நாடு சிமெண்ட் ஆலையை அரியலூரில் உருவாக்கினார்கள். இந்திய வர லாற்றிலேயே ஒரு சிமெண்ட் ஆலை 1½ ஆண்டுக் காலத்தில் திட்டமிட்டு கட்டி முடித்திருப்பார்களா என்றால் இல்லை. ஆனால் அந்தப் பெருமைக் குரிய காரியங்களை இந்த அரசு செய்தது. அதை பத்திரிகையில் விளம்பரப் படுத்தவில்லை. ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை அமைத் தார்கள். ஆனால், அதைப்பற்றி விளம்பரமில்லை. ஆகவே திரு. வெங்கட் ராமன் அப்படி நினைக்கிறார். பவர்லூம் காம்பளெக்ஸ் ஒரு பத்து இடங் களில் உருவாக்கினார்கள். ஒரு மாபெரும் புரட்சி என்று அதைச் சொல்ல வேண்டும். ஒருவேளை பலருடைய பார்வைக்கு அது படாமல் போய் விட்டது. அதற்குத் திறப்பு விழாவும், அவ்வப்போது விழாக்களும் நடத்தி விளம்பரப்படுத்தவில்லை. அதனால் திரு. வெங்கட்ராமன் அப்படி நினைக் கிறார். ஸ்பின்னிங் மில் பொறுத்தவரையில் மட்டும் அல்ல, தனியார் துறை யிலும் பல உருவாகியிருக்கின்றன. இவை தவிர எத்தனையோ தொழில்கள் உருவாகியிருக்கின்றன. ஆனால் இப்போது இருக்கிற மத்திய ஆட்சி தமிழ கத்திற்குச் செய்த அநீதிகளை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அதோடு மட்டுமல்ல, ஆவடியில் டாங்க் தொழிற்சாலை இருக்கிறது. அதனுடைய விஸ்தரிப்புத் தொழிற்சாலை எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது என் பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நேவல் அக்காடமி வருவதற்கு இங்கே இடம் ஒதுக்கினோம். இடம் ஒதுக்கியும் கூட, இங்கே வராமல் அது கேரளா வுக்குப் போய்விட்ட இந்த நேரத்தில் கூட நமக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. கேரளாவில் இந்த நேவல் அகாடமிக்காக விவசாய இடத்தை அவர்கள் ஒதுக்கி விட்டார்கள் என்று அங்குள்ள விவசாயிகள் விளைச்சல் இருக்கக் கூடிய அந்த இடத்தில் நேவல் அகாடமி வரக்கூடாது என்று



கிளர்ச்சி செய்திருக்கிற காரணத்தையேனும் வைத்து, இங்கே ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ரயில்வே கோச் பேக்டரியின் விஸ்தரிப்பும் ஆந்திராவுக்குப் போயிருக்கிறது. இப்போது Free Trade Zone என்று நாம் கேட்கிறோம். அது வருமே யானால், நம்முடைய உற்பத்திப் பொருட்களை விளம்பரப்படுத்தவும் எதிர் காலத்தில் அதற்கு ஒரு மார்க்கெட் உருவாக்கவும் வசதி ஏற்படும்.

குஜராத்தில் கண்ட்லாவில் இருப்பதைப்போல், சென்னையிலும் ஏற் படுகிற நிலைமையை நாம் எண்ணிச் செயல்பட வேண்டும். அதற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நாம் இப் போது மின்சாரத் தட்டுப்பாட்டு நிலையிலும் தொழிலை வளர்த்துக் கொண் டிருக்கிறோம். கடல் அலையிலிருந்து மின்சாரம் எடுக்கலாம் என்று கேட்டதற்கு நமக்கு அதற்கு ஒப்புதல் கிடைக்கவில்லை என்று அறிகிறோம். ஆனால் மின்சாரத்தை எவ்வளவு செலவானாலும் அதனால் தொழிலைப் பெருக்கும் நிலை இருக்கிறபோது, வேண்டுமென்று விவசாயத்திற்கு அதிக மின்சாரத்தை இந்த அரசு தந்து கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் ஆறுகள் உற்பத்தியாகி ஓடுவதால், அங்கே விளைபொருள் கிடைக்கிறது. ஆனால் இங்கே மின்சாரத்தையே பெற வேண்டிய நிலையில் இருக்கிற இந்த மாநிலத்தில் மின்சாரத்தைப் பெருக்க அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். ஓசூரில் இன்டஸ்டிரியல் காம்ப்ளெக்ஸ் பெருகுவதால், கர்நாடக முதலமைச்சர் ஒரு கருத்தைச் சொன்னார். அதை அதிகப்படுத்தாதீர்கள் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அது எதைக் காட்டுகிறது என்றால், ஓசூரில் நாம் எடுத்திருக்கும் முயற்சி காரணமாக தமிழ்நாடு தொழில் துறையில் முன்னேறி வருகிறது என்று மற்ற மாநிலங்கள் பொறாமைப் படுகிற அளவுக்கு வளர்ந்து வருகிறது என்பதைத்தான் காட்டுகிறது.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், விடுகளுக்கும் வீதிகளுக்கும் அதிகம் வழங்கியிருக்கிற மாநிலம் தமிழ்நாடுதான். இருக்கிற சிரமங்கள் எல்லாம் இந்த லைசன்ஸ் பெறுவதில்தான். மத்திய அரசு அதில் ஏற்படுத்துகிற தன்மையின் காரணமாகத்தான் இங்கே பல தொழில்கள் நம்மால் தொடங்க முடியாமல் போய்விட்டது. சென்னையில் இயற்கைத் துறைமுகத்தை விரிவு படுத்தி, இன்னமும் தொழில் துறையில் பெருக்குவதற்குரிய வாய்ப்புகளை பலமுறை நாம் வற்புறுத்தி வருகிறோம். விரைவில் அவர்கள் முடிவெடுத்துச் செய்யவேண்டும் என்பதையும், பெரிய தொழில்கள் எல்லாம் மத்திய அரசின் அனுமதியை நாடிக்கொண்டிருக்கின்றன என்பதையும் காண்கிறோம். அதே நேரத்தில் என்ன நடக்கிறது என்பதையும், தொழில் பெருகவில்லையா,

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1983 ஏப்ரல் 15

பெருகவில்லையா என்று கேட்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். இருக்கிற தொழில் போய்விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற கடமையும் நமக்கு இருக்கிறது என்பதை நினைவுகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

Industrial Re-construction Bank. என்று கல்கத்தாவில் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அனைத்து வங்கிகளும் சேர்ந்து எங்கெங்கு பெருந் தொழில்கள் நசித்துப் போகின்றனவோ அவற்றுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்திருக்கிற மத்திய அரசு, தமிழ்நாட்டைப் பார்த்து எத்தனை தொழில்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னால் வியப்படைந்து போவீர்கள். வேறு மாநிலங்களுக்கு அதிக உதவி செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, என்ன நிலை என்றால் இங்கே இருக்கிற இந்தியா சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்துக்கூட வங்கியின் துணை காரணமாக மற்றவர்கள் அதன் பொறுப்பை எடுக்கிற நிலைமை இருக்கிறது. சவுத் இந்தியா விஸ்கோஸ் போன்ற அமைப்புகளை எடுக்கின்ற முயற்சிகளுக்கு வங்கிகள் துணையாக இருக்கிற நேரத்தில் அதனுடைய விஸ்தரிப்புக்கும், முன்னேற்றத்திற்கும் இந்த மாநிலத்தைச் சார்ந்தவர்கள் காட்டுகிற அக்கறையையும் ஆர்வத்தையும் அனைவரும் காட்டுகிறார்களா என்ற சந்தேகம் வருகிறது. பின்னி காட்டன் மில்லை மத்திய அரசு பொறுப்பிலே எடுத்தபோது, தமிழ்நாட்டு தொழில் அதிபர்களை பேட்ரன் ஆக நியமித்தால், தொழில் பாதுகாப்புக்கு வழி ஏற்படும். இந்த மாநிலத்தில் இருக்கிற தொழிலை வேறு மாநிலத்திற்கு மாற்றுவதாக இருக்கட்டும், அல்லது அதனுடைய பொறுப்பை வாங்குவதாக இருக்கட்டும், அல்லது அரசு அதில் ஒரு வார்த்தை சொல்வதற்கு மாநில அரசு தன்னுடைய முடிவைச் சொல்வதற்கு அல்லது மாநில அரசு அதை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதி அளிக்கக் கூடிய வகையில் மத்திய அரசின் தொழில் கொள்கை இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாற்றங்கள் ஏற்படுகிறபோது, மாநில அரசின் கருத்தையேனும் கேட்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஏனென்றால் பாலைக் கறந்து பூனை குடிப்பதற்கு விடுவதுபோல், புதிய தொழில்கள், பெருந் தொழில்கள் உருவாக இருக்கிற நேரத்தில் இருக்கிற பெரிய தொழில்களின் பொறுப்புகள் மாறிப் போய் விடுமேயானால், அது மிகவும் மன வேதனைக்கு உரியது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதனாலேதான் தென் மாநில முதலமைச்சர்களின் கவுன்சிலில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவரின்



1983 ஏப்ரல் 15] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அரிய முயற்சியாலும் அன்பாலும் ஆதரவாலும் உருவாகி இருக்கிற இந்த அமைப்பில், இதுபோன்ற பிரச்சினைகளை எடுத்துச் சொன்ன போதிலும், குறிப்பாக Industrial growth என்பதைப்போல் அகில இந்திய ரீதியில் அமைத்து அதற்கு ஒரு குழு நியமிக்கவேண்டும். சுதந்திரத்திற்குப் பிறகு, அகில இந்திய தொழில்கள் எப்படி வளர்ந்திருக்கின்றன என்பதையும், மாநில அளவில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றன என்பதையும், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மாவட்ட அளவில் எப்படி வளர்ந்திருக்கின்றன என்பதையும் அந்தக் குழு ஆராய்ந்து அறிய மிக உதவியாக இருக்கும்.

(மூற்பகல் 11-20)

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சிறு தொழில் வளர்ச்சியைப் பெருக்கியிருக்கிறோம். ஒரு கால கட்டத்தில் அவைகளெல்லாம் பஸ் முதலாளிகளால் நடத்தப்பட்டிருந்த நிலைமை மாறி இன்றைக்கு சாதாரண, நடுத்தர மக்களால் சிறு தொழில்கள் நடத்தப்படுகின்றன. அப்போது பஸ் முதலாளிகள் அவைகளை நடத்தும்போது, சிறு தொழில் வளர்ச்சி கண்ணுக்குப் பிரமாதமாகத் தெரிந்தது. இன்றைய தினம் சாதாரண மற்றும் நடுத்தர மக்களும் சிறு தொழில் தொடங்க அரசு ஆக்கமும் ஊக்கமும் தருகிற காரணத்தால், அவர்கள் இன்றைக்குப் பெரிய வாழ்வு பெற்று வருகிறார்கள். அதன் காரணமாகத்தான் சிறு தொழில் வளர்ச்சி மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறது என்று நம்புகிறேன். சிறு தொழில் வளர்ச்சித் துறையிலே மிகப் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து; மத்திய அரசின் உதவியோடு மாவட்டத் தொழில் மையங்கள்—டிஸ்ட்ரிக்ட் இன்டஸ்ட்ரிஸ் சென்டர்ஸ்—தமிழகத்தில் அமைக்கப்பட்டிருந்தாலும் கூட, மாநில அரசே சில அமைப்புகளை உருவாக்கி, அவற்றின் மூலமாகவும் தொழில் வளர்ச்சியைப் பெருக்கி வருகிறது. இந்த நேரத்தில் மத்திய அரசு தன்னுடைய தொழில் கொள்கையைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையின் கலர்ப் பிரிவு விவகாரம் என்பது தமிழகத்தில் மிகவும் அதிகமாகப் பேசப்பட்டதாகும். அண்மையில் மத்திய தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு விவரத்தைச் சொன்னார். போட்டோ

தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், மூன்று விஸ்தரிப்பு நிலையங்கள் தொடங்கப்பட இருக்கின்றன என்றும் அவற்றில் ஒன்று வட நாட்டிலும் இரண்டு தென்னாட்டிலும் இருக்கும் என்றும் குறிப்பிட்டார். நாம் கூட நினைத்தோம். பரவாயில்லை, இரண்டு நிலையங்கள் இங்கே வருகின்றன, ஒன்றுதான் வடநாட்டிற்குப் போகிறது என்று. ஆனால் உண்மை நிலைமை என்ன என்று பார்க்கிறபோதுதான் ஒன்று நமக்குப் புரிந்தது. இங்கே வருகிறது என்றது ஏற்கெனவே வந்துவிட்டது. அதாவது ரிசர்ச் அண்டு டெவலப்மெண்ட் விங் ரூ. 2 கோடி செலவில் தற்போது கேசட்டில் டேப் செய்கிற காரியம், இங்கே வந்துவிட்டது. இதனால் ஒரு 100 பேருக்கு வேலை கிடைக்கும். ஆனால் வடக்கே கொண்டு போகப்பட்ட அந்தத் தொழில் பிரிவுகளுக்கு ரூ. 180 கோடி அளவுக்கு முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு மத்திய தொழில் அமைச்சர் திரு. திவாரி அவர்கள் முயற்சி செய்து சுமார் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பைத் தருகிற தொழிற் பிரிவுகள் அங்கே சென்றிருக்கின்றன. ஆகவே புதிய தொழிற்சாலைகள் துவங்கவில்லை என்றாலும்கூட, இருக்கிற தொழிற்சாலைகளை மாற்றாமல், விஸ்தரிப்புப் பணிகளையும் இங்கே மேற்கொள்ளுகிற நிலைமைகளை நாம் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியில் மின்சார உற்பத்தியைப் பெருக்க முனைந்தபோது, பிரெஞ்ச் கோல் வேண்டாம் என்று சொல்லி தடுக்கப் பார்த்தார்கள். ஆனால் இன்றைய தினம் அந்த நெய்வேலிதான் தமிழகத்தின் மின்சாரத்திற்கு மிகவும் உறுதுணையாக இருக்கிறது. இரண்டாவது கட்ட விஸ்தரிப்புப் பணிகள் அங்கே மேற்கொள்ளப்பட்டு தமிழகத்தில் மின் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு துணையாக அது விளங்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

அதைப்போலவே டெக்ஸ்டைல் பாலிசி என்ன என்பதையும் மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும். ஒரு பக்கம் டெக்ஸ்டைல் மில்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் பவர் லூம்களையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். எனவே இந்தக் கைத்தறியாளர்கள் யாரும் பாதிக்காத வகையில் மத்திய அரசு தன்னுடைய டெக்ஸ்டைல் பாலிசியை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதைச் சொல்லும்போது, இன்னொரு கருத்தையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். தற்போது சர்க்காரியா கமிஷன் மத்திய மாநில உறவுகளைக் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் மத்திய மாநிலங்களுக்கு இடையே இருக்கக்கூடிய தொழில் உறவுகள் கூட முடிவு செய்யப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின்





அதிகப்படியாக பெரிய தொழில்கள் பெருக வேண்டும் அல்லது அமைய வேண் வேண்டும் என்றால், அது மத்திய அரசின் தொழிற் கொள்கையை ஒட்டித்தான் அமைய முடியும். அண்மையில் திரு. ஜி. கே. தேவராஜுலு அவர்கள்—அவர் பெடரேஷன் ஆப் இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸ் அண்டு இண்டஸ்ட்ரியின் தலைவர் ஆவார்—இன்றையதினம் சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், வங்கிகளின் வட்டி விகிதம் மிகவும் அதிகமாக இருப்பதன் காரணமாக, அவற்றின் வளர்ச்சி மிகவும் பலகீனப்பட்டிருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அந்தத் தொழில் அதிபர் கீழ்க்கண்டவாறு சொல்கிறார் :

"Interest rates are unconscionably high in India extending to 18 per cent in respect of commercial bank loans as against 11 to 12 per cent in the U.K. and the U.S. and 6 per cent in Japan. At the same time increases in prices of raw materials and other in-puts and enlarged investments are not considered while extending credit.

ஆக, வங்கி உதவிகள் என்பது முறையாக இல்லாத காரணத்தால்; இங்கே தொழில் துறை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தையும் குறிப்பிட்டிருக்கிறார். அதைப்போலவே சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை,

While Salem material is rated high in quality, the user industries have been complaining that they are at least Rs. 1500 a ton costlier than the equivalent materials available in the country, imported or indigenous. But the Salem Plant authorities argue that the higher price is basically because of the heavy import duty on their in-put.

சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டபோது என்ன வரிவிதிப்புக் கொள்கை இருந்ததோ அது மாற்றப்பட்ட காரணத்தால், பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக மறைந்த திரு. சந்தானம் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதாவது:

The Tamil Nadu's needs of water and other resources for its development are fully assured through All India Legislation or agreement with neighbouring States. But it is subjected to regional politics and there is no national policy. This is a matter which requires careful consideration of all political leaders.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1983 ஏப்ரல் 15

பொதுவாக, தொழில் துறையில் நம்முடைய மாநிலம் எடுத்துக் கொண்டிருக்கிற நல்ல முயற்சிகளுக்கெல்லாம் மத்திய அரசு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டும் என்பதும், அகில இந்திய ரீதியில் ஒரு நல்ல தொழில் கொள்கை இருந்தால் தான், அதுவும் மத்திய மாநில உறவுகளைப் பலப்படுத்துகிற அளவுக்கு ஒரு தொழில் கொள்கை இருந்தால்தான், நம்முடைய நாடு தொழில் துறையில் ஒரு நல்ல புதிய பாதையில், அதுவும் வெற்றிப் பாதையில் செல்ல முடியும் என்பதையும், தமிழக அரசைப் பொறுத்த வரையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்று இன்றைய தினம் தமிழகத்தில் சிறு தொழில்கள் புரட்சிகரமான முறையில் வளர்ச்சியுற்று வருகின்றன என்பதையும், இதன் காரணமாக மாவட்டங்கள் தோறும் தொழில் வளம் பெருக இருக்கிற முயற்சிகளையும் இங்கே எடுத்துக் கூறி, தொழில் துறையின் அனைத்து முயற்சிகளுக்கும் என்னுடைய பாராட்டு தல்களைத் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு மேலவைத் அவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டுள்ள தொழிற் கொள்கை மற்றும் திட்டங்கள் குறித்த விளக்கக் குறிப்புகளின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எங்கள் கட்சியின் துணைத் தலைவர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இறுதியாக இதில் பேச இருக்கிற காரணத்தால், சேலம் இரும்பாலையைப் பொறுத்தமட்டில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பது மட்டும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியான முறையில் உருவாக்கப்பட்ட கட்டத்தில், அப்போது முதலமைச்சராக இருந்த எங்களின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், "நீண்ட நெடுநாட்களாக சேலம் இரும்பு உருக்காலை அமைக்கப்பட வேண்டுமென்று தமிழக மக்களால் கேட்கப்பட்டு, அது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாக்கப்படும் இந்தக் கட்டத்தில்கூட அவ்வாறு இடம் பெறவில்லையே" என்ற கருத்தைச் சொல்லி, "சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைப்பது இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறாவிட்டால், இந்தத் திட்டத்திற்கு தமிழகத்தின் சார்பாக எங்களால் ஒப்புதல் தர இயலாது, ஒப்புதலை மத்திய அரசு தமிழக மக்களின் சார்பில் எதிர்பார்க்கவும் முடியாது" என்ற ஒரு போர்க்குரலை, உரிமைக் குரலை அன்று எழுப்பிய காரணத்தால்தான், மறுநாளே சேலம் உருக்காலை அந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, 1971 ஆம் ஆண்டு



1983 ஏப்ரல் 15] [திரு. சோ. ஆறுமுகம்]

இந்தியாவின் பிரதமராக இருக்கிற மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களே சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்து, அத்திட்டத்திற்கான கால்கோள் விழாவையும் நடத்தி வைத்தார்கள்.

அந்த விழாவின்போதும், அந்தத் திட்டம் முழுமையான இரும்புருக்குத் தொழிற்சாலையாகத்தான் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் காரணமாக, சேலம் மாவட்டத்தில் உள்ள மக்கள் மட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கிற அனைவருமே மகிழ்ச்சியடைந்து, தமிழகத்திற்கு ஒரு பெரிய தொழிற்சாலை வரப் போகிறது என்று திருப்திப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் அந்த உருக்காலைத் திட்டத்தில் 10-ல் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய திட்டமான எவர்சில்வர் சுருளைகளைத் தயாரிக்கிற திட்டத்தை மட்டுமே அங்கே முதலில் எடுத்துக்கொண்டு, அந்தப் பணியை மட்டுமே இப்போது அங்கே நிறைவேற்றி இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். முதலில் உருக்காலைத் திட்டமாக அனுமதிக்கப்பட்டது, பின்னாலே உருட்டாலையாக ஆகியிருக்கிறது. அதிலும் எவர்சில்வர் சுருளைகளைத் தயாரிப்பைப் பொறுத்த வரையிலும், ஆண்டொன்றுக்கு அதாவது 1982 ஆம் ஆண்டுக்கு 3,180 டன் உற்பத்தி செய்யப்படும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டாலும், 1982 ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 3,214 டன் தயாரித்திருக்கிறார்கள் என்று இங்கே அறிக்கை தரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

ஆனால் அதிலேகூட இப்போது எவர்சில்வர் தகடு தயாரிப்பது லாபகரமாக இருக்கிறதா என்பதை, நாம் பார்க்கிறபோது, அது பெரும் நஷ்டத்திலே தயாரிக்கப்படுகிறது என்று தெரிகிறது. இதனாலே சேலம் இரும்பாலையில் எவர்சில்வர் தகடு தயாரிப்பதிலே பெரும் நஷ்டத்திற்குள்ளாகி நாள் ஒன்றுக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு, இதைக்கூட நிறுத்தலாமா என்ற அளவிற்கு அங்கேயுள்ள அதிகாரிகள் யோசித்துக் கொண்டிருப்பதாகவும், மத்திய அரசின் கருத்துக்களை எதிர்பார்ப்பதாகவும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே சேலம் இரும்பாலை உருட்டாலையாக மாறி நஷ்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதிலே 1,207 பேருக்கு மொத்தத்திலே வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சேலத்தில் இரும்பு உருக்காலையாக வந்திருந்தால்; பத்தாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கும், உருக்காலையை மையமாக வைத்து பல சிறு தொழில்கள் தமிழகத்திலே ஏற்பட வாய்ப்புகள் இருக்கும்

[திரு. சோ. ஆறுமுகம்] [1983 ஏப்ரல் 15

என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, 1,207 பேருக்குத்தான் வேலை வாய்ப்பு என்ற நிலை இருக்கிறது. அப்படி வேலை வாய்ப்பு கிடைத்தவர்களிலே கூட, சேலம் இரும்பாலை ஆரம்பித்ததால் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்றால், 30 சதவீதம் பேர்கள் கூட இல்லை. வெளி மாநிலத்தில் இருப்பவர்கள்தான் உயர்ந்த பதவிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட பெரிய தொழில்கள் வருகிறபோது, தமிழகத்து மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க அரசு முனைப்பான கண்ணோட்டத்துடன் செயல்பட வேண்டும். அப்படி இல்லாமல், மத்திய சர்க்காரிடத்திலே கேட்கிறோம். அவர்கள் அனுமதிக்கிறார்கள், ஆகவே தமிழகத்திலே இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று இருந்துவிட்டால், இப்படி வரக்கூடிய பெருந்தொழில்களில் பெரும்பாலும் வெளி மாநிலத்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை இருக்கிறது. மண்ணின் மைந்தர்களுக்கு முதலிடம் தர வேண்டும் என்று எல்லா மாநிலங்களிலும் குரல் எழுப்புகிறார்கள். ஆனால் தமிழகத்திலே அப்படி உரிமைக் குரல் எழுப்பக்கூடிய நிலைமை இல்லாமல் இருப்பது மிகவும் வேதனை தரக்கூடிய ஒன்று.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் திரு. ஹெக்டே அவர்கள், ஓசூரில் தொழில்களை ஆரம்பிப்பதால், அவர்களுக்குச் சங்கடம் இருக்கிறது. ஆகவே மேலும் அந்த முயற்சியில் ஈடுபடக்கூடாது என்ற ஆலோசனை அல்லது கருத்தை பத்திரிகை வாயிலாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தமிழக அரசுக்குச் சொல்லுவார்களேயானால், தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய தொழில் அமைச்சர் அல்லது முதலமைச்சர் உடனடியாக இதுபற்றி மறுத்து எங்களுடைய மாநிலத்தில் தொழில் ஆரம்பிப்பதை, தொழிலை வளர்ப்பதை கேட்பதற்கு நீங்கள் யார் என்று கேட்டு, நாங்கள் இன்னும் வேகமாக ஓசூரில் தொழில் தொடங்கும் காரியங்களைச் செய்வோம் என்று குரலை உயர்த்தியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லாமல், மௌனம் சாதிக்கிறார்கள் என்றால், இதிலே இவர்களுக்கு அக்கறை இல்லையா அல்லது ஒருவேளை திரு. ஹெக்டே அவர்கள் சொன்ன கருத்துக்குச் செவி சாய்த்து விட்டார்களோ என்று கேட்க விரும்புகிறேன்.

தமிழகத்திலே கனிவளம் நிரம்ப இருக்கின்றது. ஆட்சியில் இருக்கக்கூடியவர்கள் ஒரு கட்டுப்பாட்டை வைத்த காரணத்தால், கனிவளத் தொழில் நசிந்து போகும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. கனிவளத் தொழிலை நடத்தினால், ராயல்டியை சர்க்காருக்குச் செலுத்துகிறார்கள். அதனால்



1983 ஏப்ரல் 15] [திரு. சோ. ஆறுமுகம்]

அரசுக்கு நல்ல வருமானம் வரும். பல ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்திலே, குறிப்பாக சேலம் மாவட்டத்திலே கனிவளம் நிரம்ப இருக்கின்றது. ஆகவே இந்தத் தொழிலைச் செய்வதற்கு அரசாங்கம் ஏன் தடையாக இருக்கிறது என்ற கேள்வியை எழுப்ப விரும்புகிறேன்.

சேலம் இரும்பு உருட்டாலையாக இல்லாமல் உருக்காலையாக வர வேண்டும் என்ற அடிப்படையில் இங்கே கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். மத்திய உருக்கு அதிகார மன்றம் ஆய்வு செய்து கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். என்ன ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்? இந்த உருக்காலையையே கைவிடுவதற்காக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்களோ என்று என்னைப் போன்றவர்கள் கருதுகிறார்கள். அங்கேயுள்ள அதிகாரிகளைக் கேட்டால், இப்போது உருக்காலை வராது, லாபகரமாக இருக்காது என்ற கருத்து மத்தியிலே நிலவுகிறது, ஆகவேதான் எவர்சில்வர் தகடு தயாரிக்கிற பத்தாவது கட்டத்திலே உள்ள திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஜப்பானைச் சேர்ந்தவர்கள், ஜெர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானிகள், தஸ்தூர் கம்பெனி ஆகியவர்கள் எல்லாம் சேலத்தில் இருக்கக்கூடிய கஞ்சமலைப் பகுதியில் உள்ள தாதுப் பொருள்களை வெட்டி எடுத்து உருக்காகத் தயார் செய்தால், லாபமாக இருக்கும் என்று கூறிய கருத்தின் அடிப்படையில்தான் அறிக்கை தயாரிக்கப்பட்டு அதற்கு மத்திய அரசும் அனுமதி கொடுத்தது. ஆனால் இப்போது மறு ஆய்வு செய்கிறார்கள் என்று சொன்னால், உருக்காலையைக் கைவிடுவதற்காகவா என்ற கேள்வி நம்முடைய மத்தியிலே எழத்தான் செய்கிறது. ஆகவே மாநில அரசாங்கம் 1971 ஆம் ஆண்டு அங்கீகரித்த உருக்காலையாக ஆரம்பிக்க வேண்டும். "உருட்டாலையாக எவர்சில்வர் தகடுகள் தயாரிக்கப்படுவதை நாங்கள் எதிர்க்கிறோம். உருக்காலைதான் ஆரம்பிக்க வேண்டும்" என்று இந்த மாநில அரசு நம்முடைய இரு அவைகளிலும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல முன்வர வேண்டும். இப்படிப்பட்ட பெரிய தொழில்கள் வருவதன் மூலம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும், அதன் மூலம் நம்முடைய மாநிலத்தினுடைய மக்கள் வருவாயை ஈட்டிக் கொள்ளவும் நிரந்தர பரிகாரத்தை நம்மாலே காண முடியும். ஆகவே சேலம் உருக்காலையை ஏற்படுத்தும் திட்டத்தைக் கோட்டை விடாமல் பாதுகாத்துக் கொள்ள தொழில் அமைச்சர் அவர்கள் கண்காணிப்பாக இருக்க வேண்டும், அப்படியில்லாமல் ஏமாந்துவிடக் கூடாது என்ற கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

Thiru J. M. MIAKHAN: Hon. Deputy Chairman, I thank you for the opportunity to speak on this occasion. Somehow or other there is a vacuum in the field of industries and there is much scope for improvement especially in respect of electronic industry. In countries like West Germany and Japan, electronic industry is in a very advanced stage. For this industry there is no need for much raw material except brain. We have all the bran and brain in Tamil Nadu and we can profitably explore the possiblity of starting many more electronic industries. In the case of pharmaceutical industries also, they are concentrated in certain parts of India. Industrialists should be encouraged to start pharmaceutical industries here. We have got a long coastline, plenty of salt, a large amount of expertise in the manufacture of salt. Therefore, salt-based industries can be started in large numbers. We should not stop with the manufacture of common salt only but should start many salt-based industries. There are some schemes but they are not sufficient and they are not given proper publicity and people are not aware of them. Therefore, I request the Government to give publicity and call for the entrepreneurs and give them encouragement to start new industries. Similarly, so far as fisheries are concerned, we have got fishing operations along the coast-line but we do not have deep sea fishing. This can be profitably explored. This will provide employment to many people and also give us valuable foreign exchange. There are schemes to manufacture paper from the bagasse of the sugar mill. Traditionally paper was made out of wood pulp. Big trees which will be even thousand years old were felled and utilised for the manufacture of paper. It has now been found out that hay also can be profitably used for the manufacture of paper and the paper manufactured from hay is not merely newsprint but is of fine quality. Therefore, hay could also be used for manufacturing paper to a large extent.

(முற்பகல் 11-40)

There is a project also at a much lesser cost of Rs. 10 crores. Such projects can very well be started in Thanjavur and other places where we have got abundance of hay. All that hay is not being utilised for feeding of cattle and much of the hay goes waste. Such hay can be very profitably used and the farmers also will get some income out of such projects. Similarly, unlike Kerala, we are not paying much attention to the coir industry and other industries based on palm products. Articles made out of coir are having a very good market in foreign countries. Out of coir, many articles like ropes, carpets and other things can be manufactured. It is a



labour-oriented industry which will give employment to several thousands of people. The capital required is also less and not much expertise also is required. Even some ordinary young people can go into this industry, provided there is a market for these articles. The Government of Tamil Nadu can take upon themselves the responsibility to buy these articles from those who manufacture them and, then, to market them. If that is done, the local people will be benefited and it will also give an impetus to the development of cottage industry in Tamil Nadu.

Sir, I would like to say a few words about the manufacture of moped. Whereas other States are faring very well in this field, somehow we are not able to do it. Now, there is acute scarcity of petrol and the prices of petroleum products are rising. Therefore, it is very essential that we should devise and manufacture modes of conveyance which would consume less of petrol. Mopeds and such other bikes and even small cars could be manufactured here. Recently, I had a discussion with the Hon. Minister in this regard. He gave a sympathetic hearing to my views. But, he said that there were no constraints here and that constraints existed only in getting the permission of the Central Government for getting this project, going. They may not give permission because the Maruthi Project which is their pet project has now come up. But, the infrastructure which is now available in our moped factory can be utilised for this purpose because that factory is now idling. If that facility is utilised, much capital may not be required.

We have got the auto-rickshaws which have engines of 3.5 hp. We can ask the people who are manufacturing those engines to increase the horse power to 4 and this is quite sufficient for a small 4 seater car. This need not necessarily be done under one roof. The engine can be brought from one place. The body can be built at another place and the assembling can be done at a different place. In this way, there is no need for heavy capital investment. We must try to get licence from the Central Government for the manufacture of this car. This will go a long way to reduce consumption of petrol. These cars can be made available for a price of Rs. 30,000 or thereabout including all taxes. It will be of great benefit to the people because it will give a mileage of 20 k.m. to 25 k.m. per litre. At present, the auto-rickshaw gives 28 k.m. per litre. Because of four wheel drive and because of friction it may be a little less in the case of cars. But, due to modern technology, such loss could be minimised and the mileage can be restored to

[Thiru J. M. Miakhan] [1983 ஏப்ரல் 15

(முற்பகல் 11-50)

I have been saying that the people who want to start new industries are driven from pillar to post when they want to process their applications for grant of licence. I would request the Government of Tamil Nadu to see that a central agency or organisation is created and this central agency should attend to all the needs of the new entrepreneurs. This will help the growth of new industries in our State. Because of our taxation policy also we find businees fleeing to other States. For example, this happens in respect of cars. If we buy a car in Pondicherry, there is a saving of five to six thousand rupees because of the difference in sales tax rates in that State. The rate of tax is 12 per cent in our State whereas the rate is only 6 per cent in Pondicherry. Therefore, people prefer to buy a car in Pondicherry. By buying in Pondicherry, they can save Rs. 5,000 or Rs. 6,000 which is quite a lot of money. They simply go to Pondicherry, buy a truck or a car and come over here. By this, business in Tamil Nadu is lost to a great extent. The Government should look into this and see that there is not much of disparity between the taxation rates of the two States. If that is done, our trade will not go to other places. It is not as if we want to corner all the trade to ourselves. This can be arranged on a reciprocal basis. we need not try to manufacture all the items that we require. It may be that we have to get certain items from other parts of the country also. We can use such items as base-products for our own industries. For example, we can get ingots from places like Rourkela and Jamshedpur and manufacture Stainless steel there, I do not want to say anything about the Salem Steel Plant and about the process followed there. I only wish to state that we should pay more attention to the manufacture of stainless steel which is now being used by many of the industries. Therefore, the manufacture of stainless steel can be made profitable. Now, there is much difference between the price of the imported stainless steel and the price of the indigenous stainless steel. Because of the protective trade, levy of taxes. etc. the industry is able to survive to some extent. But, the difference in price should not be there. Our price of stainless steel should be much lower than the price of imported stainless steel because our labour cost and other things must be lower than that of foreign countries. For example, in Arabian countries, even a mason is able to earn Rs. 100 to Rs. 150 per day whereas he can earn only Rs. 20 or 30 per day here. Therefore, the labour cost and the manufacturing cost should naturally be lower in our country when compared to foreign countries. Therefore, the price of the product must be lower. Similarly, if we take the example of cars, the price of a car in our country is now about Rs. 90,000. In Japan, you can buy a car at half that price. The car will also be of better quality and we can buy a car to our liking. The price of a car in those countries will not be more than 60 per cent of the price of a car in India. The Government of Tamil Nadu will have to look into all these matters. They may say. "We are not concerned with this and only the Central Government is concerned with this". But we must have a dialogue with those people and see that such industries are started here. I request the Hon. Minister to bestow attention on the small car project. Somehow he should get the necessary permission. If the project is started, many people will be coming forward to subscribe to the capital. In that project, assembly alone needs to be done. One person can supply the dynamos, another person can supply the doors and another person can supply the motors. In the project, it will be necessary only to do the assembly. For this, the building up of a new infrastructure is not necessary. The infrastructure existing in the moped factory can be used for this purpose, if it is slightly enlarged.





If a little more encouragement is given, very many people will be ready to do it at a cheaper cost. For that power is necessary. Of course, the subject of power comes under a different head. We have practically exhausted all our hydel resources. Even in the case of thermal power, we have difficulties in getting coal. We do not have coal in Tamil Nadu and we have got only lignite in Neyveli. In Neyveli, they are going to have another Plant for thermal power generation in the Central sector. We are not able to get coal and, therefore, we must explore the possibility of tapping alternative sources of power, namely, tidal power and wind power. We have a long coastal line and we can have tidal power. We have got hills and hillocks all over the State. We have the potential for locating a number of wind-mills and we can get sufficient wind power. Though it may be only in a limited quantity, such power will be sufficient to supply to the surrounding areas and some small industrial units. Industries can be started in those places with the help of wind power. As a matter of fact, the cost per unit of wind power will be much less and it will be even less than 25 paise per unit. Of course, there may be some initial expenditure for installation. If we give encouragement, local entrepreneurs will come forward to set up such wind mills also. This will be another form of industry.

We will be able to break some new lines in industry. When such things happen, I am sure our country will prosper.

There is another thing to be considered. The policy of the nationalised banks is not very conducive to the growth of the business. If only the businessman has got pulls from the higher-ups or has got influence with Managers of the Banks, they are able to get loans. Common people and ordinary businessmen are not able to secure loans to any appreciable extent. If at all such people are getting loans it would be disbursed only after some cut. They will not be able to get the amount in full. This has to be looked into. When they have genuine requirements, they must be able to get loan easily. Something has to be done in relation to this. Somehow, I find that these loans from the various Banks go only to some vested interests. Only some sections of the people are able to get those loans. Some people who are in the good books of the Banks, the Central Government or the State Government are able to get those loans. The general public as such are not benefited by these loans. They find it extremely difficult to get loans. This also should be looked into and something must be done in this matter.

With these words. Sir, I thank you for giving me this opportunity.

Thiru G. SWAMINATHAN: Mr. Deputy Chairman. Sir, actually I wanted to speak only on 20th. But, since I was informed that there might not be time on the 20th because only the leaders of Parties were going to speak on that day, I thought I could place some of my views before the House today. I may not be touching any fundamental facts as the hon. Member Thiru Damodoran has done. But, I would like to place, as random thoughts, my views on the difficulties faced by industrialists.

Sir, I would like to bring to the notice of the House that there seems to be no co-ordination between the Government of India and the State Government while announcing policies on industries, especially when announcing incentives to industries. I would like to cite a specific instance. While presenting the Budget for the year 1980-81 the then Union Finance Minister. Thiru R. Venkataraman, announced certain concession to industries, especially to those located in industrially backward areas. One of the concessions that he announced was that such of those industries as were located in any of the 57 industrially backward districts would get certain Income-tax benefits under section 80-I and 80-HH of the Income-tax Act. Under those sections of the Income-tax Act, an industry located in any industrially backward area in India will get Income-tax concession to



the tune of 45 per cent. This consession will continue for a period ranging from eight years to ten years. Supposing that an industry is started or an existing industry is expanded by way of putting up an additional unit in a district like Thanjavur district, that industry will enjoy for a period of 8 or 10 years Income-tax benefits to the tune of 45 per cent. Supposing that such an industry gets a profit of Rs. 10 lakhs, it need not pay Income-tax on Rs. four and a half lakhs. So, the companies which have established industries in such areas on the basis of the announcement of the Hon. the Finance Minister of the Central Government have been enjoying this concession.

(நண்பகல் 12-00)

At the same time, during the same year 1980—81, the Hon. the Minister for Industries announced in the Tamil Nadu Legislature, that some of the Industries would get some additional incentives also. According to his statement in the Legislature, some of the industries like electronics, automobile ancillaries and drugs and pharmaceuticals will enjoy certain benefits or concessions like sales tax concession, 10 per cent subsidy, etc. I know from my close contact with various people that because the Central Government announced the concession, they had established new industries or made expansions by June 1980, for the purpose of availing themselves of the concession. Since it would be a substantial concession, they were so quick as to establish the units by June 1980. The units and expansions came into operation in June 1980. The State Government announced in their Budget certain concessions but the Government Order was issued only on 3—10—1980. According to the Government Order, these three kinds of industries, namely, automobile ancillaries, electronics and pharmaceuticals will get the concession only if they had taken advances from the financial institutions after 3—10—1980. To give effect to any concession announced in the Legislature, ultimately the Government have to issue an order and I do not question that. In the issue of such orders, there is inordinate delay. Because of the delay in the issue of the G.O., certain industrialists are denied the concession announced. Only those who wanted to establish new units quickly and who acted quickly are not able to get the concession. I would, therefore, request the Hon. Minister to issue a clarification to the G.O., dated 3-10-1980 so that such of those industries as have been established in Tamil Nadu by June 1980 are also benefited, irrespective of the fact whether they have taken advance earlier or not. If this is done, these industries will not be left out in the matter of these concessions. Otherwise, these industries will be given sales tax loan at 8 per cent and not 20 per cent, as announced by the Hon. Minister. They will not get 10 per cent subsidy to which they are entitled legitimately. There may

be certain difficulties. Anyhow efforts may be taken so that the policy of the State Government and the Central Government may be in unison in the matter ef giving concessions and subsidees to industries.

The hon. Member Thiru Miakhan, Leader of the Muslim League has mentioned about cars. He said that he would be able to manufacture a car for Rs. 37,000. We are happy to know that an entrepreneur is here who will be able to manufacture a car and sell it for Rs. 37,000 if the State Government give him the help. The Maruthi car project. . . . .

Thiru A. R. DAMODARAN: He has not guaranteed that the car will move on the road.

Thiru G. SWAMINATHAN: He said that he would be manufacturing a car. I was happy and thought that I could wait for the day when he would be able to get the licence and start the manufacture of that car, so that we might all be able to get the benefits of that car. Sir, the same thing was said about the Maruthi car also. It took so many years for the car to arrive. Originally, it was said that it would be a family-car and that its price would be half that of the Ambassador car. When that announcement was made, the cost of an Ambassador Car was about Rs. 47,000. It was hoped that the Maruthi car would cost only about Rs. 22,000. Now, I find from the newspapers that the Maruthi car is going to arrive in the market. The customers have been asked to pay Rs. 10,000 by way of deposit. But the price of the car has been fixed at Rs. 47,000 after an inordinate delay of so many years. But, as the hon. Member Thiru Miakhan has made a recommendation, I would also like to make a recommendation to the Government. Recently, when I was in North India, I found that some of the auto-rickshaws there carried four persons in the backside and one additional person by the side of the driver on the front side. In places like Lucknow and Jammu where I had travelled by auto-rickshaws, they carry four or five persons in an auto rickshaw. For a long time. I have not travelled in the auto-rickshaws of Madras City. Some 15 years ago. I met with an accident while travelling by auto-rickshaw in Madras. The accident occurred owing to rash driving. I am told that our auto-rickshaw drivers are now sober. I understand that, at present, only two persons are allowed to travel by our auto-rickshaws. The Hon. the Minister for Rural Industries announced in the Legislature that the unit started for the manufacture of mopeds was not able to function now. Therefore, the Hon. the Minister for Industries may take up the matter with the Hon. the Minister for Rural Industries and see



that the Moped unit is utilised for the manufacture of auto-rickshaws of larger size which can carry more persons. If that is done, it would be helpful in these days of petroleum price-hike when people are not able to travel by taxis.

*டாக்டர் இரா. சனார்த்தனம்:* புதிய ஆட்டோ ரிக்ஷா உருவாக்கி, அதில் கூடுதலாக ஆட்கள் போனால் பரவாயில்லை. ஆனால் இப்போது இருக்கிற ஆட்டோ ரிக்ஷாவில் 2 பேர் போவதற்கே கஷ்டமாக இருக்கிறதே, இந்நிலையில் இன்னும் கூடுதலாக ஆட்கள் எப்படிப் போக முடியும்?

Thiru G. SWAMINATHAN: Sir, it depends upon the persons who are travelling in the auto-rickshaw. If myself and my hon. Friend Thiru Janarthanam are going to travel, only one and a half persons can sit in the auto-rickshaw. If it is a question of the Hon. Minister for Industries and others like him and my hon. Friend Thiru Damodaran travelling, three people can go. I would only mention whether four people or two people can go in an autorickshaw and it will depend upon the normal size of the persons, that the Hon. Minister should look into the matter.

Another thing. The Hon. Minister has mentioned in his Note that there is no contradiction between the large, medium and small-scale industries, because they are complementary to each other. But I wish to stress one thing and that is the cash flow position of the industries. After the credit squeeze which came some time back, the cash flow position is very bad. Somehow the industries in Tamil Nadu are not able to get enough finance from the banks and the psychology of the banks is not as liberal as it was previously. The problem arises also because of the taxation policy of the Central Government. Much of the earnings of the industry is taken away in the form of income-tax. The income-tax rate is 61.5 per cent and it goes up to 67 per cent. If surcharge is included, it may be 70 per cent. The rate of depreciation in respect of machinery has been increased from 10 to 15 per cent. There is also subsidy up to 75 per cent. Even then it is found insufficient to replace machinery. Ultimately what happens is that throughout the country industries suffer from bad cash flow position.—

Another difficulty that has been created is the announcement made by the Hon. the Minister for Finance at the Centre during his Budget speech——which is tridiculous—that in spite of the various incentives and subsidies, many industries have not paid taxes. They have been paying taxes like Excise Duty, Sales tax, etc. to the Government. He said that not even 30 per cent of the Government's income is covered

[Thiru G. Swaminathan] [1983 ஏப்ரல் 15

(மாற்றுத் தலைவர் திரு. ஜே. எம். பியாகான் தலைமை)

(பிற்பகல் 12-10)

by the taxes. This is making the position more critical. Sir, I would only make a plea. When the Government of India take a decision on industrial policy, it will not be fare if they take a unilateral decision at the level of the Government of India because such a decision affects every State in the country. The State Governments also should have a say when the Government of India evolve an industrial policy. They need not divulge the Budget policies in advance to the State Governments. But, atleast the Government of India can have a discussion with the Chief Ministers or the Industries Ministers of States before they formulate any kind of industrial policy, because the industrial policy of the Government of India affects all the States put together. In Tamil Nadu there are many major industries like Ashok Leyland and the Bharat Heavy Electricals which belongs to the Government of India. There are many large and medium industries in the public sector and the private sector. There are many small-scale industries which are dependent upon the major industries. What is happening now is this. The cash-flow position of the major industries is so bad that they are not paying any money at all to the small-sale industries. I would like to cite an instance. There are so many ancillary industries around the BHEL Tiruchirappalli, which depend for their existence only on the Bharat Heavy Electricals Limited. Those ancillary industries have not diversified their activities. The money due to them on their bills has not been paid for a period of nearly six months. I also understand that the same is the position with Ashok Leyland. I do not want to damage the name of any industry. But, their cash-flow position also is so bad that they are not paying anything to the ancillary industries in time. Ultimately, what happens is this. The large industries in our State and elsewhere, taking advantage of the position that the ancillary industries and the small scale industries cannot exist but for their support, try to cut the throats of the small-scale industries by not setting their bills in time. I understand that, in Japan, there is an Act which forces the large-scale industries making purchases from the small-scale industries to pay their dues to the small-scale industries within 45 days' time. This time-limit is stipulated there because it will be easier for a large-scale industry to get accommodation from the Bank than a small-scale industry. I would plead with the Hon. Minister to think over this and to find out whether it would be possible to bring such a measure, or even to bring an Act or a rule to force the large-scale industries to pay the small-scale industries their dues within a reasonable period of time.



1983 ஏப்ரல் 15] [Thiru G. Swaminathan]

One more point I wish to mention is this. For cash flow position, they have to depend on the nationalised banks. Nationalised banks have their own policies, whims and fancies. There seems to be no uniform policy followed by the nationalised banks. Even though the Reserve Bank issues instructions, the policy followed is not uniform. As between the various nationalised banks themselves, there is no uniform policy. Even the overdraft facility is suddenly withdrawn and this happened in the Indian Bank some months ago. I wish that the Hon. Minister may also take it up with the Financial Institutions and convene a meeting of the custodians of the Banks. He can also find out if it is possible for the financial insitutions to help the small-scale industries not only for putting up buildings and installing machinery but also for maintaining necessary cash flow for running the industries. It may be seen whether they could assist them in the matter of bill-discounting or open cash credit. It may also be considered whether we could have a separate institution to help the small-scale industries in these financial matters.

So far as District Industries Centres are concerned, they have been formed only for the purpose of promoting and helping the small-scale industries. From my own experience, I have found that some of the officers in the District Industries Centres do not understand the purpose for which the Centres are there and they discourage people who are going there As it has been rightly pointed out by the hon. Member Thiru Damodaran, the attitude of some of the officers is not very happy. I would also point out that my own experience in the matter shows that some of the officers of the District Industries Centres are not properly promoting the industries and they are unnecessarily creating some problems which need not have been created. I have already mentioned an instance in relation to my own industry during the Budget debate and I want to repeat it since the Hon. the Minister for Industries is here. I am having Pharmaceutical Industry. Pharmaceutical industry is itself called a laboratory. We applied to the District Industries Centre at Thanjavur for supply of cement for the expansion of our pharmaceutical industry because we wanted to put up an additional analytical laboratory. The officer in the District Industries Centre said, "I will not give cement for a laboratory. I will allow cement only for an industry". My Manager pleaded with him saying "The pharmaceutical industry itself is a laboratory. Pharmaceutical companies are named only as Glaxo Laboratories, Abbott Laboratories, Ranbaxy Laboratories, etc. A pharmaceutical

industry should have a full-fledged analytical laboratory." In spite of that, the application was rejected by that officer and my Manager was not able to do anything about that. Then, I had to go to the Director of Industries myself. I explained to him that an analytical laboratory was a must for a pharmaceutical industry Ultimately, I got the permit for cement. But, by that time, nine months had elapsed and the construction was already over. By this. I was put to a loss. I have not come here to speak about my loss. After all, it was a small loss. But, I want to say that the officers in charge of the District Industries Centres should have an attitude to help the industries. If that officer who is on the spot wants to delay a matter, there may be another officer above him who may want to delay the matter still further because we have got enough officers who have the power to delay matters.

Sir, I would like to say a few words about registration with the NSIC, DGS & D, MSD, etc. It is mentioned in the Note that many industries have registered themselves with the DGS & D, MSD, NSIC, etc. All these are Central Government organisations. It is not easy for anybody to get his industry registered with these organisations, however perfect he may be. There is a lot of red-tape and corruption in these. Even though there are thousands of industries in Tamil Nadu, if you see, on an average, the number of industries registered with the DGSD, you will find that only a few hundreds in every line of activity have registered their names with that organisation. There is a reason for this. Those who are inside, that is, those who have already registered themselves for getting contracts, will not allow anybody else to get in. As a matter of fact, one industrialist told me, "Sir, we are paying money not only for ourselves. We are also paying money to see that other people are not allowed to come in." It may be said, 'If you are unable to get yourself registered with the DGSD you can apply to the NSIC'. I understand that the NSIC is worse than the DGS & D. Therefore, I request the Hon. Minister to take up this important matter also. Supplies to Government have now assumed a large proportion. The other day, the Hon. the Minister for Rural Industries inaugurated a pharmaceutical unit at Alathur and the Hon. the Health Minister presided over that function. At that time, the Hon. the Minister for Rural Industries said that the Hon. the Health Minister would be able to purchase the



pharmaceutical items manufactured in that unit. Sir, if the unit is not registered with the DGS & D or with the MSD, it will not be possible either for the Hon. the Health Minister or for the Hon. the Minister for Rural Industries to make purchases from that unit.

If they do not register themselves with the D.G.S. & D or M.S.D., it will not be possible either for the Hon. the Minister for Health or the Hon. the Minister for Rural Industries or the Hon. the Minister for Industries to effect the purchases. From my own experience for the last 20 years in business, I know it will not be possible. Unless one registers his product with D.G.S. & D, nobody can help him.

There is one special fact relating to pharmaceuticals. Our Government are supporting only Ayurveda and we are supporting the industries in North India. One Company is producing Ayurveda medicine and another Company is producing Siddha medicine. Even though the Siddha medicine is priced low, the Ayurveda medicine is preferred. The Government should have a policy to help the small scale industries in the State. I will talk with the Hon. Minister later on and I do not want to divulge it now. I will also bring one more point to the attention of the Hon. Minister. When a medicine is purchased, the Company in Bombay can procure raw material and manufacture the medicine in large quantities within a short time. The small scale and medium scale industries will require at least three months' time. The Govtrnment should have a liberal policy and give encouragement to the small-scale industries. If such encouragement is not forthcoming, these industries cannot make supplies to the Government.

I would also wish to mention another most important point. My hon. Friend mentioned about the Telex and the Telephone facilities. I have also two or three telephones in, my residence and office. It so happens that if I make a call from my residence, the connection goes to the office and the call made from the office comes to the residence. There is always connection to the wrong number a d I have to waste six or seven calls before I could get connection to the correct person. Unfortunately, the whole bill is put on my head. Regarding S.T.D. facilities, during the period when I was away at Japan and when my phone was not at all used, I got a bill for Rs. 1,500. I wrote to the Telephones Department saying that I had not used the telephone and I could not use it because of my absence. The Department says that if I had not used, somebody else might

[Thiru G. Swaminathan] [1983 ஏப்ரல் 15

have used it, for which the Department is not responsible. Ultimately they say, "If you do not pay the bill, we will cut off the phone connection". This is the kind of situation in regard to telephone.

(பிற்பகல் 12-20)

The Government of India took a decision in the matter and it was announced in the newspapers. They said that the telephones of all the VVIPs and VIPs in every place would be monitored. They also made a classification of the VIPs. I found that, along with the Governors, Chief Ministers and Ministers, even Legislators were classified as VIPs in the circular of the Government of India. So, I was happy that, as a Legislator, I had also become a VIP. In that notification, they said that everyday someone from the Telephones Department would phone up to the residence of the VIP to find out whether the telephone was in order and that defects, if any, would be rectified. I think that this notification was made some three months ago. Probably, the Librarian of the Legislature Library or somebody else may be able to give the correct date to the Hon. Minister. But what ultimately happened was this. Instead of the people of the Telephones Department phoning up to me everday, it was actually I who was 'phoning up to the Telephones Department because my telephone was going out of order everyday. This is the condition in which the Telephones Department is working. They are also not supplying telex or teleprinter machines to the industries. In fact, in our concern, even though we have made substantial amounts of exports, we have been waiting for a telex machine for the past three years. We are also waiting for a teleprinter machine for a long time and we are not able to get it. Unless these things are set right, it will be very difficult for any industry to carry on its operations in a climate of non-communication.

Sir, I would also like to say a few words about the allotment of cement to industries. It is becoming very difficult to get cement. I know that the Government also are feeling it difficult to get cement, and, then, to allot cement to the industries. They are now importing cement from the Korean countries. I would only plead with the Hon. Minister to see that those industries which require cement are supplied cement quickly because, in my opinion, the construction-cost is going up by nearly 10 per cent every year. Supposing you plan today for a construction at a cost of Rs. 20 lakhs, if the construction is delayed by another two years, you will have to shell out another Rs. 4 lakhs on that construction. In these days of heavy competition, non-availability of money from the Banks, non-availability of markets,



1983 ஏப்ரல் 15] [Thiru G. Swaminathan]

etc., it will be difficult for these industries to incur such extra cost. Therefore, I plead with the Hon. Minister to do something about this matter also.

Sir, I thank you for giving me a very fine opportunity to speak a few words on this Policy Note.

*திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு மேலவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கை குறித்த கொள்கைக் குறிப்பின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அந்தத் துறை கடந்த ஆண்டு நல்ல முறையில் செயல்பட்டதற்காக முதலில் நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*கடந்த ஆண்டு எலக்ட்ரானிக்ஸ் துறையின் உற்பத்தி ரூ. 19 கோடி அளவுக்கு இருந்தது என்பதும், அதுவும் வரக்கூடிய ஆண்டில் அதன் உற்பத்திப் பெருக்கம் ரூ. 33 கோடி அளவுக்கு எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்க அம்சங்கள். அந்த நிலையை உண்மையிலேயே எட்டினால், அது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இதை நான் சொல்லும்போது—மாநிலங்கள் தொழில் துறையில் நல்ல முறையில் முன்னேறுவதற்கு உதவிகரமான நிலையை மத்திய அரசு எடுக்கவில்லை என்ற பின்னணியில்தான் சொல்லிப் பாராட்ட விரும்புகிறேன்.*

*மத்திய அரசின் தொழில் கொள்கை மாநிலங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய வகையில் இல்லை என்பது முதல் பிரச்சினை. நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு, தொடர்ந்து தொழில் துறையில் ஒரு பலவீனமான கொள்கைதான் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான அடிப்படை அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முறையில் நாம் வெற்றி கண்டாலொழிய, தொழில் துறையில் முன்னேற்றகரமான காரியங்களை நாம் ஈட்டுவது கடினம்தான் என்பது நமக்குத் தெரியும். இருந்த போதிலும் நம் மாநிலத்தில் எலக்ட்ரானிக்ஸ் துறையில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம் பாராட்டுக்குரியதாகும். இருப்பினும், அடிப்படையிலான பிரச்சினைகளுக்காக நம் மாநில அரசு தொடர்ந்து பாடுபட வேண்டியது மிகமிக அவசியமாகும்.*

*அடுத்து, ஜியாலாஜிகல் மற்றும் மைனிங் துறையில் ஒரு தனிப் பிரிவை அமைத்து, அதை விரிவுபடுத்தவும், ஒழுங்குபடுத்தவும் ஸ்ட்ரீம் லைன் செய்ய—எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற முயற்சிகளும் வரவேற்கக்கூடிய அம்சங்*

industry should have a full-fledged analytical laboratory." In spite of that, the application was rejected by that officer and my Manager was not able to do anything about that. Then, I had to go to the Director of Industries myself. I explained to him that an analytical laboratory was a must for a pharmaceutical industry Ultimately, I got the permit for cement. But, by that time, nine months had elapsed and the construction was already over. By this. I was put to a loss. I have not come here to speak about my loss. After all, it was a small loss. But, I want to say that the officers in charge of the District Industries Centres should have an attitude to help the industries. If that officer who is on the spot wants to delay a matter, there may be another officer above him who may want to delay the matter still further because we have got enough officers who have the power to delay matters.

Sir, I would like to say a few words about registration with the NSIC, DGS & D, MSD, etc. It is mentioned in the Note that many industries have registered themselves with the DGS & D, MSD, NSIC, etc. All these are Central Government organisations. It is not easy for anybody to get his industry registered with these organisations, however perfect he may be. There is a lot of red-tape and corruption in these. Even though there are thousands of industries in Tamil Nadu, if you see, on an average, the number of industries registered with the DGSD, you will find that only a few hundreds in every line of activity have registered their names with that organisation. There is a reason for this. Those who are inside, that is, those who have already registered themselves for getting contracts, will not allow anybody else to get in. As a matter of fact, one industrialist told me, "Sir, we are paying money not only for ourselves. We are also paying money to see that other people are not allowed to come in." It may be said, 'If you are unable to get yourself registered with the DGSD you can apply to the NSIC'. I understand that the NSIC is worse than the DGS & D. Therefore, I request the Hon. Minister to take up this important matter also. Supplies to Government have now assumed a large proportion. The other day, the Hon. the Minister for Rural Industries inaugurated a pharmaceutical unit at Alathur and the Hon. the Health Minister presided over that function. At that time, the Hon. the Minister for Rural Industries said that the Hon. the Health Minister would be able to purchase the



pharmaceutical items manufactured in that unit. Sir, if the unit is not registered with the DGS & D or with the MSD, it will not be possible either for the Hon. the Health Minister or for the Hon. the Minister for Rural Industries to make purchases from that unit.

If they do not register themselves with the D.G.S. & D or M.S.D., it will not be possible either for the Hon. the Minister for Health or the Hon. the Minister for Rural Industries or the Hon. the Minister for Industries to effect the purchases. From my own experience for the last 20 years in business, I know it will not be possible. Unless one registers his product with D.G.S. & D, nobody can help him.

There is one special fact relating to pharmaceuticals. Our Government are supporting only Ayurveda and we are supporting the industries in North India. One Company is producing Ayurveda medicine and another Company is producing Siddha medicine. Even though the Siddha medicine is priced low, the Ayurveda medicine is preferred. The Government should have a policy to help the small scale industries in the State. I will talk with the Hon. Minister later on and I do not want to divulge it now. I will also bring one more point to the attention of the Hon. Minister. When a medicine is purchased, the Company in Bombay can procure raw material and manufacture the medicine in large quantities within a short time. The small scale and medium scale industries will require at least three months' time. The Govtrnment should have a liberal policy and give encouragement to the small-scale industries. If such encouragement is not forthcoming, these industries cannot make supplies to the Government.

I would also wish to mention another most important point. My hon. Friend mentioned about the Telex and the Telephone facilities. I have also two or three telephones in my residence and office. It so happens that if I make a call from my residence, the connection goes to the office and the call made from the office comes to the residence. There is always connection to the wrong number a d I have to waste six or seven calls before I could get connection to the correct person. Unfortunately, the whole bill is put on my head. Regarding S.T.D. facilities, during the period when I was away at Japan and when my phone was not at all used, I got a bill for Rs. 1,500. I wrote to the Telephones Department saying that I had not used the telephone and I could not use it because of my absence. The Department says that if I had not used, somebody else might

[Thiru G. Swaminathan] [1983 ஏப்ரல் 15

have used it, for which the Department is not responsible. Ultimately they say, "If you do not pay the bill, we will cut off the phone connection". This is the kind of situation in regard to telephone.

(பிற்பகல் 12-20)

The Government of India took a decision in the matter and it was announced in the newspapers. They said that the telephones of all the VVIPs and VIPs in every place would be monitored. They also made a classification of the VIPs. I found that, along with the Governors, Chief Ministers and Ministers, even Legislators were classified as VIPs in the circular of the Government of India. So, I was happy that, as a Legislator, I had also become a VIP. In that notification, they said that everyday someone from the Telephones Department would phone up to the residence of the VIP to find out whether the telephone was in order and that defects, if any, would be rectified. I think that this notification was made some three months ago. Probably, the Librarian of the Legislature Library or somebody else may be able to give the correct date to the Hon. Minister. But what ultimately happened was this. Instead of the people of the Telephones Department phoning up to me everday, it was actually I who was phoning up to the Telephones Department because my telephone was going out of order everyday. This is the condition in which the Telephones Department is working. They are also not supplying telex or teleprinter machines to the industries. In fact, in our concern, even though we have made substantial amounts of exports, we have been waiting for a telex machine for the past three years. We are also waiting for a teleprinter machine for a long time and we are not able to get it. Unless these things are set right, it will be very difficult for any industry to carry on its operations in a climate of non-communication.

Sir, I would also like to say a few words about the allotment of cement to industries. It is becoming very difficult to get cement. I know that the Government also are feeling it difficult to get cement, and, then, to allot cement to the industries. They are now importing cement from the Korean countries. I would only plead with the Hon. Minister to see that those industries which require cement are supplied cement quickly because, in my opinion, the construction-cost is going up by nearly 10 per cent every year. Supposing you plan today for a construction at a cost of Rs. 20 lakhs, if the construction is delayed by another two years, you will have to shell out another Rs. 4 lakhs on that construction. In these days of heavy competition, non-availability of money from the Banks, non-availability of markets,



1983 ஏப்ரல் 15] [Thiru G. Swaminathan]

etc., it will be difficult for these industries to incur such extra cost. Therefore, I plead with the Hon. Minister to do something about this matter also.

Sir, I thank you for giving me a very fine opportunity to speak a few words on this Policy Note.

*திரு. ப. மாணிக்கம் :* மாண்புமிகு மேலவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கை குறித்த கொள்கைக் குறிப்பின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அந்தத் துறை கடந்த ஆண்டு நல்ல முறையில் செயல்பட்டதற்காக முதலில் நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு எலக்ட்ரானிக்ஸ் துறையின் உற்பத்தி ரூ. 19 கோடி அளவுக்கு இருந்தது என்பதும், அதுவும் வரக்கூடிய ஆண்டில் அதன் உற்பத்திப் பெருக்கம் ரூ. 33 கோடி அளவுக்கு எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்க அம்சங்கள். அந்த நிலையை உண்மையிலேயே எட்டினால், அது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இதை நான் சொல்லும்போது—மாநிலங்கள் தொழில் துறையில் நல்ல முறையில் முன்னேறுவதற்கு உதவிகரமான நிலையை மத்திய அரசு எடுக்கவில்லை என்ற பின்னணியில்தான் சொல்லிப் பாராட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசின் தொழில் கொள்கை மாநிலங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய வகையில் இல்லை என்பது முதல் பிரச்சினை. நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு, தொடர்ந்து தொழில் துறையில் ஒரு பலகீனமான கொள்கைதான் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான அடிப்படை அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முறையில் நாம் வெற்றி கண்டாலொழிய, தொழில் துறையில் முன்னேற்றகரமான காரியங்களை நாம் எட்டுவது கடினம்தான் என்பது நமக்குத் தெரியும். இருந்தபோதிலும் நம் மாநிலத்தில் எலக்ட்ரானிக்ஸ் துறையில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம் பாராட்டுக்குரியதாகும். இருப்பினும், அடிப்படையிலான பிரச்சினைகளுக்காக நம் மாநில அரசு தொடர்ந்து பாடுபட வேண்டியது மிகமிக அவசியமாகும்.

அடுத்து, ஜியாலாஜிகல் மற்றும் மைனிங் துறையில் ஒரு தனிப் பிரிவை அமைத்து, அதை விரிவுபடுத்தவும், ஒழுங்குபடுத்தவும் ஸ்ட்ரீம் லைன் செய்ய— எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற முயற்சிகளும் வரவேற்கக்கூடிய அம்சங்

[திரு. ப. மாணிக்கம்] [1983 ஏப்ரல் 15

களாகும். இத்தகைய ஒழுங்குபடுத்தும் முயற்சிகள் அல்லது விரிவுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறபோது, நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றாலும் நடப்பில் அப்படி இல்லை. எனவே இதை வரவேற்கிறேன் என்று சொல்லுகிறபோதும், ஓரளவுக்கு எச்சரிக்கையோடும், ஜாக்கிரதையோடும்தான் வரவேற்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

சென்ற ஆண்டு, மதுரை மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதியில் மாணிக்கக் கல் கிடைக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. அது சம்பந்தமாக ஜியாலஜிகல் துறை சில முக்கியமான தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறது, அவ்வாறு அந்தத் தகவல்கள் முழுமையாகச் சேகரிக்கப்பட்ட பின்னர், அது அவையில் வைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த அறிக்கையைப் பார்க்கிற வாய்ப்பை இந்த அவை இன்னும் பெறவில்லை. அப்படிப்பட்ட மாணிக்கக் கற்கள் கிடைக்கும் நிலங்கள் தனியாரிடம் இருக்கின்றன. அவர்களிடத்திலிருந்து அந்த நிலங்களை எடுப்பதில் சிரமம் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. உண்மையில் அந்தப் பகுதியில் மாணிக்கக் கற்கள் கிடைக்கிற வாய்ப்பு இருக்குமானால், அது நவீன தொழில்கள் பலவற்றிற்கும் பல்வேறு வகைகளில் பயன்படும். எனவே அது குறித்த அறிக்கையை எங்களுக்கு அரசு தருவதில் காலதாமதம் இருந்தாலும், அந்த அறிக்கையின் மீது துறை வேகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், மற்றவற்றைவிட அதற்கு முதலிடம் தந்து காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் மாணிக்கக் கற்கள் என்பவை வெறும் நகைகள் செய்வதற்கு மட்டுமல்ல, பல்வேறு தொழில்களுக்கும் பயன்படுகின்றன.

அடுத்து, நம் அரசு, ஏற்கெனவே மோபெட் என்று சொல்லப்படும் 'மயூரா' என்னும் சாதனம் உற்பத்தி செய்து வருகிறது. அதுபற்றிய ஒரு குறிப்பு சிறு தொழில்கள் பற்றி நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில் இருக்கிறது. அந்த நிறுவனம் நட்டத்தில் நடக்கிறது என்றும், அதிக முதலீடு செய்து நடத்த வேண்டியிருக்கிறதென்றும், சென்னையை அடுத்துள்ள மறைமலை நகரை ஒட்டிய பகுதியில் அதற்காகப் புதிய தொழிற்சாலை கட்டியிருப்பதாகவும் அதுபற்றிய விசேஷ அறிக்கை ஒன்று ஆய்வு செய்யப்பட்ட பிறகு அத்தொழிற்சாலை பற்றிய முடிவு எடுக்கப்படும் என்றும் சூசகமாகச் சொல்லிவிட்டு, இங்கே அது மூடப்படும் என்றே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை பற்றி எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்களைப் பார்த்



1983 ஏப்ரல் 15] [திரு. ப. மாணிக்கம்]

தால், தொழில் நுணுக்கத் துறையில் அது ஒரு நல்ல சாதனையாகத்தான் தெரிகிறது என்றாலும் அதுபற்றி மாறுபட்ட கருத்துக்களும் தெரிவிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் மற்றொரு பெரிய நிறுவனத்தால் தயாரிக்கப்படும் மோபெட், அந்த நிறுவனத்திற்கு இருக்கும் நிதி வசதி, தொழில் திறமை, விற்பனைத் திறமை மற்றும் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் முறையில், அவர்கள் சிறந்து விளங்குவதால், அவர்கள் தங்களின் உற்பத்தியைச் சிறப்பாகச் செய்கிறார்கள் என்றும், அதைப்போலவே மயூரா உற்பத்தியிலும் நாம் சிறந்த முறையில் கவனம் செலுத்திச் செய்தால் உண்மையிலேயே அது மிகச் சிறந்த சாதனமாக இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. இதைக் குறித்து நான் அரசுக்கு ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். ஊரக மற்றும் சிறுதொழில் துறையிலிருந்து அந்த நிறுவனத்தைத் தொழில் துறைக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் நான் ஏதோ இரண்டு அமைச்சர்களுக்குள் முரண்பாட்டை உருவாக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பு உடையது. எனவே இதுபற்றி அமைச்சரவை ஆராய்ந்து பார்த்து, தொழில் துறைக்கு இந்தத் தயாரிப்பை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் அப்படி இந்தத் தயாரிப்பைத் தொழில் துறைக்கு மாற்றி, அதை விரிவுபடுத்தி தயாரிக்க முயன்றால், அதற்கு நல்ல எதிர்காலம் இருக்கும் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட மோபெட் சாதாரணமாக நம்முடைய நாட்டில் உள்ள சாதாரண மற்றும் நடுத்தர மக்களால் பயன்படுத்தப்படுகிறது. சென்னை மதுரை, கோவை நீங்கலாக சேலம், நெல்லை போன்ற நகராட்சிகளெல்லாம் மாநகராட்சிகளாக உயர்த்தப்பட இருப்பதால், அந்தப் பகுதிகளில் இன்னும் அதிகமான அளவுக்கு இத்தகைய மோபெட் வாகனங்கள் தேவைப்படும். அதற்கு நல்ல மார்க்கெட் இருக்கும் என்ற முறையில் மயூராவை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது அது தொழில் துறையைச் சார்ந்ததல்ல என்றாலும்கூட, அமைச்சரவை இது குறித்து முடிவு செய்து, தொழில் துறைக்கு மோபெட் தயாரிப்பைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், அதன் உற்பத்திக்கும் விரிவாக்கத்திற்கும் நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று நிபுணர்களால் சொல்லப்படுகிறது. இந்த வகையில் புதிய நிபுணத்துவம் தேவை என்றாலும், அதைப் பெற வேண்டிய இடத்திலிருந்து பெற்று முறையாகச் செய்ய வேண்டியது அவசியம்.

தொழில் துறையில் போட்டிகள் உண்டு என்று தெரிந்திருந்தும், இதன் காரணமாக ஒரு நெருக்கடி ஏற்படும் என்று உணர்ந்திருந்தும், இந்தக் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பெரிய நிறுவனங்கள் என்பவை, அரசுத்

துறையில் மலிவான விலையில் இப்படிப்பட்ட வாகனங்களை உற்பத்தி செய்ய இலேசில் அனுமதிக்க மாட்டார்கள். அதனால் ஏற்படக்கூடிய சங்கடங்களை நாம் நம்முடைய அரசு நிபுணர்களைக் கொண்டு ஆலோசித்து, நடுத்தர மக்களுக்கு அது கிடைக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பம்பாய், கண்ட்லா போன்ற பகுதிகள் ஃபிரி போர்ட் என்று செய்யப்பட்டிருக்கின்றன. நாம், சென்னையை அடுத்துள்ள மீனம்பாக்கம் பகுதியை ஃபிரி போர்ட் பகுதியாக அறிவிக்க உத்தேசித்துள்ளோம். அதற்காக என்று சில ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விமான நிலையத்தை ஒட்டியுள்ள பகுதியைப் போய் ஃபிரி போர்ட் என்று அறிவிப்பது எந்த அளவுக்குப் பயன்படும் என்று தெரியவில்லை. துறைமுகப் பகுதிகள்தான் அதற்குத் தகுந்த இடமாக இருக்க முடியும். தமிழ் நாட்டில் சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களை மத்திய அரசு அனுமதிக்காது. காரணம் அவை பெரிய ஆழ்கடல் துறைமுகங்கள் . . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி முடிக்கும்வரை, அவையின் நேரம், அவையின் அனுமதியோடு நீட்டிக்கப் படுகிறது.

(பிற்பகல் 12-30)

**திரு. ப. மாணிக்கம்:** மீனம்பாக்கத்தைச் செய்வதை விட அரசு மறுபரிசீலனை செய்து, கடலூர் துறைமுகத்தைப் (Free Port) ஃபிரி போர்ட் என்று தேர்ந்தெடுக்கலாம். அல்லது வேறு ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்தாலும் பரவாயில்லை. பல்வேறு ஆய்வுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. மீனம்பாக்கத்தின் வரம்புகள் மிகக் குறைவு. அதைவிட கடலூர் சிறந்ததாக இருக்கும். கடலூருக்குப் பக்கத்திலே நெய்வேலி, சேலம் இருக்கிறது. ஏற்கெனவே தமிழ்நாட்டில் உள்ள தொழில் வளர்ச்சி ரிப்போர்ட்டில் கடலூர், நெய்வேலி, சேலம் ஆகியவற்றைச் சேர்த்துவிட்டால், தொழில்கள் வளர வாய்ப்பு இருக்கிறது என்று ஒரு பழைய ஆய்வு அறிக்கை இருக்கிறது. அந்த முறையில் நாம் அந்தத் துறைமுகத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாக தொழில் வளர்ச்சி ஏற்படும். அரசு அறிக்கையிலேகூட கடலூர் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும், தொழில் வாய்ப்பு உள்ள இடங்களில் அதுவும் ஒன்றாக இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த முறையில் சால்ட்-பேஸ்ட் கெமிக்கல் காம்ப்ளக்ஸ் உருவாக்குவதற்கு வாய்ப்புக்கள் நிறைந்த



இடமாக இருக்கிறது. அந்த முறையில் அதை ஃபிரி போர்ட் என்ற முறையில் அரசு ஆய்வு செய்ய முயலுமானால் உதவிகரமாக இருக்கும். இந்தக் கருத்துக்களைத்தான் நான் சொல்ல விரும்பினேன்.

மீண்டும் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். ஏற்கெனவே ஓட்டுச்சத்திரத்தைப் பற்றி இருக்கின்ற ஆய்வு அறிக்கையை அவைக்குத் தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

Dr. M. A. MUTHIAH CHETTIAR: Mr. Deputy Chairman, Sir, once more I offer my felicitations to the Hon. the Minister for Industries on the great enthusiasm he has been showing all these years in the development of industries in our State. He has succeeded, to a great extent in increasing the number of small-scale industries. The coverage by these industries has also doubled and it is a very creditable achievement.

The Hon. Minister has done well in the matter of declaration of areas where new industries would get 15 per cent subsidy. Sir, as a matter of fact, the entire State is industrially backward now. This is just the time when the Hon. Minister must get the Government of India to agree to declare all taluks in this State as industrially backward. It will be the best thing to da. I do hope that the Hon. Minister will earnestly take up the matter with the Government of India and see that the 15 per cent subsidy is given to all new industries started in this State. If there is any difficulty on the part of the Central Government in paying this 15 per cent subsidy at the time of starting the industry, the State Government should pay the money to the industry in advance and, then, recover it from the Government of India when they give it.

The hon. Member Thiru Swaminathan rightly pointed out the delay on the part of big industries in setling the bills of small industries. What are the Industrial Estate Officers and the Assistant Directors of Industries doing in this matter? Why should not the Director of Industries enjoin upon his junior officers the need to have a watch over this? Weekly statements should be obtained from the big industries showing the number of bills pending with them and the amount covered by those pending bills. After all, the big industries get money from the banks and there cannot be any difficulty in making payments to the small industries. But, there is one difficulty in this. A person owning a small industry may not

complain to an officer of the Industries Department about the non-payment of bills by a big industry. Even if the officer asks him, he will say. Sir, it is a big company. If I make a complaint to you, they will stop placing orders with me and they will buy their requirements from somebody else.' That kind of fear will come. This should also be taken care of and the big industries should be told not to discourage the small industries. We must continue to pay, as it has been given for two to three years. I do hope it will be possible.

One other thing is about the I.T.Is. about which I have mentioned on a number of occasions. I do not know who is in charge of this, whether it comes under the Education Minister or the Industries Minister. I think the I.T.Is. are a mere farce and I wish they are abolished soon. The qualification for entrance is fixed as matriculation which is not at all necessary for training as a Turner. Formerly we had Junior Polytechnics and one was there in Chettinad about 35 years ago and a sum of Rs. 20 was given as stipend in those days when the prices of articles were very cheap. Then the qualification prescribed was only IV Form. Somehow the Junir Polytechnics were discontinued. For I.T.I., on matriculation need not be insisted on. Now what happens is that a Matriculate tries to enter the Polytechnic and if he is not successful, he comes to the I.T.Is. For Turner's job, no such basic qualification is essential. He will get a good salary after he passes this. Now, it takes a lot of time for him to qualify in the polytechnic. Therefore, the Industrial Training Institutes should be converted into polytechnics. Besides, we must also have junior polytechnics. Of course, this may not be in the charge of the Hon. the Minister for Industries. But, he can collaborate with the Hon. the Minister for Education and the Director of Technical Education and see that proper arrangements are made for the running of junior polytechnics and for the conversion of Industrial Training Institutes into regular polytechnics. I have always said that every Panchayat Union must have a junior polytechnic. Later on, the Panchayat Union can also have a polytechnic besides the junior polytechnic. So also, for every taluk there should be a regular polytechnic. After all, it is not necessary for us to have too many engineering colleges. A polytechnic in every taluk is quite enough. A candidate who passes the Polytechnic examination should be entitled, after five years, to appear for the B.E. Degree Examination without studying in the Engineering College. If he is a candidate with a service of three years



in a factory, it is enough if he is asked to study only for two years, that is, in the fourth year and the fifth year of the Engineering College. If that is done, the rush for admissions to Engineering Colleges and the need to interview thousands of candidates can be avoided. I made this suggestion even the other day when the Hon. the Minister for Education was present here. There must be co-ordination between the Hon. the Minister for Education and the Hon. the Minister for Industries in this matter. The Director of Technical Education is a very enthusiastic man. If the quality of our polytechnic education is good, the honour goes to him. If my suggestion is left to him for implementation, I am sure that he will do it. I must congratulate the Hon. Minister on having stated a polytechnic at Aranthangi. It is mentioned that a polytechnic would be started at Pudukkottai also. I do not know whether they have started it or not. Probably, the Hon. Minister will state this in his reply. My plea is that every taluk should have a polytechnic. It is not only Pudukkottai that should have a polytechnic, but every taluk in the State should have a polytechnic.

Thiru G. SWAMINATHAN: I think the Hon. Minister will be happy that it belongs to his place.

Dr. M. A. MUTHIAH CHETTIAR: Pudukottai is not in Ramanathapuram District. It may be nearer to Ramanathapuram District. So far as I am concerned, I will consider myself to be more a Tanjorean.

One other important matter and this is a very serious matter. This is in regard to Companies floated and run in Tamil Nadu. Some of them may be in danger. I hope the Hon. Minister will be aware of this. I do not want to mention the name of the particular industry in which the Company is going into the hands of persons not connected with the industry. In today's papers there is a statement in 5 columns by G. K. Reddy. I am sure the Hon. Minister will look into it and see that no outsider buys a share. We must have a voice in the running of the Company. The four Financial Institutions which are in Bombay try to sell the shares to others. We must make a condition that when they want to sell any share, they should sell it only to the promoters. The promoter who has taken all the trouble, who has spent his time and money should not be deprived of his rightful share in the Company. Now, the shares are sought to be sold to a complete stranger. Is it fair?

(பிற்பகல் 12-40)

Thiru G. SWAMINATHAN: I think the hon. Member is aware of the fact that the matter is now in the Court.

Dr. M. A. MUTHIAH CHETTIAR: I know that it is in the Court. That is why I did not mention the name. I did not mention the name at all. It is not fair to mention the name of the company when the matter is *sub-judice*. But, I hear that there are other companies also. In respect of those companies also, some attempts are likely to be made. At least that can be prevented so that the promoters need not go to Court. A misunderstanding on the part of the promoters has led to the Court proceedings. The Hon. Minister also knows this. The Government should have a list of all companies functioning in Tamil Nadu to the equity capital of which these four institutions have subscribed. The list should show the amount of equity capital that these institutions have subscribed and also the amount of preference capital that these institution have subscribed. Of course, we are not bothered about preference capital now. No doubt, preference capital has now become a taboo and everybody has convered his preference shares. The share prices are not going up now and the share-market is very steady. Even the jobbers, that is, the speculators are not very enthusiastic. If speculation goes on to some extent, as it does in the Bombay market, it is good. Only if it goes on to a large extent, it is bad. Till about 10 or 12 years ago, the Government of India had no control over the Bombay Stock Market. Now, they have got the control. Even when the control is there without the knowledge of the Minister at the top, certain things happen. Of course, we are not concerned with other States and it is not fair on my part to ask the Minister of Tamil Nadu to set right certain things in Bombay. But, as I suggested earlier, he should have a complete list of companies. He should be very vigilant in this matter and see that such transfers of shares to outsiders are prevented. For this, he must get in touch with the Industries Minister at the Centre, the Finance Minister at the Centre and also the Governor of the Reserve Bank of India. Of course, he cannot see the Reserve Bank Governor directly. But, he can get in touch with him through the Government of India. He must get in touch with these people and see that a written order is issued. There is no point in issuing oral orders because they may say that the Secretary who received the oral orders had retired. A written order should be issued saying that the shares contributed by these four institutions should be offered for sale, in the first instance, to the promoters. If the



promoter does not want it, it is a different matter. They should be asked to sell the shares at the market price and they need not show any concession. If the promoter is not able to find money immediately, let those institutions wait for some time. If they cannot wait for these people, for whom are they going to wait? I am making this suggestion as an alternative.

The hon. Member Thiru Damodaran was pleading for an Advisory Committee for every Ministry. I want to remind the House that since 1920, there was an Advisory Committee for every Ministry. What is the harm in having such advisory committees consisting of 3 Members of the Assembly and 2 Members of the Council and they may be belonging to different political parties? They will be making only suggestions. It is for the Minister to accept them or reject them. The Committee can meet 4 times a year and we can discuss any problem. There need not be any agenda and we can discuss the problems as and when they arise. Sometimes, in the replies given in this House, it is said, 'You can go and represent to the Collector of Ramanathapuram, Collector of Madurai or Collector of Thanjavur.'. What can the poor Collector do? The Collector will pointedly say, 'I will send up the application.' At least in the Department of Industries, a beginning should be made and an advisory committee should be set up. I am sure that the Hon. the Chief Minister Thiru M. G. Ramachandran, will agree to this. The formation of advisory committees can start with the Industries Department. Later on, it can be extended to other Departments. I have no doubt that this will be very useful. I have suggested this for a very long time. In the case of the Hindu Religious and Charitable Endowments (Administration) Department also, I have suggested the formation of an advisory committee and the Hon. Minister, Thiru Veerappan, knows it. In that Department also, the formation of advisory committee is very necessary because the local conditions will be known only to the Committee members. In the time of Thiru Rajaji, such committees were in existence.

Sir, I would like to say a few words about supply of cement. Now, levy system has been introduced in regard to the supply of cement. But, there has not been much benefit from it because of cuts in the supply of electricity. I hope that the hon. Members would have seen a news item in today's papers or in yesterday's papers. Thiru N. T. Rama Rao, Chief Minister of Andhra Pradesh, has made offers for the liberal supply of electricity, water, land, subsidies,

[Dr. M. A. Muthiah Chettiar] [1983 ஏப்ரல் 15

etc., for new industries started in that State. Attracted by this, some industrialists may go to Andhra Pradesh. Of course, our Government cannot object to those industrialists going to Andhra Pradesh. Karnataka also is short of electricity. You will be surprised to know that even in Kerala, shortage of electricity has become almost a permanent affair. It is also not possible to install generators because the prices are high. Oil for running the generators is also costly. Therefore, if a generator is installed, the cost of running that generator has to be added on to the cost of cement. Now, the cement factories have been asked to give 70 per cent of their production as levy cement and the remaining 30 per cent as non-levy cement. It is possible for the industry to increase the production by putting up the generator at a heavy cost. In that case the increased production should be allowed to the producer in the case of cement factory so that they may have incentive to have generators. Even though the banks give loans for putting up a generator, the interest charges are heavy. For eample, by the installation of generator the production is increased by 200 tons. We should not take that increased production and that is my resuest. We will ge more production and we will have no problem on account of scarcity of cement. The import of cement will also be reduced to that extent. I would plead with the Government to take up the matter with the nationalised banks for reduction of interest charges at least in so far as small-scale industries are concerned. Interest at the rate of 18 or 21 per cent is unconscionable. It may be 12 per cent. But 12 per cent will be possible only in Utopia. Fifteen per cent may be the rate to be fired. There is a real subsidy that the banks can offer. All of us are interested in the development of industry. I have no more points to make excepting to congratulate once again the Minister on his efficient running of the Industries Ministry. Thank you.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எலெக்ட்ரானிக் கைக்கடிகாரங்கள் விற்பதில் ஒரு கன்செஷன் அறிவித்திருந்தேன். அதை இங்கேயும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்காட் நிறுவனம் குவார்ட்ஸ் ஸ்பெஷல் டிஸ்கவுண்ட்டாக ஒரு தொகையைக் குறைத்துக்கொண்டு ஆணுக்கு டிஜிட்டல் கைகடிகாரங்களை தயாரிப்பதிலே ஈடுபட்டிருக்கிறது. அதிலே ஒரு கடிகாரம், பெண்ணுக்கு ஒரு கடிகாரம் என்று இரண்டு கடிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் போலவே சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம்.



1983 ஏப்ரல் 15]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பணம் கொடுத்துத்தானே வாங்கிக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஒவ்வொரு கடிகாரத்திற்கும் 25 ரூபாய் அளவுக்கு டிஸ்கவுண்ட்டாகக் குறைத்துக் கொண்டு கொடுக்கப்படுகிறது. 10 பர்சென்ட் விலையில் குறைத்துக் கொடுக்கப்படுகிறது. கடிகாரம் விலை ரூ. 150-லிருந்து ரூ. 170 வரையில் இருக்கின்றது. இரண்டு கடிகாரங்கள் வாங்குகின்றபோது, சுமார் ரூ. 50 வரையில் மொத்த விலையிலே குறைவாகக் கிடைக்கிறது. அந்த டிஸ்கவுண்ட் கொடுப்பதுபற்றி அங்கே அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு மேலவை உறுப்பினர்களுக்கும் அந்தச் சலுகை உண்டு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த கடிகாரங்களை நாங்கள் பார்த்ததில்லை. அதனாலே இங்கே அந்த இரண்டு கடிகாரங்களையும் கொண்டு வந்து வைத்தால், நாங்களும் அந்த கடிகாரங்களைப் பார்க்கலாம்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 ஆம் தேதி மானியக் கோரிக்கை அன்று உங்களுடைய அறையிலே அல்லது பக்கத்திலே வைக்கலாம். எவ்வாறான கடிகாரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பது இங்கே காட்சிக்கு வைக்கப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு கடிகாரம் போதும். இரண்டு கடிகாரம் என்று சொல்லி மனைவிக்கும் என்று இரண்டு வாங்குகின்றபோது, செலவு அதிகமாக ஆகிவிடுகின்றது. ஆகவே அதிலே டிஸ்கவுண்ட்டாகக் கொடுக்கின்ற சதவிகிதம் அதிகமாகக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஒரு கடிகாரம் போதும் என்றால் வாங்கிக் கொள்ளலாம். அவரவர்கள் வசதிப்படி வாங்கிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கான கைக்கடிகாரம் தயாரிக்கவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இரண்டு மூன்று கடிகாரங்கள்கூட சிலருக்குத் தேவைப்பட்டாலும் படலாம் என்று நினைக்கிறேன்.

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்] [1983 ஏப்ரல் 15

தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதம் மீண்டும் 20—1—1983 அன்று தொடர்ந்து நடைபெறும். மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-50)

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

Nil

B. *Reports, Notifications and Other Papers.*

*155. Policy Note on Backward Classes Department, 1983-84 (Tamil and English).

*156. Performance Budget on Backward Classes Department, 1983-84 (English).

* Circulated to all M.L.Cc. on 13—4—1983.

துணைக் காப்பக நூலகம் சென்னை-600 008





இணைப்பு I

குழாய்

அமைக்க
[26 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]
இடங்களில்

இவ்வாறு தூத்துக்குடியில் 30—1—1983 அன்று இரவு சுமார் 8-30 மணிக்கு தூத்துக்குடி கிணறு வடக்குக் காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் சென்னை நகரக் காவல் சட்டப் பிரிவு 75-ன் கீழ் குடிபோதையிலிருந்த தெரசபுரத்தைச் சேர்ந்த ஒரு ந ...ம் மற்றும் ஜேசல் காந்தா என்ற இரண்டு மீனவர்களைக் கைது செய்தார். உடனே தெரசபுரத்தைச் சேர்ந்த சுமார் 100 மீனவர்கள், காவலர் மீது கல்லெறிந்து தாக்கி கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்க முயற்சி செய்தனர். சப்-இன்ஸ்பெக்டர் சமாளித்துக் கைது செய்யப்பட்ட இருவரையும் மேற்படிக் காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்து விட்டார். உடனே மீனவர் அருகில் தெரசபுரத்துக்கு அருகாமையில் உள்ள மாதவன் நாயர் காலனிக்குச் இடைக்குச் சென்று அங்கே ஏற்கெனவே நடந்த தகராறுகள் காரணமாக பந்தோபஸ்துப் திண்டிவ பணி செய்து கொண்டிருந்த மூன்று காவலர்களைச் சுமார் 100 மீனவர்கள் வருகின்ற அடித்து அவர்களைக் கடத்திக் கொல்லப் போவதாக மிரட்டி கடற்கரைக்கு கொண்டு சென்று விட்டனர். தகவலறிந்த தூத்துக்குடி மத்திய காவல் ஆய்வாளர் ஒரு பலமான காவல் படையுடன் சென்று கடத்தப்பட்ட யோ மூன்று காவலர்களையும் மீட்டு மீனவர் கூட்டத்தை விரட்டி விட்டார். இரவு சுமார் 10-00 மணிக்கு அவர் திரும்பி வரும்போது மீனவர்கள் சுமார் 100 பேர் காவல் துறையினரைச் சூழ்ந்துகொண்டு அதிகமாகக் கல்லெறிந்து காவல் துறையினரைத் தாக்கியதோடு காவலரின் சுமார் 15 சைக்கிள்களைச் சேதப் படுத்தி ஒரு சைக்கிளையும் பிடுங்கிக் கொண்டனர். உடனே கூட்டத்தைக் கலைக்க தடியடி நடத்தியும் பயனில்லாத நிலையில், சட்டத்துக்கு விரோதமான அந்த வன்முறைக் கும்பலைக் கலைக்க இரவு சுமார் 10-30 மணிக்கு காவல் துறையினர் முதலில் 4 சுற்றுக்கள் 'பக்ஷாட்' குண்டுகளையும் பிறகு 5 சுற்றுக்கள் தோட்டாக் குண்டுகளையும் வானை நோக்கிச் சுட்டனர். அதன் பிறகே கூட்டத்தினர் கலைந்து சென்றனர். இத் துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமடையவில்லை. எவருக்கும் உயிரிழப்பும் இல்லை. காவலர்கள் ஆங்காங்கே பந்தோபஸ்துப் பணியில் அமர்த்தப்பட்டனர். இது தொடர்பாக தூத்துக்குடி கோட்டாட்சியர் மாஜிஸ்டிரேட் விசாரணை செய்யும்படி ஆணையிடப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. இது குறித்து தூத்துக்குடி வடக்குக் காவல் நிலையத்தில் 3 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வழக்குகள் புலன் விசாரணையிலுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவரும் திருநெல்வேலி கிழக்கு மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டார்கள் இப்போது நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு அமைதி நிலவி வருகிறது.

## இணைப்பு II

றிப்பின்

[238 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் கூ-பெறும். ீண்டும்

திண்டிவனம் நகரில் தற்போதுள்ள குடிநீர்த்திட்டம் இந்நகரிலிருந்து கி. மீ. தொலைவிலுள்ள ரெட்டணை கிராமத்திலுள்ள தொண்டியார் ஆற்ை ஆதாரமாகக் கொண்டு 1959 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதாகும். நீர் ஆத மான நீரூற்றுக் கிணற்றிற்குள் மேலும் இரண்டு குழாய் ஊற்றுக்கள் அமைக் பட்டுள்ளன. தொடர்ந்து 1975 ஆம் ஆண்டில் நீரூற்றுக் கிணற்றிற்கு அரு றுளைக் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. திண்டிவனம் நக தற்போதைய மக்கட் தொகை 56,520. தற்போதுள்ள குடிநீர் திட்டத் மூலம் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 68 லிட்டர் குடிநீர் வழங்க வசதி செய் பட்டுள்ளது. கோடைக் காலங்களில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 1 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2. பருவ கால மழை பொய்த்து தண்ணீர் பற்றாக்குறையினால் தி வனம் நகரம் மிகவும் பாதிக்கப்பட்டு, கிணறுகளிலும் நாளுக்கு நாள் நன்ை குறைந்துகொண்டு வருகிறது. இந்நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்த செய்ய இந்நகரிலோ அதற்கு அருகாமையிலோ தகுந்த நீர் ஆதாரமாக -84 அமைக்க தேவையான நிலத்தடி நீரும் (அல்லது) நல்ல நிலத்தடி நீரைக் கொண்ட ஆறு ஏதுவும் இல்லை. இந்நிலையை நிவர்த்தி செய்ய கீழ்க்கண் டுள்ள நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டன :—

(i) திண்டிவனம் நகரில் 1981 ம் ஆண்டு வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் தண்ணீர்ப் பற்றாக்குறை மிகவும் அதிகம் உள்ள இடங்களுக்குப் பரவலாக 11 ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து தண்ணீர்ப் பற்றாக்குறை குறைக்கப் பட்டது.

(ii) மேலும் 1981-ல் திண்டிவனம் குடிநீர்த் திட்ட தலைமை இடத்திற்கு தொடர்ந்து நீர் ஏற்றும் பணிக்கு மின்சாரம் கிடைக்கும் பொருட்டு தனி மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

(iii) அக்டோபர் 1982-ல் 30 ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து தண்ணீர்த் தட்டுப்பாடு அதிக அளவில் குறைக்கப்பட்டது.

(iv) மேற்கூறிய 41 ஆழ்குழாய் கிணறுகள் நீங்கலாக, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1982–83 ல் மேலும் 10 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட் டுள்ளன.





(v) தற்போது வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் மேலும் 14 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க (2 ஆழ் குழாய்க் கிணறுகள் ராஜாங்குளத்தில் அமைக்கவும் மீதம் உள்ளவைகளை நகரில் இன்னும் தட்டுப்பாடு அதிகம் உள்ள இடங்களில் அமைக்கவும்) துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு திண்டிவனம் நகரில் அனைத்துப் பகுதிகளுக்கும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(vi) தண்ணீர் விநியோக மூலம் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

(vii) குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்த பொறியாளர்கள் பொன்னையாற்றின் குறுக்கே உள்ள சாத்தனூர் அணைக்கட்டின் கீழ் ஆற்றின் மேற்பரப்பிலுள்ள தண்ணீர் (அல்லது) திருக்கோவிலூர் அணைக்கட்டிற்கு அருகில் பொன்னையாற்றின் நீர் (அல்லது) பண்ருட்டிக்கு அருகாமையில் கிடைக்கும் நிலத்தடி நீரையோ எதை இயலுமோ அதை ஆதாரமாகக் கொண்டு திண்டிவனம் நகருக்குக் குடிநீர் திட்டம் அமைப்பது என்று ஆய்வு செய்து வருகின்றனர்.

(3) மேற்கூறிய நடவடிக்கைகளால் திண்டிவனம் நகரில் குடிநீர் விநியோக தட்டுப்பாட்டைக் களைய நகராட்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

(4) மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 1996-ம் ஆண்டில் இந்நகரின் ஜனத்தொகை 78,000 ஆகவும் 2011-ல் 1,00,000 ஆகவும் இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. நீண்ட கால திட்டமாக ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள, முதற்கண் மேற்படி திட்டத்திற்கு நீர் வசதி அளிக்கும் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆய்வு வேலை தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இணைப்பு III.

(240.................ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### தொழில் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பும் திட்டமும்.

நம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தங்கள் பங்கினைச் செலுத்திவரும் துறைகளில் தொழில் துறையும் ஒன்றாகும். இம்மாநில மொத்த உற்பத்தியில், தொழில் துறையின் மூலம் 26·6 சதவீதம் கிடைக்கிறது. மாநிலத்தில் கிடைக்கப்பெறும் வருவாயில் பெரும் பகுதி தொழில் துறையிலிருந்து கிடைக்கிறது. இது வேளாண்மைக்கு அடுத்த நிலையில் முக்கியத்துவம் பெறுகிறது. வேளாண்மைத் துறையில் வருமானத்தையும், வேலை வாய்ப்பையும் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் எடுத்துவரும் நேரத்தில் இம்மாநிலத்தில் தொழில் ஆதாரங்கள் பெருக்குவதன் மூலந்தான் நம் மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் வருமானத்தையும் வேலைவாய்ப்பையும் மேலும் அதிகரிக்க இயலும் என்பது மறுக்க முடியாத ஒரு கருத்தாகும். இந்நோக்கத்தை எய்தும் பொருட்டு தொழில் என்பதன் கீழ் உள்ள பல் வேறு துறைகளில் அதாவது பெருந்தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்கள். குடிசைத் தொழில்கள், கதர்-கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் கீழ் பரவலாக ஒரே நிலையில் வளர்ச்சியை ஏற்படுத்த நாம் கவனமாகத் திட்டங்கள் தீட்டி வருகிறோம். தொழில் என்பதன் கீழுள்ள பல்வேறு பிரிவுகள் ஒன்றோடு ஒன்று போட்டியிடும் தன்மைத் தானவை அல்ல, மாறாக அவை ஒன்றுக்கொன்று உறுதுணையானவை ஆகும். அதிக அளவில் வேலைவாய்ப்பை ஏற்படுத்த இயலும் வண்ணம் தொழில் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பெருமளவில் முதலீடுகள் செய்ய வேண்டியுள்ளது.

2. இக்கொள்கையின் பயனாக, தமிழ்நாட்டில் அமைப்பு ரீதியாக உள்ள துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்களின் எண்ணிக்கை, 1976–77 ஆம் ஆண்டில் 8,570 ஆக இருந்தது. 1980–81-ல் 10,964 ஆக உயர்ந்துள்ளதைக் காணலாம். இது 27.9 சதவீத உயர்வாகும். அதே கால அளவில், மேற்சொன்ன தொழில்களில் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக்கான மூலதனம் 1976–77-ல் ரூ. 2,007 கோடியாக இருந்தது. 1980–81-ல் ரூ. 4,292 கோடியாக உயர்ந்துள்ளது. அதன் மூலம் சுமார்



113.91 சதவீதம் உயர்ந்துள்ளது. அதேபோல், மேற்சொன்ன தொழில்களில் பணியாற்றி வருபவர்களின் எண்ணிக்கை 1976–77-ல் 6.98 இலட்சமாக இருந்தது. 1980–81-ல் 8.78 இலட்சமாக அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உயர்வு சுமார் 25.75 சதவீதமாகும்.

3. இம்மாநிலத்தில் உள்ள தொழில்களின் மொத்த உற்பத்தியில், பதிவு செய்யப்பட்ட துறைகள் அளித்துள்ள பங்கானது, நடப்பு விலை வீதத்தின் அடிப்படையில் பார்க்கும்போது ரூ. 648.6 கோடியாக அல்லது 15.07 சதவீதமாக இருந்தது. 1980–81-ல் ரூ. 1229·2 கோடியாக அல்லது 20 சதவீதமாக உயர்ந்துள்ளது. 1976-77 ஆம் ஆண்டு இருந்ததைவிட இந்த உயர்வு சுமார் 89.5 சதவீதம் என்பதைக் காட்டுகிறது,

4. பெரிய தொழில் துறையும், நடுத்தரத் தொழில்களையும் ஏற்படுத்த அனுமதிக் கடிதம் அல்லது தொழில் உரிமம் வழங்குவது தொடர்பாக தனியார் துறை கூட்டு துறை மாநில அரசு நிறுவனங்கள் தெரிவித்த செயற் குறிப்புகளை மாநில அரசு, பரிந்துரை செய்து, மத்திய அரசுக்கு அனுப்பியது. நடுத்தர பெரிய தொழில்களை நிறுவ, மத்திய அரசு 1982 ஆம் ஆண்டில் 41 அனுமதிக் கடிதங்களை வழங்கியது. மேற்சொன்ன தொழில்களை அமைக்கத் தேவைப்படும் முதலீடுகள் சுமார் ரூ. 99!4 கோடியாகும். இத்திட்டங்கள் முடிக்கப்படுகையில், 8,400 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். 1982 ஆம் ஆண்டில், தொழில் வளர்ச்சித்துறை தலைமை இயக்குநரகம் (DGTD) பெரும்பாலும் நடுத்தர, சிறுதொழில் பிரிவுகளில் 92 பிரிவுகளைப் பதிவு செய்து கொண்டுள்ளது. சிறு தொழில் பிரிவில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்த விவரங்கள் 'சிறு தொழில்' என்ற தலைப்பின்கீழ் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

5. தொழில் வளர்ச்சிக்கு நீண்டகால, நடுத்தரக்கால நிதியுதவி அளிக்கப்படுவதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூற இயலாது. இம்மாநிலத்தில் அவ்வாறு நிதியுதவி அளிக்கும் இரண்டு நிறுவனங்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவை ஆகும். நடுத்தர, பெரிய தொழில்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ரூ. 30 இலட்சம் வரை கடன் வழங்குகிறது. தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் ரூ. 30 இலட்சம் முதல் 60 இலட்சம் வரை கடன் வழங்குகிறது. 1982–83 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ரூ. 50 கோடி அளவிற்கும், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் ரூ. 25 கோடி அளவிற்கும் கடன் வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

[1983 ஏப்ரல் 15

6. தொழில் வளர்ச்சியை முடுக்கி விடுவதற்கு அரசு அளித்து வரும் பல்வேறு செயலூக்கங்களில் முக்கியமான சில வருமாறு :—

பின்தங்கிய பகுதிகளுக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டம் :

(அ) இம்மாநிலத்திலுள்ள 57 வட்டங்களில் 33 வட்டங்களை பின்தங்கிய பகுதிகளாக மத்திய அரசு அறிவித்துள்ளது இத்துடன் மாநில அரசு மேலும் 24 வட்டங்களை பின்தங்கிய பகுதிகளாக அறிவித்துள்ளது. இவ்வட்டங்களில் அமைக்கப்படும் தொழில்கள் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் அளவிற்கு உதவித் தொகை பெற தகுதியுடையவையாகும். இத்திட்டங்களின் கீழ் 1982–83 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 3.30 கோடியாக இருக்கக்கூடும். இத்திட்டம், இம்மாநிலத்தின் பின்தங்கிய வட்டங்களில் முதலீடு செய்வதற்கு வழிகோலுவதாக உள்ளது.

விற்பனை வரிக்கான வட்டியில்லாக் கடன் வழங்கு திட்டம் :

(ஆ) தொழில்களுக்குச் சிறந்த முறையில் செயலூக்கம் அளிக்க வேண்டுமென்ற நோக்குடன், மாநில அரசு, இம்மாநிலத்தில் உள்ள 9 பின் தங்கிய மாவட்டங்களிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் வளாகத்திலும், குன்றத்தூர் வளர்ச்சி வட்டாரத்திலும் விற்பனை வரிக்காக வட்டியில்லாக் கடன் வழங்குவதற்கு ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் 1983-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரை 1.96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் வழங்கப்படும் தொகை 3 கோடி ரூபாயாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு இத்திட்டத்தை மாற்றியமைத்து, பகுதி I பகுதி II ஆகிய திட்டங்களின் கீழ் உதவித் தொகை பெறத் தேவையான தகுதியின் அளவை ரூ. 15 இலட்சம் 50 இலட்சத்திலிருந்து முறையே ரூ. 50 இலட்சம் ரூ. 1 கோடியாக உயர்த்தியது.

உதவித் தொகை வழங்கு புதிய திட்டம் :

(இ) இம்மாநிலத்தில், மின்அணுக்கருவிகள், மோட்டார்வண்டி துணைப் பாகங்கள், மருந்துகள்,மேலும் மருந்துப் பொருட்கள் ஆகிய தொழில்கள் மேலும் வளர்ச்சியுற நல்ல வாய்ப்புகள் உள்ளன. அவை விரைவாக வளர்வதற்கான சிறப்பியல்புகளை பெற்றுள்ளன. அத் தொழில்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நடப்பாண்டில் புதிய திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக



1983 ஏப்ரல் 15]

அறிவிக்கப்பட்ட பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளிலுமுள்ள மேற்குறிப்பிட்ட மூவகைத் தொழில்களுக்கு 10 சதவீதம் உதவித் தொகை கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ், விரைவாக வளர்ச்சிபெறும் இத்தொழில்கள் இம்மாநிலத்தில் செழித்து வளருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. கூட்டுத்துறையில் அல்லது முற்றிலும் மாநில அரசுக்குச் சொந்தமான தொழில்களைத் தொடங்குவதால் பல நன்மைகள் விளையுமென்பதை அரசு அறியும், முதலீடு அதிகமாகத் தேவைப்படும் தொழில்கள் அல்லது புதிய அல்லது இதுவரையிலும் தொடங்கப்படாத அல்லது மிகவும் உயரிய தொழில்நுட்ப அறிவு தேவைப்படுகிற தொழில்களே இவ்வாறு தொடங்கப்படுகின்றன. இவற்றைக் கருத்திற்கொண்டு, அரசு டிட்கோ, எல்காட், தமிழ்நாடு உப்புக் கழகம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் போன்ற பல கழகங்களை அமைத்துள்ளது. இவற்றில், டிட்கோ நிறுவனம் பொதுத்துறையில் பல பெரிய நடுத்தர தொழில்களைத் தொடங்கியுள்ளது. தனிப்பட்ட தொழில் முனைவர்களுடன் கூட்டு சேர்ந்து கூட்டுத் துறையில் பல தொழில் பிரிவுகளையும் தொடங்கியுள்ளது. உருக்கு' வார்ப்படம், சிமிட்டி, வெடி மருந்துகள், நைட்ரிக்அமிலம், அமோனியம் நைட்ரேட், மங்கனிசியம், உலோகம் முதலிய பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளது. டிட்கோ நிறுவனம் 19 கூட்டுத் துறைத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. புகையிலை, தொலைக்காட்சி, தோல்,பெட்ரோல் தொடர்பான இராசாயன பொருள்கள், மருந்துபொருட்கள் தயாரித்தல், இரசாயன உரம் தயாரித்தல், முதலிய தொழில்களில் இத்திட்டங்கள் சிறந்து விளங்குகின்றன.

8. மின்அணுக் கருவிகள் தேவையை நிறைவு செய்யவும் அவற்றின் உற்பத்தியில் முன்னேற்றம் காணவும், அத்தொழில் உற்பத்தியை விரைவுபடுத்தவும் தமிழ்நாடு மின்னணுக் கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின்னணுத் துறையில் உற்பத்தியளவு 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 19 கோடியாக இருந்தது 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 33 கோடியாக (70 சதவீதத்திற்கும் மேலாக உற்பத்தியளவு உயரும்) உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனம் எடுத்துக்கொண்ட திட்டங்களில் குவாட்ஸ் டிஜிடில் மின் அணுக் கைக்கடிகாரங்கள் (Quartz Degital Electronic watches) அலுமினியம் எலக்ரோலிடிக் கபாசிடர்ஸ் (Aluminium Electrolitice capacitors) ஆகியவை சிலவாகும்.

9. 1982–83 ஆம் ஆண்டில், அரசு பொதுத்துறைகளில் சுமார் ரூ. 19.71 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் பொதுத்துறை நிறுவனங்களில் தோராயமாக 23 கோடி ரூபாயை முதலீடு செய்ய அரசு கருதியுள்ளது.

இவ்வாறு அரசு முதலீடுகள் செய்து ஒருபுறம் பொதுத்துறை நிறுவனங்களையும் கூட்டுத்துறை நிறுவனங்களையும் மேம்படுத்துகிறது. மற்றொருபுறம் தனியார் துறை நிறுவனங்களில் முதலீடு செய்து செயலூக்கம் அளிக்கிறது. இதனால் அரசின் கொள்கை பெருமளவில் நிறைவேற்றப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

10. நம் மாநிலத்தில், மத்திய அரசுத்துறை நிறுவனங்களை அமைக்குமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டு கொள்கிறது. எனினும், மத்திய அரசிடமிருந்து இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. எடுத்துக்காட்டாக போதுமான அளவு அடிப்படை வசதிகள் நிறைந்துள்ள் உதக மண்டலத்தில் வண்ண நிழற்படச் சுருள் தயாரிப்புத்திட்டத்தை தொடங்கலாம் என்று இந்த அரசு தெரிவித்தது. ஆனால் மத்திய அரசு வேறுவிதமாகத் தீர்மானித்துள்ளது. இருப்பினும், இனி நிறைவேற்றவிருக்கிற மத்திய அரசுத்துறைத் திட்டங்கள் சில இம்மாநிலத்தில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**11. தற்போது நம் நாட்டில் தடையிலா வணிக மண்டலங்கள் இரண்டு உள்ளன.** அவற்றில் ஒன்று பம்பாய்க்கு அருகிலும். மற்றொன்று குஜராத் மாநிலத்தில் கண்ட்லா என்ற இடத்திலும் உள்ளது: தடையிலா வணிக மண்டலங்கள் பலவற்றை நம் நாட்டில் மேலும் தொடங்குவது குறித்து மத்திய அரசு கருதி வருகிறது. அதுபோன்ற தடையிலா வணிக மண்டலம் ஒன்றைத் தமிழ்நாட்டிலும் தொடங்குமாறு மாநில அரசு, மத்திய அரசைக் கேட்டு கொண்டுள்ளது. இதற்காக மீனம்பாக்கத்திற்கருகில் நிலம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, தமிழ்நாட்டில் இத்தகைய தடையிலா வணிக மண்டலத்தைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.



## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)

தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், அரசுத் துறையின்கீழ் ஆலங்குளத்தில் சிமிண்ட் ஆலையையும் அரக்கோணத்தில் உருக்குத் தொழிற் சாலையையும் செயலாக்கும் நோக்கத்துடன் 1965-ல் நிறுவப் பட்டது. மத்திய அரசின் கூட்டுத் துறைக் கொள்கை காரணமாக தனியார் தொழில் முனைவோர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுத்துறை முயற்சியாக பெருந்தொழில்களை அமைக்கும் வாய்ப்பு தொடர்ந்து பெருகுகிறது குறிப்பாக தனியார்தொழில் முனைவர்கள் சொந்தமாக தொழில் தொடங்க முன்வராத பின்தங்கிய பகுதிகளில் பெருந்தொழில்களை அமைக்கும் வாய்ப்பு பெருகிறது.

2. 18 ஆண்டுக் காலத்தில் '' டிட்கோ '' நிறுவனம் பல தரப்பட்ட தொழில்களையும் மேற்கொண்டுள்ளது. பொதுத் துறையில் புதிய தொழில்களைத் தொடங்கியுள்ளது. தனியார் தொழில் முனைவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுத்துறைத் தொழில்களையும் முன்னேற்றமடையச் செய்துள்ளது. மேலும் சிரமத்திற்குள்ளான சில நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்கும் உதவியுள்ளது.

3. 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளவாறு (a) உற்பத்தியிலுள்ள (b) நிறைவேற்றப்பட்டு வருகிற (c) திட்டமிடும் நிலுவையிலுள்ள திட்டங்கள் குறித்த விவரம் பின்வரும் விவர அறிக்கையில் காணலாம்.

டிட்கோ

| அரசுத் துறை. | உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள். | மூலதன முதலீடு. | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|
| | | (ரூ. கோடியில்) | |
| | 4 | 45.63 | 3,383 |
| | நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற் சாலைகள். | | |
| | 4 | 34.94 | 553 |
| | திட்ட நிலையில் உள்ளவை. | | |
| | 3 | 32.53 | 488 |

| கூட்டுத்துறை. | உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள். | மூலதன முதலீடு. (ரூ. கோடியில்) | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|
| | 20 | 223.27 | 6,121 |
| | நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற் சாலைகள் | | |
| | 9 | 55.21 | 2,814 |
| | திட்டமிடும் நிலையில் உள்ளவை. | | |
| | 11 | 192.37 | 3,819 |

4. கூட்டுத்துறையின் கீழ் பின்வரும் நான்கு தொழிற்பிரிவுகள் 1—4—1982 முதல் 31—12—1982 வரையிலான காலத்தில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

(1) ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட்.

(2) வானவில் டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்.

(3) மல்லடி டிரக்ஸ் அண்டு பார்மாசூடிகல்ஸ் லிமிடெட்

(4) தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட்.

### ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட்.

இந்நிறுவனம் கிழக்கு ஜெர்மனியின் உடனுழைப்புடன் உயர்ந்த தொழில் நுட்பத்திறம் வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனமாகும். இந்த ஆண்டில், உற்பத்தி தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருள்களின் தரம் இந்தியாவில் கிடைக்கக்கூடிய பொருள்களில் சிறந்து விளங்குகின்றன. மேலும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பேரிங்குகளுக்கு இணையானவையாய் உள்ளன.

### வானவில் டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்.

இதற்கு முன்பிருந்த சக தொழில் முனைவர் காரணமாக, இந்நிறுவனம் மிகவும் காலந்தாழ்த்தித் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்டப் பணியை (அதாவது நாப்தா)



"டிட்கோ" அதன் சொந்த முயற்சியிலேயே செயலாக்க முடிந்தது. கெட்டிச் சாயங்கள், வண்ணச் சாயங்கள் சல்பர் பிளாக் ஆகியவற்றை தயாரிக்கும் இரண்டாம் கட்டப் பணியைத் தொடங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. நூலிழை, கைத்தறிகள் ஆகியவற்றைப் பெருமளவு உற்பத்தி செய்வதால் தமிழகம் சாயங்களைப் பெருமளவு பயன்படுத்துகிறது. எனினும் இதுவரையில், இச்சாயங்களுக்கு பிற மாநிலங்களை நாம் எதிர்நோக்கியிருந்தோம். இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டால் இனி கைத்தறிகளுக்குத் தேவைப்படும் பெருமளவு வண்ணச் சாயங்களை இந்நிறுவனம் வழங்கும்.

### மல்லடி டிரக்ஸ் அண்டு பார்மசூடிகல்ஸ் லிமிடெட்.

இந்நிறுவனம் எஃபிட்ரின் ஹைடிரோகுளோரைடு தயாரிக்கத் தொடங்கியுள்ளது. இது வரையில், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த அடிப்படை மருந்தை, இந்தியத் தொழில் நுட்ப முறைகள் மூலம் உற்பத்தி செய்வதற்கு 'டிட்கோ' நிறுவனம் தொழில் நுட்ப அறிஞர் ஒருவருக்கு உதவியளித்துள்ளது. இம்மாநிலத்தில் சுமார் 500 பிரிவுகள் மருந்துப் பொருள்கள் முதலியவற்றைத் தயாரிக்கின்ற போதிலும் மிகச் சில அடிப்படை மருந்துகளே தயாரிக்கப்படுகின்றன. இம்மாநிலத்தில் அடிப்படை மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்று அரசு வலியுறுத்துகிறது. இவ்வளர்ச்சி காரணமாக இம்மாநிலத்தில் உள்ள எண்ணற்ற நிறுவனங்கள் இந்த அடிப்படை மருந்துகளை தயாரிக்க முன் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட்,

ரூபாய் 53 கோடிக்கும் அதிகமாகக் செலவாகும் இத்திட்டம் இந்த அண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இது ஜப்பான் நாட்டின் உடனுழைப்புடன் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம், உப்பை அதன் முக்கியப் பொருள்களில் ஒன்றாகப் பயன்படுத்தும். இந்நிறுவனம் தயாரிக்கும் அம்மோனியம் குளோரைடு, சோடா ஆஷ் போன்றவை மிகப் பிரசித்த பெற்ற தயாரிப்பாளர்கள் தயாரிக்கும் பொருள்களுக்கு இணையானவை. சோடா ஆஷ் தயாரிப்பது இம்மாநிலத்திலுள்ள துப்புரவுப் பொருள் தயாரிக்கும் சிறு தொழில் பிரிவுகள் மேலும் வளர்ச்சியுறப் பெரிதும் உதவும்.

5. பின்வரும் இரு தொழில்பிரிவுகள் 1—1—1983 முதல் 31—3—1983 வரையிலான கால அளவில், வணிக அளவிற் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1983 ஏப்ரல் 15

அசிடிலின் அண்டு இண்டஸ்ட்ரியல் காஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட்.

ஆக்ஸிசன் காஸ் சிலிண்டர் முதலிய பிற காஸ் சிலிண்டர்களைத் தயாரிப்பதைக் காட்டிலும் அதிகச் சிரமமான அசிடிலின் காஸ் சிலிண்டர்களைத் தயாரிக்கும் நிறுவனங்களில் இது இரண்டாவது நிறுவனமாகும். இந்நிறுவனம் தயாரிக்கும் பொருள்கள் மிகக் கடுமையான தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்கு உள்ளாக்க வேண்டியுள்ளது. இந்நிறுவனத்தின் அமெரிக்க நாட்டு உடனுழைப்பாளர்கள், இத்தொழிற்சாலையைப் பார்வையிட்டு, இந்நிறுவனம் தயாரிக்கும் பொருள்கள் உயர்ந்த தரமனவை எனச் சான்றளித்துள்ளனர்.

சென்னை ஷூ ஃபேப்ரிக்ஸ் லிமிடெட்.

உற்பத்திப் பொருளை அமெரிக்கா நாட்டிற்கு முழுவதையும் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் அமெரிக்கா நாட்டு பிரௌன் அண்டு கம்பெனியின் உடனுழைப்புடன் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் ஷூக்களைத் தயாரிக்கும் நோக்கத்துடன் இந்நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இங்குள்ள தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு வெளிநாட்டு உடனுழைப்பாளர்கள் அடங்கிய குழு பயிற்சி அளித்து வருகின்றது. இத்தொழிற்சாலை உற்பத்தியை விரைவில் தொடங்கும்.

6. பின்வரும் நான்கு தொழிற்பிரிவுகளும் 1983–84-ல் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.—

(1) கமர் கெமிகல்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

(2) ஷிப் ஸ்டீல்ஸ் (இந்தியா) லிமிடெட்.

(3) பைபர் பைப்ஸ் (இந்தியா) லிமிடெட்.

(4) தமிழ்நாடு ஃப்ளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட்.

7. உற்பத்தி செய்யும் நிலையிலும், செயல்படுத்தப்படும் நிலையிலும் உள்ள இருபத்தொன்பது தொழிற்சாலைகளில் பதினைந்து இம்மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக தொழில்கள் தொடங்கப்பட வேண்டும் என்பதிலும் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள் தொடங்கப்பட வேண்டும் என்பதிலும் ' டிட்கோ ' கவனம் செலுத்துகிறது.



1983 ஏப்ரல் 15]

8. 1982–83-ல் '' டிட்கோ '' மேற்கொண்ட முயற்சியால் அதற்கு ஆண்டொன்றுக்கு 50,000 டன் லினியர் ஆல்கைல் பென்ஜின் உற்பத்தி செய்வதற்கு ஒன்றும், ஆண்டொன்றுக்கு 10,000 டன் ஐசோபுரொபைல் ஆல்கஹால் உற்பத்தி செய்வதற்கு ஒன்றுமாக இரண்டு இசைவுக் கடிதங்கள், டிட்கோவிற்கு வழங்கப்பட்டன. இத்திட்டங்கள் சென்னை சுத்திகரிப்பு ஆலைகளுடன் சேர்க்கப்பட்டு சென்னை சுத்திகரிப்பு ஆலையின் விரிவாக்கத்தால் கிடைக்கும் பொருள்கள் இத்திட்டத்திற்கென்று பயன்படுத்தப்படும். சென்னை சுத்திகரிப்பு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இம்மாநிலத்தில் எதிர்காலத்தில் பெட்ரோ கெமிகல் தொழில் வளாகத்தை ஏற்படுத்தும் பொருட்டு, லினியர் ஆல்கைல் பென்ஜின் திட்டத்தை பொதுத்துறையில் நிறுவ ' டிட்கோ ' கருதியுள்ளது ; இவ்வாறு செய்வதால், காலப்போக்கில் இந்நிறுவனம் சென்னை சுத்திகரிப்பு நிறுவனத்தை உடனடியாக விரிவாக்குவதன் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைச் செயலாக்கும். ஏனெனில் பிறபுரொபைலின் அடிப்படையாகக் கொண்ட இரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதற்காக ' டிட்கோ ' அனுப்பிய விண்ணப்பங்கள் இன்னும் மத்திய அரசின் ஏற்பளிப்பைப் பெறாமல் உள்ளன. இவ்வாறாக, ' டிட்கோ ' இம்மாநிலத்தில் நடுத்தர, பெருந்தொழில் முன்னேற்றத்தில் முக்கியப் பங்காற்றி, இந்நாட்டிலுள்ள மாநில அளவிலான தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடையே சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

9. ' டிட்கோ ' இத்திட்டங்களின் வாயிலாக இது வரையில் சுமார் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இந்நிறுவனத்திடம் பரிசீலனையில் உள்ள திட்டங்களும் செயலாக்கப்படுமானால் மேலும் 7,500 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும், இவ்வாறாக, ' டிட்கோ ' இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் நிற்பதுடன் தமிழ் நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்குக் குறைக்கவும் உதவுகிறது.

10. 1980–81-ல் ' டிட்கோ ' ரூ. 29.6 இலட்சம் ஆதாயம் ஈட்டியுள்ளது. இது 1981–82-ல் ரூ. 159.8 இலட்சத்தை எட்டியது. இனிவரும் ஆண்டுகளில் இதே போக்கு தொடர்ந்து நீடிக்கும் என்று உறுதியாக நம்புகிறோம். இந்த ஆதாயப் பெருக்கத்தால், இந்நிறுவனத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்பை அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் ஈடு செய்ய இயலுமென்று ' டிட்கோ ' நம்புகிறது.

## தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம்.

1. தமிழகத்தில் தனியார் தொழில் முனைவோர் தொழிற் பிரிவுகளை நிறுவ (தமிழக அரசு) உதவுவதுடன், பொதுத்துறையிலும், கூட்டுத்துறையிலும் தொழில் பிரிவுகளை தமிழக அரசு நிறுவி வருகிறது. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்தும் நோக்கத்துடன் இம்முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் (டான்செம்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) கிளை நிறுவனமாக நிறுவப்பட்டது. சிமிண்டு மற்றும் அது சம்பந்தமான பொருள்களின் வினியோகம் மற்றும் தேவையை கருத்திற்கொண்டு சிமிண்டு, சிமிண்டு சம்பந்தப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்ய இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாக ரூ. 12.5 கோடியில் ரூ. 11.8 கோடி இது வரையில் மூலதனமாக செலுத்தப் பட்டுவிட்டது.

2. தற்போது பின்வரும் மூன்று ஆலைகள் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன :—

| 1. சிமிண்டு ஆலைகள். | உற்பத்திப் பொருள்கள். | ஆண்டொன்றுக்கு நிறுவியத்திறன். |
|---|---|---|
| (i) ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை. | சிமிண்டு .. | 4 இலட்சம் மெட்ரிக் டன்கள். |
| (ii) அரியலூர் சிமிண்டு தொழிற்சாலை. | சிமிண்டு | 5 இலட்சம் மெட்ரிக் டன்கள். |
| 11. ஆஸ்பெஸ்டாஸ் ஆலை— | | |
| தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ். | ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் துணைப் பொருட்கள். | 36,000 மெட்ரிக் டன்கள். |

இவற்றோடு தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டைக் கையாண்டு வருகிறது.

2.1. தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் உள்ள சிமிண்டு ஆலையை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.





இவற்றைத் தவிர தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் மதுரை மாவட்டம், பாளையத்தில் ஒரு சிமிண்டு ஆலை நிறுவும் திட்டம், ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

3. ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை—

3.1. இத்தொழிற்பிரிவு 1970 ஆம் ஆண்டு வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியது. இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி செய்யும் உரிமம் வழங்கப்பட்ட நிறுவிய திறனுடையது. இப்போது இந்தஆலை தனது 13 ஆண்டு பணியை நிறைவு செய்துள்ளது.

3.2. நடைமுறையிலுள்ள பல்வேறு காரணங்களால் ஆலங்குளம் சிமிண்டு ஆலை 1981–82 வரை திட்டமிட்டபடி அதன் உற்பத்தியை எட்ட முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம் இந்த ஆலைக்காக மைய அரசால் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரை நிர்ணயிக்கப்பட்ட இருத்தி வைப்பு விலை போதுமானதாக இல்லை. இதன் விளைவாக ஆரம்ப இரண்டு ஆண்டுகளில் ஈட்டிய சொற்ப இலாபத்தைத் தவிர இத்தொழிற்சாலை தொடர்ந்து 1981–82 வரை நட்டத்தில் இயங்கி வந்துள்ளது.

3.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | ஆண்டின் போது உற்பத்தி. (இலட்சம் மெட்ரிக் டன்னில்.) (2) | ஆண்டின் போது விற்பனை. (இலட்சம் மெட்ரிக் டன்னில்.) (3) |
|---|---|---|
| 1976–77 .. .. | 3.38 | 3.33 |
| 1977–78 .. .. | 3.09 | 3.08 |
| 1978–79 .. .. | 3.19 | 3.20 |
| 1979–80 .. .. | 2.74 | 2.78 |
| 1980–81 .. .. | 3.01 | 3.07 |
| 1981–82 .. .. | 2.94 | 2.93 |

3.4. தேசிய அளவிலான நிலக்கரிப் பற்றாக்குறை, மின்சக்தியின் மீதான உயர்ந்தபட்சத் தேவையிலான தடை, உயர் மின் சக்தி நுகர்வோர்களின் மீது கொண்டுவரப்பட்ட மின் வெட்டு, இரயில் பெட்டிகள் பற்றாக்குறை ஆகியவையே இந்தத் தொழிற்சாலையின் குறைந்த உற்பத்திக்குப் பெரும் புறக்கட்டுப்பாடுகளாக இருக்கின்றன.

3.5. 1982–83 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை தன்னுடைய உற்பத்தித்திறனில் 92 விழுக்காடு அளவை எட்டியுள்ளது. 1981 ஆம் ஆண்டு ஜூலை முதல் நிலக்கரி வினியோகம் முன்னேற்றமடைந்துள்ளது. எனினும் 3–10–1982ல் இருந்து புகுத்தப்பட்ட மின் வெட்டின் விளைவால் இரண்டாவது அரை இறுதி ஆண்டில் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டது. எனினும் நடப்பு ஆண்டில் ஆலங்குளம் சிமிண்டு ஆலை இலாபம் ஈட்டத் தொடங்கி திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆலை போதுமான இலாபம் ஈட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

3.6 இந்தத் தொழிற்பிரிவு பிற்பட்ட பகுதியில் 1637 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கச்சாப் பொருட்கள், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் பெருமளவில் வகை செய்து கொண்டிருக்கிறது.

4. அரியலூர் சிமிண்டு ஆலை—

4.1. ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி செய்யும் திறனுள்ள அரியலூர் சிமிண்டு தொழிற்சாலை ஓர் உலர் செய்முறை ஆலை ஆகும். இத்தொழிற்பிரிவு சிமிண்டு உற்பத்தியை 1—8—1979-ல் தொடங்கியது.

4.2 இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு. | ஆண்டின் போது உற்பத்தி. (இலட்சம் மெட்ரிக் டன்னில்.) | ஆண்டின் போது விற்பனை. (இலட்சம் மெட்ரிக் டன்னில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979-80 (8 மாதங்களுக்கு) .. | 1.16 | 1·16 |
| 1980-81 .. .. .. | 2.47 | 2.42 |
| 1981-82 .. .. .. | 2.84 | 2·88 |





4.3. நடப்பு 1982-83 முதல் அரையாண்டில் அரியலூர் சிமிண்டு ஆலை 1.70 இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்டை உற்பத்தி செய்துள்ளது. இது கடந்த 1981-82ஆம் ஆண்டில் இதே கால அளவிற்குண்டான சிமிண்டு உற்பத்தியைக் காட்டிலும் 44 ஆயிரம் மெட்ரிக் டன் அதிகமாகும். நடப்பிலுள்ள மின்வெட்டின் காரணமாக நடப்பு ஆண்டில் அரியலூர் சிமிண்ட் ஆலை 2.28 மெட்ரிக் டன் சிமிண்டை உற்பத்தி செய்யுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

4.4. இந்த ஆலை 907 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகைசெய்வதுடன் சார்பு வேலை வாய்ப்பிற்கும் பெருமளவில் வகைசெய்து கொண்டிருக்கிறது.

5. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ்—

5.1. பல்வகைப்படுத்தும் திட்டத்தின் முதற்படியாக தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் ஆண்டொன்றுக்கு 36,000 டன் ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடுகளை உற்பத்தி செய்வதற்கு ஆலங்குளம் சிமிண்டு ஆலைப் பகுதியில், ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு ஷீட் திட்டத்தினை அமைத்துள்ளது. இந்தத் தொழிற்பிரிவு அதன் வணிக அளவிலான உற்பத்தியை 1—10—1981-ல் தொடங்கியுள்ளது.

5.2. துவக்கப்பட்ட முதல் 6 மாதங்களில் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் ஆலை 8,251 மெட்ரிக் டன் ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளையும், துணைப் பொருட்களையும் உற்பத்தி செய்துள்ளது. இந்த ஆலை 1982-83ஆம் ஆண்டில் 19,811 மெட்ரிக் டன் மற்றும் 1983-84ஆம் ஆண்டில் 25,500 மெட்ரிக் டன் ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளையும், துணைப் பொருட்களையும் உற்பத்தி செய்யும். இந்த ஆலை நடப்பு ஆண்டில் இலாபம் ஈட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

5.3. இவ்வாலை 203 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புக்கு வகைசெய்வதுடன் கச்சாப் பொருட்கள், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவற்றை ஏற்றி செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் கணிசமான அளவில் வகை செய்து கொண்டிருக்கிறது.

6. இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டைக் கையாளுதல்—

6.1. கடந்த 31—3—1982உடன் முடிவடைந்த நிதி ஆண்டின்போது தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் சென்னை துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 1.08 இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்டையும் தூத்துக்குடியில் இறக்குமதி

செய்யப்பட்ட 1.64 இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்டையும் பாண்டிச்சேரி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 15 ஆயிரம் மெட்ரிக் டன் சிமிண்டையும் கையாண்டுள்ளது.

6.2. நடப்பு ஆண்டில் இந்திய சிமிண்டு நிறுவனத்தின் சார்பாக 2.03 இலட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டை தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் கையாண்டு விற்பனை செய்யும் பொறுப்பை ஏற்று செயலாற்றியது.

6.3. டி. பி. ஆர். கொரியாவைச் சேர்ந்த கொரியா சிமிண்டு ஏற்றுமதி நிறுவனத்துடன் 2 இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்டை வினியோகம் செய்வதற்காக தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. 15—4—1983-க்குமுன்பாக மேற்குறிப்பிட்டுள்ள சிமிண்டின் முழு அளவையும் கையாள இயலும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதைத் தவிர 1983-84ஆம் ஆண்டில் 3.5 இலட்சம் டன் சிமிண்டை இறக்குமதி செய்ய தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் சிமிண்டு அரசு துறைகளுக்கும், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் சமமாக விநியோகம் செய்யப்படும். இது அதிகமாயுள்ள சிமிண்டு கிராக்கியை கணிசமான அளவு குறைக்கிறது.

7. ஆலங்குளம் சிமிண்டு ஆலையின் மேம்பாட்டு மற்றும் நவீனப் படுத்தும் திட்டம்—

ஆலங்குளம் சிமிண்டு ஆலையிலுள்ள மின் இயல் தூசி தடுப்பான்கள் மற்றும் வேறு சமபடுத்தும் கருவிகளைப் பொருத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணி எல்லா வகையிலும் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறைவு செய்யப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இத் திட்டச் செயலாக்கத்தால் ஆலங்குளம் ஆலைப்பகுதியில் காற்று அசுத்தம் குறைக்கப்படுவதுடன் சிமிண்டு முற்றிலும் சேதமாகாமல் தடுக்க உதவும். ஆலங்குளம் ஆலை அதன் உற்பத்தியை நிலைப்படுத்தவும் ஆண்டுக்கு 4.5 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி அளவை எட்டுவதற்கும் இத்திட்டம் உதவும்.

8. பாளையம் சிமிண்டு திட்டம்—

மதுரை மாவட்டம் பாளையம் பகுதியில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமிண்டு ஆலை ஒன்றை நிறுவ தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்திற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இசைவுக் கடிதத்தை வழங்குவதற்காக மைய அரசிற்கு தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் விண்ணப்



பித்துள்ளது. இத்திட்டத்திற்கு மைய அரசு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. மைய அரசை அதன் முந்தைய முடிவினை மறு பரிசீலனை செய்யுமாறும் பாளையத்தின் அருகில் புதிய சிமிண்டு ஆலை ஒன்றினை அமைப்பதற்கான இசைவுக் கடிதத்தை வழங்குமாறும் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

9. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டம்.

ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு ஷீட் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தியதன் மூலம் ஊக்கம் அளிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறனுள்ள ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டத்தை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 8 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மைய அரசிடமிருந்து தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இசைவுக் கடிதம் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கான முதற் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தை துவக்கப்பட்ட 30 மாதங்களில் நிறைவு செய்ய இயலும். இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்போது சுமார் 300 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கணிசமான அளவு சார்பு வேலை வாய்ப்புக்கும் வகை செய்யும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

ஒரு பகுதியில் தொழில்கள் உருவாகி வளர்ச்சி பெற வேண்டுமானால் அங்குள்ள தொழில் முனைவோர் நற்திறமையுடன் செயலாற்றி தொழில் வளர்ச்சிக்கு உதவிட வேண்டும். இந்த வகையில் ஆராய்ந்து பார்த்தால் உள்ளூரிலுள்ள தொழில் நிறுவனம் தான் தொழில்களை உருவாக்கி பலருக்கு வேலை வாய்ப்பு அளித்து மற்றவர்களும் இதுபோன்று தொழில்களைத் தொடங்க ஆக்கமும் ஊக்கமும் அளித்து அதன்மூலம் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட உதவ முன்வர வேண்டும்.

2. தொழில் தொடங்கும் பாங்கினை வளர்த்திட உதவுவது தன் பொறுப்பாகும் என்பதை அரசும் உணர்ந்துள்ளது. இதன் பயனாகத் தொழில்கள் உருவாவதற்கான பகுதிகளை மேம்படுத்தி அங்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமும் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருகிறது. தொழில் தொடங்க முன்வரும் தொழிலதிபர்களுக்குப் பல்வேறு ஊக்கத் தொகைகள், சலுகைகள், ஏனைய நிதி உதவியினை அரசு வழங்குகின்றது. பெரிய, நடுத்தர தொழில்களின் முன்னேற்றத்திற்காக அரசு 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தை (சிப்காட்) நிறுவியது. இந்த நிறுவனம் 1972 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து செயல்பட்டு வருகின்றது. அப்போதிருந்து இந்நிறுவனம் பெரிய நடுத்தர தொழில்கள் உருவாகி வளர்ச்சி பெற அரும்பணியாற்றி வருகின்றது. அதிலும் குறிப்பாகத் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளில் தொழில்கள் பெருக பெரிதும் பாடுபட்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையிலும் இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் 116 கோடி ரூபாய் உதவித் தொகையாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன் 62,000 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பிற்கும் வாய்ப்பு அளித்துள்ளது. சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும் அதற்கு வேண்டிய நிதியுதவியினை அளிப்பதிலும் கீழ் காணும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது:—

(அ) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நடுத்தர, பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

(ஆ) தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.



(இ) இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குவது.

(ஈ) தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணையுதவி பணிகள் செய்தல்.

3. முதல் பத்தாண்டுகளில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்த சிப்காட், தமிழக அரசின் உதவியுடனும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடனும் பல்வேறு புதிய முறைகளைக் கையாண்டது. சிப்காட், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியினரால் மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அங்கீகரிக்கப்பட்டதால் இந் நிறுவனத்தின் தவணைக் கடன் திட்டம் மாபெரும் வளர்ச்சியினைக் கண்டது. கடந்த ஆண்டுகளில் தவணைக் கடன் வழங்குவது கணிசமாக உயர்ந்துள்ளது. நிதி ஊக்கத் திட்டங்களான முதலீட்டு உதவித் தொகை வட்டியில்லா விற்பனை வரிக் கடன், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், அறிவிக்கப்பட்ட பின் தங்கிய பகுதிகளுக்கான சலுகைகளும், சிப்காட் நிறுவனத்தினரால் பின் தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுள்ளன. உண்மையிலேயே சிப்காட் நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ஒப்புதல் அளித்து வழங்கிய உதவித் தொகைகளில் 85 விழுக்காட்டிற்கு மேலாக பின் தங்கிய வட்டங்களில் தொடங்கப் பெற்ற தொழில் நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முதலீட்டு உதவித் தொகைத் திட்டத்தில் வழங்கப்படுகின்ற உதவித் தொகையைப் பெறுவதில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடே தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது.

4. இராணிப்பேட்டை, ஓசூர் தொழில் பேட்டைகளில் கிடைத்த வெற்றியின் ஊக்கத்தில் சிப்காட் புதிய 5 தொழில் பேட்டைகளை கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களில் நிறுவுவதற்கு ஏற்கெனவே முயற்சி மேற்கொண்டு உள்ளது. தொழில் முனைவர்கள் ஒன்று கூடுவதற்கு முதலாவதாக ஏற்பாடு செய்து இத்தொழிற் பேட்டைகளுக்கு அவர்களை அழைத்துச் சென்றதன் மூலம் குறிப்பிடத் தகுந்த அளவிற்கு ஊக்கமும் ஆதரவும் கிடைத்தது. கும்மிடிப்பூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரையில் உள்ள தொழில் பேட்டைகளில் நிலம் ஒதுக்கும் பணிகள் ஏற்கெனவே தொடங்கி விட்டன. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட தளர்த்தப்பட்ட ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டங்கள், அறிமுகப்

படுத்தப்பட்ட கவரக்கூடிய உதவித் தொகை திட்டங்களினால் சிப்காட் வருகிற ஆண்டுகளில் தன்னுடைய திட்டங்களை பல மடங்காக அதிகரிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. வெளிநாடுகளில் வசிக்கின்ற பணியாற்றுகின்ற இந்தியர்கள் தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்புப் பன்னாட்டுப் பிரிவை சிப்காட் அமைத்துள்ளது. இது குறித்து வெளிநாடுகளிலுள்ள தனியார்களுடனும், சங்கங்களுடனும் தொடர்பு கொள்ளப் பெற்றுள்ளது. வெளிநாட்டில் வசிக்கின்ற 153 இந்தியர்களிடமிருந்து இதுவரை கடிதங்கள் வரப் பெற்றுள்ளன. இவை பெரும்பாலும் அமெரிக்கா, அரேபிய நாடுகள், மலேசியா ஆகியவற்றிலிருந்து வந்துள்ளன. வெளிநாடுகளில் வசிப்பவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்ளப் பெற்று வருகிறது.

ஊக்கச்சலுகை முனைப்புத் திட்டங்கள்.

(அ) தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தெகை.

தொழிற்சாலையை அமைக்கத் தொழில் முனைவோருக்கு உதவ வேண்டி தொழில் தொடங்குவதற்கான வாய்ப்பினை ஆராய உதவி அளிக்கப்படுகிறது. இந்த ஆய்வுகளுக்ககும் செலவிற்கு உதவும் திட்டம் ஒன்றினை 'சிப்காட்' வகுத்துள்ளது. இந்த ஆய்விற்கான செலவில் 10 சதவீதத்தை முதலில் செலுத்தினாலேயே இந்த அறிக்கைகள் கிடைக்கின்றன. மேலும், இந்த ஆய்விற்கான செலவில் 40 சதவீதம் இத்தொழிற்சாலையினைத் தொடங்கிய பின்னர் வசூலிக்கக்கூடிய கடனாக மாற்றப்பெறும். மீதமுள்ள 50 சதவீதம் 'சிப்காட்' டினால் உதவித் தொகையாக வழங்கப்பெறும்.

இப்புதிய திட்டத்தின்கீழ் 20 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 13 அறிக்கைகள் தயாராக உள்ளன. ஒன்பது ஆய்வுகள் தொடங்குவதற்காகத் தீவிரப் பரிசீலனையிலுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 12 தொழில் முனைவோர் இந்த ஆய்வு அறிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் பல்வேறு காரணங்களால் சில பகுதிகள் மற்ற பகுதிகளைக் காட்டிலும் வெகுவேகமாக முன்னேறியுள்ளன. இதனால் மாநிலத்தின் சீரான தொழில் வளர்ச்சி முறையில் சில வேறுபாடுகள் காணப் பெறுகின்றன. இந்த வேறுபாட்டினை நீக்கும் வகையில், இத்தகைய தொழில் வளர்ச்சியடைந்து வரும் பகுதிகளில் பொருளாதார மற்றும் தொழில் மேம்பாட்டிற்கான திட்டங்களை அரசு



வகுத்துள்ளது. இவ்வாறு, இப்பகுதிகளை மேம்படுத்தி அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு அரசு முதலீடு செய்துள்ளது. சில பகுதிகள் தொழில் வளர்ச்சி அடையக் கூடிய பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. இங்கு அரசு சிறப்பான வசதிகளை அளிக்கும்.

(ii) வட்டியில்லா விற்பனை வரிக்கடன் :

ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாக விளங்கும் வட்டியில்லா விற்பனை வரிக் கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றில் ஆனால் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள எல்லையோர நகர்ப்புற கூட்டுப் பகுதிகள், மதுரை, திருச்சிராப்பள்ளி நகரப் பகுதிகளுக்கு வெளியே தொடங்கப்படும் நடுத்தர, பெரும் தொழில்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்பெறுகின்றன.

இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாளிலிருந்து எளிதாக்கப்பட்டுள்ளது. இது இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் முதல் பகுதியின்கீழ் தற்போது செயல்படும் நடுத்தர, கனரகத் தொழில்களும், நடுத்தரத் தொழில்களாக விரிவடையும் சிறுரகத் தொழிற் பிரிவுகளும் கணிசமான அளவுக்குத் தொழிலை விரிவுபடுத்தும்போதோ, வேறு பிரிவுகளாகப் பெருக்கும்போதோ வட்டியில்லா விற்பனை வரிக் கடன் கொடுக்கப்படுகிறது. அத் தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்துகொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப்படும் அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும் திட்டத்தில் நிலையான இருப்புக்களில் 25 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 50 இலட்சத்துக்கோ நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும்போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்த பிறகு 3 ஆண்டு சம தவணைகளில் வட்டி இன்றி, இந்தக் கடன் தொகைகளை திருப்பிச் செலுத்த வேண்டும்.

இந்திட்டத்தின் இரண்டாம் பகுதியின்கீழ், ஒரு தொழிற் பிரிவு முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு (அதாவது 24 காலாண்டு உற்பத்திக்கு) ஆண்டுதோறும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் அந்த ஆண்டில் செலுத்திய விற்பனை வரித்தொகைக்கு சமமானதாகவும், ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையான

இருப்புக்களில் 20 சதவீத அளவுக்கோ அல்லது ரூபாய் 20 இலட்சத்துக்கோ எந்த தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்படும். இந்த கடன் கால் ஆண்டுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் 24 காலாண்டு தவணைகளில் ரூபாய் 100 இலட்சத்திற்கு மேற்படாமல் வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு ஆண்டுச் சம தவணைகளில் வட்டி எதுவுமின்றி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்கும் ஊக்கச் சலுகைத் திட்டத்தின்கீழ் 147 தொழிற் பிரிவுகள் பயனடைந்துள்ளன. அவற்றிற்கு ரூபாய் 1,414.48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதில், 1982 டிசம்பர் வரை ரூபாய் 1,296.06 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த பதினோரு ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—



| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | | | வழங்கப்பட்ட தொகை. | | |
|---|---|---|---|---|---|---|
| | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1972–73 | 79.19 | .. | 79.19 | 12.19 | .. | 12.19 |
| 1973–74 | 57.72 | .. | 57.72 | 31.56 | .. | 31.56 |
| 1974–75 | 73.63 | .. | 73.63 | 91.48 | .. | 91.48 |
| 1975–76 | 2.10 | 0.72 | 2.82 | 57.60 | .. | 57.60 |
| 1976–77 | 49.13 | 29.72 | 78.85 | 48.32 | 30.26 | 78.58 |
| 1977–78 | 52.60 | 58.88 | 111.48 | 35.19 | 56.04 | 91.23 |
| 1978–79 | 59.19 | 94.00 | 153.19 | 56.80 | 96.24 | 153.04 |
| 1979–80 | 105.52 | 140.26 | 245.78 | 47.26 | 137.74 | 185.00 |
| 1980–81 | 88.79 | 143.55 | 232.34 | 85.53 | 144.91 | 230.44 |
| 1981–82 | 26.05 | 133.50 | 159.55 | 67.83 | 132.45 | 200.28 |
| 1982–83 (1982 டிசம்பர் வரை). | 97.01 | 122.92 | 219.93 | 43.66 | 121.00 | 164.66 |
| மொத்தம். | 690.93 | 723.55 | 1,414.48 | 577.42 | 718.64 | 1,296.06 |

1983–84ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட திட்ட இலக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 300 இலட்சமாகும். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்கு அரசு இதுவரை ரூபாய் 1,372.8 இலட்சம் வழங்கியுள்ளது.

**(iii) மத்திய முதலீட்டு உதவித் தொகை :**

தமிழ்நாட்டிற்கு மத்திய அரசின் உதவித் தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவும், அதன் நிலையான முதலீட்டில் (இதில் நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றில் செய்யப்பட்ட முதலீடுகளும் அடங்கும்) 15 சதவீதத்தை மானியமாகப் பெறத் தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்ட தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையதாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவு பெறத்தக்க மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின் 85 சதவீதத் தொகையும், உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும். மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்தின் கீழ் ஈட்டுத் தொகை ரூபாய் 19.87 கோடி பெறுவதில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடே தொடர்ந்து முதன்மை நிலை வகித்து வருகிறது. அனுமதிக்கப்பட்ட, பகிர்ந்தளிக்கப்பட்ட, மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1983–84ஆம்ஆண்டில், அனுமதிக்கப்படுவதற்காக, பகிர்ந்தளிக்கப்படுவதற்காக, மத்திய அரசிடமிருந்து பெறுவதற்காக இலக்கிடப்பட்ட தொகை முறையே ரூபாய் 250 இலட்சமாகும்.

**(iv) மாநில அரசின் முதலீட்டு உதவித் தொகை வழங்கும் திட்டம்.**

இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசின் மானியத் திட்டத்தின் கீழ் வராத தெரிந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய 24 வட்டங்கள் திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, தென்னாற்காடு மாவட்டம், கடலூர் ஆகிய இடங்களில் நிறுவப்படவிருக்கும் தொழில் தொகுதிகள் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவீதத்திற்கு இணையான தொகை அல்லது ரூ. 15 இலட்சம் இவை இரண்டில் எது குறைவோ அதை பெறத் தகுதியுடையவைகளாகும். இத்திட்டத்தின் கீழ், சிறிய, நடுத்தர, பெரிய தொழில்கள் பயன்பெறும். இத்திட்டம் 3–10–81 முதல் செயல்படுத்தப்படு



கிறது. 1982–83, 1983–84 ஆம்ஆண்டுகளில் முறையே ரூ. 50 இலட்சம், ரூ. 100 இலட்சம் செலவிட இலக்கிடப்பட்டுள்ளது. 1982–83-ல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வரை ரூ. 22.90 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(v) குறிப்பிட்ட தொழில்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்.

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானியம் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. மத்திய, மாநில அரசின் மானிய திட்டத்தின் கீழ் வராத, தமிழகத்தின் யாதொரு பகுதியில் நிறுவப்படும் பின்வரும் வகையைச் சேர்ந்த தொழில்கள் அதன் நிலையான முதலீட்டில் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒவ்வொரு நிரந்தர ஊழியருக்கு ரூபாய் 20,000 அல்லது ரூபாய் 10 இலட்சம் இதில் எது மிகக் குறைவோ அதைப் பெறத் தகுதியுடையவைகளாகும். இத்திட்டத்தின்கீழ் பயன் பெறும் தொழில்களின் விவரம் வருமாறு :—

(அ) மின்னணுவியல்.

(ஆ) மருந்துகள், ஏனைய மருந்துப் பொருள்கள்.

(இ) மோட்டார் வண்டித் துணைத் தொழில்கள்.

தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டத் திட்டம் பாரதத்தின் எந்தப் பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற ஒரு திட்டம் ஆகும். இத்திட்டம் 1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3-ஆம் நாள் முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

II. நேரடி நிதி உதவி—

(i) பதினோரு ஆண்டுகளில் சிப்காட் ஒப்புதல் அளித்த, வழங்கிய தவணைக் கடன் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடியாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 | 108.50 | .. | 108.50 | 26.11 |
| 1973–74 | 197.89 | 7.55 | 190.34 | 33.90 |
| 1974–75 | 191.28 | 7.99 | 183.29 | 117.61 |

[1983 ஏப்ரல் 15

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1975—76 .. | 27·08 | 7·25 | 19·83 | 162·87 |
| 1976—77 .. | 140·75 | 47·25 | 93·50 | 82·15 |
| 1977—78 .. | 340·55 | 69·48 | 271·07 | 123·82 |
| 1978—79 .. | 233·96 | 10·00 | 223·96 | 141·85 |
| 1979—80 .. | 580·50 | 12·74 | 567·76 | 296·61 |
| 1980—81 .. | 1,958·10 | 27·86 | 1,930·24 | 786·52 |
| 1981—82 .. | 1,899·05 | 225·01 | 1,674·04 | 1,405·86 |
| 1982—83 .. (1982 டிசம்பர் வரை). | 2,032·21 | .. | 2,032·21 | 831·00 |
| மொத்தம் | 7,709·87 | 415·13 | 7.294·74 | 4,008·30 |

1975-76 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி உதவி 1976—77 ஆம் ஆண்டிலிருந்து கணிசமான அளவு உயர்ந்துள்ளது என்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது. மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட அனுமதிகளும் மிக அதிகமாக உயர்ந்துள்ளன. 1983—84 ஆண்டிற்கான அனுமதி மற்றும் வழங்கல் குறித்த இலக்கு முறையே ரூ 35·00 கோடியும் ரூபாய் 22 கோடியும் ஆகும். இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் தற்போதைய மறுநிதியுதவி வரம்பு ரூ. 36·50 கோடி என்றிருக்க, 31—12—1982 ஆம் நாளன்றுள்ளபடி, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியில் உள்ள நிலுவைத் தொகை ரூ. 26·96 கோடியாகும்.

இம்மாநிலத்தில், பல்வேறு தொழில்களைத் தொடங்குவதற்காக இதுவரை ரூ. 73 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1982—83 ஆம் நிதி யாண்டில் காலங்கடந்த பாக்கித் தொகை வசூல் நிதியாண்டில் தொடக்கத்தில் 53·1 சதவீதமாக இருந்து 31—12—82 ஆம் நாளன்றுள்ளபடி 61·7 சதவீதமாக உயர்ந்து உள்ளது. பாக்கித் தொகையைச் செலுத்தத் தவறியது தொடர்பான ஆய்வுக் குழு. அவ்வப்போது கூடி இது பற்றி ஆய்வு செய்து அனைத்துத் துணைப் பிரிவுகளையும் கண்காணித்ததாலேயே காலங் கடந்த பாக்கித் தொகை வசூலில் முன்னேற்றம் ஏற்பட்டது.



983 ஏப்ரல் 15]

i) உத்திரவாதமளித்தல்/நேரடி மூலதனம் :

பொது மக்களிடமிருந்து திரட்டப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிப்பதன் மூலமும் அல்லது நேரடியாகத் தாமே பங்குகள் வாங்குவதன்மூலம்' சிப்காட்' நிறுவனம் தொழில்களுக்கு உதவுகிறது. 'சிப்காட்' நிறுவனம் இதுவரை ரூ. 28·7 இலட்சம் மதிப்புள்ள பங்குகளை வாங்கியுள்ளது. இத்திட்டம் குறித்த விவரங்கள் இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1983—84 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட அனுமதி இலக்கு ரூ. 25·00 இலட்சம்ஆகும்.

iii) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் தொடக்க மூலதன உதவித் திட்டம்—

இத்திட்டத்தின் கீழ் தொழில் நுட்ப/தொழில் முனைவர்கள் முதலில் தொடங்கும் நடுத்தரத் தொழில்களுக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, அத் தொழில்களுக்கு ஆகும் செலவில் 10 சதவீதம் வரையில் தொடக்க நிதியுதவி அளிக்கிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஒரு முகவர் என்ற முறையில் சிப்காட் நிறுவனம் 1982—83 ஆம் ஆண்டில் (1982 டிசம்பர் வரை) 6 தொழில் பிரிவுகளுக்கு ரூ. 55·00 இலட்சம் வரை நிதி உதவி அளித்துள்ளது. 1983—84 ஆம் ஆண்டிற்கு அனுமதி இலக்கு ரூ. 120 இலட்சமாவும், தொகை வழங்கும் இலக்கு ரூ. 100 இலட்சமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட தொகைகள் குறித்த விவரங்கள் வருமாறு—

| ஆண்டு. | அனுமதிக்கப் பட்ட தொகை. | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1977—78 .. .. | 4.00 | .. |
| 1978—79 .. .. | 9.15 | 4.00 |
| 1979—80 .. .. | 12.90 | 21.47 |
| 1980—81 .. .. | 26.50 | 16.29 |
| 1981—82 .. .. | 38.58 | 20.10 |
| 1982—83 (31—12—82 வரை) | 55.07 | 20.70 |
| | 146.20 | 82.56 |

[1983 ஏப்ரல் 15.

(iv) ஆதி திராவிடர்கள் / பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள்—

'சிப்காட்' நிறுவனம் 29–11–1979 முதல் ஆதி திராவிடர்கள்/ பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவர்களுக்கு பின்வரும் சலுகைகள் வழங்கி ஊக்கமளிக்க முடிவு செய்துள்ளது.

(அ) இம்மாநிலத்தில் ஆதி திராவிடர்/பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில் முனைவர்கள் எந்த இடத்தில் தொழில் தொடங்கினாலும், அவர்களின் பங்குத் தொகை, திட்டச் செலவில் 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பொதுவாக இது, பின் தங்கிய பகுதிகளில் 17·5 சதவீதமாகவும், முன்னேறிய பகுதிகளில் 20 சதவீதமாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அத்தகைய தொழில் முனைவர்கள் ஏற்படுத்தக் கூடிய தொழில்களுக்கு உத்தரவாதமளித்தல்/நேரடி மூலதன உதவி இயன்ற அளவு அதிகமாக நீட்டிக்கப்படும்.

(இ) அத்தகைய தொழில்களுக்கான குறித்த காலக் கடன்களுக்கு பின் தங்கிய பகுதிகளில் ஆண்டு ஒன்றுக்கு 1 சதவீதமும், வளர்ச்சி அடைந்த பகுதிகளில் ஆண்டு ஒன்றுக்கு ½ சதவீதமும் விதிக்கப்படுகிறது. இவ்வாறாக இத்திட்டத்தின் கீழ் வட்டி வீதம் 1½ சதவீதம் குறைத்து வசூலிக்கப்படுகிறது.

(ஈ) முதலீட்டுக்கு முந்திய ஆய்வுத் திட்டத்தின் கீழ் அறிக்கைச் செலவு வகையில் தொழில் முனைவர்களிடமிருந்து தொடக்கத் தொகையாக எதிர்பார்க்கப்படும் 25 சதவீதம் மட்டுமே ஏனைய தொழில் முனைவர்களுக்கு அது 50 சதவீதமாக இருக்கும்.

## III. வளர்ச்சி மையங்கள்.

| வளர்ச்சி மையங்களின் பெயர். | 31–12–1982 வரையிலான தொழில் முன்னேற்றம். | |
|---|---|---|
| | மேம்படுத்தப் பட்ட பகுதியின் பரப்பு. | மூலதனச் செலவு. |
| (1) | (2) | (3) |
| | (ஏக்கர்.) | (ரூபாய் இலட்சத்தில்.) |
| இராணிப்பேட்டை .. | 729.78 | 142.80 |
| ஒசூர் .. .. | 1,235.86+ | 169.00 |
| மானாமதுரை .. .. | 492.08 | 61.90 |
| புதுக்கோட்டை .. .. | 394.00 | 19.19 |
| கும்மிடிப்பூண்டி .. .. | 301.00 | 16.33 |
| கடலூர் .. .. | 407.00 | 30.69 |
| தூத்துக்குடி .. .. | .. | .. |



1983 ஏப்ரல் 15]

| வளர்ச்சி மையங்களின் பெயர். | 6ஆம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் தொழில் முன்னேற்றம். | | |
|---|---|---|---|
| | பரப்பு. (ஏக்கர்). | மொத்த மூலதனம். | நிகர மூலதனம். |
| | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| இராணிப்பேட்டை .. | 143.96 | 105.00 | 55.00 |
| ஒசூர் .. .. | 508.33 | 290.00 | 210.00 |
| மானாமதுரை .. | 492.08 | 140.00 | 110.00 |
| புதுக்கோட்டை .. | 544.45 | 120.00 | 75.00 |
| கும்மிடிப்பூண்டி .. | 804.93 | 165.00 | 80.00 |
| கடலூர் .. .. | 463.41 | 165.00 | 70.00 |
| தூத்துக்குடி .. .. | 1,318.53 | 51.00 | 45.00 |

(+இரண்டாவது தொழில் பகுதி).

இராணிப்பேட்டை :

அரசு 729.78 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, 'சிப்காட்' நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இட ஒதுக்கீட்டிற்காக உள்ள நிலம் 480.68 ஏக்கர் (93 மனைகள் கொண்டது) ஆகும். இதில் 428.89 ஏக்கர் பரப்பு கொண்ட 81 மனைகள், ஏற்கனவே 68 தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டு விட்டது. 40 பிரிவுகள், கட்டுமானப் பணிகளை முடித்து, உற்பத்தி தொடங்கியுள்ளன. 18 பிரிவுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. இப்பகுதியில் மனைகளுக்கு அதிக கிராக்கி இருப்பதால் முதல் பகுதியையொட்டி, இரண்டாவது தொழில் பகுதி ஒன்று அமைப்பதற்காக மேலும் 144 ஏக்கர்

நிலத்தைச் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலங்கள் மேம்படுத்தப்பட்டு 1982—83 இறுதிக்குள் ஒதுக்கீடு செய்யத் தயார் படுத்தப்படும்.

ஓசூர் :

7-ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் ஒதுக்கீடு செய்வதற்காக மேம்படுத்தப்பட்ட 1,235 ஏக்கரில், இதுவரையில் 937 ஏக்கர் தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் முனைவர்களுக்கும், அப்பகுதியின் ஏனைய சமூகத் தேவைகளுக்கும் நிலம் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு தற்போதுள்ள தொழில் பகுதியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் ஓசூர்-கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள 508 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மானாமதுரை :

மதுரைக்கு அருகாமையிலுள்ள (45 கி.மி.) மானாமதுரை தொழில் தொகுதி, தண்ணீர் வளம் தேவைப்படாத பொதுவான வகைத் தொழில்களுக்காக என்றே அமைக்கப்பட்டதாகும். தொழில் முனைவர்களுக்கு வழங்குவதற்காக சாலைகள், வடிகால், தொலைபேசி, டெலக்ஸ், பள்ளி, முதலுதவி நிலையம்; உணவகம், திரைப்படக் கொட்டகை, கடைகள், வீட்டுவசதி முதலியவை போன்ற அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய சீரமைக்கப்பட்ட 492 ஏக்கர் நிலம் சிப்காட்' நிறுவனத்திடம் உள்ளது. விற்கத்தக்க 365 ஏக்கர் நிலத்தில் இதுவரையில் 63 ஏக்கர் அளவுள்ள 15 மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை :

சிப்காட் நிறுவனத்தின் புதுக்கோட்டை தொழிற்சாலைத் தொகுதி, பின்தங்கிய பகுதிகளை விரைவில் வளர்ச்சியடையச் செய்வதற்காக மைய தொழில் வளர்ச்சி நிலையங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்க இந்திய அரசு கருதி வருகின்றது. இந்தத் தொழிற்சாலைத் தொகுதி புதுக்கோட்டை நகரிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. திருச்சி விமான நிலையத்திலிருந்து ஒரு மணி பயணநேரம்கூட ஆகாத தொலைவில் அமைந்துள்ள இத்தொழிற்சாலை தொகுதி, மின்னணுவியல், சிறு அளவுப் பொறியியல் தொழில்களுக்குத் தகுந்ததாகத் திகழ்கிறது. சிப்காட் நிறுவனம், இங்கு 394 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பளவை ஏற்கனவே கையகப்படுத்தியுள்ளது. மேலும் 164 ஏக்கர் பரப்புள்ள



நிலத்தைக் கையகப்படுத்தும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இத்தொழிற்சாலைத் தொகுதியில் தங்கள் தொழில்களை அமைத்துக் கொள்ள மொத்தம் 94 ஏக்கர் பரப்புள்ள நிலத்தைக் கேட்டு நான்கு நிறுவனங்கள் செயற் குறிப்புகளை அனுப்பியுள்ளது.

கடலூர் :

சிப்பாட்டின் கடலூர் தொழிற்சாலைத் தொகுதி, தண்ணீரை அடிப்படையாகக் கொண்ட இரசாயன செய்முறைப்படுத்தும் தொழில்களுக்கு இடமளிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. கையப்படுத்துவதற்காக 463 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் குறித்து, நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது. 407 ஏக்கர் பரப்புள்ள நிலம் இதுவரையில் கையப்படுத்தப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைத் தொகுதி, கடலூர்-சிதம்பரம் சாலையில் கடலூரிலிருந்து 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. புதுச்சேரியிலிருந்து 30 நிமிடத்தில் இவ்விடத்திற்குச் செல்லலாம். இத்தொழிற்சாலைத் தொகுதியில் மொத்தம் 100 ஏக்கர் பரப்புள்ள நிலம் கேட்டுள்ள ஐந்து நிறுவனங்கள், தங்கள் தொழில்களை அமைக்க ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளன. மேலும் நிலம் ஒதுக்குவது பற்றி பல நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டு வருகின்றன.

கும்மிடிப்பூண்டி :

கும்மிடிப்பூண்டியிலுள்ள சிப்காட்டின் தொழிற்சாலைத் தொகுதி, சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில். சென்னை—நெல்லூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இத் தொழிற்சாலைத் தொகுதிக்குக் குறுக்கே சென்னை—கல்கத்தா அகல இரயில் பாதை செல்கிறது. மோட்டார் வண்டித் துணைப்பாகங்கள் தயாரிக்கும் தொழில்கள் ஏனைய பொறியியல் தொழில்கள் விரைவில் வளர்ச்சி பெறுவதற்கு மிகச் சிறந்த இடமாக விளங்குகிறது. நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் 804 ஏக்கர் பரப்புள்ள நிலம் அறிக்கையிடப்பட்டுள்ளது. இதுவரையில் 301 ஏக்கர் பரப்புள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மொத்தம் 113 ஏக்கர் நிலம் கேட்டுள்ள பன்னிரெண்டு நிறுவனங்கள் இப்பகுதியில் தங்கள் தொழில்களை அமைப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளன. மேலும் நிலம் ஒதுக்குவது பற்றி பல நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடி :

தூத்துக்குடியில் எவ்விடத்தில் தொழிற்சாலைத் தொகுதியை அமைப்பது என்பது பற்றிய செயற் குறிப்பையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் அரசு தொடங்கிய நிலம் கையகப் படுத்தும் நடவடிக்கைகளை உயர்நீதி மன்றம் தடை ஆணையின் மூலம் நிறுத்தி வைத்துள்ளது.

மாநில அரசு வழங்கும் நிதியுதவி :

1982–83-ஆம் ஆண்டிற்காக சிப்காட் நிறுவனத்திற்கு மாநில அரசு பங்கு மூலதனமாக ரூ. 4.50 கோடியும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டத்திற்காக ரூ. 3.00 கோடியும், அரசு உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ரூ. 50 இலட்சமும் ஒதுக்கியுள்ளது.

நடை முறைப் பயன்கள் :

1982–83-ஆம் நிதியாண்டில் அனைத்துச் செலவு, தேய்மானம் ஆகியவற்றிற்கு ஒதுக்கிய பிறகும் வரிவிதிப்பிற்கு முன்பும் நிகர ஆதாயம் ரூ. 85 இலட்சமாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த நிகர ஆதாயம் 1981–82ஆம் ஆண்டு காலத்தில் ரூ. 77 இட்சமாக இருந்தது.

ஒவ்வொரு திட்டப்பணி குறித்தும் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டும் விவரங்கள் III-ஆம் இணைப்பில், கொடுக்கப் பட்டுள்ளன :—

(1) 1982–83-ஆம் ஆண்டில் எய்திய முன்னேற்றம் (ஒப்புதல் வழங்குதல்).

(2) 1983–84-ஆம் ஆண்டிற்குரிய சாதனை இலக்குகள் ஒப்புதல் வழங்குதல்).

உதவியளிக்கப்பட்ட தொழில்களில் 1982-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 வரை ஏறத்தாழ 62,000 பேர்களுக்கு, நேரடி வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.



## இணைப்பு I.

மத்திய மூலதன உதவித் தொகைத்திட்டம் ஒப்புதல் (மொத்தம்).

| ஆண்டு. | *பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள். எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் வரை. | 154 | 975.89 |
| ஏப்ரல் திங்கள் முதல் மார்ச்சு திங்கள் வரை :— | | |
| 1978–79 .. .. .. | 46 | 284.04 |
| 1979–80 .. .. .. | 52 | 333.72 |
| 1980–81 .. .. .. | 69 | 528.42 |
| 1981–82 .. .. .. | 46 | 289.98 |
| 1982ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை. | 56 | 388.94 |
| 31—12—1982ஆம் நாள் வரை சேர்ந்து வந்த மொத்தம். | 423 | 2,800.99 |

* அனைத்தும் சேர்ந்து.

| ஆண்டு. (1) | சிறுதொழில் நிறுவனங்கள் எண்ணிக்கை. (4) | சிறுதொழில் நிறுவனங்கள் தொகை. (5) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் வரை. | 749 | 179.47 |
| ஏப்ரல் திங்கள் முதல் மார்ச்சு திங்கள் வரை.— | | |
| 1978–79 .. | 181 | 62.85 |
| 1979–80 .. .. .. | 406 | 78.86 |
| 1980–81 .. .. .. | 637 | 218.26 |
| 1981–82 .. .. .. | 544 | 213.38 |
| 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை .. .. .. | 1,604 | 495.75 |
| 30–12–1982 ஆம் நாள் வரை சேர்ந்து வந்த மொத்தம் .. | 4,121 | 1,248.57 |

| ஆண்டு. (1) | மொத்தம். எண்ணிக்கை. (6) | மொத்தம். தொகை. (7) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் வரை .. .. | 903 | 1,155.36 |
| ஏப்ரல் திங்கள் முதல் மார்ச்சு திங்கள் வரை.— | | |
| 1978–79 .. .. .. | 227 | 346.89 |
| 1979–80 .. .. .. | 458 | 412.58 |
| 1980–81 .. .. .. | 706 | 746.68 |
| 1981–82 .. .. .. | 590 | 503.36 |
| 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை .. .. .. | 1,660 | 884.69 |
| 31–12–1982 ஆம் நாள் வரை சேர்ந்து வந்த மொத்தம் | 4,544 | 4,049.56 |



## B. வழங்குதல்.

| ஆண்டு. (1) | நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். (2) | சிறு தொழில் நிறுவனங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் வரை .. .. | 618.43 | 151.62 | 770.05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்சு 1979 வரை | 176.03<br>2.24 | 30.09 | 206.12<br>2.24 |
| 1979–80 .. .. | 232.26 | 41.78 | 274.04 |
| 1980–81 .. .. | 319.09 | 109.33 | 428.42 |
| 1981–82 .. .. | 304.75 | 158.39 | 463.14 |
| 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் வரை .. | 224.27 | 55.33 | 279.60 |
| மொத்தம் .. | 1,877.07 | 546.54 | 2,423.61 |

## C. மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெற்றது.

| ஆண்டு. (1) | சிப்காட். (2) | அனைத்தும் சேர்ந்து. (3) |
|---|---|---|
| 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் வரை .. .. | 501.83 | 613.59 |
| 1978–79 .. .. .. | 161.50 | 229.63 |
| 1979–80 .. .. .. | 125.54 | 165.57 |
| 1980–81 .. .. .. | 301.91 | 425.35 |
| 1981–82 .. .. .. | 150.02 | 263.26 |
| 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை .. .. .. | 192.23 | 289.99 |
| 31–12–1982 ஆம் நாள் வரை சேர்ந்து வந்த மொத்தம் .. .. .. | 1,433.03 | 1,987.39 |

[1983 ஏப்ரல் 15

## இணைப்பு II.

நிலையான வட்டியில்லாப் பங்குத் தொகைகளுக்கு உறுதியளித்தலும்/தொகை வழங்குதலும்.

| ஆண்டு. (1) | ஒப்புதல். (2) | ரத்து செய்தல். (3) | பொதுமக்களுக்கு விற்கப்பட்ட பங்குகளின் மதிப்பு/நேரடியாக தொகை செலுத்தி மாறு கோரப்பட்டவற்றின் மதிப்பு. (4) | எடுத்துக்கொள்ளப்பட்ட பங்குகளின் மதிப்பு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1972–73 .. | 23.20 | .. | .. | .. |
| 1973–74 .. | 24.30 | .. | 26.70 | .. |
| 1974–75 .. | 5.00 | .. | 2.50 | 0.55 |
| 1975–76 .. | 16.50 | .. | 3.00 | 1.29 |
| 1976–77 .. | 11.00 | 18.50 | 2.00 | 2.00 |
| 1977–78 .. | 16.00 | 13.30 | 1.50 | 1.13 |
| 1978–79 .. | 5.00 | 3.50 | 5.00 | 0.37 |
| 1979–80 .. | 6.20 | 2.50 | 13.00 | 1.55 |
| 1980–81 .. | 24.40 | .. | 21.20 | 12.29 |
| 1981–82 .. | 13.75 | .. | 19.65 | 8.03 |
| 1982–83 .. | 6.50 | .. | .. | 1.52 |
| 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை. | 151.85 | 37.80 | 94.55 | 28.73 |



1983 ஏப்ரல் 15]

## இணைப்பு III.

1982–83 ஆம் ஆண்டில் ஒவ்வொரு திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட ஒப்புதல் மற்றும் வழங்குதல் குறித்த விவரங்கள் :—

| (1) | 1982–83 ஆம் ஆண்டின் முன்னேற்றம் (1982 ஆம் ஆண்டு ஏப்ரல்-டிசம்பர் திங்கள்.) (2) | 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1983–84 ஆம் ஆண்டிற்கான சாதனை இலக்கு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| குறிப்பிட்ட காலக் கடன்— | | | |
| ஒப்புதல் .. | 2,032.21 | 3,000.00 | 3,500.00 |
| வழங்குதல் .. | 831.00 | 2,000.00 | 2,200.00 |
| ஆரம்ப மூலதனம்— | | | |
| ஒப்புதல் .. | 55.07 | 60.00 | 120.00 |
| வழங்குதல் .. | 20.70 | 60.00 | 100.00 |
| வட்டியில்லா விற்பனை வரிக்கடன்— | | | |
| ஒப்புதல் .. | 219.93 | 300.00 | 300.00 |
| வழங்குதல் .. | 164.66 | 300.00 | 300.00 |
| உதவித் தொகை (சிப்காட்டிற்கு மட்டும்) : | | | |
| ஒப்புதல் .. | 332.73 | 250.00 | 250.00 |
| வழங்குதல் .. | 224.27 | 250.00 | 250.00 |
| திரும்பப் பெறுவது | 192.23 | 250.00 | 250.00 |

| (1) | 1982–83ஆம் ஆண்டின் முன்னேற்றம் (1982ஆம் ஆண்டு ஏப்ரல் டிசம்பர் திங்கள்.) (2) | 1982–83ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1983–84ஆம் ஆண்டிற்கான சாதனை இலக்கு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பங்குத் தொகை : | | | |
| ஒப்புதல் .. | 6.50 | 25.00 | 25.00 |
| வழங்குதல் .. | 1.52 | 25.00 | 25.00 |
| மாநில அரசின் மூலதனப் பங்கு உதவித் தொகைத் திட்டம் :— | | | |
| ஒப்புதல் .. | 22.90 | 50.00 | 100.00 |
| வழங்குதல் .. | .. | 50.00 | 100.00 |



## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தொழில் பிரிவுகளைத் தொடங்க முந்தைய ஆண்டுகளில் ஆற்றிய பணிகளை ஒப்பிடும்போது கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பாக நிதி உதவி ஒப்பந்தத்திலும் வழங்கியதிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1981–82ஆம் ஆண்டு நிதியுதவி ஒப்பளித்ததும் வழங்கியதும் முந்தைய ஆண்டுகளை ஒப்பிடுகையில் உச்ச அளவாகும். நிதி உதவி கோரிய 5,699 விண்ணப்பங்களுக்கு மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூபாய் 52.13 கோடியில் ரூபாய் 35.07 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் (1980–81) 5,183 விண்ணப்பங்களுக்கு ரூபாய் 36.90 கோடி ஒப்பளிக்கப்பட்டதில் ரூபாய் 22.59 கோடி வழங்கப்பட்டது. இந்நிறுவனம் 1982–83ஆம் ஆண்டில் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் அதிக அளவில் நிதியுதவி அளித்துள்ளது.

அண்மைக் காலத்தில் நிதியுதவி அதிகரித்திருப்பதை பின்வரும் அட்டவணையில் காணலாம் :—

| ஆண்டு. (1) | கடன் ஒப்பளிக்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை. (2) | ஒப்பளிக்கப்பட்ட தொகை. (3) | வழங்கப்பட்ட தொகை. (4) | நிலுவையாக உள்ள தொகை. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்.) | | |
| 1977–78 | 384 | 12.27 | 8.67 | 65.42 |
| 1978–79 | 825 | 12.06 | 9.05 | 68.52 |
| 1979–80 | 1,500 | 17.18 | 10.66 | 73.12 |
| 1980–81 | 5,183 | 36.90 | 22.59 | 74.59 |
| 1981–82 | 5,699 | 52.13 | 35.07 | 108.17 |
| 1982–83 .. (தற்காலிகமானது) | 3,225 | 55.68 | 39.27 | 135.00 |

ஆந்திரம், குஜராத், மகாராஷ்டிரம், உத்திரபிரதேசம், போன்ற மாநிலங்களிலுள்ள இதர பெரிய, மாநில நிதி உதவி நிறுவனங்கள் அளித்துள்ள நிதியுதவி அளவோடு ஒப்பிடத்தக்க அளவிற்கு கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் பணிகள் ஆற்றியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆற்றியுள்ள பணிகளின் சிறப்பு அம்சம் யாதெனில் சிறுதொழில்கள் குறுந் தொழில்கள்ளுக்கு வழங்கப்பட்ட நிதி உதவியும் அவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதேயாகும்.

குறைந்த அளவு முதலீட்டுடன் சிறுதொழில், குறுந்தொழில் துறைகளில் பெருமளவு வேலை வாய்ப்புகள் உருவாவதால் எளிதான நடைமுறையில் சலுகை நிபந்தனைகளின் பேரில் நிதி உதவி அளிப்பதன் மூலம் சிறு தொழில், குறுந்தொழில் நிறுவனங்களை விரைவாக வளர்ச்சியுறச் செய்வதில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் பெருமளவு கவனம் செலுத்துகிறது.

இந்நிறுவனம் 1981—82ஆம் ஆண்டில் 5,646 சிறிய குறுந்தொழில் பிரிவுகளுக்கு ரூபாய் 44.44 கோடி கடன் ஒப்பளித்துள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் 5,083 சிறுதொழில் மற்றும் குறுந் தொழில் பிரிவுகளுக்கு ரூபாய் 22.68 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இது நிதியுதவி பெற்ற தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை அளவில் 99.1 சதவீதமும், ஒப்பளிக்கப்பட்ட தொகை அளவில் 85.3 சதவீதமும் ஆகும். அதே அளவில் 1982—83ஆம் ஆண்டில் சிறு தொழில்களுக்கு அளித்துள்ள நிதியுதவி முந்திய ஆண்டுகள் அளித்த உதவிகளைவிட அதிக அளவாக அமைந்துள்ளது.

சமூகத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும், முதல் முறையாக தொழில் தொடங்குவோருக்கும் பயன்படும் வகையில் குறுந்தொழில் பிரிவுகளுக்கு அதிகமாக நிதியுதவி அளித்திருப்பது சிறுதொழில் துறைக்கு வழங்கும் நிதியுதவியின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதில் ரூபாய் 1 இலட்சம் வரையில் 4,815 தொழில் பிரிவுகள் மொத்தம் 13.93 கோடி கடனுதவி பெற்றுள்ளன. சிறுதொழில் பிரிவுகளுக்கு அளித்துள்ள நிதியுதவியில் இது 31.3 சதவீதமாகும்.

சிறுதொழில், குறுந்தொழில் பிரிவுகளுக்கு சென்ற ஐந்தாண்டுகளில் வழங்கிய நிதியுதவி பற்றிய விவரத்தை பின்வரும் அட்டவணையில் காணலாம் :—

| ஆண்டு. | எண்ணிக்கை. | தொகை. | மொத்த நிதியுதவியில் சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977—78 | 329 | 578.70 | 47.11 |
| 1978—79 | 782 | 580.40 | 48.07 |
| 1979—80 | 1,447 | 886.36 | 51.57 |
| 1980—81 .. | 5,083 | 2,268.41 | 61.46 |
| 1981—82 .. | 5,646 | 4,444.10 | 85.31 |
| 1982—83 .. (தற்காலிகமானது) | 3,175 | 4,867.55 | 87.42 |



சிறுதொழில்கள், குறுந்தொழில்கள் (Small Scale and any Sector ) ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், சிறப்பாக முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதன்காரணமாக, இத்தொழில்களில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளின் விளைவாக வேலை வாய்ப்புகள் கணிசமாகப் பெருகியுள்ளது.

| ஆண்டு. | உருவாக்கப் பட்ட வேலை வாய்ப்பு. |
|---|---|
| (1) | (2) |
| 1977—78 | 6,070 |
| 1978—79 | 13,670 |
| 1979—80 | 19,625 |
| 1980—81 | 42,000 |
| 1981—82 | 52,000 |

பெருமளவு வேலை வாய்ப்பினைப் பெருக்க வேண்டுமென்கின்ற தலையாய நோக்கத்தை அடைவதில், வளவாயில்கள் மிகுந்த அறிவு நுட்பத்துடனும் பயனுள்ள வகையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை மேற்கூறிய புள்ளி விவரம் தெளிவாக்குகிறது. இதனால், குறிப்பாக சமுதாயத்தின் மிக நலிந்த பிரிவினர் பெருமளவில் பயனடைந்துள்ளனர். குறிப்பாக, இம்மாநிலத்தில் கிராமப் பகுதிகளிலிருந்தும், பிற்பட்ட பகுதிகளிலிருந்தும் வருவோர் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

1982—83இல் மேற்கொண்ட பணிகளின் மதிப்பீடும் எதிர்கால பணிகளும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் நிதி ஒப்பளிப்பதிலும், வழங்கியதிலும் வசூல் செய்வதிலும் இந்நிறுவனம் மகத்தான முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்நிறுவனம் இனிவரும் ஆண்டுகளிலும் தன்னுடைய சாதனையை மேம்படுத்த உத்தேசித்துள்ளது.

இம்மாநிலத்தில் மின் தட்டுப்பாடு ஏற்படும்போது தொழில் பிரிவுகளில், உற்பத்தியைத் தொடர்ந்து மேற்கொள்ளச் செய்யும் நோக்கத்துடன் ஜெனரேட்டர்கள் வாங்குவதற்கென்று நிதி உதவி அளிக்கும் சிறப்புத் திட்டமொன்றை இந்நிறுவனம்

அண்மையில் செயலாக்கி, இத்திட்டத்தை செயல்படுத்தி மொத்தம் 570 தொழில் பிரிவுகளுக்கு ஜெனரேட்டர்கள் வாங்குவதற்கென்று, ரூ. 13·00 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொருள்களை ஏற்றுமதி நோக்கமாக இயங்கும் தொழில்களுக்கும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குப் பதிலாக மாற்றுப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களுக்கும் நிதி உதவி வழங்கும் பொருட்டு தனித்திட்டம் ஒன்றைஅறிமுகப்படுத்த இந்நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. தொழில் நுட்பத் தகுதி, கல்வித் தகுதி அல்லது வேறுவகைத் தகுதிகள் பெற்ற தகுதிவாய்ந்த தொழில் முனைவோருக்கு அல்லது போதிய அனுபவம் பெற்றிருந்து தொழில் முனைவர்களாக வேண்டுமென்கின்ற ஆர்வம் உள்ளவர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்கள் வழங்கவும் இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. இந்நிறுவனம் 1982—83-ல் ரூ.. 18·80 இலட்சம் எளிய கடனுதவியாக அளித்துள்ளது. (ரூ. 6·91 இலட்சம் 1981—82-ல்).

இந்நிறுவனம் வெறும் நிதியுதிவி வழங்கும் நிறுவனமாக மட்டுமின்றி முழுமையான ஒரு தொழில் மேம்பாட்டு அமைப்பாக ஆவதற்குப் பெருமுயற்சி செய்து வருகிறது. பல்வேறு தொழில்களை தொடங்குவதற்கான வாய்ப்புகள் பற்றியும் மூலப் பொருட்கள் கிடைப்பது பற்றியும் அங்காடி நிலவரம் முதலியன பற்றியும் தகவல்களைச் சேகரித்து அளிக்கவும் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திலும், இணை அலுவலகங்களிலும் ''தொழில் முனைவோர்களுக்கான வழிகாட்டிப் பிரிவு'' ஒன்று அமைக்கப்பட உள்ளது.

சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களுக்கென்று வட்டார அலுவலகம் ஒன்றையும் திறக்க இந்நிறுவனம் கருதியுள்ளது. மாவட்ட நிலையிலேயே சிறு தொழில் முனைவோர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு, வட்டார/இணை அலுவலகங்களுக்குப் பிரித்தளிக்கப்பட்ட அதிகாரங்கள், தக்கவாறு, கூடுதலாக்கப் பட்டுள்ளன. இப்பொழுது வட்டார அலுவலகங்கள் ரூ. 2.50 இலட்சம் வரையில் கடனுதவி அளிக்கும். மேலும் கிளை அலுவலகங்கள் ரூ. 7.50 இலட்சம் வரையும் கடனுதவி பட்டுவாடா செய்யும்.

தற்போது, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் பெரும்பாலும் தொழில் வளர்ச்சிக்கான நிதியுதவி நிறுவனமாக இருந்து முக்கியமாக சிறுதொழில் குறுந்தொழில் வளர்ச்சியிலேயே அதிகக் கவனம் செலுத்துகிறது. இருப்பினும் அது தன்னுடைய பணியைச் செவ்வனே செய்து ஆதாயம் ஈட்டியுள்ளது என்பது



பாராட்டத்தக்கது. இந்நிறுவனம் ஆதாயம் ஈட்டியுள்ள விவரங்கள் பின்வரும் அட்டவணையில் அறியலாம்:—

| ஆண்டு. | தள்ளுபடித் தொகை, வரித்தொகை ஆகியவற்றிற்கு முந்திய ஆதாயம். | தள்ளுபடித் தொகை, வரித்தொகை போக ஆதாயம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1980–81 .. .. .. | 125·70 | 2·24 |
| 1981–82 .. .. .. | 118·72 | 13·11 |

[1983 ஏப்ரல் 15

## சர்க்கரைத் தொழில்.

1.1. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட சர்க்கரைத் தொழில் இம்மாநிலத்தின் கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கான தலையாய அங்கம் வகிக்கிறது. சர்க்கரைத்துறை இயக்ககம் 1969 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1983–84 ஆம் ஆண்டிலும் அதற்கு பின்பும் இவ்வியக்ககம் பல புதிய திட்டங்களை நிறைவேற்றிட திட்டமிட்டுள்ளது.

1.2. கூட்டுறவுத் துறை மற்றும் பொதுத்துறை ஆகியவற்றிற்கு, போதிய நிதி ஆதாரம் இல்லை என்பது உட்பட பல காரணங்களால் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க அவை முன்வர இயலாத இடங்களில், போதுமான கரும்பு கிடைப்பதைப் பொறுத்தும், ஏற்கனவே தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளுக்கு ஊறு நேரா வண்ணமும் உள்ளதா என்ற ஆய்வுக்கு உட்பட்டும், புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க தனியார் துறையை ஊக்குவிக்கலாம் என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதற்கு ஏற்ப, தனியார் துறையிலிருந்து 9 விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. இதில் 5 விண்ணப்பங்கள் மைய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4 விண்ணப்பங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையம் என்ற இடத்தில் நாளொன்றுக்கு 1,250 டன் பிழிதிறன் கொண்ட ஒரு சர்க்கரை ஆலை நிறுவ மைய அரசு பொன்னி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு முன் உரிமம் வழங்கியுள்ளது.

1.3. கூட்டுறவுத் துறையில் திருத்தணி பகுதியில் நாளொன்றுக்கு 1,250 டன் பிழிதிறன் உடைய சர்க்கரை ஆலை நிறுவ மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை (மாயூரம்) பகுதியில் ஒரு 1,250 டன் பிழிதிறனுடன் கூடிய கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இணையத்தின் விண்ணப்பம் மைய அரசின் ஆய்வில் உள்ளது.

## 2. தமிழக சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள்.

2.1. தமிழக சர்க்கரை ஆலைகளின் 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளில் பொதுவான செயல்பாட்டு விபரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

2.. நமது நாட்டில் கரும்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களில், தமிழகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. தமிழக சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு விவசாயிகளுக்கும் இடையே நிலவி வரும் நல்லுறவு ஆலைகள் சிறந்த வகையில் செயல்பட உதவுகிறது.



1983 ஏப்ரல் 15]

2.3. கடந்த மூன்றாண்டுகளில் தமிழக சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு போன்ற விவரங்களும், 1982–83 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடும் கொண்ட விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆண்டும். | | பிழியப்பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு. | சர்க்கரை கட்டுமானம். | நிறுவிய பிழிதிறனை பயன்படுத்திய அளவு. |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்சம் டன்களில்) | | (விழுக்காடுகள்.) | |
| 1 | 1980–81 | 49·54 | 4·30 | 8·67 | 69 |
| 2 | 1981–82 | 85·93 | 7·55 | 8·78 | 120 |
| 3 | 1982–83* | 76·41 | 6·79 | 8·89 | 107 |

*—மதிப்பீடுகள்.

2.4. 1981–82 ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி மிகவும் அதிகமாக இருந்தது. இதன் பயனாக, தமிழகம் மொத்தம் 85.93 இலட்சம் டன்கள் கரும்பு பிழியும் சாதனை அளவை எட்டுவதற்கு முடிந்தது. 1982–83 ஆம் ஆண்டில் தமிழக சர்க்கரை ஆலைகள் 76.41 இலட்சம் டன்கள் கரும்பு பிழியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இது 1980–81 ஆம் ஆண்டில் பிழியப்பட்ட கரும்பின் அளவைவிட கூடுதலாகவும், 1981–82 ஆம் ஆண்டு பிழியப்பட்ட கரும்பின் அளவைவிட சற்று குறைவாகவும் இருக்கும்.

2.5. தமிழகத்தில் 1981–82 ஆம் ஆண்டு 7.55 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 6·79 இலட்சம் டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. கரும்பின் விலை :

3.1. மைய அரசு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைந்த சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்புக்கு குறைந்த பட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ. 130 என்று 1981–82 ஆம் ஆண்டுக்கு நிர்ண

யித்தது. இது அதற்கு முன் ஆண்டு நிர்ணயித்த விலைக்கு சமமான தொகையாகும். கரும்பு விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள், வேளாண்மை இடுபொருள் விலை, மற்றும் கூலி உயர்வு ஆகியவற்றை கருத்திற்கொண்டு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைந்த சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 165 என்று 1981-82 ஆம் ஆண்டுக்கு அரசு விலை நிர்ணயித்தது. சர்க்கரைக் கட்டுமானம் 8.5 சதவீதத்திற்கு கூடுதலாக இருப்பின் 0.1 விழுக்காடுக்கு 19.4117 பைசா வீதம் பிரிமியமாக வழங்கவும் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

3.2. மைய அரசு 1982-83 ஆம் ஆண்டுக்கும், 8.5 சதவீதம் அல்லது அதற்கு குறைவான சர்க்கரைக் கட்டுமானம் உடைய கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 130 என்ற அதே குறைந்தபட்ச விலையை அறிவித்துள்ளது. 8.5 சதவீதம் கட்டுமானம் உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 175 வீதம் ஆலைகள் கொடுக்க வேண்டும் என்று கரும்பு விலையினை மாநில அரசு நிர்ணயம் செய்துள்ளது.

4. கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டம்.

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தாம் அரைவை செய்யும் கரும்பிற்கு, டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கரும்பு மீதான மேல்வரி (செஸ்) அரசுக்குச் செலுத்துகின்றன. மேற்படி தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல், மற்றும் தற்போதுள்ள சாலைகளை பராமரித்தல் போன்ற இனங்களுக்கு செலவிடப்படுகின்றது. 1982-83 ஆம் ஆண்டில் கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு செலவிட ரூ. 250 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம்.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும், ஆலோசனை மற்றும் விரிவாக்க பணிகளுக்காகவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும், தமிழ்நாடு அரசு சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தை 1979 ஆம் ஆண்டு நிறுவியது. இந் நிறுவனம் ஆரம்பக்கட்டமாக சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழில் நுட்பம் உடைய தொழிலாளர்களுக்கு சர்க்கரை உற்பத்தி பற்றி பயிற்சி அளித்து வருகிறது.



6. தமிழ் நாடு சர்க்கரை நிறுவனம் (டாஸ்கோ) :

6.1. பொதுத் துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கு என்று தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் பின்னர் அரசின் கொள்கை மாறுதல் காரணமாக பொதுத்துறைக்கு பதிலாக கூட்டுறவுத் துறையில் மட்டுமே புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

6.2. இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட இரு இடங்களில் சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையில் இயங்கி வருகின்றன. அவை யாவன :—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், எரையூர், மற்றும்

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம்.

6.3. இவ்விரு சர்க்கரை ஆலைகளும் 1981-82 ஆம் ஆண்டு தமது நிறுவிய பிழிதிறனில் 146 விழுக்காடுகள் அளவுக்கு உற்பத்தி செய்துள்ளன.

7. சாராவி வடிப்பகம் :

தமிழ் நாடு சர்க்கரை நிறுவனம் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (டிட்கோ) கூட்டு முயற்சியாக ஒவ்வொரு ஆண்டும், 6 மில்லியன் லிட்டர் சாராவி தயாரிக்கும் திறனுடைய இரு வடிப்பகங்களை அமைக்க திட்டமிட்டுள்ளது. அவை முறையே திருச்சிராப்பள்ளி மாவட்டம், எரையூர் என்ற இடத்தில் இயங்கி வரும் பெரம்பலூர் சர்க்கரை ஆலையிலும், சேலம் மாவட்டம் மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் அமைக்கப்படும். இது தொடர்பாக, உரிய விண்ணப்பங்கள் மைய அரசின் தொழில் நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநரகத்துக்கு (டி.ஜி.டி.டி.) உரிமம் வழங்குமாறு கோரி அனுப்பப்பட்டுள்ளது. அவ்வுரிமங்கள் கிடைக்கப்பெற்றவுடன், மேல் நவடிக்கை எடுக்கப்படும்.

8. வேலை வாய்ப்பு :

சர்க்கரைத் தொழில் பெருமளவில் வேலை வாய்ப்பு அளிப்பதோடு, சர்க்கரை ஆலைகள் அருகே உள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு

வழங்கி வருகிறது. இது தவிர, சர்க்கரை ஆலைகளில் துணைப் பொருளான சர்க்கரைக் கழிவுப்பாகினை (மொலாஸஸ்) மூலப் பொருளாகக் கொண்ட சாராவி வடிப்பகங்கள், கால்நடை மற்றும் கோழித் தீவனங்கள், எண்ணெய் தயாரித்தல் ஆகிய தொழில்கள் வளர்ச்சியடைய சர்க்கரைத் தொழில் பேருதவியாக உள்ளது. தமிழகத்தில் தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளில் சுமார் 18,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கிறது.





**தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளை பிழிந்த கரும்பின் அளவு, உற்பத்திசெய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம்.**

இணைப்பு.

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | நாள் ஒன்றுக்கு பிழி திறன். | 1980-81. பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1980-81. உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1980-81. சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்). | 1981-82. பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1981-82. உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1981-82. சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| (அ) கூட்டுறவுத்துறை: | | | (டன்களில்). | | (டன்களில்) | | |
| 1 ஆம்பூர் .. | 2,200 | 90,021 | 8,177 | 9.08 | 3.03,935 | 29,271 | 9.63 |
| 2 மதுராந்தகம் | 1,750 | 2,09,083 | 19,336 | 9.25 | 3,62,345 | 31,390 | 8.66 |
| 3 அமராவதி .. | 2,000 | 1,76,135 | 15,967 | 9.07 | 3,80,068 | 35,535 | 9.35 |
| 4 சேலம் .. | 2,500 | 3,00,212 | 26,684 | 8.89 | 5,28,367 | 46,968 | 8.89 |
| 5 கள்ளக்குறிச்சி | 2,000 | 2,03,464 | 17,327 | 8.52 | 3,64,669 | 32,026 | 8.78 |
| 6 நேஷனல் .. | 1,500 | 2,00,700 | 18,300 | 9.12 | 3,08,295 | 28,996 | 9.41 |
| 7 தருமபுரி | 1,250 | 2,13,402 | 20,750 | 9.72 | 2,64,287 | 25,581 | 9.68 |
| 8 வேலூர் .. | 1,250 | 1,22,590 | 10,981 | 8.96 | 3,14,128 | 27,395 | 8.72 |
| 9 திருப்பத்தூர் | 1,250 | 1,00,796 | 9,346 | 9.27 | 2,30,380 | 21,936 | 9·52 |
| 10 செங்கல்ராயன் (உளுந்தூர்பேட்டை) | 1,250 | 79,616 | 6,504 | 8.17 | 3,12,116 | 25,628 | 8.22 |
| | 16,950 | 16,96,019 | 1,53,372 | 9.04 | 33,68,590 | 3,04,726 | 9.04 |

இணைப்பு—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) தனியார் துறை : | | | | | | | |
| 11 ஈ.ஐ.டி.பாரி | 4,000 | 4,49,899 | 35,560 | 7.90 | 7,57,226 | 61,080 | 8.07 |
| 12 காவேரி0 | 1,250 | 2,21,596 | 17,890 | 8.07 | 2,87,998 | 25,333 | 8.79 |
| 13 டெக்கான் | 1,850 | 3,27,085 | 27,938 | 8.54 | 4,05,344 | 34,347 | 8.53 |
| 14 சவுத் இந்தியா | 2,700 | 2,53,985 | 20,843 | 8.21 | 4,04,145 | 32,368 | 8.01 |
| 15 அருணா .. | 4,000 | 4,65,670 | 40,891 | 8.78 | 6,96,353 | 60,831 | 8.74 |
| 16 சக்தி .. | 4,000 | 6,48,514 | 57,236 | 8.83 | 11,21,964 | 1,04,305 | 9.30 |
| 17 மதுரா0 | 800 | 1,51,731 | 10,360 | 6.83 | 2,03,101 | 15,402 | 7.58 |
| 18 கோத்தாரி. | 2,000 | 2,23,622 | 18,957 | 8.48 | 3,99,363 | 34,808 | 8.72 |
| 19 திருஆரூரான். | 2,000 | 1,72,542 | 16,762 | 9.71 | 3,21,029 | 27,518 | 8.57 |
| | 22,600 | 29,14,644 | 2,46,437 | 8.45 | 45,96,523 | 3,95,992 | 8.61 |
| (இ) பொதுத்துறை : | | | | | | | |
| 21 தஞ்சாவூர் | 1,250 | 2,02,790 | 17,770 | 8,76 | 3,24,780 | 27,007 | 8.32 |
| 22 பெரம்பலூர். | 1,250 | 1,40,211 | 12,615 | 9.00 | 3,03,133 | 27,345 | 9.02 |
| | 2,500 | 3,43,001 | 30,385 | 8.85 | 6,27,913 | 54,352 | 8.65 |
| தமிழ்நாடு மொத்தம் | 42,050 | 49,53,664 | 4,30,194 | 8.08 | 85,93,026 | 7,55,080 | 8.78 |

0 இவ்வாலை மைய அரசின் நிர்வாகத்தில் உள்ளது.

00 தளர்த்தப்பட்ட உரிமம் வழங்கும் முறைக்கு ஒப்ப விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்.

செய்தித்தாள்களுக்கான காகிதம், காகிதம் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி அவற்றை வழங்குவதற்காக, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனத்தை அமைத்து வருகிறது. திருச்சி மாவட்டம், புகளூரிலுள்ள இந் நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதத் தையும் 40,000 டன் அச்சிடும் தாள், எழுதுதாளையும் தயாரிக்கக் கருதியுள்ளது. இதற்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 50 கோடியாகும். இத்திட்டத்திற்கு ரூபாய் 190 கோடி செலவாகக்கூடும், ரூபாய் 66.5 கோடி மூலதனப் பங்கில் ரூபாய் 34 கோடியை அரசுக்குச் சொந்தமான கழகமும் தமிழ்நாடு அரசும் வழங்கும். மூலதனப்பங்கில் எஞ்சியுள்ள தொகையை உலக வங்கியும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியும் வழங்கும். மேலும் இவை இரண்டும் ரூபாய் 113.5 கோடிக்குக் கடனுதவி அளிக்கும்.

2. உலக வங்கி இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் 100 மில்லியன் டாலருக்கு மத்திய அரசு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மூலம் கடனுதவி அளிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளது. மொத்தத்தில் ரூபாய் 113.5 கோடி காலக் கடன் வழங்குவதற்காக இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய தொழில் நிதியுதவிக் கழகம், இந்தியத் தொழில் கடன்—முதலீட்டுக் கழகம் போன்ற அனைத்திந்திய நிதியுதவி நிறுவனங்களுடன் இந்நிறுவனம் பொதுக் கடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளது. இக்காலக்கடனில் வணிக வங்கிகள் ரூபாய் 16.7 கோடி வரையில் உதவி செய்யவும் இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப் பட்டுள்ளது. இதனால் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மேற்படி தொகையை வழங்க வேண்டியிராது. இந்த ரூபாய் 16.7 கோடி அளவிற்கு மேற்படி வங்கியின் நிதி உதவியும் குறையும். மரக்கூழ் தயாரிப்பு எந்திரத்தை பெறவும் இந்நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

3. வன-மீன்துறை, தமிழ்நாடு மாநில வனத்தோட்டக்கழகத் திடமிருந்து 70,000 டன் நீலகிரி தைலக் கலப்பின மரங்களை இந்நிறுவனத்துக்கு ஒதுக்கியுள்ளது. இத்தொழிற்சாலைக்குத் தேவைப்படும் முக்கிய கச்சாப் பொருளான கரும்புச் சக்கையைப் பெற சர்க்கரை ஆலைகளுடனும் தமிழ்நாடு சர்க்கரை ஆலைக் கழகத்துடனும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன.

4. புகளூர் கிராமத்தில் இந்நிறுவனத்தின் வசம் சுமார் 735 ஏக்கர் நிலத்தை அரசு ஒப்படைத்துள்ளது. நிலக்கரி வழங்க ஏற்பாடு செய்திருப்பதும் மனநிறைவளிப்பதாயுள்ளது.

5. அப்பகுதியின் பொருளாதார நிலையை உயர்த்த இத் திட்டம் பெரிதும் உதவும் என நம்பப்படுகிறது. பயிற்சி பெற்றவர்கள், பயிற்சி பெறாதவர்கள், உயர் தகுதி பெற்றவர்கள் உட்பட நேரடியாகவும் மறைமுகமாகவும் 2,000 பேருக்கு இது வேலை வாய்ப்பளிக்கும்.

6. திட்டமிட்டபடி பணி நிறைவேறி வருகிறது. பின்வரும் பணிகள் நடந்தேறி வருகின்றன.

7. நிறுவனம் அமைக்கப்படும் இடத்தில் நடைபெறும் பணிகள் :

(அ) காகிதம் தயாரிக்கும் எந்திரம் நிறுவப்படும் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. காகிதம் தயாரிக்கும் எந்திரம் நிறுவும் பணி 1983 மார்ச் இறுதிக்குள் தொடங்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. இப்பணியை தொடங்குவதற்காக உரிய காலத்தில் கட்டுமானப் பணி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. மரக்கூழ் தயாரிக்கும் ஆலைக்கான கட்டிடப் பணியும் நடந்தேறி வருகிறது.

(ஆ) அதிகாரிகள் தங்கும் இல்லம், 1983 ஜூன்—ஜூலை திங்களில் தயாராகிவிடும்.

(இ) "B" வகை வீடுகள் 1983 செப்டம்பர் மாதத்திற்குள் தயாராகிவிடும் 24 "C" வகை வீடுகள் ஆகஸ்ட் திங்களிலும் எஞ்சிய 16 வீடுகள் 1983 செப்டம்பர் திங்களிலும் தயாராகி விடும்.

(ஈ) 40 அறைகள் கொண்ட "B" வகை இல்லத்தைக் கட்டு வதில் ஒரு தொகுதியில் நிலை மட்டம் வரை வந்துள்ளது. முதல் தொகுதி 1983 செப்டம்பர் மாதத்திற்குள்ளும் இரண்டாம் தொகுதி 1983 நவம்பர் மாதத்திற்குள்ளும் முடிந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) தொழிற்சாலைப் பகுதியில் 2.3 கிலோ மீட்டர் சாலை யில் மண்ணிடும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

(ஊ) இரயில் பெட்டிகளை ஒரு பக்கமாக நிறுத்தி பக்கக் கரை அமைக்கும் பணி கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது.

8. தளவாடம் எந்திரம் வாங்குதல் :

நிறுவனம் இதுவரையில் 67 ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுள்ளது. அவற்றில் 56 ஒப்பந்தப் புள்ளிகள் தொழில் கடனுதவி வங்கியின் நடை முறையின்கீழ் தளவாடமும் எந்திரமும் வாங்கு வதற்குத் தொடர்புடையனவாகும்.

9. அஸ்வத நாராயணா அண்டு ஈஸ்வரா, (கட்டிடப் பொறி யியல் பணிகள்) டெவலப்மெண்ட் ப்ராஸஸ் ப்ளாண்ட் அண்டு யுட்டிலிடிஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றைச் சேர்ந்த ஆலோ சகர்கள் தொழில் நுட்ப நுணுக்க விவரங்கள் தேவைப்படுமிடத்து ஆலோசனை அளித்து வருகின்றனர்.



## தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்.

இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்கு உறு துணையாக இருக்கும் வகையில் மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்(எல்காட்) அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக எல்காட் சொந்தமாகவோ மற்றவர்களுடன் கூட்டாகவோ சேர்ந்து தொழிற் பிரிவுகளை அமைத்து வருகிறது. ஆராய்ச்சி மேம்பாட்டு பணியை (ஆ. மே.) மேற்கொள்கிறது. மேலும் குறிப்பாக சிறுதொழில் துறையில் உள்ள தொழில் பிரிவுகளின் தயாரிப்புக்குத் தேவையான வடி வமைப்பு அடிப்படைத் தகவல்கள் முதலியவைகளை எல்காட் வழங்குவதோடு தரக்கட்டுப்பாடு, விற்பனை ஆகியவற்றிற்கும், உதவுகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 2 கோடியாகும். அரசால் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 78.64 இலட்சமாகும்.

2. எல்காட் தற்போது பின்வரும் திட்டங்களைச் செயல் படுத்துகிறது. இவற்றுக்கு மத்திய அரசு தொழில் அனுமதி கடிதங்களை ஏற்கெனவே வழங்கியுள்ளது.

### I. டிஜிடல் மின்னணு கைக்கடிகாரங்கள் :

இத்திட்டச் செலவினம் ரூபாய் 19 இலட்சமாகும். ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 6 கோடி மதிப்புள்ள 2 இலட்சம் கைக்கடிகாரங் களைத் தயாரிக்க எல்காட் நிறுவனத்திற்கு உரிமம் அளிக்கப்பட்டு இருக்கிறது. முதல் கட்டத்தில் இந்நிறுவனம் சுமார் 1.5 கோடி மதிப்புள்ள 50,000 கைக்கடிகாரங்கள் தயாரிக்கும் பணியை மேற் கொண்டுள்ளது. இந்தக் கைக்கடிகாரங்கள் ஏற்கெனவே விற் பனைக்கு வந்துள்ளன. இவைகள் பிரபல்யமடைந்துள்ளது. இத்தொழிற்சாலை நேரடியாக 20 பேருக்கும் மறைமுகமாக சுமார் 40 பேருக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்கும்.

### II. அலுமினியம் எலக்ட்ராலிட்டிக் கப்பாசிட்டர்கள் தயாரிப்புத் தொழிற்சாலை :

இத்தொழிற்சாலைக்கான செலவினம் ரூபாய் 179.31 இலட்ச மாகும். இத்தொழிற்சாலை தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒசூரில் அமைக்கப்பட்டுள்ளது. சோதனை உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது. வணிக உற்பத்தி விரைவில் தொடங்கவிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 50 இலட்சம் கப்பாசிட்டர்களை தயாரிக்கையில் அதாவது முழு உற்பத்தித் திறனை இத்தொழிற்சாலை எய்தும் போது சுமார் 140 பேருக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும்.

III. இருவழி வானொலி கம்பியில்லாத் தந்தி (செய்தி சாதனம் தயாரிப்பு) :

இத்திட்டச் செலவினம் ரூ. 250.00 இலட்சமாகும். இத்திட்டத்திற்கு தேவையான தொழில் நுட்ப உதவியை இங்கிலாந்திலுள்ள மார்கோனி கம்பியில்லாத் தந்தி சாதனத் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து பெற முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் முழு உற்பத்தித் திறனை எய்தும்போது 755 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாகும். இத்தொழில் திட்டம் சென்னையில் அமையவிருக்கிறது.

IV. மெட்டல்/கார்பன் பிலிம் ரெசிஸ்டர்கள் :

இத்திட்டச் செலவினம் ரூ, 55 இலட்சமாகும். இத்தொழிற்சாலை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பொட்டப்பாளையத்தில், அமைக்கப்படவிருக்கிறது. இத்தொழிற்சாலை 50 மில்லியன் மெட்டல் பிலிம் ரெசிஸ்டர்களையும் 250 மில்லியன் கார்பன் பிலிம் ரெசிஸ்டர்களையும் தயாரிக்கும். எல்காட் கூட்டுத்துறைத் திட்டங்களை ஊக்கப்படுத்துகிறது. எல்காட் நிறுவனத்தின் அப்படிப்பட்ட தொழில் திட்டங்களில் இது முதலாவதாகும். இத்தொழிற்சாலை மூலம் 70 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாகும்.

3. எல்காட் நிறுவனம் கீழ்க்காணும் தொழிற்சாலைகளை நிறுவ மத்திய அரசு அனுமதிகள் வழங்கியுள்ளது :—

| தொழிற்சாலையின் பெயர். | ஆண்டு உற்பத்தித் திறன். |
|---|---|
| (அ) தொலைபேசி கருவிகள் .. .. | 2 இலட்சம் |
| (ஆ) சிறு கணக்கீட்டுப் பொறிகள்/டெர்மினல்கள் .. .. .. | 50/2000 |
| (இ) எக்ஸ் கதிர் சாதனம் .. .. | 250 |
| (ஈ) அச்சிட்ட சர்க்யூட் பலகை .. .. | 20,000 சதுர மீட்டர். |

இத்திட்டங்களைச் செயல்படுத்த இந்நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

4. வடிவமைப்பு—மேம்பாடு முன் மாதிரிகளைத் தயாரிக்க, ஆராய்ச்சி—மேம்பாட்டுப் பிரிவை, 'எல்காட்' நிறுவனம் அமைத்துள்ளது. இப்பிரிவில், செய்தித் தொடர்பு, அன்டனா அண்டு



ஸிஸ்டம்ஸ், இரு வழி வானொலிப் பெட்டிகள், வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள், ஸ்டாண்டர்டைஸ்ட் தொலைக்காட்சிப்பெட்டி ரிஸீவர், புஷ்பட்டன், தொலைபேசி டயல்கள் முதலியவை உருவாக்கப்பட்டன/உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஏனைய பணிகள் :

(i) விற்பனை :

சிறு தொழிற்சாலைகள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய பல விற்பனை நிலையங்களை நிறுவ இந்நிறுவனம் திட்டமிட்டு வருகிறது. இது தொடர்பாகச் சிறு தொழிலதிபர்களிடம் ஏற்கனவே பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியுள்ளது.

[1983 ஏப்ரல் 15

### கனி வள நிறுவனங்கள்

தொழிற் சார்ந்த முக்கியமான கனிமப் பொருள்களை வெட்டி எடுப்பதற்கும், கருங்கற்களை வெட்டி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ் நாடு அரசு தமிழ்நாடு கனிம நிறுவனத்தை (டாமின்) 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவியது. இந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 100 இலட்சமாகும். செலுத்தப்பட்ட மூலதனப் பங்கு ரூ. 57.50 இலட்சமாகும். அண்மையில் இந்நிறுவனத்திற்கு ரூ. 15 இலட்சம் கூடுதல் பங்கு மூலதனத்தையும் ரூ. 15 இலட்சம் கடனையும் அரசு அளித்துள்ளது.

2. 1982–83 ஆம் ஆண்டில் (1983 சனவரி முடிய) இந்நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை விவரம் வருமாறு :—

| கனிப்பொருளின் பெயர். | உற்பத்தி. அளவு. | உற்பத்தி. மதிப்பு. | விற்பனை. அளவு. | விற்பனை. மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| கருங்கற்கள் | 1,000 கன மீட்டர். | 24.95 | 1,119 கன மீட்டர். | 65.31 |
| சாம்பல் நிறக்கற்கள். | 1,966 கன மீட்டர். | 13.00 | 1,316 கன மீட்டர். | 34.47 |
| முக்கிய கனிப் பொருள்கள். | 23,463 மெட்ரிக் டன். | 13.68 | 12,785 மெட்ரிக் டன். | 14.70 |

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நான்காம் ஆண்டில் விற்பனை ரூ. 98.16 இலட்சத்தை எட்டியது. நடைமுறை இலாபமாக ரூ. 25.73 இலட்சம் கிடைத்துள்ளது. 1978–79ஆம் ஆண்டு சிறிது நட்டம் அடைந்த போதிலும் இது சரிக்கட்டப்பட்டு விட்டது. 1983–84 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மொத்த விற்பனை ரூ. 2 கோடியாக உயரும் என்றும் அதிக லாபம் கிடைக்கும் என்றும், இன்னும் சுமார் 500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் இந்நிறுவனம் சுமார் 1,600 பேருக்கு வேலை அளிக்கிறது.



1983 ஏப்ரல் 15]

சிவகங்கையில் கிராபைட் வெட்டி எடுக்கும் திட்டம்—சிவகங்கையில் கிராபைட்டைச் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 2.58 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. இத்தொழிற்சாலை தனித்தியங்கும் திறன் உடையதா என்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நிதி உதவிக்கான ஆயத்தப் பணி நடந்து வருகிறது.

டாமின் நிறுவனம் இலாபகரமாக இயங்கி வருகிறது. இந்நிறுவனம் முதலமைச்சரின் வறட்சி நிவாரண நிதிக்கும் ஊரக வளர்ச்சிப் பணிக்கும் (தாரா) நிதி அளித்துள்ளது.

கருமபாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற் சாலை அமைத்தல் :

"டாமின்" நிறுவனம் ரூ. 393 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கருங்கறகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது. மணலி அருகே இதற்கான நிலம் இந்நிறுவனத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த தொழிற்சாலைக்குரிய எந்திரங்களை வாங்குவதற்கு வெளிநாடுகளிலிருந்து விலைப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. இதற்கான பணி 1982–83 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் தொடங்கும்.

### தமிழ் நாடு மாக்னசைட் நிறுவனம் (டான்மாக்).

திருவாளர்கள் சேலம் மாக்னசைட் நிறுவனம் முன்னர் சொந்தமாக வைத்திருந்த சுரங்கத்திலிருந்து மாக்னசைட் தாதுப் பொருளை வெட்டி எடுக்கும் தொழிலை ஏற்று நடத்த தமிழ் நாடு மாக்னசைட் நிறுவனம் (டான்மாக்) 17—1—1979–இல் அமைக்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்நிறுவனம் செயல்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடியாகும். இது 2,400 பேருக்கு வேலை அளிக்கிறது.

2. 1982–83-ல் (டிசம்பர் 1982 முடிய) 'டான்மாக்' நிறுவனத்தின் செயலாற்றல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

மாக்னசைட் தாதுப் பொருள் உற்பத்தி 85,203 மெட்ரிக் டன். (டிசம்பர் 1982 முடிய).

மாக்னசைட் தாதுப் பொருள் விற்பனை. 75,180 மெட்ரிக் டன்.

விற்று வரவு — ரூ. 309 இலட்சம்.

அகற்றப்பட்ட கழிவு பொருட்களின் எடை. 18,45,695 மெட்ரிக் டன்.

இந்நிறுவனம் தொடங்கிய முதல் ஆண்டில் ரூ. 60.64 இலட்சம் இலாபம் அடைந்தது. 1980-81-ல் ரூ. 30.79 இலட்சமும், 198182-ல் ரூ. 79.95 இலட்சமும் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 1982-83-ல் தேய்மானத்திற்கு ரூ. 39 இலட்சமும் ஒதுக்கீடு போக ரூ. 84.34 இலட்சம் இலாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

**எதிர் காலத் திட்டங்கள்.**—இந்நிறுவனம் விரைவில் தன்னுடைய பணியை ஒன்றை நிறுவவும், பன்னாட்டு தரத்திற்கேற்ப கரிந்த மாக்னசைட் இராசாயன முறையில் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. விரிவாக்கப் பணியில் இது முதற்கட்டமாகும். ரூ. 6.3 கோடி செலவில் மாக்னசைட் தாதுப் பொருளை கனிந்த மாக்னசைட்டாக தயாரிப்பதற்கு சுழல் சூளை ஒன்றை நிறுவுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இராசாயன முறையில் மாக்னசைட் சுத்தப்படுத்து வதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. உயர்ந்த ரக வெப்பந்தாங்கி கற்களை தயாரிப்பதற்கு தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது.



## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974-ம் ஆண்டு ஜூலைத் திங் களில் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூல தனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனமும் முறையே ரூ. 100 இலட்சமும், ரூ. 90 இலட்சமுமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு உப்பைச்சார்ந்த இரசாயனப்பொருட்கள் மற்றும் உப பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது ஆகும்.

## மாரியூர்-வாலிநோக்கம் உப்புத் திட்டம்.

இத்திட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி என்று கருதப்படும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாரியூர் வாலிநோக்கத்தில் 1975-ல் மேற்கொள்ளப்பட்டு 1976 முதல் உப்பு உற்பத்தி துவங் கப்பட்டது. ஆண்டு வாரியாக உற்பத்தி செய்யப்பட்ட அளவு பின் வருமாறு :—

| ஆண்டு. | மெட்ரிக் டன்கள். |
|---|---|
| 1976 .. .. .. .. .. | 550 |
| 1977 .. .. .. .. .. | 3,400 |
| 1978 .. .. .. .. .. | 6,500 |
| 1979 .. .. .. .. .. | 22,660 |
| 1980 .. .. .. .. .. | 29,047 |
| 1981 .. .. .. .. .. | 25,600 |
| 1982 .. .. .. .. .. | 37,000 |

உற்பத்தியிலும் விற்பனையிலும் அபிவிருத்தி ஏற்பட்ட போதிலும் இத் திட்டம் எந்தவித வசதியும் இல்லாத பின்தங்கிய இடத்தில் நிறைவேற்றப்படுவதால் விற்பனை செய்வதில் தொடர்ந்து பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இங்கு 800 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

மரவக்காடு—வடக்காடு உப்புத் திட்டம் :

இத்திட்டத்திற்கான வளர்ச்சிப் பணிகள் 1979—ல் மேற்கொள்ளப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் உப்பு உற்பத்தி தொடங்கியது. 1982 ஆம் ஆண்டுமுடிய 1,300 டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இது வரை இத்திட்டத்திற்காக ரூ. 25 இலட்சம் செலவாகியுள்ளது.

1983 ஆம் ஆண்டு முடிய 20,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு இரயில் வசதியும் போக்குவரத்து சாலை வசதியும் உள்ளன. இத்திட்டத்தின் மூலம் 400 முதல் 500 நபர் வரை பருவகால வேலை வாய்ப்பும் 20 நபர்கள் நிரந்தர வேலை வாய்ப்பும் மற்றும் மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

வாலி நோக்கத்தில் சிறு துறைமுகம் ஏற்படுத்துதல்.

வெளி வியாபாரத்தைப் பெருக்கும் பொருட்டு வாலி நோக்கத்தில் ரூ. 75 இலட்சம் செலவில் சிறு துறைமுகம் கட்டுவதற்கு மாநில திட்டக்குழு இசைவு தந்து இதற்காக 1983—84-ல் ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இச் சிறு துறைமுகம் கட்ட 2 அல்லது 3 ஆண்டு காலமாகுதலால் துறைமுகத் துறை தற்காலிக ஏற்பாடுகள் செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. துறைமுகம் கட்டி முடிந்தவுடன் இத்திட்டத்தின் மூலம் உப்பின் தேவை பெருகி வரும் மேற்கு வங்காளம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி மூலம் விற்பனையைப் பெருக்க வாய்ப்பு உள்ளது.

புதுத் திட்டங்கள்.

மாரியூர் வாலி நோக்கத்தில் உள்ள உப்பு தொழிற்சாலையில் உற்பத்தி செய்ய விருக்கும் ஜிப்ஸம் என்ற கனிப் பொருளிலிருந்து எலும்பு முறிவு அறுவை சிகிச்சைக்குப் பயன்படும் பிளாஸ்டர் ஆப் பாரிஸ் தயாரிப்பதற்கான திட்டம் உத்தேசத்தில் உள்ளது.

(2) மாரியூர் வாலி நோக்கத்தில் சத்துள்ள உப்பு தயாரிக்கும் திட்டத்தை மைய அரசு தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ. 35 இலட்சம் மானியமாகவும், கடனாகவும், மைய அரசு வழங்கும். 12,000 டன் சத்துள்ள உப்பு (Fortified Salt) தயாரிக்கப்படும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1983-ல் உற்பத்தியையும், விற்பனையையும் பெருக்கி 1984-ல் பண இழப்பு வராமல் தவிர்த்து வரும் ஆண்டுகளில் நல்ல முன்னேற்றம் அடைய வாய்ப்பு இருக்கிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்.

இம்மாநிலத்தில் பீங்கான் தொழிலின் ஒருமித்த வளர்ச்சிக்காக தொழில் வணிகத் துறை, தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்த பின் வரும் பீங்கான் மற்றும் அது சம்பந்தப்பட்ட தொழில் பிரிவுகளைக் கொண்டு தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது.

வணிகப் பிரிவுகள் ;

(1) டாசல் பீங்கான் தொழிற்சாலை, விருத்தாசலம்.

(2) டாசல் கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம்.

(3) டாசல் இயந்திரச் செங்கல் தொழிற்சாலை.
திருமழிசை.

வளர்ச்சிப் பிரிவுகள்.—

(4) பீங்கான் தொழில்களுக்கான தொழிற்பேட்டை விருத்தாசலம் (அரசின் முகவராக நிருவகிப்பது).

(5) டாசல் பீங்கான் பணிவசதி நிலையம், விருத்தாசலம். பயிற்சி-வேலை வாய்ப்பளிப்பதை நோக்கமாகக் கொண்ட பிரிவுகள்—

(6) டாசல் கலை நிலையம், விருத்தாசலம்.

(7) டாசல் பீங்கான் தொழில் மையம், ஓமலூர்.

2. டாசல் வணிகப் பிரிவுகளில் மட்பாண்டங்கள், பீங்கான், கலைப் பொருட்கள், எல். டி. மின் காப்பீட்டுக் கருவிகள், துப்புரவு சாதனங்கள், கல் ஜாடிகள், மெருகிடப்பட்ட கற் குழாய்கள் முதலிய பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தொழில் மேம்பாட்டு நடவடிக்கையாக டாசல் விருத்தாசலம் தொழில் பேட்டையை நடத்துகிறது. இங்கு பீங்கான் பொருட்களைச் சுடுவதற்கு வசதிகள் அளிக்கப்படுகின்றன. விருத்தாசலத்தில் மட்டுமல்லாது இதற்கு அடுத்துள்ள பகுதிகளிலும் இத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் சிறு உற்பத்தியாளர்களிடையே இப்பணி வசதிகள் மிகவும் பிரபலமடைந்துள்ளன. பீங்கான் பொருட்களின் மாதிரி வடிவமைப்பு மற்றும் உற்பத்தி பற்றிய தொழில் நுட்ப உத்திகளில் பணியாளர்களுக்குப்பயிற்சி அளிப்பதற்கு இரு பயிற்சிப் பிரிவுகளை நடத்துவதும், டாசல் நிறுவனம் ஆற்றும் பணிகளில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

[1983 ஏப்ரல் 15

3. 1981—82 ஆம் ஆண்டில் டாசல் கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து தொழிற் பிரிவுகளின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 207.12 இலட்சமாகும். சுமார் 1,000 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. தரமான மற்றும் நியாயமான விலையில் கிடைக்கும் டாசல் உற்பத்திப் பொருட்களுக்கு அங்காடியில் நல்ல மதிப்பு உள்ளது. 1981—82 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்திற்கு, ரூ. 10.97 இலட்சம் தேய்மானத்திற்கு ஒதுக்கீடு செய்த பின்னர், ரூ. 11.54 இலட்சம் நிகர இழப்பு ஏற்பட்டது. எனவே ரொக்க இழப்பு சொற்பமே. அதாவது ரூ. 0.60 இலட்சமாகும், 1982—83 ஆம் ஆண்டில் மின்வெட்டு இருந்தாலும் டாசல் நிறுவனம் மொத்தம் 200 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பொருட்களை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு சுமார் ரூ. 20 இலட்சம் நிகர இழப்பு ஏற்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

4. 1983-84 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனம், கற்குழாய் உற்பத்தி தொழிற்சாலையில் இரு சூளைகளை ரூ. 5.40 இலட்சம் செலவில் சீரமைக்கும் பணியை மேற்கொள்ளும். இவ்வாறு பழைய சூளைகளை மாற்றியமைப்பது சூளையின் சூடேற்றும் திறனை சரியான அளவில் வைப்பதற்கு உதவும்.



1983 ஏப்ரல் 15]

தொழில் வணிக இயக்கம்.

**மாநிலப் புவியியல் பிரிவு :**

இம்மாநிலத்தில், சிமெண்ட், மட்பாண்டத் தொழில், வெப்பந் தாங்கிக் கற்கள் தயாரிக்கும் தொழில்கள், இரசாயனத் தொழில்கள் ஆகியவற்றுக்கு அடிப்படைத் தேவை கனிப் பொருட்களாகும். கனிப் பொருட்கள் பல்வேறு பெரிய, நடுத்தர, சிறிய தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப் பெறுகின்றன. தமிழ் நாடு புவியியல் பிரிவு கடந்த பல ஆண்டுகளாக தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் கனிப் பொருட்களை அகழ்ந்தாய்வு செய்தல், புதிய தொழிற்சாலைகளுக்கு ஆதாரமாக உள்ள கனிப்பொருள்—படிமங்களைக் கண்டறிதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. புவியியல் பிரிவு சேகரித்துள்ள கனிப் பொருட்கள் படிமங்கள் குறித்த தகவல்களும் புள்ளி விவரங்களும் பெரும்பாலான தனியார் தொழிற்சாலைகளுக்குப் பயனளித்துள்ளன. இவை தவிர, தமிழ் நாடு சிமெண்டு நிறுவனம், தமிழ் நாடு கனிம நிறுவனம், தமிழ் நாடு பீங்கான் நிறுவனம், தமிழ் நாடு மாக்னசைட் நிறுவனம் ஆகிய பல்வேறு அரசு நிறுவனங்களும் இவ்வசதிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. இப்பிரிவு அகழ்வாய்வு பணிகளுக்குப் புவி இயற்பியல், புவி வேதியியலில் உள்ள நவீன தொழில் நுட்ப உத்திகளை பயன்படுத்துவதுடன், புவியியல் நிழற்பட உத்தியினாலும் பயன்பெறுகின்றது. நவீன தொழில் கருவிகளும் ஆய்வுக்கூட சாதனங்களும் இப்பிரிவிடம் உள்ளன. இப்பிரிவு பொதுத் துறை நிறுவனங்களுக்கும் தனியார் தொழில்—முனைவோர்க்கும்—தொழில் நுட்ப ஆலோசனை நல்குவதுடன் திட்ட வடிவமைப்புகளையும் எடுத்தியம்புகின்றது.

கனிமச் சலுகைகள் வழங்குவது, கனிப் பொருள் ஆதாரங்கள் வாயிலாகக் கிடைக்கும் வருவாயை உயர்த்துவதற்கு தக்க கொள்கைகளை வகுப்பது ஆகியவை தொடர்பாக அரசுக்கு உதவியாக இம்மாநில புவியியல் பிரிவு இருந்து வருகின்றது. கீழே அட்டவணையில் காட்டியுள்ளது போன்ற கனிப் பொருட்களிலிருந்து கிடைக்கும் வருவாய் படிப்படியாக உயர்ந்துள்ளதற்கு இதுவே சான்றாகும்.

| ஆண்டு | கனிப் பொருள் வருவாய் வரவினங்கள் |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1978-79 | 187 |
| 1979-80 | 360 |

[1983 ஏப்ரல் 15

| | |
|---|---|
| 1980-81 | 412 |
| 1981-82 | 433 |

(மாக்னசைட் தாதுப் பொருள் விற்றதன் மூலம் கிடைத்துள்ள தொகையும் இதில் அடங்கும்).

. இதுபோலவே கடந்த சில ஆண்டுகளாக கனிப்பொருள் உற்பத்தியிலும் விரைவான முன்னேற்றம் காணப்பெறுகின்றது. அதன் விவரம் வருமாறு :—

| ஆண்டு | கனிமப் பொருட்கள் மொத்த உற்பத்தி (இலட்சம் டன்களில்) |
|---|---|
| (1) | (2) |
| 1978 | 88.4 |
| 1979 | 81.9 |
| 1980 | 94.4 |
| 1981 | 104.7 |

இந்த ஆண்டில் புவியியல் பிரிவு மேற்கொண்ட பல்வேறு கனிப் பொருட்கள் ஆய்வுகளில் பின்வரும் முக்கிய இனங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

**சுண்ணாம்புக்கல் :**

(அ). மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டத்திலுள்ள ஆலம்பாடி, கோட்ட நத்தம் கிராமங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள கக்க வாடி—பிச்சம்பட்டி கிராமம் ஆகிய பகுதிகளில் 13 சதுர கிலோ மீட்டர் பகுதியில் படிகச் சுண்ணாம்புக்கல் படிந்திருப்பது குறித்து விரிவான ஆய்வுகள் செய்ததன் பயனாக, 46 மில்லியன் டன் சிமிண்டுக்குப் பயன்படுத்தக்கூடிய தரமான சுண்ணாம்புக்கல் படிமங்கள் இருப்பது கண்டு பிடிக்கப் பெற்றது. இது தவிர, சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டத்தில் சின்னகவுண்டனூர், தேவண்ணகவுண்டனூர் கிராமங்களில் 9 சதுர கிலோ மீட்டர் பகுதியில் 6.6 மில்லியன் டன் சிமிண்டுக்கு ஏற்ற தரமான சுண்ணாம்புக்கல் படிமங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் வட்டத்திலுள்ள சாத்தான் குளம், திசையன்விளை, சமூகரங்கபுரம் கிராமங்களில் காணப்பெறும் கின்ற சுண்ணாம்புக்கல், 'கங்கர்' (Kankar) படிமங்கள் விரிவான திட்டப்பணி குறித்துத் திட்டமிடுவதற்காக ஆய்வு செய்யப் பெற்றன.



1983 ஏப்ரல் 15]

**சுண்ணாம்புக் கிளிஞ்சல்கள் :**

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி வட்டத்தில் தூத்துக்குடிக்கும், பழையகாயலுக்கும் இடையில் 50 சதுர கிலோ மீட்டர் பகுதியில் ஆய்வு செய்ததில் சுண்ணாம்புக் கிளிஞ்சல் திட்டுகள் 1.0 இலட்சம் டன் வரை படிந்திருப்பது கண்டு பிடிக்கப் பெற்றுள்ளது.

**சிலிகா மணல் :**

தஞ்சாவூர் மாவட்டத்தில், வேதாரண்யத்திற்கருகில் கரியப் பட்டினம் கிராமத்தில் 2.7 சதுர கிலோ மீட்டர் பரப்பில் சிலிகா மணல் குறித்து முன்னர் விரிவான ஆய்வு மேற்கொள்ளப் பெற்று அதன் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக அவை சோதனைக் கூடத்தில் சோதனை செய்யப்பெற்றன. அப்பகுதியில் காணப்பெறும் 6.6 மில்லியன் டன் சிலிகா மணல் படிவுகள் வார்ப்படத் தொழிற்சாலைக்கு ஏற்ற தரம் உடையவை. தீவிர வேளாண்மைப் பணிகளின் பயனாக, பயிரிடப் பெறாத பகுதிகள், மதிப்பீடு செய்யக்கூடிய பகுதிகளிலிருந்து 10 சதவீத இருப்புகள் மட்டுமே தயாராகக் கிடைக்கும் நிலையில் உள்ளன.

**கடல் உப்பு :**

இராமநாதபுரம் மாவட்டத்தில் வடக்கே தொண்டியிலிருந்து தெற்கே கீழக்கரை வரையில் சுமார் 200 சதுர கிலோ மீட்டர் பரப்பில் உள்ள கடற்கரை பகுதியில் நிலமட்டத்திற்குக் கீழே 8 முதல் 20 மீட்டர் ஆழம் வரையில் உப்பு செறிந்த உள் மண் இருப்பது கண்டறியப்பட்டது. இது எந்த அளவுக்குப் படிந்துள்ளது, அப்பகுதி பாறைகளில் ஏனைய இராசயனப் பொருட்கள் படிந்திருக்கின்றனவா என்பதைத் தீர்மானிக்க துளையிடுதல் உள்ளிட்ட அகழ்வாய்வுப் பணி மேற்கொள்ளப் பெற்றது.

**செங்கல் களிமண் :**

சென்னையைச் சுற்றிலும் முக்கியமாகச் செங்கற்பட்டு மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டம் பூவிருந்தவல்லியைச் சுற்றிலும் செங்கற்களைத் தயாரிப்பதற்கான களிமண் படிவுகள் இருப்பது கண்டு பிடிக்கப் பெற்றுள்ளது. களிமண்ணைத் தோண்டுவதற்காக 47 இடங்கள் ஆய்வு செய்யப்பெற்று, பூவிருந்தவல்லி பெரும்புதூர் கிளைச்சாலையைச் சுற்றியுள்ள 11 இடங்கள் குருக்கம்பாக்கம், சிக்கராயபுரம், மாங்காடு, கொல்லிச்சேரி, மூணாம்கட்டளை, கொல்லப்பன்சேரி மானவேடு, தோட்டக்குளம் ஆகிய இடங்களில் களிமண் படிந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

D 2 ( 25 20

தருமபுரி மாவட்டத்தில் பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகக் கூடிய அளவிற்கு தங்கப் படிவுகள் உள்ளனவா என்பதைக் கண்டறிய தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பெற்று வருகின்றது. பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகக் கூடிய அளவிற்கு மணிக் கற்கள் கிடைக்கின்றனவா என்பதைக் கண்டறியவும் இதைப் போன்று ஆய்வு மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

ஆந்திரப்பிரதேசம், பலோன்ச்சா பகுதியிலுள்ள இந்திய அரசு நிறுவனமான ஸ்பாஞ்ச் அயர்ன் இந்தியா லிமிடெட் தொழிற்சாலையில் திருவண்ணாமலையில் கிடைக்கும் இரும்புத் தாதினை சோதனை செய்யுமாறு புவியியல் பிரிவினை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இந்தப் புதிய முறையின் மூலம் "நேரடிக் குறைப்பு' முறையில் திடநிலையிலேயே இரும்புத் தாதினை மென்னிரும்பாக மாற்றலாம். இவ்வாறு உற்பத்தி செய்யப்பெறும் மென்னிரும்பு தொடர் வார்ப்படத் தொழிற்சாலைகளில் (அரக்கோணத்தில் உள்ளது போன்ற தொழிற்சாலையில்) இரும்பு வில்லைகளைத் தயாரிக்கப பயன்படுத்தப் பெறுகின்றன. இவை இரும்புத்துண்டு துணுக்குகளுக்குப் பதிலாக பெருமளவில் பயன்படுத்தப் பெறுகின்றன. திருவண்ணாமலையில் கிடைக்கும் இரும்புத்தாது குறித்த சோதனைகள் வெற்றி பெறுமானால், சேலம், தருமபுரி மாவட்டங்களில் கிடைக்கும் இத்தகைய தாதுக்களை நிலக்கரி அல்லது பழுப்பு நிலக்கரியினைப் பயன்படுத்தி மென்னிரும்பாக மாற்ற இம்முறையைப் பின்பற்றலாம். திருவண்ணாமலையில் கிடைக்கும் தாதுப் பொருளை ஸ்பாஞ்ச் அயர்ன் இந்தியா லிமிடெட் தொழிற்சாலையில் முதற்கண் சோதனை செய்து பார்க்க அரசு ரூ. 1.5 இலட்சம் அனுமதித்துள்ளது.

பல்வகை :

மதுரை-திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள செட்டிநாடு சிமிண்ட் கார்ப்பரேசன், சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டத்தில் உள்ள இந்தியா சிமிண்ட் நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாளர் மெட்ராஸ் சிமிண்டு நிறுவனம் ஆகியவற்றின் குத்தகைப் பகுதிகளில் சுண்ணாம்புக்கல் எந்த அளவுக்கு படிந்துள்ளன என்பதையும் புவியியல் பிரிவு விரிவாக மதிப்பிட்டுள்ளது.

பின்வரும் நோக்கங்களுக்காக பொறியியல் சார்ந்த புவியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பெற்றன.

(அ) பொதுப்பணித் துறையினருக்காக கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை வட்டம் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின்கீழ் ஆனைமலையாற்றில் நீர்த்தேக்கங்களுக்கான ஏற்ற இடங்களைத் தெரிந்தெடுத்தல்.



(ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சேர்வலாறு நீர்மின் சக்தித் திட்டத்தின்கீழ் அஸ்திவாரம் அமைப்பதில் உள்ள பிரச்சினைகள் பற்றியும் சேர்வலாற்றையும், பாபநாசத்தையும் இணைக்கும் குடைவரை பற்றியும் ஆராய்தல்.

(இ) வேளாண்மைக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்காக நீலகிரி மாவட்டம் குன்னூர் வட்டத்தில் 7 இடங்களில் மண்ணில் நிலைத்தன்மை குறித்து ஆராய்தல்.

கனிப்பொருள் நிர்வாகம் :

மாநில புவியியல் பிரிவு 98 சுரங்கக் குத்தகை மனுக்களைப் பரிசீலித்து தொழில் நுட்ப வகையில் பரிந்துரைத்துள்ளது. 364 அனுமதிச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது. கடந்த ஆண்டில் 70 சுரங்க குத்தகை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டன. 322 அனுமதிச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன. காஞ்சீபுரம், கடலூர், சேலம், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள 7 வட்டாரச் சுரங்கப் பிரிவுகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் தொழில் நுட்ப ஆலோசனை நல்குகிறது. கனிப்பொருட்கள் சலுகைகோரும் விண்ணப்பதாரர்களின் தொழில் திட்டங்களை சரிபார்க்கின்றன. வகுக்கப்பெற்றுள்ள நிபந்தனைகளுக்கிணங்க சுரங்சப்பணிகள் நடைபெறுகின்றனவா என்பதனைப் பார்த்து மனநிறைவு அடைவதற்காக சுரங்கப்பிரிவுகள் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அப்பகுதிகளுக்குச் சென்று பார்வையிடுகின்றன. அரசு புறம்போக்கு நிலங்களில் தோண்டப்படும் கனிமத்திற்கு வசூலிக்கப்படுவதைப்போன்று பட்டா நிலங்களில் எடுக்கப்படும் கனிமத்திற்கும் நூறு சதவீதம் உரிமை ஊதியத் தொகை, இயங்கா காலவாடகை வசூலிக்கப்பட வேண்டுமென்று அரசு 10–5–1982–ம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்திரவிட்டது. கருங்கல்லிற்கு அங்காடியில் தற்போதுள்ள விலையினைக் கருத்திற் கொண்டு அரசு 14–5–1982 ஆம் நாளன்று கருங்கல்லிற்கான உரிமைக் கட்டணத்தை கன அடிக்கு ரூ. 50-லிருந்து ரூ. 200 ஆக உயர்த்தியது. இவற்றால் ரூ. 7 இலட்சம் கூடுதலாகக் கிடைக்குமென மதிப்பிடப்படுகின்றது.

புவியியல் பிரிவுக்கும் சுரங்கப் பிரிவிற்கும் தனி இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் இயக்குநர் அலுவலகத்தின் தலைமையிடம் சென்னையில் இருக்கும். 15 வட்டாரச் சுரங்கப் பிரிவுகள் இதன் பொறுப்பில் இருக்கும் இதுவரை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் செய்துள்ள பணிகளை இனி உதவி இயக்குநர்கள் கவனிப்பார்கள். கனிப்பொருள் நிர்வாக அமைப்பு முழுவதும் சீரமைக்கப்பெறும்.

## நலிவுற்ற நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் உதவிகள்.

பல்வேறு காரணங்களால் சில நிறுவனங்கள் சரிவர இயக்கப்படாமையால் நலிவு அடைந்து விடுகின்றன. இந்நிறுவனங்கள் நலிவடைவதற்கு முக்கிய காரணங்கள், தான் தயாரிக்கும் பொருட்களை வெளிச்சந்தைகளில் விற்பதில் உள்ள கஷ்டங்கள், போதிய நிதியின்மை, தொழிலாளர் பிரச்சினைகள் மற்றும் பொறுப்பற்ற நிர்வாகம் ஆகியவைகளேயாகும். சில சமயங்களில் நிறுவனம் நலிவுற்ற தன்மையை அடைவதற்கு நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக அமைகின்றன. இதன் உடனடி விளைவாக இந் நிறுவனங்களின் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடுகிறது. மேலும் பல தொழிலாளிர்களின் குடும்பங்கள் நேரிடையாகப் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் இந்நிறுவனங்கள் அரசை அணுகும்போது அவைகள் புத்துயிர் பெற்று மீண்டும் துவங்க மற்றும் தொழிலாளர் நலனைக் காக்க எல்லா முயற்சி களையும் அரசு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அம்மாதிரியான புன ரமைப்பு நடவடிக்கைகள் சில கீழ் வருமாறு :—

முதலாவதாக, தமிழ்நாடு நலிவுற்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்), 1969 சட்டத்தின் கீழ் மேற்படி நிறுவனங்களைக் கொண்டு வருதல், அந்நிறுவனம் தன் முயற்சியால் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்க வாய்ப்பு அளிக்கப்படு கிறது. மீண்டும் இயங்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. கடன் கொடுத்தவர்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இதனால் தொழி லாளர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கிறது. தற்சமயம் அவ்வாறு பாது காப்பளிக்கப்பட்ட நிறுவனங்கள் பின்வருமாறு :—

(1) ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

(2) தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் (முன்னாள் லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட்). தருமபுரி.

(3) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(4) சதர்ன் ஸ்விட்ச் கியர்ஸ் லிமிடெட் சென்னை.

(5) சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.

(6) பிரிமியர் பர்டிலைசர் லிமிடெட், சென்னை.

(7) தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், ஓசூர்.



(8) மதராஸ் மெசின் டூல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(9) அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட், சென்னை.

(10) காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங்ஸ், புதுக்கோட்டை.

(11) சோமசுந்தரம் சூபர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம்.

(12) மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.

(13) பிளாஸ்டிக்ஸ் ரெசின்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், சாகுபுரம், திருநெல்வேலி மாவட்டம்.

புனரமைப்புத் திட்டங்கள் நிறுவனம் மீண்டும் துவங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் வகுக்கப்படுகின்றன. சாதாரணமாக நிதி நிறுவனங் களும், வங்கிகளும் நிதி உதவியளிக்கின்றன. அரசு அந்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறது. அம்மாதிரியான நிறு வனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1. சவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஒர்க்ஸ் லிமிடெட், சென்னை | 14.35 |
| 2. மதுரா ஸ்பின்னிங் அண்டு வீவிங்ஸ் மில்ஸ், கோயம்புத்தூர் | 30.00 |
| 3. பிரிமியர் பெர்டிலைசர்ஸ் லிமிடெட், சென்னை | 20.00 |
| 4. மீனாட்சி மில்ஸ், மதுரை | 55.00 |
| 5. பின்னி லிமிடெட், சென்னை | 100.00 |
| 6. இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை | 47.00 |
| 7. ஜெயலட்சுமி மில்ஸ் (பி) லிமிடெட், கோவை | 30.00 |
| 8. ஜோதி மில்ஸ் லிமிடெட், கோவை | 50.00 |

நிதிப் பற்றாக்குறையினால் இந்நிறுவனங்கள் விற்பனை வரி மற்றும் மின் கட்டணம் கட்ட முடியாமல் நிலுவைகளாகச் சேர்ந்து விடுகின்றன. அந்நிலுவை களைத் தவணை முறையில் கட்டுவதற்கு அரசு அனுமதி அளிக்கின்றது.

மற்றும் வேறு வகையிலும் அதாவது அந்நிறுவனங்களின் பொருட்களை விற்பனை செய்வதிலும் புனரமைப்புத் திட்டங்கள் தயாரிப்பதிலும் உதவி யளிக்கிறது.

மது ஸ்பின்னிங் அண்டு விவிங் மில்ஸ் நிறுவனத்துக்கு அளிக்கப்பட்ட அரசின் பொறுப்புறுதி ரூ. 30 இலட்சத்திலிருந்து 1 இலட்சமாக குறைந்துள்ளது. மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், மற்றும் மீனாட்சி மில்ஸ் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புறுதியைத் திரும்பப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**சௌத் இந்தியா கிளாஸ் அண்டு எனாமல் ஒர்க்ஸ் லிமிடெட், சேலம்.**

இந்நிறுவனம் நிதி நிலை இடர்ப்பாடுகள் காரணமாக 10—12—1976 அன்று மூடப்பட்டு 500 தொழிலாளர்கள் வேலை இழந்தனர். அரசு இந்நிறுவனத்தை நலிவுற்ற நிறுவனமாக 14—10—1977 முதல் ஓர் ஆண்டு காலத்துக்கு அறிவித்து கடைசியாக 30—4—1983 வரை நீடிக்கப்பட்டது. இத் தொழிற்சாலை திறக்கப்படும் பொருட்டு இந்தியன் வங்கி ரூ. 14.35 இலட்சம் கடனுக்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பயனாக இத்தொழிற்சாலை 26—10—1970-ல் திறக்கப்பட்டது. ஆனால் 5—3—1981 முதல் மீண்டும் நிதி நிலை காரணமாக மூடப்பட்டது. கடந்த இயக்குநர்களின் குழு கூட்டத்தில் அரசே மேற்படி நிறுவனத்தை எடுத்து நடத்தவோ அல்லது தனியார் நிறுவனம் எடுத்து லாபகரமாக இயக்குவோரும் அரசிடம் முறையிட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. இதன்படி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இத்தொழிற்சாலையை தனியார் நிறுவனம் எடுத்து நடத்துவதில் உள்ள சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

**இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்.**

கம்பெனி சட்டம், 1956 விதிகளின்படி 1983 ஆம் ஆண்டு சூலை திங்கள் 15-ஆம் நாள் முதல் மின்சார மீட்டர்கள் மற்றும் மின்சார கருவிகள் தயாரிக்கும் பொருட்டு பொது நிறுவனமாக நிர்மாணிக்கப்பட்டது. 1966-67 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கியது. செயல்பட முடியாமல் ஏற்பட்ட சில சிரமங்கள் காரணமாய் இந்த நிறுவனம் 14—9—1974-ல் மூடப்பட்டு தமிழக அரசின் ஆதரவாலும், தமிழ்நாடு மின் வாரியம், பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட் நிதி நிறுவனங்கள், இந்திய தொழில் புனரமைப்புக் கழகம் (Industrial Reconstruction Corporation of India) இவற்றின் ஒத்துழைப்பினாலும் இந்த நிறுவனம் தனது உற்பத்தியை



8—12—1977 முதல் மீண்டும் துவங்கியது. தமிழ்நாடு அரசு இதை ஒரு நலிவுற்ற நிறுவனமாக அறிவித்துள்ளது. இந்தக் கால வரம்பு தற்பொழுது 20—9—1983 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனால் 650 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. இது திறக்கப் படும்போது ரூ. 396 இலட்சம் தொடர் இழப்பும் 31—3—1982 அன்று ரூ. 294 இலட்சம் தொடர் இழப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் இத்தொழிற்சாலை மேம்பாடு அடைந்து வருகிறது என்று தெரிகிறது.

**திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட்.**

திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட், 1965 ஆம் ஆண்டு தொடங்கி அம்பத்தூரில் உயர் அழுத்த, குறைந்த அழுத்தமுள்ள ஸ்விட்ச் கியர்களை தயாரித்து வந்தது. அதிக நஷ்டம் காரணமாக இந்தத் தொழிற்சாலை 14—3—1978-ல் மூடப்பட்டது. இது ஒரு நலிவுற்ற நிறுவனமாக 9—11—1978ல் அறிவித்தது. இந்த காலவரம்பு நீடிக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி பாரத ஸ்டேட் வங்கி நிறுவனத்தை புனரமைக்கப்பட வேண்டிய நிதிநிலையை அரசுக்கு தந்தது. இந்த நிறுவனம் சம்பந்தப்பட்டவர்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் உற்பத்தி தொடங்கியது.

தற்பொழுது தொழிற்சாலையில் பணியாற்றுவோர் எண்ணிக்கை 610 ஆகும்.

கப் படுகிறது. இரண்டாம் அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் 630 மெகாவாட்டாக இருக்கும். இவற்றில் 5,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட் :

இந்நிறுவனம் 1960 டிசம்பரில் நிறுவப்பட்டது. இதன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 8,500 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்வதாகும். 1981–82 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் மிக உயர்ந்த அளவான 9,229 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்தது. 1982–83 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் உற்பத்தி இலக்கு 8,500 டெலிபிரிண்டர்களாக இருக்க 1982 டிசம்பர் வரை 6,591 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்தது. இது இந்நாட்டிலேயே பல்வேறு டெலிபிரிண்டர்களையும் துணைக் கருவிகளையும் தயாரிக்கும் ஒரே நிறுவனமாகும். அஞ்சலக தந்தி, பாதுகாப்புப்பணி இரயில்வே, விமானப் போக்குவரத்து முதலிய எல்லாத் துறைகளின் தேவைகளையும் இந்நிறுவனம் நிறைவு செய்கிறது.

கிண்டியில் தற்போதுள்ள தொழிற்சாலையில் 15,000 மின் தட்டச்சு இயந்திரங்கள் தயாரிப்பதற்காக இந்நிறுவனத்திற்கு தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 2,500 பிளாபி டிஸ்க் டிரைவ் (Flopry Disc Drive) என்ற பொருளை உற்பத்தி செய்ய இந்நிறுவனத்திற்கு இசைவுக் கடிதம் வழங்கப் பட்டுள்ளது. இது சுமார் 2,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இந்துஸ்த்தான் புகைப்பட சுருள் தயாரிப்பு நிறுவனம் :

இந்நிறுவனம் 1960-ல் அமைக்கப்பட்டது. இது 1967-ல் உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் நிறுவு திறன் 6.15 மில்லியன் சதுர மீட்டர்களே ஆகும். அண்மையில் இது 7.7 மில்லியன் சதுர மீட்டர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூ. 197 இலட்சம் செலவில் முழு ஆராய்ச்சி மேம்பாட்டு நிலையம் அமைப்பது குறித்து இந்நிறுவனத்தின் செயற் குறிப்புக்கு மத்திய அரசு 1982 ஜூனில் ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இது 1984 அக்டோபரில் முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் சுமார் 2,900 பேர் பணி புரிகின்றனர்.

உதகமண்டலத்தில் கலர் பாசிடிவ் பிலிம்ஸ் தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக மத்திய அரசு இதனை மாநிலத்திற்கு வெளியே அமைக்க முடிவு செய்துள்ளது என்று அறியப்படுகிறது. எனினும், கலர் பாசிடிவ் பிலிம்ஸ் தொழிற்சாலயை தமிழ் நாட்டிலேயே அமைப்பதற்கு இயன்ற எல்லா முயற்சிகளும் எடுக் கப்பட்டு வருகின்றன.



பாரத கனரக மின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி :

இந்நிறுவனம் 1960-ல் அமைக்கப்பட்டு 1965-ல் உற்பத்தி தொடங்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 750 மெகாவாட் திறன் கொண்ட கொதிகலன்களைத் தயாரிக்கும் வகையில் இந்நிறுவனம் வடிவமைக்கப்பட்டது. இது மிகக் குறுகிய காலத்திற்குள் வரையறுக்கப்பட்ட உற்பத்தித்திறனை எய்தியுள்ளது. இதன் உற்பத்தி திறனை ஆண்டொன்றுக்கு 1,100 மெகாவாட் ஆகவும் பின்னர் 2,500 மெகாவாட் ஆகவும் அதிகரிப்பதற்கான திட்டமும் செயற் படுத்தப்பட்டுள்ளது. நடந்தேறிவரும் விரிவாக்கத்திட்டத்தின் அடுத்தநிலை, 1984-85-லிருந்து ஆண்டொன்றுக்கு 4,000 மெகாவாட் அளவுக்கு உற்பத்தித் திறனை அதிகரிப்பதாகும். இது தொழில் வால்வுகள் (Industrial Valve) தயாரிக்கவும் கருதுகிறது. இது 15,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும். 1982 டிசம்பர் முடிய உள்ள ஆண்டுக்கான மொத்த வியாபாரத் தொகை ரூ. 358.2 கோடியாகும். ஆண்டொன்றுக்கு 165 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்க தற்போது நிறுவு திறன் ஆண்டொன்றுக்கு 87 ஆயிரம் மில்லியன் டன்னாக இருக்கும். உரிமம் வழங்கப்பட்ட திறனளவு 1984–85 இல் எய்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை :

இது 1965-ல் அமைக்கப்பட்டது. இந்த ஆலை 1969-ல் உற்பத்தியைத்தொடங்கியது இதன் நிறுவுதிறன் ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் டன் எண்ணெயை தூய்மைப்படுத்துவதாகும். இது மோட்டார் ஸ்பிரிட் மண்ணெண்ணெய், உயரழுத்த டீசல், குறைவழுத்த டீசல் எண்ணெய், உலை எண்ணெய், மசகெண்ணெய், எரிவாயு, நாப்தா முதலிய பெட்ரோலியம் பொருள்களைச் சுத்தப்படுத்துகிறது. இந்த ஆலையை ஏற்படுத்தியது, உரம் டிரம் தொழிற்சாலை, பெட்ரோ-இரசாயன தொழிற்சாலை முதலிய துணைத் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக கருதப்படுகிறது. இதன் மூலம் 1,500 பேருக்கு நேரடியாகவும், சுமார் 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இது விரிவாக்கத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை, மணலி :

இந்நிறுவனம் 1966-ல் அமைக்கப்பட்டது. இது 1971-ல் வணிக முறையில் உற்பத்தியைத் தொடங்கியது. இவ்வாண்டில் 1982 டிசம்பர் வரை இந்நிறுவனம் 4.98 இலட்சம் மெட்ரிக் டன் ''விஜய் காம்ப்ளக்ஸ்'' உரங்களையும் 85,000 மெட்ரிக்

டன் ''விஜய் யூரியாவையும் '' தயாரித்துள்ளது. 1982 டிசம்பர் வரை இந்நிறுவனம் 4.68 இலட்சம் மெட்ரிக் டன் ''விஜய் காம்ப்ளக்ஸ்'' உரங்களையும், 98,000 மெட்ரிக் டன் ''விஜய் யூரியாவையும்'' விற்பனை செய்துள்ளது. இது 1,150 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

படைக்கலக் கருவிகள் தயாரிப்பு தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி :

இத்தொழிற்சாலை 1966-ல் அமைக்கப்பட்டது. இதன் நிறுவு திறன் ஆண்டொன்றுக்கு 5,000 சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்வதாகும். 1982 டிசம்பர் முடிய உள்ள காலத்தில் மொத்த நிறுவு திறனில் 86.82 சதவீதத்தை எய்தியுள்ளது. மேற் சொன்ன காலத்தில் இதன் விற்பனைத் தொகை ரூ. 3.93 கோடியாகும். இது 2,769 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

சேலம் உருக்காலை, சேலம் :

இது 1977-ல் அமைக்கப்பட்டது. இத்தொழிற்சாலையின் முதல் நிலை 13–9–1981 அன்று தொடங்கப்பட்டது. இவ்வுருக்காலை ஆண்டொன்றுக்கு 32,000 டன் எவர் சில்வர் உருக்கு சுருள்கள், தகடுகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறன் கொடிருந்தது. 1982 மார்ச்சில் இது உற்பத்தியைத் தொடங்கியது. தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 3,180 டன் எவர் சில்வர் உருக்கு தயாரிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, இது 1982 டிசம்பர் வரை 3,214 டன் எவர் சில்வர் உருக்கு சுருள்களைத் தயாரித்துள்ளது. இதன் மூலம் இத்தொழிற்சாலை செயற்படத் தொடங்கிய முதலாண்டிலேயே வரையறுக்கப்பட்ட இலக்குக்கும் அதிகமாக உற்பத்தி செய்துள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 181.19 கோடி செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்க, 1982 டிசம்பர் வரை 167.7 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது 1,207 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. இத் தொழிற்சாலைக்கு அருகே நவீன நகரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது, முதல் நிலையில் ரூ. 10.43 கோடி செலவில் 785 பிரிவுகள் கட்டக் கருதப்படுகிறது. இது 1983 ஜூனுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம் உருக்காலையை ஒருங்கிணைந்த தொழிற்சாலையாகச் செயற்படுத்துவதை மத்திய அரசு உறுதிசெய்வதற்காக மாநில அரசு எல்லா நடவடிக்கைகளையும் இயன்ற வரையில் எடுத்து வருகிறது. முதலில் கருதப்பட்டவாறு இத்திட்டத்தின் வருங்கால மேம்பாட்டுக்கான திட்டத்தை வகுப்



பதற்கான இந்திய உருக்கு அதிகாரமன்றம் (Sail) சோதனை நடத்தியுள்ளது என்றும் இதனை இந்திய உருக்கு அதிகார மன்றத்தின் ஆராய்ச்சிக்குழு பரிசீலனை செய்துள்ளது என்றும் இவ்வறிக்கையை இந்திய உருக்கு அதிகார மன்றம் தீவிரமாக பரிசீலனை செய்கிறது என்றும் மத்திய அரசு இவ்வரசுக்கு தெரிவித்துள்ளது.

கொதிகலன் துணைப்பாகங்கள் தொழிற்சாலை, இராணிப்பேட்டை :

ஆண்டொன்றுக்கு 4,000 மெகாவாட் திறனுள்ள கொதிகலன் துணைப் பாகங்களை ரூ. 32.8 கோடி செலவில் தயாரிப்பதற்காக மத்திய அரசு 1980 ஜூலையில் ஒப்புதலளித்தது. முழு உற்பத்தித் திறனை அடைந்தவுடன், இத்தொழிற்சாலை 4,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை 1983 இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும் என்றும், முழு உற்பத்தித் திறனை 1084-85ல் எய்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 2,400 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்துவதற்காக ரூ. 75 இலட்சம் வரையில் செலவிட மாநில அரசு ஒப்புதலளித்துள்ளது.

143183
சென்னை-600 008

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute. Egmore. Madras-8.
2 The City Book Company. Madras-4.
3 Higginbothams (Private) Limited Madras-2.
4 P. Varadachary and Company. Madras-1.
5 C. Subbiah Chetty and Company. Madras-5.
6 The Universal Book House. Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company. No. 8-C. Pycrofts Road. Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli). Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited. Madras-2.
13 Kalaivani Book Centre. No. 1. Ponniamman Koil Street. Egmore. Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company. Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot. Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company. Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street. Pudukkottai.
6 Palaniappa Bros.. Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai. Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores. Booksellers 9/31. Cross Cut Road. Coimbatore-12
10 Mercury Book Company, 20. Karuppa Gounder Street. Coimbatore-1.
11. S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores. South Car Street. Sivakasi.
13 Mari Martin. Booksellers. Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons. Salem-1.
15 Parameswari Book Shop. No 46-D. Old Market Street. Salem.
16 Meenakshi Pathippagam. Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons. Dindigul. Madurai District.
18 Jayakumari Stores. Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores No. 3/1. Old Post Office Road. Coimbatore-18.
21 Kumaran Book Depot. Booksellers. Erode-1.
22 Vela Book Company. No. A. Annaji Rao Street. Erode-1.
23 Radhamani Stores. 6-A Raja Street. Coimbatore-1.
24 Ajantha Book Centre. Salem-1.
25 Sri Vidya. 63. Tennure High Road. Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop. 90. Amman Sannathi. Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi-1.
2 International Book House. Trivandrum.
3 The Book Syndicate. Hyderabad-1.
4 Labour Law Publications. Hyderabad.
5 Puthaghaleyam Pondicherry.
6 Prabu Book Service. Gurgaon. Haryana.
7 K. P. Bagchi & Company. 286. B.B. Ganguli Street. Calcutta-17.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, TAMIL NADU ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.